ஸ்ரீ:

# வேதாந்த தீபிகை

ஸம்புடம் - 4.

**1914 - 1915.**

(ப்ரமாதீச - ஆநந்தஹூ)

OF THE REGIST... OF ...
8 - MAR 1915
MADRAS

பத்ராதிபர்:—திவான்பகதூர் தி-த.ரங்காசார்யர்-பீ.ஏ.பீ.எல்.

ஸ்ரீ அஹோபிலமடத்து ஶிஷ்யஸபையின்
கார்யதர்ஶியால் ப்ரதிமாஸம்
ப்ரசுரம் செய்யப்பட்டது.

சென்னை:
கலாரத்நாகரம் அச்சாபீஸ்.

1915.

Copy-right Reserved.

161437

ஸ்ரீ:

[illegible]

# அட்டவணை.

(அகராதி.)


| | |
|---|---|
| அதிகரணஸாராவளியின் வ்யாக்யாந அவதாரிகை ... | 407 |
| இதிஹாஸங்களும் அவதார சரித்ரங்களும் ... | 403 |
| கடிதங்கள்:— | |
| இஞ்ஜங்க்ஷன் கோடீஸாம் ப்ராஸ் ஸர்வருடைய ரிபோர்ட் முதலியனவும் | 96 |
| இன்டெரீம் இஞ்ஜங்க்ஷன் | 95 |
| ஒரு ப்ரச்நம் ... | 35 |
| ப்ரயாகை மடம் ... | 135 |
| ப்ருஹ்மத்தினுடைய ஜகத் காரணத்வத்தைப் பற்றிய ஓர் விசாரம் | 33 |
| ஸ்ரீ அழகிய சிங்கர் உயில் | 93 |
| ஸ்ரீ அழகிய சிங்கருடைய ஸ்ரீ முகங்கள் ... | 94 |
| ஸ்ரீ அஹோபிலம் ஜீர்ணோத் தாரணகமிடி செலவுகளுக்கு ரூபாய் பண்டு ... | 92 |
| ஸ்ரீ ஆதிவன் சடகோப ஸ்வாமி ப்ருந்தாவநம் ... | 180 |
| ஸ்ரீ காரக்குரிச்சி ஸ்வாமியின் ப்ரமாண பத்ரிகை | 99 |
| ஸ்ரீ சிஷ்ய ஸபையின் நான்காவது மஹா ஸங்கம்... | 40 |
| ஸ்ரீ பாஷ்யபுரம் ... | 136 |
| ஸ்ரீ ஸந்நிதி குருபரம்பரை | 251 |
| கர்மங்களின் த்ருஷ்ட பலங்கள் ... | 235 |
| சில விஷ்ணு ஸூக்தங்கள் ... | 391 |
| பத்ராதிபரின் குறிப்புகள்:— | |
| இந்தியர்கள் படிப்பு ... | 352 |
| இந்திய பெண் கல்வி ... | 354 |
| ஐரோப்பியரின் மேன்மை | 301 |
| ஓர் புதிய சட்டம் ... | 348 |
| கர்மாநுஷ்டாநம் ... | 224 |
| சிஷ்ய ஸபையின் மஹா ஸங்கம் ... | 3,42 |
| ட்ரு ஆரையின் உபந்யாஸம் | 101 |
| திருமலை தேவஸ்தாநம் ... | 46 |
| தீபிகையைப்பற்றி ஒரு விஜ்ஞாபநம் ... | 1 |
| தை மாஸம் ... ... | 421 |
| நஞ்சன்கோடு தெப்போத்ஸவம் ... | 221 |
| ப்ருஹ்ம ஸமாஜ ஸங்கம்... | 388 |
| பாடலீபுரம் ... | 351 |

மத ஸம்பந்தமான உபந்யா ஸங்கள் ... 141
மதுரைத் தமிழ்ச்சங்கம் .. 104
மரணாந்தரம் ஜீவனுடைய அநுவ்ருத்தி ... 381
மார்கழி மாஸம் ... 384
லாஹோரில் ஹிந்து ஸபை 43
லோகாயதிகமதம் ... 341
வர்ணாஶ்ரம தர்மங்களும் முமுக்ஷுத்வமும் ... 309
ஸமவாய சீர்திருத்த ஸங்கம் 387
ஸீதாநாதருடைய கீதா உபந்யாஸ விமர்சம் ... 181
ஸூக்ஷ்மமான தர்மதத்வம் 5
ஸ்ரீ வேதாந்ததீபிகை ... 41,108
ப்ரஹ்ம ஸூத்ரத்தில் ஓர் சோத்யம் ... .. 447
தத்வ விசாரம் ... 118,148,195, 247,270,320,366,
மூன்று ப்ரஶ்நோத்தரங்கள் 254
புத்தம் ... 300
வர்த்தமாநங்கள் ... 220,298,340
வைராக்யத்தால் உண்டாகும் ஸுகம் ... 24
ஸத்யாவதார பாஷ்யம் ... 169
ஸௌபரி சரித்ரம் ... 129
ஸ்ரீ அஹோபில மாஹாத்ம்யம் ... 10,58,152
ஸ்ரீ அஹோபில ந்ருஸிம்ஹன் விஷயம் ... 48,160,206,241,290, 334,398,452
ஸ்ரீ அஹோபிலமடத்துச்சிஷ்ய ஸபையும் அதன் கர்த்தவ்யங்களும் ... 65,110
ஸ்ரீ அஹோபிலமடத்துச் சிஷ்யஸபையின் 1912 - 13-ம் ஸெக்ரடரியின் அறிக்கை ... 419
ஸ்ரீ அஹோபிலத்தில் கூடின மஹாஸபையில் செய்த தீர்மானங்கள் ... 89
ஸ்ரீ சிஷ்ய ஸபையின் நான்காவது வர்ஷோத்ஸவம் ... 81
ஸ்ரீமதஹோபிலயாத்ரை ... 74
ஸ்ரீ ஸ்தோத்ர ரத்நம் ... 17,213,284 314,356,439
1912-13-ம் ஸெக்ரடரிய வரவு செலவுகணக்கு ... 420


OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
2-MAY 1914
MADRAS.

ஸ்ரீ:.

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:.

# வேதாந்த தீபிகை

ஸம்புடம் 4.] ப்ரமாதீச ஸ்ரீ மாசி மீ [ஸஞ்சிகை 1.

## பத்ராதிபரின் குறிப்புகள்.

[illegible] விஜய [illegible] [ஸ்ரீ பாகவதம் 1-9-33.]

**தீபிகையைப் பற்றி ஒரு விஜ்ஞாபனம்.**

ஸ்ரீ அஹோபில மடத்து ஶிஷ்யஸபை ஸம்பந்தமாக ப்ரசுரம் செய்யப்பட்டுவரும் இந்தத் தீபிகை, ஸ்ரீ ஸந்நிதி ஸம்ப்ரதாயத்தை அவலம்பித்துள்ள ஸ்ரீ ஸந்நிதி ஶிஷ்யர்களுக்கு மாத்ரம் உத்திஷ்டமென்றும், மற்றை ஸம்ப்ரதாயத்தை அவலம்பித்திருக்கும் ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கு இது உத்தேஶிக்கப் படவில்லையென்றும் இத்யாதியான ஒரு எண்ணம் சில ஆஸ்திகர்களுடைய மநஸ்ஸில் ஜநித்திருக்கின்றது என்று நாம் அறிகிறோம். இது தவறான எண்ணமே. ஜகத்தின் ஶ்ரேயஸ்ஸையே கருதி பகவத் பாஷ்யகாரரால் வெளியிடப்பட்டுள்ள ஸித்தாந்தத்தை யதாஶக்தி ஸாக்ஷாத்தாகவும் பரம்பரையாகவும் பரவச்செய்து அதனால் ஜநஸாமாந்யத்திற்கே ஒரு நன்மையைச் செய்ய முயல்

வதான ஒரு கைங்கர்யத்தில் ப்ரவ்ருத்திக்க வேண்டுமென்பது
தான், இந்தப் பத்ரிகையை ஆரம்பித்திருப்பவர்களின் முக்ய
மான அபிப்ராயம். ஸ்ரீ ஸந்நிதி ஸம்ப்ரதாய மென்றும் இதர
ஸம்ப்ரதாய மென்றும் இதுபோன்ற வ்யவஹாரத்தில் தோன்
றும் ஸம்ப்ரதாய பேதத்தை பெரியதொரு ஸித்தாந்த பேதமாக
இந்தப் பத்ரிகை அங்கீகரிக்கவில்லை. ஆத்மஜ்ஞாநத்தையும் அது
வழியாக பகவத் கடாக்ஷத்தையும் அடைய முயல்பவர்கள், அவ
ரவர்களுக்கு ப்ரதிபத்தி பாத்ரமாகத் தோன்றும் ஆசார்யர்க
ளைத் தேடி ஆஶ்ரயித்தால், அது ஒரு ஸித்தாந்த பேதத்தை
விளைவிக்குமோ? அப்படிப் பிந்ந ஆசார்யர்களை ஆஶ்ரயிப்பது
பரஸ்பரம் த்வேஷத்திற்கும் மாத்ஸர்யத்திற்கும் ஹேதுவாகு
மோ? தைவத்தினிடத்தில் ஹார்த்தமான ப்ரீதியையும் நமக்குள்
பரஸ்பரம் த்ருடமான ஸௌஹார்த்தத்தையுமே முக்யமான உபா
யமாக போதிக்கும் நமது ஸித்தாந்தம், ஆசார்ய பேதத்தினாலும்
ஸம்ப்ரதாய பேதத்தினாலும் ஒரு வைஷம்யம் உண்டாகின்றது
என்பதை அங்கீகரிக்குமோ? இவை யெல்லாம் ஸரியான ஜ்ஞா
நத்தினுடைய குறைவினால் உண்டாகும் விகாரங்களே. நம்மு
டைய ஸம்ப்ரதாயங்களுக்குள் உண்டாயிருக்கும் அநுஷ்டாந
பேதங்களுக்கு ப்ராதாந்யத்தைக் கொடுப்பதும், அவைகளின்
குணதோஷங்களை விசாரித்து எம்பெருமானுடைய திருவுள்ளத்
திற்கு இவைதான் உகப்பு என்று நிர்ணயம் செய்வதும், இன்
னும் இத்யாதியான கேவல மாத்ஸர்ய வர்த்தகங்களான அம்ஶ
ங்கள் தீபிகையில் ஒரு காலும் வெளிவரா. ஒரே மாதா பிதாக்
களுடைய புத்ரர்கள்போல பரஸ்பரம் ப்ராத்ரு ஸ்தாநத்திலிருக்
கும் நமக்குள் வழங்கி வரவேண்டிய ஸௌப்ராத்ரத்தை ஸகல
ஜநங்களுடைய மநஸ்ஸிலும் வற்புறுத்த வேண்டுமென்று நாம்
செய்யும் இந்த ப்ரவ்ருத்தியை ஆஸ்திக ஶிரோமணிகள் அந்யதா
வாக க்ரஹித்தால் நமக்கு மிக்க வருத்தம் ஜநிக்குமன்றோ? 'அப்
படிப்பட்ட ஸம்ஶயத்திற்கே யாதொரு ஹேதுவுமில்லை' என்று
நாம் கூறும் உறுதிமொழியை எல்லோரும் க்ருபையுடன் திரு
வுள்ளம் பற்றி, ஸாத்விகமான இந்த ப்ரவ்ருத்திக்கு அபிவ்ருத்தி
யைக் கொடுக்குமளவு இதை அநுக்ரஹிக்க வேண்டுமென்று
நாம் ப்ரார்த்திக்கிறோம். நாம் கூறும் உறுதிமொழியை பாஹ்ய
மாக ஸூசிப்பிக்கும்படி, பத்ரிகையின் ஶிரஸ்ஸில் இதுவரையில்



எழுதப்பட்டு வந்த 'அஹோபில மடத்து ஶிஷ்ய ஸபையின் பத்
ரிகை' என்னும் நாமாந்தரத்தையும், யாதொரு ஸம்ஶயத்திற்
கும் இடம் கொடாமல் இருக்கும்பொருட்டு பத்ரிகையிலிருந்து
எடுத்திருக்கிறோம்.

சில அநிவார்யங்களான ப்ரதிபந்தகங்களினால் இந்த ஸம்பு
டத்தின் உபக்ரமம் கொஞ்சம் விளம்பிக்கும்படி நேர்ந்தது. அந்த
விளம்பத்தால் ஏதாவது அஸௌகர்யங்கள் நேர்ந்திருக்கும் பக்ஷ
த்தில், அவைகளையும், தீபிகையை அபிமாநித்து வரும் ஆஸ்திகர்
கள் க்ஷமித்தருள வேணுமென்று ப்ராத்திக்கிறோம்.

* * *

**ஸ்ரீ ஶிஷ்யஸபையின் மஹா ஸங்கம்.**

ஏற்கெனவே இந்தப் பத்ரிகையில் ப்ரசுரம் செய்யப்பட்
டிருக்கும் ப்ரகாரம், வருகிற ஏப்ரல் மாஸம்
10-உ முதல் ஆரம்பிக்கும் ஈஸ்டர் விராமகா
லத்தில் ஸ்ரீ அஹோபிலமடத்து ஶிஷ்ய ஸபை
யின் நான்காவது மஹாஸங்கம், ஸ்ரீ அஹோ
பிலத்தில் நடைபெறுமென்று நாம் அறிகிறோம். இந்த ஸங்க
விஷயமாக, வடதேஶத்திலுள்ள ஸ்ரீ ஸந்நிதி ஶிஷ்யர்கள் எல்லா
ரும் மிக்க உத்ஸாஹ முள்ளவர்களாக இருக்கிறார்களாம். அநேக
தநிகர்கள், இந்த ஸங்கத்தால் ஸம்பவிக்கும் செலவை தாமே
ஏற்றுக்கொள்வதாக அங்கீகரித்திருக்கிறார்கள். மற்றும் அநேக
ஆஸ்திகர்கள், தூரதேஶத்திலிருந்து வரும் ஜநங்களுக்கு எவ்வித
அஸௌகர்யமும் நேராமல் இருக்கும்படி அநேக உபாயங்களைத்
தேடுவதில் மிகவும் பரிஶ்ரமப்படுவதாகக் கேள்விப்படுகிறோம்.
இப்படிப்பட்ட மஹாஸங்கத்திற்கு வேண்டுவதான பூர்வ ஸம்
விதாநங்கள் அநேகம் உண்டு; அவைகளெல்லாம் கவனிக்கப்
பட்டே வருகின்றன. ஸ்ரீ ஶிஷ்ய ஸபையின் கார்யதர்ஶிகளில் ஒருவராயும், மிக்க ஆஸ்திக்யம் பொருந்தினவராயுமுள்ள
ஸ்ரீ. உ. வே. ராஜகோபாலாசார்யர், இது விஷயத்
தில் மஹத்தான பரிஶ்ரமத்தை வஹிக்கிறார் என்று தெரிய
வருகிறது. ஸ்ரீ ஸந்நிதியை ஆஶ்ரயித்தவராயும், மஹா தநிகர்க
ளுள் ஒருவராயும், மிக்க ஆஸ்திக்யம் பொருந்தினவராயுமுள்ள
கெத்தவால் மஹாராஜரிடம், ஶிஷ்ய ஸபையின் ப்ரவ்ருத்தியைப்
பற்றி விஜ்ஞாபநம் செய்துகொள்ள வேண்டுமென்னும் எண்ணத்

துடன், ஸ்ரீ. ராஜகோபாலாசார்யர், ப்ரமுகர்களான சில ஸிஷ்ய ஸபையின் ஸுஹ்ருத்துக்களுடைய ஸஹாயத்தை அவலம்பித்து, ஸ்வல்பதினங்களுக்கு முன்னே கத்தவாலுக்குப் போயிருந்தார். அப்பொழுது, மிகுந்த ஆதரவுடன் மஹாராஜர், அவரைத் தமது ஸந்நிதானத்தில் அழைப்பித்து, ஸபை ஸம்பந்தங்களான விஷயங்களெல்லாவற்றையும் விசாரித்து, அவைகளில் தமக்குள்ள உத்ஸாஹத்தையும் விஸ்வாஸத்தையும் பலவாறாக வெளியிட்டதாக நமக்கு ஸமாசாரம் கிடைத்திருக்கிறது. இப்படிப்பட்ட ப்ரபுக்களுடைய ஆபிமுக்யம் கிடைத்தது ஸபைக்கு பெரியதொரு ஸஹாயமே. அவர்களுக்குக் கொஞ்சம் அவகாஸம் கிடைத்து ஸ்ரீ ஸந்நிதியின் அபிவ்ருத்தி விஷயமாக ஒரு ப்ரவ்ருத்தி மாத்ரம் நேர்ந்தால், இவ்வளவு காலும் ஸபையார் ப்ரார்த்தித்து வரும் மநோரதங்களெல்லாம் கை கூடுவதுடன், ஸ்ரீ ஆஸ்தானாதிகாரியர்யுள்ள ஸ்ரீ ஸ்வாமியின் கௌரவத்திற்கும் எவ்வித ந்யூநதையும் ஸம்பவியாமல் பலமான தார்ட்யமொன்றும் உண்டாகும் என்பதில் ஸந்தேஹமே இல்லை. நிஷ்பக்ஷபாதிகளான நமக்கு இம்மாதிரியான நிஷ்பத்தியே சிர காங்க்ஷிதமாக இருக்கின்றது. ஸ்ரீ ஸந்நிதியின் விஷயங்களில் சில திருத்தங்களை அபேக்ஷிக்கும் ஸிஷ்ய ஸபையாருடைய ப்ரவ்ருத்தியில் நாம் மிகவும் ஸௌஹார்த்தமுள்ளவர்களே; ஆனால், அந்த ப்ரவ்ருத்தி, நாம் எல்லாருக்கும் அத்யந்தம் பூஜ்யரான ஸ்ரீ ஸ்வாமிகளுக்குக் கொஞ்சமேனும் எவ்விதத்திலும் நோகாமல் இருக்கவேணும் என்பதுதான் நம்முடைய அபிலாஷை. இந்த அபிலாஷையைக் கத்தவால் மஹாராஜரைப் போன்றவர்களின் ஸஹாயம் ஸாதித்துக் கொடுக்குமென்னும் நம்பிக்கை நமக்கு உண்டு. இப்படிப்பட்ட அநுகூல ஸஹாயத்தை ஸம்பாதித்த ஸ்ரீ. வி. ராஜகோபாலாசார்யருக்கு நாம் மிக்க க்ருதஜ்ஞதை உள்ளவர்களாக இருக்கிறோம்.

மஹாஸங்க விஷயமான சில விளம்பரங்கள் இந்த ஸஞ்சிகையின் மற்றோரிடத்தில் ப்ரசுரம் செய்யப்பட்டிருக்கின்றன. உபந்யாஸ ஸம்பந்தமான ஸம்விதானம் இன்னும் பூர்த்தியாகவில்லைபோலத் தோன்றுகிறது. மற்றைப்படி ஸ்ரீ அஹோபிலத்திற்குப் போகவேண்டிய மார்க்க நிர்த்தேஸமும் ஸங்கத்தின் கால நிர்த்தேஸமும் அந்த விளம்பரங்களில் குறிக்கப்பட்டிருக்கின்றன. கீழ் அஹோபிலத்தில் கொஞ்சம் ஜல ஸௌக்யம் குறைவாக



இருப்பதால், அதற்கு ஸமீபத்தில் மூன்றுமைல் தூரத்திலுள்ள ஒரு க்ராமத்தில் ஸங்கத்தை நடத்தலாமென்றும், ஸங்கம் முடிந்த பிறகு ஒரு நாள் அஹோபிலத்திற்குப் போய் பகவத் ஸேவையைச் செய்து வரலாமென்றும் ஓர் ஆலோசனை இருக்கின்றது. அப்படிச் செய்வது மிக்க ஸ்லாக்யமே. தூர தேஸங்களிலிருந்து வரும் ஜநங்களுக்கு ஜல ஸௌக்யம் இல்லாவிட்டால் மிகுந்த ஸ்ரமம் ஸம்பவிக்கும். தவிரவும், இக்கோடைகாலத்தில் மலை ப்ரதேஸங்களில் இரண்டு மூன்று நாள் தொடர்ச்சியாக வஸிப்பது, அதற்கு அபரிசிதர்களான ஜநங்களுக்கு உபத்ரவத்தை உண்டுபண்ணும். இந்தக் காரணங்களெல்லாவற்றையும் ஆலோசித்துப் பார்க்கும்பொழுது, ஸங்கத்தின் ப்ரவர்த்தகர்கள் பஸ்சாத்தாக ஆலோசித்திருக்கிறபடி ஸமீபத்திலுள்ள க்ராமத்திலேயே ஸங்கத்தை நடத்துவது மிக நல்லது என்று நாம் நினைக்கிறோம்.

மார்கழி மாஸத்தில் நடக்க வேண்டிய இந்த ஸங்கம் அப்பொழுது நடைபெறாமல் நின்றுவிட்டதே என்று நாம் ஸோகித்திருந்தோம். இப்பொழுது, பஹு ப்ரகாரங்களில் எல்லாருக்கும் அதிமாத்ரம் த்ருப்தியைக் கொடுக்குமளவு ஸ்லாக்யதமமான ஒரு நிஷ்பத்தியை இந்த ஸங்கத்திற்குத் தேடும் இதன் ப்ரவர்த்தகர்களின் பரிஸ்ரமத்தைப் பார்க்கும் நமக்கு மிகுந்த ஸந்தோஷமுண்டாகின்றது. ஸ்ரீலக்ஷ்மீ ந்ருஸிம்ஹன், தன்னுடைய கைங்கர்ய ரூபமாகிற இந்த ப்ரவ்ருத்தியை எவ்வித விக்நமுமின்றிக்கே பூர்த்திசெய்து கொள்ள வேண்டுமென்று மிக்க ஆஸ்தையுடன் நாம் ப்ரார்த்திக்கிறோம்.

∴ ∴ ∴

ஸூக்ஷ்மமான த்ர்ம தத்வம்.

“𑌤𑌰𑍍𑌕𑍋𑌽𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍍𑌠𑌃 𑌶𑍍𑌰𑍁𑌤𑌯𑍋 𑌵𑌿𑌭𑌿𑌨𑍍𑌨𑌾 𑌨𑍈𑌕𑍋
𑌋𑌷𑌿𑌰𑍍 𑌯𑌸𑍍𑌯 𑌮𑌤𑌂 𑌪𑍍𑌰𑌮𑌾𑌣𑌂 । 𑌧𑌰𑍍𑌮𑌸𑍍𑌯
𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌂 𑌨𑌿𑌹𑌿𑌤𑌂 𑌗𑍁𑌹𑌾𑌯𑌾𑌂 𑌮𑌹𑌾𑌜𑌨𑍋
𑌯𑍇𑌨 𑌗𑌤𑌃 𑌸 𑌪𑌨𑍍𑌥𑌾𑌃” என்னும் வாக்யம் ஸ்ரீ பாரதத்தில் காணப்படுகின்றது. இதன் அர்த்தமாவது—‘யுக்தியோ எல்லையில்லாதது; ஸ்ருதி வாக்யங்களோ பரஸ்பரம் விருத்தங்கள் போலத் தோன்றுகின்றன; மஹர்ஷிகள் சொல்லியிருக்கும் மார்க்கத்தில் ப்ரவ்ருத்திப்போமென்றால், அவர்களுக்குள்ளும் ஒற்றுமையைக்காணோம்; தர்மத்தின் தத்வமும்

ஸுலபமாக அறியக் கூடியதாக இல்லை: ஆகையால், பஹுஜநங்கள் போகும் வழியையே நாம் மார்க்கமாகப் பற்றவேண்டும்’ என்பது தான். உண்மையாகவே யுக்தியும் ஶ்ருதியும் மஹர்ஷி ப்ரணீதங்களாயுள்ள ஸ்ம்ருதிகளும் கீழ்ச் சொல்லப்பட்டிருக்கும் தோஷங்களால் ஆக்ராந்தங்களாக இருக்கின்றன என்பது இப்படிச் சொன்னவரின் தாத்பர்யமன்று. ஶ்ருதி ஸ்ம்ருதி. யுக்தி இவைகளை அவலம்பித்து நாம் தர்ம தத்வத்தை அறிய வேண்டுமே தவிர, கேவலம் ‘ ஊருடன் ஒக்க ஓடுவோம் ’ என்று சொல்வது விவேசந ஶக்தியை அடைந்திருக்கும் நமக்கு ந்யாய்யமாகாது. ஆனால், ஜநங்கள் ஜ்ஞாநாம்ஶத்தில் மிகுந்த தாரதம்யத்தை உடைத்தா யிருப்பதால், எல்லாரும் இவ்விதமான ஶ்ருதி ஸ்ம்ருதி யுக்தி விசாரணையில் அதிகாரியாக மாட்டார்கள் என்பதை எண்ணி, அப்படி அநதிகாரிகளாக இருக்குமவர்களைக் குறித்து இந்த வாக்யத்தை ஸ்ரீ வ்யாஸர் ப்ரவ்ருத்திப்பித்திருக்கிறார் என்று நாம் அறியவேண்டும். அவர்கள் விஷயத்திலும், கேவலம் பஹுஜந ப்ரவ்ருத்தி ப்ரமாணமாகி விடாது.

“ சத்வாரோ வேதத⁴ர்மஜ்ஞா: பர்ஷத் த்ரைவித்³யமேவ வா ।
ஸா ப்³ரூதே யம் ஸ த⁴ர்ம: ஸ்யாதே³கோ வாऽத்⁴யாத்மவித்தம: ॥ ”

[வேத ஶாஸ்த்ர தர்மங்களை அறிந்த நாலு ப்ராஹ்மணர்களுடைய ஸமூஹமாவது, மூன்று வித்யைகளையும் அத்யயநம் செய்திருப்பவர்களின் ஸமூஹமாவது, ‘ பர்ஷத் ’ என்று சொல்லப்படும். அப்படிப்பட்ட பர்ஷத்தின் நிர்ணயத்தைத்தான் தர்மமென்று பெரியோர்கள் சொல்லுகிறார்கள். அல்லது, அத்யாத்ம ஶாஸ்த்ரங்களில் நிபுணதமனுள்ள வேத தர்ம ஶாஸ்த்ரஜ்ஞன் நிர்ணயிப்பதையும், அவன் ஒருவனாக இருந்தாலும், தர்மமென்று சொல்வது உண்டு] என்று ஸ்ரீ யாஜ்ஞவல்க்யர் சொல்லியிருக்கிறபடி ஶிஷ்டர்களின் ப்ரவ்ருத்தியே ப்ரமாணமாகும். ‘ மஹாஜநம் ’ என்னும் ஶப்தத்திற்கும் ஶிஷ்டர்கள் என்றே அர்த்தம் கொள்ளவேண்டும்.

இக்காலத்தில், இம்மாதிரியான அதிகாரி அநதிகாரி பேதமே சீர்குலைந்து விட்டது. ஶ்ருதி ஸ்ம்ருதி விசாரணை செய்வதற்குத் திறமையை உடைத்தாயும் ஆஸ்திக்யத்தை வஹித்து மிருக்கும் அதிகாரிகளில் அநேகர், ஐஹிக வ்யாபாரத்தில் அத்யந்



தம் ப்ரவ்ருத்தர்களாய், இதரர்கள் அநுஷ்டிக்கும் தர்மங்களையே ஸத்தர்மங்களென்று எண்ணி எவ்வித பரத்தையும் உணராமல் அவைகளையே அந்த பரம்பரையாக அநுஷ்டித்து வருகிறார்கள். ஐஹிக வ்யாபாரத்தில் அவ்வளவாக ப்ரவ்ருத்திக்காம லிருக்கும் அநதிகாரிகளில் அநேகர், தமது அநதிகாரத்தைக் கவனியாமலே ஶ்ருதி விசாரணையில் ப்ரவ்ருத்தித்து அநேக விஷயங்களில் பஹு ப்ரகாரம் தவறான நிர்ணயங்களையும் தவறான அநுஷ்டாநங்களையும் செய்திருக்கிறார்கள் என்பதும் ப்ரத்யக்ஷ ஸித்தமாக இருக்கின்றது. அபூர்வமாக சிலவிடங்களில் சில ஆஸ்திகர்கள் மாத்ரம், தர்மம் இவ்விதமாக சீர்குலைந் திருப்பதையும், அதர்மங்களில் ஜநங்களுக்கு உண்டாகியிருக்கும் ஆவேகத்தையும் பார்த்து பயந்து, ஜகத்துக்கு தர்மத்தைப் போதிப்பது உந்மத்த க்ருத்யமாகுமென்று எண்ணி, ஒளிந்து வளருபவர்கள் போல தாம் இருக்குமிடத்தை ப்ரகடநம் செய்து கொள்ளாமலே தம்மைப் பற்றின வரையில் எம்பெருமானுக்கு உகப்பாகும்படி வர்த்தித்து வருகிறார்கள். அவர்களது க்ருத்யமும் அநுஷ்டாநமும் ஜகத்துக்குக் கோசரமாகாமலே போய்விடுகிறது. இதுவும் பகவத் ஸங்கல்பமே!

‘ தர்மத்தின் ஸ்திதி யதார்த்தமாகவே இப்படி இருக்கின்றதா? ’ என்று சிலருக்கு ஶங்கை ஜநிக்கலாம். வஸ்து ஸ்திதியைக் கொஞ்சம் பராமர்ஶித்துப் பார்த்தால் அந்த ஶங்கைக்கு அவகாஶமில்லை யென்பது விளங்கும். லௌகிக வ்யாபாரங்களில் ப்ரவ்ருத்தித்திருக்கும் அநேகர்களில் சிலரை ஆஸ்திக்யமுள்ளவர்களாக நாம் அறிவோம். ஆனால், அவர்கள் ஶாஸ்த்ர பரிஶீலநம் செய்ய அவகாஶ மற்றவர்களாய், சில அஜ்ஞர்களின் அநுஷ்டாநத்தையும் நிர்ணயத்தையும் ப்ரமாணமாக அவலம்பித்து, முக்யமான சில தர்மங்களைக் கை தவறவிட்டு அமுக்யமான சிலவற்றை ப்ரதாநம் போல அநுஷ்டித்து வருகிறார்கள் என்பது எல்லாருக்கும் தெரிந்த விஷயம். காலங்களில் நித்ய நைமித்திக கர்மங்களைச் செய்வதும், கர்மாநுஷ்டாநங்களில் அந்தரிந்த்ரிய ஶுத்தியும், யதார்த்த வசநமும், இந்த்ரிய நிக்ரஹமும் இவைகளெல்லாம் அவ்வளவு அவஶ்யமாக க்ரஹிக்கப்படவில்லை. வக்ரமும் மாத்ஸர்ய ப்ரயுக்தமுமான வ்ருத்தியுமே ஸஹஜமாகி விட்டது. பர ப்ரதாரணமென்பதில் எவ்வித பாபமும் அறி

யப்படவில்லை. ப்ரதாரணத்தில் ஸமர்த்தர்களும் அவ்யவஸ்தித மான இந்த்ரிய ப்ரவ்ருத்தியை உடையவர்களுமே பரம யோக்யர்களென்று க்ரஹிக்கப்படுகிறார்கள். புண்ட்ர தாரணாதிகளிலும் வைதிக பரிபாஷைகளிலும் பாஹ்யமான பகவதாராதந தந்த்ரங்களிலும் அதிமாத்ரம் விஶ்வாஸத்தைப் பாவித்துக்கொண்டு அந்தப் பாவனையையே ஸர்வ வித அகார்யத்திலிருந்தும் ஸம்ரக்ஷகமென்று எண்ணி அஸத்ய வசநத்திலும் கடனைத் திருப்பிக்கொடுக்காமல் மோசம் செய்வதிலும் மநஃபூர்வமாக ப்ரவ்ருத்திப்பவர்களை அநேகமாக எல்லாவிடங்களிலும் காணலாம். ‘நாம் ஆபிஜாத்யத்தை உடையவர்’ என்னும் மதத்தை மனங்கொண்டு, ‘தேஜஸ்விநாம் ந தோஷாய வஹ்நே: ஸர்வபுஜோ யதா’ என்கிறபடி தாம் எந்த அகார்யத்தையும் செய்யலாமென்று அநேக மஹாகுல ப்ரஸூதர்கள் ப்ரவ்ருத்திக்கிறார்கள். தநத்தையும் ஸ்வல்ப ப்ராமுக்யத்தையும் உடைத்தாயிருக்குமவர்கள் விஷயத்தில், கார்யாகார்ய வ்யவஸ்தையை அங்கீகரியாமலே அவர்கள் செய்யும் அகார்யங்களுக்கெல்லாம் ஶாஸ்த்ர ஆதாரத்தைத் தேடி அவைகள் ஶாஸ்த்ரீயங்களென்று நிர்ணயிக்கும் வித்வாங்கள் ஜகத்தில் இல்லையோ? இது மாத்ரம் அன்று. ஸர்வ வ்யாபியாகவும் ஸர்வ ஸாக்ஷியாகவுமிருக்கும் ஈஶ்வரன் விஷயத்திலும், தமக்குள் பரஸ்பரம் காபட்யத்தை வஹித்து ஏமாற்றுவதில் ப்ரவ்ருத்திப்பதுபோல, அவன் விதித்திருக்கும் ஆஜ்ஞைகளை புத்திபூர்வமாக அதிலங்கநம் செய்துகொண்டே அநர்க்கமான உபஹார ஸமர்ப்பணம் போன்ற பாஹ்ய வ்யாபாரத்தால் அவனை ஏமாற்றவும் அவனது ப்ரீதியை ஸம்பாதித்துக் கொள்ளவும் முயலும் வேஷதாரிகளை நாம் பார்க்கவில்லையோ? இவர்களெல்லாரும் தர்மாதர்ம விதாநம் செய்வதில் அதிகாரிகளாக வெளிவருவதையும், அவர்கள் சொல்வதைக் கேட்டுக்கொண்டு அது தான் தர்மமென்று இதரர்கள் கொண்டாடுவதையும் பார்க்கும் நமக்கு மிக்க ஶோக முண்டாகின்றது. ஸ்வர்ண ஸ்தேயம், அஸத்ய வசநம், இந்த்ரிய பராதீநதை இவையெல்லாம் தோஷங்களல்ல வென்றும், இவைபோன்ற அதர்மங்கள் நாற்றுக்கணக்காக இருந்தாலும், நியதமான புண்ட்ரதாரணமும் அநர்ஜவமான ஶரணாகதியும் தம்மைக் காப்பாற்றிவிடுமென்றும் நினைத்திருப்பவர்களின் தார்மிகத்வத்தைப்பற்றி நாம் என் சொல்வோம்?



புண்ட்ர தாரணம் பிசகு என்றாவது, ஶரணாகதி ஶ்ரேயஸ் ஸாதகமன்று என்றாவது நமது அபிப்ராயமன்று. ஶாஸ்த்ரங்களுக்குக் கட்டுப்பட்டிருக்கும் நமக்கு, அவைகள் அவஶ்யம் அபேக்ஷிதங்களென்றே ஒரு நம்பிக்கை உண்டு. ஆனால், ப்ராஹ்மணன் முதல் சண்டாள பர்யந்தம் ஸாதாரணமான சில தர்ம ஸாதநங்கள் இல்லா விடத்தில், இவைபோன்ற பாஹ்ய வ்யாபாரங்கள் கார்யகாரியாகா என்று த்ருடமாகச் சொல்வோம். இதுதான் ஸூக்ஷ்மமான தர்மதத்வம். ஶாஸ்த்ரங்களை ஈஶ்வர ஆஜ்ஞை யென்று நாம் அங்கீகரித்தால், அவைகளில் அல்பாம்ஶமான ஏகதேஶத்தை மாத்ரம் விஶ்வஸித்து மற்றைப் பாகத்தை அநாதரிப்பது தர்ம தத்வ மாகாது என்பது நமது உறுதியான எண்ணம். ஈஶ்வர ப்ரீதிக்கு, ஆந்தரமான ஶுத்தியுடன் கலந்து நிற்கும் பாஹ்ய ஶுத்தியே ப்ரயோஜக மென்பதை நமது தேஶத்திய ஆஸ்திகர்கள் அறியவேண்டும்.

‘அஹிம்ஸா ஸத்யமஸ்தேயம் ஶௌசமிந்த்ரிய நிக்ரஹ: ।
தாநம் தமோ தயா க்ஷாந்தி: ஸர்வேஷாம் தர்மஸாதநம் ॥”

என்று ஸ்ரீ யாஜ்ஞ வல்க்ய மஹர்ஷி சொல்லியிருப்பதை நாம் மறக்கக் கூடாது.

“அந்ருதம் நோக்தபூர்வம் மே ந ச வக்ஷ்யே கதாசந”

என்றும்,

“ந ராம: பரதாராம்ஶ்ச சக்ஷுர்ப்யாமபி பஶ்யதி”

என்றும்,

“நஹீத்ருஶ்ய தயமேஷ்ண ஶக்யஸ்தவேதி லக்ஷ்ண”

என்றும்,

“அப்யஹம் ஜீவிதம் ஜஹ்யாம் த்வாம் வா ஸீதே ஸலக்ஷ்மணாம் ।
ந து ப்ரதிஜ்ஞாம் ஸம்ஶ்ருத்ய ப்ராஹ்மணேப்யோ விஶேஷத: ॥”

என்றும் இத்யாதியான ஸ்ரீ சக்ரவர்த்தித் திருமகனது அநுஷ்டாநம் நமக்கு ப்ரமாணமாக வேண்டாவோ? நாமெல்லாரும், இந்தத் தர்ம தத்வத்தை ஒருபொழுதும் மறக்காமல், ஸதா மநஸ்ஸில் உபஸ்திதமாக வைத்துக்கொண்டே நமது வ்ருத்தியில் வர்த்தித்து வரும்படி ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹன் அநுக்ரஹிக்க வேண்டு மென்பது நம்முடைய ஸார்வகாலிக ப்ரார்த்தனை.

---

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

# ஸ்ரீ அஹோபில மாஹாத்ம்யம்.

## முதல் அத்யாயம்.

நாராயணம் நமஸ்க்ருத்ய நரஞ்சைவ நரோத்தமம் |
தேவீம் ஸரஸ்வதீம் வ்யாஸம் ததோ ஜயமுதீரயேத் || ௧

பரமாநந்தத்திற்குக் காரணமான பரமாத்மாவை நமஸ்கரித்துவிட்டு, பகவானுடைய மாஹாத்ம்யத்தைச் சொல்லுகிறேன். முன்பு ஒருகாலத்தில் அடக்கப்பட்ட மனத்தை உடையவர்களான ஶௌநகர் முதலான முனிவர்கள், கங்காதீரத்தில் நாரதமுனிவனை நோக்கி மிகுந்த ப்ரீதியுடன் "பகவத் ஜ்ஞாநம் உடையவர்களுக்குள் சிறந்தவனே! ஸம்ஸாரத்தினால் எரிக்கப்பட்ட மனத்தை உடையவர்களை உத்தாரணம் செய்பவனே! சிறந்த அறிவையுடையவனே! ஸத்ய ஸங்கல்பத்தின் பெருமையையுடையவனே! மஹாத்மாவும் அமலனுமான ப்ரஹ்மாவினிடத்திலிருந்து அவதரித்தவனே! இறந்தகாலம் எதிர்காலம் நிகழ் காலங்களிலுள்ள ஜந்துக்களின் ஸமூஹத்தை நிச்சயிப்பதில் ஸமர்த்தனே! எல்லாவற்றையும் தாண்டியிருப்பவனே! எல்லாம் அறிந்தவனே! ரிஷிச்ரேஷ்டனே! ஆ ஸேது ஹிமாசலம் வரையில் எந்தப் புண்யங்களான தீர்த்தங்களும் தேவாலயங்களும் நதிகளும் மலைகளும் புண்யங்களான உபவநங்களும் இருக்கின்றனவோ அவைகளையும் கேட்டு, அவ்வாறே புண்யங்களான குளங்கள் குகைகள் காடுகள் இவைகளையும், ஸ்ரீ முஷ்ணம் வேங்கடாசலம் ஸாளக்ராமம் நைமிசாரண்யம் தோதாத்ரி புஷ்கரம் ஸ்ரீரங்கம் வ்ருஷபாத்ரி நாராயணகிரி அநந்தசயநம் பில்வாசலம் திருக்குறுங்குடி மலயாசலம் ஹரசாபஹரம் ஸிம்ஹாத்ரி அஹோபிலம் இவை முதலானவைகளை யெல்லாம் ப்ரம்மாவினிடத்திலிருந்து கேட்டோம். பிறகு இந்த உத்தமமான மாஹாத்ம்யத்தை பகவானாகிய வ்ருஷபர் கபிலருக்குச் சொன்னார். கபிலர் புருகுத்ஸருக்குச் சொன்னார். புருகுத்ஸர் கணதருக்குச் சொன்னார். அவ்



விடத்தில் அஹோபில மாஹாத்ம்யம் மிக்க அத்புதமாய்ச் சொல்லப்பட்டது. ஆனால், கர்மத்தினால் தூண்டப்பட்ட எங்களால் ஸாவதாநமாய்க் கேட்கப்படவில்லை. மஹாபுத்திமானாகிய நாரதனே! இப்பொழுது தேவாதிதேவனான பகவானுடைய க்ஷேத்ர மாஹாத்ம்யத்தை விஸ்தாரமாய்க் கேட்க நாங்கள் விரும்புகின்றோம். எங்களுக்கு ப்ரஹ்மசர்யாதி ஆச்ரமங்களின் ஆசாரத்தில் ஆசையில்லை; க்ருஹ க்ருத்யத்தில் ப்ரீதியில்லை; பரவிஷயமான த்யாநத்திலும் ப்ரீதியில்லை; ஸுகத்தை வ்ருத்திபண்ணுவதிலும் ப்ரீதியில்லை. தாஹத்தினால் வருந்தியவர்கள் எவ்வாறு ஜலத்தை க்ரஹிப்பார்களோ, எவ்வாறு பசியினால் வருந்தியவர்கள் உணவை அன்புடன் க்ரஹிப்பார்களோ, அவ்வாறு நாங்கள் பகவத் ஆவிர்பாவ மாஹாத்ம்யத்தைக் கேட்க விரும்புகின்றோம். முநிகுமாரனே, தேவரீர் ஸமர்த்தர், கவி, எல்லாம் அறிந்தவர், பரருடைய கார்யத்தையே ப்ரயோஜநமாக வுடையவர்; அநுத்தமமான வாக்குக்களின் ஸமூஹத்தினால் அடியோங்களை க்ருதார்த்தராகச் செய்யக்கடவீர்" என்று கேட்டார்கள்.

பகவானாகிய நாரதமுனிவர், மிகவும் புளகங்களைத் தருவதான இந்த வார்த்தையைக் கேட்டு, ப்ரஸந்நமான முகத்தையுடையவராய் உத்தரம் சொன்னார். "ஶௌநகர் அத்ரி முதலிய ரிஷிகளே, எல்லோரும் கேளுங்கள். உலகத்தில் புண்யங்களாயும் புருஷார்த்தங்களைக் கொடுப்பதாயும் உள்ள க்ஷேத்ரங்கள் அநேகம் இருக்கின்றன. அவை ப்ரஹ்மாவினால் நிர்மிக்கப்பட்டவை; அவைகளின் பெயர்களையும் மஹிமையையும் சொல்ல முடியாது. ஆனாலும், உங்களுக்குக் கொஞ்சம் சொல்லுகிறேன்; ப்ரீதியுடன் கேளுங்கள்.

அவந்தீ குருகை ப்ரயாகை தேவதாருவநம் இவைகளுக்குள் உத்தமமானதும் லோகத்தை பரிசுத்த மாக்கவல்லது மானது ப்ரயாகை என்னும் க்ஷேத்ரம். இந்த ப்ரயாகையில் முப்பதினாயிரம் கோடி தீர்த்தங்கள் ஒரு அமாவாஸ்யையில் வந்து சேருகின்றன. ஆனால், அஹோபில நரஸிம்ஹனைச் சுற்றிலும் மூன்று யோஜனை விஸ்தீர்ண முள்ள க்ஷேத்ரமானது, கயை ப்ரயாகை காசி இவைகளைக் காட்டிலும் நூறு மடங்கு மேன்மையுடையது என்பது நிச்சயம். பித்ருக்களை த்ருப்தி செய்வதற்காக கயைக்குப் போகவேண்டும்; தன்சரீரத்தை விடுவதற்காக கங்கைக்

குப் போகவேண்டும்; தாரக மந்த்ரோபதேஶத்திற்காக காஶிக்குப்போக வேண்டும்; ஆனால், இம் மூன்றிற்கும் அஹோபிலம் ஒன்றுமே போகலாம். காஶியில் ஒருவன் ஆயிரம் யுகங்கள் வஸிப்பதும், ப்ரயாகையில் இருபது யுகங்கள் வஸிப்பதும், கயையில் நூறு யுகங்கள் வஸிப்பதும் அஹோபிலத்தில் ஒருதினம் வஸிப்பதும் ஸமம். கயையில் பதினாயிரம் பேருக்கு போஜநதாநமும், ப்ரயாகையில் லக்ஷம் பேருக்குப் போஜந தாநமும், காஶியில் இரண்டு லக்ஷம் பேருக்குப் போஜநதாநமும், அஹோபிலத்தில் ஒரு கபள போஜநதாநமும் ஸமம். அஹோபிலத்தில் தாநம் செய்யப்பட்ட த்ரவ்யம், அணுவளவேனும், சிறிய ஆலின் விதை பெரிய மரமாவதுபோல, மேருவின் அளவு வ்ருத்தியாகின்றது. உத்தமமான நான்கு அக்ஷரமாய், நான்குவித புருஷார்த்தங்களைத் தரக்கூடியதாய், ப்ரஹ்மாவினால் பூஜிக்கப்பட்டதாய், பஞ்சமஹா பாபங்களையும் சாம்பலாக்கக் கூடியதாயுள்ள அஹோபிலம் என்னும் இம்மஹாமந்திரம் காலையில் எழுந்தவுடனே மூன்றுதரம் சொல்லத்தகுந்தது. மூன்று யோஜனை விஸ்தீர்ண முள்ளதாயும், மூன்று யோஜனை அகலமுள்ளதாயுமிருக்கிற இந்த அஹோபிலம் நரஸிம்ஹனுடைய அபிமாநத்தைப்பெற்று இருப்பதினால் வீரக்ஷேத்ரம் என்று ப்ரஸித்தமாகவிருக்கிறது. இந்த க்ஷேத்ரத்தில், ஆசை பயம் இல்லாதவர்களும், அடக்கப்பட்ட மனத்தை யுள்ளவர்களும், தாமரைப்பூவைப் போன்ற நாராயணனுடைய திருவடிகளில் நித்யவாஸம் செய்பவர்களுமான ரிஷிகள் இருக்கிறார்கள். இவர்களில், ஜலத்தையே பாநம் செய்திருப்பவர் சிலர்; வாயு பக்ஷணம் செய்பவர் சிலர்; ஆஹாரமே யில்லாதவர் சிலர்; சிலர் ஜடை வளர்த்தவர்கள்; சிலர் முண்டநம் செய்து கொண்டவர்கள்; தனித்து ஒன்றை அபிமாநித்திராதவர் சிலர்; வ்யாகரணத்தில் பாண்டித்யமுடையவர் சிலர்; சிலர் ஆநந்தரூபமான ப்ருஹ்மத்தினிடத்தில் நிஷ்டையை உடையவர்; எல்லாரும் கபடமில்லாத தங்கள் தங்களுடைய அநுஷ்டாநத்தினால் ஜகத்குருவான பகவானை த்ருப்தி செய்து வருகிறார்கள். இவர்கள் எல்லா விஷயங்களிலும் மனத்தைப் பற்றில்லாததாகச்செய்து கொண்டவர்கள். ஸாதுக்களின் கூட்டத்திலேயே இருப்பவர்கள். ப்ராணிகளிடத்தில் கருணையையும், ஸ்நேஹத்தையும், வணக்கத்தையும் கொண்டவர்கள். ப்ரஹ்மசர்யம், ஸமத்வம், மௌநம், வேதாத்யயநம், கபடமில்



லாமை, ஶௌசம், தபஸ், பொறுமை, எல்லாத்துக்கங்களையும் ஸஹித்துக்கொள்ளுதல், எல்லாவஸ்துக்களிடத்திலும் ஜீவாத்மாவையும் பரமாத்மாவையும் பார்த்துக்கொண்டிருத்தல், இவைகளினால் பரிஶுத்தமான மனத்தை உடையவர்கள். மரவுரியைத் தரித்துக்கொண்டவர்கள். தனக்குக் கிடைத்த ஏதாவது ஒரு வஸ்துவினால் ஸந்தோஷத்தை அடைபவர்கள். மனது வாக் காயம் இவைகளை அடக்குவதும், ஸத்யமும் ஶாந்தியும் தாந்தியும் பகவானுடைய சரித்ர ஶ்ரவணமும், நாம ஸங்கீர்த்தநமும், த்யாநமும் இவைகளை ந்ருஸிம்ஹனுக்கு ப்ரியமானவை யென்று செய்பவர்கள். எது தாநம் செய்யப்பட்டதோ, எந்த யாகம் செய்யப்பட்டதோ, எது ஜபம் செய்யப்பட்டதோ அவை எல்லாவற்றையும், தங்களுடைய தாஸர்களையும் பிள்ளைகளையும் வீடுகளையும் ப்ராணங்களையும் பகவானுடைய ஶேஷபூதங்களென்று எண்ணியிருப்பவர்கள். வேறொரு தைவம் தொழாதவர்கள். மோக்ஷத்தையே நினைத்துக் கொண்டிருப்பவர்கள்.

இந்த க்ஷேத்ரத்தில் கருடாசலம் என்று ப்ரஸித்தி பெற்ற ஒரு மலை யிருக்கிறது. மூன்று யோஜனை தூரம் நீளமும் மூன்று யோஜனைதூரம் விஸ்தாரமுமுள்ள அந்த மலை ந்ருஸிம்ஹனுடைய அபிமாநத்தை யடைந்திருப்பதனால் வீரக்ஷேத்ரம் என்று ப்ரஸித்தமாக இருக்கிறது. சந்த்ர ஸூர்யர்கள் மிகவும் உந்நதமான ஶிகரங்களில் ஸஞ்சரியா நிற்கின்ற அந்தமலை, துக்கஸாகரத்திற்கு ஸேதுவைப்போன்ற ஶிகரங்களினால் வெகுதூரத்திலிருந்தே காணப்படுகிறது. அதில் ஒரு ஶிகரம் மேரு பர்வதத்தைப்போல ப்ரகாஶமாய்த் தெரிகிறது. மோக்ஷத்தை அடைந்தவர்களின் மார்க்கத்தைப்போல அதன் நிழலுக்கு அசைதல் இல்லை; இது முன்பு அஸுரர்களுக்கு அரசனாகிய ஹிரண்ய கஶிபுவின் வீட்டிற்குத் தூணாக இருந்தது; வெகுகாலம் கழிந்தமையால் மலையாகிவிட்டது. அதன் மத்யதேஶத்தில் ஸாக்ஷாத் பகவான் இப்பொழுதும் காணப்படுகிறார். பதினாயிரம் ஸூர்யனுக்கு ஸமாநமான காந்தியுடன் கூடின இந்த ஜ்வாலாந்ருஸிம்ஹன், அவ்விடத்தில் வஜ்ராயுதத்தைப் போன்றதும் தேவதைகளுக்கு ப்ரியத்தைச் செய்கிறதும் பரிஶுத்தங்களுமான தன்னுடைய நகங்களினால் ஹிரண்ய கஶிபுவின் விஶாலமான மார்பைப் பிளந்தார். எந்த ஜலத்தில் பகவான் தன்னுடைய தாம

ரைமலர் போன்ற இரண்டு கைகளையும் அலம்பினாரோ, அது ரக்தகுண்டம் என்கிற பெயருடன் அம்மலையின் நடுவில் விளங்குகின்றது. அந்த ஜலம் காற்றினாலும் வெய்யிலினாலும் ஒருபொழுதும் குறைவதில்லை. அந்தத் தீர்த்தத்தை ஸேவித்து விட்டு ந்ருஸிம்ஹனை ஸேவிக்கிறவர்கள், ரக்தத்தோடு கலந்த யோகியை ஒரு பொழுதும் அடைவதில்லை. மிகவும் கோபத்தை யடைந்திருந்த அந்தப் பகவானுக்கு சாந்தி யுண்டாவதற்காக தேவ கணங்கள் மூன்று லோகங்களிலும் பெருகிவருகிற கங்கையை அழைத்துக் கொண்டுவந்து மிகுந்த பக்தியுடன் திருமஞ்சனம் செய்தார்கள். அந்தக் கங்கை வெகுபயங்கரமாய் மேற்கு திக்கு நோக்கிப் பெருகிவருகிறது. ஸம்ஸாரத்தி லுண்டான எல்லா துக்கங்களையும் நீக்குகிறபடியால் இதற்குப்பெயர் பவநாசினீ என்றும் மஹிமையினால் நிர்மலமானது என்றும் ரிஷிகள் நிச்சயித்தார்கள்.

இந்தக் கருடாசலத்தினுடைய நூறு யோஜனை தூரமுள்ள தெற்கு திக்கில் எந்த ரிஷிகள் இருக்கிறார்களோ அவர்கள் விசேஷமாய்க் கொண்டாடத் தக்கவர்கள். இதற்கு வடக்கில் இரண்டு யோஜனை தூரத்தில் நந்தி ஆச்ரமம் என்னும் ஒரு புண்யஸ்தலமிருக்கிறது. அந்த ஸ்தலத்தில் பகவனான நந்திகேச்வரர் சிவனைக்குறித்து மிகவும் உக்ரமான தபஸ்ஸைச் செய்தார். பிறகு மூன்று லோகங்களிலும் பூஜிக்கப்பட்ட பகவானாகிய சிவன், அவருக்கு ப்ரஸந்நராகி அவருக்கு ப்ரமதகணங்களுக்கு ஆதிபத்யத்தைக் கொடுத்து அந்த நந்தியினுடைய பெயரை * அவ்விடத்திலுள்ள குளத்திற்கும் அத்தேசத்திற்கும் வைத்து மிகவும் ஸந்தோஷத்துடன் தானும் ஸாந்நித்யத்தைச் செய்தார்.

அதற்கு வடதிசையில் தேவதைகளாலும் அஸுரர்களாலும் கிட்டமுடியாததும் கருடாசலத்தின் ஒருபாகமென்று ப்ரஸித்தி பெற்றதுமான ஸ்ரீசைலம் இருக்கின்றது. அவ்விடத்தில் ஸ்வயம்புவான அந்த சிவன், கைலாஸமலையையும் விட்டு அதிக ப்ரீதியைச்செய்து இப்பொழுதும் வரங்களை கொடுப்பவராய் காணப்படுகிறார். அங்கே க்ருஷ்ணை என்னும் நதி ப்ரவஹிக்கிறது. உலகத்திலுள்ள கண்டகங்களைக் கிளையும் அந்நதி, இம்மலைக்கு எல்லை. அங்கிருக்கும் சிறுமலைகளும் புண்யங்களான ஆறுகளும் மலை

* இந்த ஸரஸ்ஸுக்கு மஹாநந்தி என்றுபெயர் வழங்கி வருகின்றது.

REGISTERED 2- 1914 BOOKS



க்குகைகளும் ஸித்தாச்ரமங்களும் தேவதைகளி னிருப்பிடங்களும் மற்றும் அங்கே வஸிக்கும் இயக்கர் கந்தர்வர் கிந்நரர் எல்லோரும் நரஸிம்ஹனுடைய அநுக்ரஹத்தினால் பூஜிக்கத்தக்கவர்கள்.

ரிஷிகள்:—இந்தக் கருடாசலத்திற்கு இடமான பரிசுத்த க்ஷேத்ரம் எங்கே இருக்கிறது? மிகவும் விஸ்தீர்ணமான இந்த மலைக்கு எவ்வாறு ஒரு மூலையில் மஹிமை யுண்டாயிற்று.

ஸ்ரீநாரதர்:— ஏழு ஸமுத்ரங்கள், ஏழு தீவுகள், ஏழு குலாசலங்கள் இவைகளுடன் கூடின ஹரிவல்லபையான இந்தப் பூமி, ஐம்பதுகோடி யோஜனை விஸ்தாரமுள்ளது. பூமியிலுள்ள தீவுகளுக்குள் ஜீர்ண த்வீபம் மிகவும் உயர்ந்தது. இது கர்மபூமியாய் உலகத்தாருக்கு ஸாதகமா யிருப்பதால் ச்ரேஷ்டமானது. அந்த த்வீபத்தில் பரதகண்டம் என்று பெயருடைய மஹாபாகத்தில் மேருவுக்கு தக்ஷிணபாகத்தில் க்ருஷ்ணவேணி நதிக்குத் தென்திசையில் ஏழு யோஜனை தூரத்தில் கிழக்கு ஸமுத்ரத்தின் மேற்கு திசையில் ஏழு யோஜனை தூரமுள்ள தேசத்தில் அஹோபிலம் என்று ப்ரஸித்தமான க்ஷேத்ரம் இருக்கிறது. அந்த க்ஷேத்ரத்தில் கருடாத்ரி என்று பெயருடைய ஸ்தலம் ஒன்று ஒண்டு. எப்படி எங்கும் பரிபூர்ணரான பகவானுடைய அவதாரம் ஓரிடத்தில் காணப்படுகிறதோ அப்படியே கருடாசலமும் காணப்படுகிறது. இப்படி இந்த க்ஷேத்ரத்தின் பெயரும் இந்த மலையின் பெயரும் ப்ரஸித்தமானது.

இந்தமலை, நாநாவித மரங்களினாலும் கொடிகளினாலும் நிறைந்து நாநாவித பக்ஷிகள் வஸிக்குமிடமாக இருக்கின்றது. செண்பகம் பனை முதலிய பச்சிலை மரங்களினாலும், அசோக மரங்களினாலும், திலக மரங்களினாலும் புந்நாக மரங்களினாலும், ஆகாசத்தை அளாவிய தென்னை மரங்களினாலும், வேப்ப மரங்களினாலும், கடப்பை மரங்களினாலும், பேரீச்ச மரங்களினாலும், தாழை மரங்களினாலும், அநேகவித பழங்களினாலும், புஷ்பங்களினாலும் அலங்கரிக்கப்பட்டு, பெண்கிளி ஆண்கிளி மயில் குயில் முதலிய பக்ஷிகளின் சப்தங்களோடு கூடியதும் தேனைக்குடித்து மதம்பிடித்த வண்டுகள் நிறைந்ததுமாகிய பலா மரங்களினாலும், பாதிரி மரங்களினாலும், மாமரங்களினாலும், பாரிபத்ர மரங்களினாலும், ஸரள மரங்களினாலும், க்ரௌஞ்ச மரங்களி

ணுலும், புளிய மரங்களினுலும், விளா மரங்களினுலும், இப்பிலி மரங்களினுலும், சந்தந மரங்களினுலும் நிறைந்தது! மதம் பிடித்தவைகளாய் கறுத்த மேகங்கள்போன்ற யானைக் கூட்டங்களினுலும், உக்ரமான கார்யங்களைச் செய்கிற ஸிஹ்மங்களினுலும் நான்கு பக்கங்களிலும் விளங்கிக் கொண்டிருக்கிறது. மான்களினுலும், ஶரபங்களினுலும், கொண்ட முஸுருகளினுலும், மாணிக்கத்தினுல் ப்ரகாஶித்துக் கொண்டிருக்கிற ஸர்ப்பங்களினுலும், காரண்டம் ஹம்ஸம் மயில் இவைகளாலும் நிறைந்து அழகாயிருக்கிறது. மை மலைபோல கறுத்த நிற முள்ளவர்களாயும், பயங்கரர்களாயும், மிகவும் கெட்டஸ்வபாவ முள்ளவர்களாயும், வில் பாணங்களைத் தரித்திருப்பவர்களாயும், பயங்கரமான பார்வையை யுடையவர்களாயும், ஸ்த்ரீகளோடு கூடியவர்களாயுமுள்ள ம்லேச்சர்களால் விளங்குகின்றது. எல்லா ப்ராணிகளையும் காப்பாற்றவல்ல வஸ்துக்களால் நிறைந்தது. எப்பொழுதும் தங்கள் தங்கள் அநுஷ்டாநங்களைச்செய்து கொண்டிருக்கிற ரிஷிஶ்ரேஷ்டர்களால் அடையப்பட்டது. குருபூஜா பராயணர்களான ப்ராஹ்மணர்களினுல் நிறைந்தது. விளையாடிக் கொண்டிருக்கும் அப்ஸரஸ்ஸுக்களினுலும் எல்லா இஷ்டங்களையும் கொடுக்கும் இம்மலை அடையப்பட்டது. அநேக மாயிரம் வர்ஷங்கள் சொன்ன போதிலும், ப்ரஹ்மாவினுலும் இந்த மலையின் பெருமை சொல்ல முடியாது. ஆகையால், என்னைப்போன்ற ஜநங்களினுல் சொல்ல முடியாது என்பதைப்பற்றிக் கேட்கவும் வேண்டுமோ?

இந்த மலையின் தென்திசையில் **வேங்கடாசலம்** என்று பெயரை உடையதாய், மஹாத்மாக்களாகிய நித்யர்கள் முக்தர்கள் ரிஷிகள் இவர்களால் அடையப்பட்ட மலை ஒன்று இருக்கின்றது. அதில் பகவான் எப்பொழுதும் வஸித்துக் கொண்டிருக்கிறுன். இவ்விதமாக கருடாசலமென்று பெயருடைய இம்மலை மலயபர்வதம் வரையிலும் விஸ்தாரமுடையதாக இருக்கின்றது. இப்படி நீங்கள் ப்ரார்த்தித்த படிக்கு எல்லாம் சொல்லப்பட்டது.

ப்ர்ஹ்மாண்ட புராணத்தில் க்ஷேத்ர காண்டத்தில்
அஹோபில மாஹாத்ம்யத்தில்,
முதலாவது அத்யாயம் முற்றிற்று.

சேட்லூர் நரஸிஹ்மா சார்யர்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌵𑌰𑌵𑌰𑌮𑍁𑌨𑌯𑍇 𑌨𑌮𑌃.

# ஸ்ரீ ஸ்தோத்ர ரத்நம்.

𑌨 𑌧𑌰𑍍𑌮𑌨𑌿𑌷𑍍𑌠𑍋𑌽𑌸𑍍𑌮𑌿 𑌨 𑌚𑌾𑌤𑍍𑌮𑌵𑍇𑌦𑍀
𑌨 𑌭𑌕𑍍𑌤𑌿𑌮𑌾𑌂𑌸𑍍𑌤𑍍𑌵𑌚𑍍𑌚𑌰𑌣𑌾𑌰𑌵𑌿𑌨𑍍𑌦𑍇 ।
𑌅𑌕𑌿𑌞𑍍𑌚𑌨𑍋𑌽𑌨𑌨𑍍𑌯𑌗𑌤𑌿 𑌶𑌰𑌣𑍍𑌯 ।
𑌤𑍍𑌵𑌤𑍍𑌪𑌾𑌦𑌮𑍂𑌲𑌂 𑌶𑌰𑌣𑌂 𑌪𑍍𑌰𑌪𑌦𑍍𑌯𑍇 ॥ 22.

22. கீழ் ஶ்லோகத்தில், நிருபாதிக ஸ்வாமியாக விருக்கும் பகவானிடத்தில் தமக்குள்ள ஸ்வரூப க்ருதமும் குணக்ருதமுமான தாஸத்வத்தை அநுபவித்து, அப்படிப்பட்ட அநுபவத்திற்கு உசிதமான நமஸ்கார ரூபமாயுள்ள வ்யாபாரத்தை ‘𑌨𑌮𑍋 𑌨𑌮𑌃’ என்று ஆசரித்துவிட்டு, ஸ்ரீ ஆளவந்தார், இந்த ஶ்லோகத்தால், ‘அப்படிப்பட்ட ஸ்வாமியை அடைவதற்கு உரிய ஸாமக்ரிகளில் ஒன்றும் நம்மிடம் இல்லையே! அவைகளின் இல்லாமை பகவத் ப்ராப்திக்கு விரோதியாக ஸம்பவித்துவிடுமோ?’ என்று பயந்து, அந்த விரோதியின் நிவ்ருத்தியை உத்தேஶித்து, தமது அதிகாரத்திற்கு உசிதமாயுள்ள ப்ரபத்தியை விஶதமாக ப்ரயோகம் செய்கிறுர்.

(𑌅𑌹𑌂) 𑌧𑌰𑍍𑌮𑌨𑌿𑌷𑍍𑌠𑍋 𑌨𑌾𑌸𑍍𑌮𑌿; 𑌆𑌤𑍍𑌮𑌵𑍇𑌦𑍀 𑌚 𑌨𑌾𑌸𑍍𑌮𑌿; 𑌤𑍍𑌵𑌚𑍍𑌚𑌰𑌣𑌾𑌰𑌵𑌿𑌨𑍍𑌦𑍇 𑌭𑌕𑍍𑌤𑌿𑌮𑌾𑌂𑌶𑍍𑌚 𑌨𑌾𑌸𑍍𑌮𑌿; (𑌅𑌤𑌃) 𑌅𑌕𑌿𑌞𑍍𑌚𑌨𑌃 𑌅𑌨𑌨𑍍𑌯𑌗𑌤𑌿𑌃 𑌅𑌹𑌂 𑌹𑍇 𑌶𑌰𑌣𑍍𑌯! 𑌤𑍍𑌵𑌤𑍍𑌪𑌾𑌦𑌮𑍂𑌲𑌂 𑌶𑌰𑌣𑌂 𑌪𑍍𑌰𑌪𑌦𑍍𑌯𑍇॥ ஹே பகவந்! யதாவஸ்திதமான கர்மயோகாநுஷ்டாநத்திற்கும் அதன் பரிகரங்களுக்கும் நான் அநர்ஹனுக இருக்கிறேன்; அந்தக் காரணத்தினுலேயே பரிஶுத்த ஆத்மாவை அறியும் யோக்

யதையும் என்னிடமில்லை; இப்படி கர்மயோக ஜ்ஞாநயோக அர்ஹதை என்னிடம் இல்லாததால், உன்னுடைய சரணாரவிந்தத்தில் பக்தி செய்யும் யோக்யதையும் எனக்கு யில்லை. இப்படி நான் வேறு ஸாதந மற்றவனாகவும் வேறு கதி யில்லாதவனாகவும் இருக்கிறபடியால், ஸர்வலோக ஶரண்யனாக இருக்கும் உன்னுடைய பாதமூலத்தையே ஒரே ஶரணமாக அடைகிறேன்.

நமது ஸித்தாந்தத்தில் பின்வருமாறு ஒரு க்ரமமுண்டு:— 'ஶாஸ்த்ரார்த்தத்தை ஸரியானபடி தெரிந்துகொண்டு அந்த ஜ்ஞாநத்தினால் கர்மயோகத்தை அநுஷ்டிப்பது முதல் படி; அப்படிப்பட்ட கர்ம யோக அநுஷ்டாநத்தினால் அந்த:கரணத்தை ஸ்வாதீநம் செய்துகொண்டு, பிறகு பரிஶுத்த ஆத்மாவைப் பாவிப்பதான ஜ்ஞாநயோகம் இரண்டாவது படி; அப்படிப்பட்ட ஜ்ஞாநயோகாநுஷ்டாநத்தினாலாவது ஸாக்ஷாத்தாகக் கர்மயோகாநுஷ்டாநத்தினாலாவது ஆத்மாவலோகநம் உண்டானபிறகு, அதனால் ஸரியான அதிகாரம் பெற்றுப் பக்தியோகத்தை அநுஷ்டிப்பது மூன்றாவது படி; பிறகு பகவத் ப்ராப்தி' என்பதுதான் க்ரமம். சிலவிடங்களில், இந்த ஜந்மத்தில் கர்மயோகம் இல்லாவிட்டாலும், பூர்வ ஜந்மத்தில் அநுஷ்டிக்கப்பட்ட கர்ம யோகத்தினால் இந்த ஜந்மத்தில் ஜ்ஞாநயோகம் ஸம்பவிக்கக்கூடும்; இந்த இரண்டுவித யோகங்களும் இந்த ஜந்மத்தில் நேராவிட்டாலும், பூர்வ ஜந்மத்தில் செய்யப்பட்டுள்ள இவைகளின் அநுஷ்டாநங்களினால் இந்த ஜந்மத்தில் பக்தியோகமே ஸம்பவித்து விடலாம். இப்படிப்பட்ட ஸாமக்ரிகளில் ஒன்றும் தம்மிடமில்லையென்று ஸ்ரீ ஆளவந்தார் அருளிச்செய்வது நைச்யாநுஸந்தாநத்தைச் சேருகின்றது என்று நாம் அறியவேண்டும்.

(அஹம்) தர்மநிஷ்டோ நாஸ்மி - நான் தர்மத்தில் ஸ்திதியை உடையவனல்லன். அதாவது - ஶாஸ்த்ரங்களில் சொல்லியிருக்கிறபடி கர்மயோகாநுஷ்டாநம் செய்வதில் திறமையற்றவன் என்று தாத்பர்யம்.

ந சாத்மவேதீ - பரிஶுத்த ஆத்ம ஸ்வரூபத்தையும் அறியேன். அதாவது - ஜ்ஞாநயோகத்திற்கு அபேக்ஷிதமான புஷ்கல ஜ்ஞாநமும் என்னிடமில்லை என்று அர்த்தம்.

த்வச்சரணாரவிந்தே ந பக்திமாந் - உன்னுடைய சரணாரவிந்தத்தில் பக்தியும் நான் உடையேனல்லேன். அதாவது - பக்தியோகம் என்னும் உபாயத்திற்கு வேண்டிய பக்தியும் தம்மிடமில்லை என்று தாத்பர்யம்.

(அஹம்) அகிஞ்சந: அநந்யகதி: - இப்படி வேறு ஸாதநத்தையாவது வேறு கதியையாவது உடைத்தாயிராமலிருக்கும் நான். 'வேறு ஸாதநமொன்றும் இல்லை' என்பதனால், கர்மயோகம் முதலியவைகளுக்கு அபேக்ஷிதங்களாயுள்ள குணம் க்ரியை முதலியவைகள் அதிமாத்ரம் துஷ்கரங்கள் என்று சொன்னதாயிற்று. 'அநந்யகதி:' என்னும் பதத்திற்கு, வேறு ஶரண்யனுமில்லை வேறு ப்ராப்யனுமில்லை என்று அர்த்தம். 'ஶரண்யனும் நீயே, ப்ராப்யனும் நீயே, அப்படிப்பட்ட உன்னை அடைவதற்கு உபாயமும் உன்னுடைய பாதமூலத்தை ஆஶ்ரயிப்பதே' என்று தாத்பர்யம்.

ஹே ஶரண்ய! - 'நீ ஸர்வலோக ஶரண்யனாக இருக்கிறபடியால், எனக்கு வேறு ஶரண்யமான வஸ்து எப்படி ஸம்பவிக்கக்கூடும்?' என்பதை இந்த ஸம்புத்தி ஸூசிப்பிக்கின்றது.

த்வத்பாதமூலம் ஶரணம் ப்ரபத்யே - உன்னுடைய பாதமூலத்தையே ஶரணமாக அடைகிறேன். அதைத் தவிர்த்து மற்றை எதை ஆஶ்ரயித்தாலும் பயமுண்டு; அதனிடத்தில் யாதொரு பயமுமில்லை என்பது அபிப்ராயம்.

இவ்விதமாகப் பகவானுடைய பாதமூலத்தை அடைவதைத் தான் ப்ரபத்தி யென்றும் ஶரணாகதி யென்றும் நமது ஸித்தாந்திகள் வ்யவஹரிக்கிறார்கள். 'ஶரணம்' என்னும் பதத்திற்கு இவ்விடத்தில் உபாயம் என்று அர்த்தமென்பது ப்ரபத்தி ப்ரகரணத்தில் அஹிர்புத்ந்ய ஸம்ஹிதையினால் ஏற்படுகிறது:—

"𑌉𑌪𑌾𑌯𑍇 𑌗𑍃𑌹𑌰𑌕𑍍𑌷𑌿𑌤𑍍𑌰𑍋𑌶𑍍𑌶𑌬𑍍𑌦𑌶𑍍𑌶𑌰𑌣𑌮𑌿𑌤𑍍𑌯𑌯𑌂 ।
𑌵𑌰𑍍𑌤𑌤𑍇 𑌸𑌾𑌂𑌪𑍍𑌰𑌤𑌂 𑌚𑍈𑌷 𑌉𑌪𑌾𑌯𑌾𑌰𑍍𑌥𑍈𑌕𑌵𑌾𑌚𑌕𑌃 ॥"

[உபாயம், க்ருஹம், ரக்ஷிக்கிறவன் என்று 'ஶரணம்' என்னும் ஶப்தத்திற்கு மூன்று அர்த்தங்களுண்டு. இந்த ப்ரகரணத்தில் அதற்கு உபாயம் என்பதே அர்த்தம்]. ப்ரபத்தி ப்ரயோகத்திலும் இம்மாதிரியே அர்த்தம் காணப்படுகின்றது:—

"𑌅𑌹𑌮𑌸𑍍𑌮𑍍𑌯𑌪𑌰𑌾𑌧𑌾𑌨𑌾𑌮𑌾𑌲𑌯𑍋𑌽𑌕𑌿𑌂𑌚𑌨𑍋𑌽𑌗𑌤𑌿𑌃 ।
𑌤𑍍𑌵𑌮𑍇𑌵𑍋𑌪𑌾𑌯𑌭𑍂𑌤𑍋 𑌮𑍇 𑌭𑌵𑍇𑌤𑌿 𑌪𑍍𑌰𑌾𑌰𑍍𑌥𑌨𑌾𑌮𑌤𑌿𑌃 ।
𑌶𑌰𑌣𑌾𑌗𑌤𑌿𑌰𑌿𑌤𑍍𑌯𑍁𑌕𑍍𑌤𑌾"

['நான் அபராதங்களுக்கெல்லாம் இருப்பிடம்; அகிஞ்சநன்; வேறு கதியை உடையவனல்லன்; ஆகையால் நீயே எனக்கு உபாயமாக இருக்கவேண்டும்' என்று ப்ரார்த்திப்பது தான் ஶரணாகதி என்று சொல்லப்படுகின்றது]. பரத முநியினால் ப்ரணீதமாயுள்ள

"𑌅𑌨𑍍𑌯𑌸𑌾𑌧𑍍𑌯𑍇 𑌸𑍍𑌵𑌾𑌭𑍀𑌷𑍍𑌟𑍇 𑌮𑌹𑌾𑌵𑌿𑌶𑍍𑌵𑌾𑌸𑌪𑍂𑌰𑍍𑌵𑌕𑌂 ।
𑌤𑌦𑍇𑌕𑍋𑌪𑌾𑌯𑌤𑌾𑌯𑌾𑌚𑍍𑌞𑌾 𑌪𑍍𑌰𑌪𑌤𑍍𑌤𑌿𑌶𑍍𑌶𑌰𑌣𑌾𑌗𑌤𑌿𑌃 ॥"

[மற்ற எந்த உபாயத்தினாலும் அஸாத்யமாயுள்ள நம்முடைய அபீஷ்ட விஷயத்தில், 'பகவான் நமக்கு அதை நிஶ்சயம் ஸாதித்துக்கொடுப்பன்' என்னும் த்ருடமான ஒரு விஶ்வாஸத்துடன் அந்தப் பகவானையே அதற்கு உபாயமாக வரித்து ப்ரார்த்திப்பது தான் ப்ரபத்தி என்றும் ஶரணாகதி என்றும் சொல்லப்படும்]



𑌨 𑌨𑌿𑌨𑍍𑌦𑌿𑌤𑌂 𑌕𑌰𑍍𑌮 𑌤𑌦𑌸𑍍𑌤𑌿 𑌲𑍋𑌕𑍇
𑌸𑌹𑌸𑍍𑌰𑌶𑍋 𑌯𑌨𑍍𑌨 𑌮𑌯𑌾 𑌵𑍍𑌯𑌧𑌾𑌯𑌿 ।
𑌸𑍋𑌽𑌹𑌂 𑌵𑌿𑌪𑌾𑌕𑌾𑌵𑌸𑌰𑍇 𑌮𑍁𑌕𑍁𑌨𑍍𑌦 !
𑌕𑍍𑌰𑌨𑍍𑌦𑌾𑌮𑌿 𑌸𑌂𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌗𑌤𑌿𑌸𑍍𑌤𑌵𑌾𑌗𑍍𑌰𑍇 ॥ 23.

என்னும் இந்த வாக்யமும் அந்த அர்த்தத்தையே காண்பிக்கின்றது. இந்த ப்ரார்த்தனையைத்தான் ஸ்ரீ ஆளவந்தார் இவ்விடத்தில் அநுஷ்டித்துக் காண்பிக்கிறார்.

"𑌮𑍁𑌮𑍁𑌕𑍍𑌷𑍁𑌰𑍍𑌵𑍈 𑌶𑌰𑌣𑌮𑌹𑌂 𑌪𑍍𑌰𑌪𑌦𑍍𑌯𑍇"

என்னும் ஶ்ருதியும், அதை அநுஸரித்துச் சொல்லப்பட்டுள்ள ஸ்ம்ருதி வாக்யங்களும் இந்த உபாயத்திற்கு முக்யங்களான ப்ரமாணங்கள்.

23. இந்த ஶ்லோகத்தில், தமது ஆர்த்தி தாங்கமாட்டாமல், 'பகவத் க்ருபைக்கு ப்ரதிபந்தகங்களாயுள்ள கணக்கற்ற அபராதங்களைச் செய்திருக்கிறோமே! அவைகளின் நிவர்த்தநம் ஸம்பவித்தாலன்றோ பகவத் ப்ராப்தியை நாம் ப்ரதீக்ஷிக்கக்கூடும்?' என்று கதறுகிறார். ஸர்வ விரோதிகளையும் நிவர்த்திக்கக்கூடிய ஶக்தி, இவர் செய்யும் உபாயத்திற்கு உண்டு என்பது இதனால் ஏற்படுகிறது.

𑌯𑌨𑍍𑌨𑌿𑌨𑍍𑌦𑌿𑌤𑌂 𑌕𑌰𑍍𑌮 𑌮𑌯𑌾 𑌸𑌹𑌸𑍍𑌰𑌶𑍋 𑌨 𑌵𑍍𑌯𑌧𑌾𑌯𑌿, 𑌤𑌤𑍍 𑌲𑍋𑌕𑍇 𑌨𑌾𑌸𑍍𑌤𑌿 - 𑌹𑍇 𑌮𑍁𑌕𑍁𑌨𑍍𑌦 ! 𑌸𑍋𑌽𑌹𑌂 𑌸𑌂𑌪𑍍𑌰𑌤𑌿 𑌵𑌿𑌪𑌾𑌕𑌾𑌵𑌸𑌰𑍇 𑌅𑌗𑌤𑌿𑌸𑍍𑌸𑌨𑍍 𑌤𑌵𑌾𑌗𑍍𑌰𑍇 𑌕𑍍𑌰𑌨𑍍𑌦𑌾𑌮𑌿 ॥ ஹே முகுந்த! இந்த லோகத்தில் எவ்வளவு அதர்மங்கள் உண்டோ, அவ்வளவையும் மிகப் பலதடவைகளில் நான் செய்திருக்கிறேன். 'அப்படிப் பட்ட அதர்மங்களை நானே அநுபவித்துத் தீரவேண்டும்' என்னும் இந்த அவஸ்தை வந்திருக்கும் இப்பொழுது, வேறுகதி இல்லாதவனாய், உன்னுடைய முன்னிலையில் கதறுகிறேன்.

நிந்திதம் கர்ம - பெரியோர்களால் கர்ஹிக்கப்படும் கர்மாக்கள். அதாவது - அதர்மங்கள் என்று அர்த்தம்.

"யத்த்வார்யா: க்ரியமாணம் ப்ரஶம்ஸந்தி ஸ தர்ம:, யத்கர்ஹந்தே ஸோऽதர்ம:"

[எந்தக் கர்மாவைப் பெரியோர்கள் ஶ்லாகிக்கிறார்களோ அது தர்மம், எதை அவர்கள் நிந்திக்கிறார்களோ அது அதர்மம்] என்று ஸ்ரீ ஆபஸ்தம்பர் சொல்லியிருக்கிறபடி, இவ்விடத்தில் 'நிந்திதம்' என்னும் ஶப்தத்திற்கு 'அதர்மம்' என்று அர்த்தம் கொள்ளப்படுகிறது.

லோகே - லோகத்தில். அதாவது - ஸம்ஸாரிகளான ஜநங்களிடத்தில். 'ராகம் முதலியவைகளால் கலுஷிதமாயுள்ள சித்தத்தை யுடைத்தாயும் போகமாகிற மருகாந்தாரத்தில் பாந்தர்களாயுமுள்ள இந்த ஸம்ஸாரி ஜநங்கள்தாம் அத்யந்தம் நிந்திதங்களான கார்யங்களைச் செய்வார்கள். அவர்களுள் அந்யதமனாக இருக்கும் நான் அவைகள் எல்லாவற்றையும் செய்துவிட்டேன்' என்பது தாத்பர்யம்.

ஸம்ப்ரதி விபாகாவஸரே-அந்த அதர்மங்களின் விபாக காலம் வரும் இப்பொழுது. 'அஜ்ஞானத்தினால் ஒரு அபராதத்தைச் செய்துவிட்டால், அதைப் போக்கடிக்கும் பொருட்டு நிஷ்க்ருதிகளைச் செய்வது உண்டு; அந்த நிஷ்க்ருதிகளைச் செய்ய ப்ரவ்ருத்தியாமல் விட்டு அவைகளுக்குரிய காலங்களைக் கடந்து, இப்பொழுது அந்த அகார்யங்கள் துர்நிவாரங்களாக ஆக்ரமிக்க வரும் பொழுதுதான், ஜநங்கள் தாம் செய்த பிசகை உணருகிறார்கள். அதே மாதிரி நானும் இந்த விபாக காலத்தில்தான் கதற ஆரம்பிக்கிறேன்' என்று கருத்து.

தவாக்ரே - உன்னுடைய முன்னிலையில்; 'ப்ரபந்நர்களுடைய அநாதி ப்ரவ்ருத்தமாயுள்ள ஸகல அபராதங்களையும் அநாதரித்து முக்திபூமியைக் கொடுக்கும் உன்னுடைய முன்னிலையில்' என்று தாத்பர்யம்.



"விபீஷணோ வா ஸுக்ரீவ! யதி வா ராவண: ஸ்வயம்"

[விபீஷணனாக இருந்தாலும், ஸாக்ஷாத் ஆர்த்ராபராதியான ராவணனாக இருந்தாலும், ஹே ஸுக்ரீவ! அவன் என்னை ஆஶ்ரயித்துவிட்டால் அவனை நான் கைவிடேன்] என்று ஸ்ரீ சக்ரவர்த்தித் திருமகன் உத்கோஷித்திருக்கிறானன்றோ? அவனுடைய முன்னிலையில் கதறினால், அது வீணாகாது என்பது குறிப்பு.

க்ரோஶாமி - ஆக்ரோஶிக்கிறேன். "கோவிந்த! புண்டரீகாக்ஷ! ரக்ஷ மாம் ஶரணாகதாம்" என்று த்ரௌபதீ முறையிட்டதை, ஸர்வலோக ஶரண்யனான ஸ்ரீ க்ருஷ்ணன் பின்பு ஒரு காலத்தில் நினைத்து,

"கோவிந்தேதி யதாக்ரந்தத் க்ருஷ்ணா மாம் தூரவாஸிநம் |
ருணம் ப்ரவ்ருத்தமிவ மே ஹ்ருதயாந் நாபஸர்பதி ||"

[ஐயோ! என்னுடைய பக்தையான த்ரௌபதி, தனக்கு ஆபத்து வந்துவிட்டதே என்று பயந்து, 'கோவிந்த, கோவிந்த!' என்று என் பெயரைச் சொல்லிக் கதறினாளே! அந்தக் கதறல் மேன்மேல் வட்டி வளர்ந்து பெருகிக்கொண்டிருக்கும் கடன்போல என்னுடைய நெஞ்சத்தைக் கலக்குகின்றதே!] என்று சொல்லி வருந்தினான். நம் எல்லாருக்கும் ஆறுதலைக் கொடுக்கக்கூடிய ஶரண்யனுடைய இந்த வாக்யத்தை, இவ்விடத்தில் ப்ரயோகம் செய்யப்பட்டிருக்கும் 'க்ரோஶாமி' என்னும் ஶப்தம் ஸூசிப்பிக்கிறது.

எஸ். வாஸுதேவன்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:.

# வைராக்யத்தால் உண்டாகும் ஸுகம்.

வைராக்யநியமம் ஸர்வ வேதாந்தார்த்த ப்ரகாஶிதம் |
ஶ்ருதிஸ்ம்ருதீதிஹாஸாநாம் ஸாரம் ஸம்க்ஷேபதோ மதம் ||

"யதஹரேவ விரஜேத் ததஹரேவ ப்ரவ்ரஜேத்" என்னும், "நிவ்ருத்தராகஸ்ய க்ருஹம் தபோவநம்" என்னும் இப்புடைகளில் சொல்லப்படும் வைராக்யத்தால் உண்டாகும் ஸுகத்தைக் கொஞ்சம் நிரூபிக்கிறோம். வைராக்யமாவது - "ஏதம் வை தமாத்மாநம் விதித்வா ப்ராஹ்மணா: புத்ரைஷணாயாஶ்ச வித்தைஷணாயாஶ்ச வ்யுத்தாயாத பிக்ஷாசர்யம் சரந்தி" என்று ப்ருஹதாரண்யகத்தில் கஹோளப்ரஶ்நாதிகளில் சொல்லியிருக்கிறபடி புத்ர வித்த க்ருஹ க்ஷேத்ராதிகளில் ஸ்வீயத்வ புத்தியை விட்டு ஆசையற்றிருக்கை. இப்படி இருப்பது, மந்த புண்யர்களாய், "நாயமாத்மா பலஹீநேந லப்ய:" என்கிறபடி மநோபல ஹீநனுக்கு ஶக்யமன்று. ஒரு சேதநன்,

"க்வசித் கர்மவஶாஜ்ஜந்து: ஸம்ஸாரே பரிவர்த்ததே |
ஶரீரம் ப்ராப்ய தேஷாம் வா ஸ்வகர்மபரிணாமத: ||"

என்கிறபடி ஸம்ஸார பதிதனாய், "பகவத்ஸ்வரூப திரோதாநகரீம் விபரீத ஜ்ஞாநஜநநீம் ஸ்வவிஷயாயாஶ்ச போக்யபுத்தேர்ஜநநீம்" என்றும், "இருள் தருமாஞாலம்" என்றும் சொல்லப்படுகிற ப்ரக்ருதி மண்டலத்தில், ப்ராசீந புண்ய



பாபாநுகுணமாக ஒரு ஶரீரத்தை அடைந்து, "பேதை பாலகன்" என்னும், "ஶைஶவே மோஹமாபந்நோ க்ரீடநாஸக்த மாநஸ:" என்றும் சொல்லுகிறபடி, சிலகாலம் பாலகனாய் அஶுத்த த்ரவ்யங்களிலும் ஜுகுப்ஸையற்று ஹிதாஹிதங்களில் ப்ரவ்ருத்தி நிவ்ருத்தி ரஹிதனாய், பாந போஜநங்களிலும் பராபேக்ஷை உடையவனாய், கமநாதிகளிலும் அஶக்தனாய், வார்த்தை முதலானதும் அறிய அஶக்தனாய், பிறகு கௌமாரத்தில் கர்மாநுகுணமான ஜ்ஞாநத்தை அடைந்து ப்ராஜ்ஞனை போதிலும் யௌவநம் வந்தவாறே, "ஜோஷிதாம் விஷயஜ்ஞாநா யத்ர ஸ்த்ரியோ ரதிர்விஷயேஷு கௌமாரத்வம்" என்னும்படியான ஸ்வபாவமுள்ள வெல்கண் மடந்தையை அடைந்தவன்,

"கோ ஹ்யேஷ வை புமாந் ஸக்த: காந்தா ஸஜ்ஜத் தேஹிய: |
ஸ்நேஹபாஶைர் த்ருடைர் பத்த: ஸ்நேஹாத விமோசிதும் ||"

என்றும்,

"கஸ்தம் த்யஜேத் ரஹஸ்யம் விதாயா: ஸந்தம் ரஹஸ்யம் ருசிரம் ஶுசிஸ்மிதம் | ஸம்ஶ்லிஷ்டகாமேஷு விஷய ஶிரஸ்யாம் நாமாக்ஷராணாம் ஸ்தநார்த்த சித்த: | ம்ருதாஸ்தேநாஸ்ய பரிஷ்காரம் வ்யக்தீஸ்ய க்ஷுத்யா: பஶுஹத்யம் விஷ்டாந் | த்யஜேத கோஶஸூத்ரிவேஹஸ்தாந: கரம்பாணி போஷாஜ் விதத்ய துகாத: ||"

என்றும் சொல்லுகிறபடி பாமரமான பறவையைப் போல ஸம்ஸார நீடத்தை விட ஸக்தனாகமாட்டான். இப்படி ஸம்ஸார பாஶபத்தனாய், அத்யந்தாநுரக்தைகளான ப்ரியதமைகளின் உக்தி விஶேஷங்களிலும் ஶிஶுக்களுடைய கள பாஷணங்களிலும் க்ருஹ க்ஷேத்ரோத்யாநாதிகளிலும் மக்ந ஹ்ருதயனானவன் புத்ர தாரேஷணாதிகளை விட்டவனாகமாட்டான்.

இப்படி புத்ரைஷணையை விடாதவனுக்கு "யா ஹ்யேவ புத்ரைஷணா ஸா வித்தைஷணா" என்கிறபடி வித்தைஷணை தான் விட ஶக்யமாகுமோ?

“கோடிஷ்வபி த்ருஷ்ணாம் விஸ்ருஜேத ப்ராணிணோ ஹ்யர்தலி ப்ஸயாபி । யம் த்ருணாத்யவஸ்யதி: ப்ரேமணோ ஸ்வஸ்தஸ்ய வணிக் ॥”

என்றும்,

“விக்ஷேபம் நிக்ருந்தந்தி விஷேவேதா விதாம்ஸு தோஷம் பரவித்த ஹதாம்பு: । ப்ரேத்யேஹ மாயாபாம் ஜீவிதம் ப்ரிய ஸ்வ ஜநாஶ காலேந ஹரேத காடம்பவீ ॥”

என்றும் சொல்லுகிறபடி, ப்ரியதமங்களான ப்ராணங்களையும் த்ருணவத்கரித்து, தஸ்கரர்களும் யுத்தபடர்களும் கப்பல் வ்யாபாரிகளும் ஸம்பாதிப்பதை ப்ரத்யக்ஷமாகப் பார்த்திருக்கும் அஜிதேந்த்ரியர்களுக்கு அர்த்தாசை விடமுடியுமோ? பரஸ்வாபஹாரம் பண்ணினுல் இந்த லோகத்தில் நிந்தையும் பரலோகத்திற்கு ஹாநியும் வருமென்று தெரிந்தவர்களான பண்டிதர்களும் குடும்பாக்ஷணார்த்தம் சில ஸமயங்களில் பரத்ரவ்யாபஹாரம் செய்யத் துணிகிறார்களன்றோ? அப்படி ஸம்பாதித்து அதி தநாட்யனானாலும், “ப்ராணேப்யோ ஹ்யதிகா தேவ யதே த்ருஷ்ணா கரீயஸீ” என்றும்,

“நிஸ்வோ வஷ்டி ஶதம் ஶதீ தஶஶதம் லக்ஷம் ஸஹஸ்ராதிபோ லக்ஷேஶ: க்ஷிதிபாலதாம் க்ஷிதிபதிஶ்சக்ரேஶதாம் வாஞ்சதி । சக்ரேஶ: புநரிந்த்ரதாம் ஸுரபதிர்ப்ராஹ்மம் பதம் வாஞ்சதி ப்ரஹ்மா ஶைவபதம் ஶிவோ ஹரிபதம் ஹ்யாஶாவதிம் கோ கத: ॥”

என்றும், சொல்லுகிறபடி வித்தாசை மேன் மேல் அபிவ்ருத்தமாகக் கண்டிலோமோ?

இப்படி தநத்ருஷ்ணையை விடாதவன் “யாவத்வ விதேத்ருஷ்ணா லோகேஷணா” என்கிறபடி லோகைஷணையை விட்டவனாக மாட்டான். லோகைஷணையை விடாதவனுக்கு



“இதமத்ய மயா லப்தமிமம் ப்ராப்ஸ்யே மநோரதம் ।
இதமஸ்தீதமபி மே பவிஷ்யதி புநர்தநம் ॥”

“அஸௌ மயா ஹதஶ்ஶத்ருர் ஹநிஷ்யே சாபராநபி ।
ஈஶ்வரோऽஹமஹம் போகீ ஸித்தோऽஹம் பலவாந் ஸுகீ ॥”

என்று இப்புடைகளிலே சொல்லப்பட்டிருக்கும் அஹங்கார மமகாரங்கள் கழியா. அவை கழியா விட்டால், “ததோ யாந்த்யதமாம் கதிம்” என்கிறபடி அதிகமான ஸம்ஸாரத்தில் ப்ரஸக்தனாய்,

“குடும்ப போஷாய வியுக்தசாயுர் ந புத்யஸே யத் ஸ்வஹிதம் ப்ரணஷ்டம் । ஸர்வம் ததா காலக்ருதம் ஹ்ருதம் தே ஸ்வஸ்ய குடும்பபாரை: ॥”

என்கிறபடி குடும்ப போஷண வ்யாபாரங்களால் தம்முடைய ஆயுர் வ்யயத்தையும் அறியாமல் தாபத்ரயத்தால் அடிபட்டு, “ஊர்த்வ மேகாந்தமாநோ விஸ்ஸாரஹிவ கீடக:” என்கிறபடி ஸம்ஸாரத்தில் நின்று திரும்பும் வழி தெரியாமல் துடித்து,

“தாரித்ர்யம் பாதகம் லோகே கஸ்தச்சம்ஸிதுமர்ஹதி ।
பதிதஶ்ஶ்லாக்யதே ராஜ ந்நிர்த்தநஸ்து ந ஶோச்யதே ॥
விஶேஷ ஆயுஷ்மதாம் பதிதஸ்யாப்யதஸ்ய ச ॥”

என்றும்,

“ஸந்தி புத்ரா ஸுபஹவோ தரித்ராணா மநிச்சதாம் ।”

என்றும், ப்ராஹ்ம வித்தமர்களாலும் நிந்திக்கப்பட்ட தாரித்ர்யத்தின் கஷ்டங்களை அநுபவித்தும், தநாட்யனானபோதிலும், “நாஸ்தி புத்ர ஸுஹ்ருதாநாம்” என்றும், “ப்ராயேண ஶ்ரீமதாம் லோகே போக்தும் ஶக்திர் ந வித்யதே” என்றும் இப்புடைகளில் சொல்லும் வ்யாகுலங்களை அநுபவித்தும், “ஶதேந யப்தா: ஶதமாத்ர ஸஞ்சிதம் ந யாதி ஶோகோ ஹி ஸுகாய பரிதி: ஸ்வபத: ஶரணாகதாய யதி:” என்று நிந்திக்கும்படியான

ஜராதி துக்கங்களை அநுபவித்தும், 'இப்படிப்பட்ட ரோகி துக்கங்களோடாவது ஜீவித்திருக்கமாட்டோமா?' என்று எண்ணி யிருக்கும் மந்த புத்திகளை நாம் பஹுவாகக் காண்கிறோமல் லவா?

இப்படி இந்த ஸம்ஸார கஷ்டங்களை நன்றாக அநுபவித்துத் தெரிந்தவர்களான புத்திமான்களில், "கஶ்சிந் மாம் வேத்தி தத்த்வத:" என்கிறபடி ஒருவனாவது பகவானை அறிய ப்ரயத்நம் பண்ணவேண்டாமா? இந்த ப்ரக்ருதி மண்டலத்தில் அகப்பட்ட நாம் ப்ரக்ருதி ஸம்பந்தத்தை எப்படி விடுகிறது என்று கலங்கக்கூடாது. "நிவ்ருத்த ராகஸ்ய க்ருஹம் தபோவநம்" என்று சொல்லப்பட்டிருக்கிறதன்றோ? ஶப்தாதி விஷயங்களில் ஆஶையை விட்டவனுக்கு க்ருஹமே தபோவநம் போல வைராக்யத்தை அபிவ்ருத்தி செய்யும் என்னும் வசநார்த்தத்தை நாம் கணிசிக்க வேண்டும்.

"மந ஏவ மநுஷ்யாணாம் காரணம் பந்தமோக்ஷயோ: |
பந்தாய விஷயாஸங்கி மோக்ஷே நிர்விஷயம் மந: ||"

என்று மஹர்ஷிகள் சொல்லியிருக்கும் மார்க்கத்தில் நாம் மனத்தைச் செலுத்த வேண்டும்.

"மாதா பித்ரு ஸஹஸ்ராணி புத்ர தார ஶதாநி ச |
ஸம்ஸாரேஷ்வநுபூதாநி கஸ்ய தே கஸ்ய வா வயம் ||"

என்கிறபடி அநேக ஜந்ம பரம்பரைகளில் அநுபூதர்களான கணக்கற்ற மாதாபிதாக்கள் முதலியவர்களுக்கு இந்த ஜந்மத்தில் நாம் என்ன பந்து? நமக்கு அவர்கள் என்ன பந்துக்கள்? இம்மாதிரியாக இந்த ஜந்மத்தில் உண்டாகியிருக்கும் தகப்பன் முதலானவர்களுடைய ஸம்பந்தமும் என்ன? என்பதை நாம் நன்றாக விசாரிக்க வேண்டும். கதர்களான மாதா பிதாக்களுடன் ஸ்வப்நத்தில் ஸ்வல்ப காலமுண்டாகும் ஸமாகமத்திற்கும் தத்காலமுண்டாகும் ஹர்ஷ ஶோகங்களுக்கும், இப்பொழுது ஜாக்ர



தஶையிலிருக்கும் க்ஷணபங்குரமான தாய்தகப்பன் முதலானவர்களுடைய ஸமாகமத்திற்கும் அதனாலுண்டாகும் ஹர்ஷ ஶோகங்களுக்கும் என்ன வாசி இருக்கின்றது? ஏகாகியாய் ஜநித்து ஏகாகியாய் மரணம் அடையப்போகிற நமக்கும், நமக்கு முன்னே ஜநித்த தாய் தகப்பன்களுக்கும் பின்னுண்டான புத்ர தாராதிகளுக்கும் இப்பொழுது இருக்கும் ஸம்பந்தமானது, "பதி ஸங்கதமேதத் தாரபந்து ஸுஹ்ருஜ்ஜநை:"

"ஸரித்ப்ரவாஹஸம்வாஸே ஸம்ஸாரே வக்ஷ்யமாணே |
பதி ஸங்கதமேதேஷாம் ஹ்ருதா தாதா ததா ஸதா ||"

என்கிறபடி தேஶாந்தரம் செல்லுமவனுக்கு நடுவழியில் நேரும் ஸகாக்களின் ஸமாகமத்தைக் காட்டிலும் ஈஷத்தாவது வாசியுள்ளதாகுமோ? "ந வா அரே பத்யு: காமாய பதி: ப்ரியோ பவதி ஆத்மநஸ்து காமாய" என்று மைத்ரேயீ ப்ராஹ்மணாதிகளிற் சொல்லுகிறபடி, பர்த்தா கொஞ்சகாலம் ஜீவித்திருந்தால் நாம் ஸுகாதிகளை அநுபவிக்கலாம் என்று அவனிடத்தில் ப்ரீதி பண்ணும் ஸ்த்ரீகளுக்கும், அம்மாதிரியான காரணத்தைக் கொண்டே பார்யையினிடத்தில் ப்ரீதி பண்ணும் புருஷனுக்கும் உண்டாகி யிருக்கும் ஸம்பந்தம் ஶ்யாம ஶகட ஸ்நேஹத்தைக் காட்டிலும் என்ன வாசியுள்ளது? நம்மிடத்தில் ஒருவித ப்ரீதியையும் பண்ணாமல் அசேதநமாக இருக்கும் அர்த்தத்தில் நமக்கு உண்டாகும் ப்ரீதி ஸ்வ ப்ரயோஜநார்த்த மென்பதில் நமக்கு ஸம்ஶய முண்டோ? ஸ்வப்ரயோஜநார்த்திகளான பார்யாதிகளுடைய ஸம்பந்தமும் இப்படிப்பட்டதே என்பதை நாம் நிஶ்சயிக்க வேண்டாமோ? இவர்களில் பரஸ்பரர்களால் தங்களுக்கு ஸுகமுண்டாகாத பொழுது மநஸ்ஸில் அப்ரீதி மேலிட்டு த்வேஷிகளாய் இருப்பதை நாம் ப்ரத்யக்ஷமாகப் பார்க்கிறோமல்லவா? இப்படி ஒருநாளும் விராமமில்லாத இந்த ஸம்ஸாரோத்யோகத்தில் நின்றும் சில காலமாவது நிவ்ருத்தனாக வேண்டும் என்னும் எண்ணத்தை த்ருடமாகக் கைக்கொண்டு, "அப்யாஸேந து கௌந்தேய வைராக்யேண ச க்ருஹ்யதே" என்று ஸர்வஜ்ஞனான பகவான் சொன்

ணபடி ஸம்ஸாரத்தில் நின்னும் மநஸ்ஸின் நிவ்ருத்தியை நாம் அவஶ்யமாக அப்யஸிக்க வேண்டும். காமபோகங்களை நன்றாக அநுபவித்து ஒழிவைப்பெறுவது இந்த ஜந்மத்தில் இல்லை. மஹா ப்ராஜ்ஞரான யயாதிமஹாராஜனும், புத்ரனுடைய யௌவநத்தை வாங்கிக் கொண்டு காம போகாதிகளை அநுபவித்தும், த்ருப்தி அடையாமல், "நஜாது காம: காமாநா முபபோகேந ஶாம்யதி" என்று கடைசியாய் நிர்ணயித்துப் பேசினானன்றோ?

இந்த ஸம்ஸாரத்தில் நின்று ஒழிந்து ஸந்யாஸ வேஷத்தைத் தரித்தாலும்,

"[illegible] ।
[illegible] ॥"

என்கிறபடி வாக்கில் மௌந தண்டத்தையும் மநஸ்ஸில் வைராக்ய தண்டத்தையும் ஶரீரத்தில் ப்ராணாயாம தண்டத்தையும் வஹிப்பதை மறந்து விட்டு கேவலம் மூன்று மூங்கில்களை தரித்த மாத்ரத்தில் நிவ்ருத்தி மார்க்கத்தில் செல்ல ஸமர்த்தனாவனோ?

"[illegible] ।
[illegible] ॥
[illegible] ।
[illegible] ॥"

என்று இப்புடைகளில் சொல்லியிருக்கும் ஸந்யாஸ தர்மங்களை விதிப்படி அநுஷ்டித்தாலன்றோ ஸந்யாஸ தர்மம் நிலைநிற்கும்? அப்படிக்கில்லாமல் ஸந்யாஸ வேஷம் மாத்ரம் தரித்து ஈஷணா த்ரயங்களால் பூர்ணர்களாக இருக்கும் கலியுக ஸந்யாஸிகள்,

"[illegible] ।
[illegible] ॥"

என்று வைராக்யாவதார பூதரான ஸ்ரீமந்நிகமாந்த மஹாதேஶிகன் பண்ணின பரிஹாஸத்திற்கு விஷயராய் விடுவார்களே தவிர நிவ்ருத்தி தர்ம நிஷ்டர்களாக மாட்டார்கள். ஆகையால், இந்த



லோக வ்யாபாரங்களை விட்டு, "[illegible]" என்றும், "[illegible]" என்றும் சொல்லப்படும் ஸ்வபாவத்தை நாம் அப்யாஸ வஶத்தால் அடையவேண்டும். "[illegible]" என்று ஸர்வஜ்ஞன் ப்ரஶம்ஸிக்கும்படியான ஒரு மஹாத்மாவானவன், "பிறருக்கே உழைத்து ஏழையானேன்" என்று நிந்திக்கும்படியான புத்ர தாராதி ரக்ஷண வ்யாபாரங்களில் நின்றும் ஒழிந்து,

"[illegible] ।
[illegible] ॥"

என்கிறபடி எக்காலத்திலும் ஶோக ஹர்ஷமில்லாதவனாய், தன்னுடைய நிந்தையிலும் ஸ்துதியிலும் மநோவிகார மற்றவனாய், ஸர்வத்திலும் ஆஶையை விட்டு நிர்மமனாய், ஶீதோஷ்ணாதி ஸஹந ஶீலனாய்,

"[illegible] ।
[illegible] ॥"

என்கிறபடி ஸர்வாந்தர்யாமியான பகவானிடத்திலேயே விஹார ஶீலனாய், பகவத் த்யாநத்தினால் நிர்மல மநஸ்கனாய், பர பரிப வாதிகளில் உந்மத்தர்கள் போலவும், இதரர்களின் தோஷ தர்ஶநத்தில் பிறவிக் குருடர்கள் போலவும், பரர்களுடைய நிந்தையைக் கேட்பதில் செவியற்றவன் போலவும், ஒரு காலத்திலும் ஒரு விடத்திலும் எவ்விதமான ஸங்கேதமும் இல்லாதவனாய், "[illegible]" என்கிறபடி ஒரு ஜந்துவையும் ஹிம்ஸிக்க எண்ண மில்லாதவனாய், தங்கள் தங்களுக்குரிய தர்மங்களை அநுஷ்டிக்குமவர்களிடத்தில் ஆத்ம துல்யஜ்ஞாந முடையவனாய்,

"[illegible] ।
[illegible] ॥
[illegible] ।"

என்கிறபடி ஒருவனையும் ஒரு மார்க்க ப்ரஶ்நமும் செய்யாமல், ஒரு தேஶத்தையும் செல்ல உத்தேஶியாமல், பின் திரும்பிப் பாராமலே சென்று, சென்றவிடத்திலும்

"[illegible] ।
[illegible] ॥"

என்றும் "ஶஸ்த்ரம் வா ஶாஸ்த்ரம் வா ஸோமம்" என்றும் சொல்லுகிறபடி பிக்ஷா ப்ராப்தமான ஆஹாரத்தை ஸந்துஷ்டனாக புஜித்து, "ஜீவிதம் மரணம் சைவ நாபிநந்தேந்ந த்விஷேத்" என்று ஜீவித்திருப்பதிலும் மரிப்பதிலும் ஸம ஸந்துஷ்டனாய், ஸர்வ ஸங்கங்களையும் விட்டு, ஒரு நாளும் ஒருவனுக்கும் பரதந்த்ரனின்றிக்கே ஸர்வதா ஸஞ்சார ஶீலனாய் வைராக்ய நிதியாய் இருக்கும் அவனன்றோ வைராக்யத்தால் உண்டாகும் ஸுகத்தை நன்றாக அறிவன்? அப்படி ஒருவன், வைராக்ய ஸுகத்தை அநுபவித்து பகவதேக ஸக்தனாய்,

"ஜ்ஞாநீ து பரமைகாந்தீ ததாயத்தாத்ம ஜீவந:।
தத்ஸம்ஶ்லேஷ வியோகைக ஸுகது:கஸ்ததேகதீ:॥"

இத்யாதிகளில் சொல்லுகிறபடி ஆஜ்ஞாநுஜ்ஞாகிகர்மாநுஷ்டாந காலங்களில் உண்டாகும் பகவத் ஸ்மரணரூப தத் ஸம்ஶ்லேஷத்தையும் தத் விஸ்மரணரூப விஶ்லேஷத்தையும் ஸுக துக்கங்களாக எண்ணி, பகவத் த்யாநத்தினாலும் திவ்ய தேஶயாத்ரையினாலும் ஸ்துதி நமஸ்கார நாம ஸங்கீர்த்தநாதிகளினாலும் ஆத்ம தாரணத்தைச் செய்து, "வாயவனை யல்லது வாழ்த்தாது" என்கிறபடி ஸர்வ வ்யாபாரங்களையும் ஶ்ரீக்ருஷ்ணகேஶாதீநமாக்கி, "ஸ்மர்த்தவ்ய: ஸததம் விஷ்ணு: விஸ்மர்த்தவ்யோ ந ஜாதுசித்" என்கிறபடி பகவத் த்யாந வைபவத்தினால் தன்னை மறந்து,

"ஸர்வத்வமநந்தஸ்ய ஸ ஏவாஹமவஸ்தித:।
மத்த: ஸர்வமஹம் ஸர்வம் மயி ஸர்வம் ஸநாதநே॥"

என்று ப்ரஹ்லாதாழ்வான் அநுபவித்தாப் போல ஸர்வாந்தர்யாமியான பகவானை அநுபவித்து வருமவன், இந்த இருள் தருமா ஞாலத்தில் இருந்த போதிலும், விண்ணுளாரிலும் ஶ்ரேஷ்டனாய் "ஸதா பஶ்யந்தி ஸூரய:" என்கிறபடி நித்ய ஸூரிகளினுடைய கொண்டாடும் ஸ்வபாவனாய் "ஏதத் ஸாம காயந்நாஸ்தே" என்கிறபடி இந்த ப்ரக்ருதி மண்டலத்திலேயே ப்ரஹ்மாநந்தத்தை அநுபவிப்பான்.

வைராக்ய ஸாதநோபாய கண்டிகாஸப்தகம் ஶுபம்।
ரங்கநாதார்யவிதுஷா க்ருதம் ஶ்ரீகேஶவாஜ்ஞயா॥

இஞ்சிமேடு ரங்கநாதாசார்யர்.

ஸ்ரீ:.

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:.

# கடிதங்கள்.

## (1.)

## ப்ரஹ்மத்தினுடைய ஜகத் காரணத்வத்தைப் பற்றிய ஒரு விசாரம்.

ஸ்ரீ வேதாந்த தீபிகை பத்ராதிபருக்கு:—

ப்ரஹ்மத்தின் ஜகத் காரணத்வத்தைப் பற்றி ஸ்ரீ. டி. ராஜகோபாலாசார்யர் எழுதியிருப்பதைப் படித்த எனக்கு அது ஸம்பந்தமாக ஒரு விஷயம் விஜ்ஞாபநம் செய்து கொள்ளவேண்டு மென்று தோற்ற மொன்று உண்டாகின்றது. அது என்னவென்றால்:—

"நாராயணாத் விநிஷ்பந்நம் ஜ்ஞாநம் க்ருதயுகே ஸ்திதம்।
கிஞ்சித் ததந்யதா ஜாதம் த்ரேதாயாம் த்வாபரேऽகிலம்॥"

என்கிறபடி, த்வாபரயுகத்தில் வேதங்கள் கிலங்களாகவே, பரமகாருணிகனை பகவான், ப்ரஹ்ம ருத்ராதிகளால் ப்ரார்த்திக்கப்பட்டு வ்யாஸமஹர்ஷியாக அவதரித்து, வேதங்களுடைய அர்த்தத்தை எல்லாரும் அறியும் பொருட்டு ஜைமினி என்னும் மஹர்ஷியைக் கொண்டு வேதங்களின் பூர்வ மீமாம்ஸா ஸூத்ரங்களைச் செய்வித்து, வேதங்களுடைய உத்தரபாக விவரணரூபமான ப்ரஹ்ம ஸூத்ரங்களைத் தாமே செய்தருளினர். பூர்வ மீமாம்ஸையில், புத்ர மித்ர களத்ர ஸ்வர்க்கங்கள் முதலிய ஐஹிக ஆமுஷ்மிக பலங்களுக்கு ஸாதநமான தர்மம் நிரூபிக்கப் படுகின்றது; உத்தர மீமாம்ஸையாகிற ஶாரீரக மீமாம்ஸையில், ப்ரஹ்மமானது நிரூபிக்கப்படுகின்றது. இந்த உத்தர மீமாம்ஸை நான்கு அத்யாயங்கள் அடங்கியுள்ளது. அவைகளில் முதல் இரண்டு அத்யாயங்களினால், சேதந அசேதந விலக்ஷணமாயும் நிகில ஜகதேக காரணமாயுமுள்ள ப்ரஹ்ம ஸ்வரூபமும், இரண்டா

வது இரண்டு அத்யாயங்களினால் உபாஸநா ப்ரகாரமும் அதன் பலமும் நிருபிக்கப்படுகின்றது. இவைகளுள் பூர்வ த்விகமென்று வ்யவஹரிக்கப்படும் முதல் இரண்டு அத்யாயங்களின் முதல் பாகமாகிற முதல் அத்யாயத்தில் ப்ரஹ்மத்துக்கு ஜகத்காரணத்வமும், அதிலும் அயோகவ்யவச்சேதரூபமான முதல் பாதத்தில் ப்ரஹ்மமே ஜகத்காரண மென்பதும் ஸமர்த்திக்கப் படுகின்றன. அந்த முதல் பாதத்திலும், முதல் நான்கு ஸூத்ரங்களாகிற சதுஸ்ஸூத்ரியினால், 'ப்ரஹ்ம விசாரரூபமான வேதாந்த ஶாஸ்த்ரமானது ஆரம்பிக்கத் தகுந்தது அன்று; ஏனென்றால், வேதாந்த வாக்யங்களுக்கு ப்ரஹ்மத்தில் வ்யுத்பத்தி இல்லாமை முதலிய தோஷங்கள் ஸம்பவிக்குமன்றோ?' என்னும் ஓர் ஆஶங்கை நிராகரிக்கப் படுகின்றது. "[illegible]" என்று பூர்வாசார்யர்கள் அருளிச் செய்திருக்கிறார்கள். இந்தச் சதுஸ்ஸூத்ரியில் ஜிஜ்ஞாஸாதிகரணம் என்று சொல்லப்படும் முதல் அதிகரணத்தில், வேதாந்த வாக்யங்களுக்கு ஸித்த வஸ்துவான ப்ரஹ்மத்தில் போதகத்வம் நிராக்ஷேபமாக இருக்கிறபடியால் ப்ரஹ்ம விசாரரூபமான வேதாந்த ஶாஸ்த்ரம் ஆரம்பிக்க வேண்டு மென்று ஸித்தாந்தம் செய்யப்பட்டிருக்கின்றது.

ஆகிலும், இவ்விடத்தில் ஒரு பூர்வபக்ஷம் ஸம்பவிக்கும். அதாவது - லக்ஷணத்தினால் அறியப்பட்ட வஸ்து தான், '[illegible]' "[illegible]" இத்யாதி ஸ்தலங்களில் ஶாஸ்த்ரத்தினால் அறியப்படுகின்றது. "ஜந்மாத்யஸ்ய யத:" என்னும் ஸூத்ரத்தினால் ப்ரஹ்மத்துக்கு ஜகஜ் ஜந்மாதி காரணத்வம் லக்ஷணமாகச்சொல்லப்பட்டிருக்கின்றது. அந்தக் காரணத்வம் விஶேஷணமாகவும் உபலக்ஷணமாகவும் லக்ஷணமாகமாட்டாது. ஏனென்றால், விஶேஷணமென்பது - லோகத்தில் விஶேஷ்யத்தை இதர வஸ்துக்களில் நின்றும் பேதித்துக் காண்பிக்கும் வஸ்துவுக்குப் பெயர். '[illegible]' இத்யாதி ஸ்தலங்களில் விஶேஷணத்தால் விஶேஷ்ய பேதம் காணப்படுகிறபடியால். "ஸதேவ ஸோம்யேதமக்ர ஆஸீத் ஏகமேவாத்விதீயம்" "யதோ வா இமானி பூதானி ஜாயந்தே - யேந ஜாதானி ஜீவந்தி - யத் ப்ரயந்த்யபிஸம்விஶந்தி - தத்விஜிஜ்ஞாஸஸ்வ - தத் ப்ரஹ்மேதி"



என்கிற ஶ்ருதி ப்ரதிபாத்யமான ப்ரஹ்மத்துக்கு ஜகஜ் ஜந்மாதி காரணத்வம் விஶேஷண விதயா லக்ஷண மாகமாட்டாது. உபலக்ஷண மென்பது - '[illegible]' என்னு மிடத்தில், முன்னிருந்த ஸாரஸ ஸம்பந்தமானது, இப்பொழுது தேவதத்த கேதாரத்தைக் காண்பித்துக்கொடுக்கிற, அக்காலத்தில் இராமல் விஶேஷ்யத்தை இதர வஸ்துக்களில் நின்றும் பேதித்துக் காண்பிக்கும் ஸாரஸ ஸம்பந்த ரூபமான வஸ்துவுக்குப் பெயர். உபலக்ஷண ஸ்தலங்களில் பூர்வப்ரதிபந்நாகாரம் ஆவஶ்யக மாகையால், ப்ரஹ்மத்துக்குப் பூர்வ ப்ரதிபந்நாகாரம் இல்லாமையாலே, '[illegible]' என்று பூர்வ ப்ரதிபந்நாகாரமான வ்யாபகம் இல்லாமையால், வ்யாப்யமான உபலக்ஷண பூதஜந்மாதி காரணத்வமும் ப்ரஹ்மத்துக்குக் கூடாது என்பதுதான், பூர்வபக்ஷம். அதற்கு, ஜந்மாதிகாரணத்வம் ப்ரஹ்மத்துக்குக் காலபேதத்தால் இருக்கிறபடியாலும், ஸர்வஜ்ஞத்வம் முதலான பூர்வ ப்ரதிபந்நாகாரம் ப்ரஹ்மத்துக்கு ஸம்பாவித மாகையாலும், விஶேஷணத்தினாலும் உபலக்ஷணத்தினாலும் ஜந்மாதிகாரணத்வம் ப்ரஹ்மத்துக்கு லக்ஷணமாகிறபடியால், இவ்வித லக்ஷணத்தினால் அறியப்பட்ட ப்ரஹ்ம விசாரரூபமான வேதாந்த ஶாஸ்த்ரம் ஆரம்பிக்கத் தகுந்தது என்னும் ஸித்தாந்தம் ஜந்மாத்யதிகரணத்தில் செய்யப்பட்டிருக்கின்றது.

வில்லிவலம்-நரஸிம்மாசார்யர்.

(2.)

## ஒரு ப்ரஶ்நம்.

ஸ்ரீ வேதாந்த தீபிகை பத்ராதிபருக்கு :—

தநுர் மாஸத்தில் உஷ:காலத்தில் செய்யவேண்டியதாகச் சொல்லப்படும் பகவதாராதநத்தைப் பற்றியும், வைகுண்ட ஏகாதஶீ என்று விஶேஷமாகக் கொண்டாடப்படும் ஏகாதஶீயைப் பற்றியுமுள்ள ப்ரபாவத்தை விவரமாக தீபிகையில் ப்ரசுரம் செய்யவேண்டு மென்று ப்ரார்த்திக்கிறேன்.

ங்காசார்யன்

## (3.)

ஸ்ரீ வேதாந்த தீபிகை பத்ராதிபருக்கு :—

ஸ்ரீ. ரங்காசார்யரால் செய்யப்பட்டிருக்கும் ப்ரச்நங்களுக்குப் பின் வருமாறு ஸமாதாநங்களைக் காணலாம்.

(1). ததுர்மாஸ பகவதாராதந ப்ரபாவம். வைதிக ஸார்வபௌமரென்று ஸ்ரீ ஆதிவண் ஶடகோப ஸ்வாமியினால், அவருடைய ஜ்ஞாநாநுஷ்டாநாநுகுணமாகத் திருநாமம் அளிக்கப்பட்டும் இக்காலத்திய ஸ்ரீ வைஷ்ணவ ஸமுதாயத்தினால் பஹுப்ரகாரமாகக் கொண்டாடப்பட்டும் முள்ள ஸ்ரீ தோழப்பரினால் அருளிச்செய்யப்பட்டிருக்கும் ஸ்ம்ருதி ரத்நாகரம் என்னும் க்ரந்தத்தில் பின்வரும் பங்க்திகள் காணப்படுகின்றன.

ஜ்யோதிஶ்ஶாஸ்த்ரே ஸாரஸங்க்ரஹே—

‘ [illegible] ।
[illegible] ।
[illegible] ।
[illegible] ॥
[illegible] ।
[illegible] ॥ ’

[illegible]—

‘ [illegible] ।
[illegible] ॥
[illegible] ।
[illegible] ।
[illegible] ॥ ’

[illegible]—

‘ [illegible] ।
[illegible] ॥
[illegible] ।
[illegible] ॥ ’



[illegible]—

‘ [illegible] ।
[illegible] ॥ ’

வஸிஷ்ட:—

‘ [illegible] ।
[illegible] ॥ ’

இத்யாதியான அநேக ப்ரமாண வசநங்கள் இருக்கிறபடியினால், ததுர்மாஸ ஆராதநம் அவஶ்யம் அநுஷ்டிக்க வேண்டியது என்று ஏற்படுகின்றது. ஸத்யோபாஸநமும் ஆராதநத்திற்குப் பிறகே செய்யப்படவேண்டு மென்று,

“ [illegible] ।
[illegible] ॥ ”,

என்னும் ஸச்சரித்ர ஸுதாநிதியின் வாக்யத்தால் வ்யக்தமாகின்றது.

(2). வைகுண்ட ஏகாதஶீ விஷயம்.

வாராஹே—

“ [illegible] ।
[illegible] ॥ ”

என்று ஸ்ம்ருதி ரத்நாகரத்தில் இருக்கின்றது.

“ [illegible] ।
[illegible] ॥
[illegible] ॥ ”

என்று ஸ்ரீ விஷ்ணு திலகாக்ய பாஞ்சராத்ரத்தில் இந்த ஏகாதஶியின் மஹிமை புகழப்பட்டிருக்கின்றது.

தவிரவும், ஸ்ரீ ப்ரஶ்ந ஸம்ஹிதையில், இது விஷயமாக ப்ரஶ்நமொன்றைச் செய்த லக்ஷ்மிக்கு பகவாந் ஒரு உத்தரம் அருளிச்செய்ததாக எழுதப்பட்டிருக்கின்றது. அந்த உத்தரத்தின் ஸங்க்ரஹத்தை இவ்விடத்தில் எழுதுகிறேன்.

“ முன்னொரு காலத்தில் ப்ரஹ்மாவுக்கு ஜ்ஞாந க்ருதமான விஶேஷித்த கர்வமுண்டாயிற்று. அப்பொழுது, என்னுடைய கர்ணத்தில் உண்டான மதுகைடபர்களால் ப்ரஹ்மா வருத்த மடைந்து என்னை ஸ்தோத்ரம் செய்ய, நான் ப்ரஹ்மாவைக் காப்பாற்றும் நிமித்தம் அவர்களுடன் சண்டை

செய்து அவர்களை ஜயித்தேன். அப்படி ஜயிக்கப்பட்ட அந்த அஸுரர்கள் ஜ்ஞானம் பெற்றவர்களாய் வைகுண்ட ப்ராப்தியைப்ப்ரார்த்திக்க, மார்கழி மாஸத்து ஶுக்லபக்ஷ ஏகாதஶீ ஸூர்யோதய காலத்தில் வடக்குக் கோபுர வாசல் வழியாய் அவர்களை ஸ்ரீ வைகுண்டத்திற்கு அனுப்பினேன். அங்கு அவர்கள் என்னுடைய விக்ரஹத்தைக் கண்டு ஆநந்த மடைந்து, 'நாங்கள் முக்தியடைந்த மேற்படி ஏகாதஶீ காலத்தில் உத்ஸவம் பண்ணி உம்மை ஸேவித்து வடக்குக் கோபுர வாசல் வழியாய் ப்ரவேஶிக்கு மவர்களெல்லாரும் எங்களைப் போல ஶ்ரேயஸ்ஸை அடைய வேண்டும்' என்று என்னை வரன் கேட்டார்கள். நான் 'அப்படியே ஆகட்டும்' என்று வரன் கொடுத்திருக்கிறபடியினால், அந்தக் காலத்திற்கு அவ்வளவு மஹிமை உண்டாகி இருக்கிறது."

இதன் விஸ்தாரத்தை அபேக்ஷிக்கின்றவர்கள் கும்பகோணத்தில் மங்கள விலாஸ அச்சுக்கூடத்தில் அச்சிடப்பட்டுள்ள ஸ்ரீ ஞு ஶ ஸம்ஹிதையை வரவழைத்துப் பார்க்கலாம்.

புத்தங்கோட்டகம் 9—1—14. } புத்தங்கோட்டகம் - ஸ்ரீநிவாஸாசார்யர்.

(4)

ஸ்ரீ வேதாந்ததீபிகை பத்ராதிபருக்கு :—

நான் சென்ற டிஸம்பர் மாஸத்தில் முதலில் ப்ரயாகைக்குப் போயிருந்து இரண்டு நாள் ஸ்ரீ அஹோபில மடத்தில் தங்கி ஸ்ரீ லக்ஷ்மீ நாராயணப்பெருமானை ஸேவித்து தீர்த்தயாத்ரை முடித்துக்கொண்டு வந்தேன். மடத்தில் கார்யஸ்தர் ஸ்ரீ. உ. வே. நரஸிம்மாசாரியர் ரொம்பவும் ஶ்ரத்தையாய் யாத்ரார்த்தமாய் வரப்பட்டவர்களை உபசரணைசெய்து வருகிறார். ஆனால், முன் ஏற்பட்டிருந்தபடி மடத்துக்கு இப்போது பணம் வருவதில்லை யென்றும் ரொம்பவும் குறைவாயிருப்பதாயும் இனிமேல் சரியாய் ஶாஶ்வதமாய் நடக்க வேண்டிய விஷயத்தில் நம்ம ஸ்ரீ வைஷ்ணவ ஸ்வாமிகள் சரியான ஏற்பாடு செய்தால் அதிகமாய் விதரணையாய் இருக்கும் என்றும் மடம் சிலமாயிருப்பதால் பிரித்து கட்டவேணுமென்றும் இந்தக் கைங்கர்யங்கள் எவ்விதமாய் நடக்குமோ வென்றும் ரொம்பவும் கவலைப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

இதற்கு முன் கர்னூல் வக்கீல் ஸ. லோ. ரங்கசாமி அய்யங்கார் ஸ்வாமியும் உ. அ. P. C. திருவேங்கடாசார் ஸ்வாமியும் ப்ரயாகைக்கு எழுந்தருளி யிருந்தபொழுது மடத்தின் கூட்டத்தைப்பற்றி ஏதோ ஏற்பாடுகள் செய்ய தக்க முயர்ச்சி எடுத்துக்கொள்வதாக சொன்னதாய் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.



ப்ரயாகை தூரதேஶமா யிருக்கிறது. அந்த ஸ்தலத்தில் அஹோபில மடம் இருப்பது ரொம்பவும் மேன்மையா யிருக்கிறது.

நடக்கப்போகும் ஸங்கத்தில் அந்தமடத்தின் அபிவிருத்தியைப் பற்றியும் ஒரு ஸப்ஜக்ட் எடுத்துக்கொள்ள வேணுமாய் அடியேனுடைய ப்ரார்த்தனை.

சித்தூர் 2—1—1914 } துத்திப்பட்டு. ரா. ஸ்ரீநிவாஸன்.

(5)

ஸ்ரீ வேதாந்த தீபிகை பத்ராதிபருக்கு :—

அமெரிக்கா தேசவாஸியும் பாஶ்சாத்ய வேதாந்த ஶாஸ்த்ர வேத்தாவுமான ப்ரொபஸர் ஜேம்ஸ் பார்ட் என்பவர் அமெரிக்காவிலிருந்து நம்முடைய தேசத்திலுள்ள வேதாந்த ஶாஸ்த்ரங்களை ஸரிவர தெரிந்துகொள்ளும் பொருட்டு இந்தியாவில் தேஶாடநம் செய்கிறதாயும், காசிக்ஷேத்ரத்தில் வேதாந்த உபந்யாஸம் செய்வதாயும் தெரியவருகிறது. ஸ்ரீ அஹோபில ஶிஷ்ய ஸபையார் நம்முடைய இராஜதானியாகிய சென்னபட்டணத்தில் அவர் நல்வரவை எதிர்பார்த்து அவருக்கு ஆதித்யம் செய்து நம்முடைய இராமானுஜ பாஷ்யத்தின் அபிப்ராயத்தை நம்முடைய பூர்வாசார்யர்கள் அவதரிப்பித்த ரீதியாய் ப்ரொபெஸர் அவகாஹிக்கும்படி தகுந்த ப்ரயத்நம் செய்வார்களென்று நம்புகிறேன்.

∴ ∴ ∴

தென்னாசார்யர் ஸம்ப்ரதாயத்துக்கும் வட ஆசார்ய ஸம்ப்ரதாயத்துக்குமுள்ள, சாஸ்திரானுஷ்டாநமான பேதங்கள் எவை யென்றும் அவைகள் ஏற்பட்டதற்கு காரணங்களும், அவைகளை ஸமந்வயிப்பித்து, இரு தொகையார்களுக்கும் ஐகமத்யம் ஜநிப்பிக்கு மார்க்கம் எதுவென்றும் பத்ரிகையில் ஸூசிப்பிக்கப் படவேணுமென்று அநேகர் கோருகிறார்கள்.

∴ ∴ ∴

ப்ரபத்தி ஶாஸ்த்ரத்தை ஸரிவர அறிந்து அநுஷ்டாநத்துக்குக் கொண்டுவந்த ஸ்ரீ வைஷ்ணவர்கள் எப்படி ஸஞ்சரிப்பார்கள்? அவர்களின் நடத்தையினால் இதரர்கள் அவர்களை எவ்விதமாய் அறிந்துகொள்வது என்றும் வினவப்படுகிறது.

17—1—14. மசூலிபட்டணம், } டி. எஸ். ஸ்ரீநிவாஸராகவாசார்யன்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

# ஸ்ரீ ஶிஷ்ய ஸபையின் நான்காவது மஹாஸங்கம்.

நாளது 1914-ம் ௵ ஏப்ரல்மீ (புது வெள்ளிக்கிழமை லீவுக்குச் சரியான) 10௳ முதல் 14௳ வரையில், ஷை ஶிஷ்ய ஸபையின் நான்காவது மஹாஸங்கம் ஸ்ரீ அஹோபிலத்தில் நடத்தப்படும்.

இதற்கு ப்ரொதட்டூர் ருத்ரவரம் முதலிய விடங்களில் ஸ்வாகத ஸபைகள் சேர்க்கப்பட்டு தக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கிறது.

1914௵ ஏப்ரல்மீ 10, 13ம்௳ இந்த இரண்டு தினங்களில் ப்ரொதட்டூரில் ஸபை நடத்தப்படும். 11, 12ம்௳ இந்த தினங்களில் கீழ் அஹோபிலம் மேல் அஹோபிலம் இந்த இடங்களில் ஸபை நடத்தப்படும். இந்த ஸபைகளுக்கு பக்தர்கள் எல்லோரும் எழுந்தருளி இந்தக் கைங்கர்யத்தை பூர்த்தி செய்விக்கக் கோருகிறோம்.

இதற்கு சுமார் 2000 ரூபாய் வரையில் செலவாக வேண்டியதால், ஆஸ்திகர்கள் ஒவ்வொருவரும் தங்கள் ஶக்த்யநுஸாரம் த்ரவ்ய ஸஹாயம் செய்யவேணுமாக ப்ரார்த்தனை.

1914௵ ஏப்ரல் 3௳க்குள் ஷை ஸபைக்கு வர உத்தேசித்தவர்கள் சித்தூரிலிருக்கும் ஸி. ராஜகோபாலா சார்யர் பெயருக்கு ரூ. 3 (அல்லது 2 ரூபா முன்பணம்) ஸ்டேஷனிலிருந்து அஹோபிலம் போய்வர வண்டி செலவு வகைராக்களுக்கு அனுப்பவேண்டியது. பம்பாய் மார்க்கத்தில் எர்ரகுண்ட்ல (Erraguntla M. S. M. Ry. Bombay line) ஸ்டேஷனில் இறங்கி ப்ரொதட்டூர் மார்க்கம் போகவேண்டியது. அப்படி அனுப்புமவர்களுக்கு வண்டிகளும் வழிகளில் ஸௌகர்யங்களும் ஏற்பாடு செய்யப்படும். 1914௵ ஏப்ரல்மீ 9௳ சென்னைப்பட்டணம் விட்டு புறப்படவேணும். முன்னதாகத் தெரியப்படுத்தினால் மெயிலில் வண்டி ரிஸர்வ் செய்யப்படும்.

டி. கோதண்டராமய்யங்கார், தஞ்சாவூர்.

ஸி. ராஜகோபாலாசார், சித்தூர்,

ஸபை காரியதரிசிகள்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
29 MAY 1914
MADRAS.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

# வேதாந்த தீபிகை

பத்ராதிபர்:—திவான் பகதூர் டி. டி. ரங்காசார்யர், பி.ஏ., பி. எல்.

| | | |
|---|---|---|
| ஸம்புடம் 4. | ப்ரமாதீச ௵ பங்குனி மீ<br>ஆநந்த ௵ சித்திரை மீ | ஸஞ்சிகை 2-3. |

## பத்ராதிபரின் குறிப்புகள்.

த்ரிபுவநகமநம் தமாலவர்ணம் ரவிகரகௌரவராம்பரம் ததாநே। வபுரலககுலாவ்ருதாநநாப்ஜம் விஜயஸகே ரதிரஸ்து மேऽநவத்யா ॥ [ஸ்ரீ பாகவதம் 1-9-33.]

**ஸ்ரீ வேதாந்த தீபிகை.** ஸ்ரீ வேதாந்ததீபிகை பத்ரிகையை ஆரம்பம் முதல் மூன்றுவருஷ பர்யந்தம் பத்ராதிபராக நடத்திவந்த ஸ்ரீமான் உ. வே. எஸ். வாஸுதேவாசார்யர் சென்ற மாசி மாஸத்திய ஸஞ்சிகையுடன் பத்ராதிபரெனும் தனது ஸம்பந்தத்தை விலக்கிக்கொண்டார். இந்த பத்ரிகையை இது வரையிலும் ஆதரித்து வந்த அபிமானிகளும் நமது ஸபையாரும் இதற்காக மிகவும் ஶோகிப்பார்களென்பதில் ஸந்தேஹமில்லை. அந்த ஸ்வாமி மிகுந்த ஜ்ஞாநாதிகராய், தனது ஜ்ஞாநத்தை பிறர்க்கு உபகாரமாக்குவதில் விசித்ர சக்தியுடன் கூடியவராய், பண்டிதர்களாயும் ஸாமாந்யர்களாயுமுள்ள ஸர்வ ஜநங்களுக்கும் திருப்திகரமாகவும், இந்த பத்ரிகையின் கீர்த்தி எங்கும் பரவும்படியாகவும், இதை நடத்திவந்தார். அவருடைய ஸ்தாநத்தை அவரைப்போல் வஹிக்க ஸபையாருள் மற்றொருவரைக் காணோம். ஸபையின் அக்ராஸநாதிபதியான உ. வே. ராஜகோபாலாசார்யர் மாத்ரம் இந்தப் பத்ரிகையை நடத்திவர ஸமர்த்தர். ஆனால் சில காரணங்களையிட்டு அந்த

ஸ்வாமி அதற்குத் தத்காலம் இணங்கவில்லை. ஆகவே கார்யதர்சியான உ. வே. ஸ்ரீ. ராஜகோபாலாசார்யர் இந்தப் பத்ரிகையைப்பற்றி யோசித்து, இதற்கு இருத்தலா இறத்தலா விதி என வினவிக்கொண்டிருக்கையில், அடியேனைக் கண்டு பத்ரிகையை நடத்தும்படி கேட்கவே, அடியேனுடைய பிதஜ்ஞதையையும், வயோக்ரமத்தாலும் ஸ்வாஸ்த்யதை விலகிய சரீரப்ராயுக்தமாயும் உண்டாயிருக்கிற அசக்தியையும் அந்த ஸ்வாமியுடன் விஜ்ஞாபித்தேன். அத்யந்தாபாவத்தைப் பத்ரிகை யடைவதைக் காட்டிலும், இதன் ஆயுளைமாத்ரம் வ்ருத்தி செய்தால் ஜ்ஞாதாக்கள் காலக்ரமத்தில் இதைப் போஷிக்க அங்கீகரிக்கலாம் எனும் விச்வாஸத்தை முன்னிட்டு யேநகேநப்ரகாரேண பத்ரிகையை நடத்திவரும்படி அந்த ஸ்வாமி அடியேனை ஆஜ்ஞாபிக்கவே, இந்தப் பத்ரிகை பெயரால் மாத்திரமின்றி வாஸ்தவமாகவே வேதாந்தார்த்தங்களைப் பிரகாசிப்பித்துக்கொண்டு வரும்படி வித்சிரோமணிகள் ஸஹாயம் செய்வார்கள் எனும் விச்வாஸங்கொண்டு இதை நடாத்தி வர ஒப்புக்கொண்டேன். இப்படிப்பட்ட ஸஹாயம் உ. வே. வாஸுதேவாசார்யரும் செய்யப்போகிறாரென்னும் நம்பிக்கையை அடியேன் விடவில்லை. சைசவகாலத்தில் செய்யும் போஷணம் தான் கஷ்டம். அதை அபார சக்தியுடனும், ப்ரீதியுடனும் இந்தப் பத்ரிகா விஷயத்தில் நடத்திவந்த உ. வே. வாஸுதேவாசார்யர் ஸ்வாமியினிடம் ஸபையார்க்காகவும், மற்றை அபிமானிகளுக்காகவும் அடியேன் மிக்க க்ருதஜ்ஞதையைப் பாராட்டுகின்றேன்.

* * * *

**சிஷ்ய ஸபையின் மஹா ஸங்கம்.** இந்த ஸபையின் மஹாஸங்கம் இவ்வருஷம் பங்குனி மாஸம் 28உ வெள்ளிக்கிழமை தினம் ப்ரொதட்டூரிலும், 29உ சனிக்கிழமை தினம் ஸ்ரீமதஹோபிலத்திலும் மிகவும் விமர்சையாய் நடந்தது. இதைப்பற்றி விவரமாகப் பின்னால் வரும். இது, ஸங்கம் கூடப்போகின்ற ஸ்தல ப்ரயுக்தமாக துஸ்ஸாத்ய மென்று மிகவும் நினைக்கக்கூடியதாயிருந்தபோதிலும், ஸபா கார்யதர்சி உ. வே. ஸ்ரீ. ராஜகோபாலாசார்யருடையவும், அவருடன் கஷ்டப்பட்ட உ. வே. மதுராந்தகம் திருவேங்கடாசார்யர் முதலானவர்களுடையவும், மஹா ப்ரயத்நத்தாலும் கடப்பை கர்னூல் ஜில்லாக்களில்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
29 MAY 1914
MADRAS



அபிமானிகளாயிருக்கிற அநேக கனவான்களுடைய ஸஹாயத்தாலும் நிறைவேறியது. இதனால் ப்ரயத்நபரர்களாக மநுஷ்யாள் இருக்கும் பக்ஷத்தில் அஸாத்யம் எனும் சொல்லைப் பாஷைகளினின்றும் எடுத்து விடலாம் என்று தெரியவருகிறது. நிஜஸூத்யர்களுடைய பாஷிதங்களை ஸத்யமாகச்செய்ய பரண்யன் தீக்ஷித்துக்கொண்டிருக்கையில், தாத்ருசர்கள் துஸ்ஸாத்யமென எதையும் கைவிட வேண்டியதில்லை.

* * * *

**லாஹோரில் ஹிந்து ஸபை.** சென்ற ஏப்ரல் மாஸம் 25, 26-ம்தேதி சனிக்கிழமை ஞாயிற்றுக் கிழமைகளில் லாஹோர் எனும் பஞ்சாப் ராஜதானியில் ஹிந்து ஸபையின் ஆறாவது வர்ஷோத்ஸவம் நடந்தது. அதில், அவ்விடம் வ்யவஹார வித்யாசாலைக்கு அத்யக்ஷரானவர் ஹிந்துக்களுக்குள் ஒற்றுமைக்கும், பிரிவுக்கும் உண்டான காரணங்களைப்பற்றி உபந்யஸித்தார். மத பேதங்கள், பாஷாபேதங்கள், வழக்கத்தில் பேதங்கள், ஜாதிபேதங்கள், உண்டி, உடை, ஆசாரம் முதலியவற்றுள் பேதங்கள், யாவராலும் ப்ரமாணமாய் ஒப்புக்கொள்ளப்பட்ட ஓரே மதக்ரந்தமில்லாமை, தத்காலம் சிறுவர்கள் அப்யஸிக்கும் வித்யாவிசேஷம், உலகத்திலுள்ள இதர மதங்களுக்கும் கொள்கைகளுக்கும் நமது மதத்திற்கும் ஏற்பட்ட வித்யாஸங்கள் முதலானவைகள், ஹிந்துக்களுக்குள் காணப்படுகிற ஐக்ய விரோதங்களுக்குக் காரணங்களென்றும், ஐக்ய காரணங்கள் ஓரே தேசவாஸமும் அந்தத் தேசத்தின் ப்ராசீந சரித்ரத்தின் தத்கால ஸ்மரணையும் தானென்றும், அவர் உபந்யஸித்ததாக வெளியாகிறது. ஐக்ய காரணங்கள் சிலவானபோதிலும் ஹிந்துக்கள் ஒற்றுமைப்பட அவை போதுமென்றும், ஹிந்து ஜநங்களும் அவர்களுடைய மதமும் உலகத்துக்கு நாகரிகத்தையும் தர்மாபிவ்ருத்தியையும் தந்தனவென்றும், இவை பரஸ்பர விரோதத்தையிட்டு நாசத்தையடைவது நன்றன்றென்றும், தர்மாநுஷ்டாநம் ஒரு தேசத்தினர் உயர்வதற்கு மாத்ரம் காரணமென்பது போதாதென்றும், அதுவே அவர் ஒரு தேசத்தினராக இருப்பதற்கும் முக்ய ஹேதுவாயிருக்கின்றதென்றும் அவர் அபிப்ராயப்படுகிறார். இந்த விஷயங்களை நம்மவர் நன்கு மதித்தல் வேண்டும். மத பேதங்கள் உண்டாக்க நம் நாட்டினருடைய ஸாமர்த்யம் யாவர்க்கும் தெரிந்ததே.

மதி பேதங்களும், அதைவிட்டுப் பிறக்கும் மதபேதங்களும் எல்லாத் தேச ஜனங்களுக்குள்ளும் ஸஹஜம். இந்தப் பேதங்கள் மூலமாய் ஜனங்கள் ஒருவரை யொருவர் விரோதிக்கவும் எங்கும் கண்டோம். ஆனால் தத்காலத்தில் ஐரோப்பா கண்டத்தில் ப்ரபஞ்ச விஷயமாக விவேசனம் செய்யத் திறமுள்ள வித்வான்கள், ப்ரத்யக்ஷத்தால் அறியக்கூடாத அம்சங்களில் அபிப்ராய பேதத்தை நிவர்த்திக்கக்கூடாமையால், அந்தப் பேதங்கள் ஜனங்களுக்குள் லௌகிக ப்ரவ்ருத்திகளி லிருக்கவேண்டிய ஒற்றுமைக்கு ப்ரதிபந்தகமாகக்கூடாதென்றும், எந்த விஷயத்தில் அபிப்ராய பேதமிருந்தாலும் ஜனங்கள் ஒருவர்க்கொருவர் ஸ்நேஹம் செய்வதில் குறையிருக்க வேண்டியதில்லை யென்றும், நடத்தையால் காட்டியிருக்கிறார்கள். நமது ப்ரமாண க்ரந்தங்களோ, பரமாத்மாவை ஸர்வத்ர தர்சிக்கிறவன் முக்யாதிகாரியென்றும், தன்னைப்போல் யாவரையும் பார்க்கவேண்டுமென்றும், ஸர்வ ப்ராணிகளுக்கும் ஹிதத்தையே எப்போதும் செய்ய வேண்டுமென்றும், அப்படிச் செய்யாமல் விரோதத்தை யாரிடமேனும் பாராட்டுகிறவன் மூடனென்றும், ஶோசிக்கப்படவேண்டியவனென்றும்,

யஸ்து ஸர்வாணி பூதாந்யாத்மந்யேவாநுபஶ்யதி ।
ஸர்வபூதேஷு சாத்மாநம் ததோ ந விஜுகுப்ஸதே ।
ஆத்மௌபம்யேந ஸர்வத்ர ஸமம் பஶ்யதி யோ(அ)ர்ஜுந ॥
அத்வேஷ்டா ஸர்வபூதாநாம் மைத்ர: கருண ஏவ ச ॥
ஸர்வபூதஹிதே ரதா: ॥
பஹவோ ப்ராணிபூதாநி த்வேஷம் குர்வந்தி சேதஸா: ।
ஶோச்யாஸ்தே மோஹிதா மோஹாத்வ்யாமோஹிதா த்வேஷிண: ॥

இத்யாதி ஸஹஸ்ர வசனங்களால் முறையிடுகின்றன. இந்த தர்மத்தை அவ்வவர் தர்சனத்தில் அதிக்ரமித்த அபிநிவேசம் வைத்தவர்கள் அபலாபம் செய்கிறார்கள். ஆனபடியால் ஸ்வதேசத்தினுடையவும், ஸநாதன தர்மத்தினுடையவும் க்ஷேமத்தை உத்தேசிக்கிறவர்க ளெல்லோரும், உபநிஷத், கீதை முதலானவற்றை ப்ரமாணங்களாய்க் கொண்டு, இவற்றின் வாக்யங்களுக்கு விருத்தமாயிருக்கும் யாவத் புராணாதி வாக்யங்களையும் அநாதரம் செய்து, மத பேதங்களால் நம்மவர்க்குள் பரஸ்பரம் ஸ்நேஹம் குன்றாத மார்க்கத்தைத் தேடவேண்டும். எல்லாரும் ஸமமாய்

OFFICE OF THE REGISTRAR 29 MAY 1914 MADRAS.



ஒப்புக்கொள்ளக்கூடிய ப்ரமாண க்ரந்தங்க ளில்லை யென்பது நமக்கு விசதமாகவில்லை. ஹிந்து, அதாவது, ஆர்யமதத்தை நம்புகிறவனென்று பெயர் தரித்தவன் யாவனும் வேதத்தை ஒப்புக்கொள்ளவேண்டும். வேதமென்றால் வேதாந்தமும் அதிலுள்ளடங்கியது. லோகாந்தர ஸம்பந்தமாகத் தத்காலம் யாரும் வேதத்தின் கர்மகாண்டத்தின்படி அநுஷ்டித்தலில்லை. அநுஷ்டானம் உள்ள இடங்களிலும், அதற்கு விஹிதமான ப்ரயோஜனங்களை அபேக்ஷிக்காமல், கர்மகாண்டமடியாக ஏற்பட்ட க்ரியா விசேஷங்களைப் பகவத் ப்ரீணனமாகவே செய்கிறார்கள். இப்படிச் செய்கிறவர்களும் வேதாந்த மதத்தை நம்புகிறவர்களே. உபநிஷத்தின் அர்த்தத்தை கீதா வாக்யங்களாலும் வ்யாஸஸூத்ரத்தாலும் நிர்ணயித்து அறியவேண்டியிருக்கிறது. ஆகவே ஆர்யமதமென்றாலும், ஹிந்துமத மென்றாலும், அதன்பொருட்டு எல்லாராலும் ஒப்புக்கொள்ளப்பட்ட ப்ரமாணங்கள் என்னவென்றால்: வேதம், (இதில் உபநிஷத்தும் அடங்கியது) கீதை, ப்ரஹ்மஸூத்ரம் இவை தான். இந்த ப்ரமாணங்களை, சென்ற இரண்டாயிரம் வருஷங்களுக்கு மேற்பட்டு ஸர்வ தர்சநாசார்யர்களும் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். இவற்றிற்குத் தாத்பர்ய நிர்ணயம் செய்யுங்கால் புத்தி பேதம் அநிவார்யம். புத்தி பேதங்களை மத பேதங்களாகக் க்ரஹிக்கவொண்ணாது. ப்ரமாணமாக ஒப்புக்கொண்ட க்ரந்தங்களில் பேத முண்டானால் தான் மத பேதம் ஸித்திக்கும். ஜாதி, பாஷை, வழக்கம், ஆசாரம் இத்யாதி பேதங்கள் எவ்விடமிரா? இதனால் ஒற்றுமை குறைவது நேர்மையா? நமக்குப் பொதுவான அமித்ரர், இவற்றில் ஒவ்வொன்றையும் சுட்டிக்காட்டி, அவற்றால் ஸம்பவிக்கும் ஸங்கடங்களை விஸ்தரித்துத் தாங்கள் கொண்ட கருத்தை ஸாதிக்க யத்னிப்பதால் மாத்ரம், இந்த அம்சங்களை நாம் குற்றங்களாகக் கொள்ளல் கூடுமோ? படிப்பென்றால் இக்காலத்தில் இங்க்லிஷ் வித்யாசாலையில் வழங்கி வரும் படிப்பு தான். இதில் நம் பூர்வ சரித்ரத்துக்காவது, மதத்திற்காவது, ஆசாரங்களுக்காவது ஸ்மரணைக்குக்கூட இடமில்லை. யுக்தாயுக்த விஷய ஜ்ஞானம் உண்டாகும் பர்வத்தில் நம் சிறுவர்களை நாம் இத்தகைய வித்யாசாலைகளுக் கனுப்பிவிட்டு, அதனால் உண்டாகும் கேடுகளைப் பற்றிச் சோகித்தலில் பயனென்ன? தோஷ குணங்கள் ஸம்ஸர்க்கத்தால் ஜநிக்கின்றனவெனும் அர்த்

த்தை மறக்கவுங் கூடுமோ. ஹிந்து ஜநங்களுக்குள் ஒற்றுமையை அபேக்ஷிப்பவர், பஞ்சாப் தேசத்தில் போல் நமது நாட்டிலும் ஸபை யொன்றை உண்டாக்கி, அந்த ஸபையின் மூலமாய் ஐக்ய காரணங்களை ப்ரபலமாய் நம் ஜநங்களுக்குக் காட்டி, ஐக்யத்தால் நமக்குண்டாகும் நன்மைகளை விஸ்தரித்துப் போதித்து, ஐக்ய விரோதங்கள் என்று எண்ணப்பட்ட அம்சங்களை ஜநங்கள் அறியும்படி ஆராய்ந்து, அவை விரோத ஹேதுக்களாகாதவென்னலாம் யத்நபரர்களாக வேண்டுமென்பது நமது ப்ரார்த்தனை.

* * * *

**திருமலை தேவஸ்தாநம்.** 1911ஹு ஜூலைமாஸம் முதல் தேதி திருமலை தேவஸ்தாநத்தின் ரொக்க இருப்பின் தொகை ரூபாய் 8,05,628-14-5 என்றும், அது 1912ஹு ஜூன்மீ 30உ ரூபாய் 9,12,195-1-9 என்றும், ஏப்ரல்மீ 27உ திங்கட்கிழமை 'ஹிந்து' பேபரில் ப்ரசுரப்படுத்திய ஸங்க்ரஹ வரவு செலவு கணக்கால் தெரியவருகிறது. அவ்வருஷத்தின் வரும்படி மொத்தம் ரூ. 7,37,930-14-6; செலவு மொத்தம் ரூபாய் 6,30,457-6-11. செலவு விவரங்களில் அநேக அம்சங்களின் அர்த்தமாவது ஔசித்யமாவது நமக்கு விசதமாகவில்லை. இவை இன்னும் விசதமாகவும், படிப்போர்க்கு த்ருப்தியுண்டாகும் விதமாகவும் எழுதப்பட்டால் நலம். இந்த விதமாயாவது எல்லாத் தேவஸ்தாநங்கள் ஸம்பந்தமாகவும் வரவு செலவு கணக்குகள் வெளிப்படுத்தக்கூடாதா? இப்படிச் செய்வதால் தர்ம பரிபாலநம் செய்பவரெனப் பெயர் தரித்தவர்க்கு யஶஸ் குன்றிவிடுமோ? தேவஸ்தாநங்கள் பொது ஸ்தலங்களல்லவா? அவற்றின் அதிகாரிகளாவது அவர் முன்னோராவது அவற்றைக்கட்டினாரென்று சொல்லக்கூடுமோ? அவர்கள் ஸொந்த த்ரவ்யம் தேவஸ்தாநங்களின் நியதவரும்படியில் சேரவில்லையே. தம் நடத்தை ஸரியெனப் பிறர் எண்ணவேண்டுமென ப்ரியம் இவர்க்கில்லையாயினும், பிறர் இதை அபேக்ஷிப்பார் என்றும், அந்த அபேக்ஷையை ஆதரிப்பதால், நம்வராணுக்கும் இவர்க்கும் உள்ள அந்தரங்கமானது குறைவுபடாதென்றும், ஏன் இவர்க்குத் தோன்றுதல் கூடாது? தேவஸ்தாநங்கள் கணக்குகள் வருஷத்துக்கொருதரம் சோதிக்கப்பட வேண்டியதென்றும், அவற்றின் ஸங்க்ரஹம் வருஷத்துக்கொருதரம் அபிமாநிகளுக்கு ப்ரசுரமூலமாகத் தெரியப்படுத்துவது ஆவச்யகமென்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
29 MAY 1914
MADRAS.



றும் ராஜாங்கத்தில் யோசனை பிறந்திருப்பதாகக் கேள்விப் படுகிறோம். மார்ச் மாஸம் 16-ம் தேதி டெல்லியில், இந்தியா கவர்மெண்டு மெம்பராகிய ஸர். ஆர். க்ராடக் என்பவர் அக்ராஸநத்தில் வீற்றிருக்க, ஒரு ஸங்கம் கூடியது. அந்த ஸங்கத்தின் கருத்து தேவஸ்தாந ஸம்பந்தமான சட்டங்களின் சீர்திருத்தல் தான். இப்படிச் சீர்திருத்தவேண்டிய முக்யமான சில விஷயங்களை அக்ராஸநத்திலிருந்து மெம்பர் வெளியிட்டார். தர்மங்களை நடத்திவரும் ட்ரஸ்டிகளும் கமிட்டியாரும் தக்க மநுஷ்யராயிருக்க வேண்டியதும், அவர் தகுந்தவரெனக் கண்டறிவதற்கும் தகாதவரை நீக்குவதற்கும் தத்காலம் ஏற்பட்டிருக்கிற உபாயங்களை ஸங்க்ரஹப்படுத்தவேண்டியதும், இதன் நிமித்தமாக அவர்கள் கட்டாயமாகக் கணக்குகளை வெளியிடவேண்டியதும், அந்தக் கணக்குகள் ஸமர்த்தர்களால் சோதிக்கப்பட வேண்டியதும், இப்போது தேவஸ்தாந பரிபாலநம் கெட்டிருக்கும்போதும், ட்ரஸ்டிகள் அநர்ஹர்களாயிருக்கும்போதும், வ்யவஹார மூலமாய்ப் பரிஹாரம் அடையவேண்டிய அபிமாநிகளாவார், தாங்கள் எவ்விதமான ஸாக்ஷ்யங்களைக் கொண்டு தங்கள் வ்யவஹாரத்தை ஸாதிக்க வேண்டுமோ, அந்த ஸாக்ஷ்யங்களை ஸம்பாதிக்கிற நிமித்தம் வ்யாஜ்யத்துக்குப் போகவேண்டிய நிலைமையிலிருப்பதால், இனி வருஷந்தோறும் ப்ரசுரப்படுத்தவேண்டிய கணக்குகளின் மூலமாய், இவர்கள் அக்ரமங்களைக் கண்டறிவதற்கும் அவற்றை நிவர்த்திக்க வ்யவஹாரங்களை மேற்கொள்வதற்கும், அபிமாநிகளுக்கு ஸௌகர்யம் உண்டாக்க வேண்டியதும், மேற்கூறிய முக்ய விஷயங்களாகத் தெரிவிக்கப்பட்டன. ஸாதாரண ஸேவார்த்திகளில் பெரும்பாலோர் தேவஸ்தாநங்களில் நடக்கும் அக்ரமங்களை ஸஹித்துக்கொள்ளுகிறார்கள். சிலர் அவ்வித துர்நடத்தைகள் ஸ்வப்ரயோஜநமாயிருப்பதையிட்டு துஷ்டனான ட்ரஸ்டிக்கு ஸஹகாரிகளாகின்றார்கள். பொது ஸொத்துக்கள் இவ்விதமாகத் துர்விநியோகப் படக்கூடிய ஸந்தர்ப்பத்தை முற்றிலும் ஸஹிக்காதவர், தத்கால முறைப்படிக் கல்வியில் தேர்ந்தவராயும், தர்மாதர்ம விவேசநையில் ஸமர்த்தராயும், தேசத்தின் பொது நன்மையை விரும்பி அந்த நன்மைக்குத் துஷ்டரான ட்ரஸ்டிகளும் அவர்கள் ஸஹகாரிகளும் அத்யந்த விரோதிகள் என்னும் நம்பிக்கையுள்ளவராயுமான ஆஸ்திகரே.

ஸ்ரீ:.

# ஸ்ரீமதஹோபில நரஸிம்ஹன் விஷயம்.

பக்தாக்ரேஸரனை ப்ரஹ்லாதன் விஷயத்தில் அவனுடைய பிதாவான ஹிரண்யகசிபு த்ரோஹம் நினைத்து அபராதம் செய்ய ப்ரவர்த்தித்தபொழுது, தன் பக்தனுடைய பயத்தை நிவர்த்திக்கும் பொருட்டு ஸ்தம்பத்தில் அவதாரம் செய்த ஸர்வேச்வரன் ஸ்ரீஅஹோபிலத்தில் திருக்கோயில் கொண்டெழுந்தருளியிருக்கின்றான். ஹிரண்யகசிபு எவ்விடம் ராஜ்யபாரம் செய்தானோ, எவ்விடம் நரஸிம்ஹ ரூபியான எம்பெருமானால் ஸம்ஹரிக்கப்பட்டானோ, எந்த ப்ரதேசத்தில் பகவான் ப்ரஹ்லாதனுக்கு அந்த ரூபத்துடன் ஸேவை ஸாதித்தாரோ என்னும் இவ்விஷயங்களில் நிர்ணீதமான ஜ்ஞானம் நமக்கு இல்லை, ஆனால் இந்த வ்ருத்தாந்தங்கள் நடந்ததாக ஸ்தூலமாகக் காட்டப்பட்ட இடம் ஸ்ரீஅஹோபிலம். ப்ரஹ்லாத சரித்ர ஸம்பந்தமாக வழங்கிவரும் ஒவ்வொரு கதையும் அஹோபில பர்வதத்தின் பற்பல ப்ரதேசத்தில் நடந்ததாக, இன்று வரைக்கும் ஸாதாரண ஜனங்களால் நம்பப்படுகிறது. அஹோபில மெனும் பெயரைச் சொன்னால் நரஸிம்ஹரூபியான பகவான் ஹ்ருத்கதனாகிறார். ப்ரஹ்லாதனையும் ஹிரண்ய கசிபுவையும் கூட நினைக்காமல் எங்களீச னெம்பிரானை எவ்விதம் நாம் நினைக்கவல்லோம்? அர்ச்சாவதாரத்திலும் தனது திருமேனியுடன் ஒன்றி யமைந்த ஹிரண்ய கசிபுவின் உருவத்தையும் ப்ரஹ்லாதன் விக்ரஹத்தையும் காட்டிநின்ற எம்பெருமானை, அவர்களைவிட்டு எவ்விதம் நினைத்தல் கூடும்?

𑌨𑌾𑌹𑌂 𑌬𑌿𑌭𑍇𑌮𑍍𑌯𑌜𑌿𑌤 𑌤𑍇𑌽𑌤𑌿𑌭𑌯𑌾𑌨𑌕𑌾𑌸𑍍𑌯
𑌜𑌿𑌹𑍍𑌵𑌾𑌰𑍍𑌕𑌨𑍇𑌤𑍍𑌰𑌭𑍍𑌰𑍁𑌕𑍁𑌟𑍀𑌰𑌭𑌸𑍋𑌗𑍍𑌰𑌦𑌂𑌷𑍍𑌟𑍍𑌰𑌾𑌤𑍍 ।



𑌆𑌨𑍍𑌤𑍍𑌰𑌸𑍍𑌰𑌜𑌃𑌕𑍍𑌷𑌤𑌜𑌕𑍇𑌶𑌰𑌶𑌙𑍍𑌕𑍁𑌕𑌰𑍍𑌣𑌾𑌤𑍍
𑌨𑌿𑌰𑍍𑌹𑍍𑌰𑌾𑌦𑌭𑍀𑌤𑌦𑌿𑌗𑌿𑌭𑌾𑌦𑌰𑌿𑌭𑌿𑌨𑍍𑌨𑌖𑌾𑌗𑍍𑌰𑌾𑌤𑍍 ॥

"யாராலும் ஜயிக்கக்கூடாத ஸ்வாமிந்! மிகவும் பயங்கரமான முகமென்ன, நாவென்ன, ஸூர்யனையொத்த கண்களென்ன, புருவங்களின் வேகமென்ன, உக்ரமான கோரைப் பற்களென்ன, குடல் மாலை யென்ன, ரக்தமயமான பிடரி மயிர்க ளென்ன, நெறித்த காதுகளென்ன, திக்கஜங்கள் பயந்த கர்ஜனை யென்ன, புகைவனைப் பிளந்த நகங்களின் முனைகளென்ன, இவ்விதமான தேவரீருடைய ரூபத்தைக்கண்டு நான் பயப்படுகிறேனில்லை." என்றிவ்வாறு ப்ரஹ்லாதன் பகவத்ரூபத்தை வர்ணித்தானன்றோ? இவ்விதமே யன்றோ எம்பெருமான் அஹோபிலத்தில் தர்சிக்கப்படுகிறார்? "அங்கண்ஞாலமஞ்ச அங்கோ ராளரியாய் அவுணன் பொங்கவாகம் வள்ளுகிரால் போழ்ந்த புனிதன்" என்றும், "அலைத்த பேழ்வாய் வாளெயிற்றோர் கோளரியாய் அவுணன் கொலைக்கையாளன் நெஞ்சிடந்த கூருகிராளன்" என்றும், "எவ்வும் வெவ்வேற் பொன்பெயரோ னேதலனின்னுயிரை, வவ்வி யாகம் வள்ளுகிரால் வகிர்ந்தவம்மான்" என்றும், "முனைத்த சீற்றம் விண்சுடப்போய் மூவுலகும் பிறவும், அனைத்து மஞ்ச வாளரியா யிருந்த வம்மான்" என்றும், "நாத்தழும்ப நான்முகனு மீசனுமாய் முறையால், லேத்த வங்கோ ராளரியா யிருந்த வம்மான்" எனவும் ஆழ்வாரால் பாடப்பெற்ற வெம்பெருமான், விண்ணவரு மண்ணவரும் அஞ்சித்துதிக்க, அப்பொன்பெயரோன் மார்பிடந்து, அவன்பாலற் கிரங்கினவனென்பதில் இன்னும் சொல்லவும் வேண்டுமோ?

அன்றியும், திருமேனியில் கலந்துநின்ற ப்ரஹ்லாதனையும் அவன் தகப்பனையும் தாங்கிநின்ற சரண்யனருகில், தனியே ப்ரஹ்லாதன் அர்ச்சாரூபியாயும் இருக்கக் காண்கின்றோம். நாம் செவியுற்ற வரையில் வேறெத்தேசத்திலும் பகவான் இவ்வண்ணம் தர்சநம் கொடுக்கவில்லை. ஆக, ப்ரஹ்லாத சரித்ரத்துக்கென்றே ஸ்ரீஅஹோபிலம் பெருமானுகந்த திவ்யதேச மாகின்

றது. இவ்வண்ணம், சிங்கவேள்குன்றமதில் வாஸுதேவன் அமர்ந்த பொருளைச் சிறிது விசாரிக்கத் தொடங்குவோம்.

உலகத்தில் ஆத்மகோடிகளுடைய குணங்கள் ஒருவிதமாய் அமையவில்லை. அப்படி அமைந்திருந்தால் ஸாம்யவைஷம்யங்களுக்கு இருப்பிட மில்லாமற்போகும். சிறந்த ஸாதுஜனங்களை அஸாதுக்கள் த்வேஷிக்கக் காண்கின்றோம். பரமபுருஷன் உலகத்தின்கண் அவதரித்தபோதெல்லாம் மந்தசித்தர்களிடம் அவமதியைப் பெற்றானென்பது யாவர்க்கும் தெரிந்த விஷயம். ப்ரக்ருதி பலவிதமாய்ப் பரிணமித்திருக்கிறது. தத்பரிணாமங்களின் சேர்க்கையால் ஜீவகோடிகளுக்குச் சரீரங்கள் உண்டாயிருக்கின்றன. ப்ரக்ருதி குணங்களின் வைஷம்யத்தை யிட்டு, அதனுடன் அநாதியாய் ஸம்பந்தமடைந்த ஜீவன்களும் குணதாரதம்யங்களை வஹிக்கிறார்கள். ப்ரஹ்லாதன் ந்ருஸிம்ஹனை ஸ்துதிசெய்கையில் '𑌸𑌤𑍍𑌤𑍍𑌵𑌂 𑌤𑌵 𑌪𑍍𑌰𑌿𑌯𑌤𑌮𑌾𑌂 𑌤𑌨𑍁𑌮𑌾𑌮𑌨𑌨𑍍𑌤𑌿' என்பதால் பகவானுடைய அவதார சரீரங்கள் சுத்த ஸத்வ ஸ்வரூபம் என்றும் ஏற்படுகிறது. அதனால் தான், சதுர்முகனுக்கு ஸ்ருஷ்டிக்கு உபயோகமான வேதகணங்களை உபதேசித்த காலத்தில், பகவான் பூர்வம் சதுர்முகனிடம் நின்ற வேதங்களை அபஹரித்தவராகிய ரஜோகுண ரூபியாயும் தமோகுண ரூபியாயு மிருந்த மதுகைடபர்க ளென்னும் அஸுரர்களை ஸம்ஹரித்தா ரெனப் படுகிறது. உலகத்தில் சுத்தஸத்வமான சரீரம் ஜீவர்களுக்கில்லை. மிஸ்ரஸத்வமான சரீரங்களில் ஸத்வாம்சங்களை வ்ருத்திசெய்து, ராஜஸ தாமஸாம்சங்களை க்ரமேண பரிஹரித்துத் தான், பகவானுடைய க்ருபைக்கு ஜீவர்கள் பாத்ரராகிறார்கள். இப்படி ஜந்மாந்தரங்களில் ஸத்வைக ப்ரதாநனைப் போந்த ப்ரஹ்லாதனுக்கு ராஜஸ தாமஸ குணங்களுடன் ஜநித்த ஹிரண்யகசிபு பிதாவாய்க் கிடைத்தான். இது பகவத் ஸங்கல்பமடியாக வந்திருக்கவேண்டும். அநாத்மாவான சரீரமே ஆத்மாவென நினைத்தல் அஹங்காரமென்றும், யாதொரு சுற்றமும் பொருளுமற்ற ஆத்மாவுக்கு, தச்சரீர ஸம்பந்தமடியாய் உண்டான பந்துக்களையும் பொருள்களையும், ஸ்வஸம்பந்திகளாய்



நினைத்தல் மமகாரமென்றும், இந்த இரண்டு மதிவிகாரங்களும் அவித்யைக்கு வித்தாயிருப்பதாயும்,

𑌅𑌨𑌾𑌤𑍍𑌮𑌨𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌰𑍍𑌯𑌾 𑌅𑌸𑍍𑌵𑍇 𑌸𑍍𑌵𑌮𑌿𑌤𑌿𑌯𑌾𑌮𑌤𑌿𑌃 ।
𑌅𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌤𑌰𑍁𑌸𑌂𑌭𑍂𑌤𑍇𑌃 𑌬𑍀𑌜𑌮𑍇𑌤𑌤𑍍𑌦𑍍𑌵𑌿𑌧𑌾𑌸𑍍𑌥𑌿𑌤𑌮𑍍 ॥

என்னும் ப்ரமாணத்தால் வெளிப்படுத்தப்பட்டது. இப்படிப்பட்ட மதிவிகாரங்கள் பூர்ணமாய் ஹிரண்யகசிபுவினிடம் குடிகொண்டிருக்க அவை ப்ரஹ்லாதனிடம் முழுவதும் விலகிப்போயின. தகப்பனுக்கு நைஸர்க்கிகமாய் பகவத்வேஷரூபமான நாஸ்திகமதமும், விஷயேச்சையும் ப்ராப்தமாயிற்று. அவன் தபஸ்ஸுக்காக வெளிப்படும் முன்னம் தன் ப்ருத்யர்களை நோக்கிச் சொன்னதாவது :—

𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌰𑍍𑌦𑍍𑌵𑌿𑌜𑌕𑍍𑌰𑌿𑌯𑌾𑌮𑍂𑌲𑍋𑌯𑌜𑍍𑌞𑍋𑌧𑌰𑍍𑌮𑌮𑌯𑌃𑌪𑍁𑌮𑌾𑌨𑍍 ।
𑌦𑍇𑌵𑌰𑍍𑌷𑌿𑌪𑌿𑌤𑍃𑌭𑍂𑌤𑌾𑌨𑌾𑌂𑌧𑌰𑍍𑌮𑌸𑍍𑌯𑌚𑌪𑌰𑌾𑌯𑌣𑌮𑍍 ॥
𑌯𑌤𑍍𑌰𑌯𑌤𑍍𑌰𑌦𑍍𑌵𑌿𑌜𑌾𑌗𑌾𑌵𑍋𑌵𑍇𑌦𑌾𑌵𑌰𑍍𑌣𑌾𑌶𑍍𑌰𑌮𑌕𑍍𑌰𑌿𑌯𑌾𑌃 ।
𑌤𑌂𑌤𑌂𑌜𑌨𑌪𑌦𑌂𑌯𑌾𑌤𑌸𑌂𑌦𑍀𑌪𑌯𑌤𑌵𑍃𑌶𑍍𑌚𑌤 ॥

"பகவான் த்விஜர்களுடைய க்ரியைகளுக்கு ஆதாரமாயிருக்கிறார். அவர் யஜ்ஞஸ்வரூபி. தர்மமே அவருடைய சரீரம். அவர்தான் ஸர்வசரீரி. தேவர், ரிஷிகள், பித்ருக்கள், மற்ற ஜீவர்கள் இவர்களால் அநுஷ்டிக்கப்பட்ட தர்மத்துக்கு அவரே முக்யமான ஆஸ்ரமாயிருக்கின்றார். ஆதலால் எந்தெந்தத் தேசங்களில் த்விஜர்களும், பசுக்களும், வேதங்களும், வர்ணாஸ்ரம தர்மங்களும் காணப்படுமோ அந்தந்தத் தேசங்களுக்குச்சென்று கொளுத்துங்கள் வெட்டுங்கள்."

இவ்விதமாய் இந்த்ரியங்களுக் கெட்டாத ஈஸ்வரனிடம் கொண்ட த்வேஷத்தைத் ததீயர்களிடம் செலுத்திவிட்டு, தான்மட்டும், '𑌅𑌜𑍇𑌯𑌮𑌜𑌰𑌾𑌮𑌰𑌮𑌾𑌤𑍍𑌮𑌾𑌨𑌮𑌪𑍍𑌰𑌤𑌿𑌦𑍍𑌵𑌨𑍍𑌦𑍍𑌵𑌮𑍇𑌕𑌰𑌾𑌜𑍍𑌯𑌂𑌵𑍍𑌯𑌧𑌿𑌤𑍍𑌸𑌤' "தன்னை ஒருவராலும் ஜயிக்கக்கூடாதவனாகவும், மூப்பும் இறப்பு மற்றவனாகவும், எதிரியில்லாதவனாகவும், பூமிக்கெல்லாம் ஓரரசனாகவும் செய்துகொள்ள இச்சித்தான்." சதுர்முகனை நோக்கித்,

தவம் புரிந்து தன்னெண்ணத்திற்குத் தக்கபடி வரங்களையும் பெற்றுக்கொண்டான். வரானுகுணமாக ஸர்வத்ர ஜயமும், ஏகராஜ்யமும் அடைந்தவனாய்க் கொண்டு,

[illegible]
[illegible]
[illegible]
[illegible]

"அப்படிப்பட்ட மஹேந்த்ரனுடைய அரண்மனையில், மஹாபலிஷ்டனும், இஷ்டத்தை யெல்லாம் ஸாதிக்கக்கூடினவனும், தன்னால் ஜயிக்கப்பட்ட உலகத்துக்கு ஓர் ராஜனும், தன்னால் பீடிக்கப்பட்ட தேவர் முதலானவர்களால் வணங்கப்பட்ட பாதங்களை யுடையவனும், நிலைத்தும் தீவ்ரமுமாயு மிருக்கப்பட்ட தன்னுடைய சாஸநங்களைச் செலுத்திக்கொண்டு ஸந்துஷ்டனாயிருந்தான்."

[illegible]
[illegible]
[illegible]
[illegible]

"இவ்விதமாய்த் தன் ஐச்வர்யத்தால் மதமடைந்து கர்வம்கொண்டு சாஸ்த்ரத்தை அதிக்ரமித்த செய்கைகளுடன் கூடி ஸநகாதிகளால் கொடுக்கப்பட்ட சாபத்தை யடைந்தவனுக்கு, அதாவது, அந்த சாபத்தின் முடிவைக் காணவேண்டிய ஹிரண்யகசிபுவுக்கு, மேலே சொன்ன விதமாய்ப் பஹுகாலம் சென்றது. அவனுடைய உக்ரமான சாஸநத்தால் பயந்து போன ஸர்வ லோகங்களும், லோகபாலர்களும் மற்றோரிடத்திலும் தங்களுக்கு ரக்ஷணைக் காணாமல் அச்யுதனைச் சரணமா யடைந்தனர்."

பாகவத ச்ரேஷ்டர்களான ஸநகாதிகளிடம் அபசார மடியாக, ஹிரண்யகசிபுவுக்கு ரஜோகுண ப்ராசுர்யத்தால் ஐச்வர்யேச்சையும் தத்ப்ராப்தியும், தாமஸகுணத்தின் உத்ரேகத்தால் பக



வானிடமும் பாகவதர்களிடமும் த்வேஷமும், ஸர்வஜநங்களுடைய ஹிம்ஸையில் அபிருசியும் உண்டாயது. இப்படிப்பட்டவனுக்கு ஸத்வோத்தமனான புத்ரன் எவ்விதம் ஜநித்தா னென்றால், ஸூக்ஷ்ம சரீர விசிஷ்டனாக ஸம்ஸரிக்கின்ற ஜீவன், பூர்வ ஜன்மங்களில் ஸம்பாதிதமான வித்யாகர்மத்துடன் கூடினவனாய், சரீராந்தரத்தை யடைகின்றானதால், ஸ்தூல சரீரத்தின் பீஜத்தை மாதா பிதாக்களினின்று அடைவதன் காரணமாத்ரத்தாலே, பிதாவினுடைய துர்க்குணங்களையும் அடைய வேண்டு மென்கிற நியமமில்லை. அன்றியும், ப்ரஹ்லாதன் மாதா, அவன் பிதாவினுடைய சித்த வ்ருத்தியுடன் பொருந்தினவளாகத் தெரியவில்லை. இதுவுமன்றி, நாரதருடைய அநுக்ரஹத்தால் கர்ப்பத்திலேயே பகவத்பக்தி ப்ரஹ்லாதனுக்கு இயல்பாயமைந்தது. '𑌤𑌂 𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌕𑌰𑍍𑌮𑌣𑍀 𑌸𑌮𑌨𑍍𑌵𑌾𑌰𑌭𑍇𑌤𑍇 𑌪𑍂𑌰𑍍𑌵𑌪𑍍𑌰𑌜𑍍𑌞𑌾 𑌚' என்னும் உபநிஷத் வாக்யத்தால், பூர்வ ப்ரஜ்ஞையுடன் ஜீவன் ஒரு சரீரத்தைவிட்டு மற்றொரு சரீரப்ராப்தியின் பொருட்டு கர்ப்பத்தில் ப்ரவேசிக்கிறான். ஸாதாரண ஜீவன் விஷயத்தில் கர்ப்ப வாஸ காலத்தில் உண்டாகும் யோசனைகளை விஸ்தரிக்கு மிடத்தில்,

[illegible]
[illegible]
[illegible]
[illegible]

"கர்ப்ப வாஸத்தினின்றும் விடப்பட்டேனாகில் மோக்ஷத்தைக் கொடுப்பவரும், ஆநந்தரூபியும், ஸர்வ துக்கத்தைப் போக்கடிக்கிறவருமான நாராயணனென்னும் விஷ்ணுவை ஹ்ருதயத்தில் பஜிக்கிறேன். மாதாவின் வயிற்றில் தகையப்பட்டிருக்கிறேன். இப்போது இக்கட்டினின்றும் விடப்பட்டேனாகில், அந்ய புத்தியை விலக்கிப் பகவானான வாஸுதேவனைத் திருப்தி செய்கிறேன்." என்றிப்படிச் சொல்லப்பட்டிருக்கிறது. ஸர்வோத்தமனான ப்ரஹ்லாதன் விஷயத்தில் இந்த ரூபமான யோசனைகள் நிர்வேதமின்றிக்கே உண்டாக வேண்டியிருக்கத் தேவர்ஷியினுடைய அநுக்ரஹ ஸஹி

தமான ஜ்ஞாநோபதேசமும் ப்ராப்தமானபடியால், பகவானிடத்தில் நிரந்தர பக்தி ஜந்மகாலத்திலேயே அவனுடைய ஸ்வரூபத்தோடு ஒன்றாகி நின்றது.

ஹிரண்யகசிபுவோ, வேதங்களிடமும் தேவர்களிடமும் ப்ராம்ஹணர்களிடமும் ஸாதுக்களிடமும் தர்மத்தினிடமும் பகவானிடமும் த்வேஷத்தை மேன்மேலும் வ்ருத்தி செய்துகொண்டு, தன்நாசத்தைச் சீக்கிரமே தேடிக்கொண்டிருந்தான். இது

யதா தேவேஷு வேதேஷு கோஷு விப்ரேஷு ஸாதுஷு ।
தர்மே மயி ச வித்வேஷ: ஸ வா ஆஶு விநஶ்யதி ॥ என்னும் பகவத வாக்யத்தால் வெளியாகிறது. அவனுடைய விநாச காலத்தை,

நிர்வைராய ப்ரஶாந்தாய ஸ்வஸுதாய மஹாத்மநே ।
ப்ரஹ்லாதாய யதா த்ருஹ்யேத் ஹநிஷ்யேऽபி வரோர்ஜிதம் ॥

என்னும் ஶ்லோகத்தால் பகவான் தன்னைச் சரணமடைந்தவர்க்குத் தெரிவித்தான். ஓர் அபராதத்தின் விளைவு அதைக் காட்டிலும் கொடியதான மற்றோர் அபராதம். அதன் பயனாக அதைவிடப் பெரிதானதொரு குற்றமுண்டாகும். இவ்விதமாக அபராத பரம்பரையை ஒருவன் ஸம்பாதித்துக் கொண்டிருந்தானாகில், அவன் முடிவு ஆத்ம நாசமே. மேல் குறித்த ஶ்லோகத்தால், "என்னையே ஸதா த்யாநித்துக்கொண்டு, அந்தக் காரணத்தால் பரிடம் ராகத்வேஷாதிகளற்றுச் சாந்தியுடன் கூடிய மநஸ்கனாய், அதே நிமித்த மடியாய் ஸர்வபூதங்களிடமும் பரமஸௌஹ்ருத்தா யிருக்கும் அவன் குமாரனான ப்ரஹ்லாதனிடம் எப்போது த்ரோஹம் நினைக்கின்றானோ அப்போது ப்ருஹ்மா கொடுத்த வரங்களால் மிகவும் பலிஷ்டனாக இருந்தாலும் அவனை நான் கொல்லுகிறேன்" எனப் பகவான் திருவுள்ளம் பற்றியபடி, ஹிரண்யகசிபுவின் அபராத பரம்பரைக்கு முடிவு எப்போது உண்டாயிற்றெனில், பாகவதர்களுக்குள் ஸமமானவரும், மிக்கவரும் உலகத்தின்கண் எங்கும் இசர் என்னும்படியாக ப்ரஸித்திபெற்ற மஹா பாகவதனாகிய ப்ரஹ்லாதன் விஷயமாய் அபராதம் புரிய யத்தனித்த காலத்திலென்று ஏற்படுகிறது. இப்படி ப்ரஹ்லாதன்



ஸர்வோத்க்ருஷ்டன் என்பது புராண வாக்யத்தாலேயே தெரிகின்றது.

ப்ரஹ்மண்ய: ஶீலஸம்பந்ந: ஸத்யஸந்தோ ஜிதேந்த்ரிய: ।
ஆத்மவத் ஸர்வபூதாநாம் ஏக: ப்ரியஸுஹ்ருத்தம: ॥
தாஸவத் ஸந்நதார்யாங்க்ரி: பித்ருவத் தீநவத்ஸல: ।
ப்ராத்ருவத் ஸத்ருஶே ஸ்நிக்தோ குருஷ்வீஶ்வரபாவந: ॥
வித்யார்தரூபஜந்மாட்யோ மாநஸ்தம்பவிவர்ஜித: ॥
நோத்விக்நசித்தோ வ்யஸநேஷு நி:ஸ்ப்ருஹ:
ஶ்ருதேஷு த்ருஷ்டேஷு குணேஷ்வவஸ்துத்ருக் ॥
தாந்தேந்த்ரியப்ராணஶரீரதீ: ஸதா
ப்ரஶாந்தகாமோ ரஹிதாஸுரோऽஸுர: ॥
யஸ்மிந் மஹத்குணா ராஜந் க்ருஹ்யந்தே கவிபிர்முஹு: ।
ந தேऽதுநா பிதீயந்தே யதா பகவதீஶ்வரே ॥
யம் ஸாதுகாதாஸதஸி ரிபவோऽபி ஸுரா ந்ருப ।
ப்ரதிமாநம் ப்ரகுர்வந்தி கிமுதாந்யே பவாத்ருஶா: ॥
குணைரலமஸங்க்யேயைர் மாஹாத்ம்யம் தஸ்ய ஸூச்யதே
வாஸுதேவே பகவதி யஸ்ய நைஸர்கிகீ ரதி: ॥ [பாக.

*    *    *    *

ஸ உத்தமஶ்லோகபதாரவிந்தயோ:
நிஷேவயாகிஞ்சநஸங்கலப்தயா ।
தந்வந் பராம் நிர்வ்ருதிமாத்மநோ முஹு:
து:ஸங்கதீநஸ்ய மந: ஶமம் வ்யதாத் ॥

"ஈஶ்வர ப்ரியன்; நல்ல சித்தவ்ருத்தியுடன் கூடினவன்; ஸத்யமான ப்ரதிஜ்ஞையுடன் கூடினவன்; உள்ளும் புறமும் இந்த்ரியங்களை ஜயித்தவன்; தன்னிடத்தில் அல்லது ஈஶ்வரனிடத்தில் எப்படியோ அப்படியே ஸர்வ ஜீவன்களிடமும் அஸாதாரணமாக அத்யந்தம் விஶ்வாஸமுள்ளவனும் ஹிதகாரியாயு மிருக்கப்பட்டவன்; பெரியோர் பாதகமலங்களைத் தாஸன்போல் வணங்குகின்

றவன்; ஹீநர்களிடம் பிதாவைப்போல் அன்புடையவன்; தனக்கு ஸமானமானவரிடம் ஸஹோதரனைப் போன்ற ஸ்நேஹ பாவமுடையவன்; குருஜனங்களை ஈஸ்வரன்போல் எண்ணுகிறவன்; தன்னிடம் இருக்கும் கல்வி, பொருள், குலம், அழகு முதலானவற்றால் கர்வமும் டம்பமும் இல்லாதவன்; வ்யஸநங்கள் வந்தால் சித்தவிகாரமற்றவன்; ஐஹிக ஆமுஷ்மிக ரூபங்களான விஷயங்களில் வஸ்துக்களென்னும் புத்தியற்றவனாதலால் ஆசையும் அற்றவன்; இந்த்ரியம், ப்ராணன், சரீரம், புத்தி முதலானவற்றை எப்போதும் தன்வசமாய் வைத்துக்கொள்பவனானபடியால் காமமற்றவன்; அஸுரனாக இருந்தும் அஸுர குணங்களாகிய மாத்ஸர்யாதிகளில்லாதவன்; எவனிடம் ஓ ராஜனே! உத்க்ருஷ்ட குணங்கள் கவிகளால் அடிக்கடி நிரீக்ஷிக்கப்படுகின்றனவோ, ஈஸ்வரனான பகவானிடம் எப்படியோ, அப்படியே இப்போதும் அவனுடைய மஹாகுணங்கள் மறக்கப்படவில்லை. ஓ ராஜனே! ஸாதுக்களுடைய கதைகளை ப்ரஸங்கிக்கும் ஸபைகளில், சத்ருக்களான தேவர்களும், அந்த ப்ரஹ்லாதனை ஸாதுக்கள் விஷயத்தில் த்ருஷ்டாந்தமாகச் சொல்லுகிறார்கள். ஆதலால் உன்னைப்போன்ற மற்றவர்கள் அப்படிச் செய்வதைப்பற்றிக் கேட்பானேன்? அத்தன்மைய ப்ரஹ்லாதனுடைய நற்குணங்கள் எண்ணிக்கைக்கு எட்டாதவை. சொன்னவை போதும். அவனுடைய மாஹாத்ம்யத்தைக் காட்டுவதற்காகச் சில குணங்கள் சொல்லப்பட்டன. ஏனெனில் பகவானான வாஸுதேவனிடம் ப்ரேமையானது அவனுக்கு உத்பத்தி ஸித்தம். * * * அவன் ஸர்வோத்க்ருஷ்டமான கீர்த்தியையுடைய பகவத் பாத கமலங்களின் நித்யஸேவையை, பகவானைத்தவிர வேறொன்றையும் பொருளாக மதிக்காத பாகவதர்களுடைய ஸம்ஸர்க்கத்தால் அடைந்தவனாய், அடிக்கடி பரமாநந்தத்தைத் தனக்கு உண்டாக்கிக்கொண்டு, துஷ்டர்களுடைய சேர்க்கையால் தைந்யத்தை யடைந்தவர்கள் மநஸுகளுக்கும் சாந்தியை உண்டுபண்ணுவித்தான்'' ஸ்ரீ விஷ்ணு புராணத்திலும்

ஸமசேதா ஜக³த்யஸ்மிந் ய: ஸர்வேஷ்வேவ ஜந்துஷு |
யதா²த்மநி ததா²ந்யத்ர பரம் மைத்ரகு³ணாந்வித: ||



த⁴ர்மாத்மா ஸத்யஶௌசாதி³கு³ணாநாமாகரஸ்ததா² |
உபமாநமஶேஷாணாம் ஸாதூ⁴நாம் ய: ஸதா³ப⁴வத் ||

என்று ப்ரஹ்லாதன் குணங்களை விவரிக்கக் காண்கின்றோம் "இவ்வுலகில், யாதொரு ப்ரஹ்லாதனானவன், ஸர்வ ஜந்துக்களிடத்திலும் ஸமமான புத்தியை யுடைத்தானவனாய், தன்னிடமும் தன் குழந்தைகளிடமும் (பிறர் எப்படி ஸ்நேஹ யுக்தர்களாய் இருப்பார்களோ அப்படியே ஸர்வப்ராணிகளிடத்திலும்) மிகுந்த மித்ர குணங்களுடையவனாயிருந்தான். அவன் தர்மத்தின் அவதாரம். ஸத்யம் சௌசம் முதலான குணங்களுக்கு உத்க்ருஷ்டமான வாஸஸ்தானம். அவன் எக்காலத்திலும் எல்லா ஸாதுக்கள் விஷயத்திலும் உபமானமாகக் கொள்ளப்படுகின்றான்"

இப்படிப்பட்ட பரம ஸாதுவுக்கும், அஸாதுக்களுக்குள் நிகரற்ற ஹிரண்ய கசிபுவுக்கும், புத்ரனென்றும் பிதாவென்றும் சரீர ஸம்பந்தம் ஸம்பவித்திருந்த போதிலும், பொருத்தம் எப்படி உண்டாகும்? புத்ரனுக்குப் பிதாவிடம் கிஞ்சித்தும் அநுகூல புத்தியானது தவறவில்லையாயினும், பிதா புத்ரனை அத்யந்தம் த்வேஷித்தான். இந்த ரூபமான த்வேஷத்தை அந்யத்ர கதைகளிலும் கண்டோமில்லை. இது அவர்கள் சரீரத்தில் நிலைத்து நின்ற குணங்களுடைய மிக்க வைஷம்யத்தால் ஜநித்தது. இவற்றின் பரிணமங்களையும், அந்தப் பரிணமங்களுடைய பரமாவதியையும், அதனால் உண்டான என்றும் உலகத்தார் எங்கும் கண்டிலாத ஈஸ்வரனுடைய க்ருபா பரீவாஹத்தையும் பற்றிப் பின்னால் விசாரிப்போம்.

(இன்னும் வரும்.)

பத்ராதிபர்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

# ஸ்ரீ அஹோபில மாஹாத்ம்யம்.

## இரண்டாவது அத்யாயம்.

ரிஷிகள்:—"முநிச்ரேஷ்டனே! ஆதாதி புருஷனே! நாரத பகவானே! கருடாசலம் என்று இம்மலைக்குப் பெயர் ஏன் உண்டாயிற்று?"

ஸ்ரீநாரதர்:—"ரிஷிகளே! நீங்கள் எல்லோரும் என் வார்த்தையை ஸாவதாநமாய்க் கேளுங்கள். முன்பு ஒரு புண்யமான க்ருதயுகத்தில் கச்யபரின் புத்ரரான கருடன் தவம் செய்ய மனமுடையவராய்த் தன்னுடைய பிதாவை நோக்கி, "பகவானே! எந்த உபாயாநுஷ்டாநத்தினால் எல்லாருக்கும் இஷ்டபூர்த்தி உண்டாகும்? எவர் இவ்வுலகில் ஒருவருடைய மநோரதங்கள் அனைத்தையும் பூர்த்திசெய்ய வல்லவர்? ஸாக்ஷாத் ஜநகபிதாவாயும், குருவாயும், ஆசார்யராயும் இருக்கும் தேவரீர் எனக்கு எது ஹிதகரமோ அந்த தத்வத்தை உபதேசித்தருளவேண்டும். தேவரீர் தவிர எனக்கு வேறொரு கதியில்லை. நாதனற்று, க்ருபணனாயும், மூடனாயும், ஸம்ஸாரஸாகரத்தில் மூழ்கிக் கிடக்கிறேன். உபதேச மாத்ரத்தால் என்னைக் கரையேற்ற வேண்டும்" என்று ப்ரார்த்தித்தான். அதற்குக் கச்யபர், "கருடனே! இவ்வுலகில் எவர்கள் சப்தாதி விஷயங்களால் மனம் கவரப்பட்டு ஸம்ஸாரஸாகரத்தில் மூழ்கிக் கிடக்கிறார்களோ அவர்கள் எல்லோரும் ஸ்ரீமஹாவிஷ்ணுவையே ஆராதிக்க வேண்டும். அவர்களைக் கரையேற்ற வல்லவர் அவர் ஒருவரே, மற்றொருவருமில்லை. ஆகையால், நல்ல வ்ரதத்துடன் கூடினவனாய் ஜகத்பதியான ஸ்ரீமஹாவிஷ்ணுவை நீ ஆராதிக்கக் கடவாய். பண்டிதனாயிருப்பான் எவன் பக்தியுடன் விஷ்ணுவை ஆராதிக்காமல் புண்யலோகங்களை விரும்புவான்? பகவானை எவன் ஆராதிக்கிறானோ அவனுக்கு ஸர்வ



ஸம்பத்துக்களும் ஸுலபமாய்க் கிடைக்கும். பகவானை ஆராதித்து நான்முகன் ஸ்ருஷ்டிகர்த்தாவானான்; பகவானை ஆராதித்து இந்த்ரனும் தேவராஜ பதத்தைப் பெற்றான். ஆகையால் அப்படிப்பட்ட பகவானிடத்தில் மனத்தைச் செலுத்தி, பூஜையைச் செய்து, த்யாநத்தைச் செய்தால் மனிதருக்கு ஸம்ஸாரம் நீங்கும். நீயும் அவரிடத்தில் ஸ்திரமான பக்தியைச் செய்தால் உனக்கும் அவர் ச்ரேயஸ்ஸைச் செய்வர். பக்ஷிராஜனே! ஸர்வலோக நமஸ்க்ருதனான பகவான் பக்தியால் எப்படி ஆராதிக்கப்படுகிறாரோ அப்படி விவித யஜ்ஞங்களினாலும், புஷ்ப சந்தநங்களினாலும் ஆராதிக்கப் படுகிறதில்லை. பக்தியால் த்ருப்தி யடைவதுபோல லக்ஷம் அச்வமேதங்களினாலும் லோகநாதனான பகவான் த்ருப்தி யடைகிறதில்லை. ஜகத்பதியாயும், ப்ரபுவாயும் உள்ள இந்த த்ருவிக்ரமன் பக்தியால் எப்படி ஸந்தோஷத்தை யடைகிறாரோ அப்படி வேதங்களை ஓதுவதினாலும், தபஸ்ஸுக்களை நன்றாய்ச் செய்வதினாலும் ஸந்தோஷத்தை யடைகிறதில்லை. த்விஜச்ரேஷ்ட! பக்தியால் பகவானை ஆராதித்து நிஷ்கிஞ்சநரான ரிஷிகள் மோக்ஷத்தை யடைகிறார்கள்; மற்றவர்கள் தர்மம், அர்த்தம் இவைகளைப் பெறுகிறார்கள். எவனுக்குப் பகவானிடத்தில் பக்தி இல்லையோ அவன் புருஷாதமன்; வேதசாஸ்த்ரங்களைக் கல்லாதவனேனும், மிகுந்த யாகங்களைச் செய்யாதவனேனும், எவன் விஷ்ணுவினிடத்தில் பக்தியைச் செய்கிறானோ அவன் எல்லாவற்றையும் செய்தவனாகிறான். பக்ஷிராஜனே! எவனொருவன் கண் காது வாக்கு காயம் இவைகள் ஸ்வாதீநமா யிருக்கும்பொழுது பகவானுடைய திவ்யமங்கள விக்ரஹத்தை ஸேவிக்க வில்லையோ, பகவானுடைய கதைகளைக் கேட்கவில்லையோ, பகவானுடைய குணங்களைச் சொல்லவில்லையோ, பகவானுடைய பூஜையைச் செய்யவில்லையோ, எவனொருவன் ஸர்வாத்மாவான விஷ்ணுவையும், அவனுடைய திருநாமத்தையும் ஸ்மரிக்கவில்லையோ, பரிசுத்தனே! அவன் உலகில் கேவலம் வ்ருதாவாய் ஜீவித்து வருகிறான். ககநாயகனே! எந்த வாய் விஷ்ணுவை ஸ்தோத்ரம் செய்கிறதோ அதுதான் வாக்கு என்னப்படுகிறது; அவனுடைய குணங்கள் எந்த செவிகளினால் கேட்கப் படுகின்றனவோ அவைகள்தான் செவிகள்; அவனுடைய பூஜைகள் எந்தக்கைகளால் செய்யப்படுகின்றனவோ அவைகள்தான் கைகள்; எவன் எவ்விடத்திலாவது

லக்ஷணங்களோடு கூடின பகவானுடைய திவ்யமங்கள விக்ரஹத்தை ஆதரத்துடன் ஸேவிக்கவில்லையோ அவன் கண்ணில்லாதவன். எவன் ருக் யஜுஸ் ஸாம ரூபமான வேதங்களினாலும், ஸ்ம்ருதிகளினாலும், இதிஹாஸங்களினாலும் தேவாதிதேவனை ஸ்தோத்ரம் செய்யவில்லையோ அவன் மூடன் எனப்படுகிறான். எவன் லீலார்த்தமாக நரஸிம்ஹ ரூபத்தைத் தரித்த பகவானுடைய குணங்களையாவது கேட்கவில்லையோ, அவனைச் செவிடன் என்றும் வேத பாஹ்யன் என்றும் அறி. ஆகையால் கருடனே! நீ சுத்த பாவத்துடன், மனம் வாக்கு காயம் இவைகளுடைய க்ரியைகளினால் மனத்தையும் கண்ணையும் ஆனந்திப்பிக்கும் ஹ்ருஷீகேசனை ஆராதனம் செய். அப்படிச் செய்தால் உயர்ந்த புஷ்பங்களினாலும், கந்தங்களினாலும், கர்ப்பூரம் அகில் சந்தனம் இவைகளினாலும், உயர்ந்த வஸ்த்ரங்களினாலும் பகவானாகிய ந்ருஸிம்ஹன் பக்தியுடன் ஆராதிக்கப் பட்டவராக ஆவர். ஆகையால் நீ ஸாத்விகனாக ஆகி அசஞ்சலமான பக்தியைச் செய்து, பாபங்களைக் களைபவராயும் விகாரமற்றவராயும் இருக்கிற பகவானான நாராயணனை த்யானம் செய். ஸமஸ்த ப்ராணிகளுக்கும் ஆத்மாவாயும், தடுக்க முடியாத ஐச்வர்யத்தை யுடையவராயும், அமலனாயும் இருக்கிற ஸ்ரீ ஹரியானவர் உன்னால் நன்றாய்ப் பக்தியுடன் பூஜிக்கப் பட்டவராய் உன்னை ஸம்ஸாரத்தினின்றும் கரையேற்றுவர்" என்றார்.

பக்ஷிராஜனான கருடன் மஹாத்மாவான அந்தக் கச்யபருடைய நல்வார்த்தையைக் கேட்டுப் பூமியில் சிரஸா வணங்கி, பின்பு எழுந்திருந்து, பகவானான முனீச்வரனை நோக்கி "ஓ முனியே! தேவரீருடைய உபதேசத்தால் இப்பொழுது நான் அநுக்ருஹீதனானேன். க்ருதார்த்தனாகிவிட்டேன். தேவரீர் எனக்குப் பிதா. நான் தேவரீருக்கு விதேயன். ஆகையால் தேவரீர் என்னை மேன்மேலும் சிக்ஷிக்கக்கடவீர். தேவரீருடைய தர்சனத்தினாலேயே க்ருதார்த்தனாகி விட்டேன். ஸம்சயமில்லை ஸ்வாமி!" என்று சொன்னான்.

அப்பொழுது கச்யபர், "பிள்ளாய்! எல்லா லோகத்துக்கும் நாதனும், எல்லாவற்றிற்கும் ஆதாரமும், தேவர்களுக் கெல்லாம் ஈசனும் ஆகிய அச்யுதனை பூர்ணமான பாவத்துடன் ஆராதனம் செய்; சரணமாகவும் அடை. பகவான் அநந்ய பக்தியால் பூஜிக்கத்தக்கவர். அப்படிப் பூஜிக்கப்பட்டவராய் எல்லாவற்றையும்



கொடுப்பார். உலகத்தில் புருஷோத்தமனான பகவான் ப்ரஸன்னரானால் எதுதான் துர்லபம்? சலனமில்லாத மனஸ்ஸையுடைய கருட! நீ தவம்செய்ய நிச்சயித்திருக்கிறாய். ஸர்வ பாபங்களையும் போக்கடிக்கக் கூடியதாய், லோகங்களை யெல்லாம் தரிப்பவனான ஸாக்ஷாத் ஸ்ரீ ஹரியானவர் ப்ரீதியுடன் நித்யவாஸம் செய்கின்ற ஸ்ரீ அஹோபிலம் என்கிற மஹா க்ஷேத்ரம் இருக்கிறது. அதில் அநேக குகைகளுடன் கூடின பெரியமலை யொன்று உளது. அதற்கு நாராயணகிரி யென்று பெயர். மிகவும் உயர்ந்த சிகரத்தையுடையது. உன்னுடைய தவத்தின் மாஹாத்ம்யத்தால் அந்த மலைக்குக் கருடாத்ரி என்கிற பெயர் உண்டாகும்" என்றார்.

ஸ்ரீ நாரதர்:— கச்யபர் இப்படிச் சொல்லித் தன்னுடைய புத்ரனான கருடனை ஆலிங்கனம் செய்து, பிள்ளையை ஆசீர்வாதங்களினால் நிறைத்துத் தவம் செய்ய அனுப்பினார். பக்ஷிராஜனான அந்தக் கருடனும் அந்தப் பெரியமலையை யடைந்து, தனக்கு ஒன்றும் தோன்றாமையால் சும்மா இருந்து, "இம்மலை மிகவும் பெரிதாய் இருக்கின்றதே! இந்த ஸித்த க்ஷேத்ரத்தில் எவ்விடத்தில் தவம் செய்யக்கடவேன்? இதை நிச்சயித்து எவ்வாறு அறியக்கடவேன்? அப்படி நிச்சயிக்கக் காரணம் எதுவோ தெரியவில்லையே!" என்று இவ்வாறு சிந்தித்துக்கொண்டிருக்கையில் தனக்கு முன்னால் ஒரு வார்த்தை யுண்டாயிற்று. "குழந்தாய்! கருட! தேவர்களால் பூஜிக்கப் பட்டவனே! நீ என்ன சிந்திக்கிறாய்? இந்த க்ஷேத்ரம் ந்ருஸிம்ஹனுடையது. இதற்கு அஹோபிலம் என்றுபெயர். இவ்விடத்தில் இந்த பர்வத ச்ரேஷ்டம் தேவ கந்தர்வர்களால் ஸேவிக்கப்பட்டது. இங்கு ந்ருஸிம்ஹனுடைய ப்ரஸாதத்தால் ரிஷிகளும், பித்ருக்களும், ஸித்தர்களும், கந்தர்வர்களும், மநுஷ்யர்களும் அவரவர் விரும்பிய பலத்தை அடைந்தார்கள். ஆகையால் நீயும் சுத்தாத்மாவாய், ஜிதாஹாரனாய், ஜிதேந்த்ரியனாய், ஜகத்துக்கெல்லாம் ஈசனைத் த்யானம்செய். அவர் உனக்கு ச்ரேயஸ்ஸைச் செய்வர்" என்று சொல்லி ஒரு க்ஷணத்தில் அந்த மஹா வாணீ மறைந்தது. பரிசுத்தாத்மாவான கருடன் மிகுந்த ஆச்சரியமடைந்து அதன் அர்த்தத்தைச் சிந்தித்து, அகாரணமாய் இந்த வார்த்தை எப்படி உண்டாயிற்று? இது என்னுடைய பாக்ய ப்ரபாவமோ அல்லது பகவானுடைய ப்ரபாவமோ, அல்லது இந்த க்ஷேத்ரத்தின் ஸ்வயம் மஹிமையோ, அல்லது தேவாதிதேவ

னுடைய திருமலையின் மஹிமையோ, அல்லது என்னுடைய குரு
வின் ப்ரபாவமோ என்று இவ்வாறு அடிக்கடி நினைத்துக்கொண்டு
ஸந்துஷ்டராய் பூர்ண மனத்துடன் இந்த மலையின் தாழ்வரை
யில் பவநாசினியின் கரையில் கஜகுண்டத்தின் ஸமீபத்தில் தவம்
செய்ய நிச்சயித்து, ஜகந்நாதனாய், அநந்தனாய் இருக்கும் புரு
ஷோத்தமனை ஆராதித்துக்கொண்டு உத்தமமாயும் பரம மந்த்ர
மாயுமுள்ள த்வாதசாக்ஷரத்தை ஜபம் செய்தார். கேவலம்
மௌநத்தையடைந்து, வாயு பக்ஷணம் செய்து, ஜிதேந்த்ரியனாய்
பரிசுத்த மனத்தினால் பகவானை த்யாநம் செய்தார். இப்படி த்யாநம்
செய்துவருகிற இவருடைய ஹ்ருதயத்தில் வஸிக்கிற பக்தவத்
ஸலரான பகவான் ந்ருஸிஹ்மன் அவரை ஸர்வாபத்துகளினின்
றும் ரக்ஷித்தார். ஸ்துதி ஸங்கீர்த்தநங்களாலும், நல்ல தத்வ சிந்
தநத்தாலும், ஆராதநத்தாலும் மஹாத்மாவான கருடனுடைய
தபஸ்ஸு வ்ருத்தி யடைந்தது. அடையவே, பூர்வார்ஜித பாபங்க
ளும், இந்த ஜந்மத்தில் நேரிட்ட பாபங்களும் ஆகிய எல்லாம் ந்ரு
ஸிஹ்மனுடைய அநுக்ரஹத்தால் நசித்து விட்டன. பகவானை
த்யாந மாத்ரம் செய்யுமவர்களுக்கு மோக்ஷம் கரஸ்தம் என்றால்
பகவானிடத்தில் தீர்க்கமான மநஸ்ஸுடையவர்களுக்கு பாப
க்ஷயம் உண்டாவதற்கு ஸந்தேஹம் என்ன? இப்படி பகவத்யாநத்
தால் பாபங்கள் நீங்கிவிடவே ஜகத்குருவான ஸர்வேச்வரன் ஸர்வ
வ்யாபியாய் இருந்தாலும் கருடனுடைய பரிசுத்தமான உள்ளத்தி
லேயே இருந்து விட்டார்.

இப்படி ஸர்வாதாரமாயும் விகாரமற்றவனுமான விஷ்ணுவை
மனத்தில் தரித்து தவத்தில் ஊன்றி நிற்கும் கருடனைச் சுமக்க
சக்தியில்லாமல் மலைகளும் காடுகளும் கூடின பூமி நடுங்கிற்று;
ஸமுத்ரங்களும் கலங்கின; திக்குக்களின் எல்லைகளும் விளங்கா
மல் போயின. இந்த்ரன் முதலிய தேவர்கள் எல்லோரும் அவரு
டைய தபஸ்ஸின் பெருமையினால் மஹத்தரமான பயத்தை
யடைந்தார்கள். லோகங்கள் ஸுகத்தை யடையவில்லை. பிறகு
தேவேந்த்ரன் பயந்த மநஸ்ஸுடையவனாய்ச் சிந்தைப்பட்டுக்
கொண்டே தன்னை நாற்புறமும் சூழ்ந்த அப்ஸரஸுகளைப்பார்
த்து அவர்களில் கர்வத்துடன் கூடின ஊர்வசியை நோக்கி,
" ஊர்வசி! தேவகார்யார்த்தமாக நிர்மிக்கப்பட்டவளே! மஹா
பாக்யவதி! எவ்விடத்தில் கருடன் தவம் செய்கிறாரோ அவ்விடத்



திற்கு உடனே போ; இது என்னுடைய ஆஜ்ஞை. நல்ல வ்ருதங்
களைச் செய்தவளே! உன்னுடைய விதம் விதமான விளையாட்
டால் அவருடைய தபஸ்ஸைக் கலைத்துவிடு. சந்த்ரிகையைப்
போன்ற உன்னுடைய முகவொளியை நினைத்து ப்ரஹ்மாவும்
விஷ்ணுவும் விஸ்மயத்தை யடைந்து மோஹித்து நின்றார்கள்
என்றால், மற்ற ஸாமாந்ய ஜநங்களைப்பற்றிச் சொல்லவும் வேண்
டுமோ?" என்றான். இப்படித் தேவேந்த்ரனால் ஏவப்பட்ட
ஊர்வசி, நாற்றுக்கணக்கான தருணிகளைக்கூட்டிக்கொண்டு ஒரு
முஹூர்த்தத்தில் சென்று, தபஸ்ஸில் ஆழ்ந்த மனத்தனாய்
நிற்கும் மஹாத்மாவான கருடனுடைய ஸமீபத்தில் வந்து
மதுரமான வார்த்தைகளைச் சொல்லத் தொடங்கினாள். "பக்ஷி
ராஜனே! என்னைப்பாரும். ஸ்வர்க்கத்திலிருந்து வந்திருக்கிறேன்.
தேவேந்த்ரனால் அனுப்பப்பட்டவள். ஊர்வசி என்று பெயர்
பெற்றவள். ஒரு க்ஷணத்தில் அல்லது அரை க்ஷணத்தில் சரா
சரங்கள் அனைத்தையும் தன்வசமாகச் செய்யவல்லவள் என்ற
லோக ப்ரஸித்தியுடையவள். என் கண்ணுக்கு இலக்கானவர்,
பந்துக்களை யெல்லாம் விட்டவராகி முமுக்ஷுக்களைப் போல்
ஸுகாந்தரங்களில் விருப்பமடையார். ரூபவதிகளான ஸ்த்ரீகளைத்
தவிர்த்து லோகத்தில் வேறே ப்ரஹ்மம் இல்லை. பரமாநந்தத்
திற்குக் காரணமாய், ப்ரஜா ஸ்ருஷ்டிக்கு ஹேதுவான ஸ்த்ரீ
களை ஏன் ப்ரஹ்மம் என்னக்கூடாது? மற்றொரு ப்ரஹ்மம்
உண்டு என்பது வ்யர்த்தம். உலகத்தில் மூடராய்ப் பிறந்தவர்
களுக்குத்தான் வேறே ப்ரஹ்மம் உண்டு என்று சொல்லப்படு
கிறது. பகுத்தறிவுள்ள ஜநங்கள் உத்க்ருஷ்டமான அம்ருதத்தை
அறிகிறார்கள். எவன் ஸ்த்ரீயான அம்ருதத்தை விட்டு வேறொன்று
இருப்பதாக நினைக்கிறானோ அவன் கையில் கிடைத்த பொருளை
விட்டுப் பூமியில் மறைத்து வைத்திருக்கிற பொருளைத் தேடும்
மூடன். ஐயோ! இது என்ன பெரிய கஷ்டம்! இவ்வுலகம்
விபரீதமாக இருக்கிறது. ஸுகத்தையும் துக்கத்தையும் தெரிந்து
கொள்ளாமல் துக்கத்திலேயே ப்ரவ்ருத்திக்கிறது. எவன் ப்ரத்
யக்ஷமாக இருக்கிற ரூப ஸம்பந்நையான ஸ்த்ரீயை வர்ஜித்து
வேறொன்றை இச்சிக்கின்றானோ, அவன் கையிலுள்ள ஜலத்தை
விட்டு மேகத்திலிருக்கிற ஜலத்தை விரும்புகிறவன்" என்று இப்
படி ஆதரமான வார்த்தைகளினால் அநேகவிதமாய்க் கபயபரிஷி

புத்ரனை கருடனை மயக்கினள். அஸத்தாயும், அபார்த்தகமாயும், அநர்த்தமாயும், பரலோகதூஷகமாயும், கேட்பவர்களுக்குப் பாப ஜநகமாயும், வேதமார்க்க தூஷகமாயுமான இவ்வார்த்தைகளைக் கேட்டுப் பகவானிடத்தில் செலுத்திய மனத்தையுடையவரான கருடன் ஒன்றும் சொல்லவில்லை. சிறிது நேரம் பொறுத்து இஷ்டமில்லாமல் தயையினால் பின்வருமாறு பதில்சொன்னார்:—"கெட்ட ஸ்வபாவமுள்ளவளே! உன் எண்ணம் பலிக்காது. புறப்பட்டு போ. எப்படி தாரை தாரையாய்க் கொட்டும் மழையால் அடிபட்டபோதிலும் மலைகள் ஒரு வித பீடையையும் அடைகிறதில்லையோ, அப்படியே பகவானிடத்தில் மனத்தைச் செலுத்தியவர்கள் துக்கத்தை அடையார். பகவானிடத்தில் ஆசையை வளர்த்தவர்களுடைய ஸத்வ குண ப்ரபாவமெங்கே, ஒன்றும் தெரியாதவர்களுக்கு ப்ரீதியைத் தரக்கூடிய ஸ்த்ரீகளின் சேர்க்கை யெங்கே? அத்யந்தம் திமிரை யுடையவர்களாய்த் தேகத்தில் ஸிலம்பம் பழகுவதினால் ஸுகத்தைப் பெறவேண்டும் என்கிற ஆசையுடையவர்களாய் ப்ரமத்தையுடைய புருஷர்களுக்கு ப்ரஹ்மரும் ஸுகமாகத் தோற்றுகிறது. சர்மம், ரக்தம், மாம்ஸம், எலும்பு முதலிய வஸ்துக்களின் சேர்க்கையாகிற தேஹத்தில் ஆசை வைக்கிறவன் மூடன்; அவன் நரகத்திலும் ப்ரீதி யுடையவனாகவே இருப்பான். ஸ்த்ரீகள் சிலரிடத்தில் ஸ்நேகம் செய்கிறார்கள்; சிலரை ப்ரமிக்கும்படி செய்கிறார்கள்; அவர்களுக்கு எதனிலும் ப்ரீதியில்லை; ஒன்றிலும் நிச்சயமு மில்லை" என்றிப்படி கச்யபரிஷி புத்ரனை பக்ஷிராஜன் ஊர்வசியைப் பயப்படுத்திவிட்டு மறுபடியும் பகவானுடைய திருவடிகளை த்யாநம் செய்துகொண்டு அசஞ்சலமாயிருந்தார்.

(இன்னும் வரும்.)

சேட்லூர் நரஸிம்ஹாசார்யர்.

# ஸ்ரீ அஹோபில மடத்து ஶிஷ்ய ஸபையும் அதன் கர்த்தவ்யங்களும்.

## க - சிஷ்ய ஸபை.

இந்தப்பெயர் நம் ஸபைக்கு இயன்றதா? இவ்வெண்ணம் பலருக்கு உதித்திருக்கலாம். ஸபையானது சிஷ்ய வ்ருத்தியிலிருக்கப்பட்டவர்கள் ஸமூஹம். ஆனால் இவர்கள் மடத்தின் சிஷ்யர்களெனக் கூடுமோ? 'மடஶ்சாத்ராதிநிலய:' என்கிறபடி மடமென்றால் சிஷ்யர்கள் முதலானவர்கள் வஸிக்கும் ஸ்தாநம் என்றாகிறது. சாத்ரசப்தம் சிஷ்யர்களையும், 'ஆதி' என்னும் சப்தத்தால் ஸசாத்ரசப்தம் ஸந்யாஸியாகிற ஆசார்யனையும் மடத்தில்வஸிக்கிறவர்களாகக் குறிக்கப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட வாஸஸ்தாநத்துக்கு ஶிஷ்யர்கள் உண்டாவென்னும் பக்ஷத்தில், அசேதநமாகிற ஒரு கட்டிடத்திற்கு, ஶிஷ்யர்கள் உண்டாவது அஸம்பாவிதம் என்றே நிச்சயிக்கவேண்டும். வழக்கத்தில் மடம் என்னும் சப்தம் தத்ஸம்பந்தமான கட்டிடங்களைச் சுட்டிக் காட்டுவதுண்டு. ஆனால் அஹோபில மடம் என்றால் ஒரு ஸம்ப்ரதாயத்தை அநுஸரிக்கின்ற ஜநஸமூஹத்தையும் குறிக்கிறது. மடத்து ஸ்வாமி என்பதால் இந்த ஸம்ப்ரதாயத்தைக் கொண்டாடுகிற ஜநங்கள் ஆஶ்ரயிக்கத்தகுந்த ஆசார்யன் என்று அர்த்தம் கொள்ளப்படுகிறது. இப்படி யோசிக்குங்கால் ஆசார்யனுக்கு ஶிஷ்யனுண்டேயன்றி, ஸம்ப்ரதாய ஸமூஹத்துக்கு ஶிஷ்யர்கள் உண்டென்று எப்படிச் சொல்லக்கூடும்? ஆனால் மடத்து ஶிஷ்யர்கள் என்று உலக வழக்கிருக்கிறதே என்றால், அந்த சப்த ப்ரயோகத்தை விவேசநம் செய்து பார்க்காமல் உலக வழக்கு உண்டாயிருப்பதாகக் கொள்ளவேண்டும். மேலும் மடத்தில் வந்திருக்கும் ஒவ்வொரு ஸ்வாமிக்கும் ஸர்வ ஸம்ப்ரதாயஸ்தர்களும் சிஷ்யர்களாக ஆவது ஒவ்வாது. ஆதலால் ஒவ்வொரு ஸ்வாமியும் ஸம்ப்ரதாயஸ்தர் அனைவரையும் சிஷ்யராகப் பாவிக்க இடமில்லை. ஆனபடியால் மடத்து ஶிஷ்யர்கள் என்றால் அர்த்தம் ஒருவிதமாயும் யுக்தி

யுக்தமாகமாட்டாது. அர்த்த விசாரத்தைப் பண்ணுக சிலர் ஓர்
ஸம்ப்ரதாயத்தைச் சேர்ந்தவரை இந்த விதமாய் வ்யவஹரிப்ப
தால், நாம் அந்த வ்யவஹாரத்தை ஒப்புக்கொள்ளுதல் வேண்டு
மோ? ஆகிலும் இந்தப் பெயர் நம் ஸபைக்குப் பொருந்தக்கூடும்.
இவ் விஷயத்தைப் பின்னுல் விசாரிப்போம்.

ஆதுநிகர்களான நம் ஸம்ப்ரதாயஸ்தர் மடத்தில் ஆஸ்தான
நிர்வாஹம் செய்த ஸ்வாமிகளுடைய அந்வயத்தை ஸர்வப்ரகாரத்
தாலும் பெற்றவர் தான் ஆஸ்தாந நிர்வாஹத்திற்கு அர்ஹர்களா
வர் என்கிற ஒரு அபிப்ராயத்தை த்ருடமாய்க் கொண்டிருக்கி
ருர்கள். பெரும்பாக்கத்தில் 1899-ம் ஞூ ஜனவரிமீ - ல் கூடிய
ஸிஷ்யர்களுடைய ஸங்கத்தில் இந்த விதமான யோசனையை
உ. வே. வித்வான் கோடைவாசல் ராமப்ராசார்யர் ஊர்ஜிதப்
படுத்தினர். மஹா ஸங்கத்தில் சர்ச்சைக்கு இடமிராது. இந்த
விஷயத்தில் வித்வான்கள் மாத்ரம் ஸம்மர்சிகளாகத் தக்கவர்கள்.
ஸாமாந்ய ஜநங்கள் அதிகாரிகளல்லர். நமது ஸம்ப்ரதாயத்தின்
பூர்வாசார்யர்களுடைய அந்வய க்ரமங்களைப்பற்றிச் சற்று யோசிப்
பது இவ்விடத்தில் உசிதமாகத் தோன்றுகிறது. மடத்தில் எழுந்
தருளியிருந்த ஐந்தாவது ஸ்வாமிக்கு, தத்பூர்வம் மடாதிபதிகளா
யிருந்த ஒரு ஸ்வாமியினுடைய அந்வயமும் இல்லையென்பது ப்ர
வித்தம். நாலாவது ஸ்வாமிக்கு ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹன் ஸ்வப்நம்
ஸாதித்தபடி ஆஸ்தாநத்தை அந்த ஸ்வாமி ஐந்தாவது ஸ்வா
மிக்குத் தந்தனர். ஆனாலும் ஸந்நிதி பரம்பரையில் ஸம்ப்ரதாய
பேதம் உண்டாகாதபடிக்கு, நாலாம் ஸ்வாமி ஐந்தாம் ஸ்வா
மிக்கு ஆஸ்தாநத்தைக் கொடுத்தபோது, அவருக்குப் பிறகு ஸ்ரீ நிக
மாந்த மஹாதேசிகன் ஸம்ப்ரதாயஸ்தரான ஸ்வாமியினிடம் ஆஸ்
தாநத்தை ஒப்புவிக்கும்படி நியமித்தனரென்று சொல்லப்படு
கிறது. இந்த நியமநத்தை அநுஸரித்தே ஐந்தாம் ஸ்வாமி தமது
நிர்யாண காலத்தில் தத்காலம் ஜ்ஞாந வைராக்யாதி குணங்களில்
உத்க்ருஷ்டராய் எழுந்தருளியிருந்த ஸ்ரீ ஷஷ்டபராங்குச ஸ்வாமி
யினிடம் ஆஸ்தாநம் வந்து சேரும்படி உபகரித்துவிட்டுத் திருநாட்
டுக்கு எழுந்தருளினர். இந்த பராங்குச ஸ்வாமிக்கு ஆசார்யர்
களாய்ப் போந்தவர்கள், த்ருதீய பராங்குச ஸ்வாமியும், நடாதூர்
நரஸிம்ஹாசார்யரும் வரதாசார்யருமென ஏற்படுகிறது. ஸமாஸ்ர
யண ஆசார்யன் அந்த பராங்குச ஸ்வாமி தனியனால் ஏற்பட



வில்லை. ஆனால் அந்த ஸ்வாமி ப்ரஸித்தமான ஆசார்ய வம்சத்தில் சேர்ந்தவரானமையால் அவருடைய ஸமாஸ்ரயண ஆசார்யனும் அவருடைய குலத்திலேயே இருந்திருக்கக்கூடும். ஆஸ்தாநத்தில் எழுந்தருளியிருந்த ஒன்பதாவது ஸ்வாமி தனியனால் அந்த ஸ்வாமிக்கு நடாதூர் நரஸிம்ஹாசார்யர் வரதாசார்யர் ஷஷ்டபராங்குச ஸ்வாமி இவர்கள் அந்வயம் ஏற்படுகிறது. அந்தத் தனியனிலேயே அந்த ஸ்வாமிக்கு மடத்திலேயே ஸமாஸ்ரயணம் இல்லையென்று தெரிகிறது. பத்தாவது ஸ்வாமிக்கு நடாதூர் வரதாசார்யர் ஸ்வாமி ஸம்பந்தம் ஒன்று தான் அவர் தனியனால் ஏற்படுகிறது. இப்படி முன் காலத்தில் ஸமுதாயமாக ஜ்ஞாதாக்களைப் பார்த்து ஆசார்யர்களாய் மடத்தில் வரித்தார்களென்று ஏற்படுகிறது. அவர்களுடைய பூர்வாசார்யர்கள் மடத்து ஸ்வாமிகளாகவே இருக்கவேண்டுமென்று நியமமிருந்ததில்லை.

மடத்தில் இருந்த ஸ்வாமிகளாலேயே யாவதந்வயங்களையும் அடைந்த ஸ்வாமிகள் ஆஸ்தாநார்ஹர்களாய்க் கிடைக்கும் பக்ஷத்தில், அந்ய ஸ்வாமிகளை ஆஸ்தாநத்துக்கு எழுந்தருளப் பண்ணுவது உசிதமன்று என்று ஒப்புக்கொள்ளக் கூடும். இந்த ரூபமான ஔசித்யத்தை நோக்கியே பிற்காலங்களில் ஆஸ்தாந நிர்வாஹம் செய்த ஸ்வாமிகளுக்கு ஸர்வாந்வயங்களும் மடத்து ஸ்வாமிகளிடமே ஸம்பவித்திருந்தது. ஆனால் மடத்திற்கு விசேஷமாகப் பொருள் சேரவே, இப்படி ஸர்வாந்வயமும் அடைந்த ஸ்வாமிகளுள் ஸ்ரேஷ்டர்களே எப்போதும் ஆஸ்தாநத்தை வஹித்தாரென்பதற்கு இடமில்லாமல் போய்விட்டது. 'பொருளில்லார்க் கிவ்வுலகில்லை' என்றார் திருவள்ளுவர். இவ்வுலகை நன்கநுபவிக்க எண்ணுவோர்க்கு அர்த்தத்தில் பற்றை விலக்க வொண்ணுது. வஜ்ரம் ஸ்வாமி ஆஸ்தாநத்தில் சில மாஸம் எழுந்தருளியிருந்த பிறகு அவர் அதைவிட்டு வெளிப்பட்டு ஸ்ரீநிவாஸ வேதாந்த ஸ்வாமியினிடம் மடத்தைக் கொடுத்தார். அதற்கு முன் இம்மடத்தில் அந்த ரூபமான ஆசாரம் கேட்டிலோம். ஆனால் ஒன்று செவியுற்றிருக்கிறோம்: பகவத்விஷயத்தில் ஜ்ஞாதாவாயிருந்த ஸ்ரீ கேசவ சடகோப ஸ்வாமி என்பவர் மடத்தில் எழுந்தருளி யிருந்ததாகவும், திருவள்ளூரில் சில வித்வான்கள் அவர் ஸ்ரீ பாஷ்ய காலக்ஷேபம் ஸாதிக்கத் திறமையற்ற காரணத்தால் ஆஸ்தாநத்திலிருக்கக் கூடாதென்று ஆக்ஷேபிக்க, அந்த ஸ்வாமி

ஆஸ்தானத்தை விட்டுவிட்டுத் திருநாராயணபுரத்துக்கு எழுந்தருளிவிட்டதாகவும் சொல்லக் கேட்டோம். இதில் வாஸ்தவம் எவ்வளவு இருந்தபோதிலும், அந்த ஸ்வாமி ஜ்ஞாந ஸங்கோசத்தால் ஆஸ்தானத்தை விட்டதாக ஏற்படுமேயன்றி வேறில்லை. மஞ்ஜரம் ஸ்வாமி ஜ்ஞாநாதிகரா யிருந்தபோதிலும், சரீர தார்ட்யக் குறைவால் ஆஸ்தானத்தை விட்டதாகக் காரணம் சொல்லப்படுகிறது. ஆனால் அந்தக் காரணம் பிற்காலத்தில் ஜ்ஞாந ஸங்கோசமோ, சரீர அசக்தியோ, இரண்டுந் தானோ ஸஹிக்கக் கூடியிருந்த சில ஸ்வாமிகள் ஆஸ்தானத்தை விட்டகலப் போதாமல் போய்விட்டது.

ஸ்ரீ ஸ்ரீநிவாஸ வேதாந்த ஸ்வாமிக்குப் பிறகு பிருஹூர் ஸ்ரீரங்கநாத ஸ்வாமியை ஆஸ்தானத்திற்கென்று வரவழைத்துப் பின் அவர் வெளிப்பட்ட வ்ருத்தாந்தம் யாவரும் கேட்டிருக்கலாம். ஸ்ரீ சடகோப ஸ்வாமி காலம் முதல் இந்த மடத்துக்கு ஸ்வாமிகள் எழுந்தருளின ப்ரகாரங்கள் யாவர்க்கும் தெரிந்த விஷயம். அதை இவ்விடம் விஸ்தரிப்பதில் ப்ரயோஜனமில்லை. ஏறக்குறைய சென்ற 80-ஸம்வத்ஸரங்களாய் ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்மன் ஸம்பந்தமான ஆஸ்தானத்துக்கு ஸர்வப்ரகாரத்தாலும் தகுந்த ஸ்வாமிகளை எழுந்தருளவேண்டுமென்கிற விஷயத்தில், சிற்சில காலங்களில் ப்ரபல ப்ரதிபந்தகமாய் விட்டது. இதைப்பற்றித் தான் ஜ்ஞாதாக்களாயும் ஸம்ப்ரதாயத்தை விட்டு விலக இஷ்டமில்லாதவர்களாயுமிருந்த அழகுசெய்யூர், பிருஹூர், முதலான அக்ரஹாரவாஸிகள், ஆஸ்தான நிர்வாஹகர்களிடமே ஆசார்ய வரணத்தை விலக்கினார்கள். இந்த ஸங்க்லேசம் மேன்மேலும் பலத்துக்கொண்டு வந்து, ஸ்ரீ சடகோப ஸ்வாமி காலத்திலும், அவர் திருத்தம்பிகள் காலத்திலும், தத்காலத்திலும் எண்ணக்கூடாத விஸ்தாரத்தை யடைந்துவிட்டது. இருபது முப்பது வர்ஷங்களுக்கு முன், ஆஸ்தானத்திலிருந்த ஸ்வாமியினிடம் ஈச்வராஸக்தயமாய் விச்வாஸம் செய்ய அசக்தர்களாயிருந்த பல ஸம்ப்ரதாயஸ்தர், ப்ராயேண அந்ய ஸம்ப்ரதாய ப்ரவிஷ்டரானார்கள். ஆனால் சென்ற இருபது வர்ஷங்களாக இந்த ஸ்திதியை அடைந்தவர்கள், ஸம்ப்ரதாயத்திலேயே ஆசார்யகம் செய்ய யோக்யர்களான ஸ்வாமிகள் இருப்பதைத் தெரிந்துகொண்டு தங்கள் ஆத்மோஜ்ஜீவனார்த்தமாக அவர்களிடம் ஆச்ரயணத்தைத் தேடிக் கொள்கின்றார்கள். இப்படி, ஸம்ப்ரதாயத்தி லிருப்



பவரெல்லாரும் மடத்து சிஷ்யர்களெனப் படலாம். அப்போது இந்த சப்தத்திற்கு அர்த்தம் ஏற்படுகிறபடியாவது: — மடத்து ஸம்ப்ரதாயத்தில் சிஷ்ய வ்ருத்தியைப் பரிபாலிக்கிறவர்கள் என்பதாம். எல்லா ஸம்ப்ரதாயங்களிலும், ஆசார்யர்கள் ஜீவதசையிலிருக்கும் காலம் வரையில் யாவரும் சிஷ்ய வ்ருத்தியை அநுஷ்டிக்க வேண்டியது ஆவச்யகமே. ஜ்ஞாநப்ரதனை ஆசார்யனும், உபாயாநுஷ்டாந ஸம்பந்தமாய் உதவும் ஆசார்யனும், ப்ராயேண யாவர்க்கும் ஸ்வகுலத்திலே அகப்படுவதில்லை. ஆனபடியால் ஒவ்வோர் ஸம்ப்ரதாயத்தை ஆச்ரயித்து, சிஷ்ய வ்ருத்தியி லிருப்போர்க்குத் தத்ஸம்ப்ரதாய சிஷ்யர்களெனப் பொதுவாக ப்ரயோகம் ஏற்படலாம். இப்படிக்கன்றி மடத்து சிஷ்யர்கள் என்பதற்கு அர்த்தம் வேறு விதமாக ஏற்படாது.

## உ - ஆசார்ய வரணம்.

மடத்தில் எழுந்தருளியிருந்த ஸ்வாமிகளுடைய சிஷ்யர்களாகாதவரும், முன்னே மடத்தில் ஸ்வாமிகளானார்கள் என்று உரைத்தோம். இது கேவலம் ஜ்ஞாந ப்ரதாநமான மடமானதால் ஜ்ஞாதாக்களே இதற்கு ஸ்வாமிகளாகவேண்டுமென்று, அவர்களையே தேடி ஆஸ்தானத்தைக் கொடுத்துக்கொண்டு வந்தனர். ஜ்ஞாதாக்கள் ஸர்வாங்வயமும் மடத்து ஸ்வாமிகளிடமே பெற்றவருள் இருந்தாரேயாகில், அவரை ஸ்வாமியாக வரித்தார்கள். அதுவும் உசிதமே. இப்படி ஸம்ப்ரதாயத்துக்கு ஆசார்யனை வரிப்பதில் சாஸ்த்ர ஸம்மதம் எப்படி இருக்கிறது? ஆசார்ய வரணம் சிஷ்யாதீனமா? அல்லது அந்யாதீனமாக இருக்கக்கூடுமோ? இதை விஸ்தாரமாக விசாரிக்கவேண்டும். நசிகேதஸ் ம்ருத்யுவினிடம் தன் பிதாவால் அனுப்பப்பட்ட பிறகு, ம்ருத்யுவால் வரங்கள் பெற்று, ஓர் வரத்தால் தேஹாவஸாநே ஜீவன் இருக்கின்றானா இல்லையா என்னும் ஜ்ஞானத்தை அபேக்ஷிப்பவராய் 'ஏதத்வித்யாமநுசிஷ்டஸ்த்வயாஹம்' (உம்மால் ஜ்ஞாபிக்கப் பட்டவனாய் இதை அறிகின்றேன்) என்று சொல்லி, அவரை ஆசார்யராக வரித்தார். அந்த ஜ்ஞானத்தை உபதேசிக்க ம்ருத்யு ஒப்புக்கொள்ளாமல் வேறொன்றை வரமாகக் கேட்கும்படி சொல்லியும், நசிகேதஸ், 'வக்தா சாஸ்ய த்வாத்ருகந்யோ ந லப்ய:' (இதை உபதேசிக்க உம்மைப்போல் மற்றொருவர் கிடைக்கார்) என்றுசொல்லி அந்த

ஜ்ஞாநத்தையே ம்ருத்யுவால் உபதேசிக்கப் பெற்றார் என்பதால், அபேக்ஷித்த ஜ்ஞாநோபதேசத்தில் ஆசார்யனிடம் அதிகாரம் இருக்கிறதென்கிற விச்வாஸத்தையிட்டன்றோ நசிகேதஸ் ம்ருத்யுவை ஆசார்யனாக வரித்தார் என்றறிகிறது.

ப்ரச்நோபநிஷத் ஆரம்பத்தில், ஸுகேசா முதலான ஆறு பெயர் ப்ருஹ்ம பரர்களாயும் ப்ருஹ்ம நிஷ்டர்களாயும் இருந்ததாகவும், அவர்கள்

'𑌪𑌰𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌨𑍍𑌵𑍇𑌷𑌮𑌾𑌣𑌾𑌃 𑌏𑌷 𑌹 𑌵𑍈 𑌤𑌤𑍍𑌸𑌰𑍍𑌵𑌂 𑌵𑌕𑍍𑌷𑍍𑌯𑌤𑍀𑌤𑌿 𑌤𑍇 𑌹 𑌸𑌮𑌿𑌤𑍍𑌪𑌾𑌣𑌯𑍋 𑌭𑌗𑌵𑌨𑍍𑌤𑌂 𑌪𑌿𑌪𑍍𑌪𑌲𑌾𑌦𑌮𑍁𑌪𑌸𑌨𑍍𑌨𑌾𑌃'

[பரம் ப்ருஹ்மத்தைத் தேடியவர்களாய் அதாவது அறிய இச்சித்தவர்களாய்க்கொண்டு, இந்த பிப்பலாதர் இவை யெல்லாம் உபதேசிப்பர் என்று, ஸமித்தைக் கையிலெடுத்துக்கொண்டு பூஜ்யரான பிப்பலாதரெனும் ஆசார்யரிடம் சென்றார்கள்] என்றும் வெளியாகிறது. அந்த ஆசார்யன் அவர்களை ஒரு வருஷம் வரையில் தபஸ், ப்ருஹ்மசர்யம், ச்ரத்தை முதலானவைகளுடன் காக்கச்செய்து, அவர்கள் கேட்ட விஷயங்களைக் குறித்து ஜ்ஞாநோபதேசம் செய்தார். இதனாலும் ஆசார்யனிடம் அபேக்ஷிக்கப்பட்ட ஜ்ஞாநம் உண்டென்று விச்வஸித்தவர்கள் ஸ்வயமேவ ஆசார்ய வரணம் பண்ணினார்களென்று ஏற்படுகிறது.

இப்படி ப்ரச்நை செய்தவருள் ஆறாவது ப்ரச்நை செய்த பாரத்வாஜ குலத்தைச் சேர்ந்த ஸுகேசா வென்பவர், பிப்பலாதரை நோக்கி,

'𑌭𑌗𑌵𑌨𑍍 𑌹𑌿𑌰𑌣𑍍𑌯𑌨𑌾𑌭𑌃 𑌕𑍌𑌸𑌲𑍍𑌯𑍋 𑌰𑌾𑌜𑌪𑍁𑌤𑍍𑌰𑍋 𑌮𑌾𑌮𑍁𑌪𑍇𑌤𑍍𑌯𑍈𑌤𑌂 𑌪𑍍𑌰𑌶𑍍𑌨𑌮𑌪𑍃𑌚𑍍𑌛𑌤 । 𑌷𑍋𑌡𑌶𑌕𑌲𑌂 𑌭𑌾𑌰𑌦𑍍𑌵𑌾𑌜 𑌪𑍁𑌰𑍁𑌷𑌂 𑌵𑍇𑌤𑍍𑌥 । 𑌤𑌮𑌹𑌂 𑌕𑍁𑌮𑌾𑌰𑌮𑌬𑍍𑌰𑍁𑌵𑌂 𑌨𑌾𑌹𑌮𑌿𑌮𑌂 𑌵𑍇𑌦, 𑌯𑌦𑍍𑌯𑌹𑌮𑌿𑌮𑌮𑌵𑍇𑌦𑌿𑌷𑌂, 𑌕𑌥𑌂 𑌤𑍇 𑌨𑌾𑌵𑌕𑍍𑌷𑍍𑌯𑌮𑌿𑌤𑌿, 𑌸𑌮𑍂𑌲𑍋 𑌵𑌾 𑌏𑌷 𑌪𑌰𑌿𑌶𑍁𑌷𑍍𑌯𑌤𑌿 𑌯𑍋𑌽𑌨𑍃𑌤𑌮𑌭𑌿𑌵𑌦𑌤𑌿, 𑌤𑌸𑍍𑌮𑌾𑌨𑍍𑌨𑌾𑌰𑍍𑌹𑌾𑌮𑍍𑌯𑌨𑍃𑌤𑌂 𑌵𑌕𑍍𑌤𑍁𑌮𑍍, 𑌸 𑌤𑍂𑌷𑍍𑌣𑍀𑌂 𑌰𑌥𑌮𑌾𑌰𑍁𑌹𑍍𑌯 𑌪𑍍𑌰𑌵𑌵𑍍𑌰𑌾𑌜 । 𑌤𑌂 𑌤𑍍𑌵𑌾 𑌪𑍃𑌚𑍍𑌛𑌾𑌮𑌿, 𑌕𑍍𑌵𑌾𑌸𑍌 𑌪𑍁𑌰𑍁𑌷 𑌇𑌤𑌿' ॥

[பகவந்! கோஸல தேசத்து ராஜபுத்ரனான ஹிரண்யநாப னென்பவர் என்னிடம் வந்து இந்தக் கேள்வியைக் கேட்டார். ஓ பாரத்வாஜ! பதினாறு கலைகளுடன் கூடிய புருஷனை அறிவீரா (என்று) நான் அந்தக் குமாரனுக்குச் சொன்னேன். நான் இவனை (நீ கேட்ட புருஷனை) அறியேன். இதனை யானறிந்தேனாகில் ஏன் உமக்குச் சொல்ல மாட்டேன்? எவன் பொய் சொல்லுகிறானோ அவன் ஸமூலமாக நாசமாய் விடுவன். ஆகலால் பொய்சொல்ல நான் அர்ஹனல்லன். (என்றிப்படிச் சொல்லவே) அந்த ராஜகுமாரன் பேசாமல் ரதமேறிப் போய்விட்டான். அந்தப் புருஷனைப்பற்றி உம்மைக் கேட்கிறேன் அவன் எங்கே?]



இதனால் சிஷ்யன் ஆசார்யனை வரிக்கச் செல்வதும், ஆசார்யனாக எண்ணிச் சென்றவன், தத்விஷயத்தில் அநர்ஹனானால் வரிக்காமல் திரும்புவதும், யோக்யதை இல்லாதவன் பொய் சொல்லி ஆசார்யனாக விரும்பினால் ஆத்ம நாசத்தை யடைவதும் சாஸ்திரத்தை நம்புவோர்க்கு விசதமாகும்.

முண்டகோபநிஷத்தின் ஆரம்பத்தில்,

'𑌶𑍌𑌨𑌕𑍋 𑌹 𑌵𑍈 𑌮𑌹𑌾𑌶𑌾𑌲𑍋𑌽𑌙𑍍𑌗𑌿𑌰𑌸𑌂 𑌵𑌿𑌧𑌿𑌵𑌦𑍁𑌪𑌸𑌨𑍍𑌨𑌃 𑌪𑌪𑍍𑌰𑌚𑍍𑌛 । 𑌕𑌸𑍍𑌮𑌿𑌨𑍍𑌨𑍁 𑌭𑌗𑌵𑍋 𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌤𑍇 𑌸𑌰𑍍𑌵𑌮𑌿𑌦𑌂 𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌤𑌂 𑌭𑌵𑌤𑍀𑌤𑌿' ॥

[மஹா க்ருஹஸ்தரான சௌநகர் அங்கிரஸை நியம ப்ரகாரம் நெருங்கிக் கேட்டார், பகவன் எதை அறிந்தால் இதெல்லாம் அறிந்ததாகுமென்று.]

இதனால் ஜ்ஞாதாவான ஆசார்யனை சிஷ்யன் நெருங்கிக்கேட்க வேண்டுமென்றறிகிறது. ஆசார்ய வரணம் சிஷ்யாதீநம். இப்படி வரிக்கப்பட்ட ஆசார்யனுடைய அர்ஹதையை ஆவிஷ்கரிக்கும் பொருட்டன்றோ அங்கிரஸ்ஸினுடைய குருபரம்பரையையும் அவர் பாரத்வாஜ சிஷ்யரென்பதையும் உபநிஷத் காட்டுகின்றது.

அன்றியும் இந்த உபநிஷத்தின் இரண்டாம் கண்டத்தில்

'𑌪𑌰𑍀𑌕𑍍𑌷𑍍𑌯 𑌲𑍋𑌕𑌾𑌨𑍍 𑌕𑌰𑍍𑌮𑌚𑌿𑌤𑌾𑌨𑍍 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑍋, 𑌨𑌿𑌰𑍍𑌵𑍇𑌦𑌮𑌾𑌯𑌾𑌨𑍍𑌨𑌾𑌸𑍍𑌤𑍍𑌯𑌕𑍃𑌤𑌃 𑌕𑍃𑌤𑍇𑌨 । 𑌤𑌦𑍍𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌰𑍍𑌥𑌂 𑌸 𑌗𑍁𑌰𑍁𑌮𑍇𑌵𑌾𑌭𑌿𑌗𑌚𑍍𑌛𑍇𑌤𑍍, 𑌸𑌮𑌿𑌤𑍍𑌪𑌾𑌣𑌿𑌃, 𑌶𑍍𑌰𑍋𑌤𑍍𑌰𑌿𑌯𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌨𑌿𑌷𑍍𑌠𑌮𑍍' ॥

[ப்ராஹ்மணன் கர்மத்தால் ஸம்பாதிக்கக்கூடிய லோகங்களை நிரூபித்துப் பார்த்து வைராக்யத்தை அடைய வேண்டும். அக்ருதனான பரமபுருஷன் கர்மத்தால் ஸித்திக்கமாட்டானென்று. அப்படிப்பட்ட புருஷனை அறிந்துகொள்ளும் பொருட்டு, அந்த ப்ராஹ்மணன் ஸமித்தைக் கையில்கொண்டு, ச்ரோத்ரியனையும் (அத்யயநத்தால் வேதவேதாந்தங்களை அர்த்தத்துடன் அறிந்தவனையும்) ப்ரஹ்ம ஸாக்ஷாத்காரமுள்ளவனையு மிருக்கிற குருவை நோக்கிச் செல்லக்கடவன்.]

இதனால் ஆசார்யன் தகுந்த குணங்களோடு கூடினவனென்று அறிந்த பின் அப்படிப்பட்ட ஆசார்யனை வைராக்யம் பிறந்த சிஷ்யன் வரிக்கவேண்டுமென்றாகிறது.

சாந்தோக்யோபநிஷத் நான்காவது ப்ரபாடகத்தில் பௌத்ராயணரென்கிற ஜாநச்ருதியென்னும் ராஜா ஹம்ஸங்களுடைய வாக்யங்களால் ரைக்வரென்பவரைத் தனக்குத் தகுந்த ஆசார்யனாகத் தெரிந்துகொண்டு, அவரிருப்பிடத்தைத் தன் க்ஷத்தாவால் (தேர்ப்பாகன்) அறிந்துகொண்டு, தான் அவரிடம் சென்று "அநு ம ஏதாம் பகவோ தேவதாம் சாதி யாம் தேவதாமுபாஸ்ஸ இதி" "ஓ பகவன்! எந்த தேவதையை நீர் உபாஸிக்கிறீரோ அந்த தேவதையை எனக்கு உபதேசம் செய்யும்," என்று இதனாலும் ஆசார்யாந்வேஷணமும், வரணமும் சிஷ்யனைச் சேர்ந்ததென்று முடிகிறது. இப்படி உபதேசிக்கப்பட்ட வித்யைக்கு ஸம்வர்க்க வித்யையென்று ப்ரஸித்தி. இதில் நமக்கொரு விசேஷ விச்வாஸ ஹேது என்னென்றால் :

'ஆத்மா தேவாநாம் ஜநிதா ப்ரஜாநாம் ஹிரண்யதம்ஷ்ட்ரோ பப்ஸோऽநஸூரி: | மஹாந்தமஸ்ய மஹிமாநமாஹு: அநத்யமாநோ யதநந்நமத்தீதி,' என்று உபாஸ்ய ஸ்வரூபத்தை விவரிக்கும் உபநிஷத் வாக்யத்துக்கு நம்முடைய பாஷ்யகாரர்கள் இப்படி வ்யாக்யானம் செய்கிறார்கள்,



"தேவாநாம் நியந்தா - ப்ரஜாநாம் உத்பாதக: - கமநீய தம்ஷ்ட்ராயுக்த: - ஹிரண்ய விகாரகதம்ஷ்ட்ராயுக்த: இதிவா - ஸகல ஸம்ஹாரக: - அஸுராஸம்ஹாரக இத்யர்த்த: - விபஶ்சித் - ஸர்வஜ்ஞ: ஸ்ரீ ந்ருஸிம்ஹஸ்ய பரமாத்மந: மஹிமாநம் மஹாந்தம் ஆஹு: - யச்ச ஸ்வயம் அநத்யமாந: (அநாஶ்யமாந:) அந்நம் அக்ந்யாதீந், வாகாதீம்ஶ்ச அத்தி (நாசயதி)"

"தேவதைகளுக்கு ஈச்வரன், ப்ரஜைகளை ஸ்ருஷ்டித்தவன், அழகிய கோரைப் பற்களுடையவன், அல்லது ஹிரண்யனைப் பிளந்த கோரைப் பற்களோடு கூடினவன், யாவற்றையும் ரக்ஷிக்க வல்லவன், அல்லது அஸுரனை ஸம்ஹரிக்க வல்லவன். ஸர்வஜ்ஞன். இந்த ஸ்ரீ நரஸிம்ஹனென்கிற பரமாத்மாவினுடைய மஹிமையை அநந்தமாகச் சொல்லுகிறார்கள். ஏனெனில் இவரால் ஸ்வயம் நாசமற்றவராய் அக்நி முதலாகிய தேவதைகளையும் வாக் முதலான இந்த்ரியங்களையும் சாப்பிடுகிறார்." ஆக இந்த வித்யையால் உபதிஷ்டனான ஸம்வர்க்கன் ஸ்ரீ ந்ருஸிம்ஹன் தான்.

சாந்தோக்யோபநிஷத் பஞ்சம ப்ரபாடகத்தில் ச்வேதகேதுவின் பிதா உத்தாலகர் என்றும் ஆருணி என்றும் பெயர்கொண்ட கௌதமர், தான் ப்ராஹ்மணரா யிருந்தும், க்ஷத்ரியனான ஜீபலனுடைய புத்ரனான ப்ரவாஹணனிடம் ஸ்வயம் சென்று தனக்குத் தெரியாததும் அவனுக்குத் தெரிந்ததுமான பஞ்சாக்நி வித்யையின் ஜ்ஞானத்தை, சிஷ்யனாகப்போந்து பெற்றுக்கொண்டாரென விளங்குகிறது. அதே ப்ரபாடகத்தில் ப்ராசீநசாலரெனும் உபமந்யு புத்ரர் முதலானவர்கள் வைச்வாநர வித்யையைத் தெரிந்துகொள்ளும் பொருட்டு உத்தாலகரிடம் சென்று அவரைக் கேட்கவே, அவர் அந்த வித்யை தனக்குத் தெரியாத நிமித்தம் அவர்களையும் அழைத்துக்கொண்டு, வைச்வாநர வித்யைக்கு அதிகாரியான கேகய தேசத்து ராஜா அச்வபதியினிடம் சென்றாரென்றும், அவரை இவர்களெல்லோரும் ஆசார்யனாக வரித்தார்களென்றும் தெரிகின்றது.

(இன்னும் வரும்.)

ஓர் ஸந்நிதி ஸம்ப்ரதாயஸ்தர்.

# ஸ்ரீமதஹோபில யாத்ரை.

"திருவரங்கப் பெருநகருள் தெண்ணீர்ப் பொன்னி
திரைக்கையா லடிவருடப் பள்ளி கொள்ளும்
கருமணியைக் கோமளத்தைக் கண்டு கொண்டென்
கண்ணிணைக ளென்று கொலோ களிக்கு நாளே?"

என்று கொல்லி நாயகனான குலசேகரன் அநுபவித்த வண்ணம், ஆதிவண்சீர் சடகோபன் அடியிணையை ஆச்ரயித்தவ ரெல்லோரும் அஹோபிலத் தெம்பெருமானை நினைத்துருகி நின்றாரேல்,

பவம்போக்கு மலையருவிப் பங்க லோங்கு
பருங்குன்ற மதனிலுயர் கோயில் கொண்ட
தவம் செய்தார்க் கன்றியுருங் காட்டாநாதன்
தனைக்கண்டு கண்களித்த லெந்நாள் தானோ!

என அவர்க்கும் அநுபவம் ஜநிக்கும். இத்தன்மைய பாக்ய மடைந்தோரிற் பலர் நம் ஸபையார் எண்ணத்திற் கிணங்கி, இன்று நாம் விட்டால் இனி அவனைக் காண்பதெப்போது என்றுணர்ந்து ஸ்ரீமதஹோபிலத்தை யுத்தேசித்து, யாத்திரை செய்ய நிச்சயித்தார்கள். பெரும்பாலோர் பங்குனியீ 27ம் - தேதி வியாழக்கிழமை இரவில் தூமசகடமேறிப் பிரயாணமாகி, அன்றிரவே மூன்றும் ஜாமம் முடியுங்கால் எர்ரகுண்ட்லாவெனும் ரெயில்வே ஸ்டேஷனில் இறங்கினார்கள். அந்த ஸ்டேஷனுக்கு 7 - மைல் தூரத்திலிருக்கிற ப்ரொதட்டூர் நகர நிவாஸிகளாகிற பஹு ஸத்வோத்தரர்களான பகவத் பக்தர்கள், அந்த ஸ்டேஷனுக்கு அன்றிரவே வந்திருந்து, 'ஸதாம் ஸதாம் [illegible]' என்பதுபோல், நாம் உத்தேசித்துப் போந்த கார்யத்தின் கௌரவத்தால், நம்மிடம் அன்புகூர்ந்து, நம் வரவை எதிர் நோக்கி, நமக்கு நல்வரவு மளித்தார்கள். இப்படி அவரும் நாமும் கூட, இருதிறத்தாருடையவும் மநோரத ப்ரவாஹங்க



ளும் கூடி யுயர்ந்தன. குசல ப்ரச்நாதிகள் முடிவதற்குள் சிறிது காலம் சென்றது. எம்பெருமான் தர்சநத்தை எதிர்நோக்கிச் சென்றவருக்கு, நல்லோர் நல்வரவளித்துப் பூஜித்தல் இயற்கை தானே. வண்டிகள் கணக்கிலவாய் வந்து நின்றமையால், நாமும் நம்மைப் பார்க்கவுற்றாருமாகப் ப்ரொதட்டூர் நகரம் நோக்கிச் சென்றோம். வழியில் வடபெண்ணை என்னும் பிநாகிநி நதியையும் அதில் கலக்கவோடும் ஓர் சிற்றாற்றையும் கடந்தவுடன் நகரவாஸிகளுள் இன்னும் பலர் வாத்ய கோஷங்களுடன் எம்மை நகர்வலமாக அழைத்துக்கொண்டுபோய், அமைத்திருந்த விடுதிகளுக்குக் கொண்டுவிட்டனர். அப்போது உதித்து ஓர் மணியாய்விட்டது.

பன்னிரண்டு மணிக்கு மேல் அவ்விடம் யாத்ரையாக எழுந்தருளிய ஸ்வாமிகளுக்கு அந்நகரவாஸிகள் ததீயாராதநம் செய்தார்கள். இதன் பிறகு அவர்கள் இறங்கிய பெரிய ஸத்ரத்தில் ஒரு ஸபை நடந்தது. அச்சபையை வித்வான் உ.வே. ஆத்மகூர் ஸ்ரீநிவாஸாசார்யரும், வித்வான் உ. வே. சேட்லூர் நரஸிம்ஹாசார்யரும் அலங்கரித்தார்கள். அந்த ஊர் டிஸ்ட்ரிக்டு முன்ஸீப் ம-ரா-ரா-ஸ்ரீ. நீலகண்டம் பந்துலுகாருவும், அவ்விடம் டிவிஷன் டிப்டி கலெக்டர் ம-ரா-ரா ஸ்ரீ. ராமாநுஜாசாரியர் அவர்களும், வக்கீல்கள் ம-ரா-ரா-ஸ்ரீ. ஸுந்தராசாரியர் அவர்கள், வெங்கடராமய்யர் அவர்கள், ரங்காசார்யர் அவர்கள், அந்த ஊர் ஸப்ரிஜிஸ்ட்ரார் வெங்கடராமய்யர் அவர்கள் முதலான பஹு பெரிய மநுஷ்யர்களும் அந்த ஸபைக்கு அலங்காரமாக விளங்கினர். ஸுந்தராசார்யர் ரிஸப்ஷன் கமிட்டி அக்ராஸநாதிபதியாகச் சிஷ்ய ஸபையார்க்கு நல்வரவளித்து, அவர்களுடைய இஷ்ட பூர்த்திக்கு அநுகுணமாக சிறிது உபந்யாஸம் செய்தனர். பிறகு சிஷ்ய ஸபை அக்ராஸநாதிபதியான உ. வே. ராஜகோபாலாசார்யர், ரிஸப்ஷன் கமிட்டியாருக்குத் தம் ஸபையினரின் நன்றியறிவைத் தெரிவித்து, அவருடைய யாத்ரைக்குக் காரணமாய் நின்ற உத்தேசத்தைக் குறித்தும், அது நிறைவேறும்படியாக அந்தத் தேசவாஸிகளுடைய பூர்ணோபகாரத்தை அபேக்ஷித்தும் உபந்யஸித்தார். இதன் பிறகு உ. வே. ஆத்மகூர் ஸ்ரீநிவாஸாசார்யர் விசிஷ்டாத்வைதத்தைப் பற்றியும், உ. வே. சேட்லூர் நரஸிம்ஹாசார்யர் பகவத்விஷயத்தைப்பற்றியும் விஸ்தாரமாக உபந்யாஸம் செய்தார்கள். இந்த

உபந்யாஸங்களைக் கேட்டவர் அனைவரும் மிகவும் ஸந்துஷ்டர்
களாய், தத்ரஸாநுபவம் செய்துகொண்டிருக்கையில், மிகவும்
காலம் கடந்து, யாத்திரையை மறுபடி ஆரம்பிக்கவேண்டிய
ஸமயம் நெருங்கிவிட்டது. அன்று பௌர்ணமியானபடியால்
ஸூர்யாஸ்தமநத்துக்குச் சரியாகப் பிரயாணப்பட்டு, அகல்
நிலாவில் பிரயாணம் செய்தோம். எங்களுடைய சகடங்களின்
ஸங்க்யை இருபத்தியாறு. ஒரு ஜாமத்துக்கெல்லாம் கொறப்பாடு
என்னும் கிராமத்தை அடைந்தோம். அந்த நாட்டில் மற்றெங்
கும் கிடைக்காததொரு தெண்ணீர் நிறைந்த பொய்கைக் கரை
யிலிறங்கி, ஆஜ்ஞா கைங்கர்யத்தை நிறைவேற்றி, புசித்துப்பழைய
படி ப்ரயாணித்தோம். கிழ்ஹோபிலத்திற்கு ஒரு காதத்திற்குப்
புறமே ஸூர்யோதயமாய் விட்டது. வெயிலின் கொடுமையும்,
மார்க்கத்தின் கஷ்டமும் சேர்ந்தமையால், சனிக்கிழமை பத்து
நாழிகைக்குக் கீழஹோபிலம் போய்ச் சேர்ந்தோம். அவ்
விடத்தில் எங்கட்கு முன்னதாகவே வந்திருந்த பஹு பெரிய
மனுஷ்யர்கள் எங்களை எதிர்கொண்டு, வாத்ய கோஷத்துடன்
அவ்வவர்க்குத் தக்கபடி அமைக்கப்பட்ட விடுதிகளில், அதாவது
கூடாரங்களிலும் பந்தல்களிலும் கொண்டு விட்டனர். ஸந்நிதி
யே பஹுபெயருக்கு வாஸஸ்தாநமாயிற்று. அவ்விடம் சேரப்
போகின்ற ஜநங்களை உத்தேசித்து, ஆழ்வார் தீர்த்தமும் பார்க்கவ
தீர்த்தமும் சுத்தி செய்யப்பட்டுள. ஸர்வத்துக்கும் அத்தடாகங்
களினின்று தீர்த்தம் வரவேண்டியதாயிற்று. யாத்ரையாக வந்தவ
ரெல்லாரும் தீர்த்தமாடி, நித்யகர்மாதிகளை முடித்துப் பெருமா
ளுக்குத் திருமஞ்சநம் கண்டருளப்பண்ணி, சர்க்கரைப் பொங்கல்
தளிகை நிவேதநமும் செய்வித்தார்கள். பகவந்நிவேதிதமான
ப்ரஸாதத்தை யாவரும் புசித்தெழ மணி மூன்றாயிற்று. ஸந்நி
திக்கு முன் மஹா மண்டபத்தில் பந்தல் போடப்பட்டு, அதன்
கீழ் மஹா ஸங்கம் கூடியது. இதன் நடவடிக்கைகள் முடிவுற
ஸூர்யாஸ்தமநமாயிற்று. பெருமாளுக்குப் பஹு விபவத்துடன்
அன்றிரவு கருடோத்ஸவம் செய்விக்கப்பட்டது. அங்குகூடிய
ஏழை ஜனங்கள் யாவர்க்கும் ம-ா-ா-ஸ்ரீ. ராமசந்திரரெட்டி
அந்நம் அளித்தனர். அன்று ஸாயங்காலம் அந்த மஹாகோபு
ரத்தை நோக்குங்கால், வைசாக உத்ஸவம் அங்கே வந்து விட்ட
தோவென ஊஹிக்கக்கூடியதாயிற்று. பதினாயிரம் ஜநங்களுக்கு



மேல் இருபதினாயிரம் வரையில் ஜநத்தொகை மதிக்கப்பெற்றது.
எந்த விடத்திலும் ஜநமயமாய் இருந்தது. அர்த்தராத்ரியை அதி
க்ரமித்துப் பெருமாள் உத்ஸவம் கண்டருளினார். அதைத் தரி
சித்த ஜநங்கள் தவிர பஹுஜநங்கள் மலையின் மீது பாவந நரஸிம்ஹ
மன் ஸந்நிதிக்கு, சைத்ர மாஸம் சனிக்கிழமை தோறும் போகும்
வழக்கப்படி போயிருந்தார்கள். இது அஹோபில யாத்ரையாக
வந்த நமக்குத் தெரியாது. மலையின் மீது திவ்யதேசத் தெம்பெரு
மான் ஏகாந்தமாய் ஸேவை ஸாதிப்பர் என நினைத்து, நாம் ஞாயி
ற்றுக்கிழமை காலை மலையேறி நடந்தோம். ஸந்நிதி கிட்டக்
கிட்ட, ஜநங்களுடைய கோஷம் மேன்மேலும் செவியைத் தாக்கி
யது. கோவிந்தாவென்றும், நரஸிம்மாவென்றும் ஆஹ்வாநங்கள்
நமக்கு ஆநந்தம் தந்தன. ஆனால் ஸேவார்த்திகளாய்ச் சென்று,
விஜநப்ரதேசத்தில் ஏகாக்ர சித்தர்களாய்ப் பகவதநுபவம் பண்ண
யோசித்த எமக்கு, ஸர்வேந்த்ரியங்களுக்கும் வ்யாபாரம் ஏராள
மாய்க் கிடைத்துவிட்டது. பவநாசிநியில் தெளிந்த தீர்த்தத்தில்
ப்ராதஸ்நாநம் செய்ய விரும்பிய எமக்கு, ஸந்நிதிக்கு மேல் ஒரு
மைலளவு மலையேறிய பிறகும், கலங்கிய ஜலமே ப்ராப்தமாயிற்று.
ஆனால் விஷ்ணு ஸேவார்த்தம் ஆகதர்களான பகவத் பக்தர்
கள் சரீர ஸம்பந்தத்தைப் பெற்ற தீர்த்தம் பாவநமென்றே
யோசித்துக்கொண்டோம். இந்த விதமாக ப்ராதஸ்ஸந்த்யாவந்த
நாதிகளை முடித்துக்கொண்டு தேவாலயத்தை யடைந்தோம்.
ஸ்ரீ வைஷ்ணவர்களும் ஏனைய ப்ராம்ஹணர்களும், ஸ்ரீ பாஷ்ய
காரரும் ஆழ்வாராசார்யர்களும் எழுந்தருளியிருக்கப்பட்ட ஸந்
நிதியை யடைந்தோம். பகவத் ஸந்நிதி எங்கும் சூத்ரர்களால்
வ்யாபிக்கப்பட்டது. பெருமாள் ஸந்நிதிக்கும் உயரத்தில் மண்ட
பங்கள் அமைக்கப்பட்டிருப்பதால், அவ்விடமெங்கும் சூத்ர ஜநங்
கள் அடைந்தனர். பகவானுடைய விமாநத்தின் மீதும் சிலர்
ஏறி உட்கார்ந்தனர். பாவந நரஸிம்ஹனை முதல் நாள் ஸேவித்து
வந்தவரெல்லாரும், அவ்விடம் ஸ்வாமிக்காக ஸங்க்யாதீதமாக அஜ
ங்களை ஸம்ஹரித்தார்கள். இந்தப் பூஜைக்கும் வரும்படியுண்டாம்.
இதையும் தர்மாதிகாரிகள் குத்தகைக்கு விட்டிருக்கிறார்களாம்.
பக்தி புரஸ்ஸரமாகத் தாம் புசிக்கும் ஆஹாரத்தை சூத்ர ஜநங்கள்
பகவானுக்கு நிவேதநம் செய்வதால் அவனுடைய பாவநத்வம்
குலையுமோ வென்பதைப் பெரியோர் யோசிக்கவேண்டியது.

கொல்லப்பட்ட அஜங்களுடைய மாம்ஸம் மலையின் ஸர்வப்ரதேசத்திலும் பசநம் செய்யப்பட்டது. ஸேவார்த்திகளாய் நடந்த எங்களுக்கும், இவற்றைக்கண்ணுற்று ஒருவிதமான வியப்பு உண்டாயது. ஆனால் ஸந்நிதிக்குள் சென்றவுடன் நாங்கள் கண்டது இன்னும் விஸ்மயாதிசயத்தை ஜநிப்பித்தது. பெருமாள் கர்ப்பக்ரஹம், அர்த்த மண்டபம், நாங்கள் ஸ்வாதீநப்படுத்திக்கொண்ட ஆழ்வார் ஆசார்யர்கள் ஸந்நிதிகள் இவைதவிர, மாம்ஸ பசநம் செய்யப்படாத பாகம் ஆலயத்துக்குள் இல்லை. வண்சடகோபன் வம்சத்தில் வந்த ஸ்வாமிகளும், மற்றைய ஸ்ரீ வைஷ்ணவர்களும் தன்னைக் கைவிடவே, '[illegible] ॥' என்று அருளிச்செய்த பகவான் அந்த க்ஷுத்ர ஜநங்கள் ஸ்வஜாதிக்குரிய ஆஹாராதிகளைத் தனக்குத் தந்தால், அதையும் '[illegible]' யானபடியே, அங்கீகரிக்கின்றானோ வென்று யோசிக்கக்கூடியதாயிற்று. ஸ்ரீ பாஷ்யகாரர் வஸ்திரமற்றும் த்ரிதண்டமற்றும், அவதார தசையில் விளங்கினார். அவதார ஸ்தலத்தில் ஆடையாபரணங்களைக் கழற்றி ஹிம்ஸிக்கிறார்களெனத் திருவுள்ளம் கலங்கி அஹோபிலத்தில் பிறந்த வண்ணம் ஸேவை தர எண்ணினாரோ? ஸ்ரீ ந்ருஸிம்ஹன் விபவம் குன்றித் தீநரென நிற்க, நிர்வேதம் பிறந்து அவதூதரெனத் தாமிருக்கவேண்டுமென்று நிச்சயித்தவாரோ? நம் ஸ்வாமியினுடைய சித்தவ்ருத்தி நமக்குத் தெரிந்திலதே! தர்சநத்துக்கு நடுநாயகமாய் விளங்கு மிராமாநுசன் திகம்பரரானார், நாமும் ஆடைகள் தரித்திலோம் என்று, ஆழ்வார்களும் ஆசார்யர்களும் நிர்வாணத்தை யடைந்தார்கள். மடியில் கனமில்லை, வழியில் பயமில்லை. கட்டத்துணியற்றவர் பக்கல், கள்வர் ஏன் போகின்றார்? இப்படி நிர்ணயித்து, அதிகாரிகள், ஆழ்வார் ஆசார்யர்கள் நிவேசநங்களுக்குக் கதவுகளும் வைத்திலர். ஸர்வ ஜாதியர்க்கும் மலையின் மேல் போக மார்க்கம் கோயிலின் கோபுர த்வாரங்கள் மூலமாயிருப்பதால், ஆழ்வாராசார்யர்கள் திருமேனி



களைக் கண்ணுறும் ஸகலரும், சோகார்த்தர்களென அவர்கள் கன்னங்களிலும் முதுகுகளிலும் தடவிக்கொடுத்துப் போவதும் உண்டெனத் தெரியவருகின்றது. அவதார தசையில் குருத்வத்தை யடைந்தமையால் இவர்கள் நிச்சலராக வீற்றிருக்க, இவர்களுள் சிலருடைய உத்ஸவார்ச்சைகள் பெருமாள் ஸந்நிதிக்குள் ப்ரகாசித்தனர். ஆனால், அவர்கள் ஆகாரத்தைக்கொண்டு தான், உத்ஸவார்ச்சைகளென நினைக்க நேர்ந்தது.

நீரென்றும் காணா நிலைநின்ற தன்மையினால்
கார்கொண்ட மேனிக் கடவுளெனத் தோன்றினரே.

மத்தியான்னம் கடந்து இரண்டுமணி வரையில் ஸேவார்த்திகளான எங்களுக்கு பகவத் ஸேவை கிடைக்கவில்லை. அதற்குப் பிறகு தான் பகவத் ஸந்நிதியை நெருங்கி பகவானைத் தர்சித்தோம். குஹாவாஸியான எம்பெருமான் ஹிரண்யகசிபுவை ஸம்ஹரிக்கிற அவஸ்தையில் ஸேவை ஸாதிக்கிறார். உத்ஸவரும் அப்படியே ஸேவை ஸாதிக்கிறார். இப்படித் தர்சித்த பிறகு, பெருமாளுக்குத் திருமஞ்சநம் செய்வித்தோம். ஸந்நிதியில் பெருமாளுக்காக யாதொரு தளிகையும் செய்விக்க இயலாமல், 'திருமஞ்சநம்' கண்டருளின பிறகு, பஞ்சாம்ருதம் மாத்திரம் பெருமாளுக்கு அமுது செய்வித்தோம். இதற்குள் மணி நாலரையாயிற்று. மலையின்கீழிருந்து எங்கள் நிமித்தம் கொண்டுவரப்பட்ட ப்ரஸாதத்தை அருந்தின பிறகு, மலையிறங்க யத்தனித்தனம். கீழஹோபிலம் வந்து சேர இருட்டாய் விட்டது. அன்றிராத்திரியும் கீழ் அஹோபிலத்தில் பெருமாள் உத்ஸவம்கண்டருளினார். அன்றிரவே நடுராத்திரியில், அஹோபிலத்தை விட்டுப் பிரயாணமாய்ப் புறப்பட்டோம். மார்க்கத்தில் சந்த்ரிகை உதவியாயிற்று. மறுநாள் மத்தியான்னத்துக்குள் புரொதட்டூர் சேர விரும்பினவர்க்குக் குறப்பாடு குளக்கரையில் தங்கவேண்டியதாயிற்று. வர்ஷ ப்ரவேசத்துக்குரிய ஸ்நாநமும் தர்ப்பணமும், அக்குளத்தின்கண் யாவரும் செய்தனர். மரங்கள் நிழலிலே, ஏறக்குறைய நூறு பெயர்

உண்ணத் தளிகையும் நடந்தது. சாப்பிட்டு விட்டு 4 மணிக்கு அவ்விடம் விட்டுப் பிரயாணமாகி ப்ரொதட்டூருக்கு அஸ்தமனத்துக்கு வந்தோம். அவ்விடம் மித்ரர்கள் ஸஹாயத்தால், வேறு வண்டிகளை யமைத்துக்கொண்டு, எர்ரகுண்ட்லா ஸ்டேஷனடைந்தோம். இரவில் பத்து மணிக்குத் தூமசகடம்வரவே, அதிலேறி அவ்வவர் ஊர் போய்ச் சேர்ந்தனர்.

இவ்விதமாய், நீண்ட காலம் தொட்டு, அஹோபில மெனப் பிரஸித்தியாகக் கேள்வியுற்ற திவ்ய க்ஷேத்ரத்தைக் கண்ணுற்றோம். அது நம்மூர்களுக்குத் தூரமாயும், ஆரண்ய மத்யத்திலிருப்பதாயும், நீடித்து வண்டிபோகும் மார்க்கத்தால் அடையக் கூடியதாயும், ஜல ஸௌக்ய மில்லாததாயும் இருக்கும் தசையில், நமது பரமாசார்யர்களுக்கு மிகவும் உத்தேச்யமான க்ஷேத்ரமானாலும், சரீரம் குணமா யிருக்குமளவில் காணக்கூடும் என்னும் நம்பிக்கைக்கு அவகாசம் தாராது நின்றது. ஆயினும், காண வேண்டு மென்னும் விருப்பம் யாவரையும் விட்டதில்லை. இந்த க்ஷேத்ரத்தின் தைந்ய ஸ்திதியானது நம் ஸபையில் சேர்ந்த சில ஸ்வாமிகளுக்கும், இதர ப்ரமுகர்களுக்கும், நேராகப் புலப்பட்டபடியால், திவ்யதேசத்தின் ஜீர்ணோத்தாரணத்தைக் குறித்து ஸபையார்க்கு ஒரு தீவ்ரமான இச்சைக் கிடமுண்டாயிற்று. ஸந்நிதிகளின் சீர்திருத்தம், தத்தேசியர்கள் முகமாய் நடக்கவேண்டியிருத்தலால், அவ்விடமே ஒரு ஸங்கம்கூடி, அவர்களுக்கு இந்த கைங்கர்யத்தில் உத்கடேச்சையை உண்டாக்க வேண்டியிருந்தது. ஆகவே பெருமாளைக் கண்ணாரத் தர்சித்துக் களிகூர நெடு நாளாக விரும்பியவர்க்கு, ததர்த்தம் திவ்ய தேசயாத்ரை லபித்ததும், அநந்ய பக்தர்களுக்கு ஸுலபனான ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹன் திவ்ய கடாக்ஷத்தால் தானென்று அத்யவஸிக்கின்றோம்.

டி. டி. ரங்காசார்யர்.

# சிஷ்ய ஸபையின் நான்காவது வர்ஷோத்ஸவம்.

ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹன் அநுக்ரஹத்தால் நமது ஸபையின் நான்காவது வருஷ மஹோத்ஸவம் ஸ்ரீமதஹோபிலத்தில் மிக்க விபவத்துடனும், அத்யந்தம் திருப்திகரமாகவும் நடந்தேறியது. அநந்ய பக்தர்களுக்கு ஸுலபனான எம்பெருமான் திருக்கோயில் கொண்டருளிய திவ்யதேசம் ஜீர்ணித்துப் போயிருப்பதையிட்டு, நமது ஸபையார் அதன் சீர்படுதலை யுத்தேசித்து அவ்விடமே இவ்வர்ஷோத்ஸவத்தை நடத்த முயன்றார்கள். ஆழ்வார் மங்களா சாஸநம் செய்தருளிய திவ்யதேசம் மலையின் மேல் இருக்கிறது. ஸ்ரீமதாதிவண் சடகோப மஹாதேசிகன் உகந்தருளிய ஸந்நிதி, மலைக்கு மேற்புறத்தில் அடிவாரத்தில் நிற்கின்றது. இரண்டு ஸந்நிதிகளும் ஒன்றுக்கொன்று ஆறு மயில் தூரத்திலிருக்கின்றன. கீழ் அஹோபிலத்தின் தென்புறத்தில், ஆறு மயில் தூரத்திலிருக்கிற 'பாச்சேபல்லி' என்னும் க்ராமமும், மற்றப் புறங்களில் ஏறக்குறைய பத்து மயில் தூரத்திலிருக்கும், 'ருத்ரவரம்' 'அல்லகட்டா' என்னும் கிராமங்களும் தான் கீழ் அஹோபிலத்துக்கு ஸமீபமாயுள்ளன. ஆனபடியால், இரண்டு ஸந்நிதிகளும் ஆரண்ய மத்யத்தில் நிற்கின்றன. தத்காலத்தில் அவற்றின் ஸமீபத்தில் அடவீ உத்யோகஸ்தர் நிவாஸங்களும் சில செஞ்சுக்களின் குடிசைகளும் தவிர யாதொரு க்ரஹங்களும் இல்லை. இரண்டு ஸந்நிதிகளுக்கும் அருகில் ஸ்நாந பாநங்களுக்கு அநுகூலமான வாபீகூப தடாகாதிகளும் கிடையாது. பகவத் க்ருபையை முன்னிட்டே நமது ஸபையின் கார்யதர்சி ஸ்ரீ. உ. வே. வி. ராஜகோபாலாசார்யரும், ஸ்ரீ. உ. வே. சேட்லூர். ராஜகோபாலா சார்யரும், ஸ்ரீ. உ. வே. மதுராந்தகம் திருவேங்கடா சார்யரும், ஸ்ரீ. உ. வே. திருவள்ளூர் திருக்கள்ளம் வேதாந்தாசார்யரும், கடப்பை கர்னூல் ஜில்லாக்களில் அபிமாநிகளான பஹு பெரிய மநுஷ்யர்களிடம் போய், இந்த வர்ஷோத்ஸவத்தைக் குறித்து, விசேஷ உபகாரங்களை ஸம்பாதித்தனர். இவ்வித ச்ரம ஸாத்யமான பிரயத்நமின்றிக்கு, இந்த வர்ஷோத்ஸவம் நடந்திராது. மேலும் ஆரண்ய ப்ரதேசத்தில் மஹாஸங்கம் கூடுவதென்றால்,

அபிமானிகள் பலர் உபகரித்து அல்லவோ அது நிறைவேறும். இப்படிப்பட்ட அபிமானிகளில் முக்யமாய் எடுத்துரைக்கக் கூடியவருள், ப்ரதொட்டூர் ஸ்ரீ. உ. வே. ஸுந்தராசார்யர் ஸ்வாமி, ராஜமாந்ய ராஜ ஸ்ரீ சுத்தபல்லி ராமசந்திரா ரெட்டிகாரு, ஸிஷ்டிப்பாடு பகீர் ரெட்டிகாரு, கோஸ்பாடு சுப்பாரெட்டிகாரு, பீமிலிபாடு ஈச்வரரெட்டிகாரு, ருத்திரவரம் திம்மய்யகாரு, பேரோபல்லி ராமய்யகாரு, கோயில் குண்ட்லா யூனியன் சேர்மனை வக்கீல் ராமய்யகாரு ஆகிய இந்தக் கனவான்கள் மிக்க நன்றியறிவுடன் இவ்விடம் சொல்லத்தக்கவர். உபகரித்த கனவான்களனைவரையும் சொல்லப் புகுந்தால், இங்கே இடம் கொடாது.

இதுவுமன்றி, இந்த வர்ஷோத்ஸவத்தை ஸேவிக்க, ஆயிரக்கணக்காய் ஜநங்கள் வந்து சேர்ந்தனர். அந்த நாட்டுக்கெல்லாம் பெயர்பெற்ற திவ்ய க்ஷேத்திரத்திற்கு ஸம்பவித்த சீர்கேடுகளைக் கண்ணுற்றும், கேள்வியுற்றும், சிந்தாக்ராந்தர்களான பல ஜநங்கள், இத்தன்மைய கேடுகளுக்கு எப்போது முடிவுண்டாகுமென்று எதிர்நோக்கியிருந்தனர். இவர்கள் உத்தேசத்தைப் பகவத் க்ருபையை முன்னிட்டுப் பூர்த்தி செய்ய விரும்பின நம் ஸபையார், இவ்வர்ஷோத்ஸவத்தை ஸ்ரீமதஹோபிலத்தில் நடப்பித்த காரணம் என்னவெனில், அந்தத் திவ்யதேசம் பாகவதர்களுடைய திருவுள்ள முவந்தபடி நிலைக்க வேண்டும் என்னும் உத்கடேச்சை தான். ஆனபடியால், இதுவும் ஓர் பகவத் கடாக்ஷம்; இந்த வழியாக ஸ்ரீ ந்ருஸிம்ஹமன் நம்மை அநுக்ரஹிப்பரோ, என்றிவ்விதமான அவாவையிட்டு, எண்ணிறந்த பகவத் ஸேவார்த்திகள், ஸ்ரீமதஹோபில ஸ்தலங்களில் இக்கருணம் கூடினார்கள். இந்தத் திவ்யதேசத்தின் யோகக்ஷேமத்தைக் குறித்து யதாசக்தி ப்ரயத்நபரர்களாக இச்சிக்கின்ற கர்னூல் கடப்பை ஜில்லாக்களில் உள்ள பெரிய மநுஷ்யர்கள் பலர் இந்த ஸங்கத்தை ஸாக்ஷாத்தாக அலங்கரித்தார்கள். மற்றும் அநேகர், மைநாக பர்வதம் ஹநுமான் பக்கல் நடந்தவண்ணம், ஸபையார்க்கு இயன்ற மட்டும் மார்க்கங்களில் உபகரித்ததுமன்றி, ஸங்கத்தைக் குறித்துப் பேருதவியும் அளித்துள்ளர். இவையெல்லாம் ஸ்ரீ ந்ருஸிம்ஹமன் க்ருபாபரீவாஹத்தால் உண்டாயின. அவனுடைய பக்தர்கள், அவன் கைங்கர்யத்தில் உத்யுக்தர்கள் விஷயத்தில் ஸஹாயம் புரிவது ஆச்சர்யமா?



பங்குனி மாஸம் 29 - தேதி சனிக்கிழமை மத்யாந்ஹம் கீழஹோபிலம் ஸந்நிதி முன்பாக உள்ள மஹாமண்டபத்தில் ஸங்கம் கூடியது. திருநெல்வேலி, மதுரை, தஞ்சாவூர், தென்னாற்காடு, வடஆற்காடு, செங்கல்பட்டு, சென்னைப்பட்டணம், கடப்பை, கர்னூல் முதலான ஜில்லாக்களினின்று வந்த வைஷ்ணவர்கள் ஸங்கத்தில் விளங்கினார்கள். உத்யோகஸ்தர்களாயும் வக்கீல்களாயும், கர்னூல் கடப்பை ஜில்லாக்களினின்று வந்த அநேக ப்ரபுக்கள் அவ்விடம் தர்சந பதமானார்கள். அந்த நாட்டின்கண் வ்யவஸாயத்தாலும் வர்த்தகத்தாலும் மேம்பட்ட பல தநவந்தர்கள், அச்சங்கத்தில் வீற்றிருந்தனர். நம்மிராஜதானிக்கு நடுநாயகமென விளங்கும் சென்னை மாநகரத்துக்குக் கீர்த்தியளிக்கும் ராஜமாந்ய ராஜ ஸ்ரீ திவான் பஹதூர் கோவிந்ததாஸ் சதுர்ப்புஜதாஸ் அவர்கள் ஸங்கத்தின் ஸபாத்யக்ஷராக யாவராலும் வரிக்கப்பட்டுத் தத்ஸ்தாநத்தில் விளங்கினர். சென்னையினின்றும் ஸ்ரீமதஹோபிலம் சேர எண்ணக்கூடாத மார்க்க ச்ரமத்தை எதிர்நோக்கியும், ஸ்ரீ ந்ருஸிம்ஹமன் திவ்ய கைங்கர்யத்தில் தனது அந்வயத்தைக் களிப்புடன் கருதி, அந்த ச்ரமத்தை அலக்ஷ்யம் செய்து அந்த ஸ்ரீமாந் நமது ஸங்கத்தின் அக்ராஸநத்தை வஹிக்க இசைந்தனர். இதுவும் பகவத் காருண்யத்தால் நமக்குக் கிடைத்த பாக்ய விசேஷம்.

ஸங்கத்தினர் ஸ்ரீ ந்ருஸிம்ஹமன் ஸந்நிதிகளுக் குண்டான துன்பங்களுக்காக ஶோகித்து, அவை நீங்குதலும், கோயில்களுடைய புதுப்பித்தலும், கோயில்களில் எழுந்தருளியிருக்கும் பகவானுக்குக் கிரமமாக நித்யாராதநங்கள் நடக்கவேண்டியதும், தூரத்தினின்று வரப்பட்ட ஸேவார்த்திகள் ஸுகத்தின் பொருட்டுச் சுத்த ஜலத்தின் ஸம்ருத்தியும், பாதைகளின் சீர்திருத்தமும் தாங்கள் செய்யவேண்டிய கைங்கர்யங்களெனத் தீர்மானித்து, விலக்ஷணர்களான ஸ்ரீ வைஷ்ணவர்களை ஸ்ரீமதஹோபிலத்தில் குடிகொள்ளச்செய்து, அவரால் ஆராதநம் தினந்தோறும் திருமலையின் மேலும் கீழும், சாஸ்திரமுறைமைப்படி தவறாமல் நடக்க வேண்டிய யத்நங்களை ஸ்ரீ அஹோபில மடத்தின் ஸ்வாமி எடுத்துக்கொள்ள வேண்டுமென, அவரைப் பிரார்த்தித்தார்கள். மற்றைய திருப்பணி முதலான கைங்கர்யங்கள் விஷயத்தில் அந்த ஸ்வாமியே பிரதாந கர்த்தாவாய் இருக்கவேண்டியபடியாலும் அவரால் தத்கால ஸ்திதியில் ஏகதேசத்தில் மேற்சொன்ன கைங்

கர்யங்கள் நிறைவேறமாட்டாவாகையால், அவருடைய உதவியை முன்னிட்டுக்கொண்டு, அபிமாநிகளிடம் சென்று, அவ்வவர் சக்திக்கும் இச்சைக்கும் பொருந்திய வண்ணம் ஸஹாயங்களைத் தேடிக் கைங்கர்யங்களை காலடைவில் முடிக்கவேண்டிய பிரயத்நங்களைக் கைக்கொள்ள, அநேக பெரிய மநுஷ்யர்களடங்கிய ஒரு பெரிய கமிட்டியையும், மற்றொரு சிறிய கமிட்டியையும் ஏற்பாடு செய்தனர். இந்தக் கமிட்டிகளில் சேர்ந்த மஹான்கள், கூடிய சீக்ரத்தில் ஸங்கத்தாரால் நியமிக்கப்பட்ட கைங்கர்யங்களில் ப்ரவர்த்திப்பார்களென்று மிகவும் பிரார்த்திக்கப் படுகிறது.

முக்யமாக ஸர்வாபிமாநிகளும் யோசிக்கவேண்டிய அம்சங்கள் யாவையெனில்: திவ்யதேசமாகிற மலையின்மேல் நிற்கும் ஸந்நிதியில் எம்பெருமான் குஹாவாஸியாய் எழுந்தருளியிருக்கின்றனர். அந்தக் குஹையே ஸ்வாமியினுடைய கர்ப்பக்ரஹம். அதன்மீது ஸ்வாமியினுடைய விமாநம் நிர்மித்திருக்கிறது. இந்தக் கர்ப்ப மந்த்ரத்தின் மேலே, ஏறக்குறைய நூறடி உயரத்தில், 2000; 3000 கனவடிப் பிரமாணமுள்ள சில பாறைகள், காலக்ரமத்தில், ஸந்நிதியின் தென்புறம் மண் மலையாக செங்குத்தாய் உயர்ந்திருப்பதின் மத்தியினின்று வெளிப்பட்டு, விமாநத்தின் மேல் விழத் தருணம் பார்த்திருப்பது போல், பயங்கரமாய்த் தெரிகின்றன. இந்தப்பாறைகள் விழுந்தால், திவ்யதேசம் நாமாவசேஷமாய் விடுமென்பதில் யாவரும் ஸந்தேஹம் கொள்ளவேண்டாம். ஸங்க காலத்தில் அதாவது பங்குனி மாஸம் 30-ம் உ ஞாயிற்றுக்கிழமை தினம் மேற்படி ஸந்நிதிக்கு எழுந்தருளியிருந்த ஸ்வாமிகளும், அதற்கு முன் அவ்விடம் சென்றிருந்த யாவரும், இந்தப் பாறைகளைக் கண்ணுற்றுச் சிந்தையில் மூழ்கியிருக்கின்றார்கள். அவற்றைச் சூர்ணமாக்கிக் கீழே தள்ளுவதில் விளம்பம் கூடாது. இது கிஞ்சித் அர்த்த வ்யயத்தால் ஸாதிக்கக்கூடியதே. கர்னூல் ஜில்லாவில் எஞ்சினீர் உத்யோகமாய் இருக்கிற நமது ஸம்ப்ரதாயத்தைச் சேர்ந்த ஸ்வாமி ஒருவர், அபேக்ஷித்தால் இந்தப் பாறைகளைப் போக்கத்தக்க உபாயம் சொல்லுவர். மேலும் அவ்விடம் இருக்கும் ப்ரபல கனவான்கள் அனைவரும் அவ்வவர்க்குத் தக்கபடி ஸஹாயம் செய்வார்கள் என்பதில் ஸந்தேஹமில்லை. இதைப்பற்றி மேற்படி திவ்யதேச தர்ம பரிபாலநத்தை ஏற்றுக் கொண்டிருக்கும் ஸ்வாமி உடனே யோசனை செய்யத்தக்கவர்.



அவருடைய ஏஜண்டு உ. வே. ஈ. குப்புஸாமி அய்யங்காரிடமும் இந்த விஷயத்தைப்பற்றித் தக்கப் பிரயத்நம் விளம்பிக்காமல் எடுத்துக்கொள்ள வேண்டுமெனத் தெரிவித்துக் கொள்ளப் பட்டிருக்கிறது.

ஸந்நிதிகளில் பூஜகர்களாக நியமிக்கப்பட்டவர்கள் பாஞ்சராத்ரிகளெனப் பெயர் வகித்தும், புண்ட்ர விஷயம் தவிர, மற்றை யாவற்றிலும், அந்தத் தேசத்திய ஸாதாரண ஸ்மார்த்தர்களுடைய ஆசாரத்தை அநுஸரிக்கிறவர்கள். பார்வைக்கு ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கு ஏற்பட்ட வைலக்ஷண்யம் பொருந்தாமலும், ஆராதந க்ரமங்களில் ஸாமாந்ய ஜ்ஞாநஹீநர்களாயும் அவர்கள் இருப்பதாக ஊஹிக்கக்கூடிய நிலைமையில் இருக்கிறார்கள். உ. ஈ. குப்புஸாமி அய்யங்காரும் ப்ரும்ஹோத்ஸவங்களுக்கு ஸ்ரீமடத்தினின்று ஆராதகர்கள் வந்து பெருமாளுக்கு உசிதமான அபிஷேகாதிகளை நடத்தி உத்ஸவாரம்பம் செய்வதாகச் சொல்லுகிறார். இதரகாலங்களில் அந்தத் தேசத்திய பூஜகர்கள், மலையின்மேல் திவ்ய தேசத்தெம்பெருமானுக்கு நித்யபூஜையின்றி காதாசித்கமான பூஜை மாத்ரம் செய்வதாகத் தெரியவருகிறது. நமது ஸம்ப்ரதாயத்துக்கு மூல ஸ்தாநமான திவ்யதேசம் இந்த நிலைமையில் வந்திருப்பது நமக்கு ஸ்ரேயஸ்கரமன்று. ஆறு அல்லது எட்டு ஸ்ரீ வைஷ்ணவர்கள் கீழஹோபிலத்தில் நித்யவாஸிகளாய்க் குடிகொண்டு, மாற்றுக் கட்டாய், மலையின்மேல் திவ்யதேசத் தெம்பெருமானுக்கு நித்யாராதநம் கண்டருளப்பண்ணவேண்டும். இதற்கு வேண்டிய ப்ரயத்நங்களை மடத்து ஸ்வாமியும், அவருடைய ஏஜெண்டும் கூடிய சீக்ரத்தில் செய்யத்தக்கவர்கள். அப்படிப்பட்ட ப்ரயத்நபரராய்த் தான் அவ்விடம் வந்திருப்பதாக ஏஜெண்டு குப்புஸாமி அய்யங்கார் வெளியிட்டிருக்கிறார். அவர் அப்படி வெளியிட்டது வாக் வ்யவஹாரத்தில் பர்யவஸிக்காதென்று மிகவும் நம்பியிருக்கின்றோம்.

கீழஹோபிலம் தேவாலயம் மூன்று ப்ராகாரமுள்ளது. வெளி ப்ராகாரம் கோபுர த்வார சேஷமாய் இப்போது நிற்கிறது. இரண்டாம் ப்ராகாரம் பாதிக்கு மேல் நிலைத்து நின்று மிகுதியான பாகம் ஜீர்ணித்திருக்கிறது. முதல் ப்ராகாரம் முழுவதும் நிலைத்திருக்கிறது. ஸந்நிதியின் முன், மஹாமண்டபம் உயர்ந்த வேலைப்பாடுடன் கூடிய ஸ்தம்பங்கள் நாட்டினவளவில் நின்றுவிட்டது.

இந்த ஸ்தம்பங்களினுடைய வேலைத்திறம் மிக்க வியக்கத்தக்கது. இதற்கு ஆவரணம் போடுவது துஸ்ஸாத்யமன்று. 'ஸவஹும் ஸமஹு வதாஜிதம்' என்கிறபடி, அர்த்தம் உண்டானால் இந்த மஹாமண்டபத்தை முடித்துக் கண்ணாரக் களிப்புடன் காணுதல் கூடும். மற்ற மண்டபங்களும் திருமடைப்பள்ளியும் தளவரிசையை அபேக்ஷிக்கின்றன. இந்த ஸந்நிதியை ஜீர்ணோத்தாரணம் செய்யும் பாக்யம் யாருக்குண்டோ நமக்குத் தெரிதலில்லை. கோபுரங்கள் முன்னிருந்தனவாம். இப்போதில்லை. ஸந்நிதி வீதி யென்பது இரு புறமும் மண்டபங்களமைந்து, மத்தியிலும் மண்டபங்களுடன் கூடியிருக்கின்றது. முற்காலத்தில் இரண்டாம் ப்ராகாரத்தைச் சுற்றிப் பஹுக்ருஹங்கள் இருந்ததாகத் தெரியவருகிறது. இப்போது யாதொரு க்ருஹமும் அவ்விடம் அற்றுப்போனதற்குக் காரணம் உதக ருாக்ஷ்யம் தான். ஆலயத்துக்குக் கீழும் மேலும் முற்காலத்தில் இரண்டு ஏரிகள் இருந்தபடியால், ஆலயத்தின் ஸமீபத்தில் ஆங்காங்கிருக்கும் கிணறுகளிலும், குளங்களிலும், ஜலக் குறைவின்றி யிருந்தது. ஏரிகளும், அவற்றின் கரைகளும், இப்போது முற்றிலுமில்லை. ஆனபடியால், குளங்களும் கிணறுகளும், தத்காலம் நீரற்று நிற்கின்றன. ஏரிகள் மறுபடியும் உண்டானால் அஹோபிலத்தில் ஜலக் குறைவு நீங்கும். இப்போது கால்மயில் தூரத்திலிருக்கும் ஆழ்வார் தீர்த்தமெனப் பெயர் வழங்கும் ஊருணியும், ஒரு மயில் தூரத்திலிருக்கும் பார்க்கவ தீர்த்தம் என்னும் ஊருணியும் தான் ஸ்ரீமதஹோபில வாஸிகளுக்கு ஜலாதாரங்களாய் விளங்குகின்றன. இவற்றைப் பெரிதாக்கவும், சுத்தப்படுத்தவும் கூடும். கவர்மெண்டு அதிகாரிகள் பார்க்கவ தீர்த்தத்தினின்று குழாய் வழியாய், அஹோபிலத்துக் கருகில், ஜலம்கொண்டுவர வேண்டுமென்றும், அதை மடத்துச் செலவில் செய்விக்கவேண்டு மெனவும், அபிப்ராயப்படுவதாய்த் தெரிகிறது. ஏஜெண்டு குப்புஸாமி அய்யங்காரும் இதை மடத்துச் செலவில் செய்விப்பதாய் சொல்லுகிறார். இது ஸாதாரண ஜனங்களுக்கு மிகவும் அநுகூலமாகு மென்பது திண்ணம். ஆனால், ஸந்நிதிக்கும் வைதிகர்களுக்கும் அவ்விதமாய்த் தருவித்த ஜலம் உபயோகப்படுமோ வென்பது யோசிக்கத்தக்கது.

வடமேற்கு வழியாய் ருத்ரவரத்தினின்றும், மேற்கு வழியாய் அல்லகட்டாவினின்றும், தென்மேற்கு வழியாய்ப் பாச்சேபல்லியினின்றும், ஸ்ரீமதஹோபிலமேற, மார்க்கம் மிகவும் ஸ்ரமத்தால்



நடக்கக் கூடியது. இம்மார்க்கங்கள் சீர்படுதல் ஸர்வ ஸேவார்த்திகளாலும் ப்ரார்த்திக்கத்தக்கது.

இவ்விதமாகவும், இன்னும் அநேக ப்ரகாரமாகவும், ஏராளமான கைங்கர்யங்களுக்கு, இந்த மஹாஸ்தலம் அவகாசம் கொடுக்கின்றது. இதை ஸமீப காலத்தில் பார்வையிட்ட கலெக்டர் துரையவர்கள், இந்தத் திவ்யதேசத்தின் நிலைமை ஹிந்து ஜனங்களுக்கு நீடித்த அவமானம் உண்டாவதற்கு ஆஸ்பதமா யிருக்கின்றதென்றும், மடாதிபதிகள் இதைச் சீர்படுத்த மிக்க தநம் ஏன் உதவக்கூடாதென்றும், அபிப்ராயப்பட்டதாய்க் கேள்வியுறுகின்றோம். இவ்விதமாகவே, இந்த ஸ்தலத்தைக் கண்ணுற்று, மற்ற அதிகாரிகளும் யோசிக்கின்றார்கள். அந்த நாட்டின் ஜந ஸாமாந்யமும், தங்கள் திவ்ய தேசத்தின் பெருமாளாதாரமாய் வ்ருத்தியான மடத்தின் ஸம்பத்து முழுவதும் தங்கள் திவ்யதேசத்தின் ஜீர்ணோத்தாரணத்துக்காகவும், நித்யாராதநத்துக்காகவும், உபயோகப்படவேண்டியது ஆவஶ்யகமென்று எண்ணுகிறார்கள். இந்த யோசனையை, மடாதிபதிகளும் அவர்களுடைய கார்யஸ்தர்களும், அங்கீகரிக்கமாட்டாரானாலும், மடத்தினுடைய த்ரவ்யம் உசிதமாக ஸ்தலத்தின் சீர்திருத்தத்துக்காக உபயோகப்பட வேண்டுமென்பதை அவர்களும் ஒப்புக்கொள்ளக்கூடும். ஸ்தலத்தின் உண்டிகள், மான்யங்கள் இவற்றின் வரும்படியை யதேச்சையாகக் கைப்பற்றி இஷ்டப்படிப் பெருமாளாராதநத்தையும் உத்ஸவங்களையும் நடத்திக்கொண்டு, வர்ஷத்துக்கு இவ்வளவென்று மடத்துக்குத் தொகை செலுத்தச்சொல்லி, முத்ரைகர்த்தரென்பார்களை அனுப்பிவிடுவதால் மாத்ரம், தேவாலயங்களின் தர்மம் பரிபாலிக்கப்பட்டதாமோ? இந்த முத்ரை கர்த்தர்கள் தங்களுடைய தௌராத்ம்ய ப்ரகாசத்தால் மடத்திற்கும், மற்றைய ஸ்ரீவைஷ்ணவர்களுக்கும், எவ்வளவோ மானக்கேட்டைக் கொண்டுவிடுகிறாரென்பதை ஏன் யோசிக்கக்கூடாது? இவர்களுடைய அநாதரவால் ஸந்நிதிகளுக்குப் புறம்பேயுள்ள யாவத்ப்ரதேசமும் பாரஸ்டு டிபார்ட்மெண்டாரால் ஆக்ரமிக்கப்பட்டும் போய் விட்டதே! நாம் தக்கபடி முயன்றால், இந்த டிபார்ட்மெண்டு அதிகாரிகள் ஸந்நிதிகளுக்குக் கூடியமட்டில் உபகரிக்க இசைவாரென்பதாய் எண்ணக்கூடியதாயிருக்கிறது. பகவான் விஷயத்தில் கிங்கரர்கள் ஏற்பட்டால் எல்லாரும் ஸஹகரிப்பாரென்பதில் யோசனை வேண்டாம். இதில்

முக்ய ப்ரயத்நம் மடாதிபதியான ஸ்வாமியைச் சேர்ந்தது. அந்த ஸ்வாமி இந்த மஹா கைங்கர்யத்தை ஏற்றுக்கொள்வதாய் ஏஜெண்டு வாயால் சொன்னால் மாத்திரமே போதாது. த்ரவ்ய ஸஹாயம் செய்வதுடன், தகுந்த கர்னூல் ஜில்லா பெரிய மனுஷ்யர்களை ஸ்வாமி இக்கைங்கர்யார்த்தமாக நியமித்தல் வேண்டும். நமது ஸபையாரும் இந்தக் கைங்கர்யத்தில் யதா சக்தி முயல ஸித்தர்களாயிருக்கின்றனர். கார்யம் ஆரம்பமானால் அபிமாநிகளாவார் பலர். அவரிடம் சென்று கைங்கர்ய நிமித்தம் த்ரவ்ய ஸம்பாதநம் ஸுகரமாய்ச் செய்யலாம். இவ்விதமாய் ஸ்வகைங்கர்ய ஸித்தியில் பகவான் ஸ்வயமாக ப்ரவர்த்திப்பர் என்று நம்புகிறோம். இது தான் இந்த ஸபையின் வர்ஷோத்ஸவ விபவத்தின் கருத்து. இதைத் தவிர்த்து வேறொரு கார்யத்தையும் இத்தருணம் ஸபையார் மேற்கொண்டாரில்லை. இவர்கள் ப்ரயத்நம் பலபர்யந்தமாய் முடிவதற்குப் பகவதநுக்ரஹம் வேண்டும். பகவான் கலி கோலாஹல க்ரீடையில் அதிகமாய் ரமித்தானாகில் நாமேது செய்யக்கூடும்? கர்மத்தில் மாத்ரம் நமக்கு அவன் அதிகாரம் கொடுத்திருக்கிறான். பலம் அவன் க்ருபையால் உண்டாகவேண்டியிருக்கிறது. அதையும் அவனடியார்க்கிரங்கி அவன் கொடுக்கவேண்டும். ஸர்வ கல்யாணகுண ஸம்பூர்ணனாயும், ஸத்யகாமனாயும் இருக்கப்பட்ட எம்பெருமானுக்கு, ஆசையென்றும் குறையென்றும் உண்டோ? அவன் கோயில்கள் அடியார்க்கென்றே நன்கிருக்கவேண்டும். அடியார்கள் இல்லாராயின், அடியாரென நின்றார் அவ்வண்ணம் அவன் திருவுள்ளத்தில் நின்றிலராயின், அஹோபிலத்தின் தத்கால ஸ்திதி அதைவிட்டு எப்படி நீங்கும்? கேவலம் அகிஞ்சநர்களாயும் அநந்யகதிகளாயும் இருக்கப்பட்ட நாம் அவனருள் ஒன்றை நம்பியே, இந்த வ்யாபாரத்திலிறங்குகிறோம். பலம் உண்டாவதற்கு ப்ரதிபந்தகங்கள் பல ரூபமுமாயிருக்கலாம். பலத்தை நாம் காணவிடினும், '[illegible]' என்கிறபடி, நம் ப்ரயத்நம் வ்ருதா போகாது. உத்தேசித்த பலம் கிடைக்காவிட்டாலும், கைங்கர்ய பரம்பரையில் சேருமென்பதில் ஸந்தேஹமில்லை. ஆயினும், அடியார்க்கிரங்கும் சரண்யன் நம்மிச்சையை ஈடேற்றுவனென்று த்ருடமாய் நம்புகிறோம்.

---

## ஸ்ரீ அஹோபிலத்தில் கூடின மஹா ஸபையில் செய்த தீர்மானங்கள்.

1. 1914௵ ஏப்ரல்௴ 11௳ கீழ் அஹோபிலம் ஸ்ரீ ப்ரஹ்லாத வரதன் ஸந்நிதியிலும், மேல் அஹோபிலம் ஸ்ரீ ந்ருஸிம்ஹன் ஸந்நிதிகளிலும், திருவாராதநமும் மஹோத்ஸவங்களும் க்ரமமாகவும் யாதொரு குறைவுமின்றி நடக்கவேண்டியதற்குத் தக்க ஏற்பாடுகள் செய்யவேணுமென்று ஸ்ரீ ஸந்நிதி ஸம்ப்ரதாயஸ்தர்களும், மற்றும் அநேக பக்தர்களும் ஸ்ரீ அஹோபில மடத்தில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ அழகிய சிங்கர் ஸந்நிதியில் ப்ரார்த்திக்கிறார்கள் என்று தீர்மானிக்கப்பட்டது.

[ஸ்ரீமான் டி. ராஜகோபாலசாரியரால் ப்ரேரேபிக்கப்பட்டு, ஸ்ரீமான் N. கிருஷ்ணமாசாரியரால் ஆமோதிக்கப்பட்டு ஸபையாரால் அங்கீகரிக்கப்பட்டது.]

2. ஸ்ரீ அஹோபிலம் ஸந்நிதி ஜீர்ணோத்தாரண விஷயமாய்த் தகுந்த க்ருஷிகளைச் செய்வதற்காக அடியிற்கண்டிருக்கும் கனவான்கள் சேர்ந்ததோடு, இன்னும் சேரத்தகுந்த கனவான்களைச் சேர்த்துக்கொள்ள அதிகாரத்துடன் கூடியதுமான கமிட்டி ஒன்று ஏற்படுத்தப்பட்டது:—

ஸபாத்யக்ஷர்:— His Highness ராஜா ஸீதாராம பூபால பலவந்த பகதூர் - கத்தவால் மஹாராஜா.

உபஸபாத்யக்ஷர்:—திவான் பகதூர் - கோவிந்ததாஸ் சதுர்ப்புஜ தாஸ்காரு Sherrif of Madras.

அங்கத்தினர்:— Tho Hon'ble. Mr. C. விஜயராகவாசாரியர். (Salem.)
,, Rao Bahadur. P. கேசவப்பிள்ளை.
,, ,, M. ராமசந்த்ர ராவ்.
M.R.Ry. Dewan Bahadur K. கிருஷ்ணஸாமி ராவ்.
,, ,, T. T. ரங்காசாரியர்.
,, Rao Bahadur சேஷய்ய சாஸ்த்ரிகள்.
,, S. ஸ்ரீநிவாஸ அய்யங்கார்.
,, T. ராஜகோபாலாசாரியர்.
,, T. நரஸிம்ம அய்யங்கார்.
,, N. ரங்கஸாமி அய்யங்கார்.
,, B. K. கருடாசாரியர்.
,, N. கிருஷ்ணமாசாரியர்.
,, T. கோதண்டராம அய்யங்கார்.
,, V. ராகவாசாரியர்.
,, C. துரைஸாமி அய்யங்கார்.
,, K. ஸுந்தராசாரியர்.
,, C. ராஜகோபாலாசாரியர்.
,, சுத்தபல்லி. ராமசந்த்ராரெட்டி.

M. R. Ry. ஜங்கம் பகீர் ரெட்டி.
,, ருத்ரவரம் திம்மய்யா.
,, கோஷ்பாடு சுப்பாரெட்டி.

[ஸ்ரீமான் டி. டி. ரங்காசார்யரால் ப்ரேரேபிக்கப்பட்டு, ஸ்ரீமான். வி. துரைஸாமி அய்யங்காரால் ஆமோதிக்கப்பட்டு, அங்கீகரிக்கப்பட்டது.]

3. அடியில் கண்டிருக்கும் விஷயங்களைப் பர்யாலோசித்தும், விசாரித்தும் மறு ஸம்வத்ஸராந்த ஸபைக்கு அறிக்கை அனுப்பும்படிக்கும், ஸ்ரீமான். N. ரங்கஸாமி அய்யங்கார், Rao Bahadur சேஷய்ய சாஸ்த்ரிகள், ப்ரொ தட்டீர். ஸுந்தராசார்லு, T. நரஸிம்ம அய்யங்கார், C. ராஜகோபாலாசாரியர், V. ராகவாசார்யர், ராமசந்த்ராரெட்டியார், ருத்ரவரம் திம்மய்யகாரு, கோயில் குண்டலா, ராமய்யகாரு, இவர்கள் நிர்வாஹ ஸங்கத்தின் அங்கத்தினராக நியமிக்கப்பட்டார்கள்.

i. ஸ்ரீ அஹோபிலத்துக்குப் போகும் பாதைகளைச் சீர்திருத்தம் செய்தல்.
ii. கீழ் அஹோபிலத்தில் ஜல ஸௌக்யத்தை உண்டாக்கவேண்டிய விஷயம்.
iii. கவர்மெண்டு காட்டிலாகாவால் சேர்த்துக்கொள்ளப்பட்ட ஸ்ரீ ஸந்நிதிக்குச் சேர்ந்த ஸொத்துக்களை வசப்படுத்த மார்க்கங்கள்.
iv. கீழ் அஹோபிலத்தில் ஸ்ரீ ஸந்நிதி ஜீர்ணோத்தாரணம்.
v. ஸ்ரீ அஹோபிலம் ஸந்நிதியைச்சேர்ந்த ஸொத்துக்கள் எந்தெந்த இடங்களில் எவ்வளவு இருந்தபோதிலும் அவைகளை வரப்பெறும் விஷயம்.
vi. ஷை ஸந்நிதியைச்சேர்ந்த ஸொத்துக்களின் வரும்படியை அதற்கே உபயோகப்படுத்தும்படி செய்யவேண்டிய மார்க்கம்.

[ஸ்ரீமான். N. ரங்கஸாமி அய்யங்காரால் ப்ரேரேபிக்கப்பட்டு, ஸ்ரீமான். கோதண்டராம அய்யங்காரால் ஆமோதிக்கப்பட்டு, ம-ா-ா-ஸ்ரீ பகீர் ரெட்டியால் ஊர்ஜிதமாக்கப்பட்டுச் சபையாரால் அங்கீகரிக்கப்பட்டது.]

4. ஷை உத்தேசங்கள் நிறைவேறுவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை ஷை நிர்வாஹ ஸங்கத்தாரே நடத்திக்கொள்ள இதனால் அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

[ம-ா-ா-ஸ்ரீ. ஜங்கம் பகீர் ரெட்டியாரால் ப்ரேரேபிக்கப்பட்டு, கோயில் குண்ட்லா ஸ்ரீமான். ராமய்யரால் ஆமோதிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டது.]

5. கர்னூல் ஜில்லா கலெக்டர் துரையவர்கள் இந்த தேவஸ்தான விஷயமாய் மிக்க ச்ரத்தை வஹித்திருப்பதற்கும், இந்த ஸங்கத்தைத் தமது ஸஹாயத்தால் பூர்த்தி செய்ததற்கும் ஸபையார் வந்தனம் அளிக்கிறார்கள்.

[சேர்மன் கோவிந்ததாஸ் சதுர்ப்புஜதாஸ் அவர்களால் ப்ரேரேபிக்கப்பட்டு ஸபையில் அங்கீகரிக்கப்பட்டது.]

6. இந்த கமிட்டியார் செய்யவேண்டியவைகளுக்குத் தேவையான ப்ரதம செலவுகளுக்கு 'ஒரு ரூபாய் பண்டு' என்று ஒரு பண்டு ஸ்தாபிக்கப்பட்டது. அநேகர் அதற்கு ஸஹாயம் செய்தார்கள். பிறகு ஸங்கம் கலைந்தது.

# கடிதங்கள்.

## (1.)

ஸ்ரீ வேதாந்த தீபிகை பத்ராதிபருக்கு:—

ஸ்ரீ ந்ருஸிம்ஹன் அவதார ஸ்தலமான ஸ்ரீ அஹோபிலத்தில் ஓர் மஹாஸங்கம் கூடி அநேகவிடங்களிலிருந்து வித்வான்களும் ஜ்ஞானவான்களும் உபந்யாஸங்களைச் செய்யப்போகிறார்கள் என்கிற ஸமாசாரத்தைக் கேட்க மிகுந்த ஸந்தோஷமுண்டாகிறது.

கங்கை, ஸிந்து, யமுனை முதலிய புண்ய நதிகளின் ப்ராந்த்யங்களில் வ்யாஸ பராசராதி மஹரிஷிகளும், பிற்காலத்தில் டங்கர் குஹதேவர் முதலான ஆசார்யர்களும் பகவானுடைய கடாக்ஷத்தை அடைய வேண்டும் என்கிற ஆசையுடைய சேதநர்களுக்கு கர்ம ஜ்ஞான மார்க்கங்களை விட பக்தி மார்க்கமே அதிக ஸுலப மென்று உபதேசித்தார்கள். இப்பரத கண்டத்தின் உத்தர பாகத்தில் முக்யமான வேதாந்த க்ரந்தங்களெல்லாம் ஸம்ஸ்க்ருதத்தில் எழுதப்பட்டிருப்பதால் அவைகள் எல்லாருக்கும் உபயோகப்படாமல் போயின. தக்ஷிண தேசத்தில் தெய்வப்புலமை வாய்ந்த ஆழ்வாராதிகள் வேதாந்தார்த்தங்களை திவ்ய ப்ரபந்த ரூபமாய் நான்கு வர்ணத்தாரும் அறிந்துகொள்ளும்படி பேருதவி செய்தார்கள்.

வடமொழியிலுள்ள வேதாந்த க்ரந்தங்கள்போல தென்மொழியில் அருளிச் செய்யப்பட்ட திவ்ய ப்ரபந்தங்களும் துல்ய ப்ரமாணங்கள் என்று ஸ்தாபித்த ஆசார்யர்களில் ப்ரதமாசார்யன் நாதமுனிகள். அவருக்குப்பின் இக்கொள்கையைப் பரவச்செய்து திவ்ய தேசங்கள்தோறும் ஆழ்வார்கள் கோயில்கொண்டு திருவாராதநம் கண்டருளும்படி செய்தவர் ஸ்ரீ பாஷ்யகாரர். இவருடைய காலத்தில் ஸ்ரீ வைஷ்ணவ ஸம்ப்ரதாயம் ஆசாரம் இவைகள் தமிழ் நாடுகளில் பரவினதுபோல மற்றைத் தேசங்களில் வ்யாபிக்கவில்லை. லோகமெல்லாம் இந்த ஸம்ப்ரதாயம் பரவவேண்டும் என்று தக்க முயற்சி எடுத்து க்ருஷி செய்தவர்களில் முக்யமானவர் ஸ்ரீ ஆதிவண் சடகோப ஜீயர். இம்மஹான் தன்னுடைய காலத்தில் விவாதப்பட்டுச் சிதறிக் கிடந்த ஸ்ரீ வைஷ்ணவர்களை ஒன்று சேர்த்து, ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹனே யாவருக்கும் ஆசார்யன் என்கிற பாவத்தை வ்ருத்தி பண்ணி, தானும் அவருடைய திவ்ய பாதுகா ஸேவகனென்று நடந்து காட்டி, வடநாடு தென்நாடு ஆந்த்ரம் தமிழ் கன்னடம் என்று தேச பேதங்களால் உண்டான வ்யத்தியாஸங்களைக் குறைவுபடச் செய்து, இந்த ஏற்பாடுகள் வெகு காலம் நடந்துவர வேண்டும் என்கிற எண்ணத்தினால் ஸ்ரீ அஹோபில மடத்தை ஸ்தாபித்தார்.

இவர் அபிப்பிராயத்துக் கிணங்க வெகுகாலத்திற்குப் பிறகு இப்போது ஸ்ரீ அஹோபிலத்திலேயே தேசாதேசங்களிலிருந்து பண்டிதர்களும மஹான்களும் மற்ற அபியுக்தர்களும் ஒன்று சேர்ந்து மஹா ஸபையைக் கூட்டி மறுபடியும் ஸ்ரீ அஹோபிலம் வ்ருத்தியாகும்படி ப்ரயத்தனம் செய்வது மிகவும் கொண்டாடத்தக்கது. ஸிஷ்ய ஸபையார் எடுத்த கார்யம் நிர்விக்னமாய் நிறைவேறவேண்டுமென்றும் நாளடைவில் இஹத்துக்கும் பரத்துக்கும் உபயோகமாக வித்யாப்ரவசநத்திற்கு ஒரு ஸர்வகலாசாலை ஸ்ரீ அஹோபிலத்தில் ஏற்படவேண்டுமென்றும் ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்மனை அநவரதம் ப்ரார்த்திக்கிறேன்.

மஸூலிப்பட்டணம்,
7—4—14. } டி. எஸ். ஸ்ரீநிவாஸராகவாசார்யர்.

## (2.)

## ஸ்ரீ அஹோபிலம் ஜீர்ணோத்தாரண கமிடி செலவுகளுக்கு ரூபாய் பண்டு.

ஸ்ரீ வேதாந்த தீபிகை பத்ராதிபருக்கு:—

இந்த ஸஞ்சிகையில் மற்றோரிடத்தில் ப்ரசுரமாயிருக்கும் ஸ்ரீ அஹோபிலத்தில் நடந்த மஹா ஸங்கத்தின் தீர்மானங்களால் ஸ்ரீ அஹோபிலம் ஸந்நிதி ஜீர்ணோத்தாரண விஷயமாக நடவடிக்கைகள் நடத்துவதற்கு ஓர் ( Renovation Committee ) கமிடியும் அதனை விசாரித்துப் பராமர்சிக்க ஓர் நிர்வாஹ ஸங்கமும் நியமிக்கப்பட்டதாக தீபிகாபிமானிகளுக்கு ஏற்படும். சில ஔசித்யங்களை உத்தேசித்து ஜீர்ணோத்தாரணத்துக்கு வேண்டிய த்ரவ்ய ஸஹாயம் இப்போது அபேக்ஷை இல்லை. ஆனால் ஷை ஸங்கத்தார் ஜீர்ணோத்தாரண கைங்கர்யத்துக்கு முன் யோசித்துச் செய்யத்தக்க அம்சங்களுக்கு வேண்டிய த்ரவ்ய ஸஹாயம் இப்போது நேர்ந்தால் அவர்களுடைய ப்ரதம செலவுகளுக்கு அநுகூலமாயிருக்கும். அதை உத்தேசித்து ஒரு ரூபாய் பண்டு என்று ஓர் பண்டு உபக்ரமிக்கப்பட்டிருக்கிறது. ஸதுவாகவும் ப்ரகாத்தினும் பணம் வரக்கூடும் எனக்கருதி ஷை ஸபையில் இந்த பண்டு ஆரம்பம் செய்து நடந்துவருகிறது.

ஸ்ரீ அஹோபிலம் ஜீர்ணோத்தாரண விஷயத்தில் அந்வயிக்க இஷ்டம் எல்லோருக்கும் உண்டாயிருக்குமாதலால் இப்போது அபேக்ஷிக்கப்பட்ட 1—0—0 ரூபாய் ஒவ்வொரு பக்தரும் கமிடியாருக்கு அனுப்புவார்கள் என்று நம்புகிறோம்.

இந்த நிர்வாஹ ஸங்கத்துக்கு ப்ரொதட்டூர் வக்கீல் கூரம் ஸுந்தராசாரியரும், சித்தூர் ராஜகோபாலாசார்யரும் காரியதரிசிகளாயிருக்கிறார்கள். பணம் அனுப்ப விரும்புவோர் ஷை யாரில் ஒருவர்க்கு ரூ. 1-க்குக் குறைவில்லாமல் மணியார்டர் அனுப்ப வேணும்.

18—5—14.

ஸி. ராஜகோபாலன்,
காரியதரிசி, சித்தூர்.



# ஸ்ரீ மடத்து ஸம்பந்தங்களான சில ரிகார்டுகள்.

## (1) ஸ்ரீ அழகிய சிங்கருடைய உயில்.

1913ஞ் ஜனவரிமீ 19உ பரிதாபிஞ் தைமீ 7உ தஞ்சாவூர் ஜில்லா மன்னார்குடி தாலூகா கஸ்பா மன்னார்குடியிலிருக்கும் ஸ்ரீ அஹோபில மடம் ஸ்ரீ லக்ஷ்மீ நரஸிம்ம ஸ்வாமி ஸந்நிதியில் 39-வது பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராயிருக்கிற ஸ்ரீ வண்சடகோப ஸ்ரீ பராங்குச யதீந்த்ர மகாதேசிகராகிய நாம் நல்ல ஞாபகத்துடனும் நல்ல எண்ணத்துடனும் எழுதி வைத்த உயில். நமக்கு உடம்பு இப்பொழுது அசக்தமாயிருக்கிற படியாலும் நமக்குப் பிற்காலம் இந்த அஹோபில மடம் ஆஸ்தானத்துக்கு மடாதிபதியாயிருந்து ஸகல கார்யங்களை நடத்திவர வேண்டியதற்காக ஒருவரை நியமிக்க வேண்டியது அவச்யமாயிருக்கிற படியாலும் நாம் இந்த உயில் மூலமாய் இந்த அஹோபிலமடம் ஆஸ்தானத்தை நிர்வஹிக்கக் கூடியவராயும் இந்த மடத்து ஸிஷ்யராயுமிருக்கிறவரும் இந்த மடத்தின் ஸம்ப்ரதாயத்தில் நல்ல யோக்யராயும் பண்டிதராயு மிருக்கிற திருநெல்வேலி ஜில்லா அம்பாஸமுத்ரம் தாலூகா வடக்கு காரக்குறிச்சியிலிருக்கும் வரதாசார்யர் குமாரர் வித்வான் அய்யமாசார்யர் என்கிற வெங்கட க்ருஷ்ணமாசார்யர் என்பவர் என்னுடைய ஜீவதசைக்குப் பிறகு இந்த அஹோபிலமடத்தினுடைய ஸகல வைதிக லௌகிக கார்யங்களையும் மடத்தின் ஆதீனத்தைச் சேர்ந்த ஸகல தேவஸ்தானங்களையும் மடத்தினுடையவும் ஷை தேவஸ்தானங்களினுடையவும் ஸ்தாவர ஜங்கம முதலிய யாவத்து சொத்துக்களையும் மடத்தின் ஆசாரப்படி நம்முடைய ஆஸ்தானத்திலிருந்து பரிபாலித்துவரவேண்டியதற்காக ஷை வித்வான் அய்யமாசார்யர் என்கிற வெங்கட க்ருஷ்ணமாசார்யரை இந்த உயில் மூலமாய் நாம் நியமித்திருக்கிறோம். இந்த மடத்தின் ஆஸ்தானத்திற்கு-ஸ்ரீ ஸாகோவஸ்ரீ-மேல்கண்ட அய்யமாசார்யர் என்கிற வெங்கடக்ருஷ்ணமாசார்யருக்குப் பிறகு கும்பகோணம் பெரிய தெரு சக்கரவர்த்தி வெங்கடாசார்யர் குமாரர் சக்ரவர்த்தி ஸ்ரீநிவாஸாசார்யர் தத்காலம் பால்யமாயிருப்பதால் ஷை வெங்கடக்ருஷ்ணமாசார்யருக்குப் பிறகு இந்த ஆஸ்தானத்தை அடையவேண்டியது.

ஸ்ரீ ஸாகோவஸ்ரீ:

மன்னார்குடி திருப்பாற்கடல் மடத்துத் தெருவிலிருக்கும் கோட்டூர் ஸ்ரீநிவாச முதலியார் குமாரர் சடகோப முதலியார் அறிவேன்.

மன்னார்குடி திருப்பாற்கடல் தெருவிலிருக்கும் நாராயணஸாமி ஐயர் குமாரர் வக்கீல் கோதண்டராமய்யர் அறிவேன்.

மன்னார்குடி க்ராம முன்சீபு நீலமேகய்யங்கார் அறிவேன்.

ஸ்ரீ அஹோபிலமடம் ஏஜண்டு சேஷ க்ருஷ்ணய்யங்கார் குமாரர் ஸி. குப்புசாமி அய்யங்கார் அறிவேன். கெட்டெழுத்துள்பட.

## (2) ஸ்ரீ அழகிய சிங்கருடைய ஸ்ரீமுகங்கள்.

1913௵ ஏப்ரல்௴ 14௳ தஞ்சாவூர் ஜில்லா மன்னார்குடியில் ஸ்ரீ அஹோபிலமடம் ஸ்ரீ லக்ஷ்மிந்ருஸிம்ஹ ஸ்வாமி ஸந்நிதியில் 39-வது பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராய் ஸ்ரீவண் ஶடகோப ஸ்ரீ பராங்குஶ யதீந்த்ரமஹா தேஶிகராகிய நாம் திருநெல்வேலி ஜில்லா அம்பாஸமுத்ரம் தாலூகா வடக்கு காரக்குரிச்சியிலிருந்து தத்காலம் ௸ மன்னார்குடியில் வந்திருக்கும் வரதாசார்யர் குமாரர் அய்யமாசார்யர் என்கிற வெங்கட க்ருஷ்ணமாசார்யருக்கு அநுக்ரஹித்துக் கொடுத்த மங்களாஶாஸந ஸ்ரீமுகம்.

1913௵ ஜனவரி௴ 19௳ நம்மால் எழுதிவைத்திருக்கிற உயில் படிக்கும் 1913௵ ஜனவரி௴ 20௳ நம்மால் உமக்கு எழுதிக் கொடுத்திருக்கிற ஸ்ரீமுகப்படிக்கும் நம்முடைய ஜீவதசைக்குப்பிறகு நீர் ஸந்யாஸம்செய்துகொண்டு இந்த மடத்தின் ஸகல லௌகிக வைதிகம் முதலிய எல்லா நடவடிக்கைகளையும் மடத்தின் ஸம்ப்ரதாயப்படி ஆஸ்தாந நிர்வாஹம் பண்ணிக்கொண்டு வரவேண்டியதாக எழுதிவைத்திருந்தாலும், இப்பொழுது நமக்கு நேரிட்டிருக்கிற தேஹ அஸௌகர்யமானது பெருமாள் ஆராதநம் முதலியன செய்யவும் மடத்தின் இதர லௌகிக வைதிக கார்யங்களைப் பார்க்கவும் அஶக்தமாய் இருப்பதால் நீர் ஸந்யாஸத்தைச் செய்துகொண்டு பெருமாள் ஆராதநம் முதலிய கார்யங்களையும் மடத்து ஸம்ப்ரதாயப்படி லௌகிக வைதிக ஸகல கார்யங்களையும் செய்துகொண்டு வரவேண்டியது. நம்முடைய ஜீவதஶையுள்ளவரையில் நம்முடைய அநுமதியின்பேரில் மேலே கண்டபடி இந்த மடத்தின் கார்யங்கள் யாவற்றையும் செய்துகொண்டு வரவேண்டியது. பெருமாள் ஹம்ஸமுத்ரையும் கொடுத்துவிட்டேன்.

ஸ்ரீ ஶடகோபஸ்ரீ.

(Sd.) Witness K. G. SRINIVASA MUDALIAR,
Champakavilas Mannargudi, 17-4-13.

(Sd.) K. GOPALA IYENGAR, Retired Assistant Engineer,
Mannargudi, 17-4-13.

and 28 Others.



## (3) இன்டரிம் இஞ்சங்ஷன்.

### IN THE COURT OF THE SUBORDINATE JUDGE AT NEGAPATAM

**O. S. No. 94 of 1913.**

Dewan Bahadur T. T. Rangachariar, B.A., B.L. and others } *Plaintiffs.*

1. Sri Van Satakopa Sri Parankusa Yatindra Maha Desikan, the present jeer and trustee of the Ahobila Mutt, residing at Mannargudi.
2. Karakurichi Venkatakrishnama Chariar *alias* Ayyama Chariar, son of Varada Chariar, now residing at the said Mannargudi ... 1 & 2 *Defendants.*

To

The [above] 1 and 2 Defendants.

Whereas the Plaintiffs pray for the issue of a *temporary* injunction restraining 1st Defendant from proceeding with the appointment and installation of the 2nd Defendant or of the 3rd Defendant or any other person as his successor in the plaint mentioned and from delivering possession of the Mutt or its properties to either of them, and also restraining 2nd and 3rd Defendants from entering upon the office and taking possession of the Mutt and its properties, you are hereby restrained by the interim injunction from doing any of the acts mentioned above, till the disposal of this petition.

Given under my hand and the seal of the Court this 15th day of April 1913.

(Sd.) V. K. RANGASAMI AIYANGAR,
*Ag. Sheristadar.*

The original is sealed with the seal of the Court of the Subordinate judge of Negapatam.

Temporary injunction warrant *to* Defendants 1 & 2.

Batta 4-0-0 Special 2-0-0 /15/4.

Emergent. By order (Sd.) V. K. RANGASAMI AIYANGAR,
*Ag. Shr.*

## (4) இஞ்சங்ஷன் நோடீஸும் ப்ராஸ்ஸெர்வருடைய ரிபோர்ட்டு முதலியதும்.

# IN THE COURT OF THE SUB JUDGE AT NEGAPATAM.

**O. S. No. 94 of 1913.**

Dewan Bahadur T. T. Rangachariar, B.A., B.L., and others } *Plaintiffs.*

1. Sri Van Satakopa Sri Parankusa Yatindra Maha Desikan, the present Jeer and trustee of the Ahobila Mutt, residing at Mannargudi.
2. Karakurichi Venkatakrishnama Chariar *alias* Ayyama Chariar, son of Varada Chariar, now residing at the said Mannargudi ... ... 1 & 2 *Defendants.*

To

The above 1 and 2 Defendants.

Whereas the Plaintiffs have made application to this Court for the issue of a temporary injunction restraining 1st Defendant from proceeding with the appointment and installation of the 2nd Defendant or of the 3rd Defendant or any other person as his successor in the plaint mentioned and from delivering possession of the Mutt or its properties to either of them and also restraining 2nd and 3rd Defendants from entering upon the office and taking possession of the Mutt and its properties in O. S. No. 94 of 13, this is to give you notice that you are to appear before this Court on the 26th day of July 1913 either in person, or by a pleader of this Court, or agent duly authorised and instructed, to show cause, if any, why temporary injunction should not be granted.

Given under my hand and the seal of the Court this 15th day of April 1913.

By Order: (Sd.) V. K. RANGASAMI AIYANGAR, *Ag. Shr.*

The original is sealed with the seal of the Court of the



Subordinate Judge of Negapatam.

Notice to Defendants 1 and 2 Batta 1-8-0.

Special 0-12-0 /15/4/ Emergent.

Proper fees levied. By order.

(Sd.) V. K. RANGASAMI AIYANGAR, *Ag. Shr.*

1913௵ ஏப்ரல்௴ 20௳ மாலை 3-மணிக்கு, இதில் கண்ட முதல் ப்ரதிவாதிக்கு இப்போது அதிக சீக்காயிருப்பதால் எழுந்திருந்து கையெழுத்து போடமுடியாத ஸ்திதியாயிருப்பதால் அவர்களுடன் ஒன்றாய் வசித்து வருபவரும் ஷை முதல் பிரதிவாதியால் நம்மை இந்த அஹோபிலமடம் ஜீயர் ஸ்தானத்துக்கு நம்மை ஜீயராக ஏற்படுத்தி அந்தப்படி பரிபாலித்து வருபவருமாகிய நாம் ஷை முதல் பிரதிவாதிக்கு வந்த நோட்டிஸ் நகலைப் பெற்றுக்கொண்டோம். இரண்டாம் பிரதிவாதியாகிய நம்முடைய பெயர் ஸ்ரீ ரங்கநாத சடகோபயதீந்திர மஹா தேசிகன் என்று இருக்கவேண்டியதாக இருக்க, காரக்குரிச்சி அய்யமாசார்யர் என்கிற வெங்கட கிருஷ்ணமாசாரியர் என்று கண்டு எழுதியிருப்பதால் அந்த நோடீஸைப் பெற்றுக் கொள்ளவில்லை.

(ஒ) ஸ்ரீ ரங்கநாத சடகோப யதீந்திர மகா தேசிகன்.

(ஒ) மன்னார்குடி ஹரித்திராநதி வடக்கு வீதி வாத்தியார் ராஜகோபாலாசாரியர் அறிவேன்.

(ஒ) ஷை யூர் மகிமை சாமிய்யன் தெரு நரசிம்மய்யங்கார் குமாரன் தேசிகய்யங்கார் அறிவேன்.

(ஒ) ஷை யூர் கோபாலசமுத்திரம் தெற்கு வீதி நரசிம்மய்யங்கார் குமாரன் சீனிவாசகோபாலய்யங்கார் அறிவேன்.

(ஒ) கஸ்பா - கர்ணம் நரசிம்மய்யங்கார், ஷை 2-ம் பிரதிவாதியினுடைய நோட்டீஸ் நகலை அவர்கள் வசிக்கும் மடத்து வாசல் வெளிச்சுவற்றில் ஒட்டி வைத்திருக்கிறது.

(ஒ) கோபாலசமுத்திரம் தெற்கு வீதியில் இருக்கும் வித்துவான் சீனிவாசாசாரியர் ஸ்வீகார குமாரன் வித்துவான் ரெகுநாதசாமி அய்யங்கார் அறிவேன்.

(ஒ) கஸ்பா - கர்ணம் நரசிம்மய்யங்கார் ஸாக்ஷி.

1st Defendant being too ill to accept service, 2nd Defendant served for him but refused to accept service for himself. Vide peon's return within. Peon affirms.

(Sd.) A. VENKATAKRISHNAMA CHARI, Dy. Nazir, 21-4-13.

நாகப்பட்டணம் சப்கோர்ட்டார் அவர்கள் சமுகத்துக்கு,

1913ஞ் O. S. 94 - நெம்பர்.

ரிடர்ன்: — ஷை கட்டளையில் கண்ட பிரகாரம் நாளது மீ 16உ பகல் 1 - மணி சுமாருக்கு வாதி மனுஷியன் ஸஹிதமாய் கட்டளையில் கண்ட அஹோபிலமடத்துக்குப்போய் அங்கிருந்தவர்களிடம் பிராது இஞ்சங்ஷன் கட்டளை நோட்டீஸ் இவைகளின் விபரங்களை அறிவித்து, 1, 2 பிரதிவாதிகளை விசாரித்ததில் அவர்கள் அறைக்குள்ளே இருப்பதாக அவ்விடத்தில் நின்றுகொண்டிருந்தவர்கள் சொல்லத்தெரிந்து அங்கே போகப் பார்த்ததில் எங்களை அறைக்குள்ளே விடாமல் அங்கே நின்றவர்களில் ஒருவர் அறைக்குள்ளே போய் கதவை உள்தாப்பாள் போட்டுக்கொண்டார். மற்றவர்கள் கையெழுத்து வாங்கிக் கொடுப்பதாக மாலை 6-மணிவரையில் காலஹரணம் செய்ததால் நேரில் சார்வு செய்யக்கூடவில்லை. மறுபடியும் 17உ காலை 6 - மணி சுமாருக்கு ஷை மடத்துக்குள் வாதி மனுஷன் ஸஹிதமாய்ப்போனதில் 1, 2 பிரதிவாதிகள் காணப்படவில்லை. அறைக்குள்ளே இருப்பதாகத் தெரிந்து அதன்பேரில் நாங்கள் வெளியில் வந்தவுடன் வெளிக்கதவைத் தாள்போட்டுக்கொண்டு உள்ளே கூட்டமாக இருந்தார்கள். அப்படிக் கூட்டமாக இருந்த ஸமயத்தில் வெளியில் இருந்தபடி பிராதின் விபரம் இஞ்சங்ஷன் நோட்டீஸ் இவைகளின் சங்கதிகளைத் தெரிவித்தேன். திறக்கமுடியாதென்றார்கள். சுமார் 2½ - மணிக்கு வெளிக்கதவைத் திறந்தார்கள். உள்ளே இருந்தவர்களை 1, 2 பிரதிவாதிகளை விசாரித்ததில் சுவாமி தரிசனம் செய்துவிட்டு உடனே போய்விட்டதாகச் சொன்னார்கள். மாலை 6 - மணிவரைக்கும் காத்திருந்து பார்த்தும் நேரில் சார்வு செய்யக்கூடவில்லை. மறுபடியும் நாளது மீ 18உ காலை 7 - மணிமுதல் 9 - மணிவரையிலும் மடத்து வாசலில் காத்திருந்தும் கதவைத்தட்டியும் திறக்கவில்லை. ஆனதால் நேரில் சார்வு செய்யக் கூடவில்லை. மறுபடியும் நாளது மீ 19உ பகல் 3 - மணி சுமாருக்கு 2-ம் பிரதிவாதியை கண்டு பிராது இஞ்சங்ஷன் நோட்டீஸ் இவைகளின் விபரங்களை அறிவித்தேன். தான் சம்பந்தப்பட்ட கட்டளைகளில் தன் பேர் சரியாய் இல்லாததனால் பெற்றுக்கொள்ள முடியாதென்றும் முதல் பிரதிவாதிக்கு எழுந்திருந்து கையெழுத்து போடக்கூடாத நிலைமையில் சிக்காயிருப்பதாயும் அவருக்காகத் தான் பாத்தியஸ்தரென்றும் அவர்களுக்காக ஏற்பட்ட சம்மன் நோட்டீஸ் இஞ்சங்ஷன் வகையறாக்களைத் தான் பெற்றுக்கொள்வதாயும் சொன்னதன்பேரில் மன்னார்குடி டி. மு. கோர்ட்டு டிபுடி நாஜர் அவர்



களுக்கு எழுத்து மூலமாயும் வாய் மொழியாயும் அறிவித்தேன். அதன் பேரில், அவர்கள் 2-ம் பிரதிவாதி சொல்லுகிறபடி அவாளிடம் கட்டளைகளின்பேரில் ஷரா எழுதி கையெழுத்து வாங்கும்படி சொன்ன உத்தரவின் பேரில் நாளது மீ 20உ பகல் 3 - மணிக்கு முதல் பிரதிவாதியின் நோட்டீஸ் நகலை 2 - ம் பிரதிவாதியினிடம் கொடுத்து அவர்களிடம் கையெழுத்து வாங்கியும் ருஜுவாக சாக்ஷிகள் வாங்கி இருக்கிறேன். 2-ம் பிரதிவாதி பேர் சரியாயில்லாததனால் பெற்றுக்கொள்ள இஷ்டமில்லை என்று சொல்லிவிட்டதால் அவர்கள் நோட்டீஸ் நகலை அவர்கள் வசித்து வரும் மடத்து வாசல் சுவற்றில் ஒட்டி வைத்திருக்கிறது. மேல்கண்ட சங்கதிகள் உண்மை என்று உறுதியாய்ச் சொல்லுகிறேன்.

(ஒ) வாசுதேவ நாயகர், 21-4-13.

(Sd.) A. VENKATAKRISHNAMA CHARI,
*Dy. Nazir, 21-4-13.*

## (5) ஸ்ரீ காரக்குரிச்சி ஸ்வாமியின் பிரமாண பத்திரிகை.

நாகபட்டணம் சப் கோர்ட்டு

**1913ஞ் ஒத்திய அசல் நே. 94.**

திவான் பஹதூர் T. T. ரங்காசாரியர் வகைரா ஏழு பேர்கள். } வாதிகள்.

ஸ்ரீவன் சடகோப பராங்குச யதீந்திர மஹாதேசிகன் ஸ்வாமி வகையரா. } பிரதி வாதிகள்.

ஷை நம்பரில் 2 - வது பிரதிவாதி பக்கம் கௌண்டர் அபிடவிட்:— தஞ்சாவூர் ஜில்லா மன்னார்குடி தாலூகா கஸ்பா ஸ்ரீ அஹோபிலமடத்தில் எழுந்தருளியிருக்கும் இந்து பிராமணன் விஷ்ணு மதம், ஜீயர் வயது 62, ஸ்ரீவன் சடகோப ஸ்ரீரங்கநாத சடகோப யதீந்திர மஹாதேசிகனாகிய நான் அடியில் கண்டவைகளை பிரமாணமாய்ச் சொல்லுகிறேன்.

(1) இந்த நம்பர் வாதிகள் பிராதிலும் அவர்கள் பக்கம் அபிடவிட்டுகளிலும் பிரஸ்தாபிக்கிறபடி இந்த ஸ்ரீ அஹோபிலமடம் சிஷ்ய ஆதீனமில்லை.

(2) ஷை ஸ்ரீ அஹோபில மடம் ஸ்ரீ லக்ஷ்மி நரஸிம்மன் அநுக்கிரஹத்தால் ஏற்படுத்தப்பட்டு அதன் ஆஸ்தானாதிபதியாக ஆதிவண் சடகோப ஸ்வா

மியையும் ஏற்படுத்தி நடந்துவந்த ஐதிஹ்யத்தைக் கொண்டே ஒவ்வொரு மடாதிபதிகளும் தமக்குப் பின் வர வேண்டிய ஸ்வாமியை ஸ்ரீ அநுக்ரஹத்தால் தம் திருவுள்ளத்தில் உதிக்கிற ஸ்வாமியை இந்த ஆஸ்தானத்தில் ஏற்படுத்தி வந்தபடி முதலாவது பிரதிவாதி அழகிய சிங்கரால் 20-1-1913-ல் பிரேஷ மந்திரோபதேசம் எனக்கு நடந்து காஷாயமும் கொடுத்ததுடன், மங்களாஸாஸன ஸ்ரீ முகமும் கொடுக்கப்பட்டது. பின்பு ஏப்ரல் மாசத்தில் ஸ்ரீ அழகிய சிங்கருக்குத் திருமேனி ரொம்ப அசக்தியா யிருந்ததை உத்தேசித்து 14-4-13-ல் ஒரு மங்களாஸாஸன ஸ்ரீ முகம் ஸாதித்து உடனே துரீயாஸ்ரமத்தை வஹிக்கும்படிக்கும் மடத்தின் வைதிக லௌகிக காரியாதிகளைப் பார்க்கும் படிக்கும் ஆஜ்ஞாபிக்கப்பட்டது. அந்த ஆஜ்ஞைப்படி ஸ்ரீ அழகிய சிங்கரே எழுந்தருளியிருந்து தேவாதி ஸ்ராத்தம், ஸந்யாஸம் முதலான வைதிக கிரமங்கள் மடத்தின் ஆசாரணைப்படிக்கும் ஆகமப்படிக்கும் நடத்திவைத்து நான் யதியாகி ஸ்ரீ அழகிய சிங்கரின் ஆஜ்ஞைப் பிரகாரம் ஹம்ஸ முத்ரையுடன் பாஷ்யாஸம் ஸமாஸ்ரயணம் முதலான வைதிக லௌகிக காரியாதிகளை நடத்தி வருகிறேன். இவைகளை எல்லாம் மடத்தின் ஸகல ஶிஷ்யர்களும் ஒத்துக்கொண்டு வெகு ஸந்தோஷத்துடன் ஸந்நிதிக்கு விஜ்ஞாபன பத்ரிகைகள் அநுப்பி வருகிறார்கள்.

(3) வாதிகள் பிராது சமாசாரம் இந்த பிரதிவாதிக்கு தெரியவருகிறதற்கு முன்னமேயே நான் துரீயாஸ்ரமம் வகித்து ஆஸ்தானாதிபத்யம் அடைந்திருப்பதனால் வாதிகள் கேட்டிருக்கிற இஞ்சங்ஷனைத் தள்ளுபடி செய்ய வேண்டியது. அவசியமாயிருக்கிறது.

(ஒ) ஸ்ரீ ரங்கநாத சடகோப யதீந்திர மஹாதேசிகன்.

இதில் கண்ட ஜீயர் என்முன்பாக பிரமாணத்தின் பேரில் மன்னார்குடி ஸ்ரீ அஹோபிலமடம் ஸந்நிதியில் கையொப்ப மிட்டார்.

1913௵ அக்டோபர்மீ 6வ மன்னார்குடி தாலூகா மறவக்காடு வட்டம்.

(Sd.) S. SREENIVASA AIYANGAR,
*Village Magistrate.*

Sealed Subordinate Court, Negapatam.
11th October 1913.

(Sd.) S. A. K. *Ag. Sher.*

161437
600 008.

ஸ்ரீ:.

[illegible]

# வேதாந்த தீபிகை

பத்ராதிபர்:—திவான் பகதூர் டி. டி. ரங்காசார்யர், பி.ஏ., பி.எல்.

ஸம்புடம் 4.] ஆநந்த௵ வைகாசிமீ [ஸஞ்சிகை 4.

## பத்ராதிபரின் குறிப்புகள்.

[illegible] [ஸ்ரீ பாகவதம் 1-9-33.]

**ட்ரூ துரையின் உபந்யாஸம்.**

‘[illegible]’ என்று உபநிஷத் சொல்வதுபோல் அஜ்ஞாநாந்தகாரத்தில் மூழ்கிக் கிடக்கையில் தான் புத்திமான் என்றும், ஸர்வ சாஸ்த்ரமும் அறிந்தவனென்றும் எண்ணிக் கொள்வார் பலர். ஸ்வமத விஷயமாகத் துரபிநிவேஸம் உண்டாகி பரமதங்களைத் தூஷிக்க இறங்குவோர் ப்ராயேண இந்த வகுப்பில் சேர்வர். உலகத்தில் மற்றைய மதங்களைக் காட்டிலும் ஹிந்து மதத்திற்குத் தனியாக ஒரு விசேஷமுண்டு. அது ஈஸ்வரன் ப்ரபஞ்சத்தை ஸர்வத்ர வ்யாபித்திருக்கிறானென்பது தானென்று சில காலத்துக்கு முன்பாகச் சென்னையில் வஸித்த ஒரு கிறிஸ்தவ மத ப்ரவர்த்தகரால் வெளியிடப்பட்டது. இதற்கு இங்க்லீஷ் பாஷையில் God's immanence in nature என விவகரிக்கப்பட்டது. உலகத்தில் ஸம்பந்தமின்றி உலகத்தை அதிக்ரமித்து இருக்கின்றான் ஈஸ்வரன் என்பது மஹம்மதியர் மதமாம். இதற்கு இங்க்லீஷில்



RBS m211, N1947
N1914

Divine Transcendence என்று பெயராம். இந்த இரண்டு அம்சங்களையும் கிறிஸ்தவமதம் போதிப்பதாம். ஆகையால் அதற்கு ஏற்றமாம். இப்படிச் சொல்லுகின்றனராம் முன் பச்சையப்பன் வித்யா சாலையின் அத்யக்ஷராயிருந்த ட்ரு (Mr. Drew) என்னும் துரை.

கிறிஸ்தவ மதமும் மஹம்மதிய மதமும் ப்ராயேண ஒரே கதைகளை ஆதரிக்கின்றன. உபாதாநமின்றியே சூந்யத்தினின்று ஈச்வரன் ப்ரபஞ்சத்தை உண்டாக்கினனென்று அவர்கள் ப்ரமாண க்ரந்தங்கள் காட்டும். இதனால் இரண்டு மதங்களும் ஈச்வரன் ப்ரபஞ்சாதீதன் என்பதைத்தான் போதிக்கின்றன. ப்ரபஞ்ச ஸம்பந்தமாக ஈச்வரனுடைய ஸர்வ வ்யாப்தி அந்த மதங்கள் அறிந்ததில்லை. ப்ரபஞ்சத்தைக்காட்டிலும் ஈச்வர னுடைய மஹத்வம் நம் மதத்திலேயே சொல்லப்படுகிறது.

'உதாம்ருதத்வஸ்யேஶாந: | யதந்நேநாதிரோஹதி ||
ஏதாவாநஸ்ய மஹிமா | அதோ ஜ்யாயாꣳஶ்ச பூருஷ: ||'

இந்த புருஷ ஸூக்த வாக்யத்தின் அர்த்தம் பாஷ்யகாரர்கள் அபிமதப்படி என்னவென்றால்: "மேலும் இந்தப் புருஷன் அம்ருதத்வத்திற்கு (முக்திக்கு) ஸ்வாமியாக இருந்தும் தன்னுடைய காரண ரூபத்தை அதிக்ரமித்துக் காணப்படுகின்ற ஜகத்ரூபத்தை அடைகின்றான். ஏனெனில் ப்ராணிகள் பூர்வம் செய்த கர்ம பலன்களை அநுபவிக்கும் பொருட்டு ஜகத்ரூபத்தை ஸ்வீகரிக்கின்றான். அதமானதும் வரப்போகிறதும் இப்போதிருக்கிறதுமான ஜகத்முழுவதும் அந்தப் புருஷனுடைய மஹிமை. இதைக் காட்டிலும் புருஷன் மிக்கவும் அதிகரித்தவன்." இன்னும் அந்த ப்ரகரணத்திலேயே,

'த்ரிபாதூர்த்வ உதைத்புருஷ: |
பாதோऽஸ்யேஹாபவாத்புந: ||'

என்று சொல்லப்படுகிறது. [மோக்ஷத்தில், நாசமற்ற அந்தப் புருஷனுடைய மூன்று பாதமானது இந்த ப்ரபஞ்சத்தைக் காட்டிலும் அதிக்ரமித்து நிற்கிறது. அவனுடைய பாதம் அல்லது லேசமாத்ரம் இந்த ஜகத்தாய்ப் பரிணமித்து, லயித்து, மறுபடியும் ஸ்ருஷ்டிக்கப்படுகிறது.] இன்னும் 'அணோரணீயாந்



மஹதோ மஹீயாந்' என்று ப்ரஹ்மத்தை அணுக்களைக் காட்டிலும் ஸூக்ஷ்ம ஸ்வரூபியாகவும், மஹத்தைக்காட்டிலும் மஹானாகவும் சொல்லப்பட்டிருக்கிறது. ஸர்வத்தையும் காட்டிலும் (ஜ்யாயாந்) பெரியதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அவனை விச்வமாகவும், விச்வதச்சக்ஷு:-அதாவது, விச்வத்தைக்காட்டிலும் அதிக்ரமித்தவனாகவும், சொல்லப்பட்டிருக்கிறது. இந்த விச்வம் புருஷன் தான் என்றும், விச்வம் அவனால் ஜீவிக்கின்றதென்றும், விச்வத்துக்கு அவன் பதி என்றும், விச்வாதிகன் என்றும் இருக்கப்பட்ட ச்ருதிவாக்யங்களைக் கிஞ்சித்தும் அறியாமல் உன்மத்த ப்ரலாபம் மாதிரியாக எழுதிவிடுகின்றனர். ஆர்யமதத்தின் கிளைகளில் பலவும் அத்வைதம் அல்லவென்பதையும் அறிந்தும் கண்டிலர். தத்வ த்ரயங்களுடைய ஸ்வரூப நிரூபண விஷயத்தில் ஆர்யமதத்தினர் அந்யரிடம் கற்கவேண்டிய அம்சங்கள் யாதொன்றும் இல்லை. முக்தி ஜ்ஞாநஸாத்யமாகில் இம்மதத்தைக்காட்டிலும் வெளியில் அதற்கு ஹேதுவில்லை. பக்தியால் அது கிடைக்குங்கால் எல்லா மதங்களாலும் அது கிடைக்கக்கூடும்.

பகவத் பக்தரென்றும் அடியாரென்றும் சொல்லப்படுபவர் பாகவதரெனவும் சொல்லப்படுவர். இவர்கள் தத்வங்களுடைய ஸ்வரூபஜ்ஞாநமும் அவற்றின் பரஸ்பர ஸம்பந்த ஜ்ஞாநமும் உடையவராகவே இருக்கவேண்டுமென்னும் நியமமில்லை.

பக்த்யா த்வநந்யயா ஶக்ய: அஹமேவம்விதோऽர்ஜுந |
ஜ்ஞாதும் த்ரஷ்டும் ச தத்த்வேந ப்ரவேஷ்டும் ச பரந்தப ||

[அர்ஜுநா! என்னைத்தவிர வேறொன்றிலும் பற்றைக்கழித்த பக்தியுள்ளவனால் இப்படி விச்வரூபத்தை ஸ்வீகரித்த இந்த விதமான நான், சாஸ்த்ரப்படி அறியப்பட்டவனாவேன்; உள்ளபடி ஸாக்ஷாத்கரிக்கப்பட்டவனாவேன்; அடையவும் பட்டவனாவேன்; ஓ! சத்ருக்களைத் தபிக்கச்செய்பவனே!]

ஸமோऽஹம் ஸர்வபூதேஷு ந மே த்வேஷ்யோऽஸ்தி ந ப்ரிய: |
யே பஜந்தி து மாம் பக்த்யா மயி தே தேஷு சாப்யஹம் ||

[எல்லா ப்ராணிகளிடமும் நான் ஸமனாயிருக்கிறேன். எனக்கு சத்ருவுமில்லை; இஷ்டனுமில்லை. ஆனால் யாரொருவர் என்னை

பக்தியால் பஜிக்கிறாரோ அவர் என்னிடத்தில் இருக்கிறார்; அவரிடத்திலும் நானிருக்கிறேன்]

𑌯𑍇 𑌯𑌥𑌾 𑌮𑌾𑌂 𑌪𑍍𑌰𑌪𑌦𑍍𑌯𑌨𑍍𑌤𑍇 𑌤𑌾𑌂𑌸𑍍𑌤𑌥𑍈𑌵 𑌭𑌜𑌾𑌮𑍍𑌯𑌹𑌮𑍍 ।
𑌮𑌮 𑌵𑌰𑍍𑌤𑍍𑌮𑌾𑌨𑍁𑌵𑌰𑍍𑌤𑌨𑍍𑌤𑍇 𑌮𑌨𑍁𑌷𑍍𑌯𑌾𑌃 𑌪𑌾𑌰𑍍𑌥 𑌸𑌰𑍍𑌵𑌶𑌃 ॥

[ஓ பார்த்தா! எவர் எவ்விதம் என்னை அடைகிறார்களோ, அவர்களை அவ்விதமே நான் அடைகிறேன் அல்லது அநுக்ரஹிக்கிறேன். மனுஷ்யர்கள் எல்லா ப்ரகாரத்தாலும் என்னை அடையும் மார்க்கத்தை அநுஸரிக்கிறார்கள்] இப்படியன்றோ பகவான் சொல்லுகின்றார். ஆனபடியால் நமது மதம் ஸர்வமதத்தினருக்குள்ளும் பகவத் பக்தர்களுக்கு நல்லகதியையே முறையிடுகின்றது. இதற்கு விபரீதமான யோசனைகளைக் கொண்டவர் இதர மதத்தினரே. யோசனை கொண்டாலும் கொள்ளட்டும். விஷயங்களை முற்றிலும் பரிசீலனைசெய்து அபிப்ராயங்களை வெளியிடுதல் நலம். தன் மதம் தான் ஸத்யம்; மற்றவை மித்யை என்கிற விச்வாஸமும், எல்லா மதங்களிலும் உண்மை உண்டானாலும் தன் மதத்திற்கே ஏற்றமுண்டு என்கிற விச்வாஸமும் விவேகமின்றி உண்டாய், அவற்றை த்ருடப்படுத்தப் புஸ்தகம் பார்ப்போர், புஸ்தகங்களைப் பார்க்காமலும் விடலாம். இதை நாம் வரைந்த பின்னர், மே மாஸம் 14 தேதியின் ஹிந்து பத்ரிகையைப் பார்க்க, அங்கே, டெய்லி க்ரானிக்கல் என்னும் பத்ரிகைக்கு ஒருவர் பெர்க்ஸன் எனப் பெயர் பெற்ற ப்ராஞ்சு தேசத்தியரும் தத்வ விசார ஸமர்த்தருமான பண்டிதரின் உபந்யாஸ விஷயமாய் எழுதியிருந்த நிருபத்தை அச்சிட்டப்பட்டிருந்தது. அதில் "கிறிஸ்தவ மதத்தின் தேவன் ஸகுணன் (Personal God), அவரால் ஸ்ருஷ்டமான ப்ரஜைகளைக் காட்டிலும் அதிக்ரமித்தும் பின்னனாகவும் இருக்கின்றான்; அதனால் ஸ்ருஷ்டமானவற்றை அவன் வ்யாபிக்கவில்லை" என்று ஸ்பஷ்டமாக எழுதப்பட்டிருக்கிறது. இதை ட்ரூ துரை பார்ப்பாரென நம்புகின்றோம்.

* * * *

**மதுரைத் தமிழ்ச் சங்கம்.**

மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் வர்ஷோத்ஸவம் மே மாஸம் 16, 17, 18-ம் தேதிகளில் ராமநாதபுரத்தில் விசேஷ விபவத்துடன் நடந்ததாகக் கேள்விப்படுகிறோம். இந்தச் சங்கம்



அநேகவர்ஷ சதங்களாய் லுப்தமாகியிருந்து, ம-ா-ா-ஸ்ரீ ஸ்ரீமான் பாண்டித்துரைத் தேவரவர்களால் ப்ராண ப்ரதிஷ்டையையடைந்து, பன்னிரண்டுவர்ஷங்களுக்கு மேல்பட்டு ஜீவநதசையுடனிருக்கின்றது. இதை மிக்க வாத்ஸல்யத்துடன் போஷித்து வந்த பாண்டித்துரைத்தேவர் எல்லாரும் வியஸநிக்கும்படி பரிபூர்ண வயஸையடையாமல் காலம்சென்றார். அந்த மஹான் இந்தச்சங்கம் விஷயமாய்த் தன்பொருளை ஏராளமாய்ச் செலவுசெய்தது மன்றித் தன் சரீரச்ரமத்தையும் பார்த்திலர். பால்யத்தில் தகப்பனையிழந்த வண்ணம் இச் சங்கம் அவர் மரணத்தால் தீன ஸ்திதியையடைந்துநிற்கத் தண்ணீரில் மூழ்குபவனைக் கையால்பிடித்தெடுத்துக் கரையேற்றுவதுபோல் ராமநாதபுரம் ராஜா அவர்கள் இதன் பரிபாலநத்தை ஏற்றுக்கொண்டார். அவருடைய முன்னோர் அநேக நூற்றாண்டுகளாய் அரசுசெலுத்திய நாட்டின் ஸ்வாதந்த்ர்யத்தை அவர் அடைந்தவராதலால், அந்நாட்டின்கண் அவரைக்காட்டிலும் ஸ்ரீமந்தர் யாருமில்லை. பாண்டியராஜர் பாதுகாத்த சங்கம் உயிரெழவே, அதன்போஷணையை ராமநாதபுரம் ராஜா ஒருவரோ வஹிக்கத்தக்கவர்; வேறொருவரில்லை. அவர் ஆதரவாற் சங்கம் தலையெடுத்து நமது தேசபாஷைக்கு நற்காலத்தையுண்டுபண்ணுமென மிகவும் ப்ரதீக்ஷிக்கின்றோம். அவர் அத்யக்ஷராகி நடத்திய முதல் ஸம்வத்ஸரோத்ஸவத்திற்கு ஸபாத்யக்ஷதையை ஸிம்ஹலத்வீபவாஸியாகிய மிக்கக் கீர்த்திபொருந்திய ஹானரபில் பி. ராமநாதன் அவர்கள் வஹித்தார். அதுவும் இந்தச் சங்கத்திற்குண்டாகப்போகின்ற உயர்நிலையைக்காட்டுகின்றதென நாம் எண்ணக்கூடியதே. இவ்வர்ஷோத்ஸவத்திற்குத் தமிழ்நாட்டில் தத்பாஷாப்ரயுக்தமாகக் கீர்த்திபெற்ற பகு வித்வச்சிரோமணிகள் வந்திருந்தார்கள். விசேஷ உபந்யாஸங்களும் செய்யப்பட்டன.

ஸபாத்யக்ஷரான ஹானரபில் ராமநாதனவர்கள் மஹார்த்தங்களடங்கிய ஹிதவசநங்களைச் சபையார்முன் மொழிந்தனர். தேவாலயங்களையும், தம்மாசிரியரையும், சைவஸித்தாந்தத்தையும், உலகத்தில் மற்றெங்கும் கிடையாதவரும், உலகத்தை அதிக்ரமித்த ஜ்ஞாநாநுபவத்தில் காலத்தைக் கழிப்பவருமான பண்டிதர்களையும் கைவிடாமல் இருக்கும்படிக் கேட்டுக்கொண்டனர். உலகத்திற்கு நம்நாடு குருகுலபூமியாம். நம்மவர் பேருணர்வு, எங்குமவர்

ஒழுக்கத்தைச் சீர்ப்படுத்துவதாம். இப்போது ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் உள்ள நகரங்களில், மனிதர் பரமபுருஷார்த்த விஷயமாக அறிவற்றவண்ணம் உலகமெங்கும் அழியாமல் காப்பது நம்மவர்ஜ்ஞாநமாம். கடவுளில்லையென்பதும், மதமொன்றிலும் விச்வாஸம் இன்மையும், விஷயேச்சையும், மத்யபானமும், பரஹிம்ஸையும், இந்தியாதவிர மற்றெல்லா நாட்டையும் அழிக்கின்றனவாம். இத்தன்மைய தீமைகளினின்று நம்பெரியோர் நம்மைக்காத்தவராம். அவரப்படிக் காத்திலராயின், நமக்கு இப்போது உலகத்தில் இருப்பே இலதாம். பச்சிமதேசத்து வாத்தியார்கள் நமது தேசமடைந்து, தாங்கள் செய்வதை உணராமலே அஹிதமான படிப்புக்களை நம்மனத்தில் ஏற்றுவதால் பயந்து, நமக்குத் தாய க்ரமத்தில் கிடைத்த லோகாதீதமான ஆத்மஜ்ஞாநத்தை அநாதரித்தல் கூடாதென்கிறார். சைவமது வைஷ்ணவமென்றால் சைவத்தைக்காட்டிலும் வேறன்றாம். பரமசிவனென்றும் மஹாவிஷ்ணு என்றும் வ்யவஹரிப்பவர்க்குள் வாஸ்தவத்தில் வித்யாஸம் இல்லையென்கிறார். அவர் நிலைத்த ஸத்ரூபியாயும், ஜ்ஞாநரூபியாயும், ஸப்ரயோஜநமான உபாஸிக்கு அர்ஹமாயிருக்கப்பட்ட ஸர்வமாகவும் எங்கு மிருக்கின்றாராம். நாமமாத்ரத்தையிட்டு நாம்விவாதப்படக் கூடாது. வஸ்துவானது அன்பாகவும் அறிவாகவும் இருப்பதை நாம் பார்க்கவேணும் நம் தர்சநத்தை நாம் மறக்கவொண்ணாது; அதை வீணென்று உரைப்போர் சொல்லையும் நம்பவொண்ணாது. நம்தேச பாஷையை நாம் விச்வஸிக்க வேண்டும். என்றிவ்விதமாக ஹானரபில் - ராமநாதன் மொழிந்த ஹிதவசநங்களை நம்மவர் அநுகூலமாக க்ரகிப்பார்கள் என்று நம்புகிறோம். அவர் ஐரோப்பா அமெரிக்கா தேசங்களைக் கண்டவர். அந்த நாட்டினர்கள் வித்யைகளை நன்றாக அப்யாஸித்தவர். விஷயங்கள்தெரியாமல் அவர் சொன்னாரென எண்ணுதல் கூடாது. ஜநங்களுக்குள் ஒற்றுமையும், பரஸ்பரம் ஹித ப்ரவ்ருத்தியும் வேண்டுமென்பது உண்மையே. இதன்றித் தேசத்தின் பொது நன்மை அழிந்துவிடும். இந்த நன்மை புருஷார்த்தங்களில் சிறந்ததே. ஆனால் ஒவ்வொரு மனிதனும் இதற்காகவே ஜனித்தானில்லை. தேச நன்மையென ஒன்று சேர்ந்தோர் தேசாந்தரங்களைத் தங்கள் நன்மைக்காக நாசம் செய்தாரில்லையோ? பத்துபேர் தங்கள்



ஹிதத்தை விர்த்திசெய்யக்கூடி பரர் ஹிதத்தைப் பரிபாலித்தல் உலகவழக்கமா? ஆக நாம் நமது நன்மைக்கென்று ஒன்று சேர்ந்தால்,நமது பொருளைக் கவர்பவரை யாகிலும் தடுப்போம். பரர் பொருளை யாகிலும் கவர்வோம். ஸ்வரக்ஷணார்த்தம் ஒன்று கூடுவது எப்போதும் ஈஸ்வரப்ரீதியில் முடியும். இது எப்போது அயலார்க்கு உபத்ரவ கரமாகுமோ, அப்போது அது ஈச்வரனுக்கு ப்ரீதி தாராது. நம்முடைய பொருளை நாம் ரக்ஷிக்க முயன்றால், அதையே தங்கட்குத் தீமையென நினைக்கும் பரரும் உண்டு. இப்படிப்பட்டவரை த்ருப்தி செய்ய யத்தனித்தால் நம்ஸமூஹம் கெடும். ஆக உலகவழியில் பரஹிம்ஸையின்றித் தேசத்தின்பொது நன்மைக்குப் பாடுபடுதல் நலமே. ஆனால் இதர ப்ரயத்நங்களை யிதற்காக முற்றிலும் தவிர்த்தல் நன்மையைக் கொடாது. ஆத்மோஜ்ஜீவன வ்யாபாரங்களை நிந்திப்பவர் இக்காலம் உளர். ஏனையோர் அவித்யையின் அந்தரத்தில் உழன்று கொண்டிருக்க ஒருவன் தன் ஆத்மாவைக்குறித்துப் பரம புருஷார்த்தைத் தேடுதல் ஹேயமானது என்பார் அவர். பிறக்கையில், என் இவ்வுலகில் தனியாக வந்துளனோ, எங்கிருந்து வந்துளனோ வென்பதை சாஸ்த்ரத்தைத் தவிர்த்து அறிபவர் யாருமில்லை. இறந்தபின் போகுமிடமும் ஒருவனுங் கண்டதில்லை. ஒவ்வொருஜீவனும் தனியாகத் தான் பிறக்கின்றான். தனியேதான் சரீரத்தை நீங்கிப் போகின்றான். ஆகையால் ஆஸ்திகனா யிருப்பவன் சாஸ்த்ரம் காட்டிய வழியே தன் ஆத்மாவின் ஹிதத்தைத் தேடவேண்டும். யாவருக்கும் மோக்ஷத்தின் கவாடங்கள் திறக்கப்படும் வரையில் கார்க்கவேண்டினால் கார்த்தே தான் இருக்கவேண்டும். ப்ரஹ்லாதனென ஏனையோர்க்கு ஈசன் இரங்கும் வரையில் தனக்குற்றகதி வேண்டாமென்று ஈசனுடன் சொல்லத் துணிபவர் யாவரோ? உலகநன்மை யென்றும் தேசநன்மை யென்றும் சொல்லும் வ்யாபாரங்களெல்லாம் அயலாருக்கு சரீரபர்யந்தமே ஹிதங்களை விளைவிக்கும். ஆத்மஹிதம் இவ்வித முண்டாகாது. பகவான் நமக்கு வெளியிட்ட மார்க்கங்களை விலக்கி நாமாக ஆத்மஹிதமான மார்க்கம் வேறொன்று கண்டறியக்கூடுமோ.

ஆத்மேந்த்ரிய மனோயுக்தம் போக்தேத்யாஹுர் மனீஷிண:

என்று உபநிஷத் வெளியிட்டது. போக்தாவாகிற ஜீவன், ஆத்மா, சரீரம், இந்த்ரியங்கள் மனஸ், புத்தி முதலானவையுடன்

கூடியிருக்கின்றான். அவனுக்கு சரீர ஸம்பந்திகள் உண்டு. தான் பிழைக்கவும், தம்மவர் ஸுகிக்கவும், அவன் செய்ய வேண்டிய வ்யாபாரங்கள் பல. தன்னூர் நன்மைக்குப் பாடுபட்டானாகில் தன்னுடைய நன்மையையும் ஸம்பாதித்துக் கொள்கின்றான். தேச நன்மையை நாடினாலும் தனக்கும் அநுகூலம் தேடுகிறான். பகவான் யாவற்றையும் துறந்து எல்லோரையும் காட்டுக்கு ஓடச் சொல்லவில்லை. அதிகாரிக ளெல்லாருந் துறவியாதல் கூடுமோ. காவித்துணியை யுடுத்திக்கொண்டு மனைவியையும் மக்களையும் நினைத்துக் கொண்டிருந்தால் துறவியாவனோ. அர்ஜுநனை நோக்கித் தன் தொழிலை விடாமல் செய்யச்சொன்ன ஸர்வேச்வரன் யாவனையும் துறக்கச்சொல்வனோ. அதிகாரம் உண்டாயிருந்து ஸந்யஸித்தவன் பெரியவனே. மற்றவர் தங்கட்குரிய கர்மங்களைச் செய்வதில், அதையே பகவானுடைய ஆராதநமாகச் செய்ய வேண்டுமென சாஸ்த்ரம் முறையிடுகின்றது. அது ஆத்ம ரக்ஷணார்த்தம். ஆதலால் ஆத்மோஜ்ஜீவன ப்ரயுக்தமாக மனுஷ்யன் யத்நபரனாக இருக்க வேண்டியதில்லை யென்பது உசிதமன்று. மேல்நாட்டார் கொண்டாடும் விஷயஸுகம் நம்மவருள் பலர்க்கு மதிமயக்கத்தை உண்டாக்கியது. இவர்க்கு ஹானரபில் ராமநாதன் வசனம் மிகவும் பொருந்தி யமைந்ததாக வெண்ணவேண்டும்.

* * * * * *

**வேதாந்த தீபிகை.**

தீபிகையின் பத்ராதிபரென நமக்குண்டான நூதநமான யசஸ் வஹிக்கவேண்டிய தானாலும், கார்யத்தில் யாதொரு ஆதிபத்யத்தையும் அங்கீகரிக்க இஷ்டமற் றிருக்கின்றோம். இந்த பத்திரிகையானது சிலப்பதிகாரத்தில், நம் ஜ்ஞாபக மிருந்தபடி,

விரிகதிர் பரப்பி யுலகமுழு தாண்ட
ஒருதனித் திகிரி யுரவோற் காணேன்
அங்கண் வானத் தணிநிலா விரிக்கும்
திங்களஞ் செல்வன் யாண்டுளன் கொல்லெனத்
திசைமுகம் பசந்து செம்மலர்க் கண்கள்
முழுநீர் வார முழுமெயும் பனித்துத்
திரைநீ ராடை யிருநில மடந்தை
அரசுகெடுத் தலம்வரு மல்லற் காலை,

எனப் பூமி



தேவியானவள் அரசனையும் புதல்வனையும் ஸமகாலத்திலிழந்து புலம்பினவாறே, இந்தப் பத்திரிகையானது ரக்ஷகாந்தரரைக் காணாமல் நம்மை யடையவும், விளம்பாஸஹமாயிருந்த அவஸரத்தில், ஆப்தவசநம் யதாசக்தி ஆதரிக்கத்தக்கது என்று எண்ணி, நம்மிட மிருந்த துர்பலத்தைச் சிந்தியாமல் அதைப்போஷிக்க வெண்ணினோம். லோகஹிதமாய் ஜநித்த இந்தப் பத்ரிகாரூபமான வெளிச்சத்தைப் பெரியோர் அணையவிடார் என்று த்ருடமாய் நம்பி யிதில் ப்ரவர்த்தித்தோம். ஆகையால் ப்ராஜ்ஞர்கள் அநுக்ரஹித்து எழுதும் விஷயங்களைப் பெற்றோமென உகந்து பத்ரிகையில் அச்சிடுவோமேயன்றி, அவற்றில் குற்றங்கள் காணப் புகோம். ஆனால் பத்ரிகையானது ஸபையை ஆச்ரயித் துண்டான படியாலும், ஸபையார் நோக்கத்தை ப்ரத்யக்ஷத்தில் விரோதிக்கக் கூடாதானபடியாலும், இந்த அம்சங்களைத் தவிர்த்து, இதர அம்சங்களில் நம்து ஆதிபத்யம் நாமாவசேஷமாய் நிற்கும்.

லோகவழக்கம் எப்படி யிருக்கிறதென்றால், புத்தியில் தாடஸ்த்யம் எனும் நடுவு நிலைமை தவறாமல் பலர் அபிப்ராய பேதங்களைக் கைகொள்கின்றனர். இந்த அநுபவத்துக்கு யாமும் விலக்காகோம். நமது ஸம்ப்ரதாயத்தின் ச்ரேயஸை மிகவும் விரும்பிய நாம், நமது நீண்டகால அநுபவத்தில், பொதுவிஷயங்களில் பொதுநன்மைகளைத் தேடவேண்டிய கடமைகளை யேற்றுக் கொண்டு பொது ஸ்தாநங்களை யடைந்தவர்கள், அவ்வண்ணம் நிற்காமல், கேவலம் ப்ராக்ருதரெனப் பொது த்ரவ்யங்களைக் கொண்டு ஸ்வ ஜநங்களைப் போஷிப்பதையும், தங்கடமைகளை மறந்து, அவற்றிற்கு விருத்தமான வ்ருத்தங்களில் ப்ரவேசிப்பதையும், மிக்கக் கண்ணுற்றோம். ஆகையால், நமது புத்தியில் தோன்றும் கறுப்பை வெளுப்பெனவும் இரவைப் பகலெனவும், நாம் சொல்லத்துணியோம். இம்மட்டில் நிற்போமேயன்றி, வ்யக்தி விசேஷங்களைக் குறித்து வ்யர்த்தமான விசாரங்களை யாமேற்றுக் கொள்ளமாட்டோம். ப்ரகாசிப்பிக்க வேண்டிய அம்சங்களை ப்ரகாசிப்பிப்போம். மறைக்க வேண்டியவற்றை மறைப்போம். யநேக ப்ரகாரேண நமது ஸம்ப்ரதாயத்தின் நன்மை யொன்றில் தான் நமக்கு நோக்கு. அதை யதாசக்தி இந்த பத்ரிகை நமை யாச்ரயித்து நிற்கும் பர்யந்தம் இதன்மூலமாக வ்ருத்தி செய்வோம்.

---

# ஸ்ரீ சிஷ்ய ஸபையும் அதன் கர்த்தவ்யங்களும்.

உ - ஆசார்ய வரணம் (தொடர்ச்சி.)

சாந்தோக்யோபநிஷத்தில் ஆறுவது ப்ரபாடகம் ஸத்வித்யா ப்ரகரணத்தில், உத்தாலகரெனும் ஆருணேயர், தன் புத்ரனை ச்வேதகேது என்பவர் பூர்ணமாக வேதாத்யயநம் பண்ணி விட்டுத் தன்னிடம் வருகையில், அத்யயநம் பூர்ணமாகச்செய்து விட்டோமெனும் செருக்குடன் இருப்பதாகத் தெரிந்துகொண்டு, எந்தவஸ்துவை யறிந்தால் எல்லாம் அறியப்பட்டதாகுமோ அந்த வஸ்துவைப்பற்றி உன் ஆசார்யனைக் கேட்டாயோ என்று புத்ரனை வினவினர். ஸர்வ ஜ்ஞாநமும் ஒரு வஸ்து ஜ்ஞாநத்தில் எப்படி அந்தர்க்கதமாவ தென்பதை ச்வேதகேதுவானவர் சில த்ருஷ்டாந்தங்களால் பிதாவினிடம் தெரிந்துகொண்ட பிறகு, தனது ஆசார்யன் தாத்ருஶ ஜ்ஞானமில்லாதவரென நிர்ணயித்தார். பிறகு பிதாவை நோக்கி, ഭഗവാംസ്ത്വേവ മേ തദ്ബ്രവീതു, அதாவது பவன்! தேவரீரே எனக்கு அந்த வஸ்துவை உபதேசிக்கட்டும் என ப்ரார்த்தித்தார். இதனாலும் அபேக்ஷிதமான ஜ்ஞாநம் குருவினிடம் இருப்பதாகத் தெரிந்த பிறகு குரு வரணம் செய்யவேண்டுமென ஏற்படுகிறது.

இப்படியே ஏழாவது ப்ரபாடகத்தில் நாரதர் ஸநத்குமாரரை ஆசார்யனாக வரித்தார். அப்போது,

സോഹം ഭഗവോ മന്ത്രവിദേവാസ്മി, നാത്മവിത്, ശ്രുതം ഹ്യേവ മേ ഭഗവദ്ദൃശേഭ്യഃ, തരതി ശോകമാത്മവിദിതി, സോഹം ഭഗവഃ ശോചാമി, തം മാ ഭഗവാന് ശോകസ്യ പാരം താരയത്വിതി.

"பகவன்! அப்படிப்பட்ட நான் சப்த ப்ரஹ்மத்தை மாத்ரம் அறிந்தவனாயிருக்கிறேன். ஆத்மாவை அறிந்தவனல்லன். தேவரீரைப் போன்றவரிடமிருந்து ஆத்மாவை அறிந்தவன் ஸம்ஸாரத்தைக் கடக்கின்றானென என்னால் கேட்கப்பட்டே இருக்கிறது. அப்படிப்



பட்ட நான் ஶோகிக்கின்றேன். அப்படிப்பட்ட என்னை பகவான் ஆத்ம ஜ்ஞாநோபதேசத்தால் சோகத்தின் அக்கரையைத்தாண்டும்படி செய்யவேண்டும்" என்று இவ்விதமான ப்ரார்த்தனைக்கு இணங்கி ஸநத்குமாரர் நாரதருக்கு உபதேசிக்கின்றார்.

எட்டாவது ப்ரபாடகத்தாலும், குணுஷ்டக விஶிஷ்டனான பரமாத்மாவைத் தேடி அறிந்தவன் ஸர்வ லோகங்களையும் ஸர்வ காமங்களையும் அடைந்தவனாகிறான் என்று ப்ரஜாபதி வாக்யத்தைச் செவியுற்ற இந்த்ரனும் விரோசனும், ஸமித்பாணிகளாய்க் கொண்டு, ப்ரஜாபதியினிடம் சென்று அப்படிப்பட்ட ஆத்ம ஜ்ஞாநத்தை ப்ரார்த்தித்தார்களெனத் தெரிகின்றது.

இப்போது ப்ருஹதாரண்யகோபநிஷத்தைக் குறித்துக் கொஞ்சம் விசாரிப்போம். இதில் நாலாவது அத்யாயத்தில் முதல் ப்ராஹ்மணத்தைப் பார்த்தால், அவ்விடத்தில் கார்க்ய வம்சத்தைச் சேர்ந்த பாலாகி என்பவர் அஜாதஶத்ருவெனும் ராஜனிடம் சென்று உனக்கு நான் ப்ரஹ்மத்தை உபதேசம் செய்வேன் எனவே, அந்த ராஜாவும் அதிஸந்துஷ்டனாய் உபதேசத்தை அபேக்ஷிக்கப் பாலாகியும் தான் ப்ரஹ்மத்தை உபாஸிக்கும் வண்ணங்களைச் சொல்லிக்கொண்டுபோனார். ராஜாவும் பாலாகியின் ஒவ்வொரு அநுபவத்துக்கும் அதிசயித்த ஜ்ஞாநத்தைப் பொருந்தினவராய் அதை வெளியிட்டுக் கொண்டுபோகவே, பாலாகி மௌநமடைந்தார். ராஜா பாலாகியின் உபாஸநத்தால் ப்ரஹ்மம் அறியப்பட்டதாகா தெனவே, பாலாகி ராஜாவை ஆசார்யனாக வரித்தாரென்று சொல்லப்படுகிறது.

அதே அத்யாயம் நாலாவது ப்ராஹ்மணத்தில் மைத்ரேயி என்கிறவள் தன் பர்த்தாவான யாஜ்ஞவல்க்யரை,

യദേവ ഭഗവാന് വേദ തദേവ മേ ബ്രൂഹി,

[யாதொன்றைப் பகவான் அறிவரோ அதையே எனக்குச் சொல்லும்] என்று ப்ரார்த்தித்து ஜ்ஞாநோபதேசத்தைப் பெற்றாளென்று ஏற்படுகிறது.

இந்த உபநிஷத்தின் ஐந்தாவது அத்யாயத்தில் பாஞ்சால தேசத்திலின்று ஜநகரிடம் சென்ற பஹு-ப்ராஹ்மணர்கள் யாஜ்ஞவல்க்யரைத் தனித்தனியே ப்ரஶ்நைசெய்ய, அவருடைய ப்ரதிவசநங்களை விஸ்தரித் திருக்கின்றது, ஆறுவது அத்யாயத்தில்

ஜநகனுக்கு யாஜ்ஞவல்க்யர் உபதேசித்த ஜ்ஞாநம் விஸ்தரிக்கப் பட்டிருக்கிறது. இதில் முடிவான ப்ராஹ்மணம் முன் ப்ரஸ்தாபித்த மைத்ரேயி ப்ராஹ்மணமே. மற்றிரண்டு அத்யாயங்களில் ப்ரஸ்தாப விஷயத்துக்கு மிக்க உபயோகமான ப்ரகரணங்கள் இல்லை. எட்டாவது அத்யாயத்தில் முன் சாந்தோக்யோபநிஷத்தில் கண்ட ப்ரவாஹண ஜைபலி வ்ருத்தாந்தம் கூறப்பட்டிருக்கிறது.

கீதையிலும் 'ஶிஷ்யஸ்தேऽஹம் ஶாதி மாம் த்வாம் ப்ரபந்நம்,' "நான் உன் ஶிஷ்யன், உன்னைச் சரணமாயடைந்தேன், என்னை ஶிக்ஷியும்" என்றிப்படி அர்ஜுநனால் ப்ரார்த்திக்கப்பட்டுப் பகவான் அவனுக்குக் கீதாஶாஸ்த்ரத்தை உபதேசித்தார். இதைக்காட்டிலும் ஜ்ஞாநம் அபேக்ஷிக்கப்பட்டால்,

தத்வித்தி ப்ரணிபாதேந பரிப்ரஶ்நேந ஸேவயா। உபதேக்ஷ்யந்தி தே ஜ்ஞாநம் ஜ்ஞாநிநஸ்தத்வதர்ஶிந:॥

"ஜ்ஞாநத்தைப் (பின் ஶ்லோகத்தில் விவரிக்கப்பட்ட ஜ்ஞாநத்தை) தத்வ ஸாக்ஷாத்காரம் பண்ணின ஜ்ஞாநிகள் உனக்கு உபதேசம் செய்வார்கள். அதை (அவர்களிடம் சென்று) ஸாஷ்டாங்க நமஸ்காரத்தாலும் நன்று கேட்பதாலும், ஶுஶ்ரூஷை செய்தும் அறிந்துகொள்" என்றிப்படி ஆசார்யர்களுக்கு யோக்யதை இருக்கவேண்டியபடியையும் அவர்களுடைய வரணம் ஶிஷ்யாதீநம் என்பதையும் பகவான் ஸ்வயமேவ அருளியிட்டிருக்கிறான். புராணரத்நமாகிற ஸ்ரீ விஷ்ணு புராணத்தைப் பார்க்கில், முதல் ஶ்லோகமே இப்படியிருக்கிறது.

பராஶரம் முநிவரம் க்ருதபௌர்வாஹ்ணிகக்ரியம்।
மைத்ரேய: பரிப்ரச்ச ப்ரணிபத்யாபிவாத்ய ச॥

"காலையில் செய்யவேண்டிய நித்யகர்மங்களைச் செய்து முடித்திருந்த முநிஶ்ரேஷ்டரான பாராசரரைத் தண்டன் ஸமர்ப்பித்து அபிவாதநம் செய்துவிட்டு மைத்ரேயர் கேட்டார்." கேள்வியின் க்ரமமும்,

ஸோऽஹமிச்சாமி தர்மஜ்ஞ ஶ்ரோதும் த்வத்தோ யதா ஜகத்।
பபூவ பூயஶ்ச யதா மஹாபாக பவிஷ்யதி॥
யந்மயம் ச ஜகத் ப்ரஹ்மந் யதஶ்சைதச்சராசரம்।
லீநமாஸீத் யதா யத்ர லயமேஷ்யதி யத்ர ச॥



"ஓ ஸர்வமும் அறிந்தவரே! மஹா கீர்த்திபொருந்தினவரே! இந்த ப்ரபஞ்சமானது எப்படி யுண்டாயிற்று? மறுபடியும் எப்படி உண்டாகப் போகின்றது? அதற்கு உபாதாநகாரண மென்ன? நிமித்த காரணமென்ன? எப்படி எதனிடம் லயித்திருந்தது? மறுபடியும் எதனிடம் லயமடையப்போகின்றது? (இந்த விஷயங்களை) உம்மிடம் கேட்க விரும்புகிறேன்" என்று இந்த மாதிரியாக இருக்கிறதைப் பார்த்தால், ஶிஷ்ய ப்ரவ்ருத்தியை மூலமாக உடையது ஆசார்யனுடைய ஜ்ஞாநோபதேஶ மென்றாகிறது. ராமாயணமும் நாரதரை வால்மீகி கேட்டாரென்றர்த்தமாகிற ஶ்லோகத்துடன் உபக்ரமிக்கிறது. அன்றியும், மஹர்ஷே த்வம் ஸமர்த்தோऽஸி ஜ்ஞாதுமேவம்விதம் நரம் (இப்படிப்பட்ட புருஷனை அறிவதற்கு ஓ மஹர்ஷியே! நீர் ஸமர்த்தராகிறீர்) என, வரிக்கப்பட்ட ஆசார்யனிடம் தான் அபேக்ஷித்த ஜ்ஞாந விஷயத்தில் விஶ்வாஸமுள்ளவராகி, வால்மீகர் பரம் கௌதூஹலம் ஹி மே (நான் இதைக்கேட்க விரும்புகிறேன்,) என்று ப்ரார்த்திக்கிறார். இவ்விதமாக மஹாபாரதத்தைப் பார்த்தாலும் புராணாந்தரங்களைப் பார்த்தாலும், ஶிஷ்யனுக்கு ஜ்ஞாநாபேக்ஷை யுண்டாய், அந்த ஜ்ஞாநமிருக்கிறதாகத் தான் விஶ்வஸித்த ஆசார்யனிடம் அவன் சென்று, ஸவிநயமாய் அவரை ஆசார்யனாக வரித்துத், தனக்கு வேண்டிய ஜ்ஞாநோபதேசத்தின் பொருட்டு ப்ரார்த்திதாகவே ஏற்படுகிறது. இந்த க்ரமங்களை எல்லாம் திருவுள்ளத்தில் கொண்டும்,

ஆசார்யவாந் புருஷோ வேத தஸ்ய தாவதேவ சிரம் யாவந்ந விமோக்ஷ்யே அத ஸம்பத்ஸ்யே,

என்கிற சாந்தோக்ய வாக்யத்தையும் ஸ்மரித்துக்கொண்டும், ஸ்ரீநிகமாந்த மஹாதேசிகன் ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரத்தின் ஆரம்பத்தில்,

ஸாக்ஷாத் ஶாஸ்த்ரம் பௌருஷேயம் விதந்தோ
ஆசார்யத்வம் யத்ர ஸர்வே வதந்தி ।

என்கிற ஶ்லோகத்தைச் சொல்லி(ஆசார்யவத்தையை ஸர்வருக்கும் மோக்ஷ காரணமென்று அருளியிட்டார்கள்) என உபக்ரமம் செய்தருளியிருக்கின்றார்.

மேலே வரைந்த ஶ்ருதி வாக்யத்திற்கு நமது ஸம்ப்ரதாய பாஷ்யகாரர்,

[illegible]

இவ்விதமாக வ்யாக்யாநம் செய்தருளி யிருக்கிறார். இதனர்த்தம், "இப்படி ஆசார்ய னுபதேசத்தால், நீ ப்ரஹ்மத்தை ஆத்மாவாக உடையவனாக இருக்கிறாய், ஆதலால் ப்ரஹ்மத்துக்கு ஶரீரமாக உன் ஆத்மாவை எண்ணிக்கொள் என்று உபதேசிக்கப் பட்டவன், ப்ரஹ்மம் தன்னுடைய ஆத்மாவாகவும் தான் ப்ரஹ்மத்துக்கு ஶரீரமாகவும் எண்ணுகிறான். இந்த ரீதியான அநுஸந்தாநத்தில் நிஷ்டையுள்ளவனுக்கு, ப்ராரப்த கர்மத்தால் உண்டாயிருக்கிற சரீரத்தினின்றும் எவ்வளவு காலம் வெளிப்படாம லிருக்கின்றானோ, அவ்வளவு காலமே விளம்பிக்கவேணும். அப்படிச் சரீரத்தினின்றும் விடுபட்ட பிறகு ஸத்ரூபமான ப்ரஹ்மத்தை அடைகின்றான்." ஆகலால் உபநிஷத் ப்ரகரணத்தில் நிர்திஷ்டனான ஆசார்யன் ஜ்ஞாநத்தை உபதேசிக்கின்ற ஆசார்யனாகிறான். வேதாந்த தேசிகன் ஸ்மரித்த ஶ்லோகத்தையும் அதன் பின் குரு பரம்பரா-ஸாரத்தில் ஸ்வாமி அருளிச்செய்த வாக்யங்களையும் கண்ணுறில், மேற்படி ஶ்லோகத்தில் வரும் ஆசார்ய சப்தங்கள் ஜ்ஞாநப்ரதன் விஷயமென்றே ஏற்படுகிறது. "ஸர்வ லோகத்துக்கும் பரமாசார்யனான ஸர்வேஶ்வரன் அடியிலே ப்ரஹ்மாவுக்கு வேதங்களைத் தந்தானென்றும், ப்ரஹ்மாவின் முகமாக ஶாஸ்த்ரங்களை ப்ரவர்த்திப்பித்தானென்றும், ப்ரஹ்ம புத்ரரான ஸநத்குமாராதிகளைக் கொண்டு ஹிதப்ரவர்த்தநம் பண்ணுவித்தானென்றும், நாரத பராஶர ஶுக ஶௌனகாதிகளால் அத்யாத்ம ஶாஸ்த்ரம் குலையாதபடி நடத்தினானென்றும், வ்யாஸாதிகளை அநுப்ரவேசித்து நின்று மஹாபாரதம், ஶாரீரக மீமாம்ஸை முதலானவற்றை ப்ரவர்த்திப்பித்தானென்றும், ஹம்ஸ மத்ஸ்ய ஹயக்ரீவ நரநாராயண கீதாசார்யாதி அவதாரங்களால் தானே வெளிநின்று தத்வ ஹித புருஷார்த்தங்களை ப்ரகாசிப்பித்தானென்றும்",



இவ்விதமாய் ஸர்வதந்த்ர ஸ்வதந்த்ரர் திருவாய் மலர்ந்தருளிய விஷயங்கள் ஈஶ்வரன் அடியாக வந்த ஜ்ஞாந பரம்பரையைத் தான் சுட்டிக் காட்டுகின்றன. மறுபடியும் ஆசார்ய க்ருத்யாதிகாரத்திலும் ஶிஷ்ய க்ருத்யாதிகாரத்திலும், ஆசார்யனெனத் தன்னால் சொல்லப்பட்டவன் ஜ்ஞாநப்ரதனேயன்றி மற்றவனல்லன் என்று தேசிகன் ஸ்பஷ்டமாய்த் தெரிவிக்கிறார். ஶிஷ்ய க்ருத்யாதிகாரத்தின் முடிவில், [illegible] [ஸாக்ஷாத்தாய் மோக்ஷத்துக்கு உபாயங்களாகிற பக்தி ப்ரபத்தி முதலான வித்யைகளை எந்த குரு உபதேசித்தாரோ அவர் மோக்ஷ ஶாஸ்த்ரங்களில் எல்லாக் குருக்களுக்கும் ஶ்ரேஷ்டரென்று சொல்லப்படுகிறார்] என்பதால், ஜ்ஞாநப்ரதனே முக்யமான ஆசார்யனாகின்றானென முடிகின்றது. இவரைப்பற்றியன்றோ,

[illegible]

[யாதொரு ஆசார்யனுக்கு, ஹயக்ரீவனே எழுந்தருளியிருப்பதால் ப்ரகாசிக்கின்ற நாக்கின் நுனியாகிற ஸிம்ஹாஸநம் உண்டாயிருக்கின்றதோ, அப்படிப்பட்ட ஆசார்யனைக் காட்டிலும் இவ்வுலகில் அதிகமாயிருக்கிற வேறு தேவதையை நாம் எண்ணுகிறோமில்லை] என்று திருவுள்ளம் பற்றும்படியிருந்தது. 'வெள்ளைப் பரிமுகர் தேசிகராய் விரகாலடியோம் உள்ளத்தெழுதியது' என்றதும் ஜ்ஞாநத்தைத் தனக்குத் தந்த ஆசார்யனைப் பற்றியது. வெள்ளைப் பரிமுகராகிய ஹயக்ரீவர் ப்ரஹ்மாவுக்கு வேதத்தைக் கொடுத்த ஸர்வேஶ்வரனென்பது ப்ரஸித்தம்.

[illegible], [தேவரீர் அப்போது ஹயக்ரீவ ரூபத்தைத் தரித்தவராய் வேதங்களை அபஹரித்த மஹா பலிஷ்டர்களாகிய மதுகைடபர் என்னும் அஸுரர்களைக் கொன்று அந்த ப்ரஹ்மாவுக்கு வேத கணங்களைக் கொடுத்தீர்] என்னும் ஶ்லோகத்தையும் இவ்விடம் ஸ்மரிக்கலாம். ஆசார்ய சப்தத்துக்கே

ஶாஸ்த்ரார்த்தம் அறிந்து, தான் அதன்படி நின்று, ஶிஷ்யனையும் இருக்கச் செய்வோன் என்றும், குரு சப்தத்துக்கு ஜ்ஞாநாந்தகாரத்தைப் போக்குபவன் என்றும் வ்யாக்யாநம் செய்திருக்கிறார்கள்.

நம்முடைய ஸம்ப்ரதாயத்தின்படி தத்வஹித புருஷார்த்தங்களுடைய ஜ்ஞாநத்தைப் பெற்றவனன்றோ, தத்வ ஜ்ஞாநத்தால் தன் ஸ்வரூபத்தை அறிந்து, புருஷார்த்த விவேகத்தினால் அதில் அபேக்ஷையுண்டாய், ஹிதத்தின் விவேகத்தால் புருஷார்த்தத்தை அடைய வேண்டிய ப்ரவ்ருத்தியையும் கைக்கொள்ளுவன். இதை உபதேசிப்பானில்லாவிடில் ஆசார்யனே வேண்டியதில்லை. ஸமாஶ்ரயண மென்பது கேவலம் ஒரு ஶரீர ஸம்ஸ்காரமாக முடிகின்றது. அதற்குப் பஞ்ச ஸம்ஸ்காரமெனப் பெயர். அவற்றுள், தாபம் நாமம் புண்ட்ரம் இவை மூன்றும் ஶரீர மாத்ரத்தை ஆஶ்ரயித்து நிற்கின்றன. இந்த ஸம்ஸ்கார காலத்தில் மந்த்ரங்களும் ஆராதநக்ரமமும் உபதேசிக்கப்பட்டவையானாலும், இரண்டுக்கும் அநுவ்ருத்தி ஶூன்யதை ஸர்வஸாதாரணம். அநுவ்ருத்தி ஶூன்யத்தால் ஜ்ஞாநாபேக்ஷையுள்ளவர்கள் ப்ராயேண மறுபடியும் மந்த்ரோபதேசத்தைப் பெறுகிறார்கள்; இஜ்யா க்ரமத்தையும் உபதேசித்துக் கொள்கிறார்கள். ஆதலால் ஸமாஶ்ரயணம் ஒரு ஶரீர ஸம்ஸ்காரமாய் மாத்திரம் போந்தது. இதைச் செய்வித்துக் கொள்ள ஆசார்யனிடம் ஜ்ஞாத்ருத்வத்தை அபேக்ஷிக்க வேண்டாம். காலக்ஷேப மூலமாய் ஜ்ஞாநத்தை ஶிஷ்யர்களுக்கு உபதேசிக்கும் ஆசார்யன் முக்யாசார்யனெனக் கூறினோம். ஒருவர் ஆசார்ய ஸ்தாநத்தை அங்கீகரித்துக்கொண்டு க்ரந்தங்களை ஸ்பர்சியாமல் காலத்தைச் செலுத்தினாரகில் ஶிஷ்யர்கள் இதற்குக் காரணத்தை அர்த்தாபத்தி ப்ரமாணத்தால் ஊஹிக்கா விட்டாலும் தங்களுடைய தௌர்பாக்யதையைப் பற்றி மிகவும் ஶோகிக்க வேண்டு மென்பதில் ஸந்தேகமென்ன? அநார்ய ஜுஷ்டம், அஸ்வர்க்யம், அகீர்திகரம், எனச் சொல்லத்தகுந்ததாயும், ஸர்வஸ்வாபஹாரக கோடிகளில் சேரத்தகுந்ததாயும், அதிகர்ஹிதமாயும், ஒருவழக்கம் இப்போது லோகத்தில் உண்டாயிருக்கிறது. அதற்குப் பெயர் ஆசார்ய க்ரஹணம்; அசக்தனானவனிடம் ஆசார்ய ஸம்பந்தத்தை அபேக்ஷித்து, அவனிடம் க்ரந்தங்களின் முதல் வாக்யத்தையும் முடிவான வாக்யத்தையும் வாசித்துவிட்டு,



சக்தனிடம் க்ரந்தங்களை க்ரமமாகக் கற்றுக்கொண்டு, அசக்தனை ஆசார்யனாக எண்ணிக் கொள்வதுதான் ஆத்யந்த க்ரஹணம். குருபரம்பரா ஸாரத்தில் ஸ்ரீ நிகமாந்த மஹாதேசிகன்,

[illegible]
[illegible]

(புத்திமான் தன் குருவைப் ப்ரகாசிக்காவிட்டாலும் மந்த்ரத்தைக் காப்பாற்றாவிட்டாலும் ஸம்பத்தும் ஆயுளும் க்ஷயிக்கும்) எனும் ஶ்லோகத்தை வெளியிட்டார். இப்படி ப்ரகாசிப்பிக்க வேண்டிய குரு ஆத்யந்த க்ரஹணம் பண்ணுவித்தவரா? இவர்தானா வெள்ளைப்பரிமுகரென நினைக்கத் தக்கவர்? ஆசார்யனைக்காட்டிலும் மேற்பட்ட தேவதை இல்லை யென்று மொழிந்தது இவரைப் பற்றித்தானே? "கிடாம்பி அப்புள்ளார் அடியேனைக் கிளியைப் பழக்குவிக்குமாபோலே பழக்குவிக்க" என்று தேசிகன் நினைத்தபடி ஆத்யந்த க்ரஹண குருவை நினைக்க வொண்ணுமோ? ஆசார்யவாந் புருஷோ வேத, என ஶ்ருதி சொன்னதும், உபதேக்ஷ்யந்தி தே ஜ்ஞாநம் ஜ்ஞாநிநஸ் தத்வதர்ஶிந:, எனப் பகவான் மொழிந்ததுவும் இவருக்குப் பொருந்துமோ? இதைப் பெருமாளங்கீகரிப்பரோ? பெருமாளடியாகவந்த நம்பூர்வாசார்யர் இதை ஸஹிப்பாரோ? ஆதிவண் ஶடகோபஸ்வாமிக்கு பெருமாள் செய்தருளிய நியமனத்தைப் பார்த்தாலும் "நீர் நம்மை ஆராதித்துக்கொண்டு ப்ரதி க்ராம நகரம் ஸஞ்சரித்து ஆஶ்ரித ஜநங்களுக்குத் திருவிலச்சினை மந்த்ர மந்த்ரார்த்த ப்ரதிபாதநம் பரந்யாஸம் இவை முதலான உஜ்ஜீவன வ்யாபாரங்களைச் செய்துகொண்டு, நம்மாழ்வார், எம்பெருமானார், நிகமாந்த மஹாதேசிகன் இவர்களாலே ப்ரதிஷ்டாபிதமான விஶிஷ்டாத்வைத ஸித்தாந்தத்தைத் தழைக்கும்படிச் செய்துகொண்டுவாரும்" என்று இருக்கிறபடியும் விமர்சிக்கத்தக்கது.

ஆகலால், ஸர்வப்ரகாரத்தாலும் ஜ்ஞாந வைராக்யத்தில் சிறந்த ஸ்வாமியைத் தங்களுடைய ஆத்மோஜ்ஜீவனத்தைக் கருதி ஸம்ப்ரதாயஸ்தர்கள் தாமே வரித்து ஆசார்யஸ்தாநத்தில் எழுந்தருளப்பண்ண வேண்டு மென்பது ஸித்தம்.

(இன்னும்வரும்.)

ஓர் ஸந்நிதி ஸம்பிரதாயஸ்தர்.

# தத்வ விசாரம்.

ஆங்கிலேய தேசத்தில் பதார்த்த சாஸ்த்ர ப்ரவீணராயும், தத்வஸ்வரூப பர்யாலோசனையில் ஸமர்த்தராயும் இருக்கிற ஸர் ஆலிவர் லாட்ஜ் என்பவருடைய அபிப்ராயங்களடங்கிய ஒரு பத்ரிகாலேகத்தை மே மாதம் 11-ம் தேதி வெளிவந்த ஹிந்து பத்ரிகையில் அச்சிடப்பட்டிருக்கிறது. அதன் தாத்பர்யமாவது: சரீரம் புருஷார்த்த ஸாதநங்களுக்கு மிக்க அநுகூலமாயிருந்தும், நமது ஜ்ஞாந ஸங்கோசத்துக்கும் காரணமாயிருத்தலால், நம்முடைய அந்தரிந்த்ரியம் ப்ராக்ருத சரீரங்களை அதிக்ரமித்து வ்யாப்ருதமாகில் விசேஷ ஜ்ஞாந ஸாக்ஷாத்காரத்துக்கும் யோக்யமாகக்கூடும்; ஈஶ்வரன் இந்த்ரியஜந்ய ஜ்ஞாநத்தால் அறியப்படமாட்டான்; ப்ராக்ருத ப்ரபஞ்சத்தை அதிக்ரமித்த இந்த்ரியாதீதமான ப்ரபஞ்சமொன்றுண்டு; நம்முடைய ஆத்மா அதனுடன் தான் அதிக பொருத்தம் கொண்டது; நாம் அந்த ப்ரபஞ்சத்தைச் சேர்ந்தவர்கள்; அதை நாம் நெருங்கி ஸ்பர்சிக்கக்கூடும்; நமது இந்தரியங்களுக்கெட்டாத பரலோகமொன்று நமது ஆத்ம ஸாக்ஷாத்காரத்துக்கு அர்ஹமாய் எப்போதும் இருக்கிறது; அது எப்போதோ வரப்போகிற ஆத்மஸ்வரூபமாக எண்ணப்பட வேண்டியதில்லை. அது இப்போது இங்கே இருக்கிறது; இந்த ப்ரபஞ்சத்திலும் எக்காலத்திலாவது நமக்கு ஸம்பந்தப்பட்ட அந்த ஸ்வரூபம் இப்போதும் நமக்குண்டு; ஜகத்தினுடைய ப்ரத்யக்ஷமானதும் பரோக்ஷமானதுமாய் நிலைத்திருக்கும் தன்மை என்றும் சேர்ந்தே நிலைத்துள்ளது; அந்தத் தன்மை நமது ஜந்ம மரணங்களை ஆஶ்ரயித்து நிற்கவில்லை; வஸ்து நமது ஜ்ஞாநத்துக்கெட்டாதிருக்கலாம், அதனால் அது இல்லையென்பது ஏற்படாது; ஆத்மா சரீரம் போனபின்பும் இருக்கிறது; ப்ரபஞ்சமில்லாத காலம்



முன்னும் இல்லை, பின்னுமிராது; அது அநாதி, அநந்தம்; இதை க்ரஹிக்க இப்போது நாம் ஸமர்த்தரன்று; ஆகிலும் இந்த அநாத்யநந்தத்தின் மத்தியில் நாமிருக்கின்றோம்; ப்ராக்ருதி ஜ்ஞாந ஸங்கோசத்தைச்செய்கிறது; அதை நாமறிவோம்; மனதையும் நாமறிவோம்; நம்முள் சிலர் அதற்கும் மேற்பட்டதையும் அறிகின்றார்கள்; அறிந்தாலும், அறியாவிட்டாலும், அது தத்வமாக இப்போதும் இருக்கின்றது; ஆத்ம ஸாக்ஷாத்காரார்ஹமாகவும் இருக்கின்றது.

ப்ரமாண ஜ்ஞாந ஹீநர் ஸமர்த்தராயினும் இவ்வகைதான் யோசிக்கக்கூடும். கேவலம் கல்வியால் கடவுளையறிவது கூடாது. கற்றவன் மதியும் அதற்கு ப்ரயோஜநமாகாது. ஐம்புலன்களையும், மனத்தையும், புத்தியையும் வசப்படுத்தி, அவை செயலன்றி நிற்க, யோகதசையிலன்றோ ஆத்மாவை யறிதல்வேண்டும். இந்த யோகாநுபவம் உண்டென்பதை ஐரோப்பிய வித்வான் ஒருவிதமாய் ஒப்புக்கொள்ளுகிறார். நமது நாட்டினரில் பலர் பதார்த்த வித்யா க்ரஹணத்தாலுண்டான மயக்கத்தில், யோகமென்பதைப் பரிஹாஸ விஷயமாக்கிப் பதார்த்தங்களுக்குமேல் ஒன்றுண்டென்பதையும் ஒப்பார்கள். யோகாநுபவம் எல்லாருக்கும் கிடைக்காது. அதில் ஸமர்த்தனான குருவையாவது நாம் வழிபடவேண்டும். இல்லாவிட்டால் ஜந்மாந்தரங்களில் யோகத்தில் ப்ரவேசம் உண்டாகி, அந்தவாஸனையாவது ஐஹிகத்தில் ஒருவனை யோகத்தில் மூட்டவேண்டும். தக்க ஆசிரியனிடம் பழக்கமின்றி ஒருவன் விசேஷ ஜ்ஞாநத்தை வெளிப்படுத்துவானாகில், அதற்குக் காரணம் ஜந்மாந்தரங்களில் தேடவேண்டும்.

ஆமுஷ்மிக விஷயங்களில் நமக்கு ஆப்தவாக்யம் ப்ரமாணமென்கிறோம். இந்த வாக்யங்கள் நமக்கு வேதாந்த க்ரந்தங்களிலும், நிஷ்பந்ந யோகிகளுடைய அநுபவத்தைக் காட்டுகிற ப்ரமாண க்ரந்தங்களிலும் கிடைக்கின்றன. தீர்க்க தர்சிகள் எனப் பெயர் கொண்டோர் சிலர் மனத்தில், ஈஶ்வராநுக்ரஹத்தால் ஒருவித ப்ரகாசம் உண்டாகி, அந்த ப்ரகாச காலத்தில் எழுதிய புஸ்தகங்கள் தங்களுக்கென்று கிடைத்தனவென்போர் கிறிஸ்தவர்.

நேராக ஈஸ்வரன் சொல்லி வெளியிட்ட புஸ்தகம் கொரான் என்போர் மகம்மதியர். இப்படி மதங்கள் பேதிக்க, ஒவ்வொரு மதாபிமானியும் தான் கொண்டாடும் புஸ்தகத்தை மேம்படுத்துவதும், பரர் விஸ்வஸிக்கும் புஸ்தகங்களைத் தூஷிப்பதும் உலக வழக்கு. இந்த வழக்கத்தையொட்டி நாமெழுதவில்லை. நம் மதம் ஈஸ்வரன் பக்ஷபாதமற்றவனென்று முறையிடுகின்றது. அவனிடம் பக்தி செய்வோர்க்கெல்லாம் அவனருள் ஸஹஜமாயுண்டாகும் மென்பதில் நமக்குச் சந்தேகமில்லை. ஆகிலும், அவன் ஸ்வரூபகுண விபூதி ஸம்பந்தமான ஜ்ஞாநாதிஶயம் நம் பெரியோர்க்குண்டென நாம் விஸ்வஸிக்கிறோம். அதற்குக் காரணம் ஈஸ்வரன் அவரிடம் பக்ஷபாதம் செய்தானென்றல்ல. அது அவர்களிடம் ப்ரயத்ந பூர்வமாக ஏற்பட்ட அர்ஹதா விஶேஷத்தால் உண்டானதே. இந்த விஶேஷ ஜ்ஞாநம் கேவலம் தர்க்கத்தா லடையக்கூடியதன்று ஆனால் தர்க்கம் எந்த மதத்தினருக்கு இந்த விசேஷஜ்ஞாநமுண்டென்பதை ஸாதித்துக்கொடுக்கும். மேலே சொன்ன ஐரோப்பிய பண்டிதரை யொத்துப் பலர் நமது மதத்திற்குண்டான ஏற்றத்தை தெரிந்தோ, தெரியாமலோ, ஒப்புக்கொண்டிருக்கின்றனர். இந்த ஏற்றம் ஏற்படும் விதத்தைக் குறித்து விசாரிப்போம்.

முதலில், சேதநா சேதநரூபமாய் விளங்கும் இப்ரபஞ்சவிஷயமாய்,

> न त्वेवाहं जातु नासं न त्वं नेमे जनाधिपाः ।
> न चैव न भविष्यामः सर्वे वयमतः परम् ॥
> नासतो विद्यते भावो नाभावो विद्यते सतः ।

என்னும் கீதாவாக்யங்கள் ஸ்மரிக்கத்தக்கன. "நான் எக்காலத்திலாவது இல்லாமலிருந்ததில்லை; நீயுமப்படியே; (யுத்த களத்திலிருக்கும்) இந்த ராஜர்களும் அப்படியே; நாமெல்லாரும் இனிமேலும் இருப்பதில்லை யென்பது மில்லை; முன் இல்லாததற்கு இருப்பு கிடையாது; இருப்பதற்கும் இல்லாமை கிடையாது." என்றிப்படி ஸர்வேஸ்வரன் வெளியிட்டான். சேதந வஸ்துவாகிலும் அசேதந வஸ்துவாகிலும் சூன்யத்தினின்று உத்பந்நமாகாது;



சூன்யத்திலும் முடிவுபெறாது. சேதநவஸ்து நித்யமாக இருக்கையில் விகாரார்ஹமன்று. அசேதநம் பல விகாரங்களையடைவதானாலும் அதற்கு ப்ரவாஹத்தால் நித்யத்வம் உண்டு. சேதநன் அசேதநத்தை யாஶ்ரயித்தே விகாரார்ஹனாகிறான். सदेव सोम्येदमग्र आसीत्, आत्मा वा इदमेक एवाग्र आसीत्, என்னும் ஶ்ருதி வாக்யங்களும், ஸ்ருஷ்டிக்கு முன் ப்ரளயதசையிலும், ப்ரபஞ்சம் ஸத்தாகவும் ஆத்மாவாகவும் இருந்ததென்றும், சூன்யமாக விருந்ததில்லையென்றும் தெரிவிக்கின்றன. ப்ரளய காலத்திற்கு முன்னும் ப்ரபஞ்சங்கள் உண்டென்பதும், இப்போது காணப்படும் ப்ரபஞ்சம் போனாலும் ப்ரபஞ்சாநுவ்ருத்தி யுண்டென்பதும், காலம் அநாதியென்பதைக்கொண்டு ஸ்ரீ விஷ்ணு புராணத்தில் நிர்வஹிக்கப்பட்டிருக்கின்றன.

> अनादिर्भगवान् कालो नान्तोऽस्य द्विज विद्यते ।
> अव्युच्छिन्नास्ततस्त्वेते सर्गस्थित्यन्तसंयमाः ॥

என்னும் ஶ்லோகப்படி காலத்துக்கு உத்பத்தியும் முடிவுமில்லாதபடியால், ஸ்ருஷ்டி, ஸ்திதி, அதன்முடிவில் ஸ்ருஷ்டியை நிரோதம் செய்யும் ப்ரளயம், இவை ஒழிவின்றி ப்ரவாஹ ரூபேண நடக்கின்றன வென்று ஏற்படுகிறது. இப்படிச் சேதநர்களும் அவர்கள் கர்மமும் அநாதி ஸித்தங்களாகிறபடியால் அந்தச்சேதநர் பொருட்டும், அவரது கர்மங்களின் காரணத்தால், அசேதநமாகிற ப்ரக்ருதியினுடையவிகார பரம்பரையாகிற ஸ்ருஷ்டி ஸ்திதி ப்ரளயங்களும் ஆதியந்தமின்றிக்கே நடக்கின்றன வென்பதை ஶ்ருதி ப்ரமாணங்களைக்கொண்டு ஸூத்ரகாரர், न कर्माविभागादिति चेन्नानादित्वात् उपपद्यते चाप्युपलभ्यते च என்னும் ஸூத்ரத்தால் நிஷ்கர்ஷிக்கின்றார். ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்யமாதிகள் ஸர்வப்ரபஞ்சத்தைக் குறித்து ஸமகாலத்தில் உண்டாகின்றனவோ, அல்லது பின்னமாகிற ப்ரபஞ்ச ப்ரதேசங்களில் காலபேதத்தாலும் தேசபேதத்தாலும் உண்டாகின்றனவோ, என்னும் யோசனை இவ்விடத்தில் ப்ரஸக்தமன்று. அவாந்தர ப்ரளயங்களையும் மஹா ப்ரளயங்களையும் நமது ப்ரமாண க்ரந்தங்கள் உரைக்கின்றன. सूर्याचन्द्र

மஸௌ தாதா யதாபூர்வ மகல்பயத் என்கிற ச்ருதி வாக்யம் ப்ராக்ருத ப்ரபஞ்சத்தின் முன்னும் ப்ரபஞ்சம் உண்டென்பதை ஸூசிப்பிக்கிறது. ப்ரக்ருதியும் ஜீவர்களும் அநாதியாய் இருக்கின்றன என்று கீதாசார்யன் அர்ச்சுனனுக்குரைத்தார். ப்ரக்ருதிம் புருஷம் சைவ வித்த்யநாதீ உபாவபி । விகாராம்ஶ்ச குணாம்ஶ்சைவ வித்தி ப்ரக்ருதி ஸம்பவாந் ॥ "ப்ரக்ருதி புருஷர்கள் இருவரையும் அநாதிஸித்தர்களாக அறிந்து கொள்; சரீரம் இந்திரியங்கள் போக்யரூபமான வஸ்துக்கள் இவைமுதலான விகாரங்களையும், உலகத்தில் ப்ராணிவர்க்கங்களின் குணதோஷங்களையும், ப்ரக்ருதியினிடம் உண்டானவையாகத் தெரிந்துகொள்." இதனால் போக்தாக்களான ஜீவர்களும், போக்யவஸ்துக்களுக்கும் போகஸாதநங்களாகிற கரணகளேபரங்களுக்கும் உபாதாநகாரணமாகிற ப்ரக்ருதியும், அநாதியென்று ஏற்படுகிறது.

ப்ரக்ருதி புருஷர்களுடைய ஸம்பந்தமும் அநாதி. இந்த ஸம்பந்தம் அநாதி கர்மமூலம். கர்ம காரணம் அவித்யை. இவ்விரண்டையும் பர்யாய பதங்களாக்கி, பரமாத்மாவினுடைய ஶக்தியென்று சொல்லப்பட்டிருக்கிறது.

ஸர்வத்வ இதம் விஶ்வம் ஜகதேதச்சராசரம் । பரப்ரஹ்ம ஸ்வரூபஸ்ய விஷ்ணோ: ஶக்தி ஸமந்விதம் ॥ விஷ்ணுஶக்தி: பரா ப்ரோக்தா க்ஷேத்ரஜ்ஞாக்யா ததாபரா । அவித்யா கர்மஸம்ஜ்ஞாந்யா த்ருதீயா ஶக்திரிஷ்யதே ॥ யயா க்ஷேத்ரஜ்ஞஶக்தி: ஸா வேஷ்டிதா ந்ருப ஸர்வகா । ஸம்ஸார தாபாநகிலாந் அவாப்நோத்யதி ஸந்ததாந் ॥ தயா திரோஹிதத்வாச்ச ஶக்தி: க்ஷேத்ரஜ்ஞ ஸம்ஜ்ஞிதா । ஸர்வபூதேஷு பூபால தாரதம்யேந லக்ஷ்யதே ॥ அப்ராணவத்ஸு ஸ்வல்பாஸா ஸ்தாவரேஷு ததோதிகா । ஸரீஸ்ருபேஷு தேப்யோபி அதிஶக்த்யா பதத்ரிஷு ॥ பதத்ரிப்யோ ம்ருகாஸ்தேப்யஸ் தச்சக்த்யா பஶவோதிகா: । பஶுப்யோ மநுஜாஶ்சாதி ஶக்த்யா பும்ஸ:



ப்ரபாவிதா: ॥ * * * * ஸர்வாண்யேதாநி ரூபாணி தஸ்ய ரூபாணி பார்த்திவ । யதஸ்தச்சக்தியோகேந யுக்தாநி நபஸா யதா ॥ [விஶ்வம் எனும் பெயரால் பரமாத்மாவினுடைய இருப்பிடமு ரூபமாக வ்யவஹரிக்கப்பட்டதும், சராசரங்களுக்கு இருப்பிடமுமாகிற இந்த ஸர்வ ஜகத்தும் பரப்ரஹ்மமாகிற விஷ்ணுவினுடைய ஶக்தியால் வ்யாபிக்கப் பட்டிருக்கிறது; விஷ்ணுவினுடைய (சித்) ஶக்தியானது ஶ்ரேஷ்டமென்று சொல்லப்படுகிறது; க்ஷேத்ரஜ்ஞை எனப்படுகிறது நிக்ருஷ்டஶக்தி; அவித்யை என்றும் கர்மமென்றும் சொல்லப்படுகிற மற்றொன்று மூன்றாவது ஶக்தியாக நிஷ்கர்ஷிக்கப்பட்டிருக்கிறது; ஸர்வ சரீரங்களையும் ஆஶ்ரயித்திருக்கிற அந்த க்ஷேத்ரஜ்ஞ ஶக்தியானது கர்ம ஶக்தியினால் வ்யாபிக்கப்பட்டு மிகவும் விஸ்தரிக்கின்ற எல்லா ஸம்ஸாரதாபங்களையும் அடைந்து அநுபவிக்கின்றது; க்ஷேத்ரஜ்ஞை எனப்பட்ட ஶக்தியானது அந்தக் கர்மஶக்தியால் மறைக்கப்பட்டபடியால் எல்லா ப்ராணிகளிடத்திலும் தாரதம்யத்துடன் (வித்யாஸமாகக்) காணப்படுகிறது; ப்ராணன் அற்ற ஸ்தாவரங்களில் அந்த க்ஷேத்ர ஶக்தியானது ஸ்வல்பமாகவும், மரம் முதலான ஸ்தாவரங்களில் அதிலும் அதிகமாகவும், ஊர்கின்ற ஜந்துக்களில் அதைக் காட்டிலும் மிகுதியாகவும், பக்ஷிகளில் இன்னும் விசேஷித்தும் ப்ரகாசிக்கிறது; பக்ஷிகளைக் காட்டிலும் மிருகங்களும், மிருகங்களைக் காட்டிலும் பசுக்களும் அந்த ஶக்தியின ப்ரகாஶத்தால் அதிகங்களாகின்றன; பசுக்களைக்காட்டிலும் மனுஷ்யர் பரமாத்மாவின் ஶக்தி யதிஶயத்தால் உத்க்ருஷ்டராகச் செய்யப்பட்டார்கள். * * * * இந்த எல்லா ரூபங்களும் அந்த விஷ்ணுவினுடைய ரூபம். ஓ ராஜனே! அதற்குக் காரணம் என்னெனில், ஆகாசத்தை யொத்து எல்லாம் அவனுடைய ஶக்தி ஸம்பந்தத்துடன் கூடியிருக்கின்றன.] இவ்வகை பொருள்தரும் ஸ்ரீ விஷ்ணு புராண ஶ்லோகங்கள் கொஞ்சம் விமர்சைக்கு இடம் கொடுக்கின்றன. பகவத் கீதையில், பூமிராபோ நலோ வாயு: கம் மநோ புத்திரேவ ச । அஹங்கார இதீயம் மே பிந்நா ப்ரக்ருதிரஷ்டதா ॥ அபரேயம் இதஸ்த்வந்யாம் ப்ரக்ருதிம் வித்தி மே

பராம் | ஜீவபூதாம் மஹாபாஹோ யயேதம் தார்யதே ஜகத் || ஏதத்யோநீநி பூதாநி ஸர்வாணீத்யுபதாரய | அஹம் க்ருத்ஸ்நஸ்ய ஜகத: ப்ரபவ: ப்ரலயஸ்ததா || "பூமி, ஜலம், அக்நி, வாயு, ஆகாசம், மநஸ், புத்தி, அஹங்காரம், இப்படி எட்டுவிதமாய் என்னுடைய இந்த ப்ரக்ருதியானது பிரிந்திருக்கிறது; இந்த ப்ரக்ருதி நிக்ருஷ்டமானது; இதைக் காட்டிலும் வேறானதும், எதனால் இந்தப்ரபஞ்சம் தரிக்கப்பட்டிருக்கிறதோ அந்த ஜீவரூபமான என்னுடைய ச்ரேஷ்டமான ப்ரக்ருதியையும் அறி; ஸர்வப்ராணி வர்க்கங்களும் இந்த இரண்டு ப்ரக்ருதிகளையும் காரணங்களா யுடையன வென்று தெரிந்துகொள்; அவைகளின் மூலமாக நான் ஸர்வ ஜகத்துக்கும் ஸ்ருஷ்டி லயங்களுக்குக் காரணமாகிறேன்." என்றிவ்விதமாய் ஸர்வேச்வரன் அருளிச் செய்திருக்கிறான். இந்த ப்ரகரணத்தில் ஶக்தியென்னும் பதத்தின் ஸ்தாநத்தில் ப்ரக்ருதி எனும் பதத்தை ப்ரயோகிக்கப் பட்டது. அன்றியும் ச்ரேஷ்ட ஶக்தி சித் அல்லது ஜீவஶக்தி யென்றும், நிக்ருஷ்டஶக்தி அசித் அல்லது ஜட ஶக்தி யென்றும் ஏற்படுகிறது. இந்த ஜீவஶக்தியால் ஜகத்தானது தரிக்கப்பட்டிருக்கிறது.

மேலே நாமெடுத்த ச்லோகங்களினுடைய புராண ப்ரகரணத்தில் பராஶக்தியானது சுத்தஜீவன் அல்லது முக்தனுடைய ஸ்வரூபம் என்றும், அபரையாகிற ஶக்தி பத்தாளாகிற க்ஷேத்ரஜ்ஞர்களுடைய ஸ்வரூபமென்றும் ஏற்படுகிறது. அதே ப்ரகரணத்தில் முக்த ஸ்வரூபத்தை வர்ணிக்கு மிடத்தில் "ப்ரத்யஸ்தமிதபேதம்யத், ஸத்தாமாத்ரம் அகோசரம் | வசஸாம் ஆத்மஸம்வேத்யம் தஜ்ஜ்ஞாநம் ப்ரஹ்மஸம்ஜ்ஞிதம்." [ஶரீராதி ப்ரயுக்த பேதங்களற்றதும், அபக்ஷய விநாஶாதி விகார மில்லாமையால் ஸத்தா (இருத்தல்) மாத்ரம் என்று நிரூபிக்கக்கூடியதும், வாக் முதலான இந்த்ரியங்களுக் கெட்டாததும், ஸ்வயம்ப்ரகாசம், அதாவது தனக்குத்தானே ப்ரகாசித்துக் கொண்டிருக்கின்றதும், ஜ்ஞாநஸ்வரூபமாயும், ஜ்ஞாநகுண மொன்றாலேயே நிரூபிக்கத்



தக்கதுமான வஸ்து ப்ரஹ்ம எனும் பெயரோடுகூடியது] என்று சொல்லப்பட்டது. அபரா ஶக்தியாகிற க்ஷேத்ரஜ்ஞர்களால் வ்யாபிக்கப்பட்ட ப்ரபஞ்சத்தை வர்ணிக்குமிடத்தில், "ததஸ்ஸர்வம் ஹரே ரூபம் சிந்தயே த்விஶ்வமோசநம்" "ஜகத்துக்குள் இருக்கும் க்ஷேத்ரஜ்ஞர்களாகிற ஹரியினுடைய ஸ்தூலரூபத்தைச் சிந்திக்கவும்" என்று சொல்லி அந்த க்ஷேத்ரஜ்ஞர்களை ஹிரண்யகர்ப்பன், ப்ரஜாபதி, தேவர்கள், தேவயோநிகள், மனிதர், பசுக்கள், முதலானவர்களென விவரிக்கின்றார்.

அதே புராணத்தில் ப்ரஹ்லாத ஸ்தோத்ரத்தில், பகவானுடைய ஶக்தி த்வயத்தை நமஸ்கரிக்கு மிடத்தில், "ஸர்வபூதேஷு ஸர்வாத்மந் யா ஶக்திரபரா தவ | குணாஶ்ரயா நமஸ்தஸ்யை ஶாஶ்வதாயை பரேஶ்வர || யாதீத கோசரா வாசாம் மநஸாஞ்சாவிஶேஷணா | ஜ்ஞாநிஜ்ஞாநபரிச்சேத்யா தாம் வந்தே சேஶ்வரீம் பராம்" [ஸர்வாந்தராத்மாவா யிருக்கும் பகவந்! பராளுக்கும் ஈஶனே! ஸத்வாதி குணங்களுக்கு ஆஶ்ரயையாயும், நித்யையாயும், ஸர்வப்ராணிகளிடமும் இருக்கும் நிக்ருஷ்டையான உன்னுடைய ஜடஶக்தி எவளோ, அவளை நமஸ்கரிக்கின்றேன்; யாதொரு (உனது சித் ஶக்தியானவள்) வாங் மனஸாதிகளுக்கு எட்டாதவளாயும், ஜாதி குணாதி விஶேஷங்களற்றவளாயும், ஜ்ஞாநிகளுடைய ஜ்ஞாநத்தால் அநுமிக்கக்கூடியவளாயும் இருக்கின்றாளோ அப்படிப்பட்ட பரமேஸ்வரியையும் நமஸ்கரிக்கின்றேன்] என்று ஸ்மரிக்கப்பட்டிருக்கிறது. கீதையில் ஜீவஸ்வரூபத்தை ஈஶ்வரனுடைய உயர்ந்த ஶக்தியாகவும், அநேக ப்ரத்யேக ரூபங்களாகப் பரிணமித்த ப்ரக்ருதி ஸ்வரூபத்தை அவன் தாழ்ந்த ஶக்தியாகவும் சொல்லப்பட்டிருக்கிறது. ஸ்ரீ விஷ்ணு புராணத்திலோ, ஜீவனுடைய சுத்தமான முக்தஸ்வரூபத்தை உயர்ந்த ஶக்தியாகவும், ஜீவனுடைய பத்த ஸ்வரூபத்தை, அதாவது, ப்ரக்ருதியினுடைய எட்டுவித விகாரங்களால் உத்பந்நங்களான கரணகளேபரங்களுடன் ஸம்ஸரிக்கின்ற ஜீவ ஸ்வரூபத்தை ஈச்வரனுடைய தாழ்ந்த ஶக்தியாகவும் வர்ணிக்கப்பட்டிருக்கிறது.

இதில் தாழ்மையாகிற குறைவு ஜீவரூபத்திலில்லை; அதைப்பற்றிய எட்டுவிதமான ப்ராக்ருத விகாரங்களில் தங்கியிருக்கிறது. ஆதலால் ஜீவ ஸமூஹமாகிற சித்தும், ப்ராக்ருத விகார ஸமூஹமாகிற ப்ரபஞ்சம் இப்போதிருக்கும் ஸ்தூல தசையிலும், ப்ரளய காலத்திலிருக்கும் ஸூக்ஷ்மதசையிலும், ஈஶ்வரனுடைய ஶக்திகளாகவிருக்கின்றன. ஈஶ்வரனைப்போல் இவையும் ஆதியந்தமில்லாதவை. இவற்றைச் சேர்க்கும் ஈஶ்வரனுடைய மூன்றாவது ஶக்தியெனும் அவித்யையாகிற கர்ம ஶக்தியும் ஆத்யந்தமில்லாதது. ஸர்வ பூதங்களுடைய உத்பத்தியும் இந்த ஶக்தித்ரயங்களைக் காரணமாயுடையது. அவற்றின் மூலமாகத்தான் ஈஶ்வரன் ஜகத்துக்கு ஸ்ருஷ்டி லய காரணமாகிறான். இதை, "𑌪𑍍𑌰𑌧𑌾𑌨𑌂 𑌪𑍁𑌰𑍁𑌷𑌂 𑌚𑌾𑌪𑌿 𑌪𑍍𑌰𑌵𑌿𑌶𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑍇𑌚𑍍𑌛𑌯𑌾 𑌹𑌰𑌿𑌃 । 𑌕𑍍𑌷𑍋𑌭𑌯𑌾𑌮𑌾𑌸 𑌸𑌂𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑍇 𑌸𑌰𑍍𑌗𑌕𑌾𑌲𑍇 𑌵𑍍𑌯𑌯𑌾𑌵𑍍𑌯𑌯𑍌 ॥ 𑌯𑌥𑌾 𑌸𑌨𑍍𑌨𑌿𑌧𑌿𑌮𑌾𑌤𑍍𑌰𑍇𑌣 𑌗𑌨𑍍𑌧𑌃 𑌕𑍍𑌷𑍋𑌭𑌾𑌯 𑌜𑌾𑌯𑌤𑍇 । 𑌮𑌨𑌸𑍋 𑌨𑍋𑌪𑌕𑌰𑍍𑌤𑍃𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 𑌤𑌥𑌾𑌽𑌸𑍌 𑌪𑌰𑌮𑍇𑌶𑍍𑌵𑌰𑌃" [ஸ்ருஷ்டி காலம் ப்ராப்தமானபோது ஸ்ரீ ஹரியானவர் விகாரார்ஹமான மூலப்ரக்ருதியையும், அவிகாரியான புருஷனையும், ஸ்வ ஸங்கல்பத்தால் ப்ரவேசித்து, ஸ்ருஷ்டிக்கு அபிமுகர்களாக்குவித்தார்; ஒரு வாஸனையானது தான் ஸமீபத்தில் நிற்கையால் மாத்ரம் ஓர் மனிதன் மனத்தில் விகாரத்தை உண்டு பண்ணுகின்றது; அந்த விகாரம் உண்டாகும்படி மனதுக்கு யாதொரு ப்ரவ்ருத்தியுமில்லை; அப்படியே ஸர்வேஶ்வரன் தன் ஸாந்நித்யம் ஒன்றாலேயே ஸ்ருஷ்ட்யாதி வ்யாபாரங்களை நடக்கச்செய்கின்றான்] என்றிவ்விதமாய் ஸ்ருஷ்ட்யாதிகளுக்கும் ஈஶ்வரனுக்கும் உள்ள ஸம்பந்தத்தைப் புராணவசனம் விவரிக்கின்றது. இப்படிப்பட்ட ஸ்ருஷ்டியில், ஜீவகோடிகள் ஸுக துக்கானுபவங்களில் தாரதம்ய தசைகளை அநுபவிக்கின்ற விஷயத்தில், பக்ஷபாதமாவது, தயாஶூன்யமாவது ஈஶ்வரனிடத்தில் யோசிக்கக்கூடாது. ஏனென்றால், ப்ரஹ்ம ஸூத்ரத்தில் ஈஶ்வரன் ஸ்ருஷ்ட்யாதி ப்ரவ்ருத்திகளில் ஸாபேக்ஷனாகவிருக்கின்றான் என்று வெளியிட்டிருக்கின்றது. அதாவது, ஸ்ருஷ்டிக்கப்பட்ட ப்ராணி வர்க்கங்களின் கர்மங்களை யபேக்ஷித்து ஸ்ருஷ்டிக்கின்றான்



என்கிறது. அப்படியே ஸ்ரீ விஷ்ணு புராணத்திலும், "𑌨𑌿𑌮𑌿𑌤𑍍𑌤𑌮𑌾𑌤𑍍𑌰𑌮𑍇𑌵𑌾𑌸𑍌 𑌸𑍃𑌜𑍍𑌯𑌾𑌨𑌾𑌂 𑌸𑌰𑍍𑌗𑌕𑌰𑍍𑌮𑌣𑌿 । 𑌪𑍍𑌰𑌧𑌾𑌨𑌕𑌾𑌰𑌣𑍀𑌭𑍂𑌤𑌾 𑌯𑌤𑍋 𑌵𑍈 𑌸𑍃𑌜𑍍𑌯𑌶𑌕𑍍𑌤𑌯𑌃 । 𑌨𑌿𑌮𑌿𑌤𑍍𑌤𑌮𑌾𑌤𑍍𑌰𑌂 𑌮𑍁𑌕𑍍𑌤𑍍𑌵𑍈𑌵 𑌨𑌾𑌨𑍍𑌯𑌤𑍍 𑌕𑌿𑌞𑍍𑌚𑌿𑌦𑌪𑍇𑌕𑍍𑌷𑌤𑍇 । 𑌨𑍀𑌯𑌤𑍇 𑌤𑌪𑌤𑌾𑌂 𑌶𑍍𑌰𑍇𑌷𑍍𑌠 𑌸𑍍𑌵𑌶𑌕𑍍𑌤𑍍𑌯𑌾 𑌵𑌸𑍍𑌤𑍁 𑌵𑌸𑍍𑌤𑍁𑌤𑌾𑌂" [ஸ்ருஷ்டிக்கப்பட்ட வஸ்துக்களின் ஸ்ருஷ்டி விஷயத்தில் இந்த ஈஶ்வரன் கேவலம் நிமித்தமாத்ரமாகவிருக்கிறான்; அந்த வஸ்துக்கள் ஒவ்வொன்றினுடையவும் ப்ராசீந கர்மரூபமான சக்திகள் அந்தவிஷயத்தில் முக்ய காரணங்களாக இருக்கின்றன; அவை பகவான் நிமித்த மாத்ரமாக இருப்பதைக்காட்டிலும் (ஸ்வ ஸ்ருஷ்டிவிஷயத்தில்) வேறொன்றையும் அபேக்ஷிக்கவில்லை; ஸ்ருஜ்ய வஸ்துக்கள் ஸ்வ தேவாதி மனுஷ்யஸ்வரூபங்களை தங்கள் தங்கள் கர்மங்களடியாகவே அடைவிக்கப்படுகின்றன.] என்று நிஷ்கர்ஷிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, அவாப்த ஸமஸ்தகாமனாகிற ஸர்வேஶ்வரனுக்கு ஜகத் ஸ்ருஷ்டியில் ஒரு ப்ரயோஜனமும் இல்லை, கேவலம் லீலைதான் ப்ரயோஜனம் என்று ப்ரஹ்மஸூத்ரத்தில் தீர்மானிக்கிறார். இன்னும் மாண்டூக்யோபநிஷத்தில், "𑌇𑌚𑍍𑌛𑌾𑌮𑌾𑌤𑍍𑌰𑌂 𑌪𑍍𑌰𑌭𑍋𑌃 𑌸𑍃𑌷𑍍𑌟𑌿𑌰𑌿𑌤𑌿 𑌸𑍃𑌷𑍍𑌟𑍌 𑌵𑌿𑌨𑌿𑌶𑍍𑌚𑌿𑌤𑌾𑌃 । 𑌕𑌾𑌲𑌾𑌤𑍍 𑌪𑍍𑌰𑌸𑍂𑌤𑌿𑌂 𑌭𑍂𑌤𑌾𑌨𑌾𑌂 𑌮𑌨𑍍𑌯𑌨𑍍𑌤𑍇 𑌕𑌾𑌲𑌚𑌿𑌨𑍍𑌤𑌕𑌾𑌃 ॥ 𑌭𑍋𑌗𑌾𑌰𑍍𑌥𑌂 𑌸𑍃𑌷𑍍𑌟𑌿𑌰𑌿𑌤𑍍𑌯𑌨𑍍𑌯𑍇 𑌕𑍍𑌰𑍀𑌡𑌾𑌰𑍍𑌥𑌮𑌿𑌤𑌿 𑌚𑌾𑌪𑌰𑍇 । 𑌦𑍇𑌵𑌸𑍍𑌯𑍈𑌷 𑌸𑍍𑌵𑌭𑌾𑌵𑍋𑌽𑌯𑌮𑌾𑌪𑍍𑌤𑌕𑌾𑌮𑌸𑍍𑌯 𑌕𑌾 𑌸𑍍𑌪𑍃𑌹𑌾" [ப்ரபுவான ஸர்வேஶ்வரன் ஸத்ய ஸங்கல்பனானபடியால் கேவலம் இச்சையால் ஸ்ருஷ்டிக்கின்றானென்று ஸ்ருஷ்டிவிஷயத்தில் நிச்சயிக்கின்றார்கள்; காலம் ஈஶ்வரனென்றே, ஸ்ருஜ்ய வஸ்துக்களின் கர்மங்களுடைய பரிபாக தசையென்றே சிந்திக்கிறவர்கள் காலத்தால் ப்ராணிகள் உத்பத்தியென்று நினைக்கிறார்கள்; இதரர்கள் ஈஶ்வரன் போகத்துக்காக, அதாவது, ஸ்வாநுபவார்த்தம் ஸ்ருஷ்டிக்கிறான் என்பார்கள்; விளையாட்டுக்காக ஸ்ருஷ்டிக்கிறானென்பார் அந்யர்; அவாப்த ஸமஸ்தகாமனான ஈஶ்வரனுக்கு, எந்த ப்ரயோ

ஜநத்தை உத்தேசித்து, என்ன ஆசை உண்டாகக்கூடும்? இந்த ஸ்ருஷ்டி ஸ்திதி லயாதிகளெல்லாம் அவன் ஸ்வபாவத்தில் அந்தர் கதம்; அதாவது, ஸர்வமும் அவன் நித்ய ஸங்கல்ப ஸித்தம்] என்றும் தீர்மாநிக்கப்பட்டிருக்கிறது.

ஆக, சித்தென்றும், அசித்தென்றும் வ்யவஹரிக்கப்பட்ட வஸ்துக்களின் மொத்தத்தில், எக்காலமும் வித்யாஸம் இல்லையென்றும், சித் என்னும் ஜீவர்கள் உத்பத்தி நாச ரஹிதர்களானபடியால் எப்போதும் இருக்கிறவர்களென்றும், அந்த ஹேதுவினால் அவர்கள் இடைவிடாமல் ஸம்ஸரிக்க வேண்டியவர்களென்றும், அவர்களுக்குக் கர்மாநுகுணமாக சரீரேந்த்ரியங்களும், போக்ய வஸ்துக்களும் அசித் வஸ்துவின் விகாரங்களால் ஈச்வரனுடைய நித்ய இச்சாருபமான ஸங்கல்பத்தினால் அமைகின்றனவென்றும், சித்தும் அசித்தும் ஈச்வரனுடைய சக்திகளென்றும், அவற்றின் சேர்க்கைக்குக் காரணமானது அவனுடைய அவித்யாசக்தியென்றும், இந்த சக்தியானது ஜீவர்களுடைய கர்மாநுகுணமாக ஸ்ருஷ்டியாதிகளுக்கு உபகாரமாகிறதென்றும், ஈச்வரனுக்கு ஸ்வப்ரயோஜநரூபமான ஸம்பந்தம் ஸ்ருஷ்டியாதிகளில் இல்லையென்றும், ஸர்வ ஜீவர்களுடைய ஸ்வரூபமும் ஜ்ஞாநமும் ஏகாகாரமாயிருக்கக் கர்மாநுகுணமாகக் கரணங்களையும் சரீரங்களையும் அடைவதில், ஜீவர்களுடைய ஜ்ஞாநமானது ஸங்கோசத்தையும் விகாஸத்தையும் தத்தத் சரீரப்ரயுக்தமாகத் தாரதம்யத்துடன் அடைகின்றதென்றும், இந்த விதமாக, ஸர்வதேச ஸர்வகால ஸர்வாவஸ்தைகளுக்கும் பொருந்தியபடித் தத்வவிவேகத்தைப் புருஷோத்தமனடியாகவும், பராசர, வ்யாஸ, சுகாதிகள் மத்யமமாகவும், நம்முடைய ஆசார்யர்கள் அந்தமாகவும் ஏற்பட்ட தத்வஜ்ஞாந ஸாக்ஷாத்கார ஸமர்த்தர்கள் நிறைந்த குருபரம்பரை மூலமாய், ஸம்ப்ரதாயக்ரமத்தில் நாமடைந்திருக்கிறோம்.

பத்ராதிபர்.

(இன்னும் வரும்.)

ஸ்ரீ:.

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:.

# ஸௌபரி சரித்திரம்.

"யாவத் ஸூர்ய உதேதி ஸ்ம யாவச்ச ப்ரதிதிஷ்டதி । ஸர்வம் தத் யௌவநாச்வஸ்ய மாந்தாது: க்ஷேத்ரமுச்யதே ॥" ஸூர்யன் எங்கே உதயமாகிறானோ, எங்கே அஸ்தமயமாகிறானோ இவ்வெல்லைகளுக்குள் அடங்கிய பூமியெல்லாம் மாந்தாதாவின் ராஜ்யம் என்று புகழப்பட்ட ககுத்ஸ்த வம்சத்தில் வந்த மாந்தாதா என்கிற சக்ரவர்த்தி அரசாண்டு வரும்நாளில் ஸௌபரி என்ற மஹருஷியொருவர் பன்னிரண்டு வருஷம் தண்ணீரில் மூழ்கி அருமையான தவம் செய்து கொண்டிருந்தார். அதே ஜலத்தில் ஒரு மத்ஸ்யராஜன் தன் புத்ர பௌத்ர தௌஹித்ரர்களுடன், அவைகள் முன்னும் பின்னும் சிறகுகளிலும் வாலிலும் தலையிலும் ஸஞ்சரித்துக் கொண்டிருக்க, அஹோராத்ரி அவைகளை விட்டுப்பிரியாமல் மிகுந்த ஸந்தோஷத்துடன் ருஷி முன்பாகத் திரிந்து கொண்டிருந்தது. புத்ராதிகளுடன் அதிரமணீயமாய் விளையாடித் திரிகிற அந்த மத்ஸ்யத்தை மஹருஷி ஒருக்கால் பார்த்துத் தானும் அப்படியே ஸகுடும்பமாய் ரமிக்க வேண்டும் என்கிற எண்ணத்தைக் கொண்டார். உடனே ருஷி கடலில் நின்றும் கரையேறி, விவாஹம் புரிய மனமுடையவராய்த் தன்னைப்பார்த்து, "என்னுடைய சரீரத்தில் தாருண்யம் என்பது கொஞ்சமேனுமில்லையே; நரை திரை மூப்பு அதிகரித்துவிட்டதே; எலும்பும் தோலும் தான் மிகுதியாயிருக்கின்றன; என்னைப் பார்த்து எந்தப் பெண்மணி என்னை பர்த்தாவாக வரிக்க இச்சிப்பாள்; பெண்ணின் பிதாதான் எனக்குக் கொடுக்க எவ்விதம் ஸம்மதிப்பான்; இந்த எண்ணம் வேண்டாம் என்று தள்ளினாலும் அடிக்கடித் தோன்றி நிஷ்டையைக் குலைத்துவிடுமே; இது

எங்ஙனம் பூர்த்தி பெறும்" என்று சிந்தித்து, முயற்சியுடையார் இகழ்ச்சி யடையார், யத்நே க்ருதே யதி ந ஸித்யதி கோऽத்ர தோஷ:, என்கிற வசநங்களை ஸ்மரித்துக் கொண்டு ஒருவாறு தேறுதலை யடைந்து, அயோத்யா சக்ரவர்த்தியான மாந்தாதாவுக்கு ஐம்பது கன்னிகைகள் இருப்பதாகக் கேள்விப்பட்டு, அவர்களில் ஒரு பெண்ணைக் கேட்போம், கொடேன் என்று அவன் மறுத்தானாகில், தைவாயத்த: ஸ்தலாந்தரத்தில் பார்ப்போம், என்று தனக்குள் தீர்மானஞ் செய்துகொண்டு அப்பட்டணத்தை நோக்கி விரை வாய்ச் சென்று ராஜஸ்தாநத்தை யடைந்து தன் வரவை த்வார பாலகன் மூலமாய் மன்னனுக்குத் தெரிவித்தார். ராஜா அர்க்யாதி உபசாரங்களால் ருஷியைப் பூஜித்து நல்லாஸநத்தி லிருத்தி வந்த கார்யம் என்னென்று வினவினான். உடனே, ருஷி சொல்லத் தொடங்கினார். "நிவேஷ்டுகாமோऽஸ்மி நரேந்த்ர கந்யாம் ப்ரயச்ச மே மா ப்ரணயம் விபாங்க்ஷீ: । ஓ ராஜனே! விவாஹம் செய்து கொண்டு காஹஸ்த்ய தர்மத்தை ஆசரிக்க உத்தேசித் திருக்கின்றேன்; நீ எனக்கு கன்னிகாதானம் செய்யவேண்டும்; என்னுடைய ஆசையை வீணாக்க வேண்டாம். ந ஹ்யர்த்திந: கார்யவசாதுபேதா: ககுத்ஸ்தவம்சே விமுகா: ப்ரயாந்தி। ககுத்ஸ்த வம்சத்தாரிடத்தில் வந்த யாசகர்கள் தங்களுடைய இஷ்டபூர்த்தியை யடையாமல் திரும்பினதில்லை அல்லவா. அந்யேऽபி ஸந்த்யேவ ந்ருபா: ப்ருதிவ்யாம் மாந்தாத ராஜ்ஞாம் தநயா: ப்ரஸூதா: । கிம் த்வர்த்திநாமர்த்தித தாநதீக்ஷா க்ருதவ்ரதம் ச்லாக்யமிதம் குலம் தே ॥ உலகத்தில் அநேக ராஜாக்கள் உண்டு; அவர்களும் பெண்களைப் பெற்றிருக்கிறார்கள்; ஆனால் யாசகர்களுடைய மநோரதத்தைப் பூர்த்தி செய்யும் வ்ரதத்தை யுடைய உன்னுடைய குலம் தான் ச்லாக்யமானது. சதார்த்த ஸம்க்யாஸ் தவ ஸந்தி கந்யா ஸ்தாஸாம் மமைகாம் ந்ருபதே ப்ரயச்ச । யத் ப்ரார்த்தநா பங்கபயாத் பிபேமி தஸ்மாதஹம் ராஜவராதி து:காத் । உனக்கு ஐம்பது பெண்கள் அல்லவா; ஒரு பெண்ணை எனக்குக் கொடுக்க வேணும்;



ப்ரார்த்தநா பங்கம் எங்கே நேரிடுகின்றதோ வென்று நான் மிகுவும் பயந்திருக்கிறேன்; அப்படி நேரிடாமல் செய்ய வேண்டும்" என்றார்.

இந்த வார்த்தைகளைக் கேட்டு ஜரையினால் தளர்ந்து நரைத் திருக்கிற அவருடைய தேகத்தைப் பார்த்து ராஜா திகிலடைந்து, தலைவணங்கி, "கன்னிகையைக் கொடுத்தால் பெண்கஷ்டத்தைத் தான் அடையும்; இவருக்கும் ஸுகமில்லை; இவருக்கு வயதோ அதிக்ரமித்து விட்டது; வஸிக்கும் இடமோ காடு; கட்டத்துணியில்லை; உண்ணச் சோறுமில்லை; இதையெண்ணிக் கொடேன் என்றால் நம்மைச் சபித்துவிடுவார்; என் செய்யக் கடவேன்; கந்யா விதரணம் து:காய பெண்ணைப் பெறுவது துக்கத்தின் பொருட்டுத்தான்" என்று பலவாறாக ஆலோசித்துக் கொண்டிருக்கையில், ருஷி, "ராஜனே! என்ன சிந்திக்கிறாய், அஸஹ்யமான வார்த்தையை நான் ஒன்றும் சொல்லவில்லையே; உன்னுடைய பெண்கள் யாருக்காவது அவச்யம் கொடுக்கப் படவேண்டும்; எனக்குக் கொடுத்தால் நீ க்ருதார்த்தனாவாய்" என்றார். சாபபீதனான ராஜா மிக வணக்கத்துடன் "ருஷி ச்ரேஷ்டரே! என்னுடைய குலத்தில் ஒரு வழக்கமுண்டு; கன்னிகையாரை வரிக்கிறாளோ அவருக்குத்தான் அப்பெண்ணைக் கொடுப்பது; ஆகையால் தேவருடைய யாசனை என்னுடைய மநோரதத்திற்கு அகோசரமா யிருக்கிறது; என்னசெய்யக் கட வேன் தெரியவில்லையே; என்று சிந்திக்கிறேன்" என்று சொன்னான்.

"நான் கேட்டதை மறுத்தலுக்கு ராஜா நல்ல உபாயம் செய்தான்; நானோ கிழவன்; என்னை எந்தப்பெண் வரிப்பாள்; எனக்கே ஆசையில்லாமல் போகட்டும் என்று இப்படி சொன்னான். இதற்குத் தகுந்தபடி செய்வோம்" என்று ருஷி மனத்தில் நினைத்துக்கொண்டு அரசனைப்பார்த்து, "மாந்தாதாவே! உன்னுடைய குலவழக்கத்தை நான் கெடுக்கவரவில்லை; உன்னுடைய பெண்களிருக்கும் அந்தப்புரத்துக்கு என்னை அனுப்பு; என்னை எந்தப்பெண் வரிக்கிறாளோ அந்தப்பெண்ணை எனக்கு விவாஹம் செய்துகொடு; ஒருவரும் வரிக்காவிட்டால் இந்த எண்ணத்தை விட்டு விடுகிறேன்" என்றார். இதற்கு அரசன் இணங்கி சேவகனுடன் ருஷியை அந்தப்புரத்துக்கு அனுப்பினான். வழியில் ருஷி

ஸகல லக்ஷித்த கந்தர்வ மனுஷ்யர்களைக் காட்டிலும் அதிசயமான ரூபத்தை யெடுத்துக்கொண்டார். அந்தப்புரம் சேர்ந்தவுடன் சேவகன் இவருடைய ஆகமனத்தையும் நடந்த வ்ருத்தாந்தங்களையும் ராஜ கன்னிகைகளுக்குச் சொன்னான். இதைக்கேட்டு அவர்கள் ருஷியைப்பார்த்தவுடன், ஒருத்தி "நான் வரிக்கிறேன்" என்றும், மற்றொருத்தி "உனக்குத்தகாது எனக்குத்தான் அநுரூபமாயிருக்கிறார்" என்றும், ஒருத்தி "எனக்குத்தான் அவர் ச்ருஷ்டிக்கப்பட்டிருக்கிறார்" என்றும், மற்றொருத்தி "நான் அவரை வரும்போதே வரித்துவிட்டேன்" என்றும் இப்படி எல்லாரும் மோகத்தையடைந்து அவரை வரித்தார்கள். இந்த ஸமாசாரத்தைச் சேவகன் அரசனிடம்போய் அறிவிக்க அவன் கேட்டு 'என்னசெய்வேன்' என்று ருஷிக்கு பயந்து ஐம்பது பெண்களையும் அவருக்கு விவாஹம்செய்து கொடுத்தான்.

ருஷி அதிஸந்துஷ்டராய்ப் பத்நிகளை அழைத்துக்கொண்டு தன்னுடைய ஆச்ரமத்துக்குச் சென்று, தேவசில்பியான விச்வகர்மாவை வரவழைத்து, பத்நிகளுக்குத் தனித்தனியே ஒரு மாளிகையை, அதிரமணீயங்களான உபவநங்களோடும் தாமரைத் தடாகங்களோடும், புஷ்ப பல வ்ருக்ஷங்களோடும், மயில் குயில் முதலான பக்ஷிஜாதிகளோடும், விவித ஆஸனசயனங்களோடும் கூடினதாய் நிர்மிக்கச்சொல்லி, அதில் திவ்யமான ஸக்ஷ்ய போஜ்யாதிகளை அநுபவித்துக் கொண்டு ஸுகமாய் இருந்தார்.

இப்படியிருக்க அரசன் தன் பெண்களைப் பார்க்க விரும்பி ஒருநாள் ருஷியின் ஆச்ரமத்திற்கு வந்தான். அங்கு அத்யாச்சரியமான ப்ராஸாதங்கள் விளங்கக்கண்டு ஒரு மாளிகையிற் சென்று தன் பெண்ணைப்பார்த்து அன்புடன், "அம்மா! நீ சுகமாயிருக்கிறாயா, கஷ்டப்படுகிறாயா; ருஷி உன்னிடத்தில் ப்ரீதியாயிருக்கிறாரா; என்னிடத்தில் இருந்தநாளை நினைக்கிறாயா" என்று கேட்டான். அதற்குப் பெண், "அப்பா! நான் ரொம்பவும் ஸந்தோஷத்தை யநுபவிக்கிறேன், எனக்கு ஒரு குறைவுமில்லை; ருஷியென்னிடத்தில் மிகுந்த காதல்வைத்து என்னைவிட்டுப் பிரியாமலிருக்கிறார்; ஆகையால் என்னுடைய சகோதரிகள் என்ன கஷ்டப்படுகிறார்களோ என்கிற வருத்தமுண்டாகிறது" என்றாள். அரசன் மற்றொரு பெண்வீட்டுக்குப்போய் அவளுடைய யோகக்ஷேமத்



தைக்கேட்க அவளும் தனக்கு ஒருகுறைவுமில்லை யென்றும், ருஷி தன்னைவிட்டுப் பிரியாமையாற் சகோதரிகள் என்ன வ்யஸனத்தை அடைந்தார்களோ என்று சிந்திக்கிறேன் என்றும் சொன்னாள். ஒவ்வொருத்தி வீட்டிலும் இப்படியே சொல்லக்கேட்டு அரசன் அதிக வியப்பையடைந்து மஹருஷிக்குத் தண்டன் ஸமர்ப்பித்து அவருடைய தபோமஹிமையை ச்லாகித்துச் சிலகாலம் அவரிடம் இருந்து பின்பு தன்னுடைய நகரத்தை யடைந்தான்.

காலக்ரமத்தில் ருஷிக்கு நூறுபிள்ளைகள் பிறந்தன. இக் குழந்தைகளிடத்தில் அவர் மிகுந்த அன்பைப் பாராட்டினர்; இவர்கள் எப்போது மழலைச் சொற்களைச் சொல்வார்கள், எப்போது யௌவநத்தை யடைவார்கள், எப்போது இவர்களுக்கு விவாஹத்தைப் பண்ணிப்பார்ப்பேன், எப்போது இவர்களுக்கு ஸந்தாநம் உண்டாகும் என்று இப்படிப்பட்ட ஆசைகள் அவருக்கு அநவரதம் உண்டாயின.

இப்படி ஸம்ஸார ஸுகத்தில் நிமக்நரான ருஷிக்குச் சிலநாள் கழித்து ஒருதருணம் மநோவிகாஸம் உண்டாயிற்று. "அஹோ மே மோஹஸ்யாதி விஸ்தார:" என்னுடைய ஆசைக்கு அளவேயில்லை, இதென்ன ஆச்சரியம்; என்னுடைய குழந்தைகள் தவழ்ந்து விளையாடக்கண்டேன்; பிறகு காலால் நடக்கக்கண்டு ஸுகித்தேன்; யுக்த பருவம் வந்ததும் அவர்களுக்கு விவாகத்தைச் செய்துவைத்து ஸந்தோஷித்தேன்; இப்பொழுது பேரன்மார்களையும் பெற்றேன்; ஆனால் இவர்களுக்கு எப்போது ஸந்தாநம் உண்டாகும் என்று ஆசை யுண்டாகிறது; மநோரதாநாம் ந ஸமாப்திரஸ்தி வர்ஷாயுதேநாபி ததாப்தலக்ஷை: । பூர்ணேஷு பூர்ணேஷு புநர்நவாநாம் உத்பத்தய: ஸந்தி மநோரதாநாம் ॥ மநோரதங்கள் பூர்த்தியாகப் பூர்த்தியாக மேன்மேலும் மநோரதங்கள் ஜநிக்கின்றன; லக்ஷ வருஷமானாலும் இம்மநோரதங்களுக்கு முடிவு என்பது கிடையாது; தண்ணீரில் மூழ்கிக் கிடந்த எனக்கு ஒரு மத்ஸ்யத்தினுடைய ஸங்கத்தினாலல்லவோ என்னுடைய நிஷ்டைகுலையும்படி நேரிட்டது; ஸமாதிபேஷா: ஸுதவித்ததாரா: ஸகவாஸத்தால் தான்

தோஷங்கள் உண்டாகின்றன; இனிமேலாவது புத்தியைத் தாழ விடாது ஆத்மரக்ஷணத்திற்கு வேண்டிய உபாயத்தை அநுஷ்டிக்கக்கடவேன்; ஸர்வஸ்ய தாதார மசிந்த்யரூப மணோரணீயாம்ஸ மதி ப்ரமாணம் । [illegible] தமேவ விஷ்ணும் ॥ எல்லாவற்றையும் ரக்ஷிப்பவனும், அறிய முடியாத ரூபத்தை யுடையவனும், அணுவுக் கணுவாகவும் மஹத்துக்கு மஹத்தா யிருப்பவனும், யுக பேதத்தாலே விதம் விதமான திவ்யரூபத்தை தரிப்பவனும், தேவாதி தேவனுமான ஸ்ரீ விஷ்ணுவை ஆராதிக்கக் கடவேன்." என்று இப்படி ருஷியானவர் மனோநிச்சயத்தை தரித்தவராய் புத்ர பௌத்ராதிகளையும் மச்ச மித்தைகளையும் துறந்து தன்னுடைய பத்னிகளைக் கூட்டிக்கொண்டு வநத்திற்குச் சென்று, தீவ்ரமாய தவத்தைச்செய்து தன் பாபங்களைக் கழித்துப் பிறகு துறவுபூண்டு பூர்ணமான பகவதநுக்ரகத்தைப் பெற்று பரமாநந்த ஸுகத்தை யடைந்தார். இச்சரித்திரத்தினால் (1) [illegible] செய்யக்கூடா தென்றும், (2) ஆசைக்கு அளவின்மையால் ஆசைப் பொருள்களை அநுபவித்தே விரக்திப் பெறக்கடவது என்கிற எண்ணத்தைத் தவிர்க்க வேண்டு மென்றும், (3) பரம புருஷார்த்தத்தைக் காலாவதியில் நாடுவோ மென்றிராது போது உள்ள பொழுதே தேடவேண்டு மென்றும் அறியத்தக்க விஷயங்கள்.

சித்தூர் ஸௌந்தர ராஜாசார்யர்.

---

அத்திப்பட்டு அழகியசிங்கர் ஒருஸமயம் ஏகாந்தமாய் எழுந்தருளி யிருக்கிற காலத்தில் மஹாஜ்ஞாதாவான கொத்திமங்கலம் ஸ்வாமியக்ர அநேகாவர்த்தி தண்டன் ஸமர்ப்பிக்கவே ஸ்ரீஸ்வாமி எழுந்திருந்து போதும் போதும் என்றுத் தகைந்தார். இதைப் பார்த்திருந்த சில ஸ்வாமிகள் மற்றொரு ஸமயம் அழகிய சிங்கரிடத்திற் சென்று அப்படியும் செய்யலாமோ, மஹா ஸ்தானத்துக்கு குறைவன்றோ என்று விஜ்ஞாபிக்க, அதற்கு ஸ்ரீ ஸ்வாமி வெளுப்பு சிவப்பானால் என்ன மாறிற்று என்று அருளிச் செய்தார். [வெளுப்பு சிவப்பு என்றது ஆடையை.]

## கடிதங்கள்.

### (1.)

### ப்ரயாகை மடம்.

ஸ்ரீவேதாந்த தீபிகை பத்ராதிபருக்கு:—

ஸ்ரீயதிராஜோ விஜயதே ।
ஸ்ரீமதே ராமாநுஜாய நம: ॥
[illegible]
[illegible] ॥

தற்காலத்தில் வேதங்களாலே கோஷிக்கப்பட்டதாயும், ஸர்வ மதஸ்தர்களாலும் பூஜிக்கப்பட்டதாயும், ஸாக்ஷாத் ஸ்ரீசக்ரவர்த்தித் திருமகனார் பாரத்வாஜ முனிவரால் ஆதித்யம் பெற்ற புண்ய க்ஷேத்ரமாயும், ஐஹிக ஆமுஷ்மிக பல ப்ரதமாயும், கங்கை யமுனை ஸரஸ்வதி என்னும் நதிகள் சேர்ந்த திருவேணி ஸங்கமமாகிற ப்ரயாகை க்ஷேத்ரத்தில் எல்லா மதஸ்தர்களும் அவரவர்களுடைய இனத்தார் யாத்ரை வருகிற வர்களுக்கு தீர்த்தவிதிகளும் மற்ற ஸௌகர்யங்களும் அமையும்படி மடங்களையும் விடுதிகளையும் ஏற்படுத்தி யிருக்கிறார்கள்.

அதுபோல நம்முடைய ஸ்ரீவைஷ்ணவர்களுக்கும் ஷை ஸௌகர்யங்களை யுத்தேசித்து வெகுகாலமாய் த்ருதண்டிமடம் என்ற ஒரு ஸந்நிதியை பூர்வீகர்கள் ஏற்படுத்தி வைத்திருக்கிறார்கள். அந்தஸந்நிதிக்கு வரப்பட்ட ஐவேஜானது பெருமாளுக்கு மட்டுமே கிஞ்சித் போதுமானதாக விருக்கிறது. ப்ரயாகைக்கு யாத்ரை வருகிற ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கு மற்றஜாதியாருக்கிருக்கிற ஸௌகர்யம்போலில்லாமல் ஷை திருதண்டிமடத்தில் நின்று ஸ்வாசம் விடக்கூடிய இடமில்லாமல் பெருமாள் திருமடைப்பள்ளியிலும் அதன் பின்புறமும் ஸந்நிதி வாசற்படியிலும் கொண்டுவந்த மூட்டைகளை வைத்துக்கொண்டு இடமில்லாமல் நிரம்பவும் கஷ்டப்படுகிறார்கள். இந்த

கஷ்டத்தை நிவர்த்தி செய்யவேண்டியது நம்மவர்களுடைய கடமையாக விருக்கிறது.

எப்போதும் மடத்தில் ஏககாலத்தில் 5-6 குடும்பங்கள் வந்து அவஸ்தைப்படுகிறதை யுத்தேசித்து சுமார் 4-5 குடும்பங்கள் இருக்கும்படிக்காவது ஜாகை ஏற்படுத்தி ஸௌகர்யம் பண்ணிவைக்க வேண்டியது அவசியமாயிருக்கிறது. அதற்கு வேண்டிய இடம் மட்டும் மடத்தைச் சேர்ந்தது தயாரிலிருக்கிறது. ஷை இடத்தில் கட்டிடம் கட்டுவதற்குசுமார் ரூ. 10000-ம் வரை செல்லும். அதுகளை உத்தேச்யமாய் நமது ஸ்ரீ வைஷ்ணவ நண்பர்கள் எல்லோரும்கூடி அவரவர்களுக்குத் தகுந்தபடி யதாசக்தியாய் வரி யேற்படுத்தி ஷை தர்மத்தைப் பரிபாலிக்கும்படி ப்ரார்த்தித்துக் கொள்கிறேன். ஸர்வ ஸ்ரீ வைஷ்ணவ மஹான்களுக்கூடி தர்மத்துக்குப் பணம் சேகரித்து அவ்விடத்திலேயே மெம்பர்கள் சேர்ந்து பண்டாகவைத்துக் கொண்டு ஒரு மானேஜரை அநுப்பி ஷை தர்மத்தை சீக்கிரம் பூர்த்தியாய் நிறைவேற்றும்படி செய்யவேண்டியது.

த்ருதண்டிமடம், ப்ரயாகை
தாரு கெஞ்சு, அலகாபாத்
28—5—14.

ப்ரயாகைவாஸி
சே. நரஸிம்மாசார்ய.

## (2.)

## ஸ்ரீ பாஷ்யபுரம்.

ஸ்ரீ வேதாந்த தீபிகை பத்ராதிபருக்கு :—

ஸம்ஸ்க்ருத ப்ரபந்ந ஜாநாம்ருதம் என்னும் ஸ்ரீ ஸந்நிதி குருபரம்பரையில் ஸ்ரீஷட்கோபராங்குசஸ்வாமி சரித்திரத்தில் இந்த ஸ்வாமி ராயஸமஸ்தானத்தில் ஏகாந்தமான ஒரு ஸ்தலத்தில் ஸ்ரீபாஷ்யபுரம் என்று ஒரு அக்ரஹாரம் நிர்மித்து அதில் எழுந்தருளியிருந்து கொண்டு சிஷ்யர்களுக்கு ஸ்ரீபாஷ்யம் முதலான தர்சந க்ரந்தங்களை ... ஸம்வத்ஸர பர்யந்தம் ப்ரஸாதித்துக் கொண்டிருந்தார் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்த ஸ்ரீபாஷ்யபுரம் எங்கே இருந்தது, இப்பொழுது இருக்கிறதா, அதன் தற்கால நிலைமை என்ன என்று வெகுநாளாய் விசாரித்துக் கொண்டிருந்தேன். பூர்வத்தில் ஸர்வேயர் ஜெநரலாயிருந்த கர்னல் மகென்ஸி என்னும் துரையவர்களால் சேகரிக்கப்பட்டு இப்பொழுது ஸர்க்கார் புத்தகசாலையில் வைக்கப்



பட்டிருக்கிற புஸ்தகங்களைப் (Col. Mackenzie's MSS.) பரிசோதிக்கையில் முதல் ஸம்புடம் 39-வது பக்கத்தில் (Vol. I, P. 39.) அடியில் வருமாறு எழுதப்பட்டிருக்கிறது.

తరువాతను విజయనగరం సింహాసన నాధీశ్వరుండయిన సదాశివదేవ మహారాయలవారి ప్రభుత్వంలో నందేల నరశింగరాజు కొమారుడు నారయ్యదేవ మహారాజుకు యీ గ్రామం నాయంకరానకు చెల్లుతూవుండి యీ గ్రామానకు పడమర తాటిపత్రీశీమలో తాళ్ళ ప్రొద్దుటూరు అనే గ్రామంలోకి యీ గ్రామం చెల్లుతూవుండెను. అప్పుడు సదాశివరాయలు తిరుపతి యాత్రకుగాను రాగా, వారివెంబడి యీరాజున్ను యీ స్థలానకు వచ్చియుండి నంతట యీ గ్రామములో పూర్వం జనమేజయుని వల్లను ప్రతిష్టితంబైన చెన్నకేశవస్వామి దేవాలయంలో పలుకురాయి వుండెడిగనుక జనులు పలికితే పలుకురాయి వున్న స్థలంలో పలికెడి. ఆ శిలనడత గనుక జనులు చన్నరాయలే పలికినందుకు పుత్తరం యిస్తాడు అవి జనులు కూతల చన్నరాయలు అని వాడుకున్నారు. ఆ చన్నరాయలు సదాశివ మహారాజు ఆ స్వప్నమందు నాకు సంప్రోక్షణచేసివిస్తా రంగాదేవాలయం కట్టిస్తే నీకు సంతానప్రాప్తి అవుతున్నది. అనిచెప్పినందున ఆ సదాశివదేవ మహారాయలు పాత చెన్నకేశవస్వామి దేవాలయానకు జీర్ణోద్ధారణచేయించి తాను కొత్తగాచేయించిన వివరం పూర్వాభిముఖంగాను. చన్నకేశవస్వామి దేవాలయం ౧, లక్ష్మీదేవి కోవిల ౧, ఆళ్వార్లకోవిల ౧, తిరుమంగయాళ్వార్ల కోవిల ౧, వన్నిద్దరాళ్వార్ల కోవిల ౧, యీ మూడు చన్నకేశవస్వామి దేవాలయాలలో చేశి చుట్టుప్రాకారం గోపురాంతరాళాలు రంగమంటపములు కట్టించి గ్రామం బస్తీచేశి శ్రీవైష్ణవులకు అహోబల జీయంగార్లను పిలువనంపించి యీ నారయ్యదేవ మహారాజును మీనాయంకరానకు యీ గ్రామం నడస్తూవున్నది గదా బ్రాహ్మలకున్ను స్వామికిన్ని సర్వాగ్రహారంగాను యియ్యమనగా ఆ రాజు చాలా సంతోషించి శాలవాహనశకం ౧౪౬౫ (A. D. ౧౫౪౩) అగు నేటి శోభకృతు సంవత్సరమున అగ్రహార బ్రాహ్మలకున్ను దేవునికిన్ని సర్వాగ్రహారం ౬౨ అరువయి రెండు వృత్తులు యేరుపరిచి యీ గ్రామంలో అగ్రహారం సూర్యచంద్రవీధులు యేర్పరిచి యీ గ్రామంలో పైనవ్రాశిన ౬౨ వృత్తులలో చన్నకేశవస్వామికి యిరువైవృత్తులు బ్రాహ్మలుకు కరుణాలుకు పనిపాలువాండ్లకు నలబై

రెండు వృత్తులు యేర్పరిచి యీ గ్రామానుకు తూర్పునవుండే గదమయ్యపల్లె యీ రెండు ఒకటి చేశి సంబటూరికి ప్రతినామ మయిన శ్రీబాష్యపురం అనే అగ్రహారం అని నామాంకితముచేశి నిత్యోత్సవ పక్షోత్సవ మాసోత్సవ రథోత్సవాలు మొదలయిన వుత్సవాలుకుగాను యీవూరికి వాయువ్యమూల పినాకినినధికి వుత్తరం దువ్వూరి తాలూకులో మాచెలంఘ నూరిపల్లె అనేగ్రామం శ్రోత్రియముగా నడస్తూవుండెనటా.

[பிற்பாடு, விஜயநகரம் ஸிம்ஹாசனாதிபதியான ஸதாசிவதேவ மஹாராஜாவின் பிரபுத்வத்தில் நந்தேல நரசிங்கராஜு குமாரன் நாரய்யதேவ மஹாராஜுவின் ஆதீனத்துக்குவந்து இந்தகிராமத்துக்கு மேற்கில் தாடிபர்த்தி சீமையில் தாள்ள ப்ரொத்தடூரென்கிற கிராமத்துக்கு உள்ளடங்கியிருந்தது. அப்பொழுது ஸதாசிவராஜன் திருப்பதி யாத்திரையாக வருகையில் அவருடன் இந்த ராஜுவும் இந்த ஸ்தலத்துக்கு வந்திருந்தான். இந்த கிராமத்தில் முன் ஜநமேஜயரால் பிரதிஷ்டை செய்யப்பட்ட சென்னகேசவஸ்வாமி தேவாலயத்தில், பிரதித்வனி செய்யும் கற்கள் இருந்தன. ஜனங்கள் பேசினால் அந்த பிரதித்வனி கற்களும் த்வனிசெய்யும் அதனால் ஜனங்கள் சென்னராயஸ்வாமியே பேசினதற்கு உத்தரம் கொடுக்கிறாரென்று எண்ணி ஜனங்கள், பேசுகிற சன்னராயரென்று சொல்லிக்கொள்வார்கள். அந்த சன்னராயஸ்வாமி ஸதாசிவதேவ மஹாராஜாவின் ஸ்வப்நத்தில் எனக்கு சம்ப்ரோக்ஷணை செய்து விஸ்தாரமாக. தேவாலயம் கட்டிக்கொடுத்தால் உனக்கு சந்தானப்ராப்தி ஆகிறது என்று சொன்னதினால் அந்த ஸதாசிவ மஹாராஜா பழய சென்னகேசவஸ்வாமி தேவாலயத்தை ஜீர்ணோத்தாரணம் செய்து தான் புதிதாக செய்துவைத்ததற்கு விவரம். பூர்வாபிமுகத்தில் சென்னகேசவஸ்வாமி தேவாலயம் 1, லக்ஷ்மிதேவி கோவில் 1, நம்மாழ்வார் கோவில் 1, திருமங்கையாழ்வார் கோவில் 1, பன்னிரண்டு ஆழ்வாராதிகள் கோவில் 1, இந்தமூன்று ஸந்நிதிகளையும் சென்னகேசவஸ்வாமி தேவாலயத்தில் கட்டி சுற்றுப்பிராகாரம், கோபுராந்தராளங்கள், ரங்கமண்டம் இவைகளைக் கட்டிவைத்து கிராமத்தை பெரிதாக்கி ஸ்ரீவைஷ்ணவர்களையும் அஹோபிலம் ஜீயங்காரையும் வரவழைத்து இந்த நாரய்யதேவமஹா ராஜுவைப்பார்த்து உன்னுடைய அதிகாரத்துக்கு இந்த கிராமம் உட்பட்டதன்று பிராம்மணர்களுக்கும் ஸ்வாமிக்கும் ஸ்ரவாக்கிர காரமாக இந்த கிராமத்தை தானஞ்செய் என்று சொல்லவே அந்த ராஜு மெத்த சந்தோஷத்துடன் சாலிவாஹனசகம் 1465 சோபகிருது வருஷத்தில் பிராம்



மணர்களுக்கும் ஸ்வாமிக்கும் சர்வாக்கிரகாரஞ்செய்து 62 விருத்திகள் ஏற்படுத்தி இந்தகிராமத்தில் அக்கிரகாரம், சூரிய சந்திரவீதிகள் உண்டுபண்ணி இந்த கிராமத்தில் மேல்சென்ன 62 விருத்திகளில் சென்னகேசவ ஸ்வாமிக்கு 20 விருத்திகளும் பிராம்மணர்களுக்கும் கரணீகர்களுக்கும் வேலையாட்களுக்கும் 42 விருத்திகளும் ஏற்பாடுசெய்து இந்தகிராமத்துக்கு கிழக்கில் இருக்கும் கடமயபல்லெ.........இந்த இரண்டையும் ஒன்றாக்கி ஸம்ப ரேக்கு வேறு பெயராகிய ஸ்ரீபாஷ்யபுரம் என்கிற அக்கிரகாரம் என பெயரிட்டு நித்யோத்ஸவம், பக்ஷோத்ஸவம், மாஸோத்ஸவம், ரதோத்ஸவம் முதலாகிய உத்ஸவங்களுக்காக இந்த ஊருக்கு வாயுதிக்குமூலையில் பிநாகிநதிக்கு வடக்கில் துவ்வூர் தாலூகாவில் கஸ்பா லங்கனூரிபல்லே என்கிற கிராமம் சுரோத்திரியமாக நடந்து கொண்டு வந்ததாம்.]

இந்த ரிகார்டினால் ஸ்ரீ பாஷ்யபுரம் என்கிற கிராமம் பூர்வத்தில் ஸம்படூர் என்கிற நாமாந்தரத்தையுடைய தென்றும், இது ஸதாசிவராஜா ப்ரபுத்வம் செய்துவந்த காலத்தில் தாடிபர்த்தி (Tadi patri) சீமையில் சேர்ந்த தென்றும், இதற்கு ஸ்ரீ பாஷ்யபுரம் என்கிற நாமாங்கிதம் அந்த மகாராஜாவால் செய்யப்பட்டதென்றும் ஏற்படுகிறது. மேலும், அந்த கிராமம் ஸ்ரீ வைஷ்ணவ அக்ரஹாரமாய்ச் செய்யப்பட்ட தென்றும், அப்பொழுது ஸ்ரீ அஹோ அஹோபில ஜீயங்கார் எழுந்தருளப் பண்ணப்பட்டா ரென்றும், ஸ்ரீ அஹோபிலத்தை மங்களாசாஸநஞ் செய்தருளினவரான திருமங்கை யாழ்வாருக்குத் தனிக்கோவில் கட்டப்பட்டதென்றும் கண்டிருப்பதால் அந்த அக்ரஹார ப்ரதிஷ்டையும் நாமாங்கிதமும் கோவில் நிர்மாணமும் அக்காலத்தில் ஸ்ரீ அஹோபில மஹாஸ்தாநத்தில் எழுந்தருளியிருந்த மஹாஸ்வாமியின் நியமநத்தால் ஏற்பட்டிருக்க வேண்டு மென்றும் தோன்றுகின்றது. ஸ்ரீ ஸந்நிதி குருபரம்பரையை இத்துடன் ஒத்துப்படித்துப் பார்த்தால், ரிகார்டில் சொல்லப்பட்ட அஹோபில ஜீயங்கார் ஸ்ரீ ஷஷ்டபராங்குச ஸ்வாமி யென்று சொல்லக்கூடும். இந்த ஸ்வாமி ஸ்ரீ பாஷ்யபுரம் என்கிற அக்ரஹாரத்தை நிர்மாணஞ் செய்தார் என்று குருபரம்பரையில் கண்டிருப்பதும் ரிகார்டில் கண்டிருக்கிற அக்ரஹார ப்ரதிஷ்டை தான் என்பதற்குச் சந்தேகமில்லை.

இந்த ஸ்ரீ பாஷ்யபுரம் தாடிபர்த்தி (Tadipatri) சீமையில் சேர்ந்த ஸம்படூர் என்று காணப்படவே, கடப்பை அநந்தபுரம் இந்த ஜில்லாக்களிலிருக்க வேண்டும் என்று நிச்சயித்து, ஆங்காங்குள்ள அதிகாரிகளை விசாரித்த பொழுது, இது வடபெண்ணை யாற்றின் கரையில் கடப்பை

ஜில்லாவில் கமலாபுரம் என்னும் ஊருக்கு மூன்றுமைல் தூரத்தி லிருக்கின்ற ஸம்படேர் * என்கிற க்ராமமா யிருக்கலா மென்று சொல்லக்கேட்டு, அவ்விடத்திற்கு ஒருவரையனுப்பி சோதித்துப் பார்த்ததில், அது பூர்வத்தில் ஸ்ரீ வைஷ்ணவ அக்ரஹார மென்றும், ரிஷார்தினால் ஏற்பட்ட கேசவ பெருமாள் ஸந்நிதி இப்பொழுதும் உளதென்றும், அக்ரஹாரம் எடுபட்டுப் போய்விட்டதென்றும், அந்த பெருமாள் ஸந்நிதியிலிருக்கிற சிலாசாஸநங்களினால் அதுவே பூர்வத்தில் ஸ்ரீ பாஷ்யபுரம் என்று சொல்லப்பட்டது என்றும் ஏற்படுகிறது. இந்த சாஸநங்களில் மூன்று சாஸநங்களை எழுதிவர வழைத்துப் பார்த்ததில் முதல் சாஸநம் கேசவ பெருமாள் ஸந்நிதி விஷயமானது. இது "ஸ்ரீமத் ராஜாதிராஜ ராஜபரமேச்வர வீரப்ரதாப ஸதாசிவதேவ மஹாராஜன் விஜயநகரத்தில் ரத்ந ஸிம்ஹாஸநாருடரா யிருக்கிறநாளில்" என்று உபக்ரமித்து, மத்யே "ஸம்படேருக்கு ப்ரதிநாமமான ஸ்ரீ பாஷ்யபுரம் சென்னகேசவ பெருமாளுக்கு அர்த்தமான தண்டன் ஸமர்ப்பித்து" என்று இருக்கிறது. இரண்டாவது சாஸநத்தில் ஸம்படேரிலிருக்கிற சென்னகேசவ பெருமாளுக்கு ஸ்ரீ லக்ஷ்மீநாராயண பெருமாள் என்று நாமாங்கிதம் செய்யப்பட்டது என்று கண்டிருக்கிறது. மூன்றாவது சாஸநத்தினால் ஸ்ரீ பாஷ்யபுரத்திற்கு ப்ரதிநாமமான ஸம்படேர் கேசவபெருமாள் ஸகலவித உத்ஸவங்களையும் கண்டருளும்படியாக ஸ்ரீமத் வேதமார்க்க ப்ரதிஷ்டாபநா சார்யரான போஜாபல்லி ஸ்ரீநிவாஸய்யங்கார் கட்டிவைத்த கல்யாண மண்டபம் என்று ஏற்படுகிறது. இந்த சாஸநங்களினால் இந்த ஸம்படேர்தான் ஸ்ரீ பாஷ்யபுரம் என்று வ்யவஹரிக்கப்பட்டது என்பது ஊர்ஜிதமாகிறது.

ஸ்ரீ பாஷ்யபுரம் அக்ரஹாரம் ப்ரதிஷ்டை நடந்த காலம் ராயஸம்ஸ்தாநாதிபதியாயிருந்த ஸதாசிவராய மகாராஜாவின் ப்ரபுத்வத்தி லென்றும், சாலிவாகன சகவருஷம் 1465 (கிறஸ்தவசகம் 1543) என்றும் கண்டிருப்பதால் ஸ்ரீ ஷஷ்ட பராங்குச ஸ்வாமி எழுந்தருளியிருந்த காலம் வ்யக்தமாகின்றது. ஆனால் குருபரம்பரையில் அந்தஸ்வாமியின் காலம் கலி 4600 முதல் 4614 வரையில், [அதாவது சாலிவாகன சகவருஷம் 1421—1435, கிறஸ்தவ சகம் 1499—1513] என்றிருத்தலால் இந்த விஷயம் விமர்சைக்கு இடம் கொடுக்கிறது.

ஸ்ரீ அஹோபிலநம்பி.

* இது ப்ரோதட்டூரிலிருந்து 10 - மைல், எற்றகுண்ட்லா ஸ்டேஷனுக்கு மூன்று மைல்.

4 -AUG 1914 MADRAS.

ஸ்ரீ:.

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:.

# வேதாந்த தீபிகை

பத்ராதிபர்:—திவான் பகதூர் டி. டி. ரங்காசார்யர், பி.ஏ., பி.எல்.

ஸம்புடம் 4.] ஆநந்தவருஷ ஆனிமீ° [ஸஞ்சிகை 5.

## பத்ராதிபரின் குறிப்புகள்.

ஸ்ரீமந்நாராயணனுடைய ஸ்தோத்ரம் ... விஜயஸகே ... ரதிரஸ்து மேநவத்யா ॥ [ஸ்ரீ பாகவதம் 1-9-33.]

**மதஸம்பந்தமான உபந்யாஸங்கள்.** லண்டன் நகரத்தில் ச்ரேஷ்டமானதோர் ஆலயமெனப்படும் ஸெண்ட் பால்ஸ் கெதீட்ரலில், டீன் இஞ்ஜ் என்னும் கிறிஸ்தவ போதகாசார்யர் ஒருவர் சென்ற மே மாஸம் 2-ம் தேதி உபந்யாஸம் செய்கையில், ஸ்வமதத்தில் அறியவேண்டியதாக ஏற்பட்ட அர்த்தசதுஷ்டயங்கள், மரணம், தீர்மாநம், மேலுலகம், நரகம் என்றும், இவற்றைப்பற்றி ப்ரஸங்கித்தால் கேட்போர் அநாதரவு செய்கின்றார்கள் என்றும், அன்றன்று உழைத்து வயிறு வளர்ப்போர்க்கு மேற்சொன்ன அர்த்தங்களில் பற்றில்லையென்றும், ஐஹிகமான விஷயங்களைப்பற்றிப் பேசினால் கேட்பதற்கு இசைகின்றார்கள் என்றும், வேலைசெய்பவன் இவ்வுலகில் யாவரும் ஸமமான உபபத்தியைக் கைக்கொண்டு ஸுகாநுபவத்தையடையக் கூடிய காலத்தை ப்ரதீக்ஷித்து, அதையே வானுலகாக எண்ணு

கின்றான் என்றும், பொய்யானதோருலகில் மனிதர் தாம் இறந்த பின்னர் பணம் வாங்கக்கூடிய வாக்குறுதி கண்டெழுதிய கடுதாசிகளைப் பாதிரிமார் தங்களுக்கீந்து தம்மைச் சும்மாவிருக்க விரும்புகின்றார் என வேலைசெய்து ஜீவிப்போர் நினைக்கின்றார்கள் என்றும், இறந்தபின் ஜீவர்கள் இருக்கிறாரென்பது பாதிரிமார்க்கு லாபகரமான ஓர் மோசமான நம்பிக்கையாதலால் ஆகாசத்தில் பாதிரிமார் ஏற்படுத்திய பாங்கி பணம் தாராது, இப்போதே ரொக்கம் தாருமென அவர்கள் சொல்கின்றார் என்றும், இப்படித் தம் மதத்தை உபதேசித்தால் மதம் கேவலம் கட்டுக்கதையாய் முடியுமென்றும், வானுலகென்பது தேவனும் அவன் தூதரும் வசிக்கும் ஓரிடம் என்றும், அவ்விடம் நல்லோர் இறந்த பின்னரோ நிர்மாண நாளின் பிறகோ போவார் என்றும் அங்கே அவர் செய்த நன்மைக்கும் தீமைக்கும் பலன்பெறுவார் என்றும் இவ்விதமாக ஸாதாரண ஜநங்கள் பாதிரிமார் போதனையைப்பற்றி அபிப்ராயப் படுகின்றார்கள் என்றும், இத்தகைய யோசனைகளை அவர்களுக்குத் தெரிந்த ககோள சாஸ்த்ரத்தைக்கொண்டு அவர் நம்புகின்றாரில்லை என்றும், ஆனபடியால் பகு பாதிரிமார் வானுலகைப்பற்றி ஜநங்களிடம் பேசுகின்றாரில்லை என்றும் இவ்விதமாய் உபந்யஸித்தார். மில்டன் கவி மொழிந்த வண்ணமும், பைபில் புஸ்தகத்தில் எழுதப்பட்ட வண்ணமும், ஆறாயிரம் வருடங்களுக்கு முன் ஆறுநாள்களுக்குள் ஜகத்தானது சூந்யத்தினின்று நிர்மிக்கப்பட்டதென்றும், முதல் மனிதனும் ஸ்த்ரீயும் சும்மாய்ப் பிழைக்காமல், நன்மை தீமைகளைப் பகுத்தறியும் ஜ்ஞாநத்தை வேண்டினாரென்றும், ஓர் பிசாசு பாம்பென அவரிடம் சென்று அவரை இவ்விதம் ஆசைகொள்ளும்படி வஞ்சித்ததெனவும், தேவன் அவர்மீது கோபித்து, அவர்க்கும் அவர் மூலமாக ஜநிக்கும் மனிதர்க்கும் துக்கமும் மரணமும் தந்தானென்றும், பின் பிறந்தோர்க்கெல்லாம் பிறக்குங்கால் தேவன் உயிரளித்தானென்றும், இவரில் கிறிஸ்துவால் அங்கீகரிக்கப்பட்டவர் நீடித்தவானுலகும், மற்றோர் நிலைத்த நரகமும் அடைவார் என்றும், அதுவும் உலகெல்லாம் நசித்தபிறகு நிர்மாணதினத்தினன்று ஏற்படுமென்றும், அந்த நாளில் புதைக்கப்பட்ட



சவங்களெல்லாம் அவற்றின் உயிருடன் கிளம்பி தேவன்முன் செல்லுமென்றும், இவ்வாறாகக் கிறிஸ்தவர்க்காக வந்த மற்றைய அர்த்தங்களையும் ஏன் போதகாசார்யர் மறந்தாரோ தெரியவில்லை. இவற்றுள் யாதொன்றும் வேலைசெய்து உண்பவன் அறிவுக்கு எட்டாததன்று. முதல் மனிதனுக்குப் பகுத்தறிவு உண்டான பிறகு தேவனிடம் அவனுக்கு விச்வாஸம் குன்றியதுபோல, இங்கிலாந்தில் ஸாமாந்ய ஜநங்களும் பகுத்தறிவையடைந்து, பாதிரிமார் லோகாந்தரவிஷயங்களைச் சொன்னால் அவற்றைக் கட்டுக்கதைகளாக நினைக்கின்றார்கள் போலும். ஒரு ரூபாய் கூலியை இரண்டாக்கவும், தங்கட்கும் தம்சுற்றத்தோர்க்கும், குறைவின்றி உண்டியும், பாநமும், உடையும் உண்டாகும்படிக்கும் உபாயங்கள் சொன்னால் கேட்கின்றார்கள். இஃதிருக்கட்டும்.

* * * *

கானன் ப்ரௌன் எனும் மற்றொரு பாதிரி, நம் தேசத்தில் கிறிஸ்தவ மதத்தின் அபிவ்ருத்தியைப்பற்றிப் பேசுமிடம், ஜாதிவர்ணம் முதலானவற்றால் அதற்கு ஏற்பட்ட ப்ரதிபந்தகங்களைத் திரஸ்கரித்து, பாதிரிமார் பயமற்று நிற்கின்றார்களென்றும், இந்தியாவில் ஸ்வதேசாபிமாந ஸம்பந்தமாயுண்டாயிருக்கும் யோசனைகள், கிறிஸ்தவமதம் அதிமகிமையுடன் உடனுக்குடனே சிறிதுகாலம் விளம்பித்தோ எல்லாவற்றையும் கைக்கொள்வதற்கு உபகாரமாகுமென்றும் பேசினாராம். அப்போது அங்கே வந்திருந்த முன் பம்பாயில் கவர்னராயிருந்த ஸைடன்ஹாம் ப்ரபுவானவர் கிறிஸ்தவ குணங்களும், ஐரோப்பிய நடவடிக்கைகட்கு ஆதாரமான சித்தவ்ருத்தியும் இந்தியாவிலிருக்கும் கோடிஸங்க்யையான ஜநங்களை வ்யாபிக்கு முன் இந்திய நாட்டினர் ஓர் தேசத்தினர் ஆகமாட்டார் என்றனராம்.

* * * *

இது இப்படிநிற்க, இந்த மாஸம் 8-ம் தேதி கச்சிமாநகரில் கூடிய ஜில்லா ஜநஸங்கத்தில் அக்ராஸநம் வஹித்த ம-௱-௱-ஸ்ரீ எஸ். ஸ்ரீநிவாஸய்யங்கார் அவர்கள், அந்த ஸங்கம் லௌகிக

ஸங்கமாயிருந்தபோதிலும், தமது உபஸம்ஹார ரூபமான உபந்யாஸத்தில் கிஞ்சித் மதஸம்பந்தமாக, ஸம்பாஷித்தனர். அப்போது இந்நாட்டின்கண் பின்னோர்காலத்தில், க்ருஷ்ண புத்த ராம க்ரைஸ்ட் என்பவரைக் காட்டிலும் மிக்கோனொருவன் ஜநித்து இந்நாட்டின்கண்ணுள்ள மதங்களை ஒற்றுமைப்படுத்தப் போகிறானெனத் தமது ப்ரத்யயத்தை வெளிப்படுத்தினார். மத பேதங்களையிட்டு நம்மவர் பரஸ்பரம் ஸ்நேஹம் குன்றாமலிருக்க வேண்டுமென யாம் பலமுறை மொழிந்ததையும் அவர் ஸங்கத்தினர்முன் கூறியிருக்கின்றார். ஆனால் கடவுள்தவிர கிறிஸ்துவைக்காட்டிலும் மேற்பட்டஜீவனைக் கிறிஸ்தவர் ஒப்புவாரில்லை. பௌத்தரோ, புத்தன் ஸர்வார்த்தஸித்தனென்றும் அவனிலும் மிக்கோன் இரானென்றும் சொல்லுவார். கிருஷ்ணனைக்காட்டிலும் பரதத்வம் இல்லையென்பார் ப்ராயேண ஹிந்து மதத்தினர். ராமனைப்பற்றியும் அப்படியே என்கின்றார். ஏஷ நாராயண: ஸ்ரீமாந் க்ஷீரார்ணவநிகேதந: நாகபர்யங்கமுத்ஸ்ருஜ்ய ஹ்யாகதோ மதுராம் புரீம் என்று கிருஷ்ணனைப்பற்றிப் பாரதத்திலும், பவாந் நாராயணோ தேவ:, ஸீதாலக்ஷ்மீர்பவாந்விஷ்ணு:, ... நாராயணஶோப்யம், என்று ராமனைப்பற்றி ராமாயணத்திலும் இருக்கிறபடியை யோசித்தால், கடவுளிலும் நான் அதிகம் என்னும்படி யார் இங்கே வரப்போகின்றனரோ, வந்தால் யார் அவரை நம்புவார்களோ, நம்பினால் எவ்விதம் பரஸ்பரம் பலவிதம் பேதிக்கும் மதங்களை அவர் ஒன்றாக்குவரோ, இவற்றை நாம் சிந்திக்கவும் திறனற்றிருக்கின்றோம். மஹாபுத்திமானாக ஜநித்து, மிக்கக்கற்று, மிக்கவுணர்ந்து, தனது ஆத்ம ஸம்ஸ்காரத்தைப் பரோபகாரார்த்தம் விநியோகிக்க நிச்சயித்திருக்கும் அக்கனவான் சொன்னதை விபரீதமாய் வெளியிட்டிருக்கலாமென்று நாம் எண்ணுகின்றோம்.

*　　*　　*　　*

ஆகிலும் இவ்விதமாகப் புத்திபேதங்களை ஜநங்கள்கொண்டிருப்பதை நோக்க, ஸதோஷாவஹ ... விபரீதமிதம்



ஜநஸ்ய, எனும் வசநம் ஸ்மரிக்கவேண்டியதாகின்றது. கிறிஸ்தவ மதம் யூதஜாதியார் மதத்தை ஆஶ்ரயித்துவந்ததாகையால் அவர் நம்பவேண்டிய விஷயங்கள் மேலே நாம் விவரித்தபடியே இருக்கின்றன. அவற்றுள் பாமரர் அறியக்கூடாதது ஒன்றுமில்லை. கொஞ்சம் ஹேதுவாதம் செய்வாராகில் ஒருவிஷயமும் நிலைக்காது. ஒருவன் தனக்கு ஜந்மம் உண்டாவானேன் என்றாலும், ஜந்ம காலத்தில் பாபஸம்பந்தம் நேர்வானேன் என்றாலும், ஆதிமத்தான ஜீவனுக்கு வானுலகிலோ நரகத்திலோ அந்தமின்றி இருத்தல் நேர்வதேன் என்றாலும், ஒருவன் மரிக்க மற்றொருவன் பாபத்தினின்று மோக்ஷமடைவானேன் என்றாலும், ஸம்யக் தர்க்காநுக்ரஹீத ந்யாயத்தால் ஸமாதாநம் பிறக்காதென்பதும், எப்படி ஸமாதாநம் நேர்ந்தாலும், ஈஶ்வரனுடைய தயாஶூந்யதையும் பக்ஷபாததையும் அநிவார்யம் என்பதும் ஸ்பஷ்டம். கொஞ்சமேனும் பதார்த்தவிஷயமாயும், ஜகத்தின் அமைப்பைக்குறித்தும் ஒருவனுக்கு விவேகம் உத்பந்நமானால், பாதிரிமார் சொல்லும் விஷயங்களில் ப்ரத்யயம் உண்டாவது அரிது. கிறிஸ்துவின் செய்கை சொற்கள் இவற்றைப்பற்றித் தான் திரும்பத்திரும்ப முறையிட வேண்டியதாகும். சொற்கள் ஆதரிக்கத் தக்கனவே; ஆனாலும் அவற்றுள் ஒன்றுகூட அவர்க்குமுன் சொல்லப்படவில்லையென வொண்ணாது. புத்தரும் மற்றோரும் இவற்றையெல்லாம் முன்னமே வெளியிட்டாரென்பது யாவர்க்கும் தெரிந்த விஷயம். கிறிஸ்துவின் செய்கைகள் என்றால் ஸமுதாயமாக அவை பூததயையைத்தொட்டு உண்டாயிருக்கவேண்டும். பூததயையடியாகவந்த நடவடிக்கைகள். கிறிஸ்துவினிடத்திற்காட்டிலும் புத்தரிடம் மிக்க விளங்குகின்றன. ராஜ்யம், செல்வம், மனைவி, புத்ரன், போகம், ஸுகம் முதலானவைகளைப் புத்தர் மிகுதியாகவடைந்திருந்தும் லோக ஹிதத்தின் பொருட்டு யாவற்றையும் துறந்தார். இவற்றுள் யாதும் கிறிஸ்து துறக்கப்பிறந்திலர். புத்தரைக் காட்டிலும் கிறிஸ்து ஈஶ்வரன் உண்டென்றும் அவனிடம் நாம் பக்திசெய்யவேண்டும் என்றும் போதித்திருக்கிறார். கிறிஸ்துவைப் பற்றிப் புகழ்தலால் கேட்பவர்க்கு வரும் பயன் என்ன? ஆகாயத்தில்

பறக்கும் பறவைகள் மறுநாள் உணவைப்பற்றிச் சிந்தியாது வர்த்திக்கும்வண்ணம் தன்னை வழிபடுவோர் இருக்கவேண்டுமென்றாரே; வலது கன்னத்தில் அடித்தால் இடது கன்னத்தைக் காட்டச்சொன்னாரே; மேல்துணியைப்பறித்தால் அடித்துணியையும் கொடுக்கச் சொன்னாரே; முன்றுன்னைக் காய்வானை நேசியென்றும், தீமைசெய்பவர்க்கு நன்மைசெய்யென்றும் சொன்னாரே; ஒட்டகம் ஊசியின் த்வாரத்தில் நுழைந்து புறப்பட்டாலும் புறப்படும், தநமுள்ளோன் வானுலகை யடையமாட்டான் என்றனரே; இவற்றுள் ஓர் அணுவாகிலும் அவர் மதத்தைச் சார்ந்த ஐரோப்பியதேசத்தார் நடத்தையில் காட்டுகின்றனரோ? கிறிஸ்துவின் சொற்களை ஆதரித்துத்தானோ, உலகத்தின் ராஜ்யமும் செல்வமும் அவருடையதாயிற்று? கிறிஸ்துவின் சொற்களை ஆதரித்துத்தானோ நம்மவரைத் தென்ஆப்ரிக்கா, ஆஸ்ட்ரேலியா, அமெரிக்கா முதலான கண்டங்களில் கிட்டவரவொட்டாமல் தடுக்கின்றனர்? கிறிஸ்துவின் சொற்களை இவரைக் காட்டிலும் அவர்மதத்தைச் சாராத நம்நாட்டினர் ஆதரிக்கின்றாரென்பது விளங்கவில்லையா? அந்யதேசத்தார் நம்தேசத்தில் வரவும் நம்முள் பலர் கபோதத்தின் கதையில் கண்டபடி நடந்ததில்லையா?

* * * *

இது இப்படியிருக்க, தந்நாட்டிலுள்ள கிறிஸ்தவரெனப் பெயர் தரித்தவரை, பேரில் மாத்ரமின்றிச் செயலிலும் அப்படியிருக்கச் சொல்வதைவிட்டு, நாம் உத்க்ருஷ்ட தர்ஸநஸ்தராயிருக்க, நமக்கு அதையும் போக்கி, தம் நாட்டார்க்குள்ள குற்றங்களைக் கொண்டுவிட யத்நிப்பது நன்றன்றே. பணக்காரன் யாவற்றையும் ஸாதிப்பவன்; ராஜ்யபலமுள்ளவனும் பிடித்ததை முடிப்பன்; இவ்விரண்டும் கிறிஸ்தவர்க்கு உண்டு. உலகில் ராஜ்யமும் செல்வமும் அவரைச் சேர்ந்தன. அவர் எதை எண்ணினாலும் முடிக்கவல்லவர். நூதந மதப்ரவேசத்தால் பிழைப்பதற்கு அநுகூலம் உண்டாகும் என்று தோன்றினால் வயிற்றின் கொடுமையால் கிறிஸ்தவராகத்தக்கவர் நம் நாட்டில் பலருண்டு. இங்கிலாந்தில் தாழ் குலத்தினர், அதாவது, வேலை செய்து பிழைப் போர்க்குக் கிறிஸ்தவமதம் பித்தோபஹதனுக்குப் பால்போலிருந்தாலும், இந்நாட்டில் வேலைசெய்து பிழைப்போனுடைய் ஒரு குடும்பம் பத்து ரூபாய்க்குள் வாழுமாதலால், அதை ஸுலபமாய்த் தரவல்ல



பாதிரிமார் தாழ் குலத்தாரைக் கூட்டம் கூட்டமாகத் தம்மதத்தில் சேர்த்துக் கொள்ளக்கூடும். இன்னும் அவர்கள் துரைகளறிந்த துரைகளாதலால், ஐஹிகத்திலும் பலவித ஸாதகங்கள் அவரால் உண்டாகுமெனத் தாழ்குலத்தினர் நினைக்கவும் இசையும்.

* * * *

ஆனால், ஐரோப்பாவில் கற்றோரிலும், கற்றுணர்ந்தோரிலும் பலர், ஸ்வமதத்தின் கதைகள் விச்வாஸார்ஹமாயிராவிடினும், ஸமுதாயமாக அதன் பேரெல்லாம் தூக்கிச் சிறுமை புறங்காத்து அவற்றை ஆதரிக்கின்றனர். மதத்தின் உண்மைகள் மனிதர்மூலமாக ப்ரகாசத்தை யடையவேண்டியிருப்பதாலும், மனிதர்க்குள் குற்றங்கள் என்றும் இருப்பதாலும், மதத்தில் விச்வாஸாநர்ஹமாகும் மானிடர்ம்சங்கள் (Human elements) விலக்கக்கூடியவையல்லவென்று விச்வாஸார்ஹமாகும் அம்சங்களை எடுத்துக்கொண்டு, மொத்தமாக தாம் பிறந்தடைந்த மதத்தை யாதரிக்கின்றார்கள். இந்நாட்டின்கண் கற்றோரிலும் கற்றுணர்ந்தோரிலும் பலர் இதற்கு விபரீதமாக நடக்கக்காண்கின்றோம். ப்ராயேண ஐரோப்பிய வித்வான்களுள் பலர் தமது புத்தி ஸம்ஸ்காரங்களை அந்யர்களுடைய கொள்கைகளையும் ஆசாரங்களையும் பராமர்சிப்பதில் தாராளமாக ப்ரயோகிக்கின்றார்; 6000 வருடங்களுக்கு முன் ப்ரபஞ்சம் உண்டானதாகச் சொல்லும் ஸ்வமதவிமர்சையில் செலுத்துவாரில்லை. ஈத்ருசக் குறைவுகளை மாக்ஸ்மில்லரெனும் ஸம்ஸ்க்ருத வித்வானிடம் மிக்கக்கண்டோம். ஸம்ஸ்க்ருத வித்வான் எனப்பெயர்கொண்ட ஒவ்வொரு ஐரோப்பியரும் இவ்வண்ணமே நிற்கின்றார். மானிடாம்சங்கள் தம்மதத்திற்குத் துணையாவது போல நம்மதத்துக்குத் துணையாவது வழக்கமில்லை. ஆனால் நம்முள் கற்றவர் பலர் அவர் போலவே ஸ்வமத விஷயத்தில் நடவாதது என் என்றாலோ, அது அவர் குற்றமன்று; ஸம்ஸர்க்கதோஷம். இளமைப்பருவத்தில் ஸம்ஸர்க்கத்தின் குணதோஷங்கள் சீக்ரமாகப் பற்றுகின்றன. பிள்ளைகளை அந்யதேசத்தாரிடம் அனுப்பி, அவர்படிப்பில் வளரச்செய்து, ஸ்வமதத்தின் வாஸனையை அவர் அடையாத நிலைமையிலிருத்திப் பின்னர் அவர் இங்ஙனம் போயினரே என்று துக்கித்தல் கண்கெட்டபின் ஸூர்ய நமஸ்காரத்தைச் சிந்திப்பதொக்கும்.

# தத்வ விசாரம். *

ஜகத்திலிருக்கப்பட்ட ஸர்வரூபமும் பகவானுடைய சக்திகளின் யோகத்தால் ஏற்பட்ட காரணத்தாலும், ஸர்வத்துக்கும் அவன் ஆதாரனாகவும் நியந்தாவாகவும். சேஷியாகவும் இருப்பதாலும், ஜகத்தும் அதிலுள்ள யாவும் அவனென்றே வ்யவஹரிப்பதுண்டு. சுத்த ஜீவன்களுக்கு ஆகாரம் ஒன்றேயானபடியால், ஜீவகோடிகளை யெல்லாம் ஸமமாகவும் பார்க்கவேண்டும். இந்த வ்யவஹாரத்தை ஜடபாதர் ஸௌவீரராஜனுக்கு உபதேசித்த வண்ணம் ஆசார்யர்கள் சிஷ்யர்களுக்கு உபதேசிப்பதுண்டு. "த்வயா ஸர்வேஷு ஜந்துஷ்வாத்மவிபாவ்யதாம் । ஸமஸத்ருமித்ரம் ஜாநந் ஆத்மானம் ஸர்வதேஹகே ॥ ஸிதநீலாதிபேதேந யதைகம் த்ருஶ்யதே நப: । ப்ராந்ததிருஷ்டிபிராத்மாபி ததைக: ஸந் ப்ருதக் ப்ருதக் ॥ ஏக: ஸமஸ்தம் யதிஹாஸ்தி கிஞ்சித் ததச்யுதோ நாஸ்தி பரம் ததோऽந்யத் । ஸோऽஹம் ஸ ச த்வம் ஸ ச ஸர்வமேதத் ஆத்மஸ்வரூபம் த்யஜ பேதமோஹம் । இதீரிதஸ்தேந ஸ ராஜவர்ய: தத்யாஜ பேதம் பரமார்த்ததிருஷ்டி: ॥" [ஓ தர்மம் அறிந்த ராஜனே! நீயும் அப்படியே ஜீவாத்மாவை ஸர்வ சரீரங்களிலும் இருப்பவனாக அறிந்து, உன் விஷயமாகவும் பகைவர் விஷயமாகவும் பந்துக்கள் விஷயமாகவும் ஸமமாக இரு. (வர்ணமற்ற) ஒரே ஆகாசமானது சில இடங்களில் வெளுத்ததாயும் மற்ற இடங்களில் கறுத்ததாயும் எப்படிப் பேதமாகப் புலப்படுகிறதோ, அப்படியே ப்ரமிக்கின்ற த்ருஷ்டியுடன் கூடினவர்களால் ஏகரூபத்தையுடைய ஜீவாத்மாவும் வெவ்வேறு ரூபமுடையவனாக எண்ணப்படுகிறான்; எங்கெந்த வஸ்துக்கள் இங்கே

* இந்த ஸம்புடம் 128 - வது பக்கத்திலிருந்து தொடர்ச்சி.



இருக்கினவோ அவையெல்லாம் ஒருவனான அச்யுதனே; அவனைக் காட்டிலும் அதிக்ரமித்து யாதொன்றுமில்லை; நான் அவனே; நீயும் அவனே; இந்தவஸ்துவெல்லாம் அவனே; எல்லாம் ஆத்ம ஸ்வரூபம்; இவற்றில் பேத புத்தியினால் வரும் மோஹத்தைப் பரித்யாகம் செய். அந்த ராஜஸ்ரேஷ்டன் அவரால் இவ்விதமாக உபதேசிக்கப்பட்டவராய் பரமார்த்த ஸ்வரூபத்தை ஸர்வத்ர ஸாக்ஷாத்கரிக்கவல்லவராகிப் பேத புத்தியை விட்டு விட்டார்.] இவ்வண்ணம் ஜடபாதர் ஸௌவீரராஜனுக்கு உபதேசித்தனர். நிஷ்பந்நயோகிகளுக்கு ஸமாதியில் இதே ரூபமான அநுபவம் உண்டு. ருஷிகளுக்குள் வாமதேவருக்கு இப்படிப்பட்ட அநுபவம் உண்டானதாக ச்ருதி சொல்லுகிறது. ஹிரண்யகசிபுவின் ஆஜ்ஞையால் அஸுரர்கள் ப்ரஹ்லாதனை ஸமுத்ரத்தில் ஆழ்த்தி, மலைகளால் மூடின வேளையில், அந்த மஹாத்மா ஏகாக்ரசித்தனாக எம்பெருமானை ஸ்தோத்ரம் செய்து கொண்டிருக்கையில்,

ஏவம் ஸஞ்சிந்தயந் விஷ்ணுமபேதேநாத்மநோ த்விஜ ।
தந்மயத்வமவாபாக்ர்யம் மேநே சாத்மாநமச்யுதம் ॥

[ஓ விப்ர! இவ்விதமாக விஷ்ணுவைத் தன்னுடன் அபேதமாகச் சிந்தித்துக்கொண்டு ஸர்வோத்க்ருஷ்டமான பகவந்மயத்வத்தை அடைந்தான். (அதாவது, தனக்குள் அந்தராத்மாவாக இருக்கும் வாஸுதேவனை த்யானிக்கையில் க்ரமேண தன்னையும், தான்செய்த யானத்தையும் மறந்து தானே அவனென்றும் ஸ்மரணையில் மூழ்கினான்.) ஆதலால் தன்னை அச்யுதனாகவே எண்ணினான்.] என்கிறபடி ப்ரஹ்மபாவத்தை யடைந்தான். புராணத்திலும்,

விஸஸ்மார ததாத்மாநம் நாந்யத் கிஞ்சிதஜாநத ।
அஹமேவாவ்யயோऽநந்த: பரமாத்மேத்யசிந்தயத் ॥"

[அப்போது தன்னையும் மறந்தான். மற்றொன்றையும் அறிந்தானில்லை. நான்தான் விகாரமற்றவன், நித்யன், பரமாத்மா என்று எண்ணினான்] என்றிப்படிச் சொல்லியிருக்கிறது. அப்போது அவன் அநுபவம் எப்படி யிருந்ததென்றால்,

𑌸𑌰𑍍𑌵𑌗𑌤𑍍𑌵𑌾𑌦𑌨𑌨𑍍𑌤𑌸𑍍𑌯 𑌸 𑌏𑌵𑌾𑌹𑌮𑌵𑌸𑍍𑌥𑌿𑌤𑌃 ।
𑌮𑌤𑍍𑌤𑌃 𑌸𑌰𑍍𑌵𑌮𑌹𑌂 𑌸𑌰𑍍𑌵𑌂 𑌮𑌯𑌿 𑌸𑌰𑍍𑌵𑌂 𑌸𑌨𑌾𑌤𑌨𑍇 ॥
𑌅𑌹𑌮𑍇𑌵𑌾𑌕𑍍𑌷𑌯𑍋 𑌨𑌿𑌤𑍍𑌯𑌃 𑌪𑌰𑌮𑌾𑌤𑍍𑌮𑌾𑌤𑍍𑌮𑌸𑌂𑌶𑍍𑌰𑌯𑌃 ।
𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌸𑌂𑌜𑍍𑌞𑍋𑌽𑌹𑌮𑍇𑌵𑌾𑌗𑍍𑌰𑍇 𑌤𑌥𑌾𑌨𑍍𑌤𑍇 𑌚 𑌪𑌰𑌃 𑌪𑍁𑌮𑌾𑌨𑍍 ॥

[அநந்தன் எங்கு மிருக்கின்ருன்; ஆதலால் நான் அவனாகவே இருக்கின்றேன்; என்னிடத்தில் நின்றே எல்லாம் (உண்டாயது;) (ஆதலால்,) எல்லாம் நானே; நித்யனை என்னிடமே எல்லாம் (இருக்கின்றது;) நான்தான் விகாரரஹிதன், நித்யன், பரமாத்மா, ஸர்வாத்மாக்களுக்கும் ஆஶ்ரயம் (வாஸஸ்தானம்;) ஸ்ருஷ்டிக்கு முன், ஸ்ருஷ்டிகாரணமாக வ்யவஹரிக்கப்பட்ட ப்ரஹ்ம என்னும் பெயருடையவன் நானே; ப்ரளய காலத்தில் (ஸர்வத்துக்கும் இருப்பிடமாகிய) பரமபுருஷன் நானே.] இந்த ரூபமாயிருந்ததாகப் புராணம் சொல்லுகிறது. இப்படியே முக்தன் அநுபவத்தை உபநிஷத்தும் '𑌅𑌹𑌮𑌨𑍍𑌨𑌂, 𑌅𑌹𑌮𑌨𑍍𑌨𑌾𑌦𑌃 𑌅𑌹𑌂 𑌶𑍍𑌲𑍋𑌕𑌕𑍃𑌤𑍍' என்று வர்ணிக்கின்றது. போக்யவஸ்துக்கள் எதன் விகாரங்களால் உண்டாகின்றனவோ அந்த ப்ரக்ருதி அந்நமெனப்படுகிறது. போக்தாவாகிற ஜீவனை அந்நாத꞉, அந்நத்தைச் சாப்பிடுகிறவன் எனப்படுகிறது. ஶ்லோகமென்றால் சேர்க்கை. இங்கே போக்தாவினுடையவும், போக்ய போகோபகரணங்களுடையவும் சேர்க்கையைச் சொல்லுகிறது. இப்படிப்பட்ட சேர்க்கையை ஜீவன்களுடைய கர்மானுகுணமாய்ச் செய்விக்கின்றவன் ஈஶ்வரன், அவன்தான் ஶ்லோகக்ருத் எனப்படுவன். அல்லது, ஶ்லாக்யமாகிற, அதாவது, ஸ்துதிக்கத்தக்க, ஜகத்ரக்ஷணம் முதலான வ்யாபாரங்களைச் செய்கிறவன் ஶ்லோக்ருத், ஈஶ்வரன். ஈஶ்வரன் ஸர்வத்துக்கும் ஆத்மாவானபடியால், எல்லாம் அவனே என்னும் வ்யவஹாரம் ஶ்ருதியின்படியே முக்தனுக்கும் உண்டாகிறது. இப்படி தத்வங்களுடைய ஸ்வரூப ஸம்பந்தங்களைப்பற்றி நாம் விவரித்த அம்சங்களில் மதாந்தரஸ்தர்களுடைய ப்ரமாண க்ரந்தங்கள் சொல்லும் வண்ணங்களை நமது ப்ரமாண க்ரந்தங்கள் சொல்லுவதுடன் ஒத்துப்பார்க்க நமக்குள்ள ஏற்றம் வெளியாகும். ஆஸ்திகராக இருப்பவர்கள், ஐரோப்பியர்களுடைய ஸாமாந்ய ஶாஸ்த்ரங்களை



யாவது, நம்முடைய ஸாமாந்ய ஶாஸ்த்ரங்களையாவது நன்கு கற்று, ருஜுமார்க்கத்தில் தங்கள் மதியைச் செலுத்தி ஆராய்வாராகில், வஸ்து ஸ்வரூபங்கள் நம் முன்னோர் கண்டபடி ஏற்படுமேயன்றி வேறுவிதமாகத் தேறமாட்டா. பரிணாம க்ரமமின்றி ஸமகாலத்தில், நமக்குத் தோன்றும் ஸூர்ய சந்த்ர தாரகாதிகளும், உயிர்வாழுலகங்களும், ஜீவகோடிகளும் ஈஶ்வரேச்சை ஒன்றாலேயே ஸித்திக்கமாட்டா. உபாதான காரணமின்றிப் பரிணாமத்துக்கும் ஹேதுவில்லை. ஶூந்யத்தினின்று பாவோத்பத்தி நினைக்கவொண்ணாது. ஸர்வ ஶக்தனான ஈஶ்வரன் ஶூந்யத்தினின்று பாவங்களை நிர்மிக்க வல்லவனல்லன் என்பதால் அவனுடைய ஸர்வஶக்தித்வம் குறுகும் என்பரேல், இரண்டையும் இரண்டையும் சேர்த்து ஐந்தாக்கவும், அவக்ரமான இரண்டு கோடுகளைக் கொண்டு ஒரு தேசத்தை வளைக்கவும், ஓர் மொத்தத்தை அதன் அம்சத்தைக் காட்டிலும் சிறிதாக்கவும், அவன் எப்படி அஸமர்த்தனோ அப்படியே ஶூந்யத்தினின்று வஸ்துவை உண்டாக்கவும் அவன் அஸமர்த்தன். இதன் பொருளென்னெனில், அவன் நித்யஸங்கல்பத்தால் உண்டான வஸ்து குணங்களை அவன் மாற்றமாட்டான் என்பதே. காரணம்விநா கார்யோத்பத்தியை அவன் செய்யமாட்டான். காரணம்விநா மநுஷ்ய ஸ்ருஷ்டியை அவன் செய்யமாட்டான். பூர்வம் இல்லாத ஜீவன்களை ஶூந்யத்தினின்று உண்டாக்கி, யாரோ செய்த குற்றங்களுக்காக இவர்களைத் துன்பப்படுத்தான். துக்கானுபவத்திற்கென்றே அவர்களுக்குப் பிற்காலம் ஆயுளை வளர்த்தமாட்டான். தன்னால் ஸ்ருஷ்டிக்கப்பட்ட ஜீவர்களை, தான் எண்ணியபடி அவர்கள் நடந்தாரில்லை என்றெண்ணி, அவர்களை நாசம் செய்யான். ஒரு ஜாதியரிடம் பக்ஷபாதம் செய்து, மற்றவர்கள், குற்றமில்லாரெனினும், வேரொடு அழிய வழிதேடமாட்டான். இந்த விதமான யோசனைகளெல்லாம் ஈஶ்வரனுடைய ஸ்வரூப விருத்தம்.

நன்றாகத் தெளிபவர்க்கு நமது ஶாஸ்த்ரங்கள் அறுதியிட்ட உண்மைகள் விளங்கும். அந்த உண்மைகள் ஶாஸ்த்ரத்தாலும் யோகஸாக்ஷாத்காரத்தாலும் நமக்குக் கிடைத்தன. ஶாஸ்த்ரம்

ஈஶ்வரனென நித்ய மென்பார் நம் பெரியோர். இந்த ரூபமான வேதப்ராமாண்யத்தைத் தத்காலத்தில் தேசாந்த்ரவித்யை அப்யஸிக்கின்றவர் ஒப்புக்கொள்ளமாட்டார்; ஆயினும், ஶ்ருதியில் மந்த்ர பாகங்களைச் சில ருஷிகள் ஸாக்ஷாத்கரித்தார்க ளென்றும், தத்வபாகங்கள் தத்வஸாக்ஷாத்காரம் பண்ணின மற்ற ருஷிகளுடைய அநுபவங்களை விவரிக்கின்றன வென்றும், ஆஸ்திகராக இருக்கும் எல்லோரும் ஒப்புக்கொள்ளக்கூடிய விஷயம். ஸர் ஆலிவர்லாட்ஜ் பண்டிதரைப்போல் ஸாமாந்ய ஶாஸ்த்ரங்களில் தேர்ச்சியாலும், ப்ளேடோ, அரிஸ்டாடில், என்னும் யவநதேசத்திய தத்வ விசார ஸமர்த்தர் காலம் முதற்கொண்டு, இப்போது ஐரோப்பிய தத்வ ஶோதகர்கள் காலம் வரையில், தத்வ ஆராய்ச்சி விஷயத்தில் கேவலம் புத்தி பலத்தாலும் செய்த வண்ணம், மற்ற யாவராலும் கண்டறியக்கூடாத தத்வார்த்தங்களை நம்முடைய ருஷிகள் ப்ரகாசிப்பிக்கவில்லை. அவர்கள் எப்படி அறிந்தார்கள் என்றால், ஈஶாவாஸ்யோபநிஷத்தின்படி ஸர்வபூதங்களிடம் ஆத்மத்ருஷ்டி பண்ணியும், விஹித கர்மாநுஷ்டாநத்தால் யோக விரோதிகளை நிரஸித்தும், கேநோபநிஷத்தின்படி தபஸ்ஸாலும், இந்த்ரிய நிக்ரஹத்தாலும், விஹிதகர்மாநுஷ்டாநத்தாலும், ஷடங்கத்துடன் கூடின வேதங்களை அப்யஸித்ததாலும், வாக்கு மநஸ் காயம் முதலான த்ரிகரணத்தாலும் ஸத்யத்திலேயே நிலைநிற்பதாலும் தத்வார்த்தங்களை விஷயீகரித்தார்கள்.

யஸ்ய தேவே பரா பக்திர் யதா தேவே ததா குரௌ |
தஸ்யைதே கதிதா ஹ்யர்தா: ப்ரகாஶந்தே மஹாத்மந: ||

என்கிறபடியே, பகவானிடத்திலும் ஆசார்யனிடத்திலும் உத்க்ருஷ்டமான பக்தியைப்பண்ணி, மஹாத்மாக்கள் எனப்பெயர் கொண்டு சேட்ட அர்த்தங்களைப் பிரகாசிக்கும்படி அடைந்தவர்களானார்கள்.

யேஷாம் தபோ ப்ரஹ்மசர்யம் யேஷு ஸத்யம் ப்ரதிஷ்டிதம் |
* * * ந யேஷு ஜிஹ்மமந்ருதம் ந மாயா ச ||

என்று ப்ரஶ்நோபநிஷத் சொல்லுகிறபடி எவரிடம் தபஸும், ப்ரஹ்மசர்யமும், நிலைத்த ஸத்யமும் உண்டோ, கௌடில்யம், பொய்



முதலான ஆஸுர குணங்கள் விலகியிருக்கின்றனவோ, அவர்களே ப்ரஹ்மஜ்ஞானத்தை ஸம்பாதித்தனர். கடோபநிஷத்தில், ஆவ்ருத்த சக்ஷுரம்ருதத்வமிச்சந் (மனத்தை விஷயங்களினின்றும் திருப்பி ஆத்மாவினிடம் நன்றாகச் செலுத்துவதாலும்) என்கிறபடியும், அந்த உபநிஷத்திலேயே மறுபடியும் சொல்லுகிறபடி,

யச்சேத் வாங்மநஸீ ப்ராஜ்ஞஸ் தத்யச்சேஜ்ஜ்ஞாந ஆத்மநி |
ஜ்ஞாநமாத்மநி மஹதி நியச்சேத், தத்யச்சேச்சாந்த ஆத்மநி ||

[வாக்முதலான பஞ்சேந்த்ரியங்களை மனஸில் அடக்கி, மனஸ்ஸை புத்தியில் அடக்கி, புத்தியை ஆத்மாவில் அடக்கி, ஆத்மாவை பரமாத்மாவி லடக்கியும்] தத்வஜ்ஞாநத்தை அடைந்தார்கள். இதுதான் யோகமென்று கடோபநிஷத்தில் சொல்லப்படுகிறது.

யதா பஞ்சாவதிஷ்டந்தே ஜ்ஞாநாநி மநஸா ஸஹ |
புத்திஶ்ச ந விசேஷ்டேத தாமாஹு: பரமாம் கதிம் ||
தாம் யோகமிதி மந்யந்தே |

[எப்போது பஞ்சேந்த்ரியங்களும், மனஸும், புத்தியும், ஸ்வவ்யாபாரங்களினின்றும் விலகி நிச்சலமாக நிற்கின்றனவோ அப்போது அதை ஶ்ரேஷ்டமான கதியென்பார்கள். அதை யோகமென்று என்னுகிறார்கள்.] இன்னும் அந்த ப்ரகாணத்திலேயே,

அஸ்தீதி ப்ருவதோऽந்யத்ர கதம் ததுபலப்யதே ||

என்பதால், (ப்ரஹ்மம்) இருக்கின்றதென்று சொல்லும்ஶாஸ்த்ரத்தைக் கொண்டே ப்ரஹ்மத்தை யறியவேண்டு மென்றுகிறது. அப்படி யறிந்த ப்ரஹ்மத்தை யோகத்தால் ஸாக்ஷாத்கரிக்கலாம். மற்றைய ப்ரமாணங்களை எடுக்கப்புகுந்தால் விஷயம் பெருகும். ஆதலால் நம் பெரியோர் தத்வஜ்ஞாநம் பெற்றமுறை வேறு. அவரை உலகில் மற்ற எவருடனும் ஒத்திடல்கூடாது. இப்படி உலகத்தில் அந்யத்ர அதிர்ஷ்டமான முறையில், தத்காலம் வஸ்து ஸ்வரூபத்தைக் கண்டறியும் வித்வான்கள் உகக்கும்படி, தத்வத்தின் நிலைகளை நம் பெரியோர் கண்டறிந்து, நமக்கு அந்த அறிவை நிதியாக வைத்தனர்.

பத்ராதிபர்.

ஶ்ரீ:.

ஶ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:.

# ஸ்ரீ அஹோபில மாஹாத்ம்யம். *

## இரண்டாவது அத்யாயம்.

ஊர்வசி லஜ்ஜையினுல் தொங்கின முகத்தையுடையவளாய்த் தேவலோகத்திற்குப்போய்ப் புரந்தரனை நமஸ்கரித்து இந்த வார்த்தையைச் சொன்னுள். "பகவந்! தேவதேவேச! உம்மால் அனுப்பப்பட்டவளாய் நான் தபோலோகத்திலும், ப்ரஹ்மலோகத்திலும் ஸ்ரீ விஷ்ணுலோகத்திலும், பாதாளலோகத்திலும் எந்த கார்யமுள்ளதோ அதை ஸாதிக்க வல்லவள்; இதில் ஸம்சயமில்லை; ஆனுல் தகாத இந்தப் பாபகர்மத்தில் என்னுடைய சக்தி தடுக்கப்பட்டது; மதம்பிடித்த யானையை எப்படித் தாமரை நாலினுல் கட்டமுடியும்? உக்ரப்ரபாவனுன ஸூர்யன் இருட்டினுல் எப்படி நாசமடைவான்? எப்படி ஸமுத்ர ஜலங்களினுல் படபாக்நி திரஸ்கரிக்கப்படும்? தவளைகளின் கூச்சலினுல் கடலோசை மறையுமா? ப்ரஹ்மத்தில் ஆழ்ந்த மனத்தினராய் விவேகத்தினுல் நிர்மலமான புத்தியையுடையவர்களுடைய ஹ்ருதயத்தைக் கலக்க யாருக்கு முடியும்? அந்தருஷி ஸ்வர்கத்தை இச்சித்தாரில்லை; தேவேந்த்ரபதத்தையும் விரும்பினுரில்லை; ப்ரஹ்மபதத்தையும் அபிலஷித்தாரில்லை; கேவலம் பகவானுடைய திருவடித்தாமரைகளை ஸேவிக்க ஆசைகொண்டவர்; அந்த மஹாத்மாவினுடைய ரூபத்தைப் பார்த்தே இதெல்லாம் நான் அறிந்தேன்" என்று இவ்வாறு ஊர்வசி தன் துக்கத்தையும் பயத்தையும் தேவேந்திரனுக்குத் தெரிவித்தாள்.

பரிசுத்தாத்மாவான கருத்மான் புருஷோத்தமனை த்யாநித்துக் கொண்டு மேருதுல்யமானுலும் இதர பலத்தை நினைத்திலர். பிறகு,

*. இந்த ஸம்புடம் 64-வது பக்கத்திலிருந்து தொடர்ச்சி.

THE REGISTRAR OF BOOKS
AUG 1914
MADRAS.



சங்க சக்ர கதாதரராய், நான்கு திருத்தோள்களுடையவராய் தேவேந்திரனுல் ஸேவிக்கப்பட்டவராய், சரத்கால மேகம் போல திருமேனி காந்தியுடையவராய், தாமரஸ புஷ்பம்போன்ற திருக்கண்களை யுடையவராய், ஆயிரம் ஸூர்யர்கள் உதித்தாற் போல காந்தியுடைய க்ரீடத்தினுல் ப்ரகாசிப்பவராய், அழகிய திருநாஸிகையுடையவராய், அழகிய தளிர்போலும் தாமரை நாளம் போலும் விளங்குகிற திரு அதரங்களுடையவராய், சங்கம் போன்ற திருக்கழுத்தை யுடையவராய், விசித்ரமான திருமேனி யுடையவராய். குண்டலத்வயங்களால் அலங்கரிக்கப்பட்டவராய், கௌஸ்துப மணியால் அலங்க்ருதமான திருமார்பையுடையவ ராய், ஸ்ரீவத்ஸத்தையுடையவராய், ஸ்ரீ பிராட்டியுடன் கூடின வராய், திருத்தோள்வளைகளினுல் விளங்கும் திருக்கைகளை யுடையவராய், விசித்ரமான திருக்கணையாழிகளினுல் வளைந்த உத்தமமான திருவிரல்களினுல் அலங்கரிக்கப்பட்டவராய், நீல மேக ச்யாமளராய், திருப்பீதாம்பரத்தினுல் ப்ரகாசிப்பவராய், புருஷோத்தமனுன பகவான், நக்ஷத்ரமண்டல ஸம்யுக்தனுன சந்திரன் போல, கனகமலை நடுவில் மேருபர்வதம்போல, அநந்தன் முதலான நித்யர்களின் கூட்டத்தினுல் சூழப்பட்டவராய், வைநதேயருக்கு முன்னுல் ப்ரஸந்நராகி, "பாலிச! கல்யாண! விநதா நந்தவர்த்தந! திருப்தி யடைந்தேன் உன்னுடைய உக்ரதபஸா கிற ஸாஹஸ கர்மாவால்; எழுந்திரு; வைநதேயனே, என்ன செய்ய வேண்டும்? உன்னுடைய அபிலாஷை என்ன, சொல்; எல்லாவற்றையும் செய்கிறேன்?" என்று உத்தமமாயும் மதுர மாயும் உள்ள வார்த்தைகளைத் திருவாய்மலர்ந்தளினுர்.

ஸ்ரீநாரதர்:— இப்படி பகவான் திருவாய் மலர்ந்தருளின வார்த்தைகளை நேரில்கேட்டுக் கருடன் அநேகம் ஆயிரம் ப்ரணமங்களைச் செய்தான். அந்த பகவானை அடிக்கடி யெழுந்திருந்து அடிக்கடி ஸேவித்து அவருடைய அபூர்வமான ரூபத்தைக் கண்டு ஆச்சர்யத்தினுல் மலர்ந்த கண்களையுடையவராயும், புளகாங்கிதமான சரீரத்தையுடையவராயும் கருடன் வாஸுதேவனைப் ஸ்தோத்ரம் செய்தார். "ஜகத்துக்கு ஸ்ரஷ்டாவே! உம்மை நமஸ்கரிக்கிறேன்; ஜகத்ரூபனுயும் சார்வதனுயும் ஜகத்ரக்ஷகனுயுமிருக்கிற உம்மை நமஸ்கரிக்கிறேன்; ஜகத்துக்கு லயஸ்தாநமாயும் ஜகத்தை ஸம்ஹரிப்பானுயுமிருக்கிற உம்மை ஸேவிக்கிறேன்;

கார்ய ஸ்வரூபனையும் காரணமாயுமிருக்கிற உம்மை ஸேவிக்கிறேன்;
பரேசனாகிய உம்மை ஸேவிக்கிறேன்; வெவ்வேறு ரூப பேதங்
களினால் ஸகலத்தையும் வ்யாபரித்திருக்கிற உமக்கு நமஸ்
காரம்; சார்ங்கம், நந்தகம், கௌமோதகீ, சங்கம், சக்ரம் இவை
களை தரித்த உமக்கு நமஸ்காரம்; தாமரைதளம் போன்ற
திருக்கண்களையுடைய உமக்கு நமஸ்காரம்; பக்த ஜநங்களுக்கு
இரங்கும் பெருமானே! உம்மை ஸேவிக்கிறேன். ஸர்வலோகத்திற்
கும் வாஸஸ்தாநமானவனே! உமக்கு நமஸ்காரம்; காரணமாயும்
கார்யமாயுமிருப்பவனே! ஸ்வயம்புவாகிய தேவரீருடைய மஹிமை
யைத் துதிசெய்ய ஒருவனுக்கும் ஸாத்யமில்லை; அத்யந்தம் தூர்ப்
புத்தியுள்ள அடியேன் தேவரீரை எப்படி ஸ்தோத்ரம் செய்யப்
போகிறேன்; ஜகத்துக்கெல்லாம் குருவானவனே! தேவாதிதேவ
னே! உம்மை ஸ்தோத்ரம் செய்ய எப்படி என்னுடைய நாக்கு
ப்ரவர்த்திக்கும்; அநேக ப்ரஹ்மாக்களுடைய ஆயுள் நாள் மொத்
தம் ஒருவனுக்கிருந்து அவன் பரிசுத்தமான மனத்தையுடையவ
னாக இருந்தானாகில் உம்முடைய குணங்களில் பதினாயிரத்தி
லொரு அம்சம் சொல்வானோ சொல்லமாட்டானோ; ஆகையால்
தேவச்ரேஷ்டனே! எனக்கு க்ருபை செய்தருள வேண்டும்;
மோக்ஷத்தைத் தருகிற பகவான், தன்னை த்யாநம் செய்கிறவர்க
ளுக்கு ஆயுளையும் ஆரோக்யத்தையும் தநத்தையும், போகத்தை
யும், இடையில்வரும் பலங்களாகக் கொடுக்கிறான்; சில மநுஷ்
யர்கள் உம்மை ஆராதித்து தேவத்வத்தையும், சிலர் கந்தர்வத்வ
த்தையும், சிலர் யக்ஷத்வத்தையும், சிலர் ஸித்தத்வத்தையும்
அடைந்தார்கள். இந்த்ரன் ஜகத்குருவான உம்மை நூறு யாகங்
களினால் ஆராதித்து தேவேந்த்ர பட்டத்தைப் பெற்றான்; ஆகை
யால் உம்மைத்தவிர மற்றொருவன் பூஜிக்கத்தக்கவனாய் ஒரு
இடத்திலுமில்லை; விதேகருடைய வம்சத்தில் பிறந்தவர்கள் ஸப்த
பூருஷம் உம்மை ஆராதித்தும், ஹேஹய வம்சத்தில் பிறந்த
வர்கள் ஐம்பது பூருஷம் உம்மை ஆராதித்தும் மோக்ஷத்தை
அடைந்தார்கள்; எவன் மிகுந்த தநத்தைக்கொள்ள ஆசைப்
படுகிறானோ, ஜகத்பதே! அவன் உம்மை ஆராதித்து அந்த
தநத்தை துந்துமாரன் என்னும் ராஜன் அடைந்ததுபோல
அடைகிறான்; ஸந்தேஹமில்லை; உம்மை ஆராதித்து கார்த்த
வீர்யார்ஜுநன் விபுலராஜ்யத்தை அடைந்தான்; உம்முடைய



அநுக்ரஹத்தினால் தர்மபுத்ரரும், முத்கலனும், பாஷ்கலனும்,
க்ருணியும், நஹுஷன் முதலான மற்ற அரசர்களும், குசத்வஜர்
என்னும் ராஜாவும், யுத்தத்தில் ஜயிப்பவரான ஜநகரும், தர்ம
த்வஜரும் மோக்ஷத்தை யடைந்தவர்களாய் உம்முடைய க்ருபை
யினால் உம்முடனே சேர்ந்தார்கள். அவ்வாறே கணக்கில்லாமல்
மற்ற ராஜாக்களும், ருஷிகளும், அஸுரர்களும், ப்ரபோ! உம்
மிடத்தில் பக்தியைச்செய்து மஹாபாக்யத்தோடு கூடியவர்களாய்
மோக்ஷத்தை யடைந்தார்கள். எப்படி ஜ்வலித்துக்கொண்டிருக்
கிற அக்நி இருளைப் போக்கவேண்டியவர்களுக்கு இருட்டைப்
போக்குகின்றதோ, குளிர்ச்சியை நிவர்த்தி செய்யவேண்டியவர்
களுக்கு அதை நிவர்த்திசெய்கிறதோ, வியர்வை வேண்டியவர்க
ளுக்கு வியர்வையைக் கொடுக்கின்றதோ, பசித்தவர்களுக்குப்
புசிக்கவேண்டியவைகளைப் பாகம்செய்கின்றதோ, அப்படியே புரு
ஷோத்தமனும் காமங்களையும் போகங்களையும் கொடுக்கின்றான்.
பாபகர்மாவினுடைய ராசி மேரு மந்தர மலைகள் அளவு இருந்த
போதிலும், உம்மை அடைந்தால், கொடிய வ்யாதியும் வைத்யனை
யடைந்தால் நசிப்பதுபோல நசித்துவிடுகின்றது. தேவனே!
எவர்கள் உம்மைப் பற்றினார்களோ அவர்களை, தடுக்கப்படா
மலும் ஸுமுகமாயு மிருக்கிற சக்ரம் முதலிய ஆயுதங்கள்
எல்லா ஆபத்துக்களினின்றும் காக்கின்றன; எல்லாத் துக்கங்களு
மற்ற அவர்களுக்கு க்ரஹங்களும் எப்பொழுதும் ஸௌம்யங்களா
யிருக்கின்றன; எவனிடத்தில் ஜநார்த்தநன் க்ருபை செய்து
விட்டாரோ அவன் தேவதைகளாலும் அறிய முடியாதவன்;
தேவேச! எவர்களிடத்தில் தேவரீர் த்ருப்தி யடைகின்றதோ
அவர்களுக்குப் பூமியில் ஜயம், அன்றியும் மூன்று லோகங்களிலும்
ஜயமுண்டாகிறது, இது நிச்சயம்; மாதவனே! எவனொருவன்
தேவரீரை ஸந்தோஷிப்பிக்கிறானோ அவனுக்கு மநோவ்யாதி,
தேஹபீடை, விஷபீடை, க்ருஹபீடை, பந்தநம், ஸ்வப்ந பயம்
முதலானவைகள் உண்டாவதில்லை; மாதவ! தேவரீர் ப்ரஸந்ந
ரானால் ஆரோக்யத்தையும், பரம ஸம்ருத்தியையும், நெஞ்சில் எதை
நினைக்கிறார்களோ அதையும், நிச்சயமாய் அடைகிறார்கள். எவன்
தர்மம், அர்த்தம், காமம், மோக்ஷம் என்கிற புருஷார்த்தங்களினால்
உண்டாகப்பட்ட ஆசையினால் கவரப்பட்ட மனத்தை யுடைய
வனாய் தேவரீரை உபாஸிக்கிறானோ அவனுடைய பாபம் ஜலத்தி

விட்ட உப்பைப்போல லயத்தையடைகிறது; மதுஸூதந! ஸர்வ லோக குருவான தேவரீர் எவர்களுக்கு நாதனாக நிற்கின்றீரோ அவர்கள் மூன்று லோகங்களிலும் ஸாதிக்க முடியாதது ஒன்று மில்லை; தேவச்ரேஷ்டர்களுக்கெல்லாம் நாதனாகிய தேவரீர் எவர்க ளிடத்தில் திருப்தியை யடைந்திருக்கிறீரோ, மாதவனே! அவர்க ளுக்குப் பாபமாவது யுத்தத்தில் தோல்வியாவது கிடையாது; எவர்கள் ஸர்வலோகங்களுக்கும் ஸ்ரஷ்டாவாகவும், பரமாத்மா வாகவும், அச்யுதனாகவும், ஹ்ருஷீகேசனாகவு மிருக்கிற தேவரீரைச் சரணமாக அடைந்தார்களோ அவர்கள் கர்மங்களில் மோஹத்தை யடைகிறதில்லை; ஸர்வ வேதங்களினாலும் நமஸ்கரிக்கப் பட்ட வனே! பூமி, காற்று, ஆகாயம், நீர், அக்நி, சந்த்ரன், ஸூர்யன் இவையெல்லாம், தேவரீருடைய ரூபம்." இப்படி ஜநார்த்தநனை பகவானை அநேகவிதமாய் ஸ்தோத்ரம்செய்து வணக்கத்தோடு கருடன் மௌநமாயிருந்தார். அதுகேட்டு பகவான் ப்ரஸந்நமான முகத்துடன் கூடினவராய், "வைநதேய! உன்னுடைய ஸ்தோத் ரத்தினால் நான் மிகவும் திருப்தியடைந்தேன்; உனக்கு க்ஷேமம் உண்டாகட்டும்; உனக்கு எது இஷ்டமோ அதெல்லாவற்றையும் தருகிறேன்" என்று சொன்னார்.

பகவானுடைய வசநத்தைக் கேட்டுப் பக்ஷிராஜன், "பகவானே! தேவரீர் த்ருப்தியை யடைந்நீராகில் பூமியில் ஜயமும் த்ரை லோக்ய ஜயமும், அழிவில்லாத பதமும், தேவரீர் யாரிடத்தில் த்ருப்தி யடைந்தீரோ அவர்களுக்குக் கிடைப்பது நிச்சயம்; இதுமுதல், தேவேசனே! என்னைத் தேவரீருக்கு வாகநமாகக் கொள்ளும்; என்னுடைய தோள்களில் இருந்துகொண்டே எனக்கு ப்ரீதியைத் தரக்கடவீர்; தேவாதிதேவனே! ஸர்வத்திற்கும் ஆதாரமாகிய தேவரீருக்கு வாகநமாக இருத்தல் பெரும்பேறு" என்று ப்ரார்த்தித்தார்.

ஸ்ரீநாரதர்: — விநதருடைய குமாரனைத் தவிர்த்து மற்று யாரால் அப்பேற்றை அடைய முடியும்? ஹரிகிங்கரர்கள் தேவபதத்தையும், தேவேந்திர பதத்தையும், ப்ரஹ்ம பதத்தை யும், சிவபதத்தையும், நந்தந நிதியையும் விரும்புகிறதில்லை. புத்தி மானாகிய கருடன் மறுபடியும் அநுத்தமமான மற்றொரு வரத் தைக் கேட்டார். கருடன், "தேவேசனே! இந்த மலையில் வெகு



காலமாய் நான் வஸித்துவந்தேன்; ஆகையால் இதற்கு என்னு டைய பெயரை வைக்கக்கடவீர்" என்றார். இப்படி தேவதேவ னாகிய ஜநார்த்தநன் இரண்டு வரங்களையு மளித்து, ப்ரீதியுடன் ப்ரஸந்நமுகத்தோடு திருக்கையினால் கருடனைத்தடவிக்கொடுத்து, "நீயோ சிறுகுழந்தை; க்ருசமாயிருக்கிறாய்; உனக்கு இப்படிப் பட்ட புத்தி எப்படி உண்டாயிற்று? பூர்வத்தில் மஹான்களான ருஷிகள் பலர் என்னை ஆச்ரயித்தார்கள்; அவர்களுக்கும் இவ் விதமான புத்தி ஒருபொழுதும் உண்டானதில்லை; நீ ஸமர்த்தன்; குணதோஷங்களைப் பகுத்தறிவதில் நிபுணன்; புத்தியிலும் நீதியிலும் தேர்ந்தவன்; உன்னால் கேட்கப்பட்ட இரண்டு வரங் களாகிய, எனக்கு வாகநமாக விருத்தலும், கருடாசலம் என்று உன்னுடைய பெயரால் இம்மலைக்குப் ப்ரஸித்தியும், உண்டாகக் கடவது; பூமியில் ஜநங்கள் உன்னை கருடன், பந்நகாராதி வேதாத்மா, விஹகேச்வரன், நாராயணரதம் என்று சொல்லப் போகிறார்கள்; இப்பூமியில் இந்த கருடாசலம் ஸூர்ய சந்திரர்கள் எவ்வளவுகாலம் ஸஞ்சரிக்கின்றார்களோ அவ்வளவு காலமிருக்கப் போகிறது" என்று சொல்லிவிட்டு அங்கேயே பகவான் அந்தர்த்தாந மடைந்தார்.

இப்படி பவநாசிநீயின் தென்கரையில் இருக்கிற கருடா சலம் வேறொரு மேரு மலை போல் ப்ரகாசிக்கிறது. ககபதியாகிற கருடனுடைய தவத்தினால் மேன்மைபெற்று விளங்குவதாயும், பலங்கள், புற்கள், ஜலங்கள் இவைகளை ஆகாரமாக உடைய தவசி களால் அடையப்பட்டதாயும், எல்லா லோகங்களையும் ரக்ஷிப்ப தில் ஸமர்த்தமாயும் இருக்கிற காருடாத்ரி, பூமியில் நித்யம் ஸர்வப்ரயோஜநங்களையும் கொடுத்துக்கொண்டு விளங்கக்கடவது.

ப்ரஹ்மாண்ட புராணத்தில் க்ஷேத்ர காண்டத்தில்

அஹோபில மாஹாத்ம்யத்தில்

இரண்டாவது அத்யாயம் முற்றிற்று.

---

சேட்லூர் நரஸிம்ஹாசார்யர்.

# ஸ்ரீ அஹோபில ந்ருஸிஹ்மன் விஷயம்.

## ௨-ப்ரஹ்லாத சரித்திரம்.

ஜந்மாந்தரத்தில் ஸர்வவித்யா பாரங்கதனும், ப்ரஹ்ம ஸாக்ஷாத்கார ஸமர்த்தனுமான ப்ரஹ்லாதனுக்கு, உபநிஷத் வாக்யத்தின்படியே வித்யையும் பூர்வப்ரஜ்ஞையும் விடாமல் தொடரவே, அவனுடைய நைஸர்க்கிகமான ஜ்ஞாநபக்திகள் விகாஸத்தையடைய வ்யாஜமாத்ரம் அபேக்ஷிதங்களாக நின்றன. அவனுடைய பிதா தபஸ்செய்யும்பொருட்டு மந்தர பர்வதத்திற்குச் சென்றவுடன், இந்த்ரன் முதலான தேவர்கள் அஸுரர்களுடன் யுத்தம் புரிந்து, அவர்களை நாற்புறமும் பயந்தோடச் செய்தனர். ஹிரண்யகசிபுவின் அரண்மனையை நாசம்செய்து, கர்ப்பிணியாக இருந்த ப்ரஹ்லாதன் மாதாவை இந்த்ரன் சிறைபிடித்துக்கொண்டு நடந்தான்.

நீயமாநாம் பயோத்விக்நாம் க்ரோசந்தீம் குரரீமிவ ।
யத்ருச்சயா கதஸ்தத்ர தேவர்ஷிர்தத்ருசே பதி ।
ப்ராஹ நைநாம் ஸுரபதே நேதுமர்ஹஸ்யநாகஸம்।
முஞ்சமுஞ்ச மஹாபாக ஸதீம் பரபரிக்ரஹாம் ॥

[ அப்போது வழியில் தற்செயலாய் வந்த தேவர்ஷியாகிய நாரதர் இந்த்ரனால் கொண்டுபோகப்பட்டு, பயத்தால் வ்யஸநமுற்று, குரரீ பெண்பக்ஷியைப்போல் கதறுகின்றவளைப் ( கயாதுதேவியை ) பார்த்தார். 'தேவராஜனே! நிரபராதியான இவளைக் கொண்டுபோக நீர் அர்ஹரல்லர்; மஹாபாக்யத்துடன் கூடினவரே! அயலான் பத்நீயான பதிவ்ரதையை உடனே விட்டுவிடு' என்று சொல்லவும் சொன்னார்.] இதற்கு இந்த்ரன், அவளுடைய கர்ப்பத்தில்



தேவர்களுக்குச் சத்ருவாகத்தக்க மஹாவீரன் இருக்கின்றுனென்
றும், ப்ரஸவபர்யந்தம் கயாதுதேவி தன்னிடம் இருக்கவேண்டு
மென்றும், ப்ரஸவமான பிறகு தன்கார்யமாகிற ஸிசுஹத்தியை
முடித்துக்கொண்டு, அவளை விட்டுவிடுகிறதாகச் சொன்னன்.
இதைக்கேட்ட நாரதர்,

அயம் நிஷ்கில்பிஷ ஸாக்ஷாத் மஹாபாகவதோ மஹாந் ।
த்வயா ந ப்ராப்ஸ்யதே ஸம்ஸ்தாம் அநந்தாநுசரோ பலீ ॥

[இவள் கர்ப்பத்தில் இருக்கப்பட்டவன் பாபரஹிதன்; (பிதா
வின் ஸம்பந்தத்தாலின்றி) ஸ்வகுணங்களாலேயே அவன் மஹாந்;
அநந்தனுடைய தாஸன்; மஹாபலிஷ்டன்; உன்னால் மரணத்தை
அடையமாட்டான்] என்றனர். உடனே இந்த்ரன் நாரதரிடம்
தனக்குள்ள பக்தியின் பொருட்டு, அவருடைய சொற்களைப் பகு
மாநித்துக் கயாதுதேவியை விட்டுவிட்டுத் தன்னுலகம் போயினன்.
நாரதரும் கயாது தேவியைத் தன் ஆச்ரமத்திற்கு அழைத்துக்
கொண்டுபோய், அவளை உபசாரோக்திகளால் ஆஸ்வாஸநம்
செய்து, ஹிரண்யகசிபு தபஸ் முடிந்து திரும்பும் வரையில்,
தனது ஆஸ்ரமத்தில் வஸிக்கச் சொன்னர். அவளும் அப்படியே
நிர்ப்பயமாகத் தேவர்ஷியினுடைய ஆஸ்ரமத்தில் வஸித்துக்கொண்
டிருந்தனள். மேலும் தன் கர்ப்பத்தினது க்ஷேமத்தினதுபொருட்
டும், தான் இச்சித்த காலத்தில் ப்ரஸவம் உண்டாகும் பொருட்டும்
மிகுந்த பக்தியுடன் ருஷிக்குப் பணிவிடைகள் செய்துகொண்டு
மிருந்தனள். தனது பர்த்தா திரும்பின பிறகு ப்ரஸவம் உண்டாக
வேண்டுமென்பது அவளிஷ்டம். ருஷியின் ஸுச்ரூஷையால்
தனது இஷ்டம் ஈடேறுமென்று எண்ணினுள். பரமகாருணிகரும்
அவளிஷ்டங்களை நிறைவேற்ற ஸமர்த்தருமான நாரதர்
அவளெண்ணியபடி அநுக்ரஹித்தனர். அவளுக்குண்டான வ்ய
ஸநத்தைப் போக்கும்படியாகத் தர்மத்தின் ஸ்வரூபத்தையும்,
ஜநிக்கப்போகின்ற ப்ரஹ்லாதனை உத்தேசித்து பகவத் பக்தி
ரூபமான ஜ்ஞாநத்தையும், ஆத்மாநாத்ம விவேகத்தையும்,
அவளுக்கு உபதேசம் செய்தனர். இந்த உபதேசமானது ருஷியின்

அநுக்ரஹ பூர்வகமாக ப்ரஹ்லாதனுக்குக் கர்ப்பத்திலேயே கிடைத்து விட்டது. இந்த வ்யாஜத்தைத்தான் அவனுடைய ஜந்மாந்தர ஸம்ஸ்காரம் அபேக்ஷித்து நின்றது. ஆனபடியால்,

ந்யஸ்த க்ரீடநகோ பாலோ ஜடவத் தந்மநஸ்தயா ।
க்ருஷ்ணக்ரஹ க்ருஹீதாத்மா ந வேத ஜகதீத்ருஶம் ॥
ஆஸீந꞉ பர்யடந்நஶ்நந் ஶயாந꞉ ப்ரபிபந் ப்ருவந் ।
நாநுஸந்தத்த ஏதாநி கோவிந்த பரிரம்பித꞉ ॥
க்வசித் ருததி வைகுண்ட சிந்தா ஶபல சேதந꞉ ।
க்வசித் ஹஸதி தச்சிந்தா ஹ்லாத உத்காயதி க்வசித் ॥
க்வசித் தத்பாவநா யுக்த꞉ தந்மயோ(அ)நுசகார ஹ ।
நததி க்வசிதுத்கண்டோ விலஜ்ஜோ ந்ருத்யதி க்வசித் ।
க்வசிதுத்புலகஸ் தூஷ்ணீம் ஆஸ்தே ஸம்ஸ்பர்ஶ நிர்வ்ருத꞉ ।
அஸ்பந்த ப்ரணயாநந்த ஸலிலாமீலிதேக்ஷண꞉ ॥

[குழந்தையாக இருக்கையிலேயே, மநஸை எப்போதும் பகவானிடம் செலுத்திவிட்டு, ஜடன்போல விருந்துகொண்டு, பாலர்களுக்கு உரித்தான விளையாட்டுகளை விலக்கிநின்றான்; ஸ்ரீ க்ருஷ்ணனாகிற க்ரஹத்தால் ஆக்ரமிக்கப்பட்ட மநஸுடன் கூடினவனாய், ஜகத் இப்படி இருக்கின்றதென அறிந்தானில்லை; கோவிந்தனால் ஆலிங்கநம் செய்யப்பட்டவனாய், (அந்த ஆலிங்கநத்தால்) ஸ்வதேஹ தர்மங்களை மறந்துவிட்டு, உட்கார்ந்தாலும், ஸஞ்சரித்தாலும், புசித்தாலும், படுத்தாலும், குடித்தாலும், பேசினாலும், இந்தச் செயல்களை நினைத்தானில்லை; வைகுண்டனுடைய சிந்தையால் உருகிய மநஸ்கனாக ஒருவேளை அழுவான்; ஒருவேளை தச்சிந்தையால் ஆநந்தத்தை யடைந்து சிரிப்பான்; அதனால் (கோவிந்தன் குணங்களைப்பற்றி) ஒருவேளை உரக்கப்பாடுவான்; ஒருவேளை உரக்கச் சப்தம்செய்வான்; ஒருவேளை லஜ்ஜையைவிட்டுக் கூத்தாடுவான்; இவ்விதமாக பகவானுடைய ஸ்மரணாதிஶயத்தால், அவனாகத் தன்னை யெண்ணிக்கொண்டு அவனைப்போல் சிலகாலம் நடிப்பான்; பகவானுடைய அவிச்சிந்ந த்யாநத்தால் மிகுந்த ஸுகத்தை யடைந்து, பகவானிடம் நிஶ்சலமான ஸ்நேஹமுண்டானவனாய், அதனடியாக ஆநந்த பாஷ்பத்தால் வ்யாப்தமான தனது கண்களை ஈஷத் மூடிக்கொண்டு சிலகாலம் புளகாங்கிதனாய்ச் சும்மாவிருப்பான்.]



அஸுரர்களுக்குப் புரோஹிதரான சுக்ராசார்யர் குமாரர்கள் சண்டாமர்க்கர்கள் அஸுர பாலர்களுக்குக் கல்வி கற்பித்தார்கள். ப்ரஹ்லாதனுக்கு யுக்தவயஸ் வந்தவுடன், அவன் வித்யாப்யாஸ நிமித்தம் அவரிடம் பிதாவால் அனுப்பப்பட்டான். வழக்கப்படித் தானென்றும் பிறனென்றும் பேதபுத்தியை விஸ்தரிக்கின்ற லோகாநுபவத்தை யொட்டிய பாடங்களை உபாத்யாயர்களிடம் கேட்டு, அவர் சொல்லியவற்றைத் தானும் சொன்னானாயினும், அவற்றை மஹாஜ்ஞாதாவான அவன் ஸாதுவாக எண்ணினானில்லை. இப்படிச் சிலகாலம் சென்றபின், அந்தச் சண்டாமர்க்கர்களுடன் ப்ரஹ்லாதன் தன் பிதாவிடம் சென்றான்.

பாதப்ரணாமாவநதம் தமுத்தாப்ய பிதா ஸுதம் ।
ஹிரண்யகஶிபு꞉ ப்ராஹ ப்ரஹ்லாதமமிதௌஜஸம் ॥
உச்யதாம் பவதா வத்ஸ ஸாரபூதம் ஸுபாஷிதம் ।
காலேநைதாவதா யத்தே ஸதோத்யுக்தேந ஶிக்ஷிதம் ॥

[தன் பாதங்களில் வணங்கக் குனிந்த மிகுந்த மஹிமையுடைய தன் குமாரனாகிய அந்த ப்ரஹ்லாதனைப் பிதாவாகிய ஹிரண்யகசிபு வானவன் கையாலெடுத்து, குழந்தாய்! இவ்வளவு காலமாக இடைவிடாமல் கவனத்துடன் ஸார பூதமாகவும், நன்கு சொல்லப்பட்டதாகவும் உன்னால் யாதொன்று அறியப்பட்டதோ அதைச் சொல் என்று உரைத்தான்.] இதைக் கேட்டு ப்ரஹ்லாதனும்,

ஶ்ரூயதாம் தாத வக்ஷ்யாமி ஸாரபூதம் தவாஜ்ஞயா ।
ஸமாஹித மநா பூத்வா யந்மே சேதஸ்யவஸ்திதம் ॥

அநாதி மத்யாந்தமஜம் அவ்ருத்தி க்ஷயமச்யுதம் ।
ப்ரணதோ(அ)ஸ்ம்யந்த ஸந்தாநம் ஸர்வ காரண காரணம் ॥

[ அப்பா ! ஏகாக்ர சித்தனாகி ஸாரபூதமென யாதொன்று என் மநஸில் இருக்கின்றதோ, அதை உனது ஆஜ்ஞைபால் சொல்கிறேன் கேளும்; காலத்தாலும் தேசத்தாலும் ஆதி மத்யம் அந்தமென விபஜிக்கக் கூடாதவனும், ப்ரக்ருதி ஸம்பந்தத்தாலும் பிறப்பற்றவனும், வ்ருத்தி க்ஷயம் முதலான விகார மில்லாதவனும், ஶாஶ்வதனும், ஸர்வத்ர ஸம்ஹார கர்த்தாவாகவும் ஸ்திதி கர்த்தாவாகவு மிருப்பவனும், எல்லாக் காரண வஸ்துக்களுக்கும் காரணமா யிருப்பவனுமான பகவானை நமஸ்கரிக்கின்றேன் ] என்றனன்.

இந்தச் சொற்கள் நாஸ்திகாக்ரேஸரனான ஹிரண்ய கசிபுவின் செவியில் ஈயத்தை உருக்கிக்கொட்டினதுபோல் விழுந்தன. அவனுடைய கண்கள் கோபத்தால் சிவந்தன ; உதடுகள் துடித்தன. சண்டாமர்க்கர்களை நோக்கினான்; "ப்ராஹ்மணாதமர்களே ! மதிகெட்டவர்களே ! என்னை அவமதித்து இந்தப் பாலனுக்கு ஶத்ரு ஸ்துதி ரூபமான ஸாரமில்லாதவற்றைக் கற்பித்தீர்கள். இதென்ன ?" என்றுரைத்தான். அவர்கள், "தைத்யேச்வர ! கோபம் கொள்ளவேண்டாம்; உன் புத்ரன் நாங்கள் உபதேசித்ததை சொல்லவில்லை" என்றனர். பிறகு ஹிரண்யகசிபு புத்ரனைப் பார்த்து "குழந்தாய் ! இதோ உனது குரு இதை உனக்கு உபதேசிக்கவில்லையென்கிறார்; இவ்விதம் யார் உனக்கு உபதேசித்தார் சொல்" என்றனன். ப்ரஹ்லாதனும்,

𑌶𑌾𑌸𑍍𑌤𑌾 𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌰𑌶𑍇𑌷𑌸𑍍𑌯 𑌜𑌗𑌤𑍋 𑌯𑍋 𑌹𑍃𑌦𑌿 𑌸𑍍𑌥𑌿𑌤𑌃 ।
𑌤𑌮𑍃𑌤𑍇 𑌪𑌰𑌮𑌾𑌤𑍍𑌮𑌾𑌨𑌂 𑌤𑌾𑌤 𑌕𑌃 𑌕𑍇𑌨 𑌶𑌾𑌸𑍍𑌯𑌤𑍇 ॥

[ ஹ்ருதயலிருக்கப்பட்ட விஷ்ணுவானவர் ஸர்வஜகத்துக்கும் குரு ; அப்பா ! அந்தபரமாத்மாவைத் தவிர்த்து யார் யாரால் சிக்ஷிக்கப்படுகிறான் ] என்று விடையளித்தான். இதன்மேல் ஹிரண்யகசிபுவானவன்,

𑌕𑍋𑌯𑌂 𑌵𑌿𑌷𑍍𑌣𑍁 𑌸𑍁𑌦𑍁𑌰𑍍𑌬𑍁𑌦𑍍𑌧𑍇 𑌯𑌂 𑌬𑍍𑌰𑌵𑍀𑌷𑌿 𑌪𑍁𑌨𑌃𑌪𑍁𑌨𑌃 ।
𑌜𑌗𑌤𑌾𑌮𑍀𑌶𑍍𑌵𑌰𑌸𑍍𑌯𑍇𑌹 𑌪𑍁𑌰𑌤𑌃 𑌪𑍍𑌰𑌸𑌭𑌂 𑌮𑌮 ॥



[ மஹா புத்தி கெட்டவனே ! இப்போது ஜகத்துக்கு ஈஶ்வரனை என் முன்பாக, வேணுமென்று மறுபடியும் மறுபடியும் சொல்கின்றையே, அந்த விஷ்ணு யார் ] என்று கேட்டான். ப்ரஹ்லாதனும், '𑌨𑌶𑌬𑍍𑌦𑌗𑍋𑌚𑌰𑌂 𑌯𑌸𑍍𑌯 𑌯𑍋𑌗𑌿𑌧𑍍𑌯𑍇𑌯𑌂 𑌪𑌰𑌂𑌪𑌦𑌂 । 𑌯𑌤𑍋 𑌵𑌿𑌶𑍍𑌵𑌂 𑌸𑍍𑌵𑌯𑌂 𑌵𑌿𑌶𑍍𑌵𑌂 𑌸𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌃 𑌪𑌰𑌮𑍇𑌶𑍍𑌵𑌰𑌃' யோகிகளால் த்யாநிக்கத்தக்க யாருடைய பரமஸ்வரூபமானது வாக் முதலான இந்த்ரியங்களுக்கு எட்டாததோ, எவனிடமிருந்து இந்த ஸர்வ ஜகத்தும் உண்டானதோ, எவன் விஶ்வத்தையே தன்ரூபமாக உடையவனோ, அந்த பரமேஶ்வரன் விஷ்ணு என்று ப்ரத்யுத்தரமளித்தான். இதைக் கேட்டவுடன் அவன் பிதா,

𑌪𑌰𑌮𑍇𑌶𑍍𑌵𑌰 𑌸𑌂𑌜𑍍𑌞𑍋𑌽𑌜𑍍𑌞 𑌕𑌿𑌮𑌨𑍍𑌯𑍋 𑌮𑌯𑍍𑌯𑌵𑌸𑍍𑌥𑌿𑌤𑍇 ।
𑌤𑌥𑌾𑌪𑌿 𑌮𑌰𑍍𑌤𑍁𑌕𑌾𑌮𑌸𑍍𑌤𑍍𑌵𑌂 𑌪𑍍𑌰𑌬𑍍𑌰𑌵𑍀𑌷𑌿 𑌪𑍁𑌨𑌃𑌪𑍁𑌨𑌃 ॥

[ ஜ்ஞாநமற்றவனே ! நானிருக்கையில் பரமேஶ்வரன் என்னும் பெயருடையவன் மற்றொருவன் யார் ? இவ்விதமாக இப்போது நீ மரணத்தை இச்சித்தவனாய்க்கொண்டு அடிக்கடிச் சொல்லுகின்றாய் ] என்றனன். மறுபடியும் ப்ரஹ்லாதன்,

𑌨𑌕𑍇𑌵𑌲𑌂 𑌤𑌾𑌤 𑌮𑌮 𑌪𑍍𑌰𑌜𑌾𑌨𑌾𑌂
𑌸𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌭𑍂𑌤𑍋 𑌭𑌵𑌤𑌶𑍍𑌚 𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌃 ।
𑌧𑌾𑌤𑌾 𑌵𑌿𑌧𑌾𑌤𑌾 𑌪𑌰𑌮𑍇𑌶𑍍𑌵𑌰𑌶𑍍𑌚
𑌪𑍍𑌰𑌸𑍀𑌦 𑌕𑍋𑌪𑌂 𑌕𑍁𑌰𑍁𑌷𑍇 𑌕𑌿𑌮𑌰𑍍𑌥𑌂 ॥

[ அப்பா ! பரப்ரஹ்மமான அந்த விஷ்ணுவானவர் எனக்கு மாத்ரமன்று, ஸர்வப்ரஜைகளுக்கும், உமக்கும், போஷகராகவும் கர்த்தாவாகவும், பரமேஶ்வரனாகவும் இருக்கின்றனர் ; க்ருபை செய்யும்; என்கோபம் செய்கின்றீர்?] என்று சொன்னான். இதைக் கேட்டவுடன் ஹிரண்யகசிபுவுக்கு ஒன்றும் தோன்றாமல்,

𑌪𑍍𑌰𑌵𑌿𑌷𑍍𑌟𑌃 𑌕𑍋𑌸𑍍𑌯 𑌹𑍃𑌦𑌯𑍇 𑌦𑍁𑌰𑍍𑌬𑍁𑌦𑍍𑌧𑍇𑌰𑌤𑌿𑌪𑌾𑌪𑌕𑍃𑌤𑍍 ।
𑌯𑍇𑌨𑍇𑌦𑍃𑌶𑌾𑌨𑍍𑌯𑌸𑌾𑌧𑍂𑌨𑌿 𑌵𑌦𑌤𑍍𑌯𑌾𑌵𑌿𑌷𑍍𑌟𑌮𑌾𑌨𑌸𑌃 ।

[ எவனால் க்ரஹிக்கப்பட்ட மநஸுடன் கூடினவனாய், இவன் இப்படிப்பட்ட அஸாதுவான வசநங்களைச் சொல்கின்றானோ,

அப்படிப்பட்ட எந்த பாபிஷ்டன் இந்த கெட்டமதியுடன் கூடின ப்ரஹ்லாதன் ஹ்ருதயத்தில் ப்ரவேசித்திருக்கின்றான்?] என முறையிடத்தொடங்கினான். தானே பரமேஸ்வரனென்று உரைத்தபடி பாரமைஸ்வர்யம் தன்னிடத்தில்லை யென்பதை அப்போதும் கண்டறிந்தானில்லை.

गजं वा वीक्ष्य सिंहं वा व्याघ्रं वापि वरानना ।
नाहारयति संत्रासं बाहू रामस्य संश्रिता ॥

[அழகிய முகத்துடன் கூடிய ஸீதையானவள் யானையைக் கண்டாலும், ஸிஹ்மத்தையாவது புலியையாவது கண்டாலும், பயங் கொண்டாளில்லை; ஏனெனில் ஸ்ரீராமனுடைய புஜங்களையவள் ஆஸ்ரயித்திருந்தனள்] என்கிறபடி கோவிந்தனிடம் இடைவிடாத பக்தியைச் செய்யும் ப்ரஹ்லாதனுக்கு அவன் பிதாவின் உக்திகளால் பயமொன்றும் ஜநிக்கிலது. ஆதலால்,

न केवलं मद्धृदयं स विष्णु-
राक्रम्य लोकानखिलानवस्थितः ।
स मां त्वदादींश्च पितस्समस्तान्
समस्तचेष्टासु करोति सर्वगः ॥

[அந்த விஷ்ணுவானவர் கேவலம் என் ஹ்ருதயம் மாத்ரமன்று, அகில லோகங்களையும் ஆக்ரமித்து நிற்கின்றார்; பிதாவே! எங்குமிருக்கும் அவர் என்னையும், உம்மைப் போன்ற யாவரையும், அவ்வவருடைய எல்லா வ்யாபாரங்களிலும் ப்ரவர்த்திப்பிக்கின்றார் என்று தத்வ ஸ்திதியைப் பிதாவினிடம் செப்பினான். பகவான் ப்ரவர்த்திப்பிக்கின்றான் என்றால், அவ்வவர் கர்மாநுகுணமாகச் செய்யும் க்ரியைகளுக்கு ததநுகுணமான பலப்ரதனாய் அவ்வவர் காரணகளேபரங்களை யதாஸ்திதியில் நிறுத்தி ஸஹகாரியாகின்றான் என்றர்த்தம். இதைக் கேட்டவுடன் ஹிரண்யகசிபு தன் முன் ப்ரஹ்லாதன் இருப்பதை ஸஹிக்கமுடியாமல்,

निष्क्राम्यतामयं दुष्टः शास्यतां च गुरोर्गृहे ।
योजितो दुर्मतिः केन विपक्षविषयस्तवे ॥



[இந்தத் துஷ்டன் வெளிப்படுத்தப்படட்டும்; குருவின் வீட்டில் ஸிக்ஷிக்கப்படட்டும்; யாராலோ இந்த மதிகெட்டவன் எதிரிகளுடைய பதியின் ஸ்தோத்ரத்தில் ஏவப்பட்டான்] என்றான். இதைக்கேட்டு அவர்கள் ப்ரஹ்லாதனை மறுபடியும் குருவீட்டிற்குக் கொண்டுபோய் விட்டார்கள். அங்கே சண்டாமர்க்கர் ப்ரஹ்லாதனை ஸ்தோத்ரம் செய்து மதுரமான வார்த்தைகளால், "குழந்தாய்! ப்ரஹ்லாத! உனக்கு மங்களம் உண்டாகட்டும், நிஜம் சொல், பொய் சொல்லாதே; உனக்குப் பாலர்களை அதிக்ரமித்து இந்த விபரீத புத்தியானது எப்படி யுண்டாயிற்று? அயலார் யாராவது உனக்குப் புத்தி பேதத்தைச் செய்வித்தார்களா? அல்லது ஸ்வயமே அது உனக்குள் ஜநித்ததா? நாங்கள் கேட்க விரும்புகின்றோம், சொல்" என்றுரைத்தார்கள். அதற்கு ப்ரஹ்லாதன்,

परः स्वश्चेत्यसद्ग्राहः पुंसां यन्मायया कृतः ।
विमोहितधियां दृष्टस्तस्मै भगवते नमः ॥
स यदान्यव्यतः पुंसां पश्यपश्चि विबुध्यते ।
कथ्यणथ तदात्र्याह इति हेतुमतासती ॥

स एष धाता स्वपरात्यपश्चिभिः
धारयन् कृत्स्नं निरुद्धयते ।
शास्त्रं यद्दृष्टि वेदवादिनो
ब्रह्मादयोऽस्य षडिन्द्रि देवतम् ॥

यया सृष्ट्यादयो ह्यस्य स्वयंकार्ये सहियया ।
तयाप्येष्ये तथैवतः सर्वाणि यदृच्छया ॥

[எந்த பகவானுடைய மாயையால், தான் அந்யன் என்னும் அஸத்தான அபிநிவேசமானது உண்டாகி, (உங்களை யொத்து மோஹத்தை யடைந்த புத்தியுடன் கூடிய அந்த மாயையால்) புருஷர்களிடம் காணப்படுகின்றதோ, அப்படிப்பட்ட பகவானின் பொருட்டு நமஸ்கரிக்கிறேன்; எல்லார்க்குள்ளும் அந்தராத்மாவாக அவனிருக்கையில் தேஹமே ஆத்மா என்னும் ப்ரமையினால், அவன் வேறு நான் வேறு என்னும் பேதத்தைக் கொண்டு

மனிதரிடம் உதிக்கின்ற துஷ்டமான அந்தப் பசுபுத்தியானது, அந்த பகவான் எப்போது ஆச்ரயிக்கப்படுகின்றானோ அப்போது விலக்கப்படுகின்றது; அந்யரால் அநுஸரிக்கக்கூடாத வ்யாபாரத்துடன் கூடிய அந்தப் பரமாத்மாவானவன், * ஜ்ஞாநமற்றவரால் தான் என்றும் பரன் என்றும் நிரூபிக்கப்படுகின்றான்; ப்ரஹ்மவாதிகளெனப் பெயர்பெற்ற நான்முகன் முதலானோரும் எந்தப் பரமாத்மாவின் ஸ்வரூப விமர்ஶநத்தில் மோஹத்தையடைகின்றனரோ, அவரே என் புத்தியைப் பேதப்படுத்துகின்றார்; ஓ ப்ராஹ்மணர்களே! அயஸ்காந்தத்தின் ஸமீபத்தில் அயமானது எப்படித்தானாகச் சலிக்கின்றதோ, அப்படியே சக்ரபாணியின் ஸந்நிதியில் என் ஹ்ருதயமும் தானாகப் பேதிக்கப்படுகின்றது, அதாவது, விகாஸத்தை யடைகின்றது] என்று இவ்விதம் அவர் ப்ரஶ்நத்தை யாதரித்து விடையளித்தான். ப்ராஹ்மணர்களும் அவனைப் பலவிதமாகப் பயமுறுத்தினார்கள். அவனைக் குலத்துக்குக் கொள்ளிக்கட்டை என்றும், அஸுரர்களாகிற சந்தநக் காட்டில் உண்டான முட்களுடன் கூடிய மரமென்றும் பலவிதமாகத் திட்டினார்கள். பிறகு த்ரிவர்க்க மெனப்படும் தர்மார்த்தகாம விஷயமான வித்யைகளை அவனுக்குக் கற்பித்தார்கள். குருக்களுக்குப் பணிவிடைகள் செய்துகொண்டு அவன் வித்யாக்ரஹணம் செய்துகொண்டிருந்தான். அதுவும் தன் பொருட்டல்ல; குருக்களுக்கு ஹிதத்தைச் செய்யவேண்டுமென்றே தான்.

பத்ராதிபர்.

(இன்னும் வரும்.)

---

* அதாவது, ஜீவாத்மாக்கள் கேவலம் ஜ்ஞாந ஸ்வரூபத்துடன் கூடினவர்கள், ஶரீராதி பேதங்களைவிட்டு பிந்நங்களான ஆகாரங்களுடையவர்கள், ஸ்வரூபத்தில் ஏகாகாரர்கள், ஸர்வ ஜீவர்களும் பரமாத்மாவின் ஶரீரபூதர்கள் என்கிற ஜ்ஞாநம் அற்றவரால்.

ஸ்ரீ:.

ஸ்ரீ ப்ரணதார்த்திஹர வரதகுரவே நம:.

# ஸந்த்யா வந்தந பாஷ்யம்.

## அவதாரிகை.

யதீந்த்ரக்ருதபாஷ்யார்த்தா யத்வ்யாக்யாநேந தர்ஶிதா: ।
வரம் வரதநாமார்யம் தம் வந்தே கடிகாஶதம் ॥

---

வரதகுரு சரணாப்ஜ ஸமாஶ்ரய ப்ரதித ஸம்ருத்த ஸம்பதாகதோஹம் । அஹமவாங்மநஸாகோசரம் ஹரே: சரண பத்ம யுக்மம் ஶரணம் வ்ரஜே ।

[வரதாசார்யர் என்கிற திருநாமத்தையுடைய நடாதூர் அம்மாள் திருவடித் தாமரைகளை ஆஶ்ரயித்து ப்ரஸித்தமாயும் பூர்ணமாயுமுள்ள அந்த ஆஶ்ரய ஸம்பத்தைப் பெற்ற நான் மனத்திற்கும் வாக்குக்கும் நிலமல்லாத பகவானுடைய உபயசரண பத்மங்களைச் சரணமாக அடைகிறேன்]

ஶ்ரீஶ்ரீஶயோஸ்ததாராத்யயோரஸ்து நமஸ்க்ருதி: ।
ஶ்ருதிஸ்ம்ருத்யுதிதம் கர்ம யதாராதந ஸம்ஶ்ரயம் ॥

[ஶ்ருதிகளிலும் ஸ்ம்ருதிகளிலும் சொல்லப்பட்ட கர்மாவானது எவர்களுடைய ஆராதநத்திற்காக ஏற்பட்டதோ அப்படிப்பட்ட ஶ்ரீ (பிராட்டி) ஶ்ரீஶர் (பகவான்) இவர்களைக் குறித்து இந்த நமஸ்காரம் ஆகக்கடவது]

வரதஶ்ரீந்ருஸிம்ஹார்யோபதேஶ ப்ரபோதிதாம் ।
ஸந்த்யாவந்தந மந்த்ராணாம் விதத்யே வ்ருத்திமுசிதாம் ।

[ஸந்த்யாவந்தந மந்த்ரங்களுக்கு ஶ்ரீ வரத நரஸிம்மாசார்யருடைய உபதேச பலத்தினால் ஏற்பட்ட பொருத்தமான வ்ருத்தியைச் செய்கிறேன்]

### பகவத் ஸ்வரூபம்.

தேவ, திர்யக், மநுஷ்ய, ஸ்தாவர ரூபங்களையுடைய ஜீவன்கள் பகவானால் நியமிக்கப்பட்டும், தரிக்கப்பட்டும் பகவானுக்குச் சேஷமாக இருக்கின்றன; ஆகையால் அவைகள் பகவானுக்கு விசேஷணங்கள் என்று வ்யவஹரிக்கப்படுகின்றன. பகவான்

அவைகளை நியமநஞ்செய்தும் தரித்தும் அவைகளுக்குச் சேஷியாக நிற்கின்றான்; ஆகையால் அவன் விசேஷ்யம் என்றும் சொல்லப்படுகிறான். உலகத்தில் சரீரத்தைச் சொல்லும் சப்தங்கள் எல்லாம் சரீரியளவும் அர்த்தமாகின்றனவாதலால், சரீரம் சரீரி இரண்டிற்கும் ஒற்றுமை ஏற்படுகின்றது. ஶ்ருதியைக்கொண்டே அறிந்துகொள்ளவேண்டிய பகவத் ஸ்வரூபத்தை இந்த விசேஷண விசேஷ்யபாவத்தால் ஜீவஸ்வரூபத்துடன் ஒன்றாக ஶ்ருதி சொல்லுகிறது என்று ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. இதனால் ஜீவாத்மாவும் பரமாத்மாவும் சரீரமாகவும் சரீரியாகவும் நிற்கின்ற நிலைமையினால் அவர்கள் ஒன்று என்பது ஸித்தாந்தம்.

𑌅𑌨𑍍𑌤𑌰𑍍𑌯𑌾𑌮𑌿 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣த்தில்,

"𑌯 𑌆𑌤𑍍𑌮𑌨𑌿 𑌤𑌿𑌷𑍍𑌠𑌨𑍍𑌨𑌾𑌤𑍍𑌮𑌨𑍋𑌽𑌨𑍍𑌤𑌰𑍋 𑌯𑌮𑌾𑌤𑍍𑌮𑌾 𑌨 𑌵𑍇𑌦 𑌯𑌸𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌾 𑌶𑌰𑍀𑌰𑌂 𑌯 𑌆𑌤𑍍𑌮𑌾𑌨𑌮𑌨𑍍𑌤𑌰𑍋 𑌯𑌮𑌯𑌤𑌿 𑌸 𑌤 𑌆𑌤𑍍𑌮𑌾𑌨𑍍𑌤𑌰𑍍𑌯𑌾𑌮𑍍𑌯𑌮𑍃𑌤𑌃"

[எவன் ஆத்மாவினிடத்தி லிருந்துகொண்டு ஆத்மாவிற்குள் மறைந்து நிற்கிறானோ, எவனை ஆத்மா தெரிந்துகொள்ளவில்லையோ, எவனுக்கு ஆத்மா சரீரமோ, எவன் ஆத்மாவை உள்ளிருந்து நியமிக்கிறானோ, அழிவில்லாத அவன் உனக்கும் அந்தர்யாமி.]

"𑌏𑌷 𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑌾𑌨𑍍𑌤𑌰𑌾𑌤𑍍𑌮𑌾𑌽𑌪𑌹𑌤𑌪𑌾𑌪𑍍𑌮𑌾 𑌦𑌿𑌵𑍍𑌯𑍋 𑌦𑍇𑌵 𑌏𑌕𑍋 𑌨𑌾𑌰𑌾𑌯𑌣𑌃"

[எல்லாப் பிராணிகளுக்கும் அந்தர்யாமியாகிற இவன் பரமபதத்தில் இருக்கிற நாராயணன் என்கிற ஒரு தேவதை]

"𑌅𑌸𑍍𑌮𑌿𑌞𑍍𑌶𑌰𑍀𑌰𑍇 𑌨𑌿𑌹𑌿𑌤𑍋 𑌗𑍁𑌹𑌾𑌯𑌾𑌮𑍍"

[இந்தச் சரீரத்திற்குள் ஸூக்ஷ்மமான இடத்தில் இருக்கிறான்]

"𑌅𑌜 𑌏𑌕𑍋 𑌨𑌿𑌤𑍍𑌯𑌃" [பிறப்பில்லாதவனாயும் நித்யனாயுமிருக்கிற ஒருவன்.]

"𑌯𑌸𑍍𑌯 𑌪𑍃𑌥𑌿𑌵𑍀 𑌶𑌰𑍀𑌰𑌂 𑌯𑌃 𑌪𑍃𑌥𑌿𑌵𑍀𑌮𑌨𑍍𑌤𑌰𑍇 𑌸𑌞𑍍𑌚𑌰𑌨𑍍 𑌯𑌂 𑌪𑍃𑌥𑌿𑌵𑍀 𑌨 𑌵𑍇𑌦"

[எவனுக்குப் ப்ருதிவீ சரீரமோ, எவன் ப்ருதிவியின் உள்ளே ஸஞ்சரித்துக் கொண்டிருக்கிறானோ, எவனை இந்த ப்ருதிவீ தெரிந்துகொள்ளவில்லையோ]

"𑌯𑌸𑍍𑌯𑌾𑌪𑌃 𑌶𑌰𑍀𑌰𑌮𑍍" [எவனுக்கு ஜலம் சரீரமோ]

என்றிவை முதலான வசநங்கள் பகவத் ஸ்வரூபத்தை அறிவிக்கின்றன. சரீரமாவது, எந்தவஸ்து ஒரு சேதநனுக்கு அவன்



கார்யத்தில் அவனால் நியமிக்கவும் தரிக்கவும் சக்யப்பட்டு அவனுக்கு சேஷமாய் இருப்பதையே ஸ்வபாவமாக உடையதோ அது அந்தச் சேதநனுக்குச் சரீரம் என்று சொல்லப்படுகிறது. கீழ் எடுக்கப்பட்ட உபநிஷத்தில் ப்ருதிவீ முதலாக எல்லா வஸ்துக்களும் பரப்ரஹ்மமாகிற நாராயணனுக்குச் சரீரம் என்றும், பகவனாகிய நாராயணன் எல்லாவற்றையும் சரீரமாக உடையவன், எல்லாவற்றிற்கும் ஆத்மா, எல்லாவற்றையும் வ்யாபித்து நிற்கின்றவன் என்றும் சொல்லியிருக்கிறது. உபநிஷதந்தரங்களும்,

"𑌅𑌨𑍍𑌤𑌃𑌪𑍍𑌰𑌵𑌿𑌷𑍍𑌟𑌃 𑌶𑌾𑌸𑍍𑌤𑌾 𑌜𑌨𑌾𑌨𑌾𑌂 𑌸𑌰𑍍𑌵𑌾𑌤𑍍𑌮𑌾"

[உள்ளே ப்ரவேசித்து ஜநங்களை நியமிக்கிறவன் எல்லாவற்றிற்கும் ஆத்மா]

"𑌪𑌤𑌿𑌂 𑌵𑌿𑌶𑍍𑌵𑌸𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑍇𑌶𑍍𑌵𑌰𑌂 𑌶𑌾𑌶𑍍𑌵𑌤𑌂 𑌶𑌿𑌵𑌮𑌚𑍍𑌯𑍁𑌤𑌮𑍍"

[உலகத்துக்கெல்லாம் யஜமாநனும், தனக்குத்தானே ஈஶ்வரனும், அழிவில்லாதவனும், சுபத்தைச் செய்கிறவனும், ஆஶ்ரயித்தவரைக் கைவிடாதவனுமானவனை]

"𑌅𑌨𑍍𑌤𑌰𑍍𑌬𑌹𑌿𑌶𑍍𑌚 𑌤𑌤𑍍𑌸𑌰𑍍𑌵𑌂 𑌵𑍍𑌯𑌾𑌪𑍍𑌯 𑌨𑌾𑌰𑌾𑌯𑌣𑌃 𑌸𑍍𑌥𑌿𑌤𑌃"

[அவை எல்லாவற்றையும் நாராயணன் உள்ளிலும் வெளியிலும் வ்யாபித்து நிற்கிறான்]

"𑌸 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾 𑌸 𑌶𑌿𑌵𑌸𑍍𑌸𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌃 𑌸𑍋𑌽𑌕𑍍𑌷𑌰𑌃 𑌪𑌰𑌮𑌸𑍍𑌸𑍍𑌵𑌰𑌾𑌟𑍍"

[அவனே ப்ரஹ்மா, அவனே சிவன், அவனே இந்த்ரன், அவனே அக்ஷரம், மேலானவனாகிய ஸ்வராட்]

என்று சொல்கின்றன. ஆகையால் எல்லா சப்தங்களினாலும் சொல்லத் தகுந்தவன் பகவான் என்றும், எல்லா சப்தங்களும் பரமாத்மாவாகிய பகவானையே சொல்லுகின்றன என்றும் ஸித்தாந்தம்.

## பகவத் த்யாநம்.

இப்படிப்பட்ட பகவானைப்பற்றிய த்யாநமே மோக்ஷமடைவதற்கு ஹேது. இதற்கு,

"𑌤𑌮𑍇𑌵𑌂 𑌵𑌿𑌦𑍍𑌵𑌾𑌨𑌮𑍃𑌤 𑌇𑌹 𑌭𑌵𑌤𑌿"

[அவனைத் தெரிந்து கொண்டவன் இந்த ஜந்மத்திலேயே மோக்ஷமடைந்தவனாகிறான்]

"𑌯𑍋 𑌵𑍇𑌦 𑌨𑌿𑌹𑌿𑌤𑌂 𑌗𑍁𑌹𑌾𑌯𑌾𑌂 𑌪𑌰𑌮𑍇 𑌵𑍍𑌯𑍋𑌮𑌨𑍍 𑌸𑍋𑌽𑌶𑍍𑌨𑍁𑌤𑍇 𑌸𑌰𑍍𑌵𑌾𑌨𑍍 𑌕𑌾𑌮𑌾𑌨𑍍 𑌸𑌹 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑌾 𑌵𑌿𑌪𑌶𑍍𑌚𑌿𑌤𑌾"

[ஸூக்ஷ்மமான விடத்தில் இருக்கிற ப்ரஹ்மத்தை எவன் அறிகிறானோ அவன் பரமபதத்தில் ஸர்வஜ்ஞனாகிய பரமாத்மாவுடன் அவனுடைய கல்யாணகுணங்கள் எல்லாவற்றையும் அநுபவிக்கிறான்]

என்றிவை முதலான ச்ருதிகள் ப்ரமாணம்.

இந்த உபாஸநம், அபித்யாநம் என்றும், மநநம் என்றும், அநுஸ்மரணம் என்றும், பஜநம் என்றும் சொல்லப்படுகிறது. ஸ்ம்ருதி இதிஹாஸ புராணங்களில் இவ்வர்த்தம் ப்ரஸித்தம். இது,

" ப்ரஶாஸிதாரம் ஸர்வேஷாம் அணீயாம்ஸமணீயஸாம், ருக்மாபம் ஸ்வப்நதீகம்யம் வித்யாத்தம் புருஷம் பரம் "

[எல்லாவற்றையும் நியமிக்கிறவனாகவும், ஸூக்ஷ்மமான வஸ்துக்கள் எல்லாவற்றிலும் மிகவும் ஸூக்ஷ்மமாயும், ஸுவர்ணம் போன்ற காந்தியையுடையவனாயும், ஸ்வப்நபுத்தியால் ஸாக்ஷாத்கரிக்கப்படக் கூடியவனாயும் பரமபுருஷனை அறியவேண்டும்]

" அநந்யாஶ்சிந்தயந்தோ மாம் யே ஜநா: பர்யுபாஸதே ।
தேஷாம் நித்யாபியுக்தாநாம் யோகக்ஷேமம் வஹாம்யஹம் "

[எந்த ஜநங்கள் வேறொருவரிடத்தில் பக்தியைச் செலுத்ாதவர்களாய் என்னையே உபாஸிக்கிறார்களோ, எப்பொழுதும் என்னையே த்யாநம் செய்து கொண்டிருக்கிறார்களோ அவர்களுடைய யோகக்ஷேமத்தை * நான் வஹிக்கிறேன்]

" த்யாயேந்நாராயணம் தேவம் ஸ்நாநாதிஷு ச கர்மஸு ।
ப்ரஹ்மலோகமவாப்நோதி ந சேஹ ஜாயதே புந: "

[ஸ்நாநம் முதலிய கார்யங்களில் நாராயணன் என்கிற தேவதையை த்யாநம் செய்யவேண்டும்; அப்படிச் செய்தவன் ப்ரஹ்மலோகத்தை அடைகிறான், மறுபடி இங்கே பிறப்பதில்லை]

" விசார்ய ச புராணார்த்தாந் ஸவேதாந் தந்நிரூபிதம் ।
விஷ்ணும் ஸதா ஹ்ருதி த்யாயேச்ச ஸம்ஸாரவிச்சித்தயே "

[வேதங்களோடு கூடிய புராணங்களின் அர்த்தங்களை விசாரணை செய்து ஸம்ஸாரத்தில் உண்டான பாபத்தைப் போக்குவதற்காகத் தன்னுள் இருக்கும் விஷ்ணுவை மனத்தில் எப்பொழுதும் த்யாநம் செய்யவேண்டியது]

* இங்கு யோகக்ஷேமமாவது மோக்ஷத்தைக் கொடுத்தலும், அதை அழிவில்லாமல் செய்கையும் என்று ஸ்ரீ பாஷ்யகாரர் அருளிச்செய்திருக்கிறார்.



" ஆலோட்ய ஸர்வஶாஸ்த்ராணி விசார்ய ச புந: புந: ।
இதமேகம் ஸுநிஷ்பந்நம் த்யேயோ நாராயண: ஸதா "

[சாஸ்த்ரங்களை யெல்லாம் கற்றறிந்து அடிக்கடி விசாரித்தால் நாராயணன் எப்பொழுதும் த்யாநம் செய்யத்தக்கவன் என்கிற இது ஒன்று தான் நன்றாய் ஏற்படுகிறது]

" யஸ்ய த்யாநவஶாதேவ ப்ரஹ்மஹத்யாதிதோஷஜம் ।
நாஶமேத்யாதகம் ஸத்ய: கிம் புந: கல்பிதேதரம் "

[எவனை த்யாநம் செய்துகொண்டிருக்கிற மனிதன் ப்ரஹ்மஹத்யாதி தோஷங்களாலுண்டான பாபத்தை அப்பொழுதே போக்கிக் கொள்ளுகிறானோ அவன் மற்றைப் பாபங்களைப் போக்கிக் கொள்வதைப்பற்றிக் கேட்கவும் வேண்டுமோ]

" ஹரிர்ஹரதி பாபாநி துஷ்டசித்தைரபி ஸ்ம்ருத: ।
அநிச்சயாபி ஸம்ஸ்ப்ருஷ்டோ தஹத்யேவ ஹி பாவக: "

[இச்சை யில்லாமலே தொடப்பட்ட நெருப்பு எப்படி கொளுத்துகிறதோ அதைப்போல ஹரியானவன் தோஷத்தோடுகூடிய மனத்தை யுடையவர்களாலும் ஸ்மரிக்கப்பட்டால் பாபங்களைப் போக்குகிறான்]

" ருசோ யஜூம்ஷி ஸாமாநி யோऽதீதே ஸக்ருத் த்விஜ: ।
ஸக்ருந்நாராயணம் ஸ்ம்ருத்வா ஸர்வம் தஸ்ய ஸமஶ்நுதே "

[எவன் ருக் யஜுர் ஸாம வேதங்களை அநேகம் தடவை ஓதுகிறானோ அவனுக்கு வரும் பலத்தை ஒரு தரம் நாராயணனை ஸ்மரிப்பதால் அடைகிறான்]

" பஜந்த்யநந்யமநஸோ ஜ்ஞாத்வா பூதாதிமவ்யயம் "

" யே பஜந்தி து மாம் பக்த்யா மயி தே தேஷு சாப்யஹம் "

[எவர்கள் என்னைப் பிராணிகளுக்கெல்லாம் காரணமாயும் அழிவில்லாதவனாகவும் அறிந்து வேறொரு இடத்திலும் மனத்தைச் செலுத்தாதவர்களாய் என்னைக்குறித்து பக்தி செய்கிறார்களோ அவர்கள் என்னிடத்தி லிருக்கிறார்கள்; நானும் அவர்களிடத்திலிருக்கிறேன்]

என்றும் இத்யாதி வசநங்களால் ஏற்படுகிறது.

## பகவான் ஸர்வதேவமயன்.

இந்த வசநங்களால் உபாஸிக்கத் தகுந்தவனாக ஏற்படுகிற பரமபுருஷன், பரதத்வம், பரப்ரஹ்மம், பரஞ்சோதி, பரமாத்மா, ஹரி, க்ருஷ்ணன், வாஸுதேவன் முதலிய சப்தங்களால் சொல்லப்படுகிற நாராயணனை அறிவதற்கு வேதம்தான் உபாயம் என்று மறு ஜ்ஞாபிக்கிறார்.

“ 𑌏𑌤𑌮𑍇𑌕𑍇 𑌵𑌦𑌨𑍍𑌤𑍍𑌯𑌗𑍍𑌨𑌿𑌂 𑌮𑌨𑍁𑌮𑌨𑍍𑌯𑍇 𑌪𑍍𑌰𑌜𑌾𑌪𑌤𑌿𑌮𑍍 ।
𑌇𑌨𑍍𑌦𑍍𑌰𑌮𑍇𑌕𑍇 𑌪𑌰𑍇 𑌪𑍍𑌰𑌾𑌣𑌮𑌪𑌰𑍇 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌶𑌾𑌶𑍍𑌵𑌤𑌮𑍍 ॥

[இந்த பகவானை வேதவாக்யங்கள் சில அக்நி யென்றும், சில மருத்துக்கள் என்றும், சில ப்ரஜாபதி யென்றும், சில ருத்ரன் என்றும், சில ப்ராணன் என்றும், சில அழிவில்லாத ப்ரஹ்மம் என்றும் சொல்லுகின்றன]

புராணாதிகளில் பராசர சௌநகாதி மஹர்ஷிகள் நாராயணனே ஸர்வதேவமயன் என்றும், எல்லாத் தேவதைகளுக்கும் அவனே அந்தர்யாமியாகையால் ஸர்வ சப்தங்களினாலும் அவனே சொல்லப் படுகின்றான் என்றும் பணித்திருக்கின்றார்கள்.

“ 𑌜𑍍𑌯𑍋𑌤𑍀𑌂𑌷𑌿 𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌰𑍍𑌭𑍁𑌵𑌨𑌾𑌨𑌿 𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌰𑍍𑌵𑌨𑌾𑌨𑌿 𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌰𑍍
𑌗𑌿𑌰𑌯𑍋 𑌦𑌿𑌶𑌶𑍍𑌚 । 𑌨𑌦𑍍𑌯𑌸𑍍𑌸𑌮𑍁𑌦𑍍𑌰𑌾𑌶𑍍𑌚 𑌸 𑌏𑌵 𑌸𑌰𑍍𑌵𑌂 𑌯𑌦𑌸𑍍𑌤𑌿 𑌯𑌨𑍍𑌨𑌾𑌸𑍍𑌤𑌿
𑌚 𑌵𑌿𑌪𑍍𑌰𑌵𑌰𑍍𑌯 ॥ ”

[தேஜஸ்ஸுக்கள் விஷ்ணு ; லோகங்களும் விஷ்ணு ; காடுகளும் விஷ்ணு ; மலைகள், திக்குகள், ஆறுகள், ஸமுத்ரங்கள் எல்லாம் அவனே ; ஓ ப்ராஹ்மண ஶ்ரேஷ்டரே ! எது இருக்கிறதோ, எது இல்லையோ எல்லாம் அவனே]

“ 𑌸𑌰𑍍𑌵𑌰𑌤𑍍𑌨𑌮𑌯𑍋 𑌮𑍇𑌰𑍁𑌃 𑌸𑌰𑍍𑌵𑌾𑌶𑍍𑌚𑌰𑍍𑌯𑌮𑌯𑌂 𑌨𑌭𑌃 । 𑌸𑌰𑍍𑌵-
𑌤𑍀𑌰𑍍𑌥𑌮𑌯𑍀 𑌗𑌙𑍍𑌗𑌾 𑌸𑌰𑍍𑌵𑌦𑍇𑌵𑌮𑌯𑍋 𑌹𑌰𑌿𑌃 । 𑌸𑌰𑍍𑌵𑌵𑍇𑌦𑌮𑌯𑍀 𑌗𑍀𑌤𑌾 𑌸𑌰𑍍𑌵-
𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌮𑌯𑍋 𑌮𑌨𑍁𑌃 ॥ ”

[மேரு பர்வதம் ஸர்வ ரத்நமயமானது ; ஆகாசம் ஸர்வ ஆச்சர்யமயமானது ; கங்கை ஸர்வ தீர்த்த மயமானது; விஷ்ணு ஸர்வதேவ மயமானவர்; ஸர்வவேத மயமானது கீதை ; ஸர்வசாஸ்த்ரமயமானது மநுதர்ம சாஸ்த்ரம்.]

## பகவானுடைய ஆராதநம்.

பகவத் ஸ்வரூபத்தை இப்படி அறிந்தவன் புத்தி, இந்த்ரியம், மனது, வாக்கு சரீரம் முதலியவைகளினால் பகவானுடைய ஆராதநத்தைச் செய்யவேண்டியவன்.

“ 𑌤𑌸𑍍𑌮𑌾𑌦𑌨𑌨𑍍𑌯𑌮𑌾𑌨𑌸𑌂 𑌦𑍇𑌵𑌦𑍇𑌵𑌂 𑌜𑌨𑌾𑌰𑍍𑌦𑌨𑌮𑍍 ।
𑌆𑌰𑌾𑌧𑌯 𑌹𑍃𑌷𑍀𑌕𑍇𑌶𑌂 𑌮𑌨𑍋𑌵𑌾𑌕𑍍𑌕𑌾𑌯𑌕𑌰𑍍𑌮𑌭𑌿𑌃 ॥ ”

[ஆகையால் வேறொரு இடத்திலும் மனத்தைச் செலுத்தாத நீ தேவதைகளுக்கெல்லாம் தேவதையாகிய பகவானை மநம், வாக்கு, காயம் இவைகளின் வ்யாபாரங்களால் ஆராதநஞ்செய்]

“ 𑌸𑌾 𑌜𑌿𑌹𑍍𑌵𑌾 𑌯𑌾 𑌹𑌰𑌿𑌂 𑌸𑍍𑌤𑍌𑌤𑌿 𑌤𑌚𑍍𑌚𑌿𑌤𑍍𑌤𑌂 𑌯𑌤𑍍𑌤𑌦𑌰𑍍𑌪𑌿𑌤𑌮𑍍 ।
𑌤𑌾𑌵𑍇𑌵 𑌕𑍇𑌵𑌲𑍌 𑌶𑍍𑌲𑌾𑌘𑍍𑌯𑍌 𑌯𑍌 𑌤𑌤𑍍𑌪𑍂𑌜𑌨𑌤𑌤𑍍𑌪𑌰𑍌 ” ॥



[எந்த நாக்கு பகவானை ஸ்தோத்ரம் செய்கிறதோ அது தான் நாக்கு ; எந்த மநஸ்ஸு பகவானிடத்தில் செலுத்தப்பட்டதோ அது தான் மநஸ்ஸு ; எந்தக் கைகள் பகவானுடையப் பூஜையைச் செய்கின்றனவோ அந்தக் கைகள் தான் கொண்டாடத்தக்கவைகள்.]

மேலும்,

“ 𑌶𑍍𑌰𑍁𑌤𑌿𑌸𑍍𑌮𑍃𑌤𑍍𑌯𑍁𑌦𑌿𑌤𑌂 𑌸𑌮𑍍𑌯𑌙𑍍𑌨𑌿𑌤𑍍𑌯𑌮𑌾𑌚𑌾𑌰𑌮𑌾𑌚𑌰𑍇𑌤𑍍 ।
𑌆𑌚𑌾𑌰𑌪𑍍𑌰𑌭𑌵𑍋 𑌧𑌰𑍍𑌮𑍋 𑌧𑌰𑍍𑌮𑌸𑍍𑌯 𑌪𑍍𑌰𑌭𑍁𑌰𑌚𑍍𑌯𑍁𑌤𑌃 ॥ ”

[ஶ்ருதி ஸ்ம்ருதிகளில் சொல்லப்பட்ட நித்ய கர்மங்களை நன்றாய்ச் செய்ய வேண்டும் ; ஆசாரத்தைக் காரணமாக உடையது தர்மம் ; தர்மத்திற்கு யஜமாநன் பகவான்]

“ 𑌅𑌹𑌂 𑌹𑌿 𑌸𑌰𑍍𑌵𑌯𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌂 𑌭𑍋𑌕𑍍𑌤𑌾 𑌚 𑌪𑍍𑌰𑌭𑍁𑌰𑍇𑌵 𑌚 । ”

[நானே எல்லா யாகங்களையும் அநுபவிக்கிறவனும், யஜமாநனும்]

என்று இவை முதலான ரிஷிஶ்ரேஷ்டரான வ்யாஸருடைய வசநங்களினால் ஆசார ஸாத்யமாகிற தர்மத்திற்கு ப்ரபுவான பகவானுடைய ஆராதநமாவது மூன்று வர்ணத்தாருக்கும் ஶ்ருதிகளிலும் ஸ்ம்ருதிகளிலும் சொல்லப்பட்ட தங்கள் தங்கள் வர்ணாஶ்ரம தர்மங்களாகிற நித்யம் நைமித்திகம் முதலான கர்மங்களை அநுஷ்டிப்பது தான்.

இப்படியே ஸ்ரீ பகவத்கீதையிலும்,

“ 𑌸𑍍𑌵𑌕𑌰𑍍𑌮𑌣𑌾 𑌤𑌮𑌭𑍍𑌯𑌰𑍍𑌚𑍍𑌯 𑌸𑌿𑌦𑍍𑌧𑌿𑌂 𑌵𑌿𑌨𑍍𑌦𑌤𑌿 𑌮𑌾𑌨𑌵𑌃 ”

[தன்னுடைய ஸ்வதர்மாநுஷ்டாநத்தினால் பகவானை ஆராதித்து மனிதன் ஸித்தியை அடைகிறான்.]

“ 𑌕𑌰𑍍𑌮𑌣𑍈𑌵 𑌹𑌿 𑌸𑌂𑌸𑌿𑌦𑍍𑌧𑌿𑌮𑌾𑌸𑍍𑌥𑌿𑌤𑌾 𑌜𑌨𑌕𑌾𑌦𑌯𑌃 ”

[ஜநகர் முதலியவர்களும் கர்மத்தினாலேயே ஸித்தியை அடைந்தார்கள் அல்லவோ]

என்றும், ஸ்ரீ விஷ்ணு புராணத்திலும்,

“ 𑌵𑌰𑍍𑌣𑌾𑌶𑍍𑌰𑌮𑌾𑌚𑌾𑌰𑌵𑌤𑌾 𑌪𑍁𑌰𑍁𑌷𑍇𑌣 𑌪𑌰𑌃 𑌪𑍁𑌮𑌾𑌨𑍍 ।
𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌰𑌾𑌰𑌾𑌧𑍍𑌯𑌤𑍇 𑌪𑌨𑍍𑌥𑌾 𑌨𑌾𑌨𑍍𑌯𑌸𑍍𑌤𑌤𑍍𑌤𑍋𑌷𑌕𑌾𑌰𑌕𑌃 ॥

[வர்ணாச்ரமங்களுக்குத் தகுந்த ஆசாரத்தையுடைய புருஷனால் பரம புருஷனாகிய விஷ்ணு ஆராதிக்கப்படுகிறார் ; அவனுக்கு ஸந்தோஷத்தைக் கொடுக்கக் கூடிய வழி வேறு இல்லை]

“ 𑌵𑌾𑌸𑍁𑌦𑍇𑌵𑍇 𑌮𑌨𑍋 𑌯𑌸𑍍𑌯 𑌜𑌪𑌹𑍋𑌮𑌾𑌰𑍍𑌚𑌨𑌾𑌦𑌿𑌷𑍁 ।
𑌤𑌸𑍍𑌯𑌾𑌨𑍍𑌤𑌰𑌾𑌯𑍋 𑌮𑍈𑌤𑍍𑌰𑍇𑌯 𑌦𑍇𑌵𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌤𑍍𑌵𑌾𑌦𑌿𑌕𑌂 𑌫𑌲𑌮𑍍 ॥

[எவனுக்கு ஜபம், ஹோமம், அர்ச்சனை முதலிய கார்யங்களில் பகவானிடத்திலேயே மனது இருக்கிறதோ அவனுக்கு, ஓ மைத்ரேயனே ! தேவேந்த்ரத்வம் முதலிய ப்ரயோஜநங்கள் விக்நங்கள்]
என்றும் சொல்லப்பட்டிருக்கின்றது.

## வைஷ்ணவ தர்மம்.

அன்றியும், ஸ்ரீ வைஷ்ணவ லக்ஷணம், ஶ்ருதிகளிலும், ஸ்ம்ருதிகளிலும் சொல்லிய தர்மாநுஷ்டாநம்தான். இது,

" [illegible] ।
[illegible] "

[எந்த மனிதர்கள் ஶ்ருதி ஸ்ம்ருதிகளில் சொல்லப்பட்ட கர்மத்தை மனத்தினாலாவது உல்லங்கநம் செய்து நடக்கிறார்களோ, ஓ லக்ஷ்மீ! அவர்கள் எனக்கு பக்தர்கள் அல்ல]

" [illegible] ।
[illegible] "

[எந்த மனிதர்கள் ஜகத்தை ஸ்ருஷ்டித்தவனாகிய பகவானுடைய திவ்யமான ஆஜ்ஞையைச் செய்கிறவர்கள் நாம் என்று நினைத்துக்கொண்டு நித்யகர்மங்களைச் செய்கிறார்களோ அவர்கள் வைஷ்ணவர்கள்.]

" [illegible] ।
[illegible] "

[விஷ்ணுவினிடத்தில் பக்தியோடு கூடியவர்களாகவும், ஶ்ருதி ஸ்ம்ருதிகளில் சொல்லிய கர்மங்களைச் செய்பவர்களாகவு மிருக்கிறவர்களைப் பார்த்து எவன் ப்ரீதி உள்ளவனாகிறானோ அவன் வைஷ்ணவன் என்று சொல்லப்படுகிறான்.]

" [illegible] । [illegible] "

[எவன் தன் ஜாதிக்குத் தகுந்த கர்மங்களைவிட்டுச் சலிக்கவில்லையோ, ஸ்நேஹிதன் ஶத்ரு இவர்களிடத்தில் ஸமமான புத்தியை உடையவனோ, அயலாருடைய பொருளை அபஹரிக்கிறதில்லையோ, அயலாரைப் பீடிக்கிறதில்லையோ உறுதியான மனத்தையுடைய அவனை விஷ்ணு பக்தனாக அறி]
என்று இவை முதலான வசநங்களால் ஏற்படுகிறது.

## ஸந்த்யாவந்தநம் அவஶ்யம் கர்த்தவ்யம்.

ஆகையால் எல்லா தர்மங்களுக்காக பகவதாராதநத்திற்கு முக்ய ஸாதநமான ஸந்த்யாவந்தந கர்மாவானது ஸர்வதா கர்த்தவ்யம். இது,



" [illegible] ।
[illegible] "

[ஸந்த்யா வந்தநம் செய்யாதவன் எப்பொழுதும் அசுத்தமானவன் ; ஒரு கர்மத்திற்கும் தகாதவன் ; அவன் வேறு எந்த கர்மத்தைச் செய்கிறானோ அதனுடைய பலத்தை யடையமாட்டான்.]

" [illegible] ।
[illegible] "

[எவன் காலை ஸந்த்யா வந்தநத்தையும் மாலை ஸந்த்யா வந்தநத்தையும் செய்யவில்லையோ அவன் சூத்ரனைப்போல ப்ராஹ்மணர்களுடைய கார்யங்கள் எல்லாவற்றிலு மிருந்து நீக்கத்தக்கவன்.]

" [illegible] । "

[அவஶ்யம் செய்யவேண்டிய கர்மத்தை விடுவது யுக்தமல்ல.]
முதலிய அநேக வசநங்களால் ஸ்பஷ்டம்.

## மந்த்ரங்களின் அர்த்தஜ்ஞாநம்.

இப்படி ஸந்த்யா வந்தநம் அவஶ்யம் அநுஷ்டிக்கப்பட வேண்டும் என்று ஏற்படுவதோடு,

" [illegible]
[illegible] "

[வேதமானது அறியப்பட்டிருந்தபோதிலும் அதன் அர்த்தம் அறியப்படாமல் போனால் கழுதைக்குச் சந்தனக்கட்டையின் சுமையைப் போல கேவலம் ஶ்ரமத்தைக் கொடுக்கிறதாகிறது]
என்கிற நிருக்திகாருடைய வசநத்தினால் அர்த்த ஜ்ஞாநம் இல்லாவிட்டால் ப்ரயோஜநமில்லை என்கையாலும்,

" [illegible] "

[எவன் இந்த ஹவிஸ்ஸைக்கொண்டு யாகம் செய்கிறானோ, எவன் இப்படித் தெரிந்துகொள்கிறானோ]

என்று அநுஷ்டாநத்திற்கும், அர்த்த ஜ்ஞாநத்திற்கும் துல்ய பலம் என்று ஶ்ருதி சொல்வதினாலும், எவ்விதத்திலும் மந்த்ரங்களுடைய அர்த்தத்தைத் தெரிந்துகொள்வது அவஶ்யம் என்று ஏற்படுகிறது.

மேலும், மந்த்ரமாவது அநுஷ்டேயார்த்த ப்ரகாசகம், அநுஷ்டிக்கப்படும் விஷயத்தை ப்ரகாசப்படுத்துவது ; அன்றிக்கே, மநநஸாதநம், த்யாநத்திற்கு ஸாதநமாக இருப்பது மாகவுமாம்,

த்யாநமாவது அறியப்பட்ட பதார்த்தத்தின் ஸ்ம்ருதி (நினைவு), அநுஷ்டேயார்த்த ப்ரகாசகம், மநநம் ஆகிய இவ்விரண்டும் மந்த்ரங்களின் அர்த்தங்களைத் தெரிந்து கொள்ளாத புருஷனுக்கு ஸம்பவிக்காது. மந்த்ரங்கள் பொதுவாய் த்யாந ஸாதநமாக இருந்தாலும்,

“ [illegible] ”

என்கிறபடி, பகவத் த்யாந ஸாதநம் என்று தான் அர்த்தம். பங்கஜம் என்னும் சப்தம் சேற்றில் உண்டாகிற பாசி முதலானவைகளுக்கும் அர்த்தமாகக்கூடியதா யிருந்தாலும் எப்படி தாமரை பூவிற்கு மாத்ரம் ரூடியாய்ச் சொல்லப்படுகிறதோ அப்படியே எல்லா மந்த்ரங்களும் பகவானிடத்தில் உபயோகப்படுகின்றன.

## ருஷி, சந்தஸ்ஸு, தேவதை.

இப்படி மந்த்ரங்களுக்கு அர்த்தங்களை அறியவேண்டியது அவஸ்யம் என்றாகிறது. ஆனல் சில மந்த்ரங்களின் அர்த்தம் சீக்ரம் ஏற்படுகிறதில்லை யாதலால் அவைகள் வ்யாக்யாநத்தை அபேக்ஷிக்கின்றன. மந்த்ரங்களின் அர்த்தத்தைப்போலவே ருஷி, சந்தஸ்ஸு, தேவதை இவைகளையும் அறியவேண்டும் என்று ஸ்ருதிஸ்ம்ருதிகள் சொல்கின்றன.

“ [illegible] ”

[எவன் ருஷி, சந்தஸ், தேவதை, ப்ரயோகம், இவைகளைத் தெரிந்துகொள்ளாமல் மந்த்ரத்தைக் கொண்டு யாகம் செய்கிருனே, யாகம் செய்விக்கிருனே, அத்யயநம் செய்விக்கிருனே அவன் பட்டுப்போன மரமாகிருன்; பள்ளத்தில் விழுகிருன்; மரணத்தையாவது அடைகிருன்; பாபியாகிருன்; இவனுடைய மந்த்ரங்கள் வீர்யமற்றவைகளாகின்றன.]

“ [illegible] ”

[ருஷியையும், சந்தஸ்ஸையும், தேவதையையும், ப்ரயோகத்தையும் தெரிந்து கொள்ளாமல் எவன் அத்யயநம் செய்விக்கிருனே அவன் பாபியாகிருன்]

ருஷி, சந்தஸ்ஸு, தேவதை இவைகளைத் தெரிந்துகொள்வதினல் க்ஷேமம் உண்டாகிறது என்றும் சொல்லபட்டிருக்கிறது.

“ [illegible] ”



[எவன் இவைகளை மந்த்ரங்கள்தோறும் தெரிந்துகொள்கின்றனே அவன் எல்லா ஆயுளையும் அடைகிருன், அவன் மேலானவனுகிருன்; அவனுடைய மந்த்ரங்கள் வீர்யமுள்ளவைகளாகின்றன]

“ [illegible] ”

[ஓ கார்க்ய முனிவனே! எவன் மந்த்ரத்தின் ருஷியையும், சந்தஸ்ஸையும், தேவதையையும் த்யாநம் செய்துகொண்டு எப்பொழுதும் மந்த்ரத்தை ஜபிக்கிருனே அவன் அதில் பூர்ணமான பலத்தை அடைவான்]

“ [illegible] ” மந்த்ரத்தை ஸாக்ஷாத் கரித்தவரே ருஷி எனப்படுவார். சௌநக ஸ்ம்ருதியில் சொல்லியிருக்கிறபடி,

“ [illegible] ”

[எந்த மந்த்ரம் எவருடைய வார்த்தையோ அவர் அதற்கு ருஷி]

மந்த்ரம் எதில் மறைத்து வைக்கப்பட்டிருக்கிறதோ அது சந்தஸ்ஸு. ஸ்ருதி சொல்கிறபடி,

“ [illegible] ”

[தங்களை சந்தஸ்ஸுக்களினுல் மறைத்துக்கொண்டு வந்தன; ஆகையினுல் சந்தஸ்ஸு என்று பெயர் உண்டாயிற்று]

மந்த்ரத்தினுல் சொல்லப்படுவது தேவதை. சௌநகர் வசநப்படி,

“ [illegible] ”

[எந்த அர்த்தம் சொல்லப்படுகிறதோ அது தேவதை]

## மந்த்ரங்கள் இருவகை.

மந்த்ரங்கள் இரண்டு விதம். ஸாக்ஷாத் பகவத் ப்ரதிபாதகங்கள், அதாவது, நேராக பகவானைச் சொல்லுகின்றவை என்றும், கொஞ் சம் வ்யவதாநத்தால் பகவத் ப்ரதிபாதகங்கள், அதாவது சிலவற்றை முன்னிட்டு பகவானைச் சொல்லுகின்றவை, என்றும் இருவகை. விஷ்ணுஸூக்தம், புருஷஸூக்தம் முதலியவைகளில் அந்தர்கதமான மந்த்ரங்கள் ஸாக்ஷாத் பகவத் ப்ரதிபாதகங்கள். ஸௌம்யம், ஆக்நேயம் முதலிய ஸூக்தங்களில் இருக்கும் மந்த்ரங்கள் பகவானுக்கு விபூதியாகிய அந்தந்த தேவதைகளைச் சொல்லி அவர்களின் வழியாய் அவர்களுக்கு அந்தர்யாமியாகிய பகவானை ப்ரதிபாதிக்கின்றன.

சேட்லூர் நரஸிம்ஹாசார்யர்.

# கடிதங்கள்.

(1.)

## ஸ்ரீ ஆதிவண் சடகோபஸ்வாமி ப்ருந்தாவநம்.

ஸ்ரீ வேதாந்ததீபிகை பத்ராதிபருக்கு :—

மைஸூர் ஸமஸ்தானத்தில் ஸ்ரீ அஹோபிலம் ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்மன் ஸந்நிதிக்கு வருஷவாரியில் சுமார் ரூ. 6000 வரும்படியுள்ள நரஸிம்மபுரம் தாலூகா பிலஹரஹல்லி முதலான கிராமங்களிருக்கின்றன.

ப்ராக்ருதம் சிதிலமாயிருந்த ஸ்ரீ ஆதிவண் சடகோபஸ்வாமி ப்ருந்தாவநமும், அதற்குத் தெற்கேயிருக்கும் மண்டபமும், மேற்கேயிருக்கும் நடபாவியும் இப்பொழுது ஸ்ரீ ஸபையாருடைய ப்ரயத்னத்தாலும், ஸ்ரீ அழகிய சிங்கருடைய நியமனத்தாலும் ஜீர்ணோத்தாரணஞ் செய்யப்பட்டு ஸ்ரீ ஸம்பத்குமாருடைய உத்ஸவாதிகளுக்கு வெகு ரமணீயமாயிருக்கின்றன. தவிரவும், ஸ்ரீ கல்யாணீதீரத்தில் ஸர்வோத்தமமான ஸ்ரீ அஹோபில மடமும் புதிப்பிக்கப்பட்டு சேர்த்தியாயிருக்கிறது.

ஆனால் இப்படிப்பட்ட ஸந்நிவேசத்தில் ப்ருந்தாவநத்தில் ப்ரதிஷ்டிதமான ஸ்ரீ ஆதிவண் சடகோபஸ்வாமி விக்ரஹமும், ஸ்ரீ மடத்தில் ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹன் திவ்யமங்கள விக்ரஹமும் இல்லாததும், டி இரண்டு ஸ்தலங்களிலும் யாதொரு ஆராதநமுமில்லாமையால் வந்த ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கு பகவத் தீர்த்த ப்ரஸாதாதி ஸ்வீகாராதிகளுக்கு அவகாசமில்லாததும் மிகவும் சோசிக்கத்தக்கது.

மைஸூரிலும், ஸ்ரீ பரகாலஸ்வாமி மடத்திற்கு எதிராக இருக்கும் ஸ்ரீ அஹோபில மடமும் மிகவும் ஜீர்ணமாயும் ஓடு வைகரா கூட இல்லாமல் ஒழுகிக்கொண்டும் ஸாமாந்ய சிறிய க்ருஹம் போலிருக்கிறது. இது மிகவும் ஹேளனாஸ்பதம். ஸ்ரீஸ்வாமி இதை கவனித்துச் சீக்கிரத்தில் நல்லதாக ஓர் மடத்தை ஸ்தாபிக்க வேண்டியது அவச்யம்.

திருநாராயணபுரவாஸி,
வித்வான் நீலாதம்பள்ளி
நரஸிம்மசாஸ்த்ரு.

திருநாராயணபுரம்
9—6—14.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
10 SEP 1914
MADRAS.

ஸ்ரீ:.

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:.

# வேதாந்த தீபிகை

பத்ராதிபர் :—திவான் பகதூர் டி. டி. ரங்காசாரியர், பி.ஏ., பி.எல்.

ஸம்புடம் 4.] ஆநந்த வருஷ ஆடிமீ [ஸஞ்சிகை 6.

## பத்ராதிபரின் குறிப்புகள்.

த்ரிபுவநகமநம் தமாலவர்ணம் ரவிகரகௌரவராம்பரம் ததாநே ।
வபுரலககுலாவ்ருதாநநாப்ஜம் விஜயஸகே ரதிரஸ்து மேऽநவத்யா ॥ [ஸ்ரீ பாகவதம் 1-9-33.]

**ஸீதாநாதருடைய கீதா உபந்யாஸ விமர்சை.**

ஸீதாநாத தத்வபூஷணர் என்னும் ஒரு வங்காள தேசத்தினர் விசேஷ ஜ்ஞாந ஸம்பந்நர். நாம் அவரைப்பற்றிக் கேள்வியுற்றவரையிலும், அவர் ப்ரஹ்ம ஸமாஜம் என்று வழங்கும் ஒரு நவீந ஏற்பாட்டில் சேர்ந்தவராகவிருக்கின்றார். ஆதலால் நமது வேத வேதாந்த இதிஹாஸ புராணாதிகளில் அவர் ப்ராமாண்ய பாவத்தைக் கொண்டாடவில்லை. பிட்டாபுரம் மஹாராஜா அவர்களும் இவற்றில் ப்ராமாண்ய பாவத்தை விலக்கினவர்களாக ஸந்தேஹிக்கவேண்டியிருக்கிறது. ஏனென்றால், க்ருஷ்ணனைப் பற்றியும் கீதையைப் பற்றியும், ஸீதாநாதரைக்கொண்டு உபந்யாஸங்கள் செய்வித்து அவற்றைப் புஸ்தக ரூபமாய் அவர் வெளிப்படுத்தி இருக்கின்றார். இந்த உபந்யாஸங்களுடைய ஸங்க்ரஹத்தை ஸீதாநாதர் ஸ்வயமே செய்து, அது இந்த ஜூன் மாதத்திய 'மாடர்ன் ரிவ்யூ' எனும்

பத்ரிகையில் அச்சிடப்பட்டிருக்கிறது. அதை விமர்ஶித்தவரான மஹேச சந்த்ரகோஸ் என்பவரும், ப்ரஹ்மஸமாஜத்தினரே.

ஸீதாநாதர் அபிப்ராயங்களை நாம் ஒப்புக்கொள்ளவாவது நன்குமதிக்கவாவது ஹேதுவில்லை. நம் மதத்திற்குப் பாஹ்யரானவர் நம்மதத்தைப்பற்றி அநுகூலோக்திகளைச் சொல்வாரென எவ்விதம் நாம் எண்ணக்கூடும்? பாரத யுத்தம் முப்பத்தொன்றாவது அல்லது முப்பத்திரண்டாவது நூற்றாண்டின் முன்னர் நடந்ததென்றும், பாரதம் என்னும் க்ரந்தம் ப்ரதமத்தில் இருபத்துநாலு நூற்றாண்டுகளுக்கு முன் ஏற்பட்டதென்றும், அது நாலுதரம் எழுதப்பட்டு முடிவில் பதினாறு நூற்றாண்டுகளுக்கு முன்னர் எழுதப்பட்டதென்றும் அவர் சொல்கிறார்; யுத்த காலத்தில் கீதை பிறந்திராதாம்; அது கிறிஸ்துவின் ஜநநத்துக்கு அடுத்த முன்னோ பின்னோ எழுதப்பட்ட க்ரந்தமாம்; பாரதம் முதலில் எழுதப்பட்டபோது கிருஷ்ணன் பெயரும் பாண்டவர் பெயரும் அதில் இருந்திருப்பது ஸந்தேஹமென்றும், அப்படி அவர் நாமங்கள் முதலெழுதப்பட்ட பாரதத்தில் கண்டிருந்தபோதிலும், இரண்டாம் முறை அந்த க்ரந்தம் எழுதப்பட்ட காலத்தில் அவர் சரித்திரங்களும் குணங்களும் மிக்க மாறுதல் அடைந்திருக்க வேண்டுமென்றும் சொல்லுகிறார்; இந்த அபிப்ராயங்களுக்கு ஹாப்கின்ஸ் துரையும் ரோமேஶ சந்த்ர தத்தரும் ப்ரமாணம் ஆகின்றனராம்; மேலும், பாண்டவர் கவிகளால் ஸ்மரிக்கப்பட்ட மித்யாபுருஷரென்றும், ருக்வேதத்தில் குறிக்கப்பட்ட அநார்ய ராஜனாகிய க்ருஷ்ணன் என்னும் பெயருடையவனையும், சாந்தோக்யோபநிஷத்தில் சொல்லப்பட்ட கோர ஆங்கிரஸரின் ஸம்பந்தமுடைய தேவகீ புத்ரனாகிய க்ருஷ்ணன் என்பவனையும் கலந்து, புத்தருக்கு எதிர்தட்டாக வைஷ்ணவர்கள் ஸ்ரீ க்ருஷ்ணன் என்கிற ஒரு தேவனை உண்டாக்கி விட்டார்கள் என்கிறார்; தர்மஶாஸ்த்ர காலத்துக்கு முந்திய யாதொரு க்ரந்தத்திலும் அவதாரம் செய்த தேவனைப்பற்றிச் சொல்லப்படவில்லையாம்; இப்படி முதல் உபந்யாஸத்தில் சொல்லி, க்ருஷ்ணனுடைய சரிதையானது மஹாபாரதம், ஹரிவம்சம், விஷ்ணு புராணம், பாகவதம், இவற்றின் ப்ரகாரம் ஸ்தோத்ராநர்ஹமாயிருக்கிறதென்று இரண்டாம் உபந்யாஸத்தில் ஸீதாநாதர் சொல்லியிருக்கின்றார்.



இதர பத்து உபந்யாஸங்கள் கீதாஶாஸ்த்ர விஷயசோதனைக்கு உபயோகமாயின. அந்த விஷயங்களை ஸீதாநாதர் தம் இஷ்டப்படி விபஜித்து, கீதா க்ரந்தம் எழுதினவரால் அவையெல்லாம் ஸாமர்த்யத்துடனும் தமக்கு த்ருப்திகரமாகவும் ஸமர்த்திக்கப்பட்டிருக்கிறதாகவும் அபிப்ராயப்படுகிறார். இப்படி ஸீதாநாதர் முடித்ததற்குக் காரணம், அவரெழுதியபடி வக்தாவின் ஸாமர்த்யப்ரயுக்தமன்று; விஷய வைலக்ஷண்யம் அவரையும் மடக்கிவிட்டதாக எண்ணவேண்டியிருக்கிறது. இந்த அல்ப உபகாரமும் நமக்குப் பயன் தராது. ஏனென்றால், யாரோ ஒரு தெரியாத மனிதன் விஷய விசாரம் நன்றாகப் பண்ணியிருக்கின்றானென்பதால், அந்த விசாரம் புருஷார்த்த ஸாதநத்துக்கு எவ்விதம் பயன்படும்? மதவிஷயங்களில் ஹிதம் சொல்லுவோரிடம் விஶ்வாஸமின்றேல், அவர் சொல்லும் ஹிதம் ப்ராயேண பயன்படாது. கீதை வியக்கத்தக்க க்ரந்தமானாலும் ஸீதாநாதர் இஷ்டப்பட்டபடி அதை எழுதினவன் தன்னைக் காட்டாமல் போனானே! அவன் இரண்டாயிரம் வருஷங்களுக்குள் தான் அதை எழுதினான், அது சரித்ரமுள்ள காலம்தான் என்றாலும், தன்னை இன்னாரென்று காட்டாமல் போய்விட்டானே! அதை யார் முதலில் கண்டெடுத்தாரோ? எவ்விதம் அதன் குணங்களை யறிந்தாரோ? கர்த்தா இன்னாரென்று தெரிந்துகொள்ளாமல் எவ்விதம் பரம புருஷார்த்தத்தை அடைய அதன் உபதேசப்படி பலர் நடக்க இசைந்தார்களோ? ஹிமாசலம் முதல் ஸேதுபர்யந்தம் பண்டிதர் நிறைந்த மஹாதேசத்தில் இப்படித் தாய் தந்தை தெரியாமலுண்டான க்ரந்தத்தை, எலலாரும் ஸம்மதிக்கும்படி யார் மஹாபாரதத்தில் நுழைத்துவிட்டனரோ? இந்த யோசனைகளை ஸீதாநாதர் ஆதரிக்கின்றாரில்லை. ஹாப்கின்ஸ் துரையும் தத்தரும் யோசித்தவழியே அவர் யோசித்து விட்டார். அதற்கு உபபலமாக மற்ற யோசனைகள் அவர்க்குப் பிறந்திருக்கவேணும்.

* * * * * *

முண்டகோபநிஷத்தில் நாலு வேதங்கள், இதிஹாஸ புராணங்கள், வித்யைகள், உபநிஷத் ஶ்லோகங்கள், ஸூத்ரங்கள், வ்யாக்யாநங்கள், அநுவ்யாக்யாநங்கள் இவைகள் இருந்தனவாகச் சொல்லியிருக்கிறது. சாந்தோக்யோபநிஷத்திலும், நாலுவேதங்கள், பஞ்சம வேதமெனும் இதிஹாஸ புராணங்கள், அநேக வித்யைகள்,

ஶாஸ்த்ரங்கள் இவற்றைப்பற்றி வசநமிருக்கின்றது. இதனால் இதிஹாஸபுராணங்கள் வேதங்களோடு ஸமகாலத்தில் இருந்தனவாக நிச்சயிக்கவேண்டும். உபநிஷத் பாகங்களில், ததேஷா(அ)ப்யுக்தா, ததேதத்ருசா(அ)ப்யுக்தம், ததேஷ ஶ்லோகோ பவதி, ததேதே ஶ்லோகா பவந்தி, என்று பஹுவசநங்களும் ஶ்லோகங்களும் அநுவதிக்கப்பட்டுள. அவை யாவும், உபநிஷத் காலத்தின் முன் எவ்விடம் இருந்தனவென்று இப்போது நிர்த்தாரணம் செய்ய அமையாது. இப்போது இருக்கும் மந்த்ர ப்ராஹ்மண பாகங்களின் வ்யாஸமானது பாராஶர்யராலோ, இன்னும் யாராலோ செய்யப்பட்டபோது, தத்பூர்வமிருந்து பின்பு விடப்பட்ட வேத பாகங்களும் உண்டென யோசிக்க ஹேதுவுண்டு. வேதம் அநந்தமாக இருந்ததென்றும், அதை முற்றவும் அத்யயநம் செய்ய ஒரு புருஷாயுஸ் போதாதென்றும் காடகத்தில் சொல்லப்பட்ட பரத்வாஜ வ்ருத்தாந்தத்தால் நன்றாகத் தெரிகின்றது. த்ருஷ்டமான ஸர்வவேத மந்த்ரங்களும் ப்ராஹ்மணங்களும், வ்யாஸர் காலத்தில் காப்பாற்றப்படவில்லை; வைதிக கர்மங்களுக்குப் போதுமானவை மாத்ரம் அக்காலத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டன.

அப்போதிருந்த ஸர்வ இதிஹாஸங்களும், ஸர்வ புராணங்களும், வேதரூபமாகவே காப்பாற்றப்பட்டவை என்பதற்கிடமில்லை. பாரதரூபமான இதிஹாஸத்துக்கும், அஷ்டாதஶபுராணாநாம் கர்த்தா ஸத்யவதீஸுத: என்கிறபடி பதினெண்புராணங்களுக்கும் வ்யாஸரே கர்த்தா என்று சொல்லப்படுகிறது. இது அவருக்குத் ஸாக்ஷாத் கர்த்ருத்வத்தை ஸாதிக்காவிடினும் காரயித்ருத்வமாவது அவருக்கு நிலைக்க இடங்கொடுக்கலாம். ஆக, பாரதமும் புராணங்களும் முதலில் ஏற்பட்டபோது, வேதங்களில் அந்தர்க்கதமாயிருந்த இதிஹாஸ புராணங்களே அவற்றிற்கு மூலமாக இருந்தன என்பதற்கு விஶேஷ விரோதம் காணோம். வேதபாகங்களை அவர் வ்யாஸம் செய்தபோது இதிஹாஸபுராணாதிகளையும் ஸ்வயமோ, ஶிஷ்ய மூலமாயோ அவர் ரக்ஷித்தாரென்று அங்கீகரிப்பதற்கு என் கஷ்டப்படவேண்டும்? பாரத யுத்தத்தின் பிறகு ஜ்ஞாதாக்கள் இவ்விதம் லோகஸம்ரக்ஷணார்த்தம் ஶ்ரமப்பட்டாரென்று மனங்கோணாமல் ஒப்புக்கொள்ளலாமே.



அப்படி ரக்ஷிக்கப்பட்ட இதிஹாஸபுராணாதிகளுக்குப் பல காரணங்களால் பிற்காலத்தில் வ்ருத்தியுண்டென்றும் ஒப்புக் கொள்ளக்கூடும்.

* * * * * *

மந்த்ரகாலமெனவும், ப்ராஹ்மணகாலமெனவும், உபநிஷத் காலமெனவும், ஸூத்ரகாலமெனவும், அந்தந்த ரூபமான க்ரந்தங்களின் ப்ரகாஶத்துக்குக் காலநிர்ணயத்தை ஐரோப்பியர் உண்டாக்கினர்கள்; அதை, அவர் அபிப்ராயத்தில் விஶ்வாஸம் வைத்த நமது நாட்டினரும் ஒத்துக்கொண்டார்கள். இவர்கள் அநேகமாக வைதிக ஸம்ப்ரதாயங்களுக்குப் பாஹ்யத்திலிருக்கப்பட்டவர்; அவற்றுள் விஶ்வாஸம் குன்றிப் புத்திபூர்வமாக வெளிப்பட்டவர். காலநிர்ணயம் ஒவ்வொரு ரூபமான க்ரந்தங்களின் ப்ரகாஶ ப்ராசுர்யத்தால் யோசிக்கக்கூடுமானாலும், ப்ராஹ்மணகாலத்திலும் மந்த்ர ஸாக்ஷாத்காரம் ஸம்பாவிதமாகையாலும் உபநிஷத் என்று நமக்குக் கிடைத்த தாத்ருஶ க்ரந்தங்களில் ஸ்மரிக்கப்பட்ட அபியுக்த வாக்யங்களும், ஶ்லோகங்களும் அந்த உபநிஷத்காலத்துக்கு முன்பே இருந்ததாக எண்ணவேண்டியிருப்பதாலும், மந்த்ரகாலத்திலும் ப்ராஹ்மண காலத்திலும் உபநிஷத் காலமும் கலக்க வேண்டியிருக்கும். உபநிஷத்தில் ஸூத்ரங்களைச் சொல்லியிருப்பதால் அவற்றின் காலத்திற்கு முன்னமே ஸூத்ரங்கள் உண்டு என்று யோசிக்கவேண்டும். இதிஹாஸபுராணங்கள் மந்த்ரகால முதல் இருந்தேயுள்ளன. பாரத யுத்த காலத்தின் பிறகு இவை ப்ராயேண வேத பாகங்களின் வ்யாஸத்தினின்று வெளிப்படுத்தப்பட்டு ப்ரத்யேகமாக எழுதப்பட்டிருக்கவேண்டும்.

* * * * * *

வீபர் என்கிற ஐரோப்பிய பண்டிதர் ஒருவர் ஶதபத ப்ராஹ்மணம் முற்பாகம் பாரதயுத்தத்தின் முன்னால் எழுதப்பட்டதென்றும், அப்போது குருபாஞ்சால நாட்டார் யுத்தமின்றி ஸுகமாய் வாழ்ந்துகொண்டிருந்தனரென்று ப்ராஹ்மண வசநத்தாலே தெரிகின்றதென்றும், அதனுடைய முடிவான பாகத்தில், பரீக்ஷித், அவர் புத்ரர்கள், ஜநமேஜயன், பீமஸேநன், உக்ரஸேநன், ஶ்ருதஸேநன் இவர் பெயர்கள் கண்டிருப்பதால், அந்தப் பாகம் பாரத யுத்தத்தின் பின்னால் எழுதப்பட்டதென்றும் ஊஹித்திருக்கிறார். இவருடைய ஊஹங்கள் ரோமேச சந்தர தத்தருக்கு ப்ரமாணமாகி நின்றமையால், பாரதயுத்தம் மெய்யென்பதையும், அந்த யுத்த

வரலாறு அது நடந்த சில நூற்றாண்டுகளுக்குள் எழுதப்பட்டது என்பதையும் அவர் அங்கீகரித்தபோதிலும், பாண்டவர், கிருஷ்ணன் முதலானவர்கள் ஸம்பந்தம் அப்படி முதலில் எழுப்பட்ட பாரதத்தில் இல்லையென்று அவர் நிச்சயமாகக் கொண்டுவிட்டார். ஏனென்றால், ஶதபத ப்ராஹ்மணத்திலும், ஒருக்கால் ஐதரேய ப்ராஹ்மணத்திலும், பரீக்ஷித் ராஜனையும் அவன் புத்ரர்களையும் பெயரால் கண்டெழுதப்பட்டிருக்க, பாண்டவர் பெயரும் கிருஷ்ணன் பெயரும் காணப்படவில்லை. இப்படி அநுமானம் ஏற்பட்டபடியால் தத்தர் ஐரோப்பியரையொக்க ஸித்தாந்தம் செய்துவிட்டார். அதே மாதிரியாக, இராமாயண கதாநாயகர்கள் மிகவும் தர்மத்துக்குக் கட்டுப்பட்டு, ப்ராஹ்மணர்களை மதித்திருந்தனரென்றும், பாரத கதாநாயகர், அதற்கு விபரீதமாக நடந்தனரென்றும், ஆனதால் பாரதத்துக்கு ராமாயணம் பின்பட்டதென்றும் ஐரோப்பியரை யொட்டித் தத்தர் நிர்ணயித்தார். இந்த ரூபமான ஹேதுக்கள் இவர்க்கு ஸித்தாந்தம் செய்யப் போதுமானவையாய் விட்டன. அடித்தாலும் திரும்ப அடிக்க இஷ்டமும் திறனுமற்றுப்போன நம்தேசத்தினர் தலைவிதி இதுவே. இப்படியே, மக்டொனல்ல், கீத், எனப் பெயர்கொண்ட இரண்டு ஐரோப்பிய வித்வான்கள், ஶதபத ப்ராஹ்மணத்தில் விசித்ரவீர்யனுடைய புத்ரன் த்ருதராஷ்ட்ரனென்னும் காசிராஜனொருவன் அஶ்வமேத யாகம் செய்ய யத்தனிக்கையில், ஶாத்ராஜித ஶதாநீகனெனும் பாரத ராஜனால் ஜயிக்கப்பட்டானென்று இருக்கின்றபடியாலும், துர்யோதனன் பிதா, பிதாமஹன் இவர்கள் பெயர் ப்ராஹ்மணத்தில் கண்டிராததாலும், பாரத கதையானது பண்டைநாட்களில் இருந்த கீர்த்தி பொருந்திய ராஜர்களைத் தாறுமாறாகக் கூட்டி ஒரு கதையாக யாரோ எழுதிவிட்டதாகச் சொல்கின்றனர்.

பாரத யுத்தம் மெய்யென்று ஒப்புக்கொண்டமட்டும், அந்த யுத்தத்தில் அந்வயித்த அரசர்கள் ஒருவர் பெயரையாவது ப்ராஹ்மணங்கள் சொல்லிற்று? மஹாபாரதத்தில் கண்டிராத எந்த அரசராவது அந்த யுத்தத்தில் ஸம்பந்தப்பட்டனர் என எங்காவது ப்ரமாணம் காணக்கூடுமா? வைதிக தர்மத்தையும் க்ரதுக்களையும் ஸம்ரக்ஷிக்கும்பொருட்டு ஏற்பட்ட ப்ராஹ்மண க்ரந்தங்களில், ப்ரஸக்தாநுப்ரஸக்தமாய் ஒரு ராஜன் பெயரைக் காண்பித்தால் அவன் முன்னோர் பெயரை யெல்லாம் காட்டவேண்டும் என்னும்



விதியுண்டோ? விசித்ரவீர்யன், அவன் புத்ரன் த்ருதராஷ்ட்ரன், என்னும் காசிராஜர்கள் உண்டேயாகில் குரு ராஜர்க்குள் இதே நாமங்களைக் கொண்ட பிதாவும் புத்ரனும் ஏற்படக் கூடாதோ?

* * * * * *

பரீக்ஷித்தின் தகப்பன் அபிமந்யு அல்லவென்றும், அபிமந்யு தகப்பன் அர்ஜுநன் அல்லவென்றும், அர்ஜுநனுக்கு நால்வர் ப்ராதாக்கள் யுதிஷ்டிரர், பீமஸேநன், நகுலன், ஸஹதேவன் எனப்பெயர் தரித்தவர் இல்லையென்றும், இவர்க்கு த்ரௌபதி எனும் பத்நி இல்லையென்றும், இவர்கள் பிதா பாண்டு அல்லவென்றும், பாண்டுவின் ப்ராதா த்ருதராஷ்ட்ரன் அல்லவென்றும் அவருடைய மாதாக்களின் புருஷர்கள் விசித்ரவீர்யன் சித்ராங்கதன் அல்லவென்றும், அவர் பிதா ஸந்தநு அல்லவென்றும், ஓர் வார்த்தைகூடக் கிட்டாதவளவில், அதிப்ராசீந சரித்ரமடங்கிய ப்ராசீந இதிஹாஸத்தை, 2500, அல்லது 3000 வருஷங்கள்மட்டும் யாவரும் ஸமுதாயமாக ஸத்யமென்று நம்பியிருந்ததை, இன்று சில ஐரோப்பியரும், தத்தர், ஸீதாநாதர், முதலான ஆர்ய தர்ஶநங்களுக்குப் பாஹ்யர்களாய்ப் போந்தவரும், ஹேதுக்களாக ஸித்திக்கமாட்டாத மேலே காட்டிய ப்ராஹ்மண வசநபலங்களைக் கொண்டும், தத்தர் முதலானோர்களால் மறைக்கவும் முடியாத ப்ராஹ்மண த்வேஷங்களைக்கொண்டும், மித்யையெனச் சொல்லிவிடுவது எங்ஙனம் இருக்கின்றதென்றால், குற்றவாளியென ஸாக்ஷ்யம் ஏற்படுவதன் முன்னமே, கூட்டிலடைபட்ட ஒருவனை, நீ குற்றவாளியல்லவென்று ருஜுப்படுத்து, இல்லாவிட்டால் உன்னைத் தண்டித்துவிடுவேன், என்று ஒரு ந்யாயஸ்தலாத்யக்ஷர் நிச்சயிப்பதுபோல் இருக்கின்றது.

* * * * * *

ஸீதாநாதரும் தர்மஶாஸ்த்ரங்களுடைய காலத்திற்கு முற்பட்ட க்ரந்தங்களில் பாண்டவர் க்ருஷ்ணன் முதலானவர் பெயரில்லை என்றார்; தத்தரும் இப்படித்தான் சொல்லத்தக்கவர். இதிஹாஸ புராணங்கள் தர்மஶாஸ்த்ர காலத்துக்கு முற்பட்டவையானாலும் ஸீதாநாதர் முதலியவர் வேறு விதமாகத் தீர்மானித்துவிட்டார்கள். அப்படித்தான் வைத்துக்கொண்டாலும், அவர் சொல்வது ஸரியா? அவர்களுக்கு ஐரோப்பியரன்றோ ப்ரமாணம் செய்யப்பட்டவர். ஆபஸ்தம்பர், போதாயநர், இவர்கள்

ஸூத்ரங்களையும், ஶங்கரபாஷ்யத்தையும் இங்கிலீஷ்படுத்திய ஐரோப்பிய பண்டிதர்கள், மேற்சொன்ன ஸூத்ரகாரர்கள் கிறிஸ்து பிறப்பதன் முன் நாலாவது நூற்றாண்டில் இருந்ததாகவும், பாதராயண ஸூத்ரங்களுக்கு வ்ருத்தி எழுதிய போதாயநர் அந்த நூற்றாண்டிலேயே இருந்ததாகவும் நிர்ணயித்திருக்கின்றார்கள். ஆபஸ்தம்பர், இஜ்யாகாலத்தில் மஹாபுருஷனை நாராயணன், மஹாதேவன் இவர்கள் ஆராதநத்தை விதித்திருக்கின்றார். வைகாநஸ ஸூத்ரத்தில் பகவானுடைய ஆராதநம் விதிக்கப்பட்டு அந்த ஸூத்ர நிஷ்டர்கள் பஹுவாலயங்களை ப்ரதிஷ்டை செய்திருக்கின்றார்கள். அந்த ஸூத்ரங்கள், ஸூத்ரகாலமெனக் கொள்ளப்பட்ட கிறிஸ்து பிறப்பதன் முன் மூன்றாவது நூற்றாண்டுக்குப் பின்னிடக் கூடாதவைகள். ப்ரஹ்மஸூத்ர வ்ருத்திக்ரந்தம் நான்காம் நூற்றாண்டில் செய்யப்பட்டதாகில், அந்த ஸூத்ரங்கள் அதற்கும் முற்படவேண்டும். பகவத் ராமாநுஜ பாஷ்யத்தில், பகவத்போதாயநக்ருதாம் விஸ்தீர்ணாம் ப்ரஹ்மஸூத்ரவ்ருத்திம் பூர்வாசார்யா: ஸஞ்சிக்ஷிபு: தந்மதாநுஸாரேண ஸூத்ராக்ஷராணி வ்யாக்யாஸ்யந்தே । [பகவத் போதாயநரால் செய்யப்பட்ட விஸ்தீர்ணமான ப்ரஹ்மஸூத்ர வ்ருத்தியைப் பூர்வாசார்யர்கள் ஸங்க்ஷேபம் செய்தார்கள்; அவர் மதத்தை அநுஸரித்து ஸூத்ராக்ஷரங்கள் வ்யாக்யாநம் செய்யப்படுகின்றன] என்றிருப்பதாலும், ராமாநுஜன் வ்ருத்திக்ரந்தத்தைக் கடாக்ஷித்தவரென்பது ஸ்பஷ்டமாய் ஏற்படுகிறபடியாலும், ஸ்வாமி பாஷ்யம் செய்த ஸூத்ரங்களுக்குப் போதாயநருடைய வ்ருத்தியும் உண்டென ஏற்படுகிறது. இதே ஸூத்ரங்களுக்கு ஶங்கராசார்யரும் பாஷ்யம் செய்திருக்கின்றனர். அந்த பாஷ்யத்துக்கு டீகை எழுதிய ஆநந்தகிரி முதலானவர்கள் அங்கங்கே ஶங்கராசார்யர் வ்ருத்திகாரர் மதத்தைத் தூஷிப்பதாகவும் எழுதியிருக்கிறார்கள். ஸூத்ரங்களில் பாசுபதம் பாஞ்சராத்ரம் ஆகிய இரண்டு ஆகமங்களைப் பற்றியும் அதிகரணங்கள் ஏற்பட்டிருக்கிறபடியால், இவ்விரண்டு மதங்களும் ஸூத்ரகாலத்துக்கு முற்பட்டிருக்கவேண்டும். ராம க்ருஷ்ணாதி அவதாரங்களை பாஞ்சராத்ராகமங்கள் மிக்கவும் ஆதரிக்கின்றனவென்பது அதிஸ்பஷ்டமாகையால் அதைப்பற்றி இங்கே விஸ்தரித்து எழுதவேண்டாம். இந்த ஆகமங்களின் இருப்பை



ஐரோப்பியர் வசநப்படி கிறிஸ்து பிறப்பதன் முன் ஐந்நூறு நூற்றாண்டளவுக்காவது ஸீதாநாதர் கொண்டு போகமாட்டாரோ?

கிறிஸ்து பிறப்பதன் முன் நான்காவது நூற்றாண்டில் சந்த்ரகுப்தன் ஆண்டகாலத்தில் இந்தியாவுக்கு வந்த க்ரீக் தேசத்தார் இந்தியாதேசத்தில் ருத்ரனையும் க்ருஷ்ணனையும் ப்ரஜைகள் உபாஸிப்பதாக எழுதியிருக்கின்றனர். இந்த ஐரோப்பியர் ஸாக்ஷ்யத்தை ஏன் ஆதரிக்கக்கூடாது? மஹா பாஷ்யம் செய்தவரான பாணிநி என்பவருடைய காலம் கிறிஸ்து பிறப்பதன்முன் நான்காவது நூற்றாண்டு முதல் எட்டாவது நூற்றாண்டுவரையில் ஐரோப்பியரால் ஊஹிக்கப்பட்டிருக்கிறது. அவர் வாஸுதேவார்ஜுநர்களை ஒரு ஸூத்ரத்தில் சேர்த்தெழுதுகிறார். மற்றொரு ஸூத்ரத்தில் யுதிஷ்டிரர் பெயரையும் சொல்லுகிறார். ஆதலால் பாரதம் முதலில் எழுதப்பட்டதாகத் தத்தர் ஸீதாநாதர் முதலியோர் ஒப்புக்கொண்ட ஐந்தாம் நூற்றாண்டிலேயே பாண்டவர் கிருஷ்ணன் இவர்கள் நாமங்கள் ப்ரஸித்தமாயிருக்கவேண்டுமே. மஹா பாஷ்யகாரரும் ஸ்ரீ க்ருஷ்ணனுடைய பால சரித்ரத்தைக் குறித்து ஸ்வக்ரந்தத்தில் ஸ்மரிக்கின்றனரே.

* * * * * *

மஹாகவி பாஸரால் எழுதப்பட்ட நாடகங்கள் திருவநந்தபுரத்தில் அச்சிடப்பட்டன. பாஸ கவியானவர் கிறிஸ்து பிறப்பதன் முன் நான்காவது நூற்றாண்டிலோ, முதல் நூற்றாண்டிலோ இருந்தவராக, சென்ற அக்டோபர் டிஸம்பர் மாஸத்திய "மாடர்ன் ரிவ்யூ" என்னும் பத்ரிகையில் எழுதப்பட்டிருக்கின்றது. இந்த நாடகங்களை ப்ரசுரப்படுத்திய கணபதி சாஸ்த்ரி என்பவர் பாஸர் நான்காவது நூற்றாண்டிலிருந்ததாக எழுதியிருக்கின்றார். அதற்குப் போதுமான ஸத்ஹேதுக்களையும் அவர் காட்டியிருக்கின்றார். அந்த நாடகங்களில் ஒன்று அபிஷேகநாடகம். இது ஸ்ரீராமசரித்ரத்தை ஸ்ரீமத் ராமாயணத்தில் கண்டபடி காட்டுகின்றது. ஆரம்பத்தில் மங்கள ச்லோகம், யோ காதிபுத்ர மகவிக்நகராபிஹந்தா, யுத்தே விராத கரதூஷண வீர்யஹந்தா । தர்போத்ததோத்கட பலஸ்ய கபீந்த்ர ஹந்தா, பாயாத்ஸ வோ நிசிசரேந்த்ர குலாக்ர ஹந்தா ॥ என்று ஸ்ரீராம சரித்ரத்தை ஸங்க்ரஹமாகச்சொல்லி, ஸ்ரீராமனை ஸர்வேச்வரனாக

வெண்ணி, அவனால் ஸர்வரும் ரக்ஷ்யர்கள் என்பதைக் காட்டுகிறது. ஸ்ரீராமன் ஸந்நிதியில் வருணன் ப்ராப்தமானதருணத்தில், நாராயணஸ்ய நரதேவஶரீரகஸ்ய, கார்யார்த²ஸ்ய ஸ்வ மாயயா க்ருதாவதாரஸ்ய । தேவஸ்ய தேவரிபு தேஹஹராஸ்ய ப்ரதிஜ்ஞாம், ஸீத: ஶராஶ்ஶரண தேந ஶரவாஸ்யாமி ॥ ஶாந்தம் ந ஏவ ஶோஷாய வக்ஷ்யாமி மஹாயஶ: । ஸ்வயம் காரணமேதத் ஸ்யாத் கார்யார்த²ம் ஸமாக³த: ॥ என்கிற ஶ்லோகங்கள் எழுதப்பட்டுள. இவை ஸ்ரீராமன் நாராயணனென ப்ரஸித்தவத் உத்கோஷிக்கின்றன.

ஸ்ரீமத் ராமாயணத்திலிருக்கிற ப்ரஹ்மஸ்துதியை அநுஸரித்து இந்நாடகத்தில் தேவஸ்துதி செய்யப்பட்டிருக்கிறது. ப்ரஹ்மாதிகேஶத்ரயம், ஜநக்ஷயவதே, ஸ்ரஷ்டுஸ்ரஷ்டோகாவஸ்வ, ரோதோவம்ஶ்ருதிவாகராஸ, ஸர்வதே, ஜிஹ்வாவதே ஸாரதீ । ஸஹஸ்ரம்ஶ்ருஶீர்ஷாணம் த்ரிஷ்வபதம் ஸ்ரஷ்டும் கவயேவஹோ, வீதேயம்ஜஸம்ஹவாஸயஸதா, விஷ்ணுமவாஞ்சஸ்ஸதாம் ॥ ஶஸ்த்ரம்ஹி ஜநே வராஹ வபுஷா ஸ்ருஷ்டி ஸ்வயே வோஷ்டா, விக்ராந்தம் ஸ்வபததுயம் ஸர்வதே பாதுர்யேணஸ்வயா । த்வேஷாம் ஸ்வயம் ஶூராஶ்ரிதேத ஸவதா தேவ்யா யயா ஸாம்ப்ரதம், ஸகா ராவண ஶாஸநே நஷிதயா தேவாஸுராஶ்வாஸிதா: ॥ இந்த ஶ்லோகங்கள் வால்மீகி க்ரந்தத்தை மிக்க அநுஸரித்தவை. இந்த நாடகத்தில் அக்நி ஸ்ரீராமனை நோக்கி, ஶம்ஸமவதீம் ஶுத்தீம் ஜாநீஹி ஜநகாத்மஜாம் । ஸாஹவம் தசநப்ராப்தா ராமஶ்சீம் தநயோஸிதா ॥ என்று சொல்ல, ஸ்ரீராமன், ஜாநதாபிச வைதேஹ்யா: ஶுத்திதாம் ப்ரஶுத்தேந । ப்ரத்யயார்த²ம் ஸிதேவாகாதம் வநவைஶ யாகத்ரம் ॥ என்று ப்ரதி வசநம் அளிப்பதையும், முக்யமாக, ப்ரத்யயார்த²ம் ஸிதேவாகாரம், என்னும் சொற்களையும் பார்த்து யார் தான் வால்மீகியின் வசநங்களை ஸ்மரிக்கமாட்டார்கள். இவ்விதமாக, கிறிஸ்துவுக்குப் பல நூற்றாண்டுகள் முற்பட்டே, ப்ரஸித்த



மாக ஸ்ரீராமவதாரத்திலும், ஸ்ரீராமசரித்ரத்திலும் வால்மீகிராமாயணத்திலும் நமது தேசத்தார் விஶ்வஸித்தாரென்பது த்ருடம். இவற்றுள் ப்ரமாணபாவம் இந்த ரூபமாக ஜநிக்க பல நூற்றாண்டுகள் சென்றிருக்கவேண்டும்.

*    *    *    *    *    *

மற்றொரு நாடகம் பாலசரிதம். இது ஸ்ரீ க்ருஷ்ணனுடைய பாலசரிதம் கம்ஸவத பர்யந்தமடங்கியது. இதன் ப்ரதம ஶ்லோகம், ஶங்கக்ஷீரவபு: புரா க்ருதயுகே நாம்நா து நாராயண:, த்ரேதாயாம் த்ரிபதார்பித த்ரிபுவநோ விஷ்ணு: ஸுவர்ணப்ரப: । தூர்வாஶ்யாமநிப: ஸ ராவணவதே ராமோ யுகே த்வாபரே, நித்யம் யோஞ்ஜநஸந்நிப: கலியுகே வ: பாது தாமோதர: ॥ க்ருதயுகத்தில் பகவான் நாராயணனாகவும், ஶம் த்ரேஷ்ண கஶ்யாணி கவயோயாந்யபஶ்யந் தாநி த்ரேதாயாம்பஹுதா ஸந்ததாநி, என்று உபநிஷத் சொன்னவண்ணம், த்ரேதாயுகத்தில் த்ரிவிக்ரமாவதாரம் செய்த விஷ்ணுவாகவும், த்வாபரயுகத்தில் ஶ்யாம ஸுந்தராங்கனான ஸ்ரீராமனாகவும், கலியுகத்தில் ஸ்ரீக்ருஷ்ணனாகவும் உபாஸிக்கப்பட்ட பகவான் உம்மைக் காக்கட்டும் என்று நாடகாரம்பம் செய்யப்படுகிறது. மறுபடியும் ஸூத்ரதாரன், க்ருஷ்ணம்ஹரிம்வ்ருஷ்ணி குலே ப்ரஸூதம் ஸ்வாமீஶ நாரத வநேஷு தத்ராணும் என்று சொல்லிவிட்டு நிஷ்க்ராந்தனாகிறான். நாரதர் ப்ரவேஶித்து, ஸமவம்தம், லோகாதிம், அநிப்பநம், அவ்யயம், லோகஹிதாய கம்ஸவதாய வ்ருஷ்ணிகுலே ப்ரஸூதம், நாராயணம், க்ருஷ்ணமிஹாமரேதாஸ்மி; என்றும், லஷலக்ஷமவாப்நாராயணம், அநந்தவீர்யம் கதாயதாக்ஷ:, ஸுரேந்த்ரநாத:, அஸுரவீர்யஹந்தா । த்ரிலோககேது:, ஜமதஸ்வகர்த்தா, ஹதாரஜநாநாம் பவதுபுஷ: புராண:, என்றும், நமோ ஸமவதே த்ரைலோக்ய காரணாய, நாராயணாய நரலோகபராயணாய, லோகநாதாய லோகஸ்ரஷ்ட்ரே ஸ்லோகாய । ராமாய ராவண விராவண பாதநாய,

வீராய வ்யாஜமயாய நமோ வராய || என்றும் சொல்வதைப் பார்த்தால் போதாதா? க்றிஸ்து பிறப்பதன் முன் நான்காவது நூற்றாண்டிலேயே நாராயணனே ராக்ஷஸாதிஸம்ஹாரம் செய்தவனென்று, வால்மீகி ராமாயணத்தைக்கொண்டும், பாரத புராணாதிகளைக்கொண்டும் லோகத்தார் ஸர்வத்ர நம்பினார்கள் என்று ஏற்படவில்லையா? ராமசரிதம் முற்பட்டதெனவும் ஸித்திக்கவில்லையா?

இன்னும், பஞ்சராத்ரம், மத்யமவ்யாயோகம், தூதவாக்யம், தூதகடோத்கசம், கர்ணபாரம், ஊருபங்கம், முதலான நாடகங்கள், இப்போதிருக்கிறபடி பாரத கதைகளை, இரண்டாயிரத்து முன்னூறு வருஷங்களுக்குமுன் ஜநங்கள் நம்பினார்கள் எனக்காட்டுகின்றனவே. ஊருபங்க நாடகத்தின் முதல் ஶ்லோகமாகிய, பீஷ்மத்ரோணதடாம், ஜயத்ரதஜலாம் காந்தாரராஜஹ்ரதாம், கர்ணத்ரௌணிக்ருபோர்மிநக்ரமகராம், துர்யோதநஸ்ரோதஸம் | தீர்ணஶ்ஶத்ருநதீம், ஶராஸிஸிகதாம், யேந ப்லவேநார்ஜுந:, ஶத்ரூணாம், தரணேஷு வ: ஸ பகவாநஸ்து ப்லவ: கேஶவ: || என்பதும், பஞ்சராத்ர நாடகம் முதல் ஶ்லோகமாகிய த்ரோண: ப்ருதிவ்யர்ஜுநபீமதூதோ, ய: கர்ணதார: ஶகுநீஶ்வரஸ்ய | துர்யோதநோ பீஷ்மயுதிஷ்டிர: ஸ:, பாயாத்விராட் உத்தர கோபித்ருஷ்ண: || என்பதும் அக்கால பாரதமே இக்காலும் உண்டென்றும், அக்காலும் இக்காலும், ஸ்ரீக்ருஷ்ண பாண்டவ துர்யோதந பீஷ்ம த்ரோண கர்ணாதிகள் சரித்ரங்களாலேயே அது அமைக்கப்பட்டதெனவும் காண்பிக்க வில்லையோ?

*　*　*　*　*　*

க்றிஸ்து காலத்துக்கு நூற்றாண்டுகள் முற்பட்ட லலிதவிஸ்தாரம் என்னும் பௌத்த க்ரந்தத்தில் புத்தனை ருத்ர க்ருஷ்ணர்களுக்கு ஒப்பிட்டிருப்பதை நோக்குமிடத்தில், த்ருஷ்டாந்தமாகக் குறிக்கப்பட்ட ருத்ர க்ருஷ்ணர்கள் புத்தருக்கும் முற்பட்டவர்கள் என்று எளிதாக ஊஹிக்கக்கூடும்.



தமிழ்நாட்டில் ஆயிரத்தெண்ணூறு வருஷங்களுக்குமுன் பிறந்த சிலப்பதிகாரம் என்னும் க்ரந்தத்தால், திருமலை, ஸ்ரீரங்கம், அநந்தஶயநம் முதலான திவ்யக்ஷேத்ரங்கள் அக்காலமே மிக்க ப்ரஸித்தி அடைந்தவைகளாகவும், ஸ்ரீ க்ருஷ்ணன் சரித்ரம் தமிழ் நாட்டை வ்யாபித்து இருந்ததாகவும் தெரிகின்றபடியால், ஆகம ஶாஸ்த்ரங்களும், ஸ்ரீ க்ருஷ்ணன் பகவானுடைய அவதாரமெனக் காட்டும் கதைகளும் அக்காலத்திற்கு அநேக நூற்றாண்டுகளுக்கு முன்னமே ஆர்யதேசத்தில் பரவியிருக்கவேண்டுமெனும் ஊஹம் ஜநிக்கின்றது.

*　*　*　*　*　*

இரண்டாயிரத்து முன்னூறு வருஷங்களுக்குமுன் இந்தியாவிற்கு வந்திருந்த யவந நாட்டாரும், ஆயிரத்தறுநூறு வருஷங்களுக்கு முன் வந்திருந்த சீநதேசத்தினரும் நம் தேசத்தார் ஸத்யம் முதலான உத்தம குணங்கள் மிக்கப் பொருந்தினவரென எழுதியிருக்கின்றார்கள். மாக்ஸ் முல்லர் முதலான ஐரோப்பியரும் நம் தேசத்தார் அக்காலத்தில் மிகவும் ஸத்யஸந்தரெனச் சொல்லுகின்றார். ஏன் அவர் பொய் எழுதவேண்டும்? மேலும், ஏனோ மெய்யாக இருந்த கதைகளைப் போக்கிப் பொய்யைப் பரவச்செய்ய வேண்டும்? இந்த்ரனென்னும் தேவனால் அபஜயமடைந்த அநார்யனாகிய க்ருஷ்ணனென்னும் பெயருடையவனை ஸ்வோபாஸ்யனாக ஆர்ய தெய்வமாகப் பிராமணர் கொள்ளப்போவானேன்? அதுவும் ஆர்ய தேஶவாஸிகளாயிருந்தவர் செய்வரோ? பொய்யான பாண்டவரைக் கல்பிப்பானேன்? மற்றெல்லா அரசரையும் விலக்கி க்ருஷ்ணனை அவதார புருஷன் என்று அங்கீகரிப்பானேன்? கர்ஹிதமாயும் அப்ரயோஜனமாயும் இருக்கப்பட்ட இத்தகைய செயலை, ஒருவனோ சிலரோ மேற்கொள்வார் என்பது ஸம்பாவிதமாகிலும், எல்லோரும் சேர்ந்து இப்படிச்செய்தாரென்றால் அது பொருந்துமோ? சிலர் செய்தால் பலர் அதை அங்கீகரிப்பானேன்?

*　*　*　*　*　*

காரணமின்றிக் கார்யம் உத்பந்நமாகுமோ? அவதரித்த பகவனிடம் அதிமாநுஷ சேஷ்டிதங்களையும், ஜ்ஞாநத்தையும் கண்ட மஹாப்ராஜ்ஞர்களான, வ்யாஸ, ஶுக, பீஷ்ம, விதுர, யுதிஷ்டிர, அர்ஜுந உத்தவாதிகள் நம்பிக்கையானது காலக்ரமேண ஜநங்களில் பரவி, அவன் பக்தர்கள் அவதார விஸ்தாரமடைந்து,

காலம் முதல் ஏதத்க்ஷண பர்யந்தம் ஸ்வாநுபவத்தால் உண்மை என்று அறிந்ததைப் பல க்ரந்தங்களில் வெளியிட்டு, அந்த அநுபவத்தில் ப்ரத்யயமுண்டாகி ஸர்வஜநங்களும் பகவானுடைய அவதாரங்களை நம்புகின்றனர் என்பது யுக்தியுக்தமாகத் தோன்ற வில்லையோ!

ப்ரஹ்மஸூத்ரங்களில், ஹ்ரூதேகு, ஹயபுதே, என்று ஸ்ம்ருதியை ப்ரமாணமாக எடுக்கப்பட்டிருக்கிற இடங்களில், இப்போதிருக்கும் பாஷ்யங்களுக்குள் முற்பட்டதான ஸ்ரீ ஶங்கர பாஷ்யத்தில், ப்ராயேண கீதாஶ்லோகங்களே ஸூத்ரங்களில் கண்ட ஸ்ம்ருதி ப்ரமாணங்களாக எழுதப்பட்டன. ஶங்கரா சார்யரும், பூர்வபாஷ்யகாரர்கள் வெளியிட்டபடியே விஷயவாக்யங்கள் எடுத்திருப்பார் என்பதில் விஶ்வாஸம் ஸஹஜமாக உண்டாகலாம்.

ப்ரஹ்மஸூத்ரத்தில் அம்சாதிகரணத்தில் ஜீவன் ப்ரஹ்மாம்ச மென்று சொல்லி இருக்கின்றது. விஷய வாக்யங்கள் எடுக்கப்பட்ட உபநிஷத்துகளில் ஜீவவிஷயத்தில் அம்ச சப்தம் ஸாக்ஷாத்தாக எங்கு மெடுக்கப்படவில்லை என்று நமக்குத் தெரிந்தமட்டும் நம்புகின்றோம். கீதையில்தான் மமைவாம்ஶோ ஜீவலோகே ஜீவபூத: என்று அம்ச சப்த ப்ரயோகம் காணப்படுகிறது. ஆதலால் ஸூத்ரகாலத்திற்கு முன்னமே கீதை இருந்திருக்க வேண்டும்.

ஐரோப்பியரும், தத்தர் முதலானோரும் செய்த விமர்சைகள் நமக்குச் சில குணங்களைக் கொடுக்கக் கூடியவையாயினும், நமது மதத்தில் விஶ்வாஸம் உண்டாகி, அதில் ஆதரம் ஜநித்து, ப்ராசீநமாக ஏற்பட்ட க்ரந்தங்களுக்கும், ப்ரதிபத்திகளுக்கும் தக்க மதிப்பையீந்து, நம்முடைய பண்டிதர்களே இவ்விஷயங்களை ஶோதிக்கத்தக்கவர். ஆகையால் பாஹ்யர் யோசனைகளைத் தத்வமாக நம்மவர் அங்கீகரிப்பாராகில் அதனால் உண்டாகும் அநர்த்தங்களை இங்கே சிறிது காண்பித்தோம். நமது சரித்ர விசாரம் விஸ்தரேண செய்யத்தக்கது; இப்போது அதற்கு அவகாசமின்றி ஸங்க்ரஹமாய்ச் செய்தோம். அவகாசம் கிடைத்தால் விஸ்தாரமாகப் பின்னர்செய்வோம்.

---

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
10 SEP 1914
MADRAS.

# தத்வவிசாரம்.

## உ - ஈஶ்வர விஷயம்.

ப்ரக்ருதி புருஷர்களாகிற இரண்டு ஶக்திவிஶிஷ்டன் ஈஶ்வரன் என்று சொன்னோம். ப்ரளய தசையில் இந்த ஶக்திகள் யாதொன்றும் வித்யாஸம் தெரியாதபடி ஈஶ்வரனிடம் லயித்திருக்கின்றன. அப்போது அவை ஸூக்ஷ்மாவஸ்தையில் இருப்பதாய்ச் சொல்லுவார்கள். இப்போது அவை பஹுரூபங்களுடன் இருக்கின்ற நிலையை ஸ்தூலாவஸ்தை எனச் சொல்லுவார்கள். ஆனபடியால் அப்போதும் ஈஶ்வரன் ஒருவனே தத்வம்; இப்போதும் அவன் ஒருவன்தான் தத்வம். இதற்குத் தான் அத்வைதம் என்று பெயர்; அதன் அர்த்தம் வஸ்து இரண்டில்லை, ஒன்றே என்பதுதான். அப்படிப்பட்ட ப்ரஹ்மம், அல்லது, ஈஶ்வரன் ஶக்திகளுடன்கூடி இருப்பதாய்ச் சொல்லுவர் நம் ஆசார்யர்கள்; ஸ்தூலதசையும் ஸூக்ஷ்ம தசையும் ஶக்திகளைப் பொருந்தின என்பர். ஶக்திகளாகிற விசேஷங்களற்ற சைதந்யம் மாத்ரம் ப்ரஹ்மம் என்பார் கேவல அத்வைதவாதிகள். ப்ரமாண வசநங்களைக் கொண்டே இந்த இரண்டு ரூபமான யோசனைகளை அந்தந்த ஸம்ப்ரதாயத்தினர் செய்கின்றார்கள்.

நிர்விசேஷமான ஒரு சைதந்யம்தான் வஸ்து என்பார்க்கு அந்தச் சைதந்யத்தினின்று ப்ரபஞ்சம் உண்டானதாகச் சொல்வதற்கு இடமில்லை. ஆதலால் அவர்கள் மாயை, அல்லது, அவித்யையினால் ப்ரபஞ்சம் கல்பிதம் என்பார்கள். அவித்யை என்பது ப்ரஹ்மத்தின் ஸ்வரூபத்தை மறைக்கின்றதும், ஒன்றை மற்றொன்றாகவும், இல்லாததை இருக்கின்றதுபோலும் காட்டுவதுமாகிற ஒரு ஶக்தி விசேஷம் என்பர். இப்படி ஶ்ருதி சொல்லவில்லை. ஶ்வேதாஶ்வதர உபநிஷத்தில்,

“𑌮𑌾𑌯𑌾𑌂𑌤𑍁𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑌿𑌂𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌨𑍍 𑌮𑌾𑌯𑌿𑌨𑌂𑌤𑍁𑌮𑌹𑍇𑌶𑍍𑌵𑌰𑌮𑍍”
[ப்ரக்ருதியை மாயை என்றும் மஹேஶ்வரனை மாயையுடன் கூடினவனையும் அறியவேண்டும்]

என்று சொல்லியிருக்கிறது. மாயையை ஒன்றை மற்றொன்றாகவும், இல்லாததை இருக்கிறதுபோலும் காட்டும் சக்தியாகச் சொல்லவில்லை. ஶ்ருதியின்படி ப்ரபஞ்சம் பொய் என்பதாய் ஏற்படாது. 𑌇𑌦𑌂 என்று எதிரே காணப்படும் ஜகத்தைக்காட்டி, 𑌅𑌗𑍍𑌰𑍇 என்று ப்ரளயகாலத்தைக் குறிப்பிட்டு, 𑌸𑌦𑍇𑌵 என்றும் 𑌆𑌤𑍍𑌮𑍈𑌵 என்றும், அதாவது, ஸத்தாகவே, அல்லது, ஆத்மாவாகவே அது 𑌆𑌸𑍀𑌤𑍍 இருந்தது என்று சொல்லும் ஶ்ருதியைக் கொண்டு ப்ரபஞ்சம் பொய்யென ஒண்ணாது.

மாயை என்பதை ஒரு ஶக்திவிஶேஷமாக ஒப்புக்கொண்டமட்டும் ப்ரஹ்மம் அதனுடன் சேர்ந்ததாகிறது; அதை நிர்விசேஷம் என்ன ஒண்ணாது. நிர்விஶேஷ ப்ரஹ்மத்தை மாயை ஆஶ்ரயித்தபின் அதற்கு ஈஶ்வரரூபம் வருகின்றது என்பார் கேவல அத்வைதிகள். மாயையை வஸ்துவென ஒப்புக்கொண்டால், ப்ரஹ்மம் ஒன்று, அதொன்று, ஆக வஸ்து இரண்டானால், அத்வைதம் நிலைக்காது. ஆதலால், மாயை வஸ்துவுமன்று; அவஸ்துவுமன்று; அது அநிர்வசநீயம், அதாவது, இன்னதென்று விவரிக்கக்கூடாதது என்பர். வஸ்துவாகாமலும், ஶூந்யமாகாமலும், இன்னதெனச் சொல்லக் கூடாததை ஶ்ருதி காட்டவில்லை; மற்றப் ப்ரமாண க்ரந்தங்களுங் காட்டவில்லை; மநஸாலும் அதன் ஸ்வரூபத்தை நினைக்கக்கூடவில்லை. இவைகளெல்லாம் சொற்களின் சேர்க்கையாகத்தான் முடியும்; அர்த்தமில்லாதவை யுக்தியின் செயல். இப்படிக்கன்றிக் கேவல அத்வைதம் நிலைக்காதபடியால் இத்தகைய யோசனைகள் செய்யவேண்டியதாயிற்று.

ஜீவன் ப்ரஹ்மம் தான் என்றும், ஸர்வத்ர வஸ்துவாக இருப்பது ப்ரஹ்மம் ஒன்று தான் என்றும், அந்த ப்ரஹ்மத்தை அவித்யையாகிற அஜ்ஞாநம் ஆஶ்ரயித்து, அதற்கு அந்தந்த ஶரீரங்களில் அபிமாநத்தை உண்டாக்கி, ஶரீரங்கள் தோறும்



தான் ஒரு ஜீவன் என்னும் ப்ரமையை உண்டாக்குகிறதென்றும், ஸர்வத்ர ப்ரஹ்மம் ஒன்றே நிற்க, அதைக்காட்டாமல் பொய்யான ப்ரபஞ்சத்தை ஜீவன்களுடைய இந்த்ரியங்களுக்கு விஷயமாக்குகிறதென்றும் சொல்வார்கள். ஸ்ரீ விஷ்ணுபுராணத்தில், பகவான் வராஹாவதாரம் செய்கையில் ஜநலோகவாஸிகளாகிய ஸநந்தநாதிகள் செய்த ஸ்துதியில்,

𑌪𑌰𑌮𑌾𑌰𑍍𑌥𑌸𑍍𑌤𑍍𑌵𑌮𑍇𑌵𑍈𑌕𑍋 𑌨𑌾𑌨𑍍𑌯𑍋𑌽𑌸𑍍𑌤𑌿 𑌜𑌗𑌤𑌃 𑌪𑌤𑍇।
𑌤𑌵𑍈𑌷 𑌮𑌹𑌿𑌮𑌾 𑌯𑍇𑌨 𑌵𑍍𑌯𑌾𑌪𑍍𑌤𑌮𑍇𑌤𑌚𑍍𑌚𑌰𑌾𑌚𑌰𑌮𑍍॥ 𑌯𑌦𑍇𑌤𑌦𑍍
𑌦𑍃𑌶𑍍𑌯𑌤𑍇 𑌮𑍂𑌰𑍍𑌤𑌮𑍇𑌤𑌜𑍍𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌤𑍍𑌮𑌨𑌸𑍍𑌤𑌵। 𑌭𑍍𑌰𑌾𑌨𑍍𑌤𑌿
𑌜𑍍𑌞𑌾𑌨𑍇𑌨 𑌪𑌶𑍍𑌯𑌨𑍍𑌤𑌿 𑌜𑌗𑌦𑍍𑌰𑍂𑌪𑌮𑌯𑍋𑌗𑌿𑌨𑌃॥ 𑌜𑍍𑌞𑌾𑌨𑌸𑍍𑌵𑌰𑍂𑌪
𑌮𑌖𑌿𑌲𑌂 𑌜𑌗𑌦𑍇𑌤𑌦𑌬𑍁𑌦𑍍𑌧𑌯𑌃। 𑌅𑌰𑍍𑌥𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌂 𑌪𑌶𑍍𑌯𑌨𑍍𑌤𑌃
𑌭𑍍𑌰𑌾𑌮𑍍𑌯𑌨𑍍𑌤𑍇 𑌮𑍋𑌹𑌸𑌂𑌪𑍍𑌲𑌵𑍇॥ 𑌯𑍇 𑌤𑍁 𑌜𑍍𑌞𑌾𑌨𑌵𑌿𑌦𑌃 𑌶𑍁𑌦𑍍𑌧
𑌚𑍇𑌤𑌸𑌸𑍍𑌤𑍇𑌽𑌖𑌿𑌲𑌂 𑌜𑌗𑌜𑍍𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌤𑍍𑌮𑌕𑌂 𑌪𑍍𑌰𑌪𑌶𑍍𑌯𑌨𑍍𑌤𑌿 𑌤𑍍𑌵𑌦𑍍𑌰𑍂
𑌪𑌂 𑌪𑌰𑌮𑍇𑌶𑍍𑌵𑌰॥

[இந்த சராசர ரூபமான ஜகத்தானது உன்னால் வ்யாபிக்கப்
பட்டதென்பது உன்னுடைய மஹிமை; (ஆதலால்) பரமார்த்தம்
நீ ஒருவனே; வேறொன்றில்லை; ஓ ஜகந்நாதனே! ஜ்ஞாந
ஸ்வரூபியாய் இருக்கப்பட்ட உனது யாதொரு ரூபமானது இதோ
தெரிகின்றதோ இதை யோகத்தால் உன்னை ஸாக்ஷாத்கரிக்க
அஶக்தராயிருக்கின்றவர்கள் ப்ரமத்தால் ஜகத்ரூபமாகப் பார்க்
கிறார்கள்; இந்த ஜகத் முழுதும் ஜ்ஞாநஸ்வரூபமாகிற ஜீவன்
களால் வ்யாப்தமாய் இருக்கின்றதை மோஹமாகிற ஸம்ஸாரக்
கடலில் ப்ரமித்துக்கொண்டிருக்கிறவர்களான ப்ராக்ருத புருஷ
தத்வ ஜ்ஞாநமில்லாதவர்கள் அர்த்தஸ்வரூபமாக, அதாவது, தேவ
மநுஷ்ய ஶரீரங்களாகப் பார்க்கின்றார்கள்; ஆனால் ஓ பரமேஶ்வரா!
எவர்கள் ஆத்மா ஜ்ஞாநஸ்வரூபி என்னும் உண்மையை அறிந்தவர்க
ளாய், ஸர்வமும் பகவானை ஆத்மாவாக உடையன என்னும்
ஸாக்ஷாத்கார ஸமர்த்தராகி, ஶுத்தமான மநஸுடன் கூடினவர்
களோ, அவர்கள் தேவ மநுஷ்யாதி ஶரீர விஶிஷ்டமான ஸர்வ

ஜகத்தையும் கேவலம் ஜ்ஞாநஸ்வரூபத்துடன் கூடிய ஆத்மாக்க ளாகிற உன்னுடைய ஶரீரமாகப் பார்க்கின்றார்கள்.] என்றிப்படிச் சொல்லப்பட்டிருக்கிறது. இது நம்முடைய ஸம்ப்ராதாயார்த்தம்.

ஈஶ்வரனென ஜீவனும் ப்ரஹ்மம் என்றுசொல்லும் அத்வைதி களுக்கு ஜ்ஞாநாத்மகம் என்றாலும் ஜ்ஞாநஸ்வரூபம் என்றாலும், காணப்படும் ஜகத்துக்கு ஆதாரமாக விருக்கும் உண்மையான வஸ்து, ஸத்யம் ஜ்ஞாநம் அநந்தம் ப்ரஹ்ம என்னும் வசநத்தின்படி, ஶ்ருதியினால் சொல்லப்பட்ட ஜ்ஞாநமாகிற ப்ரஹ்மம் தான் என்றாகிறது. 'ப்ரபஞ்சம் மித்யை; அது ஸத்யமான ப்ரஹ்மத்தி னிடம் அஜ்ஞாநத்தால் ஏறிடப்பட்டது' என்று சொல்பவருக்கு மேலே புராணத்தினின்று எடுத்தெழுதப்பட்ட ஶ்லோகங்களுக்கு ஸுலபமாக அர்த்தமாய் விடும். ஸர்வவேதாந்த ப்ரகரணங்களிலும் ஸமமான விஶ்வாஸமுடைய நமது ஸம்ப்ரதாயத்தினர் தத்வங் களின் ஸ்வரூபத்தைக் குறித்தும், ஸம்பந்தங்களைக் குறித்தும் மேலே சொன்ன விஶ்வாஸமடியாகப் பிறந்த ஜ்ஞாநத்தால் வேறு விதமாக அர்த்தம் செய்வார்கள். ஸ்வரூபத்தில் எப்போதும் விகாரத்தை யடையாமல் ஒரே ரூபமாய் என்றும் இருக்கும் தத்வம் ஈஶ்வரன்; அவனுக்குச் சித்தும் அசித்தும் விஶேஷங்களானாலும் விகாரத்தை உண்டாக்கமாட்டாது; அவன் பரமார்த்த வஸ்து; ப்ராக்ருதியென விகாரமில்லாதவன்; ஜீவன்களென அவித்யைக் கும் கர்மத்துக்கும் வசப்பட்டு ஸம்ஸரிக்காதவன்; ஶரீரமற்ற வன்; பாபமற்றவன்; துக்க மற்றவன்; அவன் பரமமான, அதாவது, ஸர்வோத்க்ருஷ்டமான தத்வம்; சித் வஸ்துக்களுக் கும் அசித் வஸ்துக்களுக்கும் அவன் அந்தராத்மாவாக இருக் கின்றான்; இவை, அவன் ஶக்திகளாகவும் ஶரீரங்களாகவும் இருக்கின்றன.

"யஸ்ஸர்வேஷு பூதேஷு திஷ்டந், ஸர்வேப்யோ பூதேப்யோऽந்தர:, யம் ஸர்வாணி பூதாநி ந விது: யஸ்ய ஸர்வாணி பூதாநி ஶரீரம், யஸ்ஸர்வாணி பூதாந்யந்த



ரோ யமயதி, ஏஷ த ஆத்மாऽந்தர்யாம்யம்ருத:" என்றும், "யோ விஜ்ஞாநே திஷ்டந் விஜ்ஞாநாதந்தர:, யம் விஜ்ஞாநம் ந வேத, யஸ்ய விஜ்ஞாநம் ஶரீரம், யோ விஜ்ஞாநமந்தரோ யமயதி ஸ த ஆத்மாऽந்தர்யாம்யம்ருத:"

என்றும், ப்ருஹதாரண்யகோபநிஷத்தில் ப்ரமாணம் இருக் கின்றது. பூதங்களென்றால் ப்ராணி வர்க்கங்கள். 'எல்லா ப்ராணி களிடமும் நாராயணன் இருக்கின்றான்; எல்லாவற்றுக்குள்ளு மிருக்கிறான்; அவை இவனையறியமாட்டா; அவை இவனது ஶரீரங்கள்; நாராயணன் யாவற்றுள்ளுமிருந்து ஆள்கின்றான்; என்றும் உள்ள அந்த ஈஶனே உனக்கும் அந்தர்யாமி. என்று உபநிஷத் சொல்லிற்று. இதில் ஶரீரத்துடன் கூடிய எல்லா ஜீவன் விஷயமாகவும் உபதேசம் செய்யப்பட்டது. கர்மமூலமான ஶரீர மற்ற நித்யர்களென்றும் முக்தர்களென்றும் சொல்லப்பட்டவர் விஷயமாக அவர்களையும் சேர்த்து விஜ்ஞாந சப்தத்தால் மறுபடியும் அதேவிதமான உபதேசம் செய்யப்பட்டிருக்கிறது. இப்படி ஸர்வ ஶரீரியும், ஶரீரங்களில் விகாரம் புகுந்தாலும் ஸ்வரூபத்தில் விகாரமற்றவனுமான ஈஶ்வரன் பரமார்த்தன் என்னப்பட்டான். ஸ்வரூபத்தில் விகாரமற்று ப்ரக்ருதி ஸம்பந்தத்தால் விகா ரார்ஹமாயும், அவித்யை கர்மம் முதலானவற்றுக்கு வசப்படக் கூடியதாயு மிருப்பதால் ஜீவனைப் பாரார்த்த மெனலாம். ப்ரவா ஹத்தால் நித்யமாகவிருந்தும், அசேதநமாயும், ஸததம் விகாரங்களை அடைவதுமான ப்ரக்ருதியும், (ப்ராக்ருத பதார்த்தங்களும்) கேவலம் அர்த்தமெனப்படும். இந்த யோசனைகளை மறவாமல், மேலெடுத் துரைத்த புராணவசநங்களின் அர்த்தத்தை அறியப் புகுந்தால் நம் ஸம்ப்ரதாயார்த்தம் யதார்த்தமென விளங்கும்.

ஈஶ்வரனும் ஜீவனும் ஜ்ஞாந ஸ்வரூபிகள். அவர்களுக்கு ஜ்ஞாநம் குணமாகவும் இருக்கின்றது. அவர் ஸ்வரூபத்தை ஜ்ஞாநம் என்றும், ஜ்ஞாநஸ்வரூபோ பகவாந்யதோऽஸௌ என்றும், [illegible] என்றும், ஜ்ஞாநம் விஶுத்தம் விமலம் விஶோகம் என்றும், தஜ்ஜ்ஞாநம்

ப்ரஹ்மஸம்ஜ்ஞிதம், ஜ்ஞாநஸ்வரூபமேவ ஶுத்தம், விஜ்ஞாநம் யஜ்ஞம் தநுதே என்றும், இப்படிப் பஹுப்ரமாணங்கள் சொல்லுகின்றன. ஜ்ஞாந குணத்துடன் கூடினவராகவும் ப்ரமாணங்கள் உண்டு. யஸ் ஸர்வஜ்ஞஸ் ஸர்வவித், ஸத்யகாமஸ் ஸத்யஸங்கல்ப: யோऽயம் விஜ்ஞாநமய: ப்ராணேஷு ஹ்ருத்யந்தர்ஜ்யோதி: புருஷ:, கவிர்மநீஷீ, ஸம்ப்ரஸந்ந, ப்ரஹ்மணா விபஶ்சிதா, விஜ்ஞாதாரமரே கேந விஜாநீயாத், நாந்யோऽதோऽஸ்தி த்ரஷ்டா, என்றிப்படி அநேக வசநங்கள் எடுக்கக்கூடும். ஸூத்ரகாரர் இதைப்பற்றி நிஷ்கர்ஷிக்குமிடத்தில் ஜ்ஞோऽத ஏவ, தத்குணஸாரத்வாத் து தத்வ்யபதேஶ: ப்ராஜ்ஞவத், என்கிற ஸூத்ரங்களால், ஆத்மாவும் ப்ரஹ்மமும் ஜ்ஞாதாக்களென்றும், ஜ்ஞாநம் அவர்களுடைய குணங்களில் முக்யமானதாகையால், ஜ்ஞாநமென்றே அவர்களுக்குப் பெயருமுண்டென்று சொல்லுகிறார். அவர்கள் அஸத் அல்லவென்பதைக் குறிப்பதற்கு அவர்களுக்கு ஸத்யம் எனவும் வ்யவஹாரம் உண்டு. ஆனால் ஈஶ்வரனுடைய நிருபாதிக ஸத்தை ஜீவனுக்கில்லை, ஜீவன் விகாரத்துடன் கூடிய ப்ராக்ருதி ஸம்பந்தம் உள்ளவன்.

ஈஶ்வரன் அநந்தனெனப்படுகிறான்; அவனுடைய ஆநந்த்யம் அடியாக அவனை, தேஶத: காலத: வஸ்துத: பரிச்சேதஶூந்ய: என்று சொல்லப்படும். அவன் ஒரு தேசத்திலிருக்கிறான் மற்றொரு தேசத்திலில்லை எனப்படாது; ஒரு காலத்திலிருக்கிறான் மற்றொரு காலத்திலில்லை எனப்படாது; ஸர்வ தேசத்திலும் ஸர்வ காலத்திலும் இருக்கப்பட்டவன்; ஒரு வஸ்துவும் அவனைத் தன்னிடத்தில் இல்லாது விலக்கமாட்டாது. ஜலத்தில் ஒரு கல்லைப் போட்டால் அந்தக் கல்லிருக்குமிடம் ஜலம் இராது; ஒரு பாறையோ மலையோ இருக்குமிடம் வாயுவும் ஆகாசமும் இரா. ஈஶ்வரன் ஒரு வஸ்துவாலும் விலக்கப்படமாட்டான் என்றால், அந்தந்த வஸ்துவின்



600 008.

ப்ரதேசம் முற்றிலும் அவன் வ்யாபித்திருக்கின்றான் என்று ஏற்படுகிறது. ஒவ்வொரு அணுவுக்குள்ளும் அவன் இருக்கின்றான் என்றால், அணுக்களின் சேர்க்கையால் உண்டாயிருக்கின்ற மஹத்தான ஒவ்வொரு வஸ்துவின் முழுவதிலும் ஈஶ்வரன் இருக்கின்றான் என்று விளங்குகின்றது. இதைத் தான் அந்தர்பஹிஶ்ச தத்ஸர்வம் வ்யாப்ய நாராயண: ஸ்தித: என்று வேதம் சொல்லிற்று. ஒவ்வொன்றிலும் உள்ளும் புறமும் முழுதும் வ்யாபித்து நாராயணன் நிற்கின்றான்.

ஈஶ்வரன் ஸ்வரூபத்தால் மாத்திரம் அநந்தன் என்றால் போதாது; குணத்தாலும் அவன் அநந்தன். யதீக்ஷயா நிவர்த்தந்தே ந மேவிந்த குணக்ஷயாச்ச என்றும், நாந்தம் குணாநாம் கச்சந்தி தேநாநந்தோऽயமுச்யதே என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. ஈஶ்வரனுடைய ஸர்வ கல்யாண குணங்களையும் வர்ணிக்க எவரும் ஶக்தரல்லர்; மஹாபுத்திமான்களது புத்தியும் அவன் அநந்த குணங்களையும் க்ரஹிக்கத் திறனற்றது; அதனால் அவனுக்கு அநந்தனென்று பெயர்.

பகவானுக்கு ஆநந்தமெனவும் பெயருண்டு. ஆநந்தம் அவன் ஸ்வரூபமுமாகும், குணமுமாகும். விஜ்ஞாநமாநந்தம் ப்ரஹ்ம, ஆநந்தோ ப்ரஹ்மேதி வ்யஜாநாத், அந்யோऽந்தர ஆத்மாऽऽநந்தமய:, யதோ வாசோ நிவர்த்தந்தே அப்ராப்ய மநஸா ஸஹ, ஆநந்தம் ப்ரஹ்மணோ வித்வாந், என்கிற வசநங்கள் இவ்விடம் ஸ்மரிக்கத்தக்கன. ஆநந்தமாவது, ஜ்ஞாந விசேஷம்; அநுகூல ரூபமான ஜ்ஞாநம். ஈஶ்வரன் ஜ்ஞாநம் வேறுவிதமாக இருக்கவிடமில்லை.

அன்றியும், பகவான் அபஹத பாப்மத்வாதி குணாஷ்டகங்களுடன் கூடியவன். அபஹத பாப்மா விஜரோ விம்ருத்யுர்விஶோகோ விஜிகத்ஸோऽபிபாஸ: ஸத்யகாம: ஸத்யஸங்கல்ப:, என்று சாந்தோக்யோபநிஷத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது,

பகவானுக்குப் பாபத்தின் ஸம்பந்தமேயில்லை; கர்மவஶத்தால் பாபத்தின் ஸம்பந்தத்தை ஜீவனடைகிறான்; பகவானைக் கர்மம் தொடாது. அப்படியே ஜரை, மரணம், ஶோகம், முதலானவை பகவானைத் தொடரா. இவை கர்ம சக்ரத்திலகப்பட்டுக் கொண்ட ஜீவன்களைத் தொடர்கின்றன. ஈஶ்வரனுக்குப் பசியும் தாகமும் கிடையாது. கர்மார்ஜிதமான ஶரீரங்களையுடைய நமக்குத்தான் இவற்றின் கொடுமையை அநுபவிக்கவேண்டும். ஸங்கல்பம் காமத்துக்கு ஹேது. இரண்டும் ஈஶ்வரனிடம் ஸத்யங்களெனப்பட்டன. அதாவது, அவன் ஸங்கல்பமும் இச்சையும் வ்யர்த்தங்களாகா என்றபடி. அல்லது, போக்ய போகோபகரண போகஸ்தாந ரூபமான நித்யமாயிருக்கப்பட்ட காமங்களுடன் கூடிய நித்ய விபூதியையுடையவன் ஸத்யகாமன். இவை ஈஶ்வரனுக்கென்றில்லை; அவனுடைய நித்யராகவும் முக்தராகவும் இருக்கப்பட்ட கிங்கரர் அநுபவார்த்தமே. அவர்தான் காமாந்நீ காமரூப்யநு என்று வேதத்தில் சொல்லப்பட்டவர். ஈஶ்வரன் ஸத்ய ஸங்கல்பனானபடியால், அவனடியார் நிமித்தம் அவன் ஸங்கல்பித்த காமங்கள் அடியாருக்கு அநுபவ யோக்யங்களாகின்றன. அவருக்கு ரூபங் இச்சாநுரூபமாய் உண்டாகின்றனவெனில், அவை அவருடைய ஸங்கல்பத்தை அநுஸரித்து நின்ற ஈஶ்வரனுடைய நித்யேச்சா ஸித்தம். ஈஶ்வரனுடைய நித்யேச்சைக்கு விரோதமாக அவர்க்கும் காமம் உதிக்காது. இன்னும் ஈஶ்வரனை ஷாட்குண்ய பரிபூர்ணன் என்பார்; அந்த ஆறு குணங்கள் ஜ்ஞாநம், பலம், ஐஶ்வர்யம், வீர்யம், ஶக்தி, தேஜஸ் என்பவைதான்.

> ஜ்ஞாந ஶக்தி பலைஶ்வர்ய வீர்ய தேஜாம்ஸ்யஶேஷத꞉ ।
> பகவச்சப்த வாச்யாநி விநா ஹேயைர் குணாதிபி꞉ ॥

எனும் ஸ்ரீ விஷ்ணுபுராண வசநப்படி ஹேயமான ப்ரக்ருதியின் குணங்களென்ன, அவற்றினடியாய் உண்டாகும் கர்மமென்ன, கர்ம



பலங்களென்ன, இவற்றின் ஸம்பந்தம் முற்றும் இலனாய், மற்றெங்கும் காணக்கூடாதவளவு மேல் சொன்ன ஆறு குணங்களுடைய பூர்த்தியைத் தன்னுடைய மற்ற அஶேஷ கல்யாண குணங்களுடன் வஹிக்கின்றான் ஆதலால், ஈஶ்வரன் பகவானெனப் படுகின்றான் என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றது. மேலும்,

> ஏவமேஷ மஹாஞ்சப்தோ மைத்ரேய பகவாநிதி ।
> பரமப்ரஹ்மபூதஸ்ய வாஸுதேவஸ்ய நாந்யக꞉ ॥
> தத்ர பூஜ்யபதார்த்தோக்தி பரிபாஷா ஸமந்வித꞉ ।
> ஶப்தோ(அ)யம் நோபசாரேண த்வந்யத்ர ஹ்யுபசாரத꞉ ॥

என்று, இதற்கு முன் புராணத்தில் காட்டப்பட்டவண்ணம், "பக" என்னும் இரண்டக்ஷரங்கள் ஜ்ஞாநம், ஶக்தி, பலம், ஐஶ்வர்யம், வீர்யம், தேஜஸ் ஆகிற ஆறு குணங்களைக் குறிக்கின்ற ப்ரகாரத்தையும், "வ" என்கிற அக்ஷரம் அவனிடம் ஸர்வபூதங்களும் வஸிக்கின்றன, அவன் ஸர்வபூதங்களிடமும் இருக்கின்றான் என்று பொருள்தருமென்பதையும், "பக" என்னப்பட்ட ஷாட்குண்யத்துடன் கூடினவன் "பகவாந்" என்னப்படுவன் என்பதையும் கருத்தில் கொண்டு, இந்த பகவானெனும் மஹா ஶப்தமானது பரப்ரஹ்மமாயிருக்கும் வாஸுதேவனிடம் பொருந்துமென்றும், மற்றெவ்விடத்திலும் பொருந்தாதென்றும் பாராசரர் அறுதியிட்டனர். பின்னர், உலகத்தில் பூஜ்யர்களிடம் பகவான் எனும் சப்த ப்ரயோகம் ஸங்கேதமடியாய் உண்டாயிருப்பதை ஸ்மரித்து, அந்த ரூபமான பரிபாஷை உண்டாயிருந்தாலும், தேவதாந்தரங்களிடமும் பெரியோரிடமும் கேவலம் உபசாரமாக பகவானெனும் சப்தம் உச்சரிக்கப்படுமென்றும், வாஸுதேவன் விஷயமாக இந்தச் சொல் குணபூர்த்தியாலும் ரூடியாலும் வந்ததேயன்றி உபசாரத்தால் ப்ரயோகிக்கப்பட்டதன்று என முடிக்கின்றார்.

இந்தப் புராண ப்ரகரணத்தில், முண்டகோபநிஷத்தில் செய்யப்பட்ட பராபர வித்யாவிபாகம் ஸ்மரிக்கப்பட்டிருக்கிறது. அபர வித்யையாகிற நான்கு வேதங்களையும், அவற்றின் ஷடங்கங்களையும் சொல்லி, அக்ஷர ஶப்தவாச்யனான பரப்ரஹ்மத்தினுடைய ப்ராப்திக்கு ஸாதநமாயிருக்கும் பரவித்யையும் சொல்லப்பட்டிருக்கிறது. அக்ஷர ஸ்வரூபத்தை உபநிஷத்தானது 𑌯𑌤𑍍𑌤𑌦𑌦𑍍𑌰𑍇𑌶𑍍𑌯𑌮𑌗𑍍𑌰𑌾𑌹𑍍𑌯𑌮𑌗𑍋𑌤𑍍𑌰𑌮𑌵𑌰𑍍𑌣𑌮𑌚𑌕𑍍𑌷𑍁𑌃𑌶𑍍𑌰𑍋𑌤𑍍𑌰𑌂 𑌤𑌦𑌪𑌾𑌣𑌿𑌪𑌾𑌦𑌂 𑌨𑌿𑌤𑍍𑌯𑌂 𑌵𑌿𑌭𑍁𑌂 𑌸𑌰𑍍𑌵𑌗𑌤𑌂 𑌸𑍁𑌸𑍂𑌕𑍍𑌷𑍍𑌮𑌂 𑌤𑌦𑌵𑍍𑌯𑌯𑌂 𑌯𑌦𑍍𑌭𑍂𑌤𑌯𑍋𑌨𑌿𑌂 𑌪𑌰𑌿𑌪𑌶𑍍𑌯𑌨𑍍𑌤𑌿 𑌧𑍀𑌰𑌾𑌃,

[யாதொன்று ஜ்ஞாநேந்த்ரியங்களுக்கும் கர்மேந்த்ரியங்களுக்கும் எட்டாதோ, குல வர்ணாதிகளற்றதோ அல்லது அந்வய ரூபமான ஜந்மமும் த்ரவ்ய தர்மங்களுமற்றதோ, ஜ்ஞாந கர்மேந்த்ரியங்களற்றதோ, என்றுமுள்ளதும், எவ்விடமும் உள்ளதாகையால் கால தேசங்களால் எல்லையிடத் தகாததோ, ஸ்வரூபத்தில் அத்யந்தம் ஸூக்ஷ்மமாதலால் எல்லாவற்றினுள்ளும் ப்ரவேஶித்திருப்பதோ, அபக்ஷய விநாஶாதிகளற்றதோ, அப்படிப்பட்ட ஸர்வபூதங்களுக்கும் காரணமாயிருக்கும் அக்ஷர ஶப்தவாச்யமான ப்ரஹ்மத்தை ஜ்ஞாதாக்கள் எல்லாவற்றிற்கும் ஆத்மாவாகப் பார்க்கின்றார்கள்.] என விவரித்து, இந்த ரூபமான ப்ரஹ்மம் எந்த வித்யையால் அறியப்படுமோ அதை பரவித்யை என்று நிரூபித்தது. அவ்வண்ணமே, புராண ரத்நத்திலும்,

𑌪𑌰𑌯𑌾𑌕𑍍𑌷𑌰𑌸𑌮𑍍𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑌿𑌃 𑌋𑌗𑍍𑌵𑍇𑌦𑌾𑌦𑌿𑌮𑌯𑌾𑌽𑌪𑌰𑌾 ॥ 𑌯𑌤𑍍𑌤𑌦𑌵𑍍𑌯𑌕𑍍𑌤𑌮𑌜𑌰𑌮𑌚𑌿𑌨𑍍𑌤𑍍𑌯𑌮𑌜𑌮𑌵𑍍𑌯𑌯𑌮𑍍 । 𑌅𑌨𑌿𑌰𑍍𑌦𑍇𑌶𑍍𑌯𑌮𑌰𑍂𑌪𑌂 𑌚 𑌪𑌾𑌣𑌿𑌪𑌾𑌦𑌾𑌦𑍍𑌯𑌸𑌂𑌯𑍁𑌤𑌮𑍍 । 𑌵𑌿𑌭𑍁𑌃 𑌸𑌰𑍍𑌵𑌗𑌤𑌂 𑌨𑌿𑌤𑍍𑌯𑌂 𑌭𑍂𑌤𑌯𑍋𑌨𑌿𑌰𑌕𑌾𑌰𑌣𑌮𑍍 । 𑌵𑍍𑌯𑌾𑌪𑌿 𑌵𑍍𑌯𑌾𑌪𑍍𑌤𑌂 𑌯𑌤𑌃 𑌸𑌰𑍍𑌵𑌂 𑌯𑌦𑍍𑌵𑍈 𑌪𑌶𑍍𑌯𑌨𑍍𑌤𑌿 𑌸𑍂𑌰𑌯𑌃 ॥ 𑌤𑌦𑍍𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌤𑌤𑍍𑌪𑌰𑌂𑌧𑌾𑌮 𑌤𑌦𑍍𑌧𑍍𑌯𑍇𑌯𑌂 𑌮𑍋𑌕𑍍𑌷𑌕𑌾𑌙𑍍𑌕𑍍𑌷𑌿𑌭𑌿𑌃 । 𑌶𑍍𑌰𑍁𑌤𑌿𑌵𑌾𑌕𑍍𑌯𑍋𑌦𑌿𑌤𑌂 𑌸𑍂𑌕𑍍𑌷𑍍𑌮𑌂 𑌤𑌦𑍍𑌵𑌿𑌷𑍍𑌣𑍋𑌃 𑌪𑌰𑌮𑌂 𑌪𑌦𑌮𑍍 ॥ 𑌤𑌦𑍇𑌵 𑌭𑌗𑌵𑌦𑍍𑌵𑌾𑌚𑍍𑌯𑌂 𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌂 𑌪𑌰𑌮𑌾𑌤𑍍𑌮𑌨𑌃 । 𑌵𑌾𑌚𑌕𑍋 𑌭𑌗𑌵𑌚𑍍𑌛𑌬𑍍𑌦𑌃 𑌤𑌸𑍍𑌯𑌾𑌦𑍍𑌯𑌸𑍍𑌯𑌾𑌕𑍍𑌷𑌯𑌾𑌤𑍍𑌮𑌨𑌃 ॥ என்று சொல்லப்பட்டிருக்கிறது.



பரவித்யையால் அக்ஷர ப்ராப்தியுண்டாகும்; அபர வித்யையானது ருக்வேதம் முதலானவை; இந்த்ரியங்களுக்கு அவிஷயமாயும், மூப்பற்றும், மநஸ்ஸுக்கெட்டாததும், பிறப்பில்லாததும், ரூப விகார ரஹிதமாயும், வாக்கினால் வ்யவஹரிக்கக்கூடாததும், ரூபமற்றதும், கை கால்கள் முதலானவை இல்லாததும், யாவற்றையும் சூழ்ந்து பரவி நிற்றலால் பரிச்சேதம் இல்லாததும், நித்யமானதும், ஸ்வயம் காரணமற்றதும், ஸர்வபூதங்களுக்கும் காரணமானதும், யாவற்றையும் தான் வியாபித்து ஒன்றாலும் வியாபிக்கப்படாததும், ஸர்வ ஜகத்தும் எதினின்று உண்டானதோ, நித்யஸூரிகள் எதை ஸதா ஸாக்ஷாத்கரித்துக்கொண்டிருக்கின்றார்களோ, அப்படிப்பட்ட ப்ரஹ்மம் தான் அக்ஷரம் என்பது. அதுதான் பரமமான தேஜோரூபம்; மோக்ஷத்தை அபேக்ஷிக்கிறவர்களால் த்யாநிக்கத்தக்கது; அதிஸூக்ஷ்மமானது; ஶ்ருதி வாக்யத்தால் விஷ்ணுவினுடைய அந்த பரமபதமெனச் சொல்லப்பட்டது; பரமாத்மாவினுடைய இந்த ஸ்வரூபம்தான் பகவத் ஶப்தத்தால் வ்யவஹரிக்கத்தக்கது; ஸர்வத்துக்கும் காரணமானவனும் ஸ்வரூப ரூப குண விபவங்களால் அநந்தனுமாயிருக்கப்பட்ட அவனுடைய யாதாத்ம்ய ஸ்திதியைக் காட்டவல்ல பதம் பகவான் என்பது; இப்படி ஸர்வேஶ்வரனுடைய ஷாட்குண்யத்தையும், த்வாதஶாக்ஷர மந்த்ரத்தின் அர்த்த விஶேஷங்களையும் விவரிக்குமிடத்து அந்த மந்த்ரத்தில் அந்தர்க்கதமான பகவத் ஶப்தார்த்த விசார ப்ரகரணத்தில் ருஷிஶ்ரேஷ்டரான பராஶரர் ஸ்மரித்தருளின விஸ்தாரத்தை இவ்விடம் ஸங்க்ரஹித்தோம்.

ஸ்ரீ. த. ரங்காசார்யர்.

# ஸ்ரீ அஹோபில ந்ருஸிம்ஹன் விஷயம்.

## உ-ப்ரஹ்லாத சரித்திரம். *

இப்படிச் சில காலம் சென்றது. குமாரன் வித்யாக்ரஹணம் செய்தான். அவனை ஹிரண்யகசிபுவுக்குக் காட்டவேண்டுமென்று அவர்க்கு எண்ணம் உண்டாய் ராஜாவின் ஆஜ்ஞையை முன்னிட்டுக் கொண்டு, ப்ரஹ்லாதனை ராஜ நிவேசநத்துக் கழைத்துக்கொண்டு போனார்கள். அங்கே அவன் மாதா கயாது அவனுக்கு நீராட்டி உசிதமாக அலங்காரம் செய்தனள். இப்படி அலங்க்ருதனான ப்ரஹ்லாதனை அவன்குரு ஹிரண்யகசிபுவின் முன்பாகக் கொண்டு விடவே, ப்ரஹ்லாதன் பிதாவின் பாதங்களைப் பற்றி நமஸ்கரித்தான். அஸுரேஸ்வரனும் ஸந்தோஷத்துடன் குமாரனை ஆசீர்வதித்து; காடாலிங்கநம் செய்து ஆநந்தமடைந்தான். பின்பு புத்ரனை மடிமேல் உட்காரவைத்துக் கொண்டு, உச்சிமோந்து, கண்களால் ஆநந்தபாஷ்பம் பெருக, "ப்ரஹ்லாத! யாதேனும் நீ கேட்டதும் உத்தமமான அர்த்தத்துடன் கூடியதுமான ஸ்லோகம் சொல்" என்று கேட்டான். கேட்கவே, ப்ரஹ்லாதன்,

𑌯𑌤𑌃 𑌪𑍍𑌰𑌧𑌾𑌨𑌪𑍁𑌰𑍁𑌷𑍌 𑌯𑌤𑌶𑍍𑌚𑍈𑌤𑌚𑍍𑌚𑌰𑌾𑌚𑌰𑌮𑍍 ।
𑌕𑌾𑌰𑌣𑌂 𑌸𑌕𑌲𑌸𑍍𑌯𑌾𑌸𑍍𑌯 𑌸 𑌨𑍋 𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌃 𑌪𑍍𑌰𑌸𑍀𑌦𑌤𑍁 ॥

* * * * * *

𑌶𑍍𑌰𑌵𑌣𑌂 𑌕𑍀𑌰𑍍𑌤𑌨𑌂 𑌵𑌿𑌷𑍍𑌣𑍋𑌃 𑌸𑍍𑌮𑌰𑌣𑌂 𑌪𑌾𑌦𑌸𑍇𑌵𑌨𑌮𑍍 ।
𑌅𑌰𑍍𑌚𑌨𑌂 𑌵𑌨𑍍𑌦𑌨𑌂 𑌦𑌾𑌸𑍍𑌯𑌂 𑌸𑌖𑍍𑌯𑌮𑌾𑌤𑍍𑌮𑌨𑌿𑌵𑍇𑌦𑌨𑌮𑍍 ॥
𑌇𑌤𑌿 𑌪𑍁𑌂𑌸𑌾𑌰𑍍𑌪𑌿𑌤𑌾 𑌵𑌿𑌷𑍍𑌣𑍌 𑌭𑌕𑍍𑌤𑌿𑌶𑍍𑌚𑍇𑌨𑍍𑌨𑌵𑌲𑌕𑍍𑌷𑌣𑌾 ।
𑌕𑍍𑌰𑌿𑌯𑍇𑌤 𑌭𑌗𑌵𑌤𑍍𑌯𑌦𑍍𑌧𑌾 𑌤𑌨𑍍𑌮𑌨𑍍𑌯𑍇𑌽𑌧𑍀𑌤𑌮𑍁𑌤𑍍𑌤𑌮𑌮𑍍 ॥

* இந்த ஸம்புடம் 168-வது பக்கத்திலிருந்து தொடர்ச்சி.

[ப்ரதாநமும் புருஷரும் எவனிடமிருந்து ஆவிர்ப்பவித்தார்களோ, சராசர ரூபமான ஜகத் எவனிடமிருந்து உண்டாயதோ, நமக்குத் தெரிகின்ற ஸகலத்துக்கும் எவன் நிமித்தகாரணமாகின்றானோ, அந்த விஷ்ணு நமக்கு க்ருபை பண்ணட்டும்; அந்த விஷ்ணுவின் ஸ்வரூப குண விபூதிகளைப் பற்றிக் கேட்பதென்ன, அவனுடைய நாமஸங்கீர்த்தநமென்ன, அவன் ஸ்வரூப த்யாநமென்ன, அவன் திருவடிகளில் செய்யத்தக்க பரிசர்யையென்ன, அவன் பூஜையென்ன, அவனைக் குறித்துச் செய்யும் நமஸ்காரமென்ன, அவன் தாஸனாகப் பணிவிடை செய்யலென்ன, அவனிடம் ஸ்நேஹமென்ன, தனது ஆத்மாவை அவனிடம் ஸமர்ப்பித்தல் என்ன, இந்த ஒன்பது விதமான பக்தியானது புருஷனால் நிஜமாகப் பகவானிடம் பண்ணப்பட்டு, அவனிடமே ஸமர்ப்பிக்கப்பட்டதாகில், அதைத் தெரிவிக்கும் ஸாஸ்த்ரத்தைத் தான் படித்ததில் உத்தமமென்று நினைக்கிறேன்] என்று இந்த ரூபமான அர்த்தமடங்கிய ஸ்லோகங்களைச் சொன்னான். இதைக் கேட்டவுடன் ஹிரண்யகசிபு மிகுந்த கோபத்துடன் ப்ரஹ்லாதனைப் பார்த்து "இப்படிப்பட்ட அமங்களமான துஷ்ட புத்தியானது குருமுகத்தால் உனக்குக் கிடைக்கவில்லை; எங்கிருந்து வந்தது" என வினவ, ப்ரஹ்லாதன்,

𑌮𑌤𑌿𑌰𑍍𑌨 𑌕𑍃𑌷𑍍𑌣𑍇 𑌪𑌰𑌤𑌃 𑌸𑍍𑌵𑌤𑍋 𑌵𑌾
𑌮𑌿𑌥𑍋𑌽𑌭𑌿𑌪𑌦𑍍𑌯𑍇𑌤 𑌗𑍃𑌹𑌵𑍍𑌰𑌤𑌾𑌨𑌾𑌮𑍍 ।
𑌅𑌦𑌾𑌨𑍍𑌤𑌗𑍋𑌭𑌿𑌰𑍍𑌵𑌿𑌶𑌤𑌾𑌂 𑌤𑌮𑌿𑌸𑍍𑌰𑌂
𑌪𑍁𑌨𑌃 𑌪𑍁𑌨𑌶𑍍𑌚𑌰𑍍𑌵𑌿𑌤𑌚𑌰𑍍𑌵𑌣𑌾𑌨𑌾𑌮𑍍 ॥
𑌨 𑌤𑍇 𑌵𑌿𑌦𑍁𑌃 𑌸𑍍𑌵𑌾𑌰𑍍𑌥𑌗𑌤𑌿𑌂 𑌹𑌿 𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌂
𑌦𑍁𑌰𑌾𑌶𑌯𑌾 𑌯𑍇 𑌬𑌹𑌿𑌰𑌰𑍍𑌥𑌮𑌾𑌨𑌿𑌨𑌃 ।
𑌅𑌨𑍍𑌧𑌾 𑌯𑌥𑌾𑌨𑍍𑌧𑍈𑌰𑍁𑌪𑌨𑍀𑌯𑌮𑌾𑌨𑌾𑌃
𑌵𑌾𑌚𑍀𑌶𑌤𑌨𑍍𑌤𑍍𑌰𑍍𑌯𑌾𑌮𑍁𑌰𑍁𑌦𑌾𑌮𑍍𑌨𑌿 𑌬𑌦𑍍𑌧𑌾𑌃 ॥
𑌨𑍈𑌷𑌾𑌂 𑌮𑌤𑌿𑌸𑍍𑌤𑌾𑌵𑌦𑍁𑌰𑍁𑌕𑍍𑌰𑌮𑌾𑌙𑍍𑌘𑍍𑌰𑌿𑌂
𑌸𑍍𑌪𑍃𑌶𑌤𑍍𑌯𑌨𑌰𑍍𑌥𑌾𑌪𑌗𑌮𑍋 𑌯𑌦𑌰𑍍𑌥𑌃 ॥
𑌮𑌹𑍀𑌯𑌸𑌾𑌂 𑌪𑌾𑌦𑌰𑌜𑍋𑌽𑌭𑌿𑌷𑍇𑌕𑌂
𑌨𑌿𑌷𑍍𑌕𑌿𑌞𑍍𑌚𑌨𑌾𑌨𑌾𑌂 𑌨 𑌵𑍃𑌣𑍀𑌤 𑌯𑌾𑌵𑌤𑍍 ।

[ஸ்ரீ க்ருஷ்ணனிடம் பக்திரூபமான மதியன்று, வீட்டைத் தவிர மற்றொன்றையும் நினைக்காதவருக்கு ஸ்வயமாயாவது, பரர்களாலாவது, தாமும் பரர்களும் சேர்வதாலாவது உண்டாகமாட்டாது; ஏனென்றால் வீட்டையே வ்ரதமென நினைப்பவர், இந்த்ரியங்களை ஜயிக்கச் சக்தியற்று, பரராலும் தம்மாலும் பூர்வாநுபூதமான போகங்களை மீண்டும் மீண்டும் அநுபவித்துக்கொண்டு தமோ ரூபமான ஸம்ஸாரத்தையே அடைந்து கொண்டிருக்கின்றனர்; தங்களுக்குப் புருஷார்த்தபூதனும், அதை அடைவதற்குக் கதியுமாக விருக்கின்ற விஷ்ணுவை அவர்கள் அறிகின்றாரில்லை; ஏனென்றால், அவர்கள் சித்தமானது விஷய வாஸனையால் தூஷிதமாகி, சப்தாதி விஷயங்களையே புருஷார்த்தமென அபிமானிக்கின்றது; குருடர்களைக் குருடர் அழைத்துப் போவதைப் போல், அவர்கள், ஈச்வரனால் ஏற்படுத்தப்பட்ட வேதத்தின் கர்மகாண்ட ரூபமான கயிற்றினுடைய காம்ய கர்மங்களாகிற பெரிய கட்டால் கட்டப்பட்டவர்கள்; இவர்கள் புத்தியானது பகவானைத்தவிர மற்றொன்றையும் ப்ரயோஜநமாக எண்ணாத மஹா பாகவதர்களுடைய பாததூளியின் ஸேவையை எது பர்யந்தம் வரிக்கமாட்டாதோ, அது பர்யந்தம், எவைகளின் ஸ்பர்சத்தால் ஸர்வ பாபமோக்ஷம் ப்ரயோஜநமாகக் கிடைக்குமோ, அப்படிப்பட்ட ஸ்ரீ த்ரிவிக்ரமனுடைய பாதங்களை ஸ்பர்சிக்கமாட்டாது, அதாவது நினைக்கமாட்டாது.] என்று சொன்னான்.

இதைக் கேட்டான் ஹிரண்யகசிபு. அவன் புத்தியை இருள் மூடியது. பொறுக்க முடியாத கோபம் அவனை வ்யாபித்துவிட்டது. மடியில் வைத்திருந்த ப்ரஹ்லாதனைக் கீழே தள்ளினான். அவனிடம் தத்க்ஷணமே த்வேஷத்தைக் கொண்டாடினான்.

𑌦𑍁𑌰𑌾𑌤𑍍𑌮𑌾 𑌵𑌧𑍍𑌯𑌤𑌾𑌮𑍇𑌷 𑌨𑌾𑌨𑍇𑌨𑌾𑌰𑍍𑌥𑍋𑌽𑌸𑍍𑌤𑌿 𑌜𑍀𑌵𑌤𑌾 ।

[இத்துஷ்டன் கொல்லப்படட்டும். இவன் ஜீவித்திருந்து ஒரு ப்ரயோஜனமுமில்லை.]

𑌵𑌧𑍍𑌯𑌤𑌾𑌮𑌾𑌶𑍍𑌵𑌯𑌂 𑌵𑌧𑍍𑌯𑌃 𑌨𑌿𑌸𑍍𑌸𑌾𑌰𑍍𑌯𑌤𑌾𑌂 𑌚 𑌦𑍈𑌤𑍍𑌯𑌾𑌃 ।

[அஸுரர்களே! இவனை வெளிப்படுத்துங்கள், இவன் கொல்லத் தக்கவன்; சீக்கிரம் கொல்லுங்கள்.] "யாதொரு காரணத்தால், தனக்கு ஸுஹ்ருத்துக்களாக விருக்கும் நம்மைப் பரித்யாகம் செய்து, தன் சிற்றப்பனைக் கொன்ற விஷ்ணுவினுடைய பாதங்களைத் தாஸனெனப் பூஜிக்கின்றானோ, அந்தக் காரணத்தாலே, இவனை நிச்சயமாக என் தம்பியைக் கொன்றவனென்றே நினைக்கிறேன். வ்யவஸ்தையற்ற புத்தியுடன் கூடின இவன், ஐந்தாவது வயஸ்ஸிலேயே பரித்யாகம் செய்யக்கூடாத மாதா பிதாக்களுடைய ஸ்நேஹத்தையே விட்டுவிட்டானே! ஆனபடியால் விஷ்ணுவுக்குத் தான் இவன் என்ன நன்மை செய்யப்போகின்றான்? அயலார் குழந்தையானாலும் நமக்கு ஹிதத்தைச் செய்யுமாகில் ஔஷதம்போல் அதை ஸ்வீகரிக்கலாம். தன் சரீரோத்பந்நனாகிலும் அஹித ஜந புத்ரன் வ்யாதியைப் போன்றவன். நமது சரீரத்துக்குக் கேடுண்டாகும் விஷயத்தில், அந்தக் கேட்டுக்குக் காரணமாயிருக்கும் 'ஓர் அங்கத்தை வெட்டிப்போட்டு, சரீரத்தின் மிகுந்த பாகத்துக்கு ஸுகத்தைத் தரலாம். ஆதலால் ஸர்வோபாயங்களையும் கைக்கொண்டு இவனைக் கொன்றுவிடுங்கள்." என்று இவ்விதமாய்க் கட்டளையிட்டான். நூறு ஆயிரம் கணக்காக தைத்யர்கள் ஆயுதங்களை எடுத்துக்கொண்டு ப்ரஹ்லாதனை நாசம் செய்யும்பொருட்டுப் புறப்பட்டார்கள். ப்ரஹ்லாதன் அவர்களை நோக்கி,



𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌃 𑌶𑌸𑍍𑌤𑍍𑌰𑍇𑌷𑍁 𑌯𑍁𑌷𑍍𑌮𑌾𑌸𑍁 𑌮𑌯𑌿 𑌚𑌾𑌸𑍌 𑌯𑌥𑌾𑌸𑍍𑌥𑌿𑌤𑌃 ।
𑌦𑍈𑌤𑍇𑌯𑌾𑌸𑍍𑌤𑍇𑌨 𑌸𑌤𑍍𑌯𑍇𑌨 𑌮𑌾𑌕𑍍𑌰𑌮𑌨𑍍𑌤𑍍𑌵𑌾𑌯𑍁𑌧𑌾𑌨𑌿 𑌮𑍇 ॥

[அஸுரர்களே! உங்களாயுதங்களிலும், உங்களுக்குள்ளும், என்னிடமும் விஷ்ணு இருக்கின்றார் என்னும் ஸத்யத்தால், உங்கள் ஆயுதங்கள் என்னை நெருங்காமல் போகட்டும்] என்றுரைத்தான். பிறகு ப்ரஹ்லாதன் அந்த தைத்யர்களுடைய சஸ்த்ரவாரியினால் பலதரம் அடிக்கப்பட்ட போதிலும், அல்பமாகிலும் துன்பத்தை யடைந்தானில்லை. புதியதாக உண்டானவன் போல் காணப்பட்டான். ஏனென்றால்,

[illegible] ।
[illegible] ॥

[இன்னதென விஷயீகரிக்கக் கூடாமல், ஸர்வத்துக்குள்ளும் அந்தராத்மாவாயிருக்கும் பரப்ரஹ்மமாகிற பகவானிடம் தன்மனத்தைப்

பூர்ணமாகச் செலுத்திய ப்ரஹ்லாதன்விஷயத்தில் அஸுரர்களுடைய ப்ரயத்நங்களனைத்தும், பாபத்தொழிலில் குதூஹலிப்பவனுடைய ஸத்கர்மங்களென வ்யர்த்தமாயின.] இதைக்கண்ட ஹிரண்யகஶிபுவுக்குக் கிஞ்சித் ஶங்கையும் ஜநித்தது. ஆகிலும் அவன் ப்ரஹ்லாதனைப்பார்த்து, "அடே மதிகேடா! சத்ருபக்ஷப்ரஶம்ஸையை விட்டுவிடு; உனக்கு அபயப்ரதாநம் பண்ணுகிறேன்; மிகவும் மூடமதியாகப் போய்விடாதே." என்றனன். அதன்மேல், ப்ரஹ்லாதன்,

𑌭𑌯𑌂 𑌭𑌯𑌾𑌨𑌾𑌮𑌪𑌹𑌾𑌰𑌿𑌣𑌿𑌸𑍍𑌥𑌿𑌤𑍇
𑌮𑌨𑌸𑍍𑌯𑌨𑌨𑍍𑌤𑍇 𑌮𑌮 𑌕𑍁𑌤𑍍𑌰 𑌤𑌿𑌷𑍍𑌠𑌤𑌿 ।
𑌯𑌸𑍍𑌮𑌿𑌨𑍍𑌸𑍍𑌮𑍃𑌤𑍇 𑌜𑌨𑍍𑌮𑌜𑌰𑌾𑌨𑍍𑌤𑌕𑌾𑌦𑌿
𑌭𑌯𑌾𑌨𑌿 𑌸𑌰𑍍𑌵𑌾𑌣𑍍𑌯𑌪𑌯𑌾𑌨𑍍𑌤𑌿 𑌤𑌾𑌤 ॥

[அப்பா! யாதொருவனை ஸ்மரித்த மாத்ரத்தில் ஜந்மம், ஜரை, மரணம் முதலான எல்லா பயங்களும் நீங்கிவிடுமோ, அப்படிப்பட்ட பயங்களை அபஹரிக்கும் அநந்தன் என்னுடைய மநஸில் நித்யவாஸம் செய்துகொண்டிருக்கையில் பயமென்பது எங்கே நிற்கும்?] என்று உரைக்கவே, ஹிரண்யகஶிபு க்ரூரமான தக்ஷகன் முதலான மஹாஸர்ப்பங்களை ஏவிவிட்டு, ப்ரஹ்லாதனைக் கடிக்கச் செய்தான். அவற்றால் சரீரமெங்கும் விஷமேற ப்ரஹ்லாதன் கடிக்கப்பட்ட தருணத்தில்,

𑌸𑌤𑍍𑌵𑌾𑌸𑌕𑍍𑌤𑌮𑌤𑌿𑌃 𑌕𑍃𑌷𑍍𑌣𑍇 𑌦𑌶𑍍𑌯𑌮𑌾𑌨𑍋 𑌮𑌹𑍋𑌰𑌗𑍈𑌃 ।
𑌨 𑌵𑌿𑌵𑍇𑌦 𑌤𑌦𑌾 𑌗𑌾𑌤𑍍𑌰𑌂 𑌤𑌤𑍍𑌸𑍍𑌮𑍃𑌤𑍍𑌯𑌾𑌹𑍍𑌲𑌾𑌦𑌸𑌂𑌸𑍍𑌥𑌿𑌤𑌃 ॥

[ஸ்ரீ க்ருஷ்ணனிடம் த்ருடமாகச் செலுத்தப்பட்ட புத்தியுடன் கூடினவனாய், அவன் ஸ்மரண ஜநிதமான ஆநந்தாநுபவத்தில் நின்றுகொண்டு தன் சரீரத்தையும் மறந்துவிட்டான்] ஸர்ப்பங்களோ, கோரைப்பற்கள் சிதறிப்போய், ரத்நங்கள் தலையினின்று வெளிப்பட்டு, படங்கள் தபிக்க, ஹ்ருதயம் நடுங்க, ஹிரண்யகஶிபுவைப் பார்த்து, "இவன் தோல் ஈஷத்தாவது பேதிக்கப்படவில்லை, தயவு செய்து வேறு கார்யத்தில் எங்களை ஏவும்" என்றுரைத்தன. ஹிரண்யகசிபு பிறகு திக்கஜங்களை அழைப்பித்து ப்ரஹ்லாதனைக் கொல்லும்படி ஏவினான். மலைச் சிகரங்கள் போன்ற அந்தத் திக்



கஜங்கள் பாலனைப் பூமியில் தள்ளித் தங்கள் தந்தங்களால் குத்தின. கோவிந்தஸ்மரணத்தில் தன்னை மறந்திருந்த ப்ரஹ்லாதன் மார்பில் பட்டவுடனே திக்கஜங்களுடைய தந்தங்கள் பொடிப் பொடியாய்ப் போயின. பிறகு ப்ரஹ்லாதன் பிதாவைப் பார்த்து,

𑌦𑌨𑍍𑌤𑌾 𑌗𑌜𑌾𑌨𑌾𑌂 𑌕𑍁𑌲𑌿𑌶𑌾𑌗𑍍𑌰𑌨𑌿𑌷𑍍𑌠𑍁𑌰𑌾𑌃
𑌶𑍀𑌰𑍍𑌣𑌾 𑌯𑌦𑍇𑌤𑍇 𑌨 𑌬𑌲𑌂 𑌮𑌮𑍈𑌤𑌤𑍍 ।
𑌮𑌹𑌾𑌵𑌿𑌪𑌤𑍍𑌤𑌾𑌪𑌵𑌿𑌨𑌾𑌶𑌨𑍋𑌽𑌯𑌂
𑌜𑌨𑌾𑌰𑍍𑌦𑌨𑌾𑌨𑍁𑌸𑍍𑌮𑌰𑌣𑌾𑌨𑍁𑌭𑌾𑌵𑌃 ॥

[வஜ்ராயுதத்தின் முனைபோல் த்ருடமாயும் தீக்ஷ்ணமாயுமிருக்கும் யானைகளுடைய தந்தங்கள் ஒடிந்துபோயின என்பது என்னுடைய பலத்தாலன்று; ஜநார்த்தநனுடைய இடைவிடாத ஸ்மரணத்தின் மஹிமையானது மஹாவிபத்துக்களையும், அதற்கு மூலபூதமான பாபங்களையும் நாசம் செய்துவிடுகின்றது] என்று சொல்லிப் பகவத்த்வேஷத்தை நிவர்த்திக்கும்படி, தன் பிதாவுக்கு எச்சரிப்பித்தான். ஆனால் ஹிரண்யகஶிபுவோ, அஸுரரைப் பார்த்துத் தீயை வளர்த்தச் சொல்லி, வாயுவையும் அக்நிக்கு ஸஹாயமாயிருக்கும்படி ஆஜ்ஞாபித்து, ப்ரஹ்லாதனைக் கொளுத்திவிடும்படி கட்டளையிட்டான். பெருத்த கட்டைகளின் தொகுதியால் ப்ரஹ்லாதனை முற்றும் மறைத்து அஸுரர்கள் அதற்குத் தீயிட்டனர். அந்தத் தீயின் மத்தியில் நின்றுகொண்டு, ப்ரஹ்லாதன்,

𑌤𑌾𑌤𑍈𑌷 𑌵𑌹𑍍𑌨𑌿𑌃 𑌪𑌵𑌨𑍇𑌰𑌿𑌤𑍋𑌽𑌪𑌿
𑌨 𑌮𑌾𑌂 𑌦𑌹𑌤𑍍𑌯𑌤𑍍𑌰 𑌸𑌮𑌨𑍍𑌤𑌤𑍋𑌽𑌹𑌮𑍍 ।
𑌪𑌶𑍍𑌯𑌾𑌮𑌿 𑌪𑌦𑍍𑌮𑌾𑌸𑍍𑌤𑌰𑌣𑌾𑌸𑍍𑌤𑍃𑌤𑌾𑌨𑌿
𑌶𑍀𑌤𑌾𑌨𑌿 𑌸𑌰𑍍𑌵𑌾𑌣𑌿 𑌦𑌿𑌶𑌾𑌂 𑌮𑍁𑌖𑌾𑌨𑌿 ॥

[தாத! இந்த அக்நியானது, காற்றினால் வ்ருத்தி செய்யப்பட்டபோதிலும், என்னைக் கொளுத்தவில்லை; நாலுபக்கமும் எல்லா திக்ப்ரதேசங்களையும் தாமரைப் புஷ்பங்களே படுக்கைகளென விரிக்கப்பட்டிருக்கக் காண்கின்றேன்] என்று தன் பிதாவைக் கூப்பிட்டுச் சொன்னான். இப்படிக் குழந்தையை ஹிம்ஸிப்பதைப் பார்த்துக்கொண்டிருந்த சண்டாமர்க்கர் ஸாமோக்திகளால் அஸு

ரேசனை ஸ்தோத்ரம்செய்து ப்ரஹ்லாதனைத் தம்முடன் அனுப்பும்படி ப்ரார்த்தித்தனர். "ராஜன்! உமது ஸொந்த குமாரனை பாலன் விஷயத்தில் கோபத்தை அடக்கும்; கோபத்தைத் தேவலோகத்தின்மேல் செலுத்தும்; அவ்விடத்தில் அது பலத்துடன் கூடினதாகும்; நாங்கள் உமது பாலனை பரபக்ஷம் நாசமடையும்படியாகவும், உமக்கு அநுகூலனாகும்படியாகவும் தகுந்தபடி சிக்ஷிக்கிறோம்; பால்யம் ஸர்வதோஷங்களுக்கும் இடங்கொடுக்கின்றபடியால், உமது அதிகமான கோபத்தைக் குழந்தையின்மேல்செலுத்தத் தகாது; இவன் எங்கள் வார்த்தையைக் கேட்டு ஹரியினிடம் விச்வாஸத்தை விடாமற் போனானாகில், யாவராலும் திருப்பக்கூடாத ஆபிசாரிக ப்ரயோகத்தை இவன் வதத்தின் பொருட்டுச் செய்துவிடுகின்றோம்." என்றிப்படி அவர் சொல்லியதைக் கேட்டு ஹிரண்யகசிபு அஸுரர்களைக் கொண்டு ப்ரஹ்லாதனை அக்நியினின்று வெளிப்படுத்திக் குருக்கள் வீட்டுக் கனுப்பினான். ராஜர்களுக்கும் க்ரஹஸ்தர்களுக்கும் பொருந்திய தர்மங்களை ப்ரஹ்லாதனுக்கு உபதேசிக்கும்படிக் கட்டளையிட்டான். சண்டாமர்க்கரும் தர்மம், அர்த்தம், காமம் முதலானவற்றைப்பற்றி ப்ரஹ்லாதனுக்கு உபதேசம் செய்தனர். அவ்விதமான கல்வியை அவன் நல்லதென க்ரஹித்தானில்லை. ஏனென்றால் அது ராக த்வேஷாதிகளை வ்ருத்திசெய்து, விஷயேச்சையை ஸதா உண்டுபண்ணத் தக்கதாக விருந்தது. சண்டாமர்க்கர் ஸ்வ வ்யாபாரங்களை யுத்தேசித்து வீட்டைவிட்டுப் போய்விடும் ஸமயங்களில், ப்ரஹ்லாதன் மற்ற அஸுர பாலர்களால் விளையாட்டின் நிமித்தம் அழைக்கப்படுவன். அப்போது, அவர்களிடம் மிகவும் க்ருபையால், புன்சிரிப்புடன், மதுர வசநங்களால், தைத்ய பாலர்களுக்குப் பகவத்பக்தியைத் தான் உபதேசம் செய்தனன். அவனிடம் கௌரவத்தால் அவர்களும் அவன் சொன்னவற்றை ச்ரத்தையுடன் கேட்டனர்.

பத்ராதிபர்.

ஸ்ரீ:.

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:.

# ஸ்ரீ ஸ்தோத்ர ரத்நம்.

நிமஜ்ஜதோऽநந்த! பவார்ணவாந்த-
ச்சிராய மே கூலமிவாஸி லப்த: ।
த்வயாபி லப்தம் பகவந்நிதாநீ-
மநுத்தமம் பாத்ரமிதம் தயாயா: ॥ 24.

24. இந்த ஸ்தோத்ரத்தின் முதல் 21 ஶ்லோகங்களால், ப்ராப்தா ப்ராப்யனாகிற சரண்யனுடைய ஸ்வரூபாதிகளையும் ப்ராப்தாவாகிற சரணார்த்தியின் ஸ்வரூபாதிகளையும் விஸ்தரித்துச் சொல்லிவிட்டு, பிறகு 22-வது ஶ்லோகத்தால், தமது புருஷார்த்தத்திற்கு விரோதிகளாயுள்ள ப்ரதிபந்தகங்களை நிவ்ருத்தி செய்யும்பொருட்டுத் தமது அதிகாரத்திற்கு உசிதமாயுள்ள ப்ரபத்தியை ஸ்ரீ ஆளவந்தார் 'த்வத்பாதமூலம் சரணம் ப்ரபத்யே' என்று விசதமாக விண்ணப்பம் செய்தார். பிறகு 23-வது ஶ்லோகம் முதல் 29-வது ஶ்லோகம் வரையிலுமுள்ள ஏழு ஶ்லோகங்களால், ப்ரஸ்துதமான இந்த ப்ரபத்தி யென்னும் உபாயத்தின் ப்ரயோகத்தை ஸ்திரீகரிக்கக்கூடிய சில அர்த்தங்களைச் சொல்ல உபக்ரமித்து, முதலில் 23-வது ஶ்லோகத்தால், 'சரண்யனாகிற பரமாத்மாவுக்கு சரணாகதர்களுடைய ஸகல விரோதிகளையும் நிவ்ருத்தி செய்யக்கூடிய குண விசேஷங்கள் உண்டு; ஆகையினால், அகிஞ்சநர்களான நாமும் அவனை சரணமாக அடைந்து மோக்ஷ பலத்தைப் பெறலாம்' என்னும் அர்த்தத்தை வெளியிட்டார். இந்த 24-வது ஶ்லோகத்தினால், 'நாம் ரக்ஷ்யர்கள், சரண்யன் ரக்ஷகன்' என்று நமக்கும் பகவானுக்குமுள்ள இந்த ஸம்பந்தத்தின் ஜ்ஞாநம் ப்ரபத்தி ப்ரயோகத்திற்கு அபேக்ஷிதம் என்பதை ப்ரகாசிப்பிக்கிறார்.

லோகத்தில் இந்த ப்ரபத்தி யென்னும் உபாயம் கேவலம் பாஹ்யமான ஒரு வ்யாபார மென்றும், அந்த வ்யாபாரத்தை இதர ஸாமாந்ய லௌகிக பாஹ்ய வ்யாபாரங்களைப் போல ஜ்ஞாந ஹீநமாகவே அநுஷ்டித்து விட்டாலும் பகவானுடைய அநுக்ரஹம் நிஸ்சயம் லப்தமாகிவிடு மென்றும், தத்வ ஜ்ஞாநமும் யதார்த்தமான அநுஸயமும் தர்மாதிகளினிடத்தில் த்ருடமான விஸ்வாஸமும் உண்மையான ஈஸ்வரபக்தியும் இந்த உபாயத்தை அநுஷ்டிக்குமவர்களுக்கு அவஸ்யம் அபேக்ஷிதங்களாயுள்ள ஸாமக்ரிகளுள் சேர்ந்தனவல்ல என்றும், இந்த உபாயத்தை ஒரு க்ஷணமாத்ரத்தில் ஒருவன் தானாகவாவது மற்றவர்களைக்கொண்டாவது அநுஷ்டித்து விட்டால் அவன் மோக்ஷமாகிற ராஜ்யத்தின் உள்ப்ரவேஸத்திற்கு அநுமதி பெற்றவனாகிவிடுகின்றான் என்றும், அவன் அந்த க்ஷணத்திற்குப்பிறகு எவ்வளவு அபதத்தில் ப்ரவ்ருத்தித்தாலும் அந்த அநுமதி பெற்றது பெற்றதாகவே ஸ்திரமாக நிற்கின்றது என்றும் இத்யாதியான பலவித தவறான அபிப்ராயங்கள் வைதிகர் என்று பெயர் பூண்டிருக்கும் அநேக வ்யக்திகளிடத்தில்கூடக் காணப்படுகின்றன. இம்மாதிரியான அபிப்ராயங்களுக்கு ஸாஸ்த்ர ஆதாரமில்லை யென்பதை வ்யக்தமாக இந்த ஸ்லோகங்களில் காணலாம். ஸ்ரீமந் நிகமாந்த மஹாதேஸிகனும், இந்த ஏழு ஸ்லோகங்களின் தாத்பர்யத்தை நிகமநம் செய்யும் பொழுது, 'ததேவமிஹ தத்த்வஜ்ஞாநாதிபூர்வகம் மோக்ஷாயைவ ப்ரவ்ருத்தத்வம் ப்ரபத்திஸாஸ்த்ரார்த்தஸ்ய' என்னும் வாக்யத்தால், 'ப்ரபத்தி, ஸாஸ்த்ரார்த்தம் தத்வஜ்ஞாநம் முதலியவற்றை முற்கொண்டது; மோக்ஷார்த்தமாகவே ப்ரவ்ருத்தித்தது' என்பதை ஸ்புடமாக விளக்கியிருக்கிறார். ஆகையினால், யதாஸக்தி தத்வார்த்தத்தைத் தெரிந்து கொண்டு, 'பகவாந் ஸ்வாமீ, நாம் தாஸர்கள்' என்னும் ஜ்ஞாநத்தை நன்றாக உணர்ந்து, த்ரிகரணங்களினாலும் அபராதங்களிலிருந்து நிவ்ருத்தனாய், டம்பம் அஸூயை முதலிய தோஷங்களால் விடுபட்டவனாய், 'பகவத் பாதாரவிந்தகைங்கர்யமாகிற ஸாம்ராஜ்யத்தை எப்பொழுது அடையப்போகிறோம்!' என்னும் த்வரையுடனே ஒருவன் பகவானை ஸரணமாக அடைந்தால் அதுதான் ப்ரபத்தியாகுமே தவிர மற்றை எதுவும் ப்ரபத்தி கோஷ்டியில் சேராது என்பதை நாம் உணரவேண்டும்.



ஹே அநந்த! ஸம்ஸாரார்ணவாந்த: சிராய நிமஜ்ஜதோ மே கூலமிவ [த்வம்] லப்தோஸி. ஹே பகவந்! த்வயாபி [தவ] தயாயா: அநுத்தமம் பாத்ரமிதாநீம் லப்தம்.. ஸ்வரூப ரூப குண விபூதிகளால் அபரிச்சேத்யனாயுள்ள ஸரண்யனே! ஸம்ஸாரமாகிற இந்த ஸமுத்ரத்தினுள் அநாதியாக மூழ்கிக் கொண்டு தடுமாறி வரும் எனக்குக் கரை போல நீ இப்பொழுது அகப்பட்டிருக்கிறாய். உனக்கும், உன்னுடைய அளவில்லாத தயைக்கு அநுத்தமமான இந்தப் பாத்ரம் இப்பொழுது அகப்பட்டிருக்கின்றது.

'பகவான் இப்பொழுதுதான் அகப்பட்டிருக்கிறான்' என்பதன் தாத்பர்யமாவது— 'பகவான் ரக்ஷகன், நாம் எல்லாரும் ரக்ஷ்யர்கள் என்னும் இந்த ஜ்ஞாநம் இப்பொழுதுதான் ஸதாசார்ய கடாக்ஷம் முதலிய காரணங்களினால் எனக்குக் கிடைத்தது' என்பதுதான். 'எனக்குமாத்ரமே ஏதோ ஒரு அலப்ய லாபம் கிடைத்துவிட்டது என்று நீ எண்ணவேண்டாம். என்னை ரக்ஷ்யனாக நீ அடைவதனால் உனக்கும் ஒரு அலப்ய லாபம் கிடைத்திருக்கின்றது' என்பதான ஒரு சாடு உக்தியை இந்த ஸ்லோகத்தின் உத்தரார்த்தத்தில் காணலாம். அதாவது - 'பகவான் அளவற்ற தயையை யுடையவன் என்பது, ஸ்வல்ப அபராதிகளான ஜீவன்களை ரக்ஷிப்பதனால் வ்யக்தமாகாது; அந்தக் குணத்தை வ்யக்தம் செய்து கொள்ளவேண்டுமானால், பகவான் என்னைப் போன்ற மஹாபராதிகளைத் தேடி ஸம்ரக்ஷிக்க வேண்டும். அப்படிப்பட்ட மஹாபராதி என்னைத் தவிர்த்து வேறு ஒருவனுமில்லையாதலால், நான் பகவானுக்கு அகப்பட்டதும் ஒரு அலப்ய லாபத்தைச் சேரவேண்டுமே' என்பது ஸூசிப்பிக்கப்படுகின்றது.

ஹே அநந்த - 'அளவற்ற ஸ்வரூப ரூப குண விபூதிகளை உடையவனன்றோ நீ! அந்தக் காரணத்தினாலேயே நீ எப்பொழுதும் எவ்விடத்திலும் ஸந்நிஹிதனாக இருக்கிறாயே! அப்படி இருந்தும் உன்னை நான் இது வரையில் அடையாமல் இருந்து

விட்டேனே! எப்படிப்பட்டது என்னுடைய தௌர்பாக்யம்!' என்று ஸ்ரீ ஆளவந்தார் இந்தப் பதத்தால் ஶோகிக்கிறார். 'பூமிக்குள் புதைத்து வைக்கப்பட்டிருக்கும் ஹிரண்ய நிதியை அறியும்படியான கண் இல்லாதவர்கள், அந்தப் பூமியின்மேல் ஸஞ்சரித்துக்கொண்டிருந்தும் தமது தௌர்பாக்யத்தால் தரித்ரர்களாக வருந்துவதுபோல அன்றோ என்னுடைய கதி ஆகிவிட்டது!' என்பது இதன் தாத்பர்யம்.

"𑌤𑌦𑍍𑌯𑌥𑌾 𑌹𑌿𑌰𑌣𑍍𑌯𑌨𑌿𑌧𑌿𑌂 𑌨𑌿𑌹𑌿𑌤𑌮𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑌜𑍍𑌞𑌾 𑌉𑌪𑌰𑍍𑌯𑍁𑌪𑌰𑌿 𑌸𑌂𑌚𑌰𑌨𑍍𑌤𑍋 𑌨 𑌵𑌿𑌨𑍍𑌦𑍇𑌯𑍁𑌰𑍇𑌵𑌮𑍇𑌵𑍇𑌮𑌾𑌃 𑌸𑌰𑍍𑌵𑌾𑌃 𑌪𑍍𑌰𑌜𑌾𑌃 𑌅𑌹𑌰𑌹𑌰𑍍𑌗𑌚𑍍𑌛𑌨𑍍𑌤𑍍𑌯 𑌏𑌤𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌲𑍋𑌕𑌂 𑌨 𑌵𑌿𑌨𑍍𑌦𑌨𑍍𑌤𑌿 𑌅𑌨𑍃𑌤𑍇𑌨 𑌹𑌿 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑍂𑌢𑌾𑌃" என்று சொல்லுகின்றதன்றோ சாந்தோக்ய வாக்யம்?

இந்த '𑌅𑌨𑌨𑍍𑌤' என்னும் பதத்தை ஸம்புத்தியாக எடுத்துக்கொள்ளாமல் பின்வரும் '𑌭𑌵' என்னும் பதத்திற்கு விசேஷணமாக எடுப்பதும் உண்டு; அப்பொழுது '𑌅𑌨𑌨𑍍𑌤𑌭𑌵𑌾𑌰𑍍𑌣𑌵𑌾𑌨𑍍𑌤𑌃' என்று ஸமஸ்தபதமாகிவிடும்; அதாவது - அளவற்ற ஸம்ஸாரமாகிற ஸமுத்ரத்தின் உள்ளில் என்பது அர்த்தம். ரக்ஷகனாகிற உன்னுடைய மாஹாத்ம்யம்போலவே ரக்ஷ்யனாகிற என்னுடைய ஸம்ஸாரக்கடலும் அளவற்றது என்பது தாத்பர்யம்.

𑌭𑌵𑌾𑌰𑍍𑌣𑌵𑌾𑌨𑍍𑌤𑌶𑍍𑌚𑌿𑌰𑌾𑌯 𑌮𑌜𑍍𑌜𑌤𑍋 𑌮𑍇 - ஸம்ஸாரமாகிற பெரிய ஸமுத்ரத்தின் உள்ளில் பஹுகாலமாக மூழ்கிக் கொண்டிருக்கும் எனக்கு.

"𑌤𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌪𑍍𑌰𑌵𑌿𑌷𑍍𑌟𑍋𑌽𑌸𑍍𑌮𑌿 𑌗𑍍𑌰𑍀𑌷𑍍𑌮𑍇 𑌶𑍀𑌤𑌮𑌿𑌵 𑌹𑍍𑌰𑌦𑌮𑍍 ।
𑌶𑌾𑌮𑍍𑌯𑌾𑌮𑌿 𑌪𑌰𑌿𑌨𑌿𑌰𑍍𑌵𑌾𑌮𑌿 𑌸𑌾𑌨𑍍𑌤𑍍𑌵𑌨𑍇𑌵 𑌚 𑌸𑌾𑌤𑍍𑌵𑌿𑌷𑌾 ॥"

'கடுங்கோடையில் அத்யந்தம் ஶீதளமான மடுவினுள்ளே ப்ரவேஶிப்பது போல இருக்குமன்றோ, ப்ரஹ்ம ஸ்முத்ரத்தினுள் மூழ்கும் அநந்ய ஶரணர்களுடைய படி? அந்த ஸுகத்தைப் பெறுமல் அதற்கு எதிர்த்தட்டான ஸம்ஸார ஸமுத்ரத்தினுள் அகப்



பட்டு வருந்துவதாய் விட்டதே நம்முடைய கதி!' என்று இந்த வாக்யத்தால் வருந்துகிறார்.

'𑌅𑌰𑍍𑌣𑌵𑌾𑌨𑍍𑌤𑌃' [ஸமுத்ரத்தின் உள்ளில்] என்று சொன்னதனால், 'சிலர், ஸநகாதிகள்போல, ஸம்ஸாரிகளாக இருக்கையிலும், ஸம்ஸார ஸமுத்ரத்தின் கரைக்கு ஸமீபத்தில் இருக்கிறார்கள்; அவர்கள் கரைகாண்பது ஓர் ஆஸ்சர்யமன்று. ஸம்ஸார ஸமுத்ரத்தின் நடுவில் அகாதமான ஆழத்தில் மூழ்கித் தடுமாறிக் கிடக்கும் நானும் கரைகண்டுவிட்டேன்! இதுவன்றோ ஆஶ்சர்யம்?' என்று சொன்னதாயிற்று.

'ஸமுத்ரத்தின் நடுவில் தடுமாறும் நான் எங்கே? அதி தூரத்தில் கண்காணாத இடத்தில் இருக்கும் கரை எங்கே?' என்னும் ஒரு ஆஶ்சர்யமும் இங்கு த்வநிக்கிறது. அநந்தனுக இருக்கிறபடியால், ஶரண்யன் கரையில் இருப்பது போல அவ்விடத்திலும் இருக்கிறான் என்பது தாத்பர்யம். ஶரண்யனுடைய அளவற்றஸௌலப்யமும் இதனால் த்யோதிப்பிக்கப்படுகின்றது.

𑌕𑍂𑌲𑌮𑌿𑌵 𑌲𑌬𑍍𑌧𑍋𑌽𑌸𑌿 - கரை போல அகப்பட்டுவிட்டாய். 'இந்த ரஹஸ்ய ரக்ஷக ஜ்ஞாநம் எனக்கு உண்டாகி உன்னை நான் ஶரணமாக அடைந்த பிறகு இனி என்னால் உபாயமாக அடைய வேண்டிய அம்ஶம் ஒன்றுமில்லை' என்று தாத்பர்யம். 'இப்படி என்னால் அடையப்பட்ட வஸ்துவும் இனி ஒருகாலும் கையை விட்டு நழுவாது' என்னும் உறுதியும் இதனால் தோன்றுகிறது.

𑌇𑌦𑌮𑌨𑍁𑌤𑍍𑌤𑌮𑌂 𑌪𑌾𑌤𑍍𑌰𑌂 - இந்த அத்யுத்தமமான பாத்ரம். அதாவது - 'உன் தயைக்கு உத்தமமான விஷயம், என்னைத் தவிர்த்து வேறு இல்லை' என்று தாத்பர்யம். 'வாக்குக்கும் மநஸுக்கும் எட்டாத அளவு மிகவும் அநந்தங்களான அபராதங்களைச் செய்திருக்கும் இந்த நான்' என்பது '𑌇𑌦𑌂' என்னும் பதத்தின் குறிப்பு. 'அபராத விஷயத்தில் என்னை விட மேற்பட்டவன் இல்லை ஆதலால், உன் தயைக்குப் பூர்ண ஸாபல்யம் என்னிடத்தில்தான் கிடைக்கும்; ஆகையால், என்னைவிட உயர்ந்த பாத்ரம் கிடையாது' என்பது கருத்து.

அபூதபூர்வம் மம பாவி கிம் வா ?
ஸர்வம் ஸஹே மே ஸஹஜம் ஹி து:கம் ।
கிந்து த்வதக்ரே ஶரணாகதாநாம்
பராபவோ நாத ? ந தேऽநுரூப: ॥ 25.

த்வயாபி லப்தம் - உனக்கும் ஒரு லாபம் கிடைத்தது. நான் மாத்ரம் லாபம் அடைந்தவன் என்று நினைக்கவேண்டாம்; உனக்கும் இதில் பெரியதொரு லாபமுண்டு என்பது அர்த்தம். 'நீ அபர்யநுயோஜ்யனாக இருக்கையிலும், பக்ஷபாதமில்லாமலிருக்கவேண்டும் என்னும் எண்ணத்துடன் ரக்ஷணத்திற்காகச் சில வ்யாஜங்களை அபேக்ஷிக்கிறாய். அப்படி வ்யாஜங்களை அபேக்ஷிக்கும் உனக்கும் த்ருப்தி உண்டாகும்படி நான் ஒரு பாத்ரம் அகப்பட்டேன்' என்னும் அர்த்தம் சொல்வது உண்டு. 'நாதமுனிகள் முதலிய ஸதாசார்யர்களின் வீக்ஷணமும் உன்னுடைய ஸங்கல்பத்தால் எனக்குக் கிடைத்திருக்கின்றது' என்பது தாத்பர்யம்.

25. இந்த ச்லோகத்தினால், இப்படி ஶரணமடைந்திருக்கும் என்னைக் கைவிடாமல் ஸம்ரக்ஷித்தே தீரவேணும் என்னும் ஒரு நிர்பந்தரூபமான ப்ரார்த்தனையை ஸ்ரீ ஆளவந்தார் ஒருவாறு ப்ரகாஶிப்பிக்கிறார். தனது கஷ்டத்தைப் பெரிதாக நினையாமலே பிறருடைய துக்கத்தையே பெரிதாக நினைத்து அவருக்காக வருந்தும் ஒருவன் சொல்வதுபோல, ஸ்ரீ ஆளவந்தார், 'ஹே பகவந்! என்னை நீ ரக்ஷியாவிட்டால் எனக்கு அவ்வளவாக ஹாநி இல்லை; எல்லாக் கஷ்டமும் எனக்கு ஸஹஜமே; ஆனால் உனக்கு ஶரணாகதனை ஸம்ரக்ஷிக்கவில்லையென்னும் ஓர் அபஶப்தம் நேருமே என்னும் ஒரு ஶோகம் மாத்ரம் அத்யந்தம் அஸஹ்யமாக இருக்கும்போலத் தோன்றுகின்றது' என்று தாம் பகவானைப் பற்றி வருந்துவதுபோலத் தமது ஸம்ரக்ஷணத்தை ப்ரார்த்திக்கிறார். இப்படி அவர் ப்ரார்த்திப்பதும் பகவானுடைய வாத்ஸல்யத்தைப் பொறுத்தது. ஶரணாகதனை பகவான் ஒருகாலும் கைவிடமாட்டான் என்னும் அர்த்தம்தான் இந்த ச்லோகத்தாற் சொல்லப்படுகின்றது.



ஹே நாத அபூதபூர்வம் மம பாவி கிம் வா? ஸர்வம் ஸஹே; து:கம் மே ஸஹஜம் ஹி. கிந்து ஹே நாத! த்வதக்ரே ஶரணாகதாநாம் பராபவ: தே ந அநுரூப: ।

இதற்குமுன்னதாகவே எனக்கு ஸம்பவித்துள்ள கஷ்டங்களைக்காட் டிலும் அஸஹ்யமான கஷ்டம் இனி ஸம்பவிக்கப்போகின்றதோ? எனக்குத் துக்கம் ஸஹஜமானதனால், நான் எப்படிப்பட்ட துக்கத் தையும் ஸஹிப்பேன். ஆனால், உன்னை ஆஶ்ரயித்தவர்கள் ரக்ஷணம் பெறாமல் கஷ்டப்படுகிறார்கள் என்பது உனக்குக் கொஞ்சமேனும் தகுந்ததன்று.

அபூதபூர்வம் - இதற்கு பூர்வம் ஸம்பவித்திருக்கு மவற்றைக் காட்டிலும் விலக்ஷணமான கர்ப்ப ஜந்ம ஜரா மரணாதி களைவிட அஸஹ்யமான துக்கமும் உண்டோ? என்பது அர்த்தம். ஸஹ்யம் அஸஹ்யம் என்னும் விசாரமின்றிக்கே ஸம்பவிக்கும் எல்லாவற்றையும் அநுபவித்தே தீரவேணும் என்னும் இந்த ஸ்திதியை 'ஸர்வம் ஸஹே' என்னும் பாதம் சொல்லுகின்றது.

து:கம் மே ஸஹஜம் ஹி - துக்கம் என்பது எனக்கு இயற்கையே. கர்ம பாதந்த்ரனாக இருக்கும் எனக்கு துக்கம் அபரி ஹார்யம் என்பது கருத்து.

த்வதக்ரே ஶரணாகதாநாம் - உன் முன்னிலையில் ஶரணமடைந்தவர்களுக்கு. 'அபாரமான கருணையை உடையவ னென்றும் எவ்விடத்திலும் எப்பொழுதும் இருக்கும் ஸ்வபாவ முள்ளவனென்றும் ஸர்வஸ்வாமியென்றும் ஸர்வஶக்தனென்றும் கீர்த்தி பெற்றிருக்கும் உன்னுடைய முன்னிலையில்' என்பது தாத் பர்யம். 'ஶரணாகதாநாம்' என்னும் பஹுவசநத்தால், 'என்னு டைய பராபவம் மாத்ரம் உனக்கு அநநுரூபம் என்பது இல்லை; என்னைப்போல ஶரணாகதி செய்திருக்கும் ஸகல ஸ்ரீ வைஷ்ணவர் விஷயத்திலும் இதே ந்யாயம் ப்ரவ்ருத்திக்கும்' என்னும் தாத் பர்யம் ஸூசிப்பிக்கப்படுகின்றது.

எஸ். வாஸுதேவன்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
7 - OCT 1914
MADRAS.

# வர்த்தமாநம்.

காலோऽஸ்மி லோகக்ஷயக்ருத் ப்ரவ்ருத்தோ
லோகாந் ஸமாஹர்த்துமிஹ ப்ரவ்ருத்த꞉ ।
ருதேऽபி த்வாம் ந பவிஷ்யந்தி ஸர்வே
யேऽவஸ்திதா꞉ ப்ரத்யநீகேஷு யோதா꞉ ॥

கர்மாத்யக்ஷனான பகவான் புருஷர்களுடைய கர்மானுகுணமாகப் பலமளிக்க ஸங்கல்பிக்கின்றான். ஒவ்வொரு ஸமயம் பஹு ஜீவர்களால் ஆர்ஜித்த கர்மங்களின் ஸமஷ்டிக்கு ஸமகாலத்தில் பரிபாக தசை உண்டாகின்றது. அந்த அவஸரத்தை உத்தேசித்து ஈஶ்வரன் காலரூபி எனப்படுகின்றான். அவன் செய்யும் வ்யாபாரமும் லோக க்ஷய ரூபமாய் முடிகின்றது. ஸேனைகள் தோறும் நிற்கும் போர் வீரர்கள் யாவரும் ஒருவர் ப்ரயத்நத்தால் முடிகின்றாரில்லை. திவ்யசக்ஷுஸ் இருந்தால், லோகங்களை ஸம்ஹரிக்க ஸித்தனாக நிற்கின்ற பரமேஶ்வரனை ஸேனைகள் முன்னால் யாவரும் தர்சிக்கலாம். இத்தகைய அவஸரம் தத்காலம் ஐரோப்பா கண்டத்தை முற்றிலும் வ்யாபித்துவிட்டது. நாகரிகத்தில் சிறந்த ராஜ்யங்களால் நிறைந்த அந்தக் கண்டத்தில், சாந்தியென்று வாயினால் உச்சரித்துக்கொண்டு, மனத்தால் பரர் நாட்டைக் கவரக் கருதியோ, ஸ்வதேசத்தைப் பரர் கவராமல் ரக்ஷிக்க நினைத்தோ, லோகக்ஷய ரூபமான முடிவைத் தரும் ஸேனைகள் வ்ருத்தியையும், அஸ்த்ராதிகளின் ஸம்ருத்தியையும், பஹு வருஷங்களாகப் பல நாட்டினரும் செய்துகொண்டு வந்தனர். அதன் பயன் ஸம்பவித்துவிட்டது. யுத்தமாகிற நெருப்பானது ஐரோப்பா கண்டத்தைச் சூழ்ந்துவிட்டது. உலகம் இவ்விதமான துர்க்கதியை இதுவரையிலும் கண்டதில்லை. இதை உண்டாக்கினவரோ பரஹிம்ஸையை முற்றிலும் ஸஹிக்காத கிறிஸ்து என்பவரை ரக்ஷகராக நம்புகின்றவரெனப் பெயர் வஹித்தவர்கள்.

நாதோ ந꞉ கார்யகாரோऽஸ்தி வஞ்சநீயோ யதீஶ்வர꞉ ।
ஜகச்ச்ரேயஸ்கரச்ச்ரேயஸ்கரம் கர்த்தா ந꞉ பரிரக்ஷது ॥

கர்மாத்யக்ஷன் ஸங்கல்பத்தை யார் தடுக்கவல்லவர்? இதில் நாம் ஸந்தோஷிப்பதற்கு ஒரு ஹேதுவுண்டு. ப்ரக்ருத அவஸரத்துக்கு நமது ராஜாங்கத்தார் கிஞ்சித்தும் இடம் கொடுத்தாரில்லை. இந்த யுத்தத்தில் அவர்களுக்கு ஸாக்ஷாத் அந்வயமில்லை. தர்மத்தை நினைத்து, ஸ்வப்ரயோஜநத்தின் சிந்தையை விலக்கி, பலங்குறைந்து குற்றமற்றவரைப் பலாட்யருடைய அதர்ம ப்ரவ்ருத்தியினின்று காப்பாற்றக் கருதியே, தாமும் யுத்தத்தில் ஸம்பந்தித்தார்கள். பகவான் அவர் பக்கல் நிற்பாராக!

---

ஸ்ரீ꞉.

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம꞉.

# வேதாந்த தீபிகை

பத்ராதிபர்:—திவான் பகதூர் டி. டி. ரங்காசார்யர், பி.ஏ., பி.எல்.

ஸம்புடம் 4.] ஆநந்தவருஷ ஆவணி மீ [ஸஞ்சிகை 7.

## பத்ராதிபரின் குறிப்புகள்.

த்ரிபுவநகமநம் தமாலவர்ணம் ரவிகரகௌரவராம்பரம் தததாநே ।
வபுரலககுலாவ்ருதாநநாப்ஜம் விஜயஸகே
ரதிரஸ்து மேऽநவத்யா ॥ [ஸ்ரீ பாகவதம் 1-9-33.]

**நஞ்சன்கோடு தெப்போத்ஸவம்.** மைஸூர் ராஜ்யத்தில் ப்ரஸித்தமான நஞ்சன்கோடு என்னும் சிவஸ்தலம் ஒன்றுண்டு. அவ்விடம் உமாபதிக்குத் தெப்போத்ஸவம் நடத்துகையில் அகஸ்மாத்தாய் ப்ரவாஹம் வந்து தெப்பம் ஓர் சுழலுக்குள் அகப்பட்டு மூழ்கிப் போயிற்றென்றும், அதிலிருந்த ஜனங்களுக்குள் இருபத்தைந்து பேர் மரணம் அடைந்தார்களென்றும், ஈஶ்வரன் விக்ரஹம் ப்ரமப்பட்டுத் தேடியெடுக்கப்பட்டதென்றும், நம்மவர் அதனால் மிகவும் சோகாதுரராக இருந்தனரென்றும் செவியுற்றோம். கஜனி வாஸியான மாமூது எனும் துருக்க ராஜனும், மஹமத் கோரி எனும் மற்றொரு துருக்க அரசனும் ஆர்ய நாட்டில் மிக்கத் தேவாலயங்களை அழித்து விக்ரஹங்களைச் சேதித்ததும், பின்னர், டில்லி முதலான பஹு நகரங்களில் அரசாண்ட துருக்க ராஜர்களும் அவ்வண்ணம் நடந்தனர் என்பதும் சரித்ரத்தால்

ப்ரஸித்தம். மலிக்காபூர் எனும் துருக்க தளகர்த்தனால் தென் இந்தியாவானது பதினாலாவது நூற்றாண்டில் படையெடுக்கப் பட்டுத் தேவாலய நாசமும் விக்ரஹங்களின் அழிவும் ஏராளமாக ஸம்பவித்த தென்பதும் சரித்ரமே. மதுரையும் திருச்சிராப் பள்ளியும் அப்போது (1327-1365) நாற்பது ஸம்வத்ஸரமளவில் துருக்கர் ஆளுகையில் அடங்கி, ஸ்ரீரங்காதி திவ்ய தேசங்களிலும் பகவதாராதநம் நின்று போனது யாவரும் கேட்டிருக்கலாம். ஸ்ரீமத் வேதாந்ததேசிகன் அப்போது ஸத்யமங்கலம் ஸத்யகாலம் முதலான இடங்களில் வஸித்திருந்து அபீதிஸ்தவம் என்னும் ஸ்தோத்ரத்தையும் செய்தருளினர்.

பகவானுடைய அர்ச்சாரூபமான திவ்யமங்கள விக்ரஹங்கள் ஆத்யாத்மிகாதி தாபத்ரயாநுபவத்துக்கு விலக்காவதில்லை. ஆத லால் ஜ்ஞாதாக்கள் பகவானுக்குக் குறைவு நேரிட்டதாக நினைத்தல் கூடாது. குறைவு உபாஸகருடையதே. இவரில் சிலரேனும் ப்ரஹ்லாதனையொத்த பக்தியுள்ளவராயின் இவர் நிமித்தம் பகவான் தேவாலயங்களையும் விக்ரஹங்களையும் ஸம்ரக்ஷிப்பர். இதுவும் கலியுகத்தில் துர்லபம். துஷ்டநிக்ரஹ ஶிஷ்டபரிபாலந ரூபமாக அவன் செய்யும் லோகாநுக்ரஹம் இந்த யுகத்தில் ப்ரத்யக்ஷமாக நடப்பதில்லை. மேலும், "ஸர்வம் பூர்ணம் ஸஹாம்ஹ ரூபங்கள் தானே ஆஶ்ரிதர்க்காக அவர்கள் அபேக்ஷித்தபடியிலே - பிம்பா க்ஷா ச்ரா த்வா பிம்பெ ஸமா ம த்ராவதிஷ்டதே - என்கிறபடியே நித்ய நிலை கவதாவதாரா" என்று நிகமாந்த மஹா தேசிகன் ஸாதித்த வண்ணம், பர வ்யூஹாதி ரூப விஶிஷ்டனான எம்பெருமான் உபாஸகர் ப்ரார்த்தனையை அங்கீகரித்து, அவர்க்கு ப்ரீதி உண்டாகும்படியாக அவர் தாமே செய்துகொண்ட விக்ரஹங்களில், அந்த விக்ரஹங்களையொத்து சுத்த ஸத்வ த்ரவ்யத்தைக் கொண்டு ஸ்வயமேவ த்ருஷ்டிகோசர மாகாதவண்ணம் திவ்ய சரீராந்தரங்களைப் பண்ணிக்கொண்டு விக்ரஹங்களில் அநு ப்ரவேசம் செய்துநிற்கின்றான். ஆதலால், அவனடியார் அபே க்ஷைக்கு இணங்கிப் பக்தியால் அவர் புரியும் கைங்கர்யங்களுக்கு



மாத்ரம் அர்ச்சைகளில் ஸாந்நித்யம் செய்யும் ஈஶ்வரன் விஷய மாவானேயன்றி, அவதாரங்களில் நடத்திக் காட்டியபடித் திவ்ய சேஷ்டிதங்களை அவற்றின் மூலமாக நடத்திக்காட்டான். திவ்ய மங்கள விக்ரஹங்களில் பகவான் ஸாந்நித்யம் செய்வதும், திவ்ய தேசங்களில் பாகவத ஸம்ருத்தியைக் காரணமாகவுடையது என் னும் உண்மை, "ஸாகாஶீதி நவாகஶீதி ஹ விஸா" என்றும், "யத்ரைகாக்ர்யம் பவதி" என்றும் ஸ்தாந விசேஷாதிகாரத் தில் தேசிகன் ஸாதித்த ஶ்லோக த்வயத்தால் ஸ்பஷ்டம். இப்படி ஸாந்நித்யத்துக்கு அநுகூலமான ஸாமக்ரியின் அபா வத்துடன், பகவத் பாகவதாபசார ரூபமான ஸாந்நித்ய விரோதி களின் ஸத்பாவங்களும் அமைந்துவிட்டால், பகவான் அபிமாநித்த திவ்யமங்கள விக்ரஹாவசேஷமாய்த் திவ்ய தேசங்கள் நிற்கும் என்பது யோசிக்கத்தக்கது.

* * * * * *

விவேசநம் செய்யத் திறனே இச்சையோவற்று, மதாந்த ரஸ்தர்களும், நமது ஆர்ய மதத்தினின்று வெளிப்பட்டவரும், அர்ச்சைகளில் த்வேஷம் கொண்டாடி அவற்றை விஶ்வஸிப்ப வரை நிந்திக்கக் கண்டோம். இவர்கள் அர்ச்சைகளில் ஈஶ்வரன் ஸாந்நித்யம் செய்ய இசைந்தாலும் தடுப்பவர் போல ஆக்ரத் துடன் நிற்கின்றனர். ஆர்ய மதத்தில் ஜநித்து வெளிப்பட்டவர், தாங்கள் உபநிஷத் வழியே நிற்பதாகத் தோள்தட்டவும் கண் டோம். உபநிஷத்துக்கள் ஸர்வ பாஹ்யேந்த்ரியங்களுக்கும் அந்தரிந்த்ரியங்களுக்கும் பகவான் அகோசரனென்றும், லோகாநு பவத்தைப் பற்றி அவனை "நேதி நேதி" என்றும் உத்கோஷிப் பதையும், உபநிஷத்தில் ப்ரஸ்தாபிக்கப்பட்ட ஸர்வ வித்யை களும் அவனுக்கு வெவ்வேறு நாமரூபாதிகளைக் கல்பித்து உபா ஸிக்க விதித்திருப்பதையும், இவர் மறந்தாரன்றோ! மநஸால் நிர்மித்த பகவத் விக்ரஹங்களை உபநிஷத்துக்கள் த்யாநிக்க விதித் தன. ஶாஸ்த்ராந்தரங்களால் ஸ்தூல விக்ரஹங்களிலும் பகவான் பக்தர்களுக்கு இரங்கி ஸாந்நித்யம் செய்வானென ஏற்படுகிறது.

இந்த ஶாஸ்த்ரங்கள் தங்களுக்கு விஶ்வாஸார்ஹமில்லாவிடில், விஶ்வஸிப்பவரை த்வேஷித்தலும் நிந்தித்தலும் பாப கோடிகளில் சேரும்,

* * * * * *

விக்ரஹங்களுக்கும் ஆலயங்களுக்கும் பாஹ்யரால் பரிப வாதிகள் ஏற்படுகின்றதே என்றால், துருக்கரும், கிறிஸ்தவரும், பௌத்தரும், ஏனையோர்களும் பூஜ்யமாக நினைத்த ஆலயங்களும் ப்ரதீகங்களுங் கூடப் பரிபவாதிகளை இவ்வாறே அடைந்திருக் கின்றதை யோசித்து ஏனையோர்க்கும் நமக்கும் இதில் வாசியில்லை என்று தெரிந்துகொள்ளலாம்.

துஷ்டரை நிரஸித்து ஸாது பரித்ராணம் செய்யப் பகவான் அர்ச்சைகளில் ஸாந்நித்யம் செய்யவில்லை. இது ஆஶ்ரிதர்களு டைய உபாஸனைக்கு அநுகூலம்செய்யவே ஏற்பட்டதாகையால், அவர்களுடைய கர்மாநுகுணமாகத் திவ்யதேசங்களுக்கு ஏற்படும் உபத்ரவங்களைப் பகவானிடம் சுமத்தவேண்டியதில்லை. அவற்றின் காரணங்களை ஆஸ்திகர்கள் தங்களிடமே தேடிக்கொள்ள வேண்டியது.

* * * * * *

கர்மாநுஷ்டாநம்.

அத்வைத ஸபை இருபது வருஷங்களுக்கு முன் கும்பகோணத்தில் உண்டாகி அவ்விடம் ஸ்ரீ ஶங்கராசார்யர் மடத்தில் வருஷந்தோறும் அதனுடைய வர்ஷோத்ஸவம் நடந்துவந்தது. இவ்வருஷம் அந்த உத்ஸவம் மதுரையில் நடந்தது. நாம் இந்த ஸபையின் வர்ஷோத் ஸவத்தைப் பலதரம் தர்ஶித்தோம். பண்டிதர்களுடைய சேர்க் கையும், வித்யார்த்திகளுடைய பரீக்ஷையும், மத்யே ப்ரதி தின முறும் நடக்கும் விஶேஷ உபந்யாஸங்களும், உத்ஸவாந்தத்தில், பண்டிதர்களுக்கும் வித்யார்த்திகளுக்கும் ஸம்மாநங்கள் செய்யப் படுவதும் தர்ஶிப்பவர்க்கு மிக்க ஸந்தோஷத்தைத் தந்தன. இவ் வர்ஷோத்ஸவத்தில் ப்ரஹ்மஸ்ரீ ஹரிஹரஶாஸ்த்ரிகள் ஜுலை மாஸம் 9-ம் தேதி ஸந்த்யோபாஸந விஷயமாய் உபந்யஸித்த தாகத் தெரியவருகின்றது. ஸாதாரணமாய் ப்ராஹ்மணர் எனப் பெயர் கொண்டவர்கள் கர்மங்களிலும் ததநுஷ்டாநத்திலும்



ஶ்ரத்தை யற்றவராக இருக்கின்றார்கள் என்றும், அதற்குக் கால வைகுண்யம் முக்ய ஹேதுவென்றும், ஸந்த்யோபாஸநம் மாத்ர மாவது விடாமல் அவர்களால் அநுஷ்டிக்கத் தக்கதென்றும், அதை க்ரமமாக அநுஷ்டிப்பதால், ஒருவன் அதன் மூலமாகப் பரம ஶ்ரேயஸ்ஸையும் அடையலாம் என்றும் அந்த வித்வான் உபந்யஸித்ததாய்க் கேள்விப்படுகின்றோம். அவர்களுடைய உபந் யாஸம் முற்றிலும் கிடைத்து யாவராலும் படிக்கப்பட்டால் அது நன்மையே பயக்கும் என்பதை யாம் நிச்சயமாகச் சொல்வோம்.

காலவைகுண்யம் தேசவைகுண்யத்தை உண்டாக்கிவிட்டது. இதனால் ப்ராஹ்மணர்கள் குலாகதங்களான வ்ருத்திகளைத் துறந்து, ஸாதாரண ஜநங்களை யொத்து வ்ருத்யந்தரங்களில் ப்ரவே சிக்க முயன்றவராய், அர்த்தார்ஜநரதராகி விட்டார்கள். ஆதலால், கர்மாநுஷ்டாநம் செய்ய ஶ்ரத்தை குன்றி, அவகாஶமும் குறைந்து விட்டது. மேலும் வ்ருத்யுபாயங்களாக ஸம்பாதித்த வித்யைகளோ வித்தமோஹத்தில் மநுஷ்யனைத் தள்ளி லோகாந்தரத்தில் விஶ் வாஸத்தைப் போக்கி, அயம்லோக: நாஸ்தி பர இதி, (இதுதான் லோகம்; இதைக் காட்டிலும் பரலோகமென்பது இல்லை,) என்னும் நிச்சயத்தையும் படிப்போர் மநஸ்ஸுக்களில் ஜநிப்பிக் கின்றது.

* * * * * *

இந்தத் தசையில் வைதிகனென்றும் பண்டிதனென்றும் பெயர் வஹித்தவர்களுடைய சிறுவர்களும் இங்கிலீஷ் படிக்கப்போய்த் தேர்ச்சியு மடைந்தாராகில், அவர்கள் யாது நினைக்கக்கூடும்? "நம் பிதா நிஜமாய்த் தம் வித்யையால் பரம ஶ்ரேயஸ் உண் டாகுமென நம்பி அதை நாமடையவேண்டுமென்று நினைத்தா ராகில் தான் படித்ததையன்றோ நமக்குக் கற்பிப்பர்? வாஸ்தவமாய் அவருக்கு அந்த வித்யையில் விஶ்வாஸம் இல்லை. காரணார்த்தமாக வைதிக வேஷம் போடுகின்றார்; பொருள் சேகரித்து நமக்கு வைக்கத்தான் இப்படி யெல்லாம் செய்கின்றார்; அதற்காகத் தான் நம்மை இங்கிலீஷ் படிப்பில் போட்டு விட்டார்." இப்படியன்றோ இவர்கள் யோசனை இருக்கும்! இவர்களுடன் படிக்கும் பிள்ளைகள் ஏன் நினைப்பார்கள்? இவர் ஸம்ஸர்க்கம் அவனைக் கெடுக்கும்.

அவரது இவரைக் கெடுக்கும். இஃது இப்படியாகில் இவரை ச்ரேஷ்டரெனக் கொள்பவருடைய பிள்ளைகள் இங்கிலீஷ் பள்ளிக் கூடம் தவிர எவ்விடம் தான் போக இயலும் ?

* * * * * * *

யாஜ்ஞவல்க்யர் க்ருஹஸ்தாச்ரமத்தைத் துறக்க எண்ணித் தமது ஆஸ்தியைத் தமது பத்னிகளுக்குள் பங்கிடப்போகையில், அவர்க்குள் ப்ரஹ்மவாதினியாக இருந்த மைத்ரேயி என்பவள், "ஸ்வாமின் ! இவ்வுலகத்தின்கண் உள்ள பொருள்களைத்தும் எனக்குக் கிடைத்தால், மோக்ஷம் அதனால் கிடைக்குமோ ?" என்று கேட்டாள். அதற்கு அவள் பர்த்தா, "பணக்காரர் பிழைப்பு உனக்கு உண்டாகுமேயன்றி மோக்ஷத்தின் ஸ்மரணம்கூடப் பணத்தால் உண்டாகாது" என்றனர். பிறகு மைத்ரேயி, "எதனால் நான் அம்ருதத்வத்தை அடையமாட்டேனோ அதனைக் கொண்டு நான் என் செய்வேன் ? மோக்ஷ ஸாதநமாகத் தேவரீர் அறிந்ததை எனக்குச் சொல்லும்" என்று சொல்லி, மோக்ஷ ப்ரயோஜந மான வித்யையை அவரிடம் அறிந்துகொண்டாள். பிள்ளைகளை இங்கிலீஷ் படிக்கப் போக்கும் பண்டிதரும் இதை ஸ்மரிக் கின்றனரா ?

* * * * * * *

இங்கிலீஷ் படிப்பவருள் பலர் ஸ்வமதத்திலும், சாஸ்த்ரங் களிலும் கர்மங்களிலும் விச்வாஸமிழந்து, ப்ரஷ்டராகி, ப்ரஷ் டருடைய ஒழுக்கத்தையும் மேற்கொள்கின்றனர். சாஸ்த்ரங்களி லும் தர்மங்களிலும் விச்வாஸம் உள்ளவரும் இவர்க்குள் சில ருண்டு. இருவகுப்பினருள்ளும, ஸத்யத்தில் நிலைத்த புத்தியும், தர்மத்தில் ருசியும், தேச ஹிதத்தில் முயற்சியும் உடையவர்கள் இருக்கின்றனர். இவர்கள் பஹுமானித்து விச்வஸிக்கும்படியாகப் பண்டிதர்கள் நடக்கின்றனரா ? பண்டிதரும் வைதிகர்களும் தம் மிடம் வருபவருடன் ஸத்விஷயங்களைப்பற்றி நியமேந ப்ரஸ்தா பிக்கின்றனரா? ப்ரஸ்தாபித்தாலும் என்ன? சொல்லுதல் யார்க்கும் எளிதாம்; சொல்லியவண்ணம் செய்தல் அரிதாம். "கற்கக்கசடற கற்பவை கற்றபின் நிற்க வதற்குத்தக" என்று திருவள்ளுவர் சொன்னபடி, விபரீதத்தில் புத்திபோகாதபடிக் கற்று, கற்றதை



ஒழுக்கத்தில் காட்டவேண்டியதில்லையா ? "ஸ யத் ப்ரமாணம் குருதே லோகஸ் ததனுவர்த்ததே" என்று பகவான் சொன்னபடி, ச்ரேஷ்டர் எனப்படுவோர் ஸத் சரித்ரத்துடன் கூடியிருக்க வேண்டியவரன்றோ ? அவர் அப்படி இராமற்போனால் அவர் சொல்லைக்கேட்டுக் கர்மங்களில் யார் தான் விச்வஸிப்பர் ? ஆதலால் சாஸ்த்ரமறிந்த பெரியவர்கள் ஸ்வாநுஷ்டாநத்தை க்ரமமாக வைத்துக்கொண்டு, தம்மிடம் லௌகிகரெனப்படுபவர் கள் லாகவபுத்தி செய்யாமலிருக்கும் நிலைமையில், ஸ்வாத்ம ரக்ஷணத்தின் பொருட்டும் லோக ஸங்க்ரஹத்தை இச்சித்தும் இருத்தல் வேண்டும்.

* * * * * *

இது இப்படி நிற்க, தத்காலம் பதார்த்த ஸ்வரூபங்களை ப்ரத் யக்ஷாநுபவத்தால் நிஷ்கர்ஷித்தறிந்த ஐரோப்பிய வித்வான்கள் லோக ஹிதமாகத் தாமறிந்ததை யாவரும் அறியும்படிப் புஸ்த கங்கள் மூலமாக வெளியிட்டிருக்கின்றனர். இந்தத் தத்வங்களை நம்மவர் கற்றுணர்ந்தாராகில், பதார்த்தங்களின் ஸ்வரூப விஷய மாக நமது ப்ராசீந க்ரந்தங்கள் வெளியிடும் அம்சங்களில் பல வற்றை நம்புவதற்கு இடமில்லாமல் போய்விடுகின்றது. பூகோள ககோள சாஸ்த்ரங்களைக் கூடியவரையில் யதாவஸ்திதமாய் நமது தேசத்திலும், ஆர்யபட்டர் வராஹமிஹிரர் முதலானவர்கள் அறிந்து வெளியிட்டனர். இவர்கள் க்ரந்தங்களை அவலோகநம் செய்தால், இந்த சாஸ்த்ரங்களைப்பற்றிப் புராணங்கள் விவரிக்கும் முறை ஸரியன்றெனத் தோன்றும். அந்த சாஸ்த்ரங்களின் தத் வங்கள் ஆதுநிக ஐரோப்பிய வித்வான்களால் மிகவும் விஸ்தார மாகக் கண்டறியப்பட்டிருக்கின்றன. இங்ஙனமே, இதர பதார்த்த சாஸ்த்ரங்களின் தற்கால விஸ்தாரம் நமது தேச ப்ராசீந ஜநங் களின் நம்பிக்கைகளை விரோதிக்கின்றன. தத்வ த்ரயத்தில் ப்ர க்ருதி ஒன்றுள போதிலும், அதனுடைய விகாரங்கள் ஸம்ஸரிக் கின்ற புருஷனைப் பாதிக்கின்ற விதங்களையும், அவற்றை அவன் ஜயிக்கவேண்டிய ப்ரகாரங்களையும், ஆத்ம ரக்ஷணார்த்தமாக வேண்டியவரையில் நம் பெரியோர் விசாரித்தனரேயன்றி, அவற் றின் உண்மைகளையெல்லாம் வெளியிடும் கடமையை அவர்கள்

மேற்கொள்ளவில்லை. ப்ரஸக்தாநுப்ரஸக்தமாய் இவற்றின் விவரணங்கள் ஶாஸ்த்ரத்தில் காணப்பட்டுள. அவை அந்தக் காலத்திய ஜநங்கள் நம்பின ப்ரகாரம் வெளியிடப்பட்டுள. ப்ரத்யக்ஷத்தாலும் அநுமாநத்தாலும் கண்டறியக்கூடாத அம்சங்களில் தான் சப்தம் ப்ரமாணமாகி நிற்கின்றது. அந்த அம்சங்களை ஶாஸ்த்ரம் பராமர்சித்தால் காலாநுகுண ப்ரத்யயங்களை அநுஸரித்தே அது பராமர்சித்திருக்கும். இதைத் தான் ப்ரமாண க்ரந்தங்களில் நேரிடும் மநுஷ்யாம்சம் (Human elements) எனத்தகும். இந்த அம்சங்களைக் கொண்டு ஶாஸ்த்ரங்கள் மீது தூஷணம் ஏற்றுவது தர்மமன்று. ஆனால் யாவரும் இப்படி நினைப்பாரில்லை. அம்சாந்தரங்களில் ப்ரதிபத்தி குறைந்தால் ஸர்வாம்சங்களிலும் விஶ்வாஸம் கழிப்பவர் பலர். ஆனபடியால் பதார்த்த ஶாஸ்த்ரங்களை நமது பண்டிதர்கள் உசிதமாக அறிந்து, அவற்றின் உண்மையால் ஶாஸ்த்ரத்தின் மேல் வரும் ஆக்ஷேபங்களை நிவர்த்திப்பாராகில் அது மிக்க நன்மை தரும். அது தத்காலம் ஸாத்யமன்று.

*     *     *     *     *     *

கர்மங்களோ ப்ராயேண அநுஷ்டிப்பவர்க்கு அர்த்தமாகாமல் இருக்கின்றன. பண்ணிவைக்கும் புரோஹிதரோ அநேகமாக மந்த்ர வித்துக்களாக மாத்ரம் இருக்கின்றார்களேயன்றி அர்த்த வித்துக்களாகவும் இருப்பதில்லை. அநுஷ்டாத்ருக்கள் அர்த்தம் தெரிந்துகொள்வதற்கு சக்தருமல்லவர் ; சக்தியிருந்தாலும் அவகாஶமற்றவர். இவையெல்லாம் காலவைகுண்யம். இவற்றை யதாஸம்பவம் பரிஹரிக்கப் பண்டிதர்கள் அர்ஹர்களாக இருக்கின்றார்கள்.

*     *     *     *     *     *

நமது பெரியோர் நாம் அநுஷ்டிக்கும்படி ஏற்படுத்தியிருக்கிற ஸர்வ கர்மங்களாலும் ஆராதிக்கப்பட்டவன் ஸர்வேஶ்வரனான நாராயணனே. இந்தக் கர்மங்களை விதித்து அவை அநுஷ்டிக்கும் முறைகளைக்காட்டும் ஶ்ருதிகளும் ஸ்ம்ருதிகளும் அவனுடைய ஆஜ்ஞைகள் என்றும், யாதொருவன் அவற்றை அதிக்ரமித்து நடக்கின்றானோ அவன் பகவதாஜ்ஞைகளை நாசம் செய்தவனென்றும், ஆனபடியால் பகவானுக்கு த்ரோகம் செய்தவன் என்றும்,



அப்படிப்பட்டவன் பகவத் பக்தனானாலும் பாகவதனெனப்படான் என்றும் காட்டுகின்ற ஸ்ம்ருதி வசநத்தை நமது பெரியோர் ஆதரித்திருக்கின்றனர். ஸர்வ வைதிக கர்மங்களும் பகவதாராதநமாகும்படியைப்பற்றிச்சற்று விசாரிப்போம்.

ஸொகாமயத பஹுஸ்யாம்ப்ரஜாயெயெதி ஸதபொ
தப்யத ஸதபஸ்தப்த்வா।இதஂ ஸர்வமஸ்ருஜத யதிதம்கிஞ்ச தத்ஸ்ருஷ்ட்வா ததெவாநுப்ராவிஶத் ததநுப்ரவிஶ்ய ஸச்சத்யச்சாபவத்॥ என்று ஶ்ருதி வெளியிடுகின்றது. இதன் அர்த்தம் இருப்பதெங்ஙனமென்னில், அவிபவிஶிஷ்டாந் ப்ரஜேய ஜந்தூந் பகவாநோக்ஷ்ய ஜாதநிர்வேதா கருணா கரேபஶ யொஜம் விததாவவ்யக்ஷ கௌஶலநாய கருணை ஸ்வம் ॥ என்றருளிச்செய்தபடி, பகவானுடைய கருணையானவள் ப்ரளய காலத்தில் அசேதநத்தைக் காட்டிலும் வேறுபட்டில்லாத சேதநருடைய தஶையைக்கண்டு வெறுப்படைந்து,அவர்க்கு இந்த்ரியங்களுடன் கூடிய சரீர ஸம்பந்தத்தைத் தருகின்றாள்; இதை ப்ரளயத்தில் மக்நர்களான சேதநர்கள் கர்மங்களின் பரிபாக தசையை அபேக்ஷித்தே செய்கின்றாள். ஆதலால் பகவான் அப்போது வ்யஷ்டி ஸமஷ்டி ரூபமான ஸ்ருஷ்டியைப் பற்றி ஸங்கல்பம் செய்கின்றான். "யஸ்ய ஜ்ஞாநமயம் தபஃ" என்றபடி, ஸ்ருஷ்டி விஷயமாகத் தபஸ் செய்கிறானென்றால் ஆலோசிக்கின்றான் என்றர்த்தம். பிறகு ப்ரபஞ்சத்தை ஸ்ருஷ்டிக்கிறான் என்றால் பரிணமிக்கப் பண்ணுகின்றான். பின்பு ஸ்ருஷ்டிக்கப்பட்ட வஸ்துக்களுக்குள் அநுப்ரவேசம் செய்து ஸ்வரூபத் சேதநா சேதந ரூப வஸ்துவிசேஷங்களாகின்றான். தால் ஸர்வ ப்ரதேசத்திலும் பகவானிருக்கின்றானானாலும், அநுப்ரவேசமாவது ஒவ்வொரு வஸ்துவிலும் நியமநார்த்தமாக இருக்கும் ஸ்திதி விசேஷம். ஆதலால், "ஐததாத்ம்யமிதம் ஸர்வம் தத்ஸத்யம் ஸ ஆத்மா தத்த்வமஸி," என்கிறபடி, ஸத்யமெனும் பெயருடைய பரமாத்மாவை எல்லாவஸ்துக்களும் ஆத்மாவாகவுடை

யன. ஆதலால் நீயுமவனே என்று உபதேசம் பிறந்தது. "ஸோஹம் ஸ ச த்வம் ஸ ச ஸர்வமேதத் ஆத்மஸ்வரூபம் த்யஜ பேதமோஹம்" எனும் புராண வசநமும் இவ்விடம் ஸ்மரிக்கத் தக்கது. ஆதலால் கர்மங்களடியாகத் தேவர்களுடைய உபாஸநமாவது அந்தர்யாமி பர்யந்தம் பலிக்கக்கூடியது. இது கர்த்தாக்களுடைய ஜ்ஞாந தாரதம்யத்தால் ஜநிக்கும் அதிகார தாரதம்யத்துக்கு அநுகுணமாக நிற்கின்றது. கர்மங்களுக்கு விஷயமாகப் பாமரர் அறியும் பதார்த்தங்களைச் சரீரமாகவுடைய தேவதா விசேஷங்கள் கிஞ்சித் ஜ்ஞாநமடைந்தவர்களுக்கு விஷயமாகின்றனர். அவர்களும் வேதாந்தார்த்த விசாரம் செய்தாராகில், தேவதைகளைக் குறித்து அந்தர்யாமியினுடைய குணங்கள் வ்யபதேசிக்கப்பட்டிருக்கிறபடியால், அவ்விடங்களில் அந்தர்யாமியே கர்மங்களால் ஆராதிக்கப்பட்டவனாகிறான் என்று அறிந்துகொள்கின்றனர். தேவதா சரீரங்கள் ஸர்வ ஶரீரியான அவனுடைய சரீரங்களாகின்றன. தேவதைகளெனப் பெயர்கொண்டு ஸுக்ருத விசேஷத்தால் ப்ரபஞ்சாதிகாரங்களில் ஸர்வேஶ்வரனால் நியமிக்கப்பட்ட ஜீவர்களும் அவன் சரீரங்களே. அவனதாகின்ற இவ்வதிகாரங்களுள் ஒவ்வொன்றை வஹிக்கின்ற காரணத்தால், தேவதைகட்கு உண்டாயிருக்கும் நாமங்களும் ஈஶ்வரனுடைய குணகர்மாதிகளையே ப்ரகாசிப்பிக்கின்றன. இப்படி அவனுடைய ஆராதநமாகின்ற ஒவ்வொரு வைதிக கர்மமும், உபாஸகர்களுடைய ஜ்ஞாந தாரதம்யத்தால் தேவதா சரீரங்களையோ, தேவதைகளாகின்ற ஜீவர்களையோ, உபய ஶரீரியாகின்ற பரமாத்மாவையோ விஷயமாகவுடையது.

*   *   *   *   *   *

'ஸந்த்யா' என்றால் இரவும் பகலும் ஸந்திக்கும் காலங்கள். இவை ஸூர்யோதயத்திலும் ஸூர்யாஸ்தமநத்திலும் ஸம்பவிக்கின்றன. இக்காலங்களிலும், மத்யாஹ்ந காலத்திலும் ஸந்த்யோபாஸநம் ஸர்வ த்விஜர்களுக்கும் விதித்திருக்கின்றது. இந்த உபாஸநம் முதலில் காயத்ரி மஹா மந்த்ரத்தை உச்சரித்து அர்க்ய ப்ரதாநம் செய்வதாலும், மத்யத்தில் அந்த மந்த்ரத்தின் ஜபத்தாலும், முடிவில் வேத மந்த்ரங்களைக் கொண்டு உபஸ்தாநம்



செய்வதாலும் பூர்ணமாகின்றது. இந்த எல்லா மந்த்ரங்களாலும் ப்ரதிபாதிக்கப்பட்டவன் நாராயணன். இந்தக் கர்மங்களால் ஆராதிக்கப்பட்டவனும் அவனே. மந்த்ரார்த்தம் அறிந்த பெரியவர்கள் இந்த மந்த்ரங்களனைத்தையும் அவன் பரமாகவே வ்யாக்யாநம் செய்திருக்கின்றனர். அக்நி, ஸூர்யன், வருணன், மித்ரன் முதலான தேவதா நாமங்களின் அர்த்தங்களும் அவனையே குறிக்கின்றன. இந்தக் கர்மங்கள் செய்கையில் கர்த்தா ஸூர்யனுக்கு அபிமுகமாக நிற்கின்றான். உபநீதனான பாலன் ஆகாச மத்யத்தில் தன்னெதிரில் காணப்படும் தேஜோ மண்டலத்தை நோக்கி, அதைக் குறித்தோ, அல்லது அதை அபிமாநித்து ஶரீரமாகக் கொண்ட தேவதா விஶேஷத்தைக் குறித்தோ தன் உபாஸநத்தைச் செய்கின்றான். ஜ்ஞாநம் உண்டானபோது, "ய ஏஷோந்தராதித்யே ஹிரண்மய: புருஷோ த்ருஶ்யதே, ஹிரண்யஶ்மஶ்ரு:, ஹிரண்யகேஶ:, ஆப்ரணகாத் ஸர்வ ஏவ ஸுவர்ண:, தஸ்ய யதா கப்யாஸம் புண்டரீகமேவமக்ஷிணீ," என்கிற ஶ்ருதியின்படி, ஆதித்யாந்தர்வர்த்தியாய், ஸ்வர்ணமயமான திவ்யமங்கள விக்ரஹ விஶிஷ்டனாய் இருக்கும் புண்டரீகாக்ஷன் தனது உபாஸநத்துக்கு விஷயமாகின்றான் என்று அறிந்து கொள்கின்றான். காயத்ரீ மஹாமந்த்ரம் ப்ரணவத்துடன்கூடி ஜபிக்கப்படுகின்றது. ப்ரணவம் பரமாத்ம வாசகமென்பது யாவரும் அறிந்த விஷயம். வ்யாஹ்ருதிகள் அவன் சரீரங்களாகின்ற பூராதி லோகங்களைக் காட்டுகின்றன. அவற்றால் அந்த லோகங்கள் எவனது ரூபமோ அப்படிப்பட்ட நாராயணனே ஸ்மரிக்கப்படுகின்றான். ஸவித்ரு ஶப்தம் ஸூர்ய வாசகமாக ஸாதாரணமாய் அறியப்பட்ட போதிலும், சப்தார்த்த பராமர்சத்தால் ஜகத்தை ஸ்ருஷ்டிக்கின்றவனெனப் பொருள்தரும். இதனால் 'ஜந்மாத்யஸ்ய யத:' எனும் ஸூத்ரப்படி ப்ரபஞ்சத்தினுடைய ஸ்ருஷ்டி ஸ்திதி லயம் இவற்றிற்குக் காரணமாகப்பட்ட பரப்ரஹ்மமே ஸவிதா எனப்பட்டவன். தேவன் எனும் ஶப்தம் ப்ரகாசத்துடன் கூடினவன் எனப் பொருள்தரும். காயத்ரீயால் செய்யப்படும் த்யாநத்துக்கு விஷயமாகப்பட்டது அவனது ப்ரகாசமானபடியால் அவன் தேவன் எனப்படுவன். தேவன் என்றால் விளையாட்டுடன் கூடினவன் என்றும் அர்த்தமாகும்.

ஸ்ருஷ்டி முதலான வ்யாபாரம் கேவலம் க்ரீடார்த்தம் செய்கின்றவன் என்றுமாகும். காயத்ரீ மூன்றாம் பாதத்தால் நமது புத்திக்கு ப்ரேரகன் அவன் என்றுகிறது. மனிதன் மநஸ்ஸால் நினைத்ததை வாக்கினால் சொல்லிக் கர்மங்களால் நடத்துகின்றான். ஆதலால் ஸர்வ வ்யாபாரங்களுக்கும் மூலமாகின்ற நமது எண்ணங்களை நம்து கர்மாநுகுணமாக ப்ரேரிப்பிக்கின்றவன் ஈம்வரன் என்றுகிறது. யியஃ என்னும் சொல்லால், யீ முதலான புத்தி, மநஸ்ஸு, பஞ்ச ஜ்ஞாநேந்த்ரியங்கள் எனவும் அர்த்தம் செய்யலாம். அப்போது நமது ஸர்வேந்த்ரியங்களையும் அவற்றின் வ்யாபாரங்களுக்கு யோக்யமாக இருக்கும்படி செய்கின்றவன் என்றர்த்தமாம். இவற்றை அவன் பர்கஸ் அதாவது தேஜஸ், அதாவது ஸங்கல்ப ரூபமான ஶக்தி விஶேஷத்தால் நடப்பிக்கின்றான் என்றுகிறது. இந்த வ்யாபாரம் கண்களுக்குத் தெரிகின்ற தேஜோமண்டலம் செய்யாது. அதனைச் சரீரமாயுடைய ஸூர்யனெனும் தேவதையாகின்ற ஜீவனும் செய்யமாட்டான். இது ஸர்வேம்வரன் தொழில். ஆதலால் காயத்ரீயில் வரும் ஸவித்ரு தேவ ஶப்தங்களும் பரமாத்மாவைக் குறிக்கின்றன. ப்ரசோதயாத் என்றால் ப்ரசோதயது (ப்ரேரிப்பிக்கட்டும்) என்றும் அர்த்தம் செய்கின்றார்கள். அப்போது வரேண்யம், அதாவது யாவராலும் ப்ரார்த்திக்கத்தக்கதும் ஸர்வ அஜ்ஞாநத்தையும் போக்கவல்லதுமான அவனுடைய தேஜோரூபமான ஶக்தியோ ஸங்கல்பமோ நமது ஸர்வ ஜ்ஞாநத்தையும் நல்வழியில் ப்ரேரிப்பிக்கட்டும் என்று அர்த்தம் பொருந்தும். இப்படி ஸர்வ ஜகத் காரணனும், ஸர்வ ஶக்தி விஶிஷ்டனும், ஸர்வ நியாமகனுமிருக்கப்பட்ட நாராயணன் நம்மை நல்வழியில் நடத்தி நல்லறிவைக் கொடுக்கட்டும் என்று நிரந்தரமாகச் சிலகாலம் த்யாநம் செய்யவேண்டுமென்று நமது பெரியோர் ஸந்த்யா வந்தநத்தை நமக்கு உபதேசித்தனர். அதைப் புத்தி பூர்வமாக த்யாகம் செய்பவன் எவ்வளவோ ஜுகுப்ஸைக்கு விஷயமாகின்றான்.

இதைச்செய்ய கால நிர்ணயமேன் என்றால், அது ஸங்கேதமடியாக வந்திருக்கலாம். ஸர்வலோக வ்யாபாரங்களுக்கும் கால மேற்பட்டபடி இதற்கும் என் கூடாது? மேலும் இதற்குக் காலம் குறித்தது யுக்தி யுக்தமாகவு மிருக்கின்றது. “ஸம்ஹ்ருஷ்யதி



ஸூர்யோதயே ஸம்ஹ்ருஷ்யந்தி ஜநா | ஸூர்யாஸ்தமயே ச ததா | ந விஜாநந்தி மநுஷ்யா ஜீவித க்ஷயம் ॥ என்கிறபடி, உதித்தபின் எழுந்து அன்றைதினம் செய்யவேண்டிய க்ஷுத்ர வ்யாபாரங்களை நினைத்து ஸந்தோஷிக்கின்றார்கள். ஸூர்யன் அஸ்தமித்தால் ராத்ரியில் ப்ரியமாக எண்ணித் தேடும் விஷயங்களை நினைத்துக் களிக்கின்றனர். ஆயுளில் ஒரு நாள் கழிந்ததை எண்ணுகின்றாரில்லை. இவ்விரண்டு காலங்களிலும் மந்தேஹாள் என்னும் ராக்ஷஸர்கள் ஸூர்யனுடன் யுத்தம் செய்கின்றார்கள் என்றும், அப்போது ப்ராஹ்மணர்கள் காயத்ரீயால் அபிமந்த்ரிதமான அர்க்ய ஜலத்தால் அந்த ராக்ஷஸர்களை நிவர்த்திக்கின்றனரென்றும் வேதத்தில் சொல்லப்பட்ட அர்த்தவாதத்தின் பொருள். அக்காலங்களில் மநுஷ்யர்கள் (மந்த ஈஹா) ஹேயமான இச்சைகளை மநஸ்ஸில் கொண்டு, தாத்ருச வ்யாபாரங்களில் மநஸ்ஸைச் செலுத்துகின்றனர் என்றும், இந்த இச்சைகளும் வ்யாபாரங்களும் ஈஷத் புண்யமிம்ரங்களாக இருந்தபோதிலும், பர்யாயத்தில் பாபங்களானபடியால் பகவத் விரோதிகளென்றும், அவை மநுஷ்யர்களைப் பகவானுடைய உபாஸனையினின்றும் விலக்குகின்றனவென்றும், ஆதலால் பகவத் ப்ரதிபாதக மந்த்ரங்களில் ஸர்வோத்தமமான காயத்ரீ மந்த்ரத்தைக்கொண்டு, பகவத் பாஹ்யாராதநமும், மாநஸீக வ்யாபாரமான ஜபமும் உபஸ்தாநமெனும் ஸ்தோத்ரமும், த்ரிகரணங்களாலும், த்விஜர்கள் யாவரும் செய்யவேண்டுமெனும் விதியை த்ருடப்படுத்துவதென்று நமக்குத் தோன்றுகின்றது. இப்படி விதிப்ராப்தமானதும், நமது பெரியோரால் அநுஷ்டிக்கப்பட்டு அவரால் நாமும் அநுஷ்டிக்க வேண்டியதென இச்சிக்கப்பட்டதும், பகவா னுகந்தருளிய ஸ்வயம் ஆராதந ரூபமான கைங்கர்யமாகவும் இருக்கப்பட்ட ஸந்த்யாவந்தநத்தைப் ப்ராஹ்மணனாயிருந்து தவர்தல், தத்காலத்தில் பாபத்தை உண்டாக்கி, ப்ரஷ்டர் கோஷ்டியில் சேர்ப்பித்து, லோகாந்தரத்தில் ஆத்ம ஹாநியையும் பலிக்கச் செய்யுமென்பதில் ஸந்தேஹமுளதோ?

* * * * * *

இது விஸ்தரித்தெழுத வேண்டிய விஷயம். இவ்விடம் விதியின்றி ஸங்க்ரஹிக்க வேண்டியதாயிற்று. ஸூர்யோதீயே ஸ்நா

க்ஷுத்ர வஶீவாஹ: ப்ரதிக்ரியா । என்கிறபடி, தடாகம் ஜலவ்ருத்தியால் உபத்ரவிக்கப்பட்டால், கரையில் ஓர்புறம் வெட்டிக் கொஞ்சம் ஜலத்தை வெளிப்படுத்தல் பரிஹாரமெனப்படும். ப்ராஹ்மணன் செய்யவேண்டிய கர்மங்கள் மிகுந்த விஸ்தாரமடைந்த போதிலும், தேஹ யாத்ரை ஸுலபமாயும், தேசம் ஆசாரங்களாலும் கொள்கைகளாலும் மிகவும் பேதப்படாமலும், ராஜாக்கள் ஆர்ய தர்மங்களை ரக்ஷித்துக்கொண்டும் இருந்த காலத்தில் அவை நன்றாக அநுஷ்டிக்கப்பட்டன. இந்த நிமைகளனைத்தும் தத்காலம் மாறிவிடவே, கர்மங்கள் பகவதாராதநரூபமாக அநுஷ்டிக்க வேண்டியவையாயினும், பலாபேக்ஷையின்றி அநுஷ்டிதங்களாகில், ஸ்வயமாகவோ, சித்த ஶுத்தி த்வாராவோ, மோக்ஷஸாதநத்துக்கு அநுகூலங்களாயினும், அநுஷ்டிக்க வேண்டியவருடைய தத்கால நிலைமையை உத்தேசித்தும், தடாகத்தில் ஜலம் ப்ரவாஹ காலத்தில் கரையைக் கடப்பதுபோல், கர்மங்களின் விஸ்தாரத்தால் அவற்றைச் செய்யவேண்டியவர் ஶாஸ்த்ர மர்யாதையாகிற ஸேதுவைக் கடக்கின்ற ஸ்திதியை யோசித்தும், அந்த ஸேதுவின் ஓர் ப்ரதேஶத்தைத் திறந்து, அவஶ்யம் அநுஷ்டேயமானவற்றை நிஶ்சயித்து நிலைக்கச்செய்து, மிகுதியை வெளிப்போக்கினால், அவஶ்யகர்தவ்யமெனும் கர்மமாகிற ஜலமடங்கிய தடாகத்தின் ஶாஸ்த்ர மர்யாதையாகிற ஸேதுவும், ரக்ஷிக்கப்பட்டதாகும். இதற்கு ஶாஸ்த்ரமும் இடம் கொடுக்கும். இதை ஜ்ஞாதாக்கள் விமர்ஶிக்கத்தக்கவர். ஸந்த்யோபாஸந மாத்ரமாவது யதாவத்தாய்ச் செய்யப்பட வேண்டுமென்றும், அதுவே மோக்ஷபர்யந்தம் உதவும் என்றும், ப்ரஹ்மஶ்ரீ ஹரிஹர ஶாஸ்த்ரிகள் உபந்யஸித்தது மிகவும் உசிதமென்று நாம் நம்புகின்றோம்.

---

வேதாந்ததீபிகை 189-வது பக்கம் 7-வது வரியில் "மஹாபாஷ்யம்" எனும் சொற்கள் "வ்யாகரணஸூத்ரம்" எனும் சொற்களுக்குப் பதிலாகப் பிசகாய்விழுந்துவிட்டன. எழுத்துப்பிழைகள் தீபிகையில் அங்கங்கே ஸம்பவிக்கின்றவற்றை யாம் முயன்றும் தடுக்கத் திறனற்றிருக்க, இவ்வித சொற்பிழை நேர்ந்ததைக்குறித்து வருந்துகின்றோம்.

## கர்மங்களின் த்ருஷ்டபலங்கள்.

நாம் செய்யும் கர்மங்கள் பலவகைப்பட்டன. சில கர்மங்கள்
தேஹதர்மத்தினால் அவசியம் செய்யப்படுகின்றன. ஆஹாரம்,
நித்ரை, முதலான கர்மங்கள் இந்த வகுப்பைச் சேர்ந்தன. இந்த
கர்மங்கள் செய்யாமலிருப்பது கூடாது. அவைகளைச் செய்வதி
னால் யாதொரு கர்மபலமும் ப்ரத்யேகமாய் விதிக்கப்படவில்லை.
கர்மங்களின் பலன்களுக்குத்தான் புண்யமென்றும் பாபமென்றும்
பெயர். இவை அத்ருஷ்டபலங்கள். அதாவது அவைகளின்
ஸ்வரூபம் நாம் ப்ரத்யக்ஷத்தில் அறியக்கூடாததாயும் ஶாஸ்த்
ரத்தைக் கொண்டே அறியக்கூடியதாயும் இருக்கிறது. 'யாக
பலம் ஸ்வர்க்கம்' என்றால் இந்தபலம் கிடைப்பதும் அநுப
விப்பதும் நமக்கு இந்த ஆயுஸ்ஸில் ப்ரத்யக்ஷத்தில் நேரிடாது.
ஆனதுபற்றி அது அத்ருஷ்டபலம். தேகதர்மங்களாகிற கர்மங்கள்
ஶாஸ்த்ரத்தினால் விஹிதங்கள் அல்ல. ஆகையால் அவைகளுக்கு
அத்ருஷ்டபலங்களில்லை. நமக்கு ருசித்த வஸ்துவைச் சாப்பிடுவ
தும் சாப்பிடாமலிருப்பதும் ராகப்ராப்த மென்று சொல்லுவார்கள்.
அதாவது, இவைகள் சாஸ்த்ரங்களில் விதிக்கப்பட்டவைகளல்ல.
ஆகிலும், ஆஹாரம் முதலான தேகதர்மங்களைச் செய்யும் விஷ
யத்தில் நம் ஶாஸ்த்ரங்களில் அநேகம் விதிகள் இருக்கின்றன.
பொதுவாய் மலஜலோத்ஸர்க்கங்கள், ஸ்நாநம், போஜநம், ஸ்த்ரீ
ஸம்போகம் ஆகிய இந்த அநிவார்யமாயும் ராகப்ராப்தமாயுமான
கர்மங்களில் கூட விசேஷமாய் சாஸ்த்ர நிர்ப்பந்தங்களும் விதிக
ளும் நம் தேசத்தில் ஏற்பட்டிருக்கின்றன. அவைகளின் உத்தேசம்
என்னவென்று விசாரிப்போம். போஜநாதி கர்மங்கள் ராகப்ரா
ப்தம், அதாவது தங்கள் தங்கள் இச்சையைப் பொறுத்தவைக
ளாகிலும், அவைகள் செய்யப்பட வேண்டிய கர்மங்களை சாஸ்
த்ரங்கள் விதிக்கின்றன. 'க்ரஹணத்தில் போஜநம் கூடாது, பூண்டு,
கஞ்சா, முதலானவை புஜிக்கக்கூடாது' என்பதுபோன்ற விதி
கள் ஏற்பட்டிருக்கின்றன. இவைகள் 'நியமவிதிகள்' என்று
சொல்லப்படுகின்றன. அதாவது நம் இஷ்டப்படி புஜிக்காமல்
சிலவற்றைத் தடுப்பதனாலும் சில ஸமயங்களில் போஜநத்தைத்
தடுப்பதனாலும் நாம் ஸ்வேச்சையாய் ப்ரவர்த்திப்பதைத் தடுக்

கின்றன. இந்த நியமவிதிகளுக்குப் பலம் த்ருஷ்டமா அல்லது அத்ருஷ்டமா வென்று விசாரிக்கும் பக்ஷத்தில், சாஸ்த்ரப்படி இவைகளுக்குப் பலம் அத்ருஷ்டம் தான். அதாவது அவைகளின் பலத்தை த்ருஷ்டமாய்க்கண்டு அதன்பேரில் அந்த விதிகளில் நாம் விஶ்வஸிக்கவாவது அவைகளை அநுஷ்டிக்கவாவது கூடாது. அவைகள் நம் புத்திக்கும் யுக்திக்கும் சரியாய்த் தோன்றினாலும் தோன்றாவிட்டாலும் அவைகளை நாம் அநுடிஷ்க்கவேண்டியது கடமை என்றே சாஸ்த்ர தாத்பர்யம். ஏனெனில், சாஸ்த்ரீயமான விதிகளின் பலங்கள் அத்ருஷ்டமாகவே யிருக்குமாகையால், அவைகளுக்கு த்ருஷ்டபலங்களைத் தேடுவது யுக்தமில்லை. நமக்கு சாஸ்த்ரங்களில் விஶ்வாஸம் பூர்ணமாய் இருக்குமானால், அத்ருஷ்டபலங்களே நம்முடைய ப்ரவ்ருத்திக்கும் சாஸ்த்ராநுவர்த்தநத்துக்கும் போதுமான ப்ரேரகங்கள். அத்ருஷ்டபலங்கள் இவ்வித கர்மங்களுக்கு ப்ராயேண ப்ரத்யவாய பரிஹார ரூபங்களாகவே இருக்கும். அதாவது, இப்படிப்பட்ட நியமவிதிகளை நாம் அநுஷ்டிக்காவிடில் பாபமென்றும், அநுஷ்டித்தால் விசேஷமான புண்ய மொன்றுமில்லை யென்றும் சொல்லுவார்கள். இந்தப் ப்ரத்யவாய பரிஹாரமும் புருஷார்த்தமாகையால் அப்படிப்பட்ட நியமங்களும் அநுஷ்டிக்கப்பட வேண்டியவைகளே.

ஸந்த்யாவந்தநம் முதலான விதிகள் நியமவிதிகள் அல்ல; அவைகள் ஸ்வதந்த்ரமான விதிகள். சாஸ்த்ரங்கள் இல்லாவிட்டால் அவைகள் செய்யவேண்டியன வென்று நாம் அறியவே மார்க்கமில்லை. மேலும் அவைகள் நித்யவிதிகள். அதாவது அவைகள் ஒரு பலத்தை உத்தேசித்தாவது, நிமித்தத்தை உத்தேசித்தாவது விதிக்கப்பட்டவைகளல்ல. அவைகளைச் செய்தால் புண்யமில்லை. செய்யாவிடில் மற்றகர்மங்களுக்கு அநர்ஹதையும் தோஷமும் உண்டாகுமாகையால் அவைகள் செய்யப்பட வேண்டியவைகளே. அன்றியும் அநேக விதிகள் காம்யவிதிகளென்று சொல்லப்படுகின்றன. அதாவது ஒவ்வொரு பலனை உத்தேசித்துச் சொல்லப்படுகிறவை காம்யவிதிகள். அந்தந்தப் பலன்களை விரும்பாதவர்களுக்கு அந்தக் கர்மங்கள் செய்யவேண்டிய நிர்ப்பந்தமில்லை. இதனால் நித்யகர்மங்களும் நைமித்திகங்களும் விதித்த காலங்களில் செய்யவேண்டிய கர்மங்களென்றும் காம்யங்கள் அப்படிப்பட்டவைகளல்ல வென்றும் ஏற்படுகிறது. ஆனால் நம்



சாஸ்த்ரங்களில் ஒரு விசேஷமிருக்கிறது. எவ்வித காம்ய கர்மங்களும் பலத்தில் விருப்பமில்லாமல் பகவத்ப்ரீத்யர்த்தமாகச் செய்யப்படலாம். அப்படிச்செய்யும் பக்ஷத்தில் அந்தக்கர்மங்களின் ஸ்வரூபமும் இதிகர்த்தவ்யதையும் காம்யங்கள் போலவே யாயினும் பலம் மாத்திரம் பகவத் ப்ரீதியாகிவிடுமென்றும், அவைகள் அப்போது பந்தகங்களாகமாட்டா என்றும் சாஸ்த்ரங்கள் சொல்லுகின்றன.

ஆனால் இந்தக் காலங்களில் விசேஷமாய் கர்மபாஹுள்யத்தை ஆதரிக்கப் பலருக்குச் சக்தியும் இஷ்டமும் ஸௌகர்யங்களும் இல்லாதிருப்பது எல்லோர்க்கும் தெரிந்ததாகையால், எந்தக் கர்மங்களை விட்டால் சாஸ்த்ராதிலங்கநம் இல்லாமலிருக்கும் என்று யோஜிக்கும் பக்ஷத்தில், நித்யங்களும் நைமித்திகங்களும் விடக்கூடாதவைகளென்றும், காம்யங்கள் விடக்கூடியவைகளென்றும், சக்தியில்லாதவர்கள் அவைகளை பகவத் ப்ரீதிக்காகக் கூடச் செய்யவேண்டிய நிர்ப்பந்தமில்லை என்றும் சொல்லலாம். ஆகையால் சாஸ்த்ரத்தில் விஶ்வாஸமுள்ளவர்கள் நித்ய நைமித்திகங்களை அறிந்து லோபமில்லாமல் செய்வதுதான் சாஸ்த்ரஸம்மதமென்று ஏற்படுகிறது.

கேவலம் அத்ருர்ஷ்டபலங்களான ஸந்த்யாதி கர்மங்களில் சாஸ்த்ர விஶ்வாஸமே ப்ரவ்ருத்திக்குக் காரணம். சாஸ்த்ரத்தில் விஶ்வாஸமில்லாத ஹைதுகர்கள் அவைகளால் என்ன ப்ரயோஜநம் என்று கேட்டால் அவர்களுக்குப் பதில் சொல்வது அஸாத்யந்தான். ஆகிலும் அப்படிப்பட்டவர்கள் இந்த காலத்தில் பஹுவாயிருப்பதால் அவர்கள் நல்ல யுக்திகள் என்று அப்யுபகமம் செய்யக்கூடிய சில அம்சங்களைச் சேர்த்துச் சொல்வதில் அநுசிதம் ஒன்றுமில்லை. சாஸ்த்ரங்களில் ஶிதிலமான பக்தியுள்ளவர்கள் அந்தந்த விதிகளின் ஸாதுவான த்ருஷ்டபலங்களைக் கருதி சாஸ்த்ர விஶ்வாஸத்தை ஸ்திரப்படுத்திக் கொள்ளக்கூடும். அவர்களை உத்தேசித்து மாத்ரம் சில விஷயங்கள் எழுதப்படுகின்றனவே யொழிய சாஸ்த்ர விதிகளுக்குப் பலக்குறைவை நிவர்த்திக்க எழுதப்படவில்லை.

அநேகமாய் சரீரதர்மங்கள் விஷயமான நியமவிதிகளெல்லாம் த்ருஷ்டபலத்தையும் கூட்டிக்கொண்டே நிற்கும். ப்ராதஸ்ஸ்நாநம் சாஸ்த்ரவிஹிதமாகிலும் சாஸ்த்ர பாஹ்யர்களும் அதைப் பஹுவாய் அநுஷ்டிக்கப் பார்க்கிறோம். தேகமலங்களை நிவர்த்

நிக்கவும் தேகதாதுக்களை சுத்தப்படுத்தவும் இந்த்ரிய பாடவத்தை
வ்ருத்திபண்ணவும் ப்ராதஸ் ஸ்நாநம் மிகவும் உபயோகமுள்ளது
என்பது நன்றாய்த் தெரிந்த விஷயம். இதை விசேஷமாய் அநுஷ்
டிக்கும் ஜாதிகளில் வ்யாதிகள் மிதமாயிருப்பதும், அதிகமாய்
ப்ரஸரிக்காமல் இருப்பதும், அநுபவஸித்தம். இதரகாலங்களில்
விட உஷꣳகாலத்தில் ஸ்நாநமே மேற்சொன்ன த்ருஷ்டபலங்க
ளைப் பூராவாய்க் கொடுக்குமென்றும் நிச்சயமாய்ச் சொல்லலாம்.
ஆனால் விசேஷ குளிரிலும், வ்யாதி காலங்களிலும், அதிக வ்ருத்
தர்களுக்கும் சீதஸ்நாநம் கூடுமோவென்றால், அவர்களுக்கு இந்த
விதிகள் அந்வயிக்காமல் சில ஸங்கோசங்கள் செய்ய, மந்த்ரஸ்நா
நம் முதலான சில விதிகள் ஏற்படுத்தப்பட் டிருக்கின்றன. ஆகை
யால் இந்தத் தேக தர்ம விஷயமான விதிகள் தேசஸௌகரியப்
படிக்கும் காலஸௌகரியப்படிக்கும் மாறக்கூடியவைகளென்றும்
ஆனால் தம்தம் இஷ்டப்படிக்கு ஜநங்கள் அவைகளை விட்டுவிட்டு
வ்யாதி முதலானவைகளால் பீடிக்கப்படுவதைத் தடுக்கவேண்
டியது அந்த விதிகளுக்குத் தாத்பர்யம் என்றும் ஏற்படுகிறது.
அப்படியே ஜலமலோத்ஸர்க்கங்கள் விஷயமான விதிகள் முக்ய
மாய் த்ருஷ்டபலத்தைக் கருதியே ஏற்பட்டவைகளென்றும் அவை
களை அநுஷ்டிக்காவிடில் அசுசியும் வ்யாதியும் நிச்சயமென்றும்
எல்லோரும் ஒப்புக்கொள்வார்கள். ஆகையால் அவைகளும் சாஸ்
த்ரவிதிகளென்று விச்வாஸக் குறைவால் உபேக்ஷிக்கப்படாமல்
அநுஷ்டிக்கப்பட வேண்டியவைகளே. ‘ப்ரயோஜந மநுத்திச்ய
ந மந்தோபி ப்ரவர்த்ததே’ என்கிற ந்யாயம் நியமவிதிகளிலும்
நித்ய விதிகளிலும் ப்ரவர்த்திக்காதாகிலும் அது ப்ரவர்த்திக்க
வேணுமென்று நிர்ப்பந்தமாய் ஒருவர் எண்ணினால் இப்படிப்பட்ட
த்ருஷ்ட ப்ரயோஜநங்களைக் காட்டி அவர்களை அநுஷ்டிக்கச்
செய்வதும் யுக்தம்தான்.

இப்படியே ஸ்திரீ ஸம்போகவிஷயமான விதிகளும் நியமங்க
ளும் தம்பதிகளின் சரீராரோக்யத்தையும் ப்ரஜைகளின் ஸௌஷ்
டவத்தையும் உத்தேசித்து ஏற்பட்டவைகளாய்ச் சொல்லலாம்.
அவைகளை ஸ்ம்ருதிகளில் சொல்லியிருக்கிறபடி அறிந்து அநுஷ்
டிப்பார்கள் தத்காலம் கொஞ்சம் நிர்ப்பந்தத்தை வஹிப்பதாய்
எண்ணினும் முடிவில் அதிக சரீராரோக்யத்தை அடைவார்க
ளென்பது நிச்சயம்.



இந்தப் பிரகாரம் தேஹதர்மங்கள் விஷயமான அநேக விதி
களுக்கு த்ருஷ்டபலங்களைச்சொல்வது ஸுலபம். போஜநவிதி
களும் பஹுவாய் இப்படிப்பட்டவைகளே. இவைகள் பலர்
அபிப்ராயத்தில் நிஷ்ப்ரயோஜநங்களாயும் அத்யந்தம் நிர்ப்பந்த
கரங்களாயும் பரஸ்பர ஸௌஹார்த்தத்தும் ஸௌசீல்யத்துக்கும்
பாதகங்களாயும் எண்ணப்படுகின்றன. இவைகள் விஷயத்தில்
தேசாசாரங்களும் ரொம்பவும் பிந்ந பிந்நமாயிருப்பதால் ஒரு
தேசாசாரந்தான் சாஸ்த்ர ஸம்மதமென்றும் மற்றவைகள்
அசாஸ்த்ரீயங்களென்றும் சொல்லமுடியாது.

“இந்த த்ருஷ்ட விஷயங்களில் விதிகள்தானேன்? எவர்
எதைப் புஜித்தால் என்ன? அவரவர்கள் அநுபவத்தால் தங்கள்
சரீரஸ்திதிக்குத் தகுந்ததை அறியார்களா? அவைகள் விஷயமாய்
விதிகளை ஏற்படுத்தி அவைகளை ஒழித்தால் தோஷமென்றும்
பாதித்யமென்றும் சாஸ்த்ரங்கள் சொல்வதுகூடுமோ. ‘ஸ்வா
[illegible] ஹி ஶாஸ்த்ர [illegible]’ என்று இருக்கிறதே? இந்த விஷ
யத்தில் சாஸ்த்ர நிர்ப்பந்தமே அநுசிதம்” என்று சிலர் எண்ண
லாம். ஆனால் இந்த விதிகள் தீர்க்கதர்சிகளால் பொது நன்மைக்கு
ஏற்படுத்தப்பட்டனவென்றும் சில அம்சங்களில் அப்போதைக்
கப்போது மாறுவது சாஸ்த்ர விருத்தமல்லவென்றும், யோஜித்தால்
நன்றாய் விளங்கும். நம்தேசத்தில் “மத்யபாநம்” மகாபாதகத்தில்
சேர்ந்திருப்பதாலேயே ப்ராயேண இதர தேசங்களிலுள்ள மத்ய
வ்யஸநம் இந்த தேசத்திலில்லை என்பதில் யாதொரு ஸந்தேகமு
மில்லை.

மேலும் அத்ருஷ்டபலங்கள் ஒரு கார்யத்துக்கு அமைந்
திருந்தால் அவை அந்தக் கார்யத்தைத் தடுப்பதுபோல த்ருஷ்ட
பலங்கள் எப்போதும் தடுக்குமென்று சொல்வது கூடாது.
திருட்டுக்கு முன் காலங்களில் வதம் கரச்சேதம் முதலான
கடுமையான தண்டங்கள் இருந்தும் அது நின்றதாய் தெரிய
வில்லை. கேவலம் அத்ருஷ்டபலங்களுள்ள ஸந்த்யாவந்தநாதிகள்
அநேக ஆயிரவர்ஷங்களாய் விடாமல் நடந்துவருகின்றன. ஆகை
யால் சாஸ்த்ரவிச்வாஸமுள்ள ஜநங்களுக்கு த்ருஷ்டபலங்க
ளான கார்யங்களையும் அத்ருஷ்ட பலங்களுள்ளவைகளாய்ப்
போதிப்பது நம் சாஸ்த்ரங்களின் வழக்கமாயிருக்கிறது. கேவலம்
விதிகளின் நிர்ப்பந்தத்தை உத்தேசித்து த்ருஷ்டபலங்களான ஸ்நா
நாதி கர்மங்களை உபேக்ஷிப்பது யுக்தமல்ல.

கேவலம் அத்ருஷ்ட பலமான ஸந்த்யாவந்தநாதி கர்மங்களிலும் த்ருஷ்டமான ப்ரயோஜநங்களை ஊஹிக்கக்கூடும். நாம் செய்யும் ஸந்த்யாவந்தநம் என்னும் க்ரியையின் முக்யமான பாகங்கள் அர்க்யப்ரதாநமும் ப்ராணாயாமமும் காயத்ரீஜபமும். இவைகள் ப்ரயேண அத்ருஷ்டபலங்களாக இருந்தாலும் உத்தேசத்தினாலோ ஆநுஷங்கிகமாகவோ சில த்ருஷ்டபலங்களைத் தருகின்றன. ப்ராணாயாமம் சரீரத்தின் உள்ளிருக்கும் வாயுவை சுத்தப்படுத்துவதில் மிகவும் உபகாரகம் என்று பல வைத்யர்கள் சொல்லுகிறார்கள். அதன் அங்கங்களான ரேசக, பூரக, கும்பக வ்யாபாரங்கள் ஆதுநிக சாஸ்த்ரப்படி ரக்த சுத்திக்கு முக்ய ஆதாரமான சரீராந்தஸ்திதமான வாயுவை பரிசுத்தம் செய்வதாகையால், சுவாஸப்பையின் கெடுதலால் உண்டாகக்கூடியவும் ரக்த தோஷத்தால். உண்டாகக்கூடியவுமான ரோகங்களுக்கு ப்ராணயாமம் பரிஹாரமென்று நிச்சயமாய்ச் சொல்லலாம். ரக்தத்தின் அசுத்தி ஸர்வமான இந்த்ரிய வ்யாதிகளுக்கும் சர்ம வ்யாதிகளுக்கும் நிதாநமாகையால் இதை உத்தேசித்தே நம் தேசத்தில் ஸார்வத்ரிகமாய் ப்ராணாயாமம் ஏற்பட்டிருப்பதாய்ச் சொல்லவும் கூடும். எதை உத்தேசித்து ஏற்பட்டிருந்தாலும் த்ருஷ்டபலங்களில் விச்வாஸ முள்ளவர்கள் இந்தக்காரணமாகப் பற்றி அநுஷ்டித்தால் அத்ருஷ்ட பலமும் கைகூடும். இப்படி இன்னும் பலகர்மங்களுக்கு யுக்தியால் த்ருஷ்டபலங்கள் சொல்லக்கூடும். ப்ரேத ஸம்ஸ்காரங்களும் ஆசௌச விதிகளும் ஸூதக விதிகளும் பஹுளமாய் த்ருஷ்ட பலங்களை உத்தேசித்தே ஏற்பட்டிருக்கவேணும். த்ருஷ்ட பலத்தை அறிய யுக்தி யெட்டாதவர்கள் உபேக்ஷிக்காமைக்காக அவைகள் விதிரூபமாய் ஆகிவிட்டன வென்று சொல்லலாம். அதைக்கொண்டு நாம் அவைகளுக்கு த்ருஷ்டபலமில்லை யென்றாவது அப்படி நம்புத்திக்கு த்ருஷ்ட பலம் தெரியாவிட்டால் உபேக்ஷிக்கப் படக்கூடியவை என்றாவது சொல்லக்கூடாது. த்ருஷ்டபலங்களையே எதிர்பார்க்கிறவர்களும் ச்ரத்தையுடன் விசாரித்தால் அப்படிப்பட்ட பலம் அநேக கர்மங்களுக்கும் ஏற்படுமென்று மேலெழுதினதே ஒழிய த்ருஷ்ட பலங்களில்லாவிட்டால் கர்மங்கள் த்யாஜ்யங்களென்று அபிப்ராயப்பட்டு எழுதினதல்ல. 'யஜ்ஞதாநதப꞉ கர்ம ந த்யாஜ்யம் கார்யமேவ தத்' என்னும் கீதாவசநம் இங்கே ப்ரமாணம்.

டி. ராஜகோபாலாசாரியர்.

# ஸ்ரீ அஹோபில ந்ருஸிம்ஹன் விஷயம்.

## உ-ப்ரஹ்லாத சரித்திரம்.

"ஓ தைத்யபாலர்களே! உத்க்ருஷ்டார்த்தமாகிற தத்வ ஸ்வ
ரூபத்தை நான் சொல்லுகின்றேன் கேளுங்கள்; என் வார்த்தைகளை
வேறுவிதமாக எண்ணவேண்டாம்; த்ரவ்யாசையால் நான்
சொல்லுகின்றேனில்லை; எல்லா ஜந்துக்களும் ஜந்மம் பால்யம்
யௌவநம் இவற்றை ஒன்றன்பின் ஒன்றாக அடைகின்றன; பிறகு
மூப்பு ஒரு தடையுமின்றி நாளுக்கு நாள் கிட்டுகின்றது; பின்னால்
ஒவ்வொரு ஜந்துவும் மரணத்தை யடைகின்றது; இந்த ரூப
மான சரீரவிகாரங்கள் என்னைப்போல் உங்களுக்கும் ப்ரத்ய
க்ஷமாகத் தெரிகின்றன.; இறந்தவன் மீளவும் ஜந்மத்தை யடை
கின்றான். இப்படித் தான் ஶ்ருதி ஸ்ம்ருதிகள் போதிக்கின்றன;
தர்க்கமும் அதைத்தான் காட்டக்கூடியது; காரணமில்லாமல்
ஜீவனுக்கு உத்பத்தி எப்படி உண்டாகும்? அந்தக் காரணமும் ஜந்
மாந்தரங்களிலேயே தேடவேண்டும்; புநர்ஜந்மம் ஸம்பவிக்கும்
வரையில் கர்ப்பவாஸம்; இப்படி ஒரு பிறப்பு முதற்கொண்டு
மறுபிறப்பு வரையில் ஒரு ஜீவனுக்கு நேரிடுகின்ற எழு அவ
ஸ்தைகளும் துக்க ரூபமென அறியுங்கள்; பசித்தால் சாப்பிட்டு
விட்டு ஸுகமடைவதாய் ப்ரமிக்கின்றனர்; தாகம் உண்டானால்
நீர் அருந்தி ஸுகாநுபவம் பாராட்டுகின்றனர்; குளிர்ந்தால் நெரு
ப்பினிடம் சென்று ஸுகாநுபவம் கொண்டாடுகின்றார்; ஆலோ
சித்தால், காலாந்தரத்தில் எந்த வஸ்துக்கள் துக்கத்தைத் தரு
கின்றனவோ, அவற்றையே துக்க நிவர்த்திக்காக மற்றொரு காலத்
தில் உபயோகப்படுத்துகின்றனர்; அதனால் ஸுகம் நிஜமாக
வருமா? வ்யாதியினாலோ, வேறெந்த ஹேதுவாலோ, பசி தாகம்
இல்லாதவனுக்கு அந்நமும், ஜலமும் அநர்த்தத்தையே விளைவிக்
கும்; க்ரீஷ்ம காலத்தில் நெருப்பினிடம் போய் ஸுகமடைவ
துண்டோ? ஸுகமென்று எண்ணப்படுவது துக்கநிவர்த்தியில்

மட்டுமே முடியும்; பால புத்தியால் அதை ஸுகமென்று எண்ணுகின்றான்; வாயு முதலான தோஷங்களால் மிகவும் ஜடமாய்ப் போந்த தேஹங்களுடையவர்கள், தேஹ ப்ரமத்தால் ஸுகத்தை அபேக்ஷிப்பார்கள்; அவர்கள் ப்ரமையால் பார்வை யற்றவர் போலும்; அவர் தம்மை ப்ரஹரித்தாலும் ஸுகமாக எண்ணுவார்கள்; ப்ரஹாரம் எங்காவது ஸுகமென்றே எண்ணக்கூடுமா? வாத பித்த ஶ்லேஷ்மாதிகளுடைய ஒரு ஸ்தூலமான குவியலாகின்ற எல்லாருடைய சரீரங்களும் எங்கே? இவற்றிற்கு வர்ணங்களின் ஆரோபணத்தால் செய்யப்பட்ட காந்தி, பூஷணங்களால் ஏற்பட்ட சோபை, கந்தவஸ்துக்களைப் பூசுவதால் உண்டுபண்ணப்பட்ட வாஸனை, பலவிதமாகச் செய்யும் அழகு, முதலான குணங்களெங்கே? மாம்ஸம் ரக்தம், துர்நீர், மலம், மூத்ரம், நரம்பு, கொழுப்பு எலும்பு முதலான இவற்றின் ஸங்காதமான சரீரத்தில் அபிமாநம் வைக்கும் மூடன் நரகாநுபவத்திலும் ரமிப்பவனே. ஸுகத்வமும் துக்கத்வமும் வஸ்துக்களிடமில்லை; ஒரு தேசகாலத்தில் ஸுகமாய் எண்ணப்படுவது, காலாந்தர தேசாந்தரங்களில் துக்கமாக முடிகின்றது. குளிர்முன் இருந்தால் அக்நி ஸுகத்தைத் தருவதாக மதிக்கப்படும்; தாகத்தின் பின் ஜலமும், பசியின்பின்னர் அந்நமும் அப்படியே நினைக்கப்படுகின்றன; ஒவ்வொன்றும் அதற்கு ப்ரதியோகி வஸ்து எதிர் தட்டான வஸ்து) பூர்வ பாவியாகில் ஸுகமாகிறது; அன்றேல் துக்கத்தின் பொருட்டே யாகின்றது; எவ்வளவு பர்யந்தம் ஒருவன் ஸம்பாதநம் செய்கின்றானோ, அவ்வளவு பர்யந்தம் அவன் மநஸில் ஸம்பாதித்த பொருள்கள் அவற்றின் ரக்ஷணார்த்தமாகத் துக்கத்தையே ஊர்ஜிதப்படுத்துகின்றன; எவ்வளவுமட்டும் ஒருவன் மநஸுக்கு ப்ரியமான ஸம்பந்தங்களைச் செய்துகொள்கின்றானோ, அவ்வளவுக்கும் அவன் ஹ்ருதயத்தில் ஶோகரூபமான முளைகள் அடிக்கப்படுகின்றன; வீட்டில் தேடி வைத்த பொருள் யாவும், ஸ்வாமியானவன் எங்கிருந்த போதிலும், அவன் மநஸிலும் இருக்கின்றன; அவை வீட்டில் நன்கு ரக்ஷிக்கப்பட்ட போதிலும், அவற்றின் நாசமோ, தீப்படலோ, களவோ, அவ்ன் மநஸில் எப்போதும் நினைக்கப்படுகின்றன; புருஷன் பிறக்கும்போது மஹாதுக்கத்துடன் பிறக்கின்றான்; இறக்கையிலும் அப்படியே இறக்கின்றான்; யமனுலகில் யாதனையின்



அநுபவமும் துக்காநுபவமே. கர்ப்பத்தில் அவன் ஸங்க்ர மிக்கும் போதும் அதுதான் ஸித்திக்கின்றது. கர்ப்பத்தில் ஸுகத்தின் லேசமாவது நீங்கள் அநுமிக்கின்றீர்களா? அநுமித்தால் சொல்லுங்கள். இவ்விதமாக இந்த ஜகத்முழுவதும் துக்கமயமாய் இருக்கின்றது. ஆனபடியால், அதிதுக்கங்களுக்கு இருப்பிடமாக ஸம்ஸார ஸாகரம் இருக்கின்றபடியால், (ஸவ காரம் கஷ்யேதஸத்யம் விஷ்ணுர்லோக॰ பராயணம்) ஸத்யமாகச் சொல்லுகின்றேன்: உங்களுக்குப் பகவான் விஷ்ணு ஒருவனே பரமமான ப்ராப்யன் ஆகின்றான். நாம் பாலர்கள்; நமக்கு இதில் அதிகாரம் இல்லையென்று எண்ணவேண்டாம். சரீரத்தின் பால யௌவநாதி ஸர்வாவஸ்தைகளிலும், ஶரீரியான ஆத்மா ஒருவனே. அவன் ஶாஶ்வதன். ஜரை, யௌவநம், ஜந்மம் முதலானவை சரீர தர்மங்கள். ஆத்மாவின் தர்மங்களன்று. 'நான் பாலன் இப்போது இஷ்டப்படி நடக்கின்றேன். யௌவநம் வந்தபிறகு பரம புருஷார்த்தத்தின் பொருட்டு யத்நிக்கின்றேன்' என்று பால்யத்தில் எண்ணுகின்றான். யௌவநம் வந்துவிட்டபிறகு, 'இப்போது யௌவநத்தை அடைந்திருக்கிறேன். மூப்பு வந்தபின் ஆத்மோஜ்ஜீவந ப்ரயத்நங்களைச் செய்கின்றேன்' என்று மீண்டும் நினைக்கின்றான். மூப்பு வந்தபிறகு, 'நான் கிழவன். செய்யவேண்டிய ஸமஸ்த கார்யங்களும் என் புத்திக் கெட்டவில்லை. ஸமர்த்தனாக விருக்கையில் எதைச் செய்யாமல் விட்டுவிட்டேனோ, அதைப் புத்தி மந்தித்துப் போனவளவில் என்னமாக ஸாதிப்பேன்?' என்கிறான். இப்படி விஷயேச்சையால் ஆகர்ஷிக்கப்பட்ட மநஸுடன் கூடினவனாய்ப் புருஷன், ஶ்ரேயஸ்ஸை அடையவேண்டுமெனும் இஷ்டமுள்ளவனாகிலும், அதன் அபிமுகமாக எப்போதும் நடப்பதில்லை. மூடர்களான புருஷர்கள் பால்யத்தில் விளையாட்டிலும், யௌவநத்தில் விஷயாநுபவத்திலும், அபிமுகர்களாய் வர்த்திக்கின்றார்கள். இதற்குள் வார்த்தகம் ப்ராப்தமாய் விடுகின்றது. அசக்தி மேலிட்டு அதைக் கழிக்கின்றனர். ஆதலால் விவேகமுள்ளவன் பால்யத்திலேயே இடைவிடாமல் ஶ்ரேயஸ்ஸைக் குறித்து யத்நபரனாகவேண்டும். பால்யாதி சரீரதர்மங்களால் அவன் கட்டுப்படாதவனாகவேண்டும். இப்படி என்றால் உங்கட்குச் சொல்லப்பட்ட விஷயங்கள் ஸத்யமென்று நீங்கள் எண்ணும் பக்ஷத்தில், என்னை ப்ரீதி பண்ணும் பொருட்டு ஸம்ஸார பந்தத்தி

னின்று மோக்ஷத்தைக் கொடுக்கும் விஷ்ணுவை ஸ்மரியுங்கள். அவனை ஸ்மரிப்பதில் என்ன ஆயாஸம் உண்டு? ஸ்மரித்தால் நன்மையைத் தருகின்றான். இரவும் பகலும் அவனை நினைப்பவர்க்குப் பாபம் க்ஷயித்துப் போகும்.

𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑌸𑍍𑌥𑌿𑌤𑍇 𑌤𑌸𑍍𑌮𑌿𑌨𑍍 𑌮𑌤𑌿𑌰𑍍𑌮𑍈𑌤𑍍𑌰𑍀 𑌦𑌿𑌵𑌾𑌨𑌿𑌶𑌂 ।
𑌭𑌵𑌤𑌾𑌂 𑌜𑌾𑌯𑌤𑌾 𑌮𑍇𑌵𑌂 𑌸𑌰𑍍𑌵𑌕𑍍𑌲𑍇𑌶𑌾𑌨𑍍 𑌪𑍍𑌰𑌹𑌾𑌸𑍍𑌯𑌥 ॥

𑌤𑌾𑌪𑌤𑍍𑌰𑌯𑍇𑌣𑌾𑌭𑌿𑌹𑌤𑌂 𑌯𑌦𑍇𑌤𑌦𑌖𑌿𑌲𑌂 𑌜𑌗𑌤𑍍 ।
𑌤𑌦𑌾 𑌶𑍋𑌚𑍍𑌯𑍇𑌷𑍁 𑌭𑍂𑌤𑍇𑌷𑍁 𑌦𑍍𑌵𑍇𑌷𑌂 𑌪𑍍𑌰𑌾𑌜𑍍𑌞𑌃 𑌕𑌰𑍋𑌤𑌿 𑌕𑌃 ॥

𑌅𑌥 𑌭𑌦𑍍𑌰𑌾𑌣𑌿 𑌭𑍂𑌤𑌾𑌨𑌿 𑌹𑍀𑌨𑌶𑌕𑍍𑌤𑌿𑌰𑌹𑌂 𑌪𑌰𑌂 ।
𑌮𑍁𑌦𑌂 𑌤𑌥𑌾𑌪𑌿 𑌕𑍁𑌰𑍍𑌵𑍀𑌤 𑌹𑌾𑌨𑌿𑌰𑍍𑌦𑍍𑌵𑍇𑌷𑌫𑌲𑌂 𑌯𑌤𑌃 ॥

𑌬𑌦𑍍𑌧𑌵𑍈𑌰𑌾𑌣𑌿 𑌭𑍂𑌤𑌾𑌨𑌿 𑌦𑍍𑌵𑍇𑌷𑌂 𑌕𑍁𑌰𑍍𑌵𑌨𑍍𑌤𑌿 𑌚𑍇𑌤𑍍𑌤𑌤𑌃 ।
𑌸𑍁𑌶𑍋𑌚𑍍𑌯𑌾𑌨𑍍𑌯𑌤𑌿𑌮𑍋𑌹𑍇𑌨 𑌵𑍍𑌯𑌾𑌪𑍍𑌤𑌾𑌨𑍀𑌤𑌿 𑌮𑌨𑍀𑌷𑌿𑌣𑌾 ॥

𑌏𑌤𑍇 𑌭𑌿𑌨𑍍𑌨𑌦𑍃𑌶𑌾𑌂 𑌦𑍈𑌤𑍍𑌯𑌾 𑌵𑌿𑌕𑌲𑍍𑌪𑌾𑌃 𑌕𑌥𑌿𑌤𑌾 𑌮𑌯𑌾 ।
𑌕𑍃𑌤𑍍𑌵𑌾𑌭𑍍𑌯𑍁𑌪𑌗𑌮𑌂 𑌤𑌤𑍍𑌰 𑌸𑌂𑌕𑍍𑌷𑍇𑌪𑌃 𑌶𑍍𑌰𑍂𑌯𑌤𑌾𑌂 𑌮𑌮 ॥

𑌵𑌿𑌸𑍍𑌤𑌾𑌰𑌃 𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑌸𑍍𑌯 𑌵𑌿𑌷𑍍𑌣𑍋𑌸𑍍𑌸𑌰𑍍𑌵𑌮𑌿𑌦𑌂 𑌜𑌗𑌤𑍍 ।
𑌦𑍍𑌰𑌷𑍍𑌟𑌵𑍍𑌯𑌮𑌾𑌤𑍍𑌮𑌵𑌤𑍍 𑌤𑌸𑍍𑌮𑌾𑌦𑌭𑍇𑌦𑍇𑌨 𑌵𑌿𑌚𑌕𑍍𑌷𑌣𑍈𑌃 ॥

𑌸𑌮𑍁𑌤𑍍𑌸𑍃𑌜𑍍𑌯𑌾𑌸𑍁𑌰𑌂 𑌭𑌾𑌵𑌂 𑌤𑌸𑍍𑌮𑌾𑌦𑍍𑌯𑍂𑌯𑌂 𑌯𑌥𑌾 𑌵𑌯𑌂 ।
𑌤𑌥𑌾 𑌯𑌤𑍍𑌨𑌂 𑌕𑌰𑌿𑌷𑍍𑌯𑌾𑌮𑍋 𑌯𑌥𑌾 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌸𑍍𑌯𑌾𑌮 𑌨𑌿𑌰𑍍𑌵𑍃𑌤𑌿𑌂 ॥
𑌯𑌾 𑌨𑌾𑌗𑍍𑌨𑌿𑌨𑌾 𑌨 𑌚𑌾𑌰𑍍𑌕𑍇𑌣 𑌨𑍇𑌨𑍍𑌦𑍁𑌨𑌾 𑌨 𑌚 𑌵𑌾𑌯𑍁𑌨𑌾 ।
𑌪𑌰𑍍𑌜𑌨𑍍𑌯𑌵𑌰𑍁𑌣𑌾𑌭𑍍𑌯𑌾𑌂 𑌵𑌾 𑌨 𑌸𑌿𑌦𑍍𑌧𑍈𑌰𑍍𑌨 𑌚 𑌰𑌾𑌕𑍍𑌷𑌸𑍈𑌃 ॥
𑌨 𑌯𑌕𑍍𑌷𑍈𑌰𑍍𑌨 𑌚 𑌦𑍈𑌤𑍍𑌯𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑍈𑌰𑍍𑌨𑍋𑌰𑌗𑍈𑌰𑍍𑌨 𑌚 𑌕𑌿𑌨𑍍𑌨𑌰𑍈𑌃 ।
𑌨 𑌮𑌨𑍁𑌷𑍍𑌯𑍈𑌰𑍍𑌨 𑌪𑌶𑍁𑌭𑌿𑌰𑍍𑌦𑍋𑌷𑍈𑌰𑍍𑌨𑍈𑌵𑌾𑌤𑍍𑌮𑌸𑌂𑌭𑌵𑍈𑌃 ॥
𑌜𑍍𑌵𑌰𑌾𑌕𑍍𑌷𑌿𑌰𑍋𑌗𑌾𑌤𑌿𑌸𑌾𑌰𑌪𑍍𑌲𑍀𑌹𑌗𑍁𑌲𑍍𑌮𑌾𑌦𑌿𑌕𑍈𑌸𑍍𑌤𑌥𑌾 ।
𑌦𑍍𑌵𑍇𑌷𑍇𑌰𑍍𑌷𑍍𑌯𑌾𑌮𑌤𑍍𑌸𑌰𑌾𑌦𑍍𑌯𑍈𑌰𑍍𑌵𑌾 𑌰𑌾𑌗𑌲𑍋𑌭𑌾𑌦𑌿𑌭𑌿𑌃 𑌕𑍍𑌷𑌯𑌂 ॥
𑌨 𑌚𑌾𑌨𑍍𑌯𑍈𑌰𑍍𑌨𑍀𑌯𑌤𑍇 𑌕𑍈𑌶𑍍𑌚𑌿𑌨𑍍𑌨𑌿𑌤𑍍𑌯𑌾 𑌯𑌾𑌤𑍍𑌯𑌨𑍍𑌤𑌨𑌿𑌰𑍍𑌮𑌲𑌾 ।
𑌤𑌾𑌮𑌾𑌪𑍍𑌨𑍋𑌤𑍍𑌯𑌮𑌲𑍇 𑌨𑍍𑌯𑌸𑍍𑌯 𑌕𑍇𑌶𑌵𑍇 𑌹𑍃𑌦𑌯𑌂 𑌨𑌰𑌃 ॥



𑌅𑌸𑌾𑌰𑌸𑌂𑌸𑌾𑌰 𑌵𑌿𑌵𑌰𑍍𑌤𑌨𑍇𑌷𑍁
𑌮𑌾 𑌯𑌾𑌤 𑌤𑍋𑌷𑌂 𑌪𑍍𑌰𑌸𑌭𑌂 𑌬𑍍𑌰𑌵𑍀𑌮𑌿 ।
𑌸𑌰𑍍𑌵𑌤𑍍𑌰 𑌦𑍈𑌤𑍍𑌯𑌾𑌸𑍍𑌸𑌮𑌤𑌾𑌮𑍁𑌪𑍇𑌤
𑌸𑌮𑌤𑍍𑌵𑌮𑌾𑌰𑌾𑌧𑌨𑌮𑌚𑍍𑌯𑍁𑌤𑌸𑍍𑌯 ॥

𑌤𑌸𑍍𑌮𑌿𑌨𑍍𑌪𑍍𑌰𑌸𑌨𑍍𑌨𑍇 𑌕𑌿𑌮𑌿𑌹𑌾𑌸𑍍𑌤𑍍𑌯𑌲𑌭𑍍𑌯𑌂
𑌧𑌰𑍍𑌮𑌾𑌰𑍍𑌥𑌕𑌾𑌮𑍈𑌰𑌲𑌮𑌲𑍍𑌪𑌕𑌾𑌸𑍍𑌤𑍇 ।
𑌸𑌮𑌾𑌶𑍍𑌰𑌿𑌤𑌾𑌦𑍍𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌤𑌰𑍋𑌰𑌨𑌨𑍍𑌤𑌾𑌤𑍍
𑌨𑌿𑌸𑍍𑌸𑌂𑌶𑌯𑍋 𑌮𑍁𑌕𑍍𑌤𑌿 𑌫𑌲𑌪𑍍𑌰𑌪𑌾𑌤𑌃 ॥

அந்த பகவான் ஸர்வ ப்ராணிகளிடமும் அந்தராத்மாவாக இருக்கையில், இரவும் பகலும் ஸர்வத்ர ஸ்நேஹ பாவமானது உங்களுக்கு உண்டாகட்டும். இவ்விதமாக ராகத்வேஷாதிகளால் ஜநிக்கின்ற ஸர்வ க்லேசங்களையும் விட்டுவிடுங்கள். இது துஷ்கரமான போதிலும், இந்த ஜகத் முழுவதும் ஆத்யாத்மிகாதி தாபத்ரயங்களால் கஷ்டப்படுகின்றது; ஆதலால் ஸர்வபூதங்களும் சோகிக்கத்தக்கவராக இருக்கையில், புத்திமான் ஒருவன் த்வேஷமும் செய்வானா? கருணையன்றோ ஸர்வத்ர செய்யவேண்டும். ஆனல் 'இதரர்கள் செல்வத்தாலும் கல்வியாலும் மற்றவிதத்தாலும் ஸம்ருத்திருக்கின்றனர்; நாமோ ஒன்றும் ஆர்ஜிக்க சக்தியில்லாதவராக இருக்கிறோம்' என்றிவ்விதம் எண்ணுவீராகில், அதற்காக ஸந்தோஷியுங்கள். பொறாமைப்படில் உமது புண்யம் க்ஷயித்து உங்கட்கு ஹானி நேரிடும். நிர்க்கவிரோதம் பாராட்டி இதரர்கள் உங்களிடம் த்வேஷம் செய்தாராகிலும், புத்திமான், அவரிடம் கருணை கொண்டு, 'ஐயோ! மோஹத்தால் வ்யாப்தரானரே' என்று அவர் விஷயத்தில் சோகிப்பன். பகவானைக் காட்டிலும் உலகத்தை வேறாகப் பார்க்கும் மத்யமாதிகாரிகளுடைய பக்ஷத்தை ஒப்புக்கொண்டு மேற்சொன்ன விதம் த்வேஷம் நிவர்த்திக்கும் ப்ரகாரங்கள் என்னல் சொல்லப்பட்டன. உத்தமாதிகாரிகளுடைய பக்ஷத்தைச் சுருங்கச் சொல்கின்றேன்; கேளுங்கள். இந்த ஜகத் முழுவதும் ஸர்வபூத சரீரியாக விளங்கும் விஷ்ணுவினுடைய விஸ்தரித்த ரூபம்; ஆனபடியால் ஜ்ஞாதாக்களால் பேத தர்சநத்தை விலக்கி ஆத்மஸ்வரூபமாகவே பார்க்கத்தக்கது. ஆதலால் சரீரமே ஆத்மாவென்று நினைக்கும் ஆஸுர பக்ஷத்தை நான்

விட்டுவிட்டதுபோல் நீங்களும் விட்டு, மோக்ஷரூபமான பரமாநந்தத்தை எப்படி யடைவோமோ அப்படி யத்நம் புரிவோம். அக்நியாலும், ஸூர்யனாலும், சந்த்ரனாலும், வாயுவாலும், பர்ஜந்ய வருணர்களாலும் அடைவிக்கப்பட்ட ஆதிதைவிக மெனப்பட்டதும், ஸித்தர்களாலும், ராக்ஷஸர்களாலும், யக்ஷர்களாலும், தைத்ய ராஜர்களாலும், நாகர்களாலும், கிந்நரராலும், மனிதரா லும், ம்ருகங்களாலும் அடைவிக்கப்பட்ட ஆதிபௌதிக மெனப் பட்டதும், சரீரங்களில் உத்பவிக்கும் தோஷங்களாலும், அதாவது ஜ்வரம், கண்ணோய், அதிஸாரம், வீக்கம், குல்மம் முதலான வற்றாலும், த்வேஷம், பொறாமை, கோபம், காமம், துராசை, முதலிய மாநஸ துக்கங்களாலும் அடைவிக்கப்பட்ட ஆத்யாத்மிக மெனப்பட்டதும், மற்ற அவித்யை கர்மம் இவற்றால் உண்டாவதுமான யாதொரு குறையையாவது நாசத்தையாவது அடையாமல், நித்யமாய் அத்யந்த நிர்மலமாய் இருக்கப்பட்ட அந்த மோக்ஷத்தை, ஒவ்வொரு மநுஷ்யனும் தன் ஹ்ருதயத்தைப் பரிசுத்தனான கேசவனிடம் வைத்து அடைகின்றான். (முடிவாகச் சொல்கின்றேன்; கேளுங்கள்.) ஸாரமற்ற ஸம்ஸாரமாகிற பஹுதேஹப்ராப்தி ரூபமான சுழலில் அகப்பட்டுக்கொண்டு, அந்தந்த சரீர ப்ரயுக்தமாய் ஸம்பவிக்கப்பட்ட போகங்களில் ஸந்தோஷத்தை அடையவேண்டாம். பலாத்காரமாய்ச் சொல்லுகின்றேன் : ஸர்வபூதங்களிடமும் ஸமத்ருஷ்டியை அடையுங்கள். அது தான் அச்யுதனுடைய ஆராதநம். அவன் ப்ரஸந்நனாகில் உங்கட்குக் கிடைக்காதது என்னவுண்டு? ஆகிலும், துச்சமாகும் தர்மார்த்த காமங்கள் போதும். அவற்றைப் பகவானிடம் ப்ரார்த்திக்க வேண்டாம். மோக்ஷத்தையும் நீங்கள் ப்ரார்த்திக்க வேண்டாம். ஏனெனில் ப்ரஹ்மவ்ருக்ஷம் எனப்படும் அநந்தனை ஆச்ரயித்தபின், முக்தியாகிற பழம் நிஸ்ஸம்சயமாகத் தானே விழப்போகின்றது."

ப்ரஹ்லாதன் உபதேசம் இந்த ரூபமாக ஸ்ரீ விஷ்ணுபுராணத்தில் வர்ணிதம்.

தி. த. ர.

எம்பெருமான் கிருஷ்ணனாய் வந்தவதரித்தாப்போலே வேதங்களும் திருவாய்மொழியாய் வந்தவதரித்தன. வார்த்தாமாலை.

# தத்வ விசாரம்

## உ - ஈச்வர விஷயம்.

ச்ருதியினால் நிஷ்கர்ஷிக்கப்பட்ட பரமேச்வரன் வாஸுதேவ னென்பதை ச்ருதி வசநங்களாலும், புராணரத்நத்தாலும், இதர ப்ரமாணங்களாலும் நம்முடைய பூர்வாசார்யர்கள் ஸித்தாந்தம் செய்திருக்கின்றனர். இந்த யோசனை ஸமீசீநமானதென்பதை அத்வைத மத ப்ரவர்த்தகர்களும் ரக்ஷகர்களுமான ஆசார்யர்கள் வசநங்களால் நிரூபிக்கச் சிறிது யத்தனிப்போம். ஏனென்றால் அத்வைத ஸித்தாந்தாபிமாநிகளுக்குள் சிலர் இந்த விஷயத்தில் அவகாச மில்லாமலிருக்க, ஸ்வாசார்யோக்திகளில், தெரிந்தோ தெரியாமலோ ப்ரத்யயக்குறைவைக்காட்டுகிறார்கள். நாம் கேவலம் பக்ஷபாதத்தால் எழுதுகின்றோ மில்லை. ஸித்தாந்த ப்ரவர்த்தகர்களுக்குள் விசேஷ க்யாதியுள்ளவர்களும், பக்ஷபாத கந்தமில்லாதவர்களென மதிக்கத்தக்க ஸ்ரீ சங்கராசார்யர் முதலானவர்களும் ஸ்ரீ விஷ்ணுபுராணவசநங்களை மிகவும் ஆதரிக்கின்றாரெனக் காட்டுஞல் நம்முடைய தாடஸ்த்யம் ஸந்தேகமற விளங்கும் எனும் இச்சையால் ப்ரவர்த்திக்கிறோம். ஆநந்த தீர்த்தர், ஸ்ரீ க்ருஷ்ண சைதந்யர், வல்லபர், முதலான பகு ஸித்தாந்த ஸ்தாபகாசார்யர்கள் வாஸுதேவன் பரப்ரஹ்மம் எனும் யோசனையில் மிகவும் கலங் தவரென்பது யாவரும் ஒப்புக்கொள்ளத் தக்கது.

இதற்கு முன் ப்ருஹதாரண்யோபநிஷத்தில் அந்தர்யாமி ப்ராஹ்மணத்தினின்று சில வசநங்களெடுத்தோம். அதில் ப்ரதி "ஸம்தயாமிணம் ப்ருச்சாமி" வசநம் சொல்லும் யாஜ்ஞவல்க்யர் அந்தர்யாமி விஷயமாய், என்று ப்ரச்நை செய்த உத்தாலகருக்கு, "யஃப்ருதிவ்யாம் திஷ்டந்" என்று உபதேசிக்க ஆரம்பிக்கையில், பூமியில் நிற்பவனும் பூமிக்குள் இருப்பவனும் ஆரம்பித்து,

பூமியால் தனக்குள் இருப்பதாக அறியப்படாதவனும், எவனுக்குப் பூமி சரீரமாகின்றதோ எவன் பூமிக்குள் நின்று அதனுடைய வ்யாபாரங்களை நடப்பிக்கின்றானோ, அப்படிப்பட்ட நித்யனான பரமாத்மா உனக்கும் அந்தர்யாமி என்று உபதேசித்தார். இதற்கு பாஷ்யம் செய்கையில் ஸ்ரீ ஶங்கராசார்யர் சப்தங்களின் அர்த்தங்களைச் சொல்லிவிட்டு "ஸ ஏஷ ஈஶ்வர: நாராயணாக்ய:" "அந்த இத்தகைய ஈச்வரன் நாராயணன் எனும் பெயரால் அறியப்பட்டவன்" என்று முடிக்கிறார். புராணரத்நத்தில் ப்ராஹ்லாதன் பகவானை ஸ்தோத்ரம் செய்கையில், 'மய்யந்யத்ர ததாஶேஷபூதேஷு புவநேஷு ச। தவைவ வ்யாப்திரைஶ்வர்யகுணஸம்ஸூசிகீ ப்ரபோ'। "என்னிடமும், அவ்விதமே மற்றெல்லா பூதங்களினிடமும், ஸர்வ லோகங்களிலும், உன்னுடைய வ்யாப்தியானது உனது ஐச்வர்யத்தையும், ஸத்ய ஸங்கல்பத்வாதி குணங்களையும் நன்றாகக் காட்டுகின்றது." என்று ஸ்துதி செய்தார். அந்தர்யாமியாகவும் விஷ்ணு எனும் பெயருக்கிணங்க வ்யாபந ஶீலனாகவும் நாராயணனிருக்கின்றானென்று நாராயணாநுவாகத்தில் அந்தர்பஹிஶ்ச தத்ஸர்வம் வ்யாப்ய நாராயணஸ்ஸ்தித: என்னும் வாக்யத்தால் கூறப்பட்டிருக்கின்றது. இத்யாதி ப்ரமாணங்களைக்கொண்டு ஸ்ரீ ஶங்கராசார்யரும் நாராயணன் தான் ஈச்வரனென நிர்ணயித்தார். முக்தரால் அடையப்பட்ட இவனது ரூபத்தை ஸ்ரீ ஶங்கராசார்யர் வாஸுதேவ ஶப்தத்தால் நிரூபித்தார். கடோபநிஷத்தில் ஸோऽத்வந: பாரமாப்நோதி தத்விஷ்ணோ: பரமம் பதம் என்னும் வாக்யத்திற்கு வ்யாக்யாநம் செய்கையில், அதன் பூர்வ வாக்யத்தால், வித்வானாகவும், மநஸை அடக்கினவனாகவும், அதனால் எப்போதும் ஶுத்தனாகவும் எவனிருக்கின்றானோ அவன் புநராவ்ருத்தியில்லாத அந்தப் பதத்தையடைகின்றான் என்று சொல்லியிருப்பதை அநுஸரித்து, அந்தப் பதம் எது எனும் வினாவுக்கு ஸோऽத்வந: பாரம் எனும் வாக்யம் விடையாகின்றதெனச்சொல்லி, ஸ: = வித்வாந், அத்வந: = ஸம்ஸாரகதே:, பாரம் = பரமேவ, அதிகந்தவ்யமித்யேதத்



தத், ஆப்நோதி = முச்யதே ஸர்வஸம்ஸாரபந்தநை:, தத் விஷ்ணோ: = வ்யாபநஶீலஸ்ய ப்ரஹ்மண: பரமாத்மநோ வாஸுதேவாக்யஸ்ய, பரமம் = ப்ரக்ருஷ்டம், பதம் = ஸ்தாநம், தத்த்வமித்யேதத் யதஸாவாப்நோதி வித்வாந், என்று பாஷ்யம் செய்திருக்கின்றார். அம்ருதத்வஸ்யேஶாந: என்று புருஷஸூக்த ப்ரதிபாத்யனை முக்தியைக் கொடுப்பவனும், முக்தர்களால் அடையப்பட்டும் அநுபவிக்கப்பட்டவனுமான எம்பெருமான் வாஸுதேவன் விஷ்ணு எனும் நாமங்களால் வ்யவஹரிக்கப்பட்டவன் என்று ஸ்ரீ ஶங்கராசார்யர் முடித்திருக்கிறார். மேலும் இதற்கு முண்டகோபநிஷத்தில் அக்ஷரம் எனும் பெயரால் பரப்ரஹ்மத்தைச் சொல்லி அதன் ஸ்வரூபத்தை யத்தத்ரேஶ்யமக்ராஹ்யம் இத்யாதி வாக்யத்தால் வெளியிடப்பட்டதென்று சொன்னோம். இந்த வாக்யத்தின் பிறகு அதே உபநிஷத்தில் அந்த அக்ஷர ப்ரஹ்மம் ஜகத் காரணமெனவும் ஸர்வஜ்ஞன் ஸர்வவித்தென்றும் சொல்லி, நன்றாய்க் கொழுந்து விட்டெரியும் அக்நியினின்று ஸவயவ ரூபங்களாய்ப் பொறிகள் உண்டாகும் வண்ணம் அக்ஷர ஶப்த வாச்யமான ப்ரஹ்மத்தினிடம் அஸங்க்யேயர்களாக ஜீவர்கள் உண்டாகின்றார்களெனவும் லயிக்கின்றார்களெனவும் வெளியிட்டு, அந்த ப்ரஹ்மத்தையே, அக்நிர்மூர்தா சக்ஷுஷீ சந்த்ரஸூர்யௌ திஶ: ஶ்ரோத்ரே வாக்விவ்ருதாஶ்ச வேதா:। வாயு: ப்ராணோ ஹ்ருதயம் விஶ்வமஸ்ய பத்ப்யாம் ப்ருதிவீ ஹ்யேஷ ஸர்வபூதாந்தராத்மா॥ எனும் வாக்யத்தால் விவரிக்கப்பட்டிருக்கிறது. இதன் அர்த்தமாவது "அக்நியாகிற தேவலோகம் அவன் ஶிரஸ்; ஸூர்ய சந்த்ரர்கள் அவன் கண்கள்; திக்குகள் அவன் காதுகள்; அவன் வாக்கினால் வெளியிடப்பட்டவை வேதங்கள்; வாயு அவன் ப்ராணன்; ஜகத் ஸர்வமும் அவன் ஹ்ருதயம்; அவனுடைய பாதங்கள் பூமி; அவன் ஸர்வ பூதங்களுக்கும் அந்தராத்மாவாக விருக்கிறான்." இங்கே வ்யாக்யாநம் செய்யுங்கால், இதற்கு முன் திவ்யோ ஹ்யமூர்த்த: புருஷ: இத்யாதி மந்த்ரத்தால் பாவித்யா விஷயனான அக்ஷரனை நிர்விஶேஷ

புருஷனாக வர்ணித்து, மறுபடியும் அவனை ஸவிசேஷனாக விஸ்தாரமாக வர்ணிக்கவேண்டி, अग्निर्मूर्धा இத்யாதி மந்த்ரம் உண்டானதாக ஸ்ரீ சங்கராசார்யர் அபிப்ராயப்படுகிறார். இந்த மந்த்ரத்தின் பாஷ்யாந்தத்தில், एष देवो विष्णुरनन्तः प्रथमशरीरी त्रैलोक्यदेहोपाधिः सर्वेषां भूतानामन्तरात्मा என்று எழுதுகிறார். அதாவது ஸர்வ லோக சரீரியாகவும் ஸர்வ பூதங்களுக்குள்ளும் அந்தராத்மா வாகவும் இருக்கப்பட்ட ஈச்வரன் விஷ்ணு என்கிறார். இந்த உபநிஷத் மந்த்ரங்கள் புருஷஸூக்த வாக்யங்களை யொட்டிவந்தன.

இன்னும் ப்ரஹ்மஸூத்ர பாஷ்யத்தில் ப்ரதமாத்யாயத்தில், நான்காவது பாதத்தில், ஆநுமாநிகாதிகரணத்தில், तद्विष्णोः परमं पदम् என்றும், கடோபநிஷத்தில் एष सर्वेषु भूतेषु गूढोत्मा न प्रकाशते। दृश्यते त्वग्र्यया बुद्ध्या सूक्ष्मया सूक्ष्मदर्शिभिः॥ "இந்த ஆத்மா எல்லா பூதங்களினிடமும் மறைந்தவனாய்க்கொண்டு ப்ரகாசிக்கின்றானில்லை; ஏகாக்ரதையை யடைந்து, (பாஹ்ய வ்யாபாரத்தினின்றும் விலகி) ஸூக்ஷ்மார்த்த தர்சந ஸமர்த்தமான புத்தியுள்ள ஸூக்ஷ்ம தர்சிகளால் ஸாக்ஷாத்கரிக்கப்படுகின்றான்." என்கிற வாக்யத்தால், वैष्णवस्य परमपदस्य दुरवगमत्वं அதாவது அறியக் கூடாமையை உபநிஷத் வெளியிடுகின்றதென அபிப்ராயப்படுகின்றார். அந்த வைஷ்ணவ பரமபதத்தை அறியும்பொருட்டே, यच्छेद्वाङ्मनसी प्राज्ञस्तद्यच्छेज्ज्ञान आत्मनि। ज्ञानमात्मनि महति नियच्छेत्तद्यच्छेच्छान्त आत्मनि॥ "விவேகியானவன் வாக் முதலான இந்த்ரியங்களை மநஸிலும், மநஸை ஆத்மாவிலிருக்கும் புத்தியிலும், புத்தியை மஹானாகின்ற கர்த்தாவான ஜீவாத்மாவிலும், ஜீவனை ஸர்வாந்தர்யாமியான பரப்ரஹ்மத்தினிடமும் லயிக்கச் செய்யவேண்டும்" என யோகத்தை உபநிஷத் உபதேசிப்பதாகவும் பாஷ்யம் செய்திருக்கின்றார். ஸூத்ர பாஷ்யத்தில் இரண்டாவது அத்யாயத்தில் முதல் பாதத்தில்



ஸ்ம்ருத்யதிகரணத்தில் ஜகத்துக்கு ஈச்வர காரணத்வத்தை ஸ்தாபிக்கின்ற ப்ரமாணங்களை எடுக்கின்றார். அவற்றுள் ஸ்ரீ விஷ்ணு புராணம் பகவத் கீதாவசநங்களையே எடுத்து, अतस्संक्षेप इदं शृणुध्वं नारायणः विश्वमिदं पुराणः। स सर्गकाले च करोति सर्वं संहारकाले च तदत्ति भूयः॥ "ஆகலால் சுருங்கச் சொல்கின்றேன் இதைக் கேளுங்கள்; ஸநாதநனாகிய நாராயணனே இந்த விச்வம்; ஸ்ருஷ்டி காலத்தில் அவன் ஸ்ருஷ்டியைச் செய்கின்றான்; ஸம்ஹார காலத்தில் மறுபடியும் ஸ்ருஷ்டிக்கப் பட்டவற்றை உபஸம்ஹரிக்கின்றான்" என ஸ்பஷ்டமாக நாராயணனையே ஜகத்துக்கு ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹார கர்த்தாவாகக் காட்டி, இதற்கு உபபலமாக, अहं कृत्स्नस्य जगतः प्रभवः प्रलयस्तथा என்று, அதே விஷயத்தைக் காட்டும் கீதா வசநத்தையு மெடுக்கின்றார். அந்ய தேவதையை ஜகத் காரணமாகக் காட்டும் ப்ரமாண மொன்றையும் ஸ்மரித்தாரில்லை. இந்த அதிகரணத்திலேயே மஹாபாரதத்தில் சாந்தி பர்வத்தில் மோக்ஷதர்மத்தில், 350-வது அத்யாயத்தில், அல்லது புஸ்தகங்கள் பேதிப்பதால் தத்ஸமீபமான ஒரு அத்யாயத்தில், சதுர்முகன் ஸ்ரீமந்நாராயணன் விஷயமாக ருத்ரனுக்கு உபதேசம் செய்யும் ப்ரகரணத்தில், ममान्तरात्मा तव च ये चान्ये देहसंज्ञिताः। सर्वेषां साक्षिभूतोऽसौ न ग्राह्यः केनचित् क्वचित्॥ "எனக்கும் உனக்கும் சரீரவான்களான மற்ற ஜீவர்களுக்கும், எல்லாருக்கும் அவன் அந்தராத்மாவாகவும் ஸாக்ஷி சேதநனாகவும் இருக்கின்றான்; எவனாலும் எவ்விடத்திலும் அவன் க்ரஹிக்கப்படான்." என்னும் ச்லோகத்தை ப்ரமாணமாக எடுக்கின்றார். பரதேவதா பாரமார்த்யாதிகாரத்தில், நாராயணனே பரப்ரஹ்மம் என நிர்ணயிப்பதற்காக ஸ்ரீ நிகமாந்த மஹாதேசிகன் மேலே குறிப்பிட்ட ச்லோகத்தை ப்ரமாணமாக எடுக்கின்றார்.

இரண்டாவது அத்யாயத்தில் இரண்டாம் பாதத்தில் பசுபத்யதிகரணத்தில், [illegible] காரண

[illegible] ॥ "மாஹேம்வரர்கள் (சைவர்கள், பாசுபதர்கள், காபாலிகர்கள் முதலானவர்கள்) இப்படி நினைக்கின்றார்கள். கார்யம், (மஹத் முதலானவை,) காரணம், (மஹேம்வரன்) யோகம், விதி (ஸ்நாநாதிகள்,) துக்காந்தம், (மோக்ஷம்) ஆகிய ஐந்து பதார்த்தங்கள் ஈம்வரனாகிய பசுபதியால் ஜீவன்களுடைய பந்த மோக்ஷத்தின் பொருட்டு, உபதேசிக்கப்பட்டன; பசுபதியாகிற ஈம்வரன் (ஜகத்துக்கு) நிமித்த காரணமென வர்ணிக்கின்றனர்." என்று சைவர்கள் மதத்தை ப்ரஸ்தாபித்து விட்டு, அதை நிரஸிக்குமிடம், அந்த மதத்தில் தான் ஏகதேசத்தையாவது அங்கீகரித்ததாக வெளியிடவில்லை. அதற்கடுத்த பாஞ்சராத்ராதிகரணத்தில், பாஞ்சராத்ரம் பாசுபதம் போல் இல்லாமல் ம்ருதியை அநுஸரித்த மதமென்று ஒப்புக்கொண்டு அதில் சில அம்சங்கள் தான் ம்ருதி விரோதமாகின்றன எனச் சொல்லி மதத்தை விஸ்தரேண விவரித்து, அந்த மத விஷயமாக ஸ்வாபிப்ராயத்தை கீழ் எழுதியபடி வெளியிடுகின்றார். [illegible] ॥ "இந்த விஷயத்தில், யாதொரு இந்த நாராயணன் அவ்யக்தத்தைக் காட்டிலும் பரனாகவும், ப்ரஸித்தனாகவும், பரமாத்மாவாகவும், ஸர்வாத்மாவாகவும், இருக்கின்றார் என்றும் அவர் ஸ்வேச்சையால் தானே அநேக வ்யூஹங்களாக நிற்கின்றார் என்றும் யாதொன்று சொல்லப்படுகிறதோ, அது ஆக்ஷேபிக்கப்படவில்லை. 'அவர் ஒன்றாக ஆகின்றார்; மூன்றாக ஆகின்றார்' இத்யாதி ம்ருதிகளால் பரமாத்மா பஹு ப்ரகாரமாக இருக்கின்றார் என்பது அறியப்பட்டிருக்கின்றது; இன்னும், அந்தப் பகவானுடைய அபிகமநாதி லக்ஷணமான ஆராதநம் இடைவிடாமல் ததேகசித்தனாக இருந்து செய்யவேண்டுமென்று அபிப்ராயப்படப்பட்டிருக்கிறதும் ப்ரதிஷேதிக்கப்படவில்லை. ம்ருதி ஸ்ம்ருதிகளில் ஈம்வரத்யாநம் ஆராதநம் முதலியவை ப்ரஸித்தமாகச் சொல்லப்படுகின்றன." இப்படிப் பாஞ்சராத்ர தர்சநத்தில் தன்னுடைய அநுகூலாபிப்ராயத்தை வெளியிட்டார். இன்னும் ப்ரஹ்ம ஸூத்ரத்தில் நாலாவது அத்யாயம் மூன்றாம் பாதம் கார்யாதிகரணத்தில், [illegible] எனும் ஸூத்ரத்துக்குப் பாஷ்யம் செய்யுமிடம், [illegible], "கார்யரூபமான ஹிரண்யகர்ப்பனுடைய லோகம் ப்ரளயதசையை அடைந்தபோது, அவ்விடத்திலேயே ஸரியான ஜ்ஞாநஸாக்ஷாத்காரத்தை யடைந்தவர்களாய்க்கொண்டு, அந்த லோகாதிபனை ஹிரண்யகர்ப்பனுடன் கூட அதற்கும் மேற்பட்ட பரிசுத்தமான விஷ்ணுவினுடைய பரம பதத்தை அடைகின்றார்கள்; என்றிப்படி க்ரம முக்தியானது அநாவ்ருத்யாதி ம்ருதிகள்சொல்லுகின்றபடியால், ஒப்புக்கொள்ளத்தக்கது." என்றிந்த விதமாக முக்தரால் அடையப்பட்ட ஸர்வேம்வரன் நாராயணன் என்றும், அவரால் அடையப்பட்ட லோகம் விஷ்ணுவினுடைய பரமபதம் என்றும் முடிக்கின்றார்.

பத்ராதிபர்.

# மூன்று ப்ரச்நோத்தரங்கள்.

கர்மாநுஷ்டாந விஷயமாக நம் தேசிகன் விரோதிபரிஹாரத்தில் அருளிச்செய்கிறார் :—

### (க) கைங்கர்யபரன் வர்ணாச்ரம தர்மங்களை அநுஷ்டிக்க வேண்டுமோ ?

" இப்படி ஸ்ரீயஃபதியைப்பற்ற ததீய சேஷத்வ பர்யந்தமான தாஸ்யத்தை அறிந்தவர்க்கு கைங்கர்யமும் ததீய கைங்கர்யபர்யந்தம். இது ராஜவத் உபசாரம் என்கிற கணக்கிலே காண வேண்டினால் மாலாகரண தீபாரோபண ஸ்துதி நமஸ்கார கீர்த்தநாதிகளையும், கிங்கரனுக்கடுத்த வேஷத்தையும் ஒழிய வர்ணாச்ரம தர்மங்களென்று சில கர்த்தவ்யங்களும் அவற்றுக்கடுத்த வைஷம்யங்களும் இவனுக்குப் பரிக்ராஹ்யங்களாமோ எனில்,

இது கைங்கர்ய சப்தத்திற்குப் பொருளறியாமல் சொன்னபடி. கிங்கரனாவான் ஏவல் தேவை செய்யுமவன். கைங்கர்யமாவது ஸ்வாமி ஏவினவற்றைச் செய்கை. ஆகையால் ஸர்வ ஸ்வாமியான ஈச்வரன் தந்தாமதிகாரிக்கு அநுரூபமாக பகவத் பாகவத விஷயங்களில் சாஸ்த்ர முகத்தாலே ஏவின தேவைகளைச் செய்கை இங்கு கைங்கர்யம்; இது தவறுகை அபராதம்.

மாலாகரணாதி விசேஷ கைங்கர்யங்களையும் தந்தாமதிகாரங்களைப் பார்த்து யதா சாஸ்த்ரம் அநுஷ்டியாதபோது அபராதமாம். ஆகையால் தந்தாமுக்கடுத்த சௌசாசமந ஸ்நாந ஸந்த்யோபாஸநாதிகளைவிட்டால்,

" ஸந்த்யாஹீநோஶுசிர் நித்யம் அநர்ஹஸ் ஸர்வகர்மஸு |
யதந்யத் குருதே கர்ம ந தஸ்ய ஃபலபாக் பவேத் || "

இத்யாதிகளின்படியே விசேஷ கைங்கர்யங்களுக்கும் அநர்ஹனும். அவை பண்ணினாலும் உகப்புக்குடலாகாது;

" வ்ருத்தஸ்தா ஹி ஸதாம் கதி: "

என்னும் அவஸ்தையும் வரும்.

### (உ) கலியுகத்தில் பரமைகாந்தி தர்மம் அநுஷ்டேயமாமோ ?

இப்படி ததீயபர்யந்த கைங்கர்யத்திலே ப்ரவ்ருத்தனானவனுக்கு பகவச்சாஸ்த்ராதிகளில் சொல்லப்பட்ட க்ருதயுக தர்ம



மான பரமைகாந்தி தர்மம் கலியுகத்தில் அநுஷ்டேயமாமோ? ஆகையால் இக்காலத்திற்கு அக்நீந்த்ராதி விஷய வர்ணாச்ரம தர்மங்களும் கல்பஸூத்ராதிகளிற் சொன்ன பகவதர்ச்சநாதிகளும் கர்த்தவ்யமா மத்தனையன்றோ? ஆனபின்பு இக்காலத்தில் அதிகாரிகளைப்பற்ற,

" அத பரமைகாந்திநோ பகவதாராதநம் வக்ஷ்யே "

என்று பாஷ்யகாரரும் அருளிச்செய்தபடி எங்ஙனே எனில், இது அதிகாரி வைஷம்யம் என்று அறியாமையாலே வந்த சோத்யம். எங்ஙனேயென்றால்,

" கலௌ க்ருதயுகம் தஸ்ய கலிஸ்தஸ்ய க்ருதே யுகே |
யஸ்ய சேதஸி கோவிந்தோ ஹ்ருதயே யஸ்ய நாச்யுத: || "

இத்யாதிகளிலும் அப்படிப்பட்ட ஸத்வோத்தரரான அதிகாரிகள் உள்ளபோது இப்பரமைகாந்தி தர்மம் அநுஷ்டிக்கக் குறையில்லை.

" யஸ்தா கார்த்த்ய ப்ரோயசேஷ்டா நக்ஷத்ர்ய: கலௌ யுகே "

என்றதவும்,

" கலௌ ஜந்து ஸம்ஸார விச்சேதாய ஸமுத்யயே |
பாபக்ஷீணே ஜாயதே பும்ஸாம் கோவிந்தாங்க்ரி ஸமாஶ்ரிதி: ||
பஹூநாம் ஜந்மநாமந்தே ஜ்ஞாநவாந் மாம் ப்ரபத்யதே |
வாஸுதேவஸ் ஸர்வமிதி ஸ மஹாத்மா ஸுதுர்லப: || "

என்கிறபடியே அதிகாரி விசேஷத்தினுடைய துர்லபதையைப் பற்றிச் சொல்லுகிறது. கடிகாதி வ்யவஸ்தைகளிற் போலே கலியுகத்துக்கும் விசேஷித்து நிஷேதிக்கும் தர்மங்களிலே தாத்பர்யமாக்கலாம்.

" ப்ராஜ்ய: ஸஜ்ஜநம் த்ருஷ்ட்வா ப்ராபய்யோ பமவத்தரம் |
ராகவவ ஷோரா க்வீவ யநவஷம் வநிஷ்ய: ||
ககஸீ கவிஷ்ணம் த்ருஷ்ட்வா யாசியகம் வ நயாசிக: |
நிஷ்யணோ மாணவகம்வ வாதேஷு தத்வலக்ஷணம் ||
விபரீதம் தா ராஜேந்த்ர ஸநேதஷா க்ருதலக்ஷணம் |
ப்ராஹ்மணோ வாயவாராஜா வைஶ்யாவா ஶூத்ரஸவவா ||
ப்ரஶஸ்தே ஷாப்ரஸக்தாஸ்து ஶஸ்யம் தேயஶஸ்விந: || "

என்று கலியுகத்திலும் நல்வழி நடப்பாரைப் பெறில் க்ருதயுக புருஷர்களோ டொப்பார்க ளென்றிறே சாஸ்த்ர தாத்பர்யம்.

“கலௌ ஜகத்பதிம் விஷ்ணும் ஸர்வஸ்ரஷ்டாரமீஸ்வரம் ।
நார்ச்சயிஷ்யந்தி மைத்ரேய பாஷண்டோபஹதா ஜநா:॥”

இத்யாதி வசநங்களிலும் கலியுகத்தில் பகவதர்ச்சநத்தை அழிக்கிறுரைப்பற்ற வெறுக்கிறபடியல்லது கலியுகத்தில் பகவதர்ச்சநாதிகளுக்கு நிஷேத ப்ரஸங்கமில்லை. நம்மாழ்வாரும், கலியுகமொன்று மின்றிக்கே தன்னடியார்க் கருள்செய்யும் என்று அருளிச்செய்தார்.

(ரு) கைங்கர்யத்துக்குக் காலநியமம் உண்டோ?

இப்படி நித்யாதிகளிற் சொன்ன பரமைகாந்தி தர்மந்தான் அதிகாராநுகுணமாக அநுஷ்டேய மானாலும், இன்னபோது திருவடிதொழ, இன்னபோது அமுதுபடி சாற்றுபடிதேட, இன்னபோது திருவாராதநம்பண்ண, இன்னபோது பகவத் கதாதிகளாலே போதுபோக்க, இன்னபோது பகவத் விக்ரஹாதிகளை அநுபவித்து ரஸிக்க, என்றொரு நியமமுண்டோ? ப்ரீதிப்ரேரிதனாய் கைங்கர்யம் பண்ணுகிறவன் பெருங்காத்தில் மாங்காய் எடுப்பாரைப்போல தனக்கு ப்ரதிபாஸித்த க்ரமத்திலே நடத்துமத்தனையன்றோ எனில்,

ப்ரீதிப்ரேரிதனாய் கைங்கர்யம் பண்ணும்போதும் இருள் தருமா ஞாலத்துள் இருந்தநாள் ஈச்வர ஆஜ்ஞாநுரூபமான சாஸ்த்ரங்களைக் கைவிளக்காகக் கொண்டு கைங்கர்யம் பண்ண வேண்டுகையால்,

“காலே ஹி கர்ம சோதிதே”

என்கிறபடியே கர்மவிசேஷங்களுக்குக் காலமடுத்துக் கிடைக்கையாலே முக்யகாலம் பெற்றபோது யதாக்ரமம் அநுஷ்டிக்கவும், கூடாதபோது,

“திநேதிநே கர்மாணி ஸ்ம்ருதாநி போக்தாநி வை ।
யாநி க்ருத்வா யாநி காலாந்தரேஷு கல்பிதா:॥”

என்கிறபடியே கௌணகாலங்களிலே அநுஷ்டிக்கவும், இரண்டும் கடைப்படாதபோது காலாதிக்ரமத்தில் சொல்லும் கட்டளைகளைச் செய்யவும், ஸர்வகால யோக்யமாய் சக்யமான பகவத் ஸ்மரணாதிகளையும் ஆத்ம குணங்களையும் ஒருக்காலும் கைவிடாதொழியவும் ப்ராப்தம். இப்படி அவஹிதனுக்கு ஒருகாலத்திலும் கைங்கர்ய லோபமில்லை. அந்யார்த்த ப்ரவ்ருத்தி ரூபமான சித்ரமுமில்லை”.

---

# கடிதங்கள்.

## ஸ்ரீ ஸந்நிதி குருபரம்பரை — (1)

ஸ்ரீ வேதாந்த தீபிகை பத்ராதிபருக்கு :—

பச்சையப்பன் வித்யாசாலைத் தமிழ்ப்பண்டிதர்களில் ஒருவரான கோமாண்டூர் அநந்தாசார்யாரால் ஸ்ரீ ஸந்நிதி குருபரம்பரை அச்சிடப் பட்டிருக்கின்றது. இது ஸ்ரீ சடகோபஸ்வாமியால் அருளிச்செய்யப்பட்ட அப்பெயர்கொண்ட க்ரந்தத்தின் புதிய பதிப்பா யிருப்பதோடு அதன் தொடர்ச்சியாக ப்ராக்ருதம் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ ஸ்வாமி பர்யந்தம் மஹாஸ்நாந நிர்வாஹகர்கள் சரித்ரங்கள் இதில் அடங்கியுள்ளன. “இந்த ஸந்நிதி குருபரம்பரையானது கிடைப்பது அருமையாய்ச் சில தேசிக திவ்ய ஸூக்திகள் போலே லுப்தமாகாதிருக்க வேணுமென்று ஸத்ஸம்ப்ரதாய க்ரந்தோபந்யாஸ சில ஸ்வாமிகளால் நியமிக்கப்பட்ட என்னால் எனது புத்தி சக்திக்கு அநுகுணமாக பல ஸ்ரீகோசங்களைக் கொண்டு பரிசீலித்துப் பதிப்பிக்கப்பட் டிருக்கிறது” என்று பதிப்புரையில் க்ரந்தகர்த்தா எழுதியிருக்கிறார். ஸம்ப்ரதாயத்தில் மிக்க அபிநிவேசமுள்ள இந்த ஸ்வாமியால் பரிசீலித்துப் பதிப்பிக்கப்பட்ட க்ரந்தம் ஸர்வ ப்ரகாரத்தாலும் உத்க்ருஷ்டமாகவே இருக்குமென்று எண்ணலாம். சரித்ர க்ரந்தங்களுக்கு உத்க்ருஷ்டமாவது சரித்ரங்கள் மிகுதியும் குறைவும் கல்பிதங்களு மில்லாமல் யதாவத்தாய் சொல்லப்பட்டிருத்தல் தான் என்று ப்ராஜ்ஞர்கள் சொல்லுகிறார்கள். ஆனால் ஒருவர் ப்ரபாவத்தைச் சொல்லப் புகுந்த க்ரந்தத்திற்கு இப்படி நியமம் உண்டோ? லைங்கபுராணம் போல ப்ரபாவ க்ரந்தமும் கேவலம் ஸ்தோத்ர ரூபமான க்ரந்தமன்றோ என்று வினவலாம். அப்படியானால் மஹா ஸாத்விகருடைய சரித்ரங்கள் அடங்கிய இந்த குருபரம்பரையும் லைங்க புராணம் போல் அநாதரணீயமாய் முடியும். ஆகையால் ஸதாசார்ய சரித்ரோபந்யாஸ ரூபமான க்ரந்தத்தில் கர்த்தாவின் அஸாமர்த்யத்தாலோ அறியாமையாலோ தோஷங்கள் சேர்ந்தால் அந்த க்ரந்தம் புத்திமான்களுக்கு அக்ராஹ்யமாய் விடுமே என்று அந்த ஸச்சரித்ரங்களுக்கு ரக்ஷையிடுவதும் அத்யாவச்யம் என்று நிருபகர்கள் ஒப்புக்கொள்வார்கள். ஆனதுபற்றி ஸ்ரீமான் அநந்தாசார்யரால் புதிப்பித்துப் பதிப்பிக்கப்பட்ட க்ரந்தத்தைக் கொஞ்சம் விமர்சிப்போம்.

ஸ்ரீராமசரிதமான ராமாயணத்திற்கு நிலைத்த பெருமை “நடேக்ஷ ... வதிஷ்யதி” [இந்த காவ்யத்தில் ராம ஸ்யாசரித் காவ்யம் ...

உம்முடைய வாக்கு ஒன்றேனும் பொய்யாகாது] என்கிற வால்மீகி மஹர்ஷி பெற்ற வரப்ரபாவத்தினுல் ஏற்பட்டிருக்கிறது. இந்த வரத்துடன்,

"രഹസ്യം ച പ്രകാശം ച യദ്വൃത്തം തസ്യ ധീമതഃ ।

*    *    *    *    *    *

തച്ചാപ്യവിദിതം സർവം വിദിതം തേ ഭവിഷ്യതി ॥"

என்கிற அநுக்ரஹ விசேஷமும் வால்மீகி பகவானுக்குக் கிடைத்தது. இப்படி அநுக்ரஹமில்லாதவர்களால் இயற்றப்படும் க்ரந்தங்களில், அவை ஸதாசார்ய சரித்ரங்களானுலும், தோஷங்கள் ஸம்பாவிதந்தானே. இந்த தோஷங்களை அந்தந்த சரித்ரங்களுக்குப் ப்ரமாணபூதமான சரித்ராந்தரங்களையும் சாஸநாதிகளையும் கொண்டு நிபுணர்கள் பரிஹரித்து வருகிறுர்களாதலால் இந்த நல்வழியில் க்ரந்த விமர்சம் செய்வது நலந் தருமென்பதில் ஸந்தேகமில்லை.

## குருபரம்பரை மூன்றுதரம் எழுதப்பட்டது.

ஸந்நிதி குருபரம்பரை மூன்றுதரம் எழுதப்பட்டதென்று ஸ்ரீ சடகோப ஸ்வாமியால் அருளிச்செய்யப்பட்ட மூன்றுவதான ஸத்ஸம்ப்ரதாய முக்தாவளியால் ஏற்படுகின்றது. ப்ரதமத்தில் இந்த ப்ரபாவங்களை க்ரந்தரூபமாய்ச் செய்தவர் ஸ்ரீவத்ஸாங்கம் ஸ்ரீமந்நாராயணஸ்வாமி. இந்த க்ரந்தத்திற்கு "ஆசார்ய குணுதர்சம்" என்று பெயர். இரண்டாவதான குருபரம்பரை வங்கிபுரம் ஸ்ரீ பராங்குச ஸ்வாமியால் அருளிச்செய்யப்பட்ட ஸத்ஸம்ப்ரதாய ஸாரம். இவ்விரண்டு க்ரந்தங்களும் இப்போது லுப்தம் என்கிறுர்கள். ஸ்ரீ சடகோபஸ்வாமி இவைகளைக் கடாக்ஷித்து இவற்றின் ஸாரார்த்தங்களை முக்தாவளியில் பரக்கச் செய்தருளினுர் என்பது அந்த க்ரந்தத்தாலே ஸ்பஷ்டம்.

## முதல் குருபரம்பரை.

ஆசார்ய குணுதர்சம் என்கிற முதல் குருபரம்பரையின் அவதாரம் சற்று விசாரிக்கத்தக்கது. இந்த க்ரந்த கர்த்தா பதினுலாவது பட்டத்தில் எழுந்தருளியிருந்த ஸ்ரீமந் நாராயணஸ்வாமி என்பதாகச் சொன்னேம். இவருக்கு அடுத்து முன்னுல் எழுந்தருளியிருந்த ஸ்வாமி திருவள்ளூர் பெரிய வீரராகவ ஸ்வாமியென்று கண்டிருக்கிறது. இவருடன் மூன்று திருவள்ளூர் வங்கிபுரத்து ஸ்வாமிகள் வரிசை க்ரமமாய் ஆஸ்தாந நிர்வாஹம் செய்துவந்ததாகத் தெரிகிறது. இவர்கள் வம்சஸ்தர்கள் இப்போதில்லை. இவர்கள் காலத்தில் அஹோபில மாஸ்தாந நிர்வாஹம் தாயக்ரமமாக நடந்துவந்தது என்று சொல்லி வருகிறுர்கள். இதே அநுஷ்டாநத்தைப் பிற்காலத்தில் கதாதரபுரம் ஸ்வாமிகளும் அடியொற்றி நடந்தார்கள்.

இவர்களில் மூன்றுவதான பெரிய வீரராகவஸ்வாமிக்குப் பின் ஆஸ்தாநத்துக்கு வந்தவர் ஸ்ரீமந்நாராயணஸ்வாமி என்று எழுதப்பட்டிருக்கிறது. ஸ்ரீ ஸந்நிதி தனியன்களைப் பார்த்தால் ஆசார்ய பரம்பரை வேறு விதமாய்க் காணப்படுகிறது.



(1) (2)
ഹാരിത നാരായണ ഹയഗ്രീവ

(3) (4) (5)
പരാങ്കുശ ശ്രീനിധി ഷഡാരീന്ദ്ര ।

(6) (7)
പരാങ്കുശ ശ്രീശഠകോപ യോഗി

(8)
പരാങ്കുശസ്വാമി ഗുരൂൻ ഭജാമി ॥

(9) (10)
പ്രണൗമി നാരായണ ച ഹംസവിഷ്ണും

(11)
രമേശദാസാനു ഗുണാനു ശ്രീസ്വാമിനഃ ।

(12) (13)
ശ്രീരംഗ നാരായണ വീരരാഘവൗ

(14) (15)
വരപ്രദ ശ്രീഗിരി ദേശികൗ ഭജേ ॥

(16) (17)
ശ്രീനാരായണ സമ്പൂർണ്ണ വീരരാഘവയോഗിനഃ । * * *

இந்த தனியன்களால் பதின்மூன்றுவது பட்டம் வீரராகவ ஸ்வாமிக்குப் பிறகு பதினுலாவது பட்டம் என்று சொல்லப்பட்ட ஸ்ரீமந்நாராயண ஸ்வாமிக்கு முன்னுல் வரதாசார்யர் (14) திருமலாசார்யர் (15) என்கிற இரண்டு ஸ்வாமிகள் ஆஸ்தாநத்தில் எழுந்தருளியிருந்ததாகத் தெரிகின்றது. தனியன்களைக் கொண்டே இவர்கள் க்ருஹஸ்தர்கள் என்று சொல்லலாம். ஸத்ஸம்ப்ரதாய முக்தாவளியில் இந்த இரண்டு திருநாமங்களையும் சேர்க்காமல் விட்டதற்குக் காரணம் ஏற்படவில்லை. இதற்கு மூலக்ரந்தங்களான ஆசார்ய குணுதர்சம் ஸத்ஸம்ப்ரதாய ஸாரம் இவைகளிலும் அந்த இரண்டு ஸ்வாமிகள் சொல்லப்படவில்லை என்று நிச்சயிக்கவேண்டும்.

ஆதிவண் சடகோப ஸ்வாமிக்கு லக்ஷ்மீந்ருஸிம்ஹன் ப்ரஸாதித்த நியமனப்படி தன்னை ஆராதிப்பவர் தான் அநுக்ரஹித்த ப்ரேஷமந்த்ரோபதேசம் பெற்றவராய் துரீயாச்ரமியாய் இருக்கவேண்டுமே என்று நினைத்து ஸந்யாஸிகளான ஆசார்ய பரம்பரை மாத்ரம் அந்த க்ரந்தங்களில் எடுக்கப்பட்டிருக்கலாம். அப்படியானுல் வீரராகவ ஸ்வாமிக்கும் நாராயண ஸ்வாமிக்கும் மத்யே அந்த இரண்டு ஸ்வாமிகள் எழுந்தருளியிருந்த கால பரிமாணம் ஏற்படவேண்டு

மன்றோ? முக்தாவளியில் வீரராகவஸ்வாமி திருநாடலங்கரித்த காலம் கலி - 4778, நளஸ்ரீ ஐப்பசிமீ க்ருஷ்ண ஷஷ்டியென்றும், நாராயண ஸ்வாமி ஆஸ்தாநத்துக்கு எழுந்தருளின காலம் அதேஸ்ரீ அதேமீ க்ருஷ்ண பஞ்சமி என்றும் கண்டிருப்பதால் இவர்களுக்கு மத்ய காலத்தில் வேறு ஸ்வாமிகள் இருந்திருப்பதற்கு அவகாசமே யில்லை.

வீரராகவஸ்வாமிக்குப் பிறகு க்ருஹஸ்தர் ஆஸ்தாந நிர்வாஹம் செய்வானேன்? வைதிகோத்தமர்கள் நிறைந்த அக்காலத்தில் ஸந்யஸித்துக்கொண்டு ஆஸ்தாந நிர்வாஹம் செய்யத்தகுந்த ஸ்வாமிகளில்லாம லிருக்கலாம் என்று சொல்லவொண்ணாது. ஆகையால் க்ருஹஸ்த ஸ்வாமிகள் இருவரும் வீரராகவ ஸ்வாமிக்குத் திருமேனி ஸம்பந்தத்தால் ஸ்ரீ ஸந்நிதியில் ப்ராபல்யத்தை யடைந்தவர்களாய் இருந்தாலன்றி இவர்களுக்கு ஆஸ்தாநம் கிடைத்திராது. இக்காலத்தில் போலவே அக்காலத்திலும் ஸ்ரீ ஸந்நிதி கைங்கர்ய பரர்களுடைய ஆநுகூல்யமும் திருமேனி ஸம்பந்தத்தால் ஸ்ரீ ஸ்வாமியின் கடாக்ஷ விசேஷமும் லக்ஷ்மீ ந்ருஸிம்ஹன் அநுக்ரஹத்திற்குத் துணையாக இருந்திருக்கும் என்பதற்கு ஸந்தேஹமில்லை. ஆஸ்தாநம் ஸ்வல்பமாய்க் கழித்தபிறகு பகவதாராதநத்திற்குத் துரீயாச்ரமம் ஒரு நியமமோ என்று நினைத்து இந்த ஸ்வாமிகள் நிகமாந்த தேசிகனைப்போல எழுந்தருளி யிருக்கக்கூடும். ஆனால் பகவந்நியமநமடியாகப் பிறந்த ஸ்ரீஸந்நிதி ஐதிஹ்யங்களை அநாதரிக்கத் துணிவற்ற தீர்க்கதர்சிகளான ஸம்ப்ரதாயஸ்தர்கள், ஊர்ஜிதசாஸநனை பகவானுடைய க்ருபா பரீவாஹத்தை ப்ரதீக்ஷித்திருந்து அழகிய சிங்கரான திருமலாசார்யர் திருமாமணி மண்டபத்திற்கு எழுந்தருளிய பிறகு, வீரராகவஸ்வாமி திருவடிகளை ஆச்ரயித்தவரான புள்ளம்பூதங்குடி ஸ்ரீவத்ஸாங்க குலதிலகரான ஸ்ரீமந் நாராயண ஸ்வாமிக்கு மூர்த்தாபிஷேகம் செய்துவைத்து, அந்த ஸ்வாமியைக் கொண்டு ஸ்ரீ ஸந்நிதி ப்ரபாவங்களை பின்னுள்ளார் மறந்து போகாமைக்காக ஆசார்ய குணதர்சம் என்கிற க்ரந்தத்தையும் அவதரிப்பித்து வைத்தார்கள் என்று நிபுண நிருபகர்களுக்கு முக்தாவளியால் வ்யக்தமாகும். இப்படி அக்காலத்தில் ஸம்ப்ரதாயஸ்தர்கள், மறைந்து போகும்படி நேரிட்ட பெருமாள் நியமநத்தை ப்ரகாசப்படுத்தி, பெருமாளால் அநுக்ரஹிக்கப்பட்ட ப்ரேஷ மந்த்ர பரம்பரைக்கு லோபம் வாராமல் தடுத்து, ஸ்ரீ ஸந்நிதியை ரக்ஷித்தார்கள். இந்த ஸாரார்த்தம் தத்காலத்தில் ஸம்ப்ரதாயஸ்தர்களால் கவனிக்கப்பட்டால் தங்களுடைய தர்மம் தெளிவாகும். அதனால் தங்களுக்குள் ஏற்பட்டிருக்கிற வைஷம்யங்கள் நிவ்ருத்தியாகி ஸ்ரீ ஸந்நிதிக்கும் தங்களுக்கும் க்ஷேமம் உண்டாகும். ஆனால் இதை கவனிப்பாரும் உளரோ?

(இன்னும்வரும்)

விமர்சி.

19 NOV 1914 MADRAS.

ஸ்ரீ:.

[illegible]

# வேதாந்த தீபிகை

பத்ராதிபர்:—திவான் பகதூர் டி. டி. ரங்காசார்யர், பி.ஏ., பி.எல்.

ஸம்புடம் 4.] ஆநந்தஸ்ரீ புரட்டாசிமீ [ஸஞ்சிகை 8.

## பத்ராதிபரின் குறிப்புகள்.

[illegible]
[illegible] விஜயஸகெ
[illegible] ॥ [ஸ்ரீ பாகவதம் 1-9-33.]

"மத்ய கால இந்தியா" எனும் புஸ்தகம் கால யாபந நிமித்தம் நம்மால் வாசிக்கப்பட்டது. அதில் சேர்ந்த விஷயங்களோ ப்ரா[illegible]யேண முன்னுணர்ந்தவையே. மஹம்மதியரெனவும் துருஷ்க[illegible]ரெனவும் பெயர்கொண்டவர் நம் தேசத்தைக் கவர்ந்து அநுப[illegible]வித்த கதைகளை அப்புஸ்தகம் விளக்குகின்றது. அதை எழுதி[illegible]னவர் ஓர் ஆங்கிலேயர். நம்மவர் எதிர் நோக்காது நிற்க, '[illegible] ஜ்யாம்ஸோ வயம்' என ஸத்வோத்[illegible]தாரான ஸ்ரீ தேசிகனால் வரையப்பட்டவண்ணம், கலிபுருஷன் [illegible]சாரரென நம் நாட்டை மூடி நமது ஜநங்களுக்கு ப்ரதி தினமும் [illegible]முதிர்ந்தெழுந்த பயத்தை உண்டாக்கினவர் செயலைச் சிந்திக்க, [illegible]ாக்யர் லோகாயிதரென அவரைக் கொள்ளவும் பொருந்துமோ? [illegible]து கர்ம பூமி; அதாவது தர்ம பூமி; ஸம்ஸாரத்தைக் கடக்க

வென்றே ஸம்ஸரித்தவர்க்கு இருப்பிடம்; அவ்வவர் தர்மத்தைக் கைக்கொண்டு, அவ்வவர் பெரியோர் காட்டின வழியே ஸர்வேச்வரனைப் பூசித்துப் போதைப் போக்கினவர் வஸித்த நிலம்; உத்க்ருஷ்ட தர்மம் அஹிம்ஸை என்றறிந்து, பக்ஷி ம்ருகங்களிடமும் க்ரௌர்யத்தை விலக்கினவர் நாடு. நிரபராதியாக நின்றவர் மேல் படையெடுத்து, அவராலயங்களை அழித்து, பகவத் விக்ரஹங்களைச் சேதித்து, தெய்வத்தின் பொருளைச் சூறையாடிக் கோடிக் கணக்காய் அவரைக் கொன்றும், அடிமையாக்கியும், பாலர்க்கும் பெண்களுக்கும் கூட இரக்கம் கொள்ளாமல், மநுஷ்யாக்ருதிகளுடன் கூடிவந்த மஹா ப்ரளயங்களால் நம் நாட்டினர் பல நூற்றாண்டுகளாக நொந்த கதைகளை அந்தப் புஸ்தகம் விஸ்தரிக்கின்றது.

*    *    *    *    *    *

ஜகத் காரணனைத் தம் முன்னோரிட்ட நாம ரூபாதிகளால், அவர் அநுஷ்டித்து வந்த ப்ராசீந முறைகளைக் கொண்டு வணங்கி வந்ததைக் குற்றமென நினைத்துப் புலிகள் பசுக்கூட்டங்களின் நடுவே நுழைந்தன போல் நிராயுத பாணிகளாய் நின்றவரிடம் நுழைந்து, அவர் கொலையைத் தர்மமெனக் கருதிக் கொன்றவர் செயலை விவரிக்குமிடத்து, புலாலுண்போர் அஜ மாரக ப்ரதேசத்தைக் கண்ணுற்றும் கண்ணீர் விடாமல் நிற்பதை யொத்துக் கருத்தில் இரக்கம் இரங்காது சரித்ரம் வரைகின்றனர். ‘யவநாஸ்ரம்ஸ்தி ஸுவநாநி பீஷணாஃ’ என்று மஹாகவி வெங்கடாசார்யர் உரைத்தனரன்றோ? நம் சிறுவர், ஐரோப்பியர் எழுதிய நாடகங்களையும் கட்டுக் கதைகளையும் படித்துவிட்டு, பொய்யான நாயகர் நாயகிமார்களுடைய தடைபட்டு நின்ற அநுராகங்களினிமித்தமும், பிறவாத பாலரின் தைந்யத்தைக் குறித்தும் சோகித்து வருந்தி, இத்தகைய கதைகளை மேன்மேலும் படிக்க ஆவல் கொள்கின்றனரே! மஹம்மதியர் காலமெனக்கொண்ட நூற்றாண்டுகளில் அரசாண்ட நம் மஹிபாலர், துருஷ்கப் பிள்ளைகளிடம் அகப்பட்ட ஒணுன்களெனத் துருஷ்கப்படையினரிடம் அகப்பட்டுப் பட்ட அலங்கோலங்களையும், மரணங்களையும் நினைத்துருக வொண்ணாதோ? படைகள் சூழப் பகைவரைத் தடுக்கச் சென்ற தம் நாயகர் திரும்பும் வழியைத் தனியே நோக்கிநின்ற ராஜஸ்த்ரீ



கள் அவர் திரும்பக்காணாது, அவரைக் கொன்றவர் வருமுன் தீப் பாய்ந்து உயிர் நீத்த கதைகளைக் கருதலாகாதோ? இது ஓர் பாக்ய விசேஷமென இதற்கும் அவகாசமற்றுத் துருஷ்கர் வசமாகித் தம் காதலர் ஸ்பர்சித்த தமது சரீரங்களைத் துருஷ்கர் அநுபவிக்க அளித்தவர் நிலையை நினைவுறலாகாதோ? ஆண்டவர் கதி இங்ஙனம் நிற்க, காதலரிழந்த காந்தையர் துயரமும், காந்தையர் இழந்த காதலர் துன்பமும், பெற்றவரிழந்த பிள்ளைகள் கதறலும், தநயரைத் துறந்த தாயினர் ஏக்கமும், எண்ணத் தொலையா தென்னுவோர் மனத்தில், புண்பட நிலைக்கப் பொருந்திய கதைகள், நம்மவர் நாட்டிலில்லையென் றெண்ணியோ, ஏனையோர் கதைகள் ஓதப் புக்கனர்?

கிந்தஸ்ய து³ஷ்கரம் ஶரணாக³தாநாம் வராஹவோ நாயநவத நாராயணஸ்ய என்று யமுனைத்துறைவர் சொன்னதையும் ஈச்வரன் மறந்தானோ? அபீதிஸ்தவத்தில் வேங்கடநாதார்யன் வேண்டிக் கேட்டதையும் பகவான் ஆதரித்திலனோ? தர்மம் அழியவும், அதர்மம் உயரவும், இந்தக் கதி நமது நாட்டினர்க்கு வந்ததேன்? இதைத் தான் தர்ம ஸூக்ஷ்மமெனச் சொல்லுவர். அந்யாயமாகக் கடுமையான ஹிம்ஸைகளை ஸஹித்து மாண்டவரெல்லோரும், அவ்விதமாகக் கர்மாத்யக்ஷன் அவர்க்குப் பாப விமோசநம் அளிக்க நற்கதியை அடைந்திருக்கமாட்டாரோ? இப்படி இறவாதவர் அடிமைப்பட்டும், மத மிழந்தும், தாம் சேகரித்த கர்மங்களின் பலனையே அடைந்திருக்கமாட்டாரோ? ப்ரபஞ்சம் விஷ்ணுவின் விஸ்தாரமன்றோ? இதில் தம் கொள்கையில் பிறவாதாரை ப்ரதிகூலராக வெண்ணி ஹிம்ஸிப்போர்க்கு அவன் க்ருபையின் லேசமாவது உண்டாகுமோ? அதர்மமாக இங்கே கெட்டவர் கெட்டவராகார். அதர்மமாக இங்கே கொன்றவர் கொன்றவரே. துருஷ்கர் நம் நாட்டை ஆறேழு நூற்றாண்டுகளாய் அரசாண்ட பயனை விவரிக்குமிடத்துச் சரித்ராமுரைப்பவர் இவ்வண்ணம் முடிக்கின்றார்: ஹிந்தியெனவும் உர்டு எனவும் வழங்கும் பாஷை யொன்று, மிக்கவும் அழகு தாங்கிய பஹு கட்டிடங்கள், மஹம்மதிய சிற்ற சர் ஆளும் சில நாடுகள், தூரதேசத்தினின்று வந்த கிறிஸ்தவர் ஆளுகைக்கு அடங்கி, பெரும்பாலாராகிய ஆர்யமதத்தினரிடையே இசைந்து வாழும் மிக்க மஹம்மதிய ஜநங்கள், இவை தான்

இஸ்லாம் இந்தியாவுக்கு ஈந்த நன்மைகள். இரண்டு நூற்றுண்டு களாக இந்தியரும் ஆங்கிலேயரும் கூடி வஸித்தும் கூடாதிருக்கும் விதமே, ஒன்பது நூற்றுண்டளவாக இந்தியரும் இஸ்லாமியரும் சேர்ந்து வஸித்தும் சேராமலே நின்று விட்டனர். ஐரோப்பிய ருடைய க்ரியா ஶக்தியானது இந்தியருடைய புத்தி விஸ்தாரத்தை ஸ்பர்சித்தும், ஸூக்ஷ்ம விஷய பர்யாலோசனையில் ஸமர்த்தரான இந்தியர் மநஸ்ஸுக்களில் ஐரோப்பியருடைய வித்யையானது ப்ரவஹித்தும், ப்ராஹ்மணர்களால் செய்யப்பட்ட தத்வ விசா ரங்கள் ஐரோப்பியருடைய சித்தங்களை ஆகர்ஷித்தும், உலகத்தில் ஓர் நூதநமான ஜ்ஞாநசக்தி அதாவது, ஒரு பெரிய மதம் உண்டாகு மென விஶ்வஸிப்பவருமுண்டு. இதன் முடிவு யார்க்குத் தெரியும்? தமது வேதாந்த தர்ஶநங்களையும் ஐரோப்பியருடைய ப்ரயத்ந ஶீலதையையும் ஸமுச்சயம் செய்து ஒரு இந்திய நாட்டினர் உண் டாக இயலாதோ? என்றிவ்வண்ணம் யோசிக்கின்றனர்.

*   *   *   *   *   *

நாமறிந்தமட்டும், வைதிக தர்ஶநங்களென்று பேர்பெற்று, வேத ஶாஸ்த்ரத்தை ஒப்புக்கொண்டு வ்ருத்தியான மதங்களின் ரக்ஷண விஷயத்தில், ஐரோப்பாவில் ரோமன் காதலிக் மதத்தை ரக்ஷிக்கும் போப் எனும் பட்டப்பெயரடைந்த தர்ஶந ஸார்வபௌ மனைப்போன்ற ரக்ஷகனைக் காணேம்; எல்லாக் கிறிஸ்தவர் ஸமா ஜங்களிலும், அவ்வவற்றின் ரக்ஷணார்த்தமாக உண்டாயிருக்கின்ற பாதிரிமார் பெருத்த ஸங்கங்களையொத்த யாதொரு ஸங்கமும் காணேம்; நைஸர்க்கிகமா யுண்டான ஒரு விசித்ரமான மதாபி நிவேஶத்தால், அந்யர்கள் ஆக்ரமிக்கக்கூடாத நிலைமையில் ஸ்வ மதத்தை மஹம்மதியர் ஒருமித்து ரக்ஷித்துக்கொள்வதைப் போல நம்மவரிடம் மதாபிநிவேஶமும் ஒற்றுமையும் காணேம். கோயில் களென்றுல் அவற்றுள், கிங்கரரெனப் பெயர்கொண்டவர் ப்ரா யேண பகவத் ஸாந்நித்யத்துக்கு விரோதிகளாக நிற்கின்றனரே யன்றி, அதற்கு அநுகூலிகளாக இருப்பதில்லை. மடாதிபதிகளோ வென்றுல், ப்ராயேண மடங்களின் ஸம்பத்துக்குப் போக்தாக் களாய் ஏற்படுகின்றனரே யன்றிப் பொதுநன்மையைக் குறித்து விசாரமற்றிருக்கின்றனர். ஆர்யர் மதத்தை, நமக்குள் ஏற்பட்ட ஜாதி யெனும் கட்டுப்பாடு காப்பாற்றுகின்றதென ஒரு ப்ரமை



உண்டு. ஜாதி யெனும் கட்டுப்பாடு ஈஷத்தும் பயன்படாதென்
பதைப் பங்காளம், பம்பாய், பஞ்சாப் எனும் நாடுகளில் நன்
ருகக் கண்டுகொள்ளலாம். நம் நாட்டிலும் ஜாதிக் கட்டுப்பாட்டை
லக்ஷ்யம் செய்யாமல்,ஸமுத்ரயாநம் செய்து தேசாந்தரங்களுக்குப்
பஹு பெயர் போகின்றனர். ஜாதிக்கு அத்யந்தாபாவத்தை
உண்டாக்க முயல்பவர் நம்மிலும் பாரிலும் பஹு பெயர்
உளர். இந்தியா தேசத்தின் ஸர்வ ஜாதியர்களுடன் மஹம்மதிய
ஐரோப்பியரும் கூடி ஸஹபோஜநம் நடாத்தும் உத்ஸவ விசே
ஷங்கள் பத்ரிகைகள் மூலமாக வெளியாகின்றன. இப்படி வெளிப்
படையாக ஏற்பட்டுவிட்டால், ரஹஸ்யமாக நடப்பவற்றைக்
குறித்துப் புத்திமான்கள் ஊகித்துக்கொள்ளலாம். ஜாதிக்குட்
பட்டவரும் வெளிப்பட்டவரும் ஒருவர்க்கொருவர் பெண்கள்
கொள்ளவும் 'கொடுக்கவும் அநுகூலமுண்டாகும்படிச் சட்டம்
பிறக்கவேண்டி, ப்ராஹ்மணரெனப்படுவோர் அநேகர் முயன்றதை
யாம் எவ்வண்ணம் மறக்கலாம்? ஆகவே ஜாதியும் கட்டுப்பா
டெனத் தத்காலம் அமையாது.

நம்மதத்தினர் வெளிப்படலாமேயன்றி,வெளிப்பட்டவர் நமக்
குள் சேர அமையாதே! ஆகையால் ரக்ஷகரற்று நிற்கின்ற நமது
ஏற்பாடுகளை அபிமாநிப்போர் குன்றிக் குறைவார்களே யன்றிப்
பெருகவிடமில்லை. இத்தருணத்தில், மைஸூர் நாட்டில் உத்யோ
கம் செய்யும் பண்டிதர். எ. மஹாதேவ ஶாஸ்த்ரி பி. ஏ. எனும்
இங்கிலீஷும் ஸம்ஸ்க்ருதமும் கற்ற வித்வானெருவர் நான்கு
வர்ணங்களையும் சீர்படுத்த சில யோசனைகளை வெளிப்படுத்தி யிருக்
கிருர். அவற்றை ஒப்புக்கொண்டால், எல்லா வர்ணத்தினரும்,
இதர ஐரோப்பிய ஆசிய தேசங்களின் ஜநங்களும், ஒருவர்க்
கொருவர் ஸம்பந்தங்கள் செய்துகொண்டு, ஸஹபோஜநத்துடன்
ஸுகமாக வாழ அநுகூலமாகும் என்கிருர். தர்ம ஶாஸ்த்ரங்களால்
விதிக்கப்பட்ட கர்மங்களும், ஶிஷ்டர்கள் எனப்பட்டவர்க்கு ஸம்
மதமான ஆசாரங்களும், தத்காலம் ஹிந்துக்களால் கொண்டாடப்
படுகின்றதில்லை யென்றும், அவற்றை இங்கிலீஷ் படித்தவர் ப்ரஜா
ஹிதம், தேசவ்ருத்தி, உண்மையான தர்மம், இவற்றைப்பற்றித்
தாம் செய்யும் யோசனைகட்கு விரோதமாகவும் அர்த்தமற்ற வீண்
வழக்கங்களாகவு மிருப்பதாக எண்ணுகின்றுரென்றும், வைதிக
ரெனப்படுவோர் ஶாஸ்த்ரவிதிகள், ஆசாரங்கள், இவற்றை யதாவத்

தாகப் பரிபாலிக்க இச்சித்தபோதிலும், அவை அநுஷ்டாநத்தி னின்று விலகிப் போயிருப்பதை ஒப்புக்கொண்டு, இந்த நிலைமை இங்கிலீஷ் படிப்பின் பயனென்று துக்கிக்கின்றனரென்றும், இவர் எண்ணங்கள் தேசநன்மைக்கு ப்ரதிகூலமா யிருப்பதால் அநாதரணீயம் என்றும் மாஸ்த்ரிகள் அபிப்ராயப்படுகிறார்.

நமக்குள் இங்லீஷ் படிப்பால் மதி விஸ்தரித்த பலர், நான்கு வர்ணங்களையும் வைத்துக்கொண்டு, அவாந்தர ஜாதி பேதங்களை மாத்ரம் பரிஹரிக்கவேண்டு மென்றும், பெண்களுக்கு உசிதமான வரையில் கல்வி கற்பிக்கலாமென்றும், சூத்ரர் தத்காலம் படிப்பது போல் படிக்கலா மென்றும், வேதாத்யயநம் வேதார்த்த விசாரம் இவற்றைப்பற்றி விசேஷ ஆதரத்தைத் தாங்கள் கொண்டாடா திருக்கையிலும், ஆதுநிக க்ஷத்ரிய வைச்யருக்கு அவற்றில் அதிகாரம் கொடுக்கக் கூடாதென்றும், அவர்க்கும் ப்ராஹ்மணர்க்கும் ஸம்பந்தங்களும் ஸஹபோஜநங்களும் ஸ்ம்ருதிகள் ஒப்புக்கொண்டாலும் அவை கூடாதென்றும் சொல்கின்றார்களாம். இன்னும் பலர், வர்ண பேதங்களையும் வர்ணாச்ரமோசித கர்மங்களையும் முற்றிலும் பரிஹரிக்க இச்சிக்கின்றனராம். இவர்க்குள் அநேகர் மதாபிமாநமும் அற்றவராம். ஆகையால், இவர் போலன்றி மாஸ்த்ரிகள், வைதிக ஸம்ப்ரதாயத்தை அழித்தல் உசிதமன்றெனத் தீர்மானித்து ஹிந்துக்கள்யாவரும் ப்ராசீந ஏற்பாட்டின்படி வேதாத்யயநம், வேதார்த்தவிசாரம், வேதக்ரியைகள், இவை முதலானவற்றைச் செய்ய அதிகாரிகளென்று அபிப்ராயப்பட்டு, ஹிந்துக்களாகிலும் மற்றோராகிலும், இஷ்டப்பட்டவரெல்லாரும் இவ்விதமாக ப்ராஹ்மணராய் விடலாம் என்கிறார். ஆதுநிக க்ஷத்ரிய வைச்யர்கள் பூர்வ கால க்ஷத்ரிய வைச்யரென அதிகாரிகளாகின்றார்களெனவும், சூத்ரர்களும் மற்றையோரும் த்ரிவர்ணத்திலிருந்து ப்ரஷ்டரானபடியால் அவர்களிலும் இஷ்டப்பட்டவர் தாண்ட்ய ப்ராஹ்மணத்தின்படி வ்ராத்யஸ்தோமம் செய்துவிட்டு ப்ராஹ்மணராகி அதிகாரிகளாகின்றார்களெனவும், அநேக பரம்பரையாக வேதாத்யயநத்தை விட்ட ப்ராஹ்மணரும், த்வாதச



வர்ஷம் ப்ரஹ்மசர்ய வ்ரதத்தை அநுஷ்டித்து அத்யயநம் செய்ய அர்ஹராகின்றன ரெனவும், சூத்ரனை ஜாநச்ருதி என்னும் ராஜனுக்கு ரைக்வர் என்னும் ருஷி ப்ரஹ்ம வித்யை உபதேசித்துவிட்டு அவன் பெண்ணையும் விவாஹம் செய்து கொண்டனரென்றும், கௌதமர் எனும் ருஷி தகப்பன் இன்னாரென்றறியாத ஸத்யகாமனெனும் சிறுவனுக்கு ப்ரஹ்ம வித்யை உபதேசித்தனர் என்றும், அவன் உண்மை உரைத்த காரணத்தால் அவ்வண்ணம் செய்தாராகையால், ஜந்மத்தால் ப்ராஹ்மணனாகான் என்றும், ஸத்யத்தில் நிலையுள்ள யாவரும் ப்ராஹ்மணரே யென்றும், இவ்விதமாக யோசித்து மாஸ்த்ரிகள் நமது தேசத்தை ஐக்யப்படுத்த வழி காட்டுகின்றனர். ப்ரஹ்ம ஸூத்ரகாரர் ஜாநச்ருதியை க்ஷத்ரிய ராஜனென்று ஸித்தாந்தம் செய்ததை அவர் அங்கீகரிக்கவில்லை. ஸத்யகாமன் ஸத்யம் சொன்னதையிட்டு அவன் ப்ராஹ்மண ஜந்மம் நிச்சயிக்கப்பட்டதென உபநிஷத் காட்டியதை அந்யதா க்ரஹணமும் செய்கின்றார்.

மர்யாதைகளை யழிக்க யாவரும் அதிகாரிகளே. மர்யாதைகளை ஸ்தாபிக்கவன்றோ மஹாபுருஷன் அவதரிக்கவேண்டும்? '[illegible]' என்று சொல்லிக்கொண்டு யார் வரப்போகின்றான்? வரப்போகின்றான் ஒரு மிக்கோன் என்று சிலர் சொல்லுகின்றார்கள். ஆனால் அது நமது யோசனைகட்கு எட்டவில்லை. வந்தாலும் யார் நம்பப் போகின்றனர்? ப்ரமாணமரணர்களாகப் போந்த நாம் கலியுகத்தில் [illegible] (பணமுள்ளவனே பெரியவன்) [illegible] (இச்சையொன்றே பதி பத்நீ ஸம்பந்த காரணம்) [illegible] (பொய்யாலேயே வ்யாஜ்யத்தில் ஜயம்) [illegible] (பூணூல் தரித்தவன் பார்ப்பான்) [illegible] (காஷாயமுடுத்தவன் ஸந்யாஸி) [illegible] (அந்யாயத்தாலே ஜீவநம்) [illegible]

[illegible] (கபடவேஷம் போடுதலே பெரியவனுக் கடையாளம்) எனும் புராணரத்நவசநங்களை நம்புகின்றோம். ஒவ்வொருவனும் தன் ஹ்ருதயத்தைத் தொட்டுப்பார்த்தானாகில், மேலெடுத்த வசநங்கள் தத்காலம் லோகாநுபவத்தை ஒட்டியிருக்கின்றனவென்று ப்ரத்யக்ஷமாக அறியக்கூடும். இப்படிக் கன்றித் தோன்றுமிடத்து, க்யாதியில் த்ருஷ்டியோ, பூஜையில் த்ருஷ்டியோ, லாபத்தில் த்ருஷ்டியோ, வித்த வ்ரயத்துக்கும் பாஹிதப்ரவ்ருத்திக்கும் ஹேதுவாகப் பரிணமிக்கும். இந்த ஸமுதாய யோசனைக்கு அபவாதமாகச் சிலருண்டு. அவர் எக்காலத்திலு மிருப்பர். ஸமுதாய யோசனையைத் தான் புராணரத்நம் விவரிக்கின்றது. [illegible] என்கின்ற இதர வசநங்களும் ஸ்மரிக்கத்தக்கன. இப்படி வர்ண ஸாங்கர்யமும், தர்மலோபமும், த்விஜக்ரியாநாஶமும் தத்காலம் ஸம்பாவிதமாகையால், இதற்கு சோகித்துப் பயனில்லை. ஆனால் [illegible] என்றும், [illegible] என்றும்,



ஸ்ரீ விஷ்ணுபுராணத்தில் வ்யாஸோக்திகள் இருக்கிறபடியால், அல்ப ஶ்ரமத்தால் பகவத் ப்ரீதியையும் புண்யத்தையும் யாவரும் ஸம்பாதிக்கக்கூடியதாகையாலும், பதி ஶுஶ்ருஷையாலும், ப்ராஹ்மண ஶுஶ்ருஷையாலும் பரம ஶ்ரேயஸ்ஸை ஸ்த்ரீஶூத்ரர்கள் ஸம்பாதிக்கக்கூடிய யுகமென்று புராணம் வெளியிடுவதை ஒப்புக்கொள்ளாவிட்டாலும், யேநகேந ப்ரகாரேண ஸ்த்ரீஶூத்ராதிகளுக்கு அநுகூலமென்று எண்ணப்பட்டதாகையாலும், கலியுகத்தை ஸாது வென்றும், ஸ்த்ரீஶூத்ரர்களைக் குறித்து ஸாது வென்றும் இந்த யுகவிஷயமாக வசநங்கள் ஏற்பட்டன. இந்த ஸாதுத்வம் ப்ரஷ்டத்விஜர்களுக்கும் அநுகூலமாம்படியை வித்வான்கள் விமர்ஶிக்கத் தக்கவர்.

பாஹ்யாந்தர ஶத்ருபூயஸ்தையால் பீடிக்கப்பட்ட வர்ணாஶ்ரம தர்மங்களையும் வைதிக தர்ஶநங்களையும் ரக்ஷிக்கும்பொருட்டு மதத்ரயத்திலும் வைதிகரெனப்படுவோரும், அவரிடம் விஶ்வாஸம் உள்ளவர்களும், தங்களுக்குள் ஸம்பாவிதமான அவாந்தர கலஹங்களைச் சற்று நிறுத்திவிட்டு, ஒரு ஸபையாகக் கூடி, வேண்டிய ப்ரயத்நங்களைப்பற்றி யோசிக்கக்கூடாதா? அதற்கு இன்னும் காலம் வரவில்லையோ? ஹிந்து ஸபையென்றொரு ஸபை பஞ்சாப் தேசத்தில் உண்டாயிருக்கின்றது. பாரத தர்ம மஹாமண்டல மென்றொரு ஸபை ஆர்யாவர்த்தத்தில் உண்டாயிருக்கின்றது. அவ்வண்ணம் இந்த நாட்டிலும் ஒரு ஸபை ஏன் ஏற்படக்கூடாது? இதைப்பற்றி ஆஸ்திகர் யோசிப்பர் என்று நம்புகின்றோம்.

---

# தத்வ விசாரம்.

## உ. ஈச்வர விஷயம். ௩. ஜீவ விஷயம்.

கீதா பாஷ்யத்தில் பரதேவதா பாரமார்த்ய விஷயத்தில் ஸ்ரீ சங்கராசார்யருடைய அபிப்ராயம் ஸ்பஷ்டம். முதல் ச்லோகத்திலேயே நாராயண: பரோऽவ்யக்தாத் என்று ஆரம்பித்ததில், அவ்யக்தாத் புருஷ: பர: என்றும், புருஷாந்ந பரம் கிஞ்சித் என்றும், கடோபநிஷத் வாக்யங்களை மனஸில் வைத்துக் கொண்டு நாராயணனைக் காட்டிலும் ஈச்வரன் ஒருவன் உண்டெனும் ஸம்சயத்தை நிவர்த்திக்கின்றார். அவதாரிகையிலும், ஸ பகவாந் ஸ்ருஷ்ட்வேதம் ஜகத் தஸ்ய ச ஸ்திதிம் சிகீர்ஷு: மரீச்யாதீந் அக்ரே ஸ்ருஷ்ட்வா என்றும்,

ஜகத: ஸ்திதிம் பரிபாலயிஷு: ஸ ஆதிகர்தா நாராயணாக்யோ விஷ்ணு: * * * * * தேவக்யாம் வஸுதேவாத் அம்சேந கில ஸம்பபூவ என்றும்,

ஸ ச பகவாந் ஜ்ஞாநைச்வர்ய சக்தி பல வீர்ய தேஜோபி: ஸதா ஸம்பந்ந:, த்ரிகுணாத்மிகாம் வைஷ்ணவீம் ஸ்வாம் மாயாம் மூலப்ரக்ருதிம் வசீக்ருத்ய, அஜோ, அவ்யய:, பூதாநாம் ஈச்வர:, நித்ய சுத்த புத்த முக்த ஸ்வபாவோऽபி ஸந், ஸ்வமாயயா தேஹவாநிவ ஜாத இவ ச லோகாநுக்ரஹம் குர்வந் லக்ஷ்யதே

[அந்த பகவான் இந்த ஜகத்தை ஸ்ருஷ்டித்து, அதன் ஸ்திதியைச் செய்ய இச்சித்தவராய் மரீசி முதலானவர்களை முதலில் ஸ்ருஷ்டித்து,]



[ஜகத்தின் ஸ்திதியைப் பரிபாலிக்க இச்சித்தவராய் அந்த ஆதி கர்த்தாவான நாராயணனெனப்பட்ட விஷ்ணுவானவர் * * * வஸுதேவர் மூலமாய்த் தேவகியினிடம் தன் அம்சத்தால் அவதரித்தார்.]

[அந்த பகவான் ஜ்ஞாநம் ஐச்வர்யம், சக்தி, பலம், வீர்யம், தேஜஸ் முதலான (கல்யாண) குணங்களுடன் எப்போதும் கூடினவராகவும், பிறப்பற்றவராகவும், விகாரங்களற்றவராகவும், ஸர்வ ப்ராணிகளுக்கும் ஈச்வரனாகவும், நித்ய சுத்த புத்த முக்த ஸ்வபாவத்துடன் கூடினவராகவும் இருந்தும், முக்குண ஸ்வரூபியான தன்னுடைய வைஷ்ணவீ யென்கிற மாயையாகிற மூலப்ரக்ருதியை வசத்தில் வைத்துக்கொண்டு, தன் விசித்ர சக்தியால் தேஹமுள்ளவர் போலும், பிறந்தவர் போலும், லோகாநுக்ரஹம் செய்துகொண்டு ப்ரகாசிக்கிறார்] என்றிவ்விதமாகச் சொன்னவர் ஈச்வரன் இன்னார் என்பதில் ஸந்தேஹமறச் சொன்னவரே: ஷாட்குண்ய பூர்த்தியால் பகவத் சப்தவாச்யன் நாராயணன் என்று விஷ்ணுபுராண ப்ரமாணத்தை அநுஸரித்தும் எழுதுகின்றார்.

ஸ்ரீ சங்கராசார்யருடைய ஸந்நிஹித சிஷ்யரான ஸுரேச்வராசார்யரும் ஸ்வாசார்யக்ருதமான ப்ருஹதாரண்யகோபநிஷத் பாஷ்யத்துக்கு வார்த்திகமென்னும் க்ரந்தம் எழுதியிருக்கின்றார். அதில் "ய: ப்ருதிவ்யாம் திஷ்டந்" என்று ஆரம்பிக்கின்ற அந்தர்யாமி ப்ராஹ்மணத்தின் பாஷ்ய ப்ரகரணத்தில், இந்த ச்லோகங்களெழுதப்பட்டு நிற்கின்றன.

யதாயம் ப்ரஸித்தோऽந்ய ஸாக்ஷிகா: பரமாத்மத: ।
ததா தேவண்யமஸீஷ்யா ததா பாரமார்த்திகம் ॥ க்ருஷ்ண
த்வைபாயநோ வ்யாஸோ வேதார்த்த ஸாரஸங்க்ரஹம் । ப்ரா
ஹைகைவ பகவாந் ப்ராணிநாம் ஹிதகாம்யயா । நாராயண:
பரோऽவ்யக்தாத் அண்டமவ்யக்த ஸம்பவம் । அண்டஸ்யாந்தஸ்த்விமே லோ
கா: ஸப்தத்வீபா ச மேதிநீ ॥ தஸ்மை நமோ பகவதே தேவாய நிர்கு
ணாய மஹாத்மநே । நாராயணாய விஷ்ணவே தேவாநாம் பர
மாத்மநே । ஸ ஏவ ஸர்வாத்மநா நாராயணஸ்ய । வேத

விஷ்ணு: ஶ்ரீபாஞ்சராத்ரஜ்ஞை: பாஶுபதைஶ்ச விநியுஜ்யதே ॥ * *
* ஸர்வஜ்ஞ: ஸர்வஶக்திஶ்ச ஸர்வாத்மா ஸர்வதோ வ்யாப: । ஜகஜ்ஜந்மஸ்தித்யுத்வம்ஸ ஹேதுரேஷ ஸதேஶ்வர: ॥ ஸ ஏவைஷோ ஹ்யசேஷாணாம் ஸர்வகாரண காரணம் । நியந்த்ருத்வேந திஷ்டம் தேவீம் ஸர்வாவஸ்தாஸு ஸர்வதா ॥

ஶ்ரீ [இந்த ஈஶ்வரனைப் பாஞ்சராத்ரிகள் நான்கு ரூபமாகப் பிரித்து உபாஸிக்கின்றனர். அப்படியே யோக தர்சநம் பாசுபத மதம் முதலானவற்றை வழிபடுபவரும் அவனை உபாஸிக்கின்றனர். வேதஸ்வரூபியும் அஜ்ஞாந நிவர்த்தகருமான க்ருஷ்ணத்வைபாயந ரெனும் வ்யாஸர், ப்ராணிகளின் ஹிதத்தை இச்சித்து பஹு ப்ர காரமாக இதையே சொன்னார்; (எதையென்றால்,) அவ்யக்தத் துக்கு மேற்பட்டவன் நாராயணன்; ப்ரஹ்மாண்டம் அவ்யக்தத் தினின்று உண்டாயது; இந்த லோகங்களும், ஏழு த்வீபங்களுடன் கூடிய பூமியும் அண்டத்திற்குள் இருக்கின்றன. நிர்க்குணனும் (கல்யாண) குண ஸ்வரூபியாயும், விஶ்வமாகவும் தேவர்களுக் கெல்லாம் பரமாத்மாவாகவும் இருக்கப்பட்ட தேவனை அந்த நாரா யணனின் பொருட்டு நமஸ்கரிக்கின்றேன். இவனை உத்தேசித்தே நாராயணம் எனும் மந்த்ரமானது (நாராயணநுவாகம் ஸஹஸ்ர ஶீர்ஷம் தேவம் என்பது) வேதம் தெரிந்தவரும் மஹா ப்ராஜ்ஞரு மான புருஷர்களால் விநியோகப்படுத்தப்படுகிறது. அந்த ஈஶ் வரன் ஸர்வஜ்ஞன்; ஸர்வஶக்தியுடன் கூடியவன்; எல்லார்க்கும் ஆத்மா; எங்கும் நிறைந்தவன்; ஶாஶ்வதன்; ஜகத்தினுடைய உத்பத்தி ஸ்திதி ஸம்ஹாரங்களுக்குக் காரணமானவன்; ஸர்வ காரண வஸ்துக்களுக்கும் காரணன்; அப்படிப்பட்ட இந்த தேவன் உள்ளிருந்துகொண்டு எக்காலத்திலும் எல்லா அவஸ்தை களிலும் பூமி தேவியின் நியந்தாவாக இருக்கின்றார்.]

இதனால் பாஞ்சராத்ர மதத்தை யொத்து வ்யாஸரும் நாராய ணனே பரப்ரஹ்மமென்று அறுதியிட்டாரென விளங்குகின்றது.

இதுவுமன்றி ஸுரேஶ்வராசார்யர் வார்த்திக க்ரந்த முடிவில் ஸ்வக்ரந்தத்தை ஒரு மாலையாக வர்ணித்து, மாலா ரத்நமயீ ஶாம்பவீ பாதபத்மே ஸமர்ப்பிதா ... வைஷ்ணவம் ஸாநுயாதா ॥ என்று விஷ்ணுவின் பரம



பதத்தினிடம் ஸமர்ப்பணம் செய்கிறார். இதற்கு வ்யாக்யாநமாக ஆநந்தகிரி பின்வருமாறு எழுதுகிறார்:

ஸ்வக்ருதஸ்ய வார்த்திகஸ்ய ஸமர்ப்பணம் வ்யாஜேந ஸாயுஜ்யம் ... * * * ஸாலோக்யம் ... விஷ்ணோ: ஸாரூப்யம் ... ப்ராப்தம் ... யாதா ... காரணம் ... * * * ... கந்யா ... யோஜநா । * * * யதாஸ்ய ... ஸம்போ: ... யோஜநா ।

இதன் அர்த்தம் விஸ்தரித்து எழுதவேண்டியதில்லை. கங்கை யானவள் எப்படி ஶம்புவை யடைந்தனளோ அப்படியே ஸ்வ க்ரந்தமாகிற மாலையானது அமலமாயும் அஜமாயு மிருக்கப்பட்ட வைஷ்ணவ பதத்தை யடைந்தாள் என்றும் வ்யாஸாசார்யனை ஸர்வேஶ்வரன் இன்னானென்றும் நிஸ்ஸம்ஶயமாக வெளியிடு கின்றார். அந்தவிடமே ஶங்கரனை ஸ்மரித்தும் ஸர்வேஶ்வரத்வ ஶங்கை அவரிடம் பண்ணினாரில்லை.

ஶங்கர பாஷ்யாதிகளுக்கு டீகா வெனும் வ்யாக்யாநம் செய்த ஆநந்தகிரியும், மங்களஶ்லோகங்கள் செய்யுமிடத்து, பரிபூர்ண பரிஜ்ஞாந பரித்ருப்தி ... । விஷ்ணவே ஜிஷ்ணவே ... க்ருஷ்ணாய ... ॥ என்றும், விஷ்ணும் க்ருஷ்ணம் ஸதா ... என்றும், ... ஸம்பய ... ஶ்ரீமத் ... ஸமஹத ... ॥ என்றும், உபநிஷத் பாஷ்ய டீகைகளில் விஷ்ணு விஷய மாகச் செய்தாரே யன்றித் தேவதாந்தர ஸ்மரணம் செய்யவில்லை. ஸூத்ரபாஷ்யா டீகாரம்பத்தில் தேவதாந்தர நமஸ்காரங்கள் ஸம் பவித்த போதிலும் ப்ரதமத: விஷ்ணு ஸ்தோத்ரமே செய்திருக் கின்றார். அத்வைதியான ஸ்ரீதர ஸ்வாமி சுத்த வைஷ்ணவர். அத்வைதஸித்தி யெனும் வாத க்ரந்தம் செய்த மதுஸூதந ஸரஸ்வதி பரமவைஷ்ணவர். அவர் க்ருஷ்ணாத் பரம் கிமபி தத்வம் [illegible] நஜாநே என்று நிச்சயித்திருக்கின்றார்.

[illegible] என்று ஸ்ரீ ஶங்கராசார்யர் செய்த க்ரந்தத்தில் வேதவ்யாஸ பக்ஷத்தைப் பற்றிச் சொல்லுமிடத்து, 47 - வது ஶ்லோகத்தில் சதுர் வ்யூஹாத்மகரான விஷ்ணு, நான்கு விதமாக ஜகத்தை ஸ்ருஷ்டித்தாரென்றும், குணக்ருத பேதங்களுடன் கூடின சதுர்வர்ணங்களையும் ஸ்ருஷ்டித்தா ரென்றும் 55-57 - வது ஶ்லோகங்களில் எல்லார்க்கும் மோக்ஷம் அளிப்பவர் விஷ்ணு வென்றும் சொல்லுகிறார். இன்னும்

[illegible] ।
[illegible] ॥

என்று ஸ்ரீ விஷ்ணுபுராணத்தில் வெளியிட்டபடி, 58 - வது ஶ்லோகத்தில்,

[illegible] ।
[illegible] ॥

என்று த்ரிமூர்த்தி நாமங்களை ஜநார்த்தநன் ஒருவனே வஹித்து ஜகத்தின் ஜந்ம ஸ்திதி லயங்களைப் புரிகின்றானென்று சொல்லுகிறார். முடிவாக 61 - வது ஶ்லோகத்தில் [illegible] * * * [illegible] என்று ஸ்பஷ்டமாக ஶங்கரனிடம் ஜ்ஞாநத்தையும், விஷ்ணுவிடம் மோக்ஷத்தையும் இச்சிக்க வேண்டுமென்கிறார். இப்படி வேதவ்யாஸ பக்ஷமும் அந்த பக்ஷத்தை ஆதரித்த ஸ்ரீ ஶங்கராசார்யர் பக்ஷமும் இருந்தபடியை ஸுரேஶ்வராசார்யரும் அநுவதித்திருக்கிறார். ரத்ந ப்ரபை என்னும் வ்யாக்யாநத்துடன் ஸ்ரீமத் ஶங்கராசார்யருடைய ஸூத்ரபாஷ்யம் தெலுங்கில் அச்சிட்டிருக்கின்றது. அதில் ஸ்வக்ரந்தாரம்பத்தில் ஸ்ரீ ஶங்கராசார்யர் வாஸுதேவ த்வாதஶாக்ஷரத்தை ஸ்மரித்துவிட்டு க்ரந்தத்தை எழுதினதாகத் தெரிகின்றது. இந்த பாஷ்யத்தை இங்கிலீஷ்படுத்திய ஐரோப்பிய பண்டிதரும் வாஸுதேவ த்வாதஶாக்ஷரத்தை முதலில் தர்ஜமா செய்துவிட்டு க்ரந்தத்தைத் தர்ஜமா செய்திருக்கின்றார். சில ஆதுநிக ப்ரதிகளில் இந்த மஹாமந்த்ரத்தை விட்டிருக்கின்றது. ஆகிலும் அவற்றிலும் இரண்டாவது, மூன்றாவது, நான்காவது அத்யாயாரம்பங்களில் [illegible] என்றோ, [illegible] என்றோ, பரமாத்மாஸ்மரணம் இருக்கின்றது. க்ரந்தாரம்



பத்தில் இந்த ஸ்மரணம் சூந்யமாயிருக்கின்றது. இதனால்
ஸ்ரீமத் ஶங்கராசார்யருடைய ப்ரஸ்தாநத்ரய பாஷ்யங்கள் கால
க்ரமேண மாறுபடலாம் எனும் ஸந்தேஹமும் உண்டாகின்றது.

ப்ரஸ்தாநத்ரய பாஷ்யங்களில் ஜகத்காரணனும், அந்தர்
யாமியும், மோக்ஷப்ரதனும் நாராயணனென்று ஸ்ரீ ஶங்கராசார்
யர் அநேக ப்ரகரணங்களில் சொல்லித் தாத்ருஶ யோசனை சிவ
னிடம் ஒரு தரமும் செய்தாரில்லை. இன்னும் கீதை ஆறாவது
அத்யாயம் 14 - வது ஶ்லோகத்தின் பாஷ்யத்தைப் பார்க்கில்,
அந்த ரூபமான யோசனை அந்யத்ர செய்யக்கூடா தெனவும்
தாத்பர்யப்படுகிறாரென்னலாம். சிவாநந்தலஹரி முதலானஸ்தோத்
ரங்கள் இருக்கின்றனவே யென்றால் ஶங்கராசார்ய க்ருதமென்று
விஷ்ணு விஷயமாயும் ஶிவ விஷயமாகவும், இதர தேவதா விஷய
மாகவும் பஹு ஸ்தோத்ரங்களுண்டு. ஒரு தேவதா ஸ்தோத்ரத்தில்
இதர தேவதா நிந்தையும் சிலவிடம் காண்கின்றோம். பாஷ்ய
காரரான ஶங்கராசார்யர் பரதேவதா விஷயமாக ஸ்வாபிப்ரா
யத்தை ஸ்பஷ்டமாகப் பாஷ்யங்களில் காட்டிவிட்டு, அதற்கு
நேர்விரோதமாக ஸ்தோத்ர க்ரந்தங்கள் செய்திருப்பார் என்பது
அஸம்பாவிதம். வ்யாஸபக்ஷம் இருக்கிறபடியை, அவரும் அவர்
ஷ்யர் ஸுரேஶ்வரரும் காட்டி, அந்தப் பக்ஷத்தையே தங்க
ளுடைய தெனவும் காட்டி, பக்ஷாந்தரத்தை ஸ்தோத்ர க்ரந்
தங்களில் காட்டமாட்டார்கள். அத்வைத பூர்வாசார்யர்கள் ப்ரா
யேண வைஷ்ணவர்கள். இதை நம்மிராமாநுசனுடைய ஸ்ரீ பாஷ்
யத்தில் பூர்வபக்ஷங்களை ஸாதிக்குமிடத்து, த்ருடமாகக் காட்டப்
படுகின்றது. ஶங்கராசார்யநாமத்தைக் கொண்டோர் பலர்; அவருள்
சிலர் சைவராக இருந்து, இப்போது ஶங்கராசார்ய க்ருத ஶிவ
ஸ்தோத்ரங்களென்று வழங்கு மவற்றைச் செய்திருக்கக்கூடும்.
இப்படி ஸ்ரீ விஷ்ணுபுராண வசநங்கள் ப்ராஜ்ஞர்களான பல
ஸம்ப்ரதாய ப்ரவர்த்தகரால் ஆதரிக்கப்பட்டு, நாராயணனே ஜகத்
காரணனென்பதற்கும் அவனே [illegible] என்ப
தற்கும் ஆதாரமாகக் கொள்ளப்பட்டன வென்று முடிக்கின்றோம்.

ஸர்வேஶ்வரனுக்கு நாம ரூபாதிகள் இல்லை. [illegible]
[illegible] என்பது விஷ்ணுபுராண வசநம்.

ந தே ரூபம் ந சாகாரோ நாயுதாநி ந சாஸ்பதம் ।
ததாபி புருஷாகாரோ பக்தாநாம் த்வம் ப்ரகாஶஸே ॥

[உனக்கு ரூபமில்லை; ஆகாரமுமில்லை; ஆயுதங்களில்லை; ஆஶ்ரயமான இடமுமில்லை; ஆகிலும் பக்தர்களுக்கு புருஷாகார விஶிஷ்டனாக நீ ப்ரகாசிக்கின்றாய்] என ஜிதந்தே ஸ்தோத்ரத்தில் சொல்லியிருக்கின்றது. ஸ்ரீ விஷ்ணுபுராணத்தில் ப்ரஹ்லாத ஸ்தோத்ரத்திலும்,

யஸ்யாவதாரரூபாணி ஸமர்சந்தி திவௌகஸ: ।
அபஶ்யந்த: பரம் ரூபம்,

[எவனுடைய உத்க்ருஷ்டமான ரூபத்தைக் காணாதவராய்த் தேவலோகவாஸிகள் அவதார ரூபங்களை அர்ச்சிக்கின்றார்களோ] என்றிருக்கின்றது. உபநிஷத்தும் அவன் ஸ்வரூபத்தை வர்ணிக்க யத்தனித்து, ஸ ஏஷ நேதி நேதி என்று முடித்தது. அதாவது நாம் அறியக்கூடிய எந்த விதமாகவும் அவன் இல்லை என்பதாம். ஸ்ரீ நிகமாந்த மஹா தேசிகனும் தயாஶதகத்தில்,

அவதரண விஶேஷைராத்மலீலாபதேஶை-
ரவமதிமநுகம்பே மந்தசித்தேஷு விந்தந் ।
வ்ருஷஶிகரிநாத: த்வந்நிதேஶேந நூநம்
பஜதி ஶரணபாஜாம் பாவிநோ ஜந்மபேதாந் ॥

[ஓ தயையே! ஶேஷாத்ரி நாதனானவன் நிச்சயமாக உன்னுடைய ஆஜ்ஞையாலே, தன்னுடைய லீலையை வ்யாஜமாக வைத்துக்கொண்டு, அநேக அவதாரங்களைச் செய்து, மதிகேடரிடம் அவமானத்தையும் அடைந்துகொண்டு, தன்னுடைய திருவடிகளை ஆஶ்ரயித்தவர்களுக்கு அநுபாவ்யங்களான ஜந்ம விஶேஷங்களை அடைகின்றான்] என்று ஸாதித்தருளினர். இப்படிப் பகவான் பக்தர்களுக்கிரங்கி அவர்கள் தன்னை உபாஸிக்கவேண்டியபடி அவதரிக்கின்றான் என்றால், அவன் நிஜ ரூபம் யாருக்குத் தெரியும்? அவனை நாமாந்தர ரூபாந்தர விஶிஷ்டனாக உபாஸிப்பதில் நாம் விரோதம் சொல்லவில்லை.

யேயம் வ்யவஸ்திதிரிஹ தே ததுதவேவ ஸஜாத்யபாவம் ।
தேவத்வமாநவதயா திர்யக்த்வதோ பாயஸஸ்ய: ।



என்றருளிச் செய்த அருளாளன், உபாஸகர் பிரியமாகிற நாம ரூபங்களைத் தனக்குக் கல்பிப்பதால் வெறுப்படைவனோ? வ்யாஸ பாராசரர்களுடைய பாவமும், ப்ரமாணங்களுடைய ப்ராசுர்யமும், வைதிக ஸித்தாந்தகளை ஸ்தாபித்த மஹான்கள் ருசி இருந்தபடியையும் காட்டினமேயன்றி வேறில்லை.

ஸர்வேஶ்வரனுடைய ஸ்வரூபகுண விபவங்களை ஸங்க்ரஹித்துச் சொல்லவும் யார் ஸமர்த்தர்? நமக்குத் தெரிந்த கிஞ்சித்தையும் வெளியிட இங்கே நமக்கு அவகாஶம் குன்றியிருக்கின்றது. ஆகவே இந்த விஷயத்தில், ஸ்ரீ விஷ்ணுபுராணத்தினின்று இன்னும் சில ஶ்லோகங்களை வரைந்து முடிக்கின்றோம்:

ஸ ஸர்வபூதப்ரக்ருதிம் விகாராந்
குணாதிதோஷாம்ஶ்ச முநே வ்யதீத: ।
அதீதஸர்வாவரணோऽகிலாத்மா
தேநாஸ்த்ருதம் யத்புவநாந்தராலே ॥
ஸமஸ்தகல்யாணகுணாத்மகோऽஸௌ
ஸ்வஶக்திலேஶாவ்ருதபூதஸர்க: ।
இச்சாக்ருஹீதாபிமதோருதேஹ:
ஸம்ஸாதிதாஶேஷஜகத்திதோऽஸௌ ॥
தேஜோபலைஶ்வர்யமஹாவபோத-
ஸுவீர்யஶக்த்யாதிகுணைகராஶி: ।
பர: பராணாம் ஸகலா ந யத்ர
க்லேஶாதய: ஸந்தி பராவரேஶே ॥
ஸ ஈஶ்வரோ வ்யஷ்டிஸமஷ்டிரூப:
அவ்யக்தஸ்வரூப: ப்ரகடஸ்வரூப: ।
ஸர்வேஶ்வர: ஸர்வத்ருக் ஸர்வவேத்தா
ஸமஸ்தஶக்தி: பரமேஶ்வராக்ய: ।
ஸம்ஜ்ஞாயதே யேந தத்ஸ்ததோஷம்
ஶுத்தம் பரம் நிர்மலமேகரூபம் ।
ஸந்த்ருஶ்யதே வாப்யதிகம்யதே வா
தஜ்ஜ்ஞாநமஜ்ஞாநமதோऽந்யதுக்தம் ।

பரமென்றும் அபரமென்றும் உபநிஷத் வகுத்த இரண்டு வித்யைகளுக்கும் விஷயபூதனாய், த்வாதஶாக்ஷரமெனும் மஹா மந்த்ரத்துக்குத் தேவதையாய் விளங்கும் ஸ்ரீ வாஸுதேவன் ஸ்வரூபத்தை, அந்த மந்த்ரார்த்தம் புத்தியில் ஸ்திரப்படும் விதத்தை, மேலெழுதிய ஶ்லோகங்களால் ப்ரபஞ்சிக்கிறார். [அவன், ஸர்வ பூதங்களுக்கும் உபாதாநகாரணமாயிருக்கும் அவ்யக்தமெனும் ப்ரக்ருதிக்கும், அதனுடைய மஹத் முதலான விகாரங்களுக்கும், அதன் ஸத்வம் முதலான குணங்களுக்கும், அவற்றால் உண்டாகும் அஜ்ஞாநம், துக்கம் முதலாகிய தோஷங்களுக்கும் (விலக்ஷணனாக) அதிக்ரமித்து நிற்கின்றான். ஓ முநியே! அவன் அவித்யை முதலானவற்றின் ஆவரணத்தை அதிக்ரமித்தவன். ஸர்வத்துக்கும் ஆத்மாவாக இருப்பவன். ஜகத்தில் ஸத்ரூபமாகவும், அஸத் ரூபமாகவும் வஸ்து ஜாதங்கள் எவை யிருக்கின்றனவோ, அவை யெல்லாம் உள்ளும் புறமும் அவனால் வ்யாபிக்கப்பட்டிருக்கின்றன. அவன் ஸமஸ்த கல்யாண குணங்களுடன் கூடியவன். ஸர்வ பூத வர்க்கங்களையும் தனது ஶக்தியின் ஓரம்சத்தால் மூடினவன். தன் இச்சையால், (அகர்மவஶ்யனாய்) தான் உகந்தருளினபடி, தன்னடியாரால் பூஜிக்கத்தக்க பஹு தேஹங்களுடன் கூடினவனாய் அவதரித்து, அஶேஷ ஜகத்தாக்கும் ஹிதத்தை உண்டாக்கினவன். தேஜஸ் பலம், ஐஶ்வர்யம், மஹாஜ்ஞாநம், உத்க்ருஷ்ட வீர்யம், ஸர்வஶக்தி முதலான உயர்ந்த குணங்களின் ஓர் சேர்க்கையாக விருக்கின்றான். பரர் எனப்படும் ப்ரஹ்மா ஶிவன் முதலியோர்க்கும் அவன் பரன். பரரென்றும் அபரரென்றும் இருப்பவர்க்கெல்லாம் நியந்தாவான அவனிடம் அவித்யா ஹேதுகங்களான துக்கம் முதலான ஸர்வ கர்ம பலங்களும், (கர்ம வாஸனையின் கந்தத்துக்கும் அவனிடம் ஹேதுவற்றிருக்கின்றபடியால்) அடியோடும் இல்லை. அந்த ஈஶ்வரன் வாஸுதேவனாக ஸமஷ்டிரூபி. ஸங்கர்ஷணாதிகளாக வ்யஷ்டிரூபி. பரரூபத்தால் அவ்யக்த ஸ்வரூபி. ஜகத் ரூபமாகவோ, அவதார ரூபங்களாகவோ ப்ரகாசமான ஸ்வரூபத்துடன் கூடினவன். ஸர்வாவஸ்தைகளுடன் கூடியிருக்கும் சித் அசித் என்பவை அவனுடைய ரூபங்களானாலும், ஸ்வதந்த்ரனானபடியால் அவைகளைப்போல் பரவசனல்லன். ஸர்வேஶ்வரன் கரணகளேபரங்களின்றியே ஸர்வத்தையும் ஸாக்ஷாத்கரிக்கின்றவன். ஸர்வத்தையும் அறிந்தவன். ஸமஸ்த ஶக்திகளுடன் கூடியவன். பரமேஶ்வரனென்றும் பெயருடையவன். விகாரங்களுக்கு ஆஸ்பதமாயிருக்கப்பட்ட ப்ரக்ருதியினுடைய ஸர்வ தோஷங்களுமற்றும், அந்தத் தோஷ ஸம்பந்தமுள்ள ஜீவரைப்போல் அசுத்தமாயிராமல் அதிசுத்தமாயும், முக்தர் ஒரு காலம் ஹேய ஸம்பந்தமடைந்து பின்னால் நிர்மலரானது போலன்றி எப்போதும் நிர்மலமாயும், பஹுரூபராகின்ற நித்யரைப் போலன்றி ஏகரூபத்துடன் கூடியும் இருக்கப்பட்ட அந்தப் புருஷோத்தமன் எந்த ஶாஸ்த்ரைக வேத்யமான ஜ்ஞாநத்தால் அறியப்படுகின்றானோ, எந்த விவேக ஜந்ய ஜ்ஞாநத்தாலோ யோக ஸாதநத்தாலோ ஸாக்ஷாத்கரிக்கப்படுகின்றானோ, நிஶ்ஶேஷமாக அஜ்ஞாநம் கழிந்ததால் உண்டான எந்த பரபக்தி ரூபமான ஜ்ஞாநத்தால் அடையப்படுகின்றானோ, அதுதான் ஜ்ஞாநம். மற்ற வித்யை யெல்லாம் அவித்யைக்குள் அகப்பட்ட அபரவித்யை.]

நமக்கு நிருபாதிக ஸ்வாமியும், ப்ராப்யனுமாக இருக்கையில் ஸர்வ ஜகத்துக்கும் ஸ்ருஷ்ட்யாதி காரணமாகவும், ஈஶ்வரனாகவும், நம் ஒவ்வொருவர்க்குள்ளும் நியந்தாவுமாக இருக்கும் ஶரண்யன் ஸ்வரூப குணாதிகளைப் பற்றிச் சற்று விவரித்தோம். இப்படிப்பட்ட ஜ்ஞாநமின்றி நமக்கு அவன் உபாஸ்யனாகமாட்டான். அவனை உபாஸிக்காதவருக்குப் பரமஶ்ரேயஸ் இல்லை. ஆனால் அவனை உபாஸிப்பானேன் என்றாலோ, ஜீவன் கனுடைய தத்வ ஸ்ரூபமும், தத்காலம் அவற்றின் அயதார்த்த ஸ்திதியும் கிஞ்சித் யோசிக்கவேண்டியதாகின்றது. முன்னமே யோசித்து மிருக்கின்றது.

ஜீவ விஷயமாகக் கடோபநிஷத்தில்,

நஜாயதே ம்ரியதே வா விபஶ்சித், நாயங்குதஶ்சிந்நப³
பூ⁴வ கஶ்சித் । அஜோ நித்ய: ஶாஶ்வதோऽயம் புராணோ, நஹந்யதே
ஹந்யமாநே ஶரீரே ॥ ஹந்தா சேந்மந்யதே ஹந்தும் ஹ
தஶ்சேந்மந்யதே ஹதம் । உபௌ⁴ தௌ ந விஜாநீதோ நாயம் ஹந்தி
ந ஹந்யதே ॥ என்று சொல்லியிருக்கின்றது. கீதையிலும்,

அவிநாஶி து தத்³வித்³தி⁴ யேந ஸர்வமித³ம் ததம் ।
விநாஶமவ்யயஸ்யாஸ்ய ந கஶ்சித் கர்துமர்ஹதி ॥
அந்தவந்த இமே தே³ஹா நித்யஸ்யோக்தா: ஶரீரிண: ।
அநாஶிநோऽப்ரமேயஸ்ய தஸ்மாத்³யுத்⁴யஸ்வ பா⁴ரத ॥

य एनं वेत्ति हन्तारं यश्चैनं मन्यते हतम् ।
उभौ तौ न विजानीतो नायं हन्ति न हन्यते ॥
न जायते म्रियते वा कदाचि
न्नायं भूत्वा भविता वा न भूयः ।
अजो नित्यः शाश्वतोऽयं पुराणो
न हन्यते हन्यमाने शरीरे ॥
वेदाविनाशिनं नित्यं य एनमजमव्ययम् ।
कथं स पुरुषः पार्थ कं घातयति हन्ति कम् ॥
वासांसि जीर्णानि यथा विहाय
नवानि गृह्णाति नरोऽपराणि ।
तथा शरीराणि विहाय जीर्णा
न्यन्यानि संयाति नवानि देही ॥
नैनं छिन्दन्ति शस्त्राणि नैनं दहति पावकः ।
न चैनं क्लेदयन्त्यापो न शोषयति मारुतः ॥
अच्छेद्योऽयमदाह्योऽयमक्लेद्योऽशोष्य एव च ।
नित्यः सर्वगतः स्थाणुरचलोऽयं सनातनः ॥

अव्यक्तोऽयमचिन्त्योऽयमविकार्योऽयमुच्यते । तस्मादेवं विदित्वैनं नानुशोचितुमर्हसि ॥ – என்றும் ச்லோகங்கள் ஸ்மரிக்கப்பட்டுள்ளன. இவ்விரண்டும் ஸமாந ப்ரகரணங்கள்: ஜீவன் விஷயமாகப் பிறந்துள. உபநிஷத்தில் நசிகேதஸ் என்னும் ருஷி குமாரர் ம்ருத்யுவினிடம் வரங்கள் பெற்று, மூன்றாவது வரவிஷயமாக येयं प्रेते विचिकित्सा मनुष्येऽस्तीत्येके नायमस्तीति चैके । एतद्विद्यामनुशिष्टस्त्वयाहं वराणामेष वरस्तृतीयः என்றுரைத்தார். இதின் ஸாதாரணமான அர்த்தம்: "மநுஷ்யன் இறக்குங்கால், யாதொரு இந்த ஸம்சயம் உளதோ, தேஹாதி விலக்ஷணனாக ஆத்மா ஒருவன் அநுவர்த்தித்து இருக்கின்றான் என்று சிலரும், இப்படிப்பட்டவன் இல்லை யென்று சிலரும் சொல்கின்றனர். இது ப்ரத்யக்ஷத்தாலும் அநுமாநத்தாலும் அறியக்கூடாத விஷயமாகையால், உம்மால் உப-



தேசிக்கப்பட்டு இதை அறிந்துகொள்கின்றேன்" என்கின்றது. நமது பாஷ்யகாரர் இந்த வாக்யத்தைக் குறித்துச் செய்தருளிய விசேஷார்த்தம் இவ்விடம் சொல்லப்படவில்லை. இந்த வரம் ஜீவவிஷயம். இப்படியே கீதையிலும் அர்ஜுநன் தன்னுடைய பந்துக்களையும் தனக்குப் பூஜ்யர்களாயிருந்தவர்களையும் யுத்தத்தில் கொல்ல இஷ்டமற்றவனாய், வில்லை யெறிந்துவிட்டுத் தேர்தட்டில் உட்காரவே, பகவான், अशोच्यानन्वशोचस्त्वं (சோக விஷய மாகாதவரைப்பற்றிச் சோகிக்கின்றனை) என்று ஜீவனுடைய ஸ்வரூபோபதேசத்தை அர்ஜுநனுக்குச் செய்கின்றார். அத்வைத ஸித்தாந்தத்தின்படி ப்ரஹ்மமே அவித்யையால் மூடப்பட்டு, சரீரந்தோறும் ஜீவபாவத்தை யடைகின்றதாகையால், ஸர்வப்ரகரணங்களும் ப்ரஹ்மபரமாக வ்யாக்யாநம் செய்யப்படுகின்றன. ஆனாலும், நசிகேதஸ்ஸினுடைய ப்ரச்நத்தாலும் அர்ஜுநனுடைய சோகத்தாலும் இருவரும் தத்காலம் பேதப்ரதீதிகளை அதிக்ரமிக்கவில்லை யென்றும், அவர்கள் ஜீவ விஷயமான உபதேசத்தை அபேக்ஷித்தவரென்றும் ஏற்படுகின்றது. பகவான், अविनाशि तु तद्विद्धि येन सर्वमिदं ततम् । विनाशमव्ययस्यास्य न कश्चित्कर्तुमर्हति ॥ என்றுரைக்க, அந்த ச்லோகத்துக்கு "யாதொரு ப்ரஹ்மத்தினால் இந்த ஸர்வஜகத்தும் வ்யாபிக்கப்பட்டிருக்கின்றதோ, அந்த ப்ரஹ்மத்துக்கு நாசமில்லை யென்றறி. ஸர்வவிகார ரஹிதனான அந்த ப்ரஹ்மத்துக்கு ஒருவனும் விநாசம் செய்ய ஸமர்த்தனாகான்" என்று ஸ்ரீ சங்கர பாஷ்யம் உபபந்நமெனத் தோன்றவில்லை. ப்ரஹ்மம் இறக்கப் போகின்றதென அர்ஜுநனுக்கு சோகம் பிறக்கவில்லை. ப்ரஹ்மத்தினுடைய மரணஸம்பந்தமாக அஸ்தி நாஸ்தி யென ஸம்சயமிருப்பதாக நசிகேதஸ் கூறவில்லை. ஜீவனைத் தேஹீ யென்று விவரித்துத் தேஹம் போனாலும் தேஹாபிமாநியான அவன் போவதில்லை யென்றும், தேஹத்துக்கு சஸ்த்ரங்களாலும் பஞ்சபூதங்களாலும் நாசம் உண்டானபோதிலும், அதற்குள் அதை அபிமாநித்துநிற்கும் ஜீவன் நாசமடைவதில்லை யென்றும் இரண்டு ப்ரகரணங்களிலும் உபதேசம் பிறந்திருக்கின்றது.

உபநிஷத் வாக்யங்களின் அர்த்தம்:—"ஸ்வரூபத்தில் ஸர்வஜ்ஞனான இவன் பிறக்கவுமில்லை, இறக்கவுமில்லை. மற்றொன்றினின்று இவன் உண்டாகவில்லை. இவனும் மற்றொன்றின் காரண

மாவதில்லை. இவன் பிறப்பற்றவன். நித்யனாகையால் மரண மற்றவன். ஶாஶ்வதனானபடியால் தனக்கொரு காரணமற்றவன். இப்போதென முன்னெப்போதும் இருந்தவன். ஶரீரவர்த்தியாய் இருந்தபோதிலும், ஶரீரம் ஶஸ்த்ராதிகளால் அடிக்கப்பட்ட போதும் அவன் ஹிம்ஸிக்கப்படுவதில்லை. அவனது ஶரீரத்தை ஹிம்ஸிக்கின்றவனோ கொல்லுகின்றவனோ, அவனை ஹிம்ஸித்த தாகவோ கொன்றதாகவோ நினைத்தானாகிலும், ஹிம்ஸைக்கோ கொலைக்கோ விஷயமான ஶரீரவான் தான் ஹிம்ஸிக்கப்பட்ட தாகவோ கொல்லப்பட்டதாகவோ நினைத்தானாகிலும் இருவரும் ஆத்மஸ்வரூபத்தை யறிந்தவரல்லர். கொல்லுகின்றவன் ஆத்மா வைக் கொல்லவில்லை. கொல்லப்பட்டதும் ஆத்மாவன்று" என்று கின்றது. ஶ்ரீதாஶ்லோகங்களின் அர்த்தம்: "யாதொரு சேதநரூப மான ஜீவாத்ம தத்வத்தால் அசேதநரூபமான இந்த ஸர்வமும் வ்யாப்தமோ, அந்த ஆத்மதத்வம் விநாஶார்ஹம் அன்றென அறி. விகாரரஹிதனான இவனுக்கு நாசம் உண்டாக்க யாரும் ஸமர்த் தனல்லன். விகாரத்தையும் நாசத்தையும் அடைந்துகொண்டு ப்ரதீதிகளுக்கு விஷயமாகின்ற ஜடபதார்த்தங்களைப் போலன்றி ப்ரதீதிகளுக்கு ஆஶ்ரய பூதனாகையால், நித்யனாகவும் விகாரரஹித னாயும் இருக்கையில், கர்மார்ஜிதமான சரீரங்களை யடைகின்ற ஜீவனுடைய இந்த சரீரங்களுக்குக் கர்மாவஸாநே முடிவுண் டென ஜ்ஞாதாக்களால் சொல்லப்படுகின்றது. ஆதலால் அர்ஜுநா! நீ யுத்தம் செய். யாவனொருவன் இந்த ஆத்மாவைக் கொல்பவனாக நினைக்கின்றானோ, யாவனொருவன் இவனைக் கொல்லப்பட்டவனாக நினைக்கின்றானோ, அவ்விருவரும் இவன் ஸ்வரூபத்தை யறிந்தவ ரல்லர். இவன் கொல்கின்றானில்லை. கொல்லவும் படுகின்றா னில்லை. சரீரஸம்பந்தமாக ஜநந மரணங்கள் யாவராலும் அநுபவிக்கப்பட்டபோதிலும் அவை எப்போதும் ஆத்மாவைத் தொடுகின்றனவல்ல. இவன் முன் உண்டாகின்றா னென்பதில்லை. மறுபடி இல்லாமற் போகின்றா னென்பதுமில்லை. இவன் ஆதி முதல் என்றும் அபூர்வமென வர்த்தித்து, ஜநநமற்றும் விகார மற்றும் நாசமற்றும் என்று மிருக்கின்றவன். ஆதலால் இவன் ஶரீரம் ஹிம்ஸிக்கப்பட்டவளவில் இவன் ஹிம்ஸிக்கப் படுவ தில்லை. யாதொரு புருஷன் இந்த ஆத்மாவை நாசமற்றும் விகார மற்றும் இருப்பதால் நித்யனென்று அறிகின்றானோ, அவன்



விவித ஶரீர விஶிஷ்டரான ஜீவாத்மாக்களுக்குள் ஒருவரை எவ் விதம் கொல்விப்பான்? ஒருவரை எவ்விதம் ஸ்வயம் கொல்லு வான்? மநுஷ்யன் ஜீர்ணமான வஸ்த்ரங்களை எறிந்துவிட்டு இதர நூதந வஸ்த்ரங்களை க்ரஹிப்பது போல, ஶரீராபிமாநியான ஜீவன், ஜீர்ணமான சரீரங்களை விட்டுவிட்டுப் புதியதான சரீ ரங்களை யடைகின்றான். இந்த ஜீவனை ஆயுதங்கள் வெட்ட மாட்டா; நெருப்பு கொளுத்தாது; ஜலம் நனைக்காது; வாயு ஶோஷிக்காது; ஜ்ஞாநஸ்வரூபியான இவன் வெட்டத் தகாதவன்; எரிக்கத் தகாதவன்; நனைக்கத் தகாதவன்; உலர்த்தத் தகாதவன்; முடிவற்றவன்; ஸூக்ஷ்மஸ்வரூபியாய் ஸர்வ பதார்த்தங்களிலும் வ்யாபிக்கின்ற அவனை அக்நி முதலானவைகள் வ்யாபிக்கமாட்டா; ஸ்திரமான ஸ்வபாவத்துடன் கூடினவன்; சலிக்கத் தகாதவன்; உத்பத்தி யற்றவன்; வெட்டுதல் எரித்தல் முதலான கர்மங்க ளுக்கு விஷயமாகும் பதார்த்தங்கள் இந்த்ரியங்களுக் விஷயமா கின்றன; இவன் இந்த்ரியாதிகளுக்கு விஷயாமாகாதவன்; அவை மநஸ்ஸால் சிந்திக்கத்தக்கவை; இவன் மநஸ்ஸால் சிந்திக்கத் தகா தவன்; அவை விகாராஸ்பதங்கள் ஆகின்றன; இவன் விகாரா நர்ஹன் - என்றிப்படி இவன் ஜ்ஞாதாக்களால் சொல்லப்படு கிறான். மேலே சொன்ன விதமாக இவனை நீ தெரிந்து கொண்ட வனாய்க் கொண்டு, ஶோகிக்காமல் இருக்கக்கடவாய்" என்றிவ்விதம் நமது ஸம்ப்ரதாயப்படி ஏற்படுகின்றது. இவ்விடம் ப்ரஸக்தாநு ப்ரஸக்தமாய் ஒரு யோசனை உதிக்கின்றது. ஹந்தா சேந்மந்யதே

ஹந்தும் ஹதஶ்சேந்மந்யதே ஹதம் । உபௌ தௌ ந விஜாநீதோ

நாயம் ஹந்தி ந ஹந்யதே ॥ என்கிற உபநிஷத் வாக்யமும்,

ய ஏநம் வேத்தி ஹந்தாரம் யஶ்சைநம் மந்யதே ஹதம் । உபௌ தௌ

ந விஜாநீதோ நாயம் ஹந்தி ந ஹந்யதே ॥ என்கிற ஶ்ரீதா

வாக்யமும் ஏகவாக்யமே. ஒன்றை ஸ்மரித்து மற்றொன்று வந்திருக்கவேண்டும். இந்த வாக்யம் ஶ்ரீதையில் ப்ரஸக்தமா கின்றது. உபநிஷத்தில் யுத்தசிந்தனைக்கு ஹேதுவில்லாதபடியால் அப்ரஸக்தம். ஆதலால் துரபிமாநத்தை ஒழித்து யோசிக்கு மிடத்து, பகவத்வாக்யத்தை அநுஸரித்து உபநிஷத் வாக்யம் பிறந் திருக்கக் கூடாதோ எனத் தோன்றலாம். ஶ்ருதி நித்யமானாலும், யுகாந்தரங்களிலும் க்ருஷ்ணார்ஜுந ஸம்வாதம் இவ்விதமே நடந் திருக்கு மென்று உபநிஷத் நித்யவாதிகள் ஒப்புக்கொள்ளக்கூடும். ஶ்ரீதைக்குக் காலநிர்ணயம் செய்பவர்பொருட்டு இந்த யோசனை பிறந்தது.

பத்ராதிபர்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:.

# ஸ்ரீ ஸ்தோத்ர ரத்நம்.

நிராஸகஸ்யாபி ந தாவதுத்ஸஹே
மஹேஶ? ஹாதும் தவ பாதபங்கஜம் |
ருஷா நிரஸ்தோऽபி ஶிஶு: ஸ்தநந்தயோ
ந ஜாது மாதுஶ்சரணௌ ஜிஹாஸதி || 26.

பராபவ: - அவமாநம், அதாவது - து:க்கம்; இவ்விடத்தில் து:க்கமாவது - பகவானை த்யாநம் செய்யவொட்டாமல் மநஸ் இந்த்ரியங்களாலும் காமக்ரோதாதிகளாலும் விஷயங்களைக் குறித்து இழுக்கப்படுவதுதான்; கர்மாதீநமாக இருக்கை யென்பது குறிப்பு.

தே நாநுரூப: - உனக்குத் தகுந்தது அன்று. ஸ்வதந்த்ரனாக இருக்கும் நீ, ஸர்வ விஷயத்திலும் அபர்யநுயோஜ்யனாக இருக்கையிலும்,

"ஸக்ருதேவ ப்ரபந்நாய தவாஸ்மீதி ச யாசதே |
அபயம் ஸர்வபூதேப்யோ ததாம்யேதத் வ்ரதம் மம ||"

இத்யாதியாகப் பலவாறு உன்னால் உத்கோஷிக்கப் பட்டிருக்கும் வாக்யங்களை அநுஸந்திக்கும் நாங்கள் 'நீ ஸர்வ ஸ்வாதந்த்ர்யத்தை அவலம்பித்து மனம்போன போக்கெல்லாம் நடக்கமாட்டாய்; அப்படி நடந்தால் அது உனக்கு அநநுரூபமே யாகும்,' என்று எண்ணி யிருக்கிறோம் என்பது தாத்பர்யம்.

26 இந்த ஶ்லோகத்தினால், 'அபராதிகளிடம் தண்டதரத்வ ரூபமான குணத்தைச் செலுத்த ப்ரயத்நப்படும் நீ, என்னிடத்தி லிருக்கும் அபராதங்களிற் சிலவற்றைப் பார்த்து ஒருகால் என்னை



ஶிக்ஷிக்க ப்ரயத்நப்பட்டாலும், உன்னைத் தவிர்த்து வேறு ஒரு கதியையும் அறியாம லிருக்கும் நான் உன்னை விட்டு அகலேன்' என்கிற இந்த அர்த்தம் சொல்லப்படுகின்றது. ஶரணாகதி செய்யும் ஒருவன் தன்னுடைய அநந்ய கதித்வத்தை உணர்வதுடன், தான் எந்தக் காரணத்தினாலும் அந்தப் பகவத் பாதாரவிந்தத்தை விட்டுப் பிரிய அஶக்தன் என்பதையும் நன்றாக உணரவேண்டியது என்று இதனாற் குறிக்கப்படுகின்றது. 'ஏதாவது சில காரணங்களினால் சற்று விளம்பித்து முக்தியைக் கொடுக்கலாம் என்று பகவான் அபிப்ராயப்பட்டிருக்கக்கூடும்; அப்படிப்பட்ட விளம்பத்தை நான் ஸஹியேன்' என்று ஸ்ரீ ஆளவந்தார் தமது விளம்பாக்ஷமத்வத்தை இதனால் ஸூசிப்பிக்கின்றார் என்று சொல்வது முண்டு.

ஹே மஹேஶ! நிராஸகஸ்யாபி தவ பாதபங்கஜம் ஹாதும் (த்யக்தும்) தாவத் நோத்ஸஹே; ஸ்தநந்தய: ஶிஶு: (பாலக) ருஷா நிரஸ்தோऽபி மாதுஶ்சரணௌ ஜாது ந ஜிஹாஸதி. ஹே ஸர்வேஶ்வர! ஒருகால் நீ, என்னுடைய அபிமதத்தைக் கொடாமல் என்னை இதர விஷயங்களில் ப்ரேரிப்பதாக உத்தேஶித்தாலும், உன்னுடைய பாதாரவிந்தத்தை விட்டு நான் விலக ஸர்வதா அஶக்தனே. ஸ்தந்ய பாநம் பண்ணும் ஶிஶு ஒரு ஸமயத்தில் தன் மாதாவினால் நிரஸிக்கப்பட்டாலும், அந்த ஶிஶு அந்த மாதாவினுடைய பாதங்களை விட்டு மற்றை எதையாவது ஆஶ்ரயிக்க இச்சிக்குமோ?

ஹே மஹேஶ - 'நீ ஸர்வேஶ்வரன்; ஒருகால் சில காரணங்களைக் கொண்டு என்னைக் கொஞ்சம் விளம்பித்து அநுக்ரஹிக்கத் திருவுள்ளத்திற் கொள்ளக்கூடும்' என்பது தாத்பர்யம்.

நிராஸகஸ்யாபி - நீ என்னை விலக்க ப்ரயத்நப்பட்டாலும். 'நீ செய்திருக்கும் பாபங்களை ப்ராயஶ்சித்தம் முதலிய

வற்றைச் செய்து ஒழித்துவிட்டும், புண்யம் ஏதாவது செய்திருந்தால் அதன் க்ஷயத்திற்காக போகங்களை அநுபவித்துவிட்டும், பிறகு முக்தியைப் பெறலாம்' என்று ஆஶ்ரிதனைப்பற்றி பகவான் திருவுள்ளம் பற்றுவது ஸம்பாவிதமாகையால் பகவானால் நிரஸநத்தை ஶங்கிக்க இங்கு அவகாஶம் உண்டாகின்றது. இவ்விடத்தில் இருக்கும் 'அபி' ஶப்தம், 'ஶரணாகதன் விஷயத்தில் நீ அப்படி நிரஸநத்தைச் செய்யமாட்டாய்; அப்படிச் செய்வதாக ஒத்துக் கொண்டாலும்' என்னும் அர்த்தத்தைக் காண்பிக்கின்றது.

தவ பாதபங்கஜம் ஹாதும் நோத்ஸஹே - உன் திருவடியை விட்டுப் பிரிய எனக்கு ஶக்தியில்லை. 'உன் ஒருவனையே கதியாக அடைந்திருக்கும் நான் எவ்விதமாக உன்னை விட்டு விலகுவேன்?' என்பது தாத்பர்யம். 'உபாயமும் நீயே, பலமும் நீயே; இந்த இரண்டு விதத்திலும் நான் உன்னை விட்டுப் பிரிவது ஸாத்யமில்லை' என்னும் தாத்பர்யத்தை 'பாத பங்கஜம்' என்பதில் உள்ள இரண்டு பதங்களும் யதாக்ரமம் ஸூசிப்பிக்கின்றனவென்று ஸ்ரீ நிகமாந்த மஹாதேஶிகனுடைய திருவுள்ளம்.

ஸ்தநந்தய: ஶிஶு: - இந்த இரண்டு பதங்களும், ஒருஶிஶு தன்னை ரக்ஷித்துக் கொள்வதில் தனக்கு இருக்கும் அஸாமர்த்யத்தையும், மாதா ஒருத்தியே ரக்ஷிக்கத்தகுந்தவள் என்பதையும் குறிக்கின்றன.

மாத்ரா - இங்கே பகவானுக்கு மாதாவை உபமாநமாகக் கொண்டபடியால், ஆஶ்ரிதர்களுடைய ஸர்வ தோஷங்களையும் ஸஹித்துப்போவதற்கு அபேக்ஷிதமாயுள்ள வாத்ஸல்யத்தைப் பகவான் உடைத்தாயிருக்கிறான் என்பது விளங்குகின்றது.

ந ஜிஹாஸதி - த்யஜிக்க இச்சையே உண்டாகாது. இச்சையே ஜநிக்காமல் இருக்கையில் த்யாகம் எவ்விதத்தில் ஸம்பவிக்கும்? என்பது தாத்பர்யம்.



தவாம்ருதஸ்யந்தினி பாதபங்கஜே
நிவேஶிதாத்மா கதமந்யதிச்சதி ।
ஸ்திதே(அ)ரவிந்தே மகரந்தநிர்ப்பரே
மதுவ்ரதோ நேக்ஷுரகம் ஹி வீக்ஷதே ॥ 27.

"தருதுயரந் தடாயேலுன் சரணல்லால் சரணில்லை;
விரைகுழுவு மலர்ப்பொழில்சூழ் வித்துவக்கோட் டம்மானே!
அரிசினத்தா லீன்றதா யகற்றிடினும் மற்றவள்தன்
அருள்நினைந்தே யழுங் குழவியதுவேபோன் றிருந்தேனே."

என்னும் ஸ்ரீ குலசேகரப்பெருமாள் பாசுரத்துடன் ஒத்த கருத்தை உடையது இந்த ஶ்லோகம்.

27. ப்ரஸ்துதமான ப்ரபத்தி யென்னும் உபாயத்தின் ப்ர
யோகத்தை ஸ்திரீகரிக்கும் அர்த்தமுள்ள ஶ்லோகங்களில் இது
ஐந்தாவது. 'ஶரண்யன் போக்யதம னானபடியால் அவனைத்
தவிர்த்து மற்றை எவ்வித ப்ரயோஜனத்திலும் ப்ரபந்நர்களின்
மநஸ் ப்ரவ்ருத்தியாது' என்பது இந்த ஶ்லோகத்தின் தாத்பர்யம்.

'அம்ருதஸ்யந்தினி தவ பாதபங்கஜே நிவேஶிதாத்மா
(ஜந:) கதம் அந்யத் இச்சதி? மகரந்தநிர்ப்பரே அரவிந்தே
ஸ்திதே ஸதி, மதுவ்ரத: இக்ஷுரகம் ந வீக்ஷதே ஹி'
ஹே ஶரண்ய! உன்னை ஶரணமாக அடையு மவனுடைய மநஸ்
ஸானது, அம்ருதத்தைப் பெருக்கிக்கொண்டு நிற்கும் உன்னு
டைய பாதாரவிந்தத்தில் த்ருடமாக ஸ்தாபிக்கப்பட்டு விட்டால்,
அவன் உன்னைத்தவிர்த்து மற்றை ஒரு பொருளை எவ்விதமாக
விரும்புவன்? தேன் நிரம்பியுள்ள அரவிந்தம் இருக்கையில், தேனி
லேயே நோக்கமுள்ள வண்டானது, நீரஸமாயுள்ள இக்ஷுரகம்
என்னும் புஷ்பத்தைத் திரும்பிப் பார்க்காதன்றோ?

ஒருகால் பகவான், 'ஹே ஶரணாகதனே! இப்பொழுது ஐஹிக போகங்களைக் கொடுக்கிறேன்; அவைகளை அநுபவித்து

விட்டுப் பிறகு மோக்ஷத்திற்கு நீ ஆஸ்தை கொள்ளலாம்' என்று சொல்லிவிடுவனோ! என்று பயந்து, 'தமக்கு மற்றை எதுவும் போக்யமாகாது; பகவானுடைய பாதபங்கஜம் ஒன்றே போக்யதமம்' என்னும் தமது உறுதியை இதனால் விவரிக்கிறார்.

அம்ருதஸ்யந்திநி தவ பாதபங்கஜே - எம்பெருமானுடைய திருவடிகளுக்கு அம்ருதம் பொழியும் தன்மையாவது - ஶரணாகதர்கள் பக்கல் மோக்ஷம் கொடுக்கும் தன்மையே. அத்யந்தம் போக்யமாக ஶ்ருதி ஸ்ம்ருதிகளில் அந்தத் திருவடிகள் பேசப்பட்டிருக்கிறபடியாலும், அவைகளை அம்ருத ஸ்யந்திகள் என்று சொல்லக்கூடும்.

"ரஸோ வை ஸ:" "ஸர்வகந்த: ஸர்வரஸ:" இத்யாதியாக ஶ்ருதிகளால் 'ஸர்வ ப்ரகாரத்திலும் அளவற்ற போக்யதை யுள்ளவன் ஶரண்யன்' என்று சொல்லப்படும் எம்பெருமானுடைய திருவடிகள் அம்ருத ஸ்யந்திகளாகா விட்டால், மற்றை எதுதான் 'அம்ருத ஸ்யந்தி' என்று கூறத் தகும்?

நிவேஶிதாத்மா - வைக்கப்பட்ட மநஸ்ஸை யுடையவன். பகவானை ஶரணமாக அடையும் பக்தர்கள், தாமாகவே தமது மநஸ்ஸை அவனுடைய பாதங்களில் வைக்கிறார்கள் என்பது இந்தப் பதத்தின் கருத்து அன்று. "ஏதத் வ்ரதம் மம" என்று ஶரணாகதர்களை ரக்ஷிக்கவேணும் என்னும் வ்ரதத்தைக் கொண்டிருக்கும் பகவானே, அவர்களுக்குப் புத்தியோகம் முதலியவற்றைக் கொடுத்து அவர்களது மநஸ்ஸைக் கவர்ந்து கொள்ளுகிறான் என்பது கருத்து. "த்வயைவ நிவேஶிதாத்மா" என்று அத்யாஹாரம் செய்துகொள்ளவேணும்.

கதமந்யதிச்சதி - மற்றை ஒரு விஷயத்தை அவன் எப்படி இச்சிப்பன்? 'நீயே இவ்விதமாக எங்களுடைய மநஸ்ஸைக் கொள்ளைகொண்டு விட்டபடியால், மற்றை விஷயங்களில் எங்களுக்கு இச்சை எப்படி ஜநிக்கும்? என்று உன்னைத்தான் கேட்கவேணும்' என்பதைக் குறிக்கும் பொருட்டே, 'கதம் இச்சதி' என்று ப்ரயோகம் செய்யப்பட்டிருக்கிறது. அப்படி இல்லாவிட்டால் 'நேச்சதி' என்று சொல்லிவிடலாம்.



அரவிந்தே மகரந்தநிர்பரே ஸ்திதே - 'போக்தாக்களுக்கு எவ்வித க்லேஶமு மின்றிக்கே அத்யந்தம் போக்யமாக ஸமீபித்து வந்திருக்கையில்' என்பது தாத்பர்யம். 'ஸ்திதே' என்றால் 'உபஸ்திதே' என்று அர்த்தம். 'மகரந்த நிர்பர' என்னும் பதம், 'அப்பொழுதுதான் மலர்ந்ததாயும், அந்தக் காரணத்தினால் தேன் நிரம்பினதாயு முள்ள' என்னும் அர்த்தத்தைக் குறிக்கின்றது.

மதுவ்ரத: - 'மது வுண்டானால் ஜீவனுண்டு என்னும் நிலைமையைக் கொண்டது' என்னும் அர்த்தத்தை இந்தப்பதம் குறிக்கின்றது. 'ஶரண்யனுண்டானால் ஸத்தை உண்டு' என்பதன்றோ ஶரணாகதர்களின் படி?

இக்ஷுரகம் - அல்ப ரஸமாயும் நிர்கந்தமாயும் வண்டு ஸ்பர்ஶித்த மாத்ரத்தினால் வாடும் ஸ்வபாவமுள்ளதாயும் இருக்கும் முட்கள் அடர்ந்த ஒரு க்ஷுத்ர புஷ்பத்தின் பெயர், இந்தப்பதம்.

ந வீக்ஷதே - திரும்பிக்கூடப் பார்க்காது என்று சொன்னதனால், அவைகளை உபஸர்பணம் செய்வதற்கு ப்ரஸக்தியே இல்லை என்பது ஸ்திரமாயிற்று.

எஸ். வாஸுதேவன்.

# ஸ்ரீ அஹோபில ந்ருஸிம்ஹன் விஷயம்.

## உ-ப்ரஹ்லாத சரித்திரம்.

ஸ்ரீ பாகவதம் ஸ்ரீ விஷ்ணு புராணத்தை அநுஸரித்துண்டான தாகிலும், ஸ்வயமாகவும், ப்ரமாணாந்தரங்களைக் கொண்டும் ப்ரஹ்லாதன் உபதேசத்தை விவரிக்கின்றது. அங்கிருந்தும் சில வசநங்களை இவ்விடம் எடுத்தெழுதுவது யுக்தமெனத் தோன்றுகின்றது.

𑌕𑍌𑌮𑌾𑌰 𑌆𑌚𑌰𑍇𑌤𑍍𑌪𑍍𑌰𑌾𑌜𑍍𑌞𑍋 𑌧𑌰𑍍𑌮𑌾𑌨𑍍𑌭𑌾𑌗𑌵𑌤𑌾𑌨𑌿𑌹 ।
𑌦𑍁𑌰𑍍𑌲𑌭𑌂 𑌮𑌾𑌨𑍁𑌷𑌂 𑌜𑌨𑍍𑌮 𑌤𑌦𑌪𑍍𑌯𑌧𑍍𑌰𑍁𑌵𑌮𑌰𑍍𑌥𑌦𑌮𑍍 ॥

* * * * * *

𑌤𑌤𑍋 𑌯𑌤𑍇𑌤 𑌕𑍁𑌶𑌲𑌃 𑌕𑍍𑌷𑍇𑌮𑌾𑌯 𑌭𑌵𑌮𑌾𑌶𑍍𑌰𑌿𑌤𑌃 ।
𑌶𑌰𑍀𑌰𑌂 𑌪𑍌𑌰𑍁𑌷𑌂 𑌯𑌾𑌵𑌨𑍍𑌨 𑌵𑌿𑌪𑌦𑍍𑌯𑍇𑌤 𑌪𑍁𑌷𑍍𑌕𑌲𑌮𑍍 ॥
𑌕𑍋 𑌗𑍃𑌹𑍇𑌷𑍁 𑌪𑍁𑌮𑌾𑌨𑍍𑌸𑌕𑍍𑌤𑌮𑌾𑌤𑍍𑌮𑌾𑌨𑌮𑌜𑌿𑌤𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌃 ।
𑌸𑍍𑌨𑍇𑌹𑌪𑌾𑌶𑍈𑌰𑍍𑌦𑍃𑌢𑍈𑌰𑍍𑌬𑌦𑍍𑌧𑌮𑍁𑌤𑍍𑌸𑌹𑍇𑌤 𑌵𑌿𑌮𑍋𑌚𑌿𑌤𑍁𑌮𑍍 ॥
𑌕𑍋 𑌨𑍍𑌵𑌰𑍍𑌥𑌤𑍃𑌷𑍍𑌣𑌾𑌂 𑌵𑌿𑌸𑍃𑌜𑍇𑌤𑍍𑌪𑍍𑌰𑌾𑌣𑍇𑌭𑍍𑌯𑍋𑌽𑌪𑌿 𑌯 𑌈𑌪𑍍𑌸𑌿𑌤𑌃 ।
𑌯𑌂 𑌕𑍍𑌰𑍀𑌣𑌾𑌤𑍍𑌯𑌸𑍁𑌭𑌿𑌃 𑌪𑍍𑌰𑍇𑌷𑍍𑌠𑍈𑌸𑍍𑌤𑌸𑍍𑌕𑌰𑌃 𑌸𑍇𑌵𑌕𑍋 𑌵𑌣𑌿𑌕𑍍 ॥

𑌕𑌥𑌂 𑌪𑍍𑌰𑌿𑌯𑌾𑌯𑌾 𑌅𑌨𑍁𑌕𑌮𑍍𑌪𑌿𑌤𑌾𑌯𑌾𑌃
𑌸𑌂𑌗𑌂 𑌰𑌹𑌸𑍍𑌯𑌂 𑌰𑍁𑌚𑌿𑌰𑌾𑌂𑌶𑍍𑌚 𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑌾𑌨𑍍 ।
𑌸𑍁𑌹𑍃𑌤𑍍𑌸𑍁 𑌤𑌤𑍍𑌸𑍍𑌨𑍇𑌹𑌸𑌿𑌤𑌃 𑌶𑌿𑌶𑍂𑌨𑌾𑌂
𑌕𑌲𑌾𑌕𑍍𑌷𑌰𑌾𑌣𑌾𑌮𑌨𑍁𑌰𑌕𑍍𑌤𑌚𑌿𑌤𑍍𑌤𑌃 ॥
𑌪𑍁𑌤𑍍𑌰𑌾𑌨𑍍𑌸𑍍𑌮𑌰𑌂𑌸𑍍𑌤𑌾 𑌦𑍁𑌹𑌿𑌤𑍄𑌰𑍍𑌹𑍃𑌦𑌯𑍍𑌯𑌾
𑌭𑍍𑌰𑌾𑌤𑍄𑌨𑍍𑌸𑍍𑌵𑌸𑍄𑌰𑍍𑌵𑌾 𑌪𑌿𑌤𑌰𑍌 𑌚 𑌦𑍀𑌨𑍌 ।
𑌗𑍃𑌹𑌾𑌨𑍍𑌮𑌨𑍋𑌜𑍍𑌞𑍋𑌰𑍁𑌪𑌰𑌿𑌚𑍍𑌛𑌦𑌾𑌂𑌶𑍍𑌚
𑌵𑍃𑌤𑍍𑌤𑍀𑌶𑍍𑌚 𑌕𑍁𑌲𑍍𑌯𑌾𑌃 𑌪𑌶𑍁𑌭𑍃𑌤𑍍𑌯𑌵𑌰𑍍𑌗𑌾𑌨𑍍 ॥



𑌤𑍍𑌯𑌜𑍇𑌤 𑌕𑍋𑌶𑌸𑍍𑌕𑍃𑌦𑌿𑌵𑍇𑌹𑌮𑌾𑌨𑌃
𑌕𑌰𑍍𑌮𑌾𑌣𑌿 𑌲𑍋𑌭𑌾𑌦𑌵𑌿𑌤𑍃𑌪𑍍𑌤𑌕𑌾𑌮𑌃 ।
𑌕𑍁𑌟𑍁𑌮𑍍𑌬𑌪𑍋𑌷𑌾𑌯 𑌵𑌿𑌯𑌨𑍍𑌨𑌿𑌜𑌾𑌯𑍁𑌃
𑌨 𑌬𑍁𑌧𑍍𑌯𑌤𑍇𑌽𑌰𑍍𑌥𑌂 𑌵𑌿𑌹𑌤𑌂 𑌪𑍍𑌰𑌮𑌤𑍍𑌤𑌃 ।
𑌸𑌰𑍍𑌵𑌤𑍍𑌰 𑌤𑌾𑌪𑌤𑍍𑌰𑌯𑌦𑍁𑌃𑌖𑌿𑌤𑌾𑌤𑍍𑌮𑌾
𑌨𑌿𑌰𑍍𑌵𑌿𑌦𑍍𑌯𑌤𑍇 𑌨 𑌸𑍍𑌵𑌕𑍁𑌟𑍁𑌮𑍍𑌬𑌰𑌾𑌮𑌃 ॥
𑌵𑌿𑌤𑍍𑌤𑍇𑌷𑍁 𑌨𑌿𑌤𑍍𑌯𑌾𑌭𑌿𑌨𑌿𑌵𑌿𑌷𑍍𑌟𑌚𑍇𑌤𑌾
𑌵𑌿𑌦𑍍𑌵𑌾𑌂𑌶𑍍𑌚 𑌦𑍋𑌷𑌂 𑌪𑌰𑌵𑌿𑌤𑍍𑌤𑌹𑌰𑍍𑌤𑍁𑌃 ।
𑌪𑍍𑌰𑍇𑌤𑍍𑌯𑍇𑌹 𑌵𑌾𑌥𑌾𑌪𑍍𑌯𑌜𑌿𑌤𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌸𑍍𑌤
𑌦𑌶𑌾𑌨𑍍𑌤𑌕𑌾𑌮𑍋 𑌹𑌰𑌤𑍇 𑌕𑍁𑌟𑍁𑌮𑍍𑌬𑍀 ॥

* * * * * *

𑌤𑌤𑍋 𑌵𑌿𑌦𑍂𑌰𑌾𑌤𑍍𑌪𑌰𑌿𑌹𑍃𑌤𑍍𑌯 𑌦𑍈𑌤𑍍𑌯𑌾𑌃
𑌦𑍈𑌤𑍍𑌯𑍇𑌷𑍁 𑌸𑌂𑌗𑌂 𑌵𑌿𑌷𑌯𑌾𑌤𑍍𑌮𑌕𑍇𑌷𑍁 ।
𑌉𑌪𑍇𑌤 𑌨𑌾𑌰𑌾𑌯𑌣𑌮𑌾𑌦𑌿𑌦𑍇𑌵𑌂
𑌸 𑌮𑍁𑌕𑍍𑌤𑌸𑌂𑌗𑍈𑌰𑌿𑌷𑌿𑌤𑍋𑌽𑌪𑌵𑌰𑍍𑌗𑌃 ॥
𑌨 𑌹𑍍𑌯𑌚𑍍𑌯𑍁𑌤𑌂 𑌪𑍍𑌰𑍀𑌣𑌯𑌤𑍋 𑌬𑌹𑍍𑌵𑌾𑌯𑌾𑌸𑍋𑌽𑌸𑍁𑌰𑌾𑌤𑍍𑌮𑌜𑌾𑌃 ।
𑌆𑌤𑍍𑌮𑌤𑍍𑌵𑌾𑌤𑍍𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑌾𑌨𑌾𑌂 𑌸𑌿𑌦𑍍𑌧𑌤𑍍𑌵𑌾𑌦𑌿𑌹 𑌸𑌰𑍍𑌵𑌤𑌃 ॥

* * * * * *

𑌤𑌸𑍍𑌮𑌾𑌤𑍍𑌸𑌰𑍍𑌵𑍇𑌷𑍁 𑌭𑍂𑌤𑍇𑌷𑍁 𑌦𑌯𑌾𑌂 𑌕𑍁𑌰𑍁𑌤 𑌸𑍌𑌹𑍃𑌦𑌮𑍍 ।
𑌭𑌾𑌵𑌮𑌾𑌸𑍁𑌰𑌮𑍁𑌨𑍍𑌮𑍁𑌚𑍍𑌯 𑌯𑌯𑌾 𑌤𑍁𑌷𑍍𑌯𑌤𑍍𑌯𑌧𑍋𑌕𑍍𑌷𑌜𑌃 ॥

* * * * * *

𑌹𑌰𑌿𑌸𑍍𑌸𑌰𑍍𑌵𑍇𑌷𑍁 𑌭𑍂𑌤𑍇𑌷𑍁 𑌭𑌗𑌵𑌾𑌨𑌾𑌸𑍍𑌤 𑌈𑌶𑍍𑌵𑌰𑌃 ।
𑌇𑌤𑌿 𑌭𑍂𑌤𑌾𑌨𑌿 𑌮𑌨𑌸𑌾 𑌕𑌾𑌮𑍈𑌸𑍍𑌤𑍈𑌸𑍍𑌸𑌾𑌧𑍁 𑌮𑌾𑌨𑌯𑍇𑌤𑍍 ॥

* * * * * *

𑌨𑌿𑌶𑌮𑍍𑌯 𑌕𑌰𑍍𑌮𑌾𑌣𑌿 𑌗𑍁𑌣𑌾𑌨𑌤𑍁𑌲𑍍𑌯𑌾𑌨𑍍
𑌵𑍀𑌰𑍍𑌯𑌾𑌣𑌿 𑌲𑍀𑌲𑌾𑌤𑌨𑍁𑌭𑌿𑌃 𑌕𑍃𑌤𑌾𑌨𑌿 ।
𑌯𑌦𑌾𑌤𑌿𑌹𑌰𑍍𑌷𑍋𑌤𑍍𑌪𑍁𑌲𑌕𑌾𑌶𑍍𑌰𑍁𑌗𑌦𑍍𑌗𑌦𑌂
𑌪𑍍𑌰𑍋𑌤𑍍𑌕𑌣𑍍𑌠 𑌉𑌦𑍍𑌗𑌾𑌯𑌤𑌿 𑌰𑍌𑌤𑌿 𑌨𑍃𑌤𑍍𑌯𑌤𑌿 ॥

[illegible] 
[illegible] ।
[illegible] 
[illegible] ॥
[illegible] 
[illegible] ।
[illegible] 
[illegible] ॥
[illegible] ।
[illegible] ॥

*  *  *  *  *  *

[illegible] ।
[illegible] ॥

“மநுஷ்ய ஜந்மம் துர்லபம். அது தான் அர்த்தத்தைக் கொடுக்கத்தக்கது. அது கிடைத்தும் நிலைத்திருப்பதில்லை. ஆதலால் ஹேயம் இது, உபாதேயம் இது, என்று விபாகம் தெரிந்தவனாய், பகவத்ப்ராப்திக்கு அநுகூலமாயிருக்கும் தர்மங்களைப் பால்யகாலம் முதல் அநுஷ்டிக்க வேண்டும். * * * ஆனபடியால் ஸம்ஸாரத்தை யடைந்த விவேகியானவன் புருஷரூபமான ஶரீரமானது எதற்குள் நன்றாக விருக்கின்றதோ, விபத்தை யடையாமலிருக்கின்றதோ, அதற்குள் க்ஷேமத்தின் பொருட்டு யத்நப்பட வேண்டும். * * * ஜிதேந்த்ரியனில்லாத எவன் தான் தன் வீடென அபிமாநத்துடன் கூடினவனாய், அவிழ்க்கக் கூடாதபடி ஸ்நேஹமாகிற கயிற்றால் கட்டப்பட்ட தன்னை விடுவித்துக் கொள்ள ஸமர்த்தனாவன்? திருடர், ஸேவகர், வர்த்தகர் முதலானவர்கள் யாவர்க்கும் அத்யந்தம் ப்ரியமான ப்ராணனுக்கு ஹாநி நேரிட்டாலும் நேரிட்டும் என்று கொண்டு, எந்தப் பொருளை ஸம்பாதிக்கின்றனரோ, ப்ராணனைக் காட்டிலும் பெரிதாக நினைக்கப்பட்ட அத்தன்மைய பொருளாசையை எவன் விடுவன்? தன் கருணைக்கு மிகவும் பாத்ரையான பத்நியுடன் ரஹஸ்-



யத்தில் சேர்வதையும், அவள் தன் மனம் களிக்கும்படிச் சொல்லும் ஹித வசனம் போன்ற மந்த்ரங்களையும் ஸ்மரித்துக் கொண்டு, மனைவி மக்கள் ஸுஹ்ருத்துக்கள் முதலானவர்கள் ஸ்நேஹத்தால் கட்டப்பட்டு, குழந்தைகளின் அவ்யக்த மதுரமான மழலைச் சொற்களில் ஸந்தோஷப்படும் சித்த முடையவனாய்க் கொண்டு, புத்ரர்களையும், மிகவும் ஹ்ருதயப்ரியரும் புருஷன் வீட்டிலிருப்பவருமான பெண்களையும், ஸஹோதரர்களையும், ஸஹோதரிகளையும், வ்ருத்தர்களான மாதாபிதாக்களையும், ப்ரியமான பஹுபோக ஸாதநங்களுடன் கூடிய வீடுகளையும், பரம்பராகதமான வ்ருத்தியையும், பசுக்கள், ப்ருத்யர்கள் முதலானவர்களையும் நினைத்துக்கொண்டு, ஒருவிதப் பட்டுப்பூச்சி போன்ற புழுவானது தனக்கு வீடு கட்டிக்கொள்கையில் வெளிப்பட த்வாரமில்லாமல் செய்துகொள்வதென, கர்மங்களைச் செய்துகொண்டு போராசையால் போகாநுபவம் செய்து த்ருப்தியற்றவன் எவ்விதம் இவற்றை விடுவன்? குடும்ப போஷணத்தில் கழிந்து போகும் தன் ஆயுஸ்ஸையும் புருஷார்த்தம் கைதவறிப் போவதையும், மூடன் அறிகின்றானில்லை. எப்போதும் தாபத்ரயங்களால் துக்கத்தை யடையும் சித்தத்துடன் கூடினவனாய்த் தன் குடும்பத்தினிடமே ஸதா ரதனாய்க் கொண்டு தானிருக்கும் நிலைமையைப் பற்றி வ்யஸநிக்கின்றானில்லை. மேலும் இந்தக் குடும்பியானவன் பல காரணங்களையிட்டுப் பொருள் சேர்ப்பதில் எப்போதும் மனத்தைச் செலுத்தினவனாய், பரன் தநத்தைத் தான் அபஹரிப்பதால் லோகாந்தரத்திலும் இவ்வுலகத்திலும் உண்டாகும் தண்டனை ரூபமான தோஷங்களை நன்றாக அறிந்தானாயினும், இந்த்ரியங்களை ஜயிக்கவும், ஆசையை அடக்கவும் திறனற்றவனாய், பரத்ரவ்யங்களையும் அபஹரிக்கின்றான்”.

*  *  *  *  *  *

“ஆதலால், தைத்யகுமாரர்களே! ஸதா விஷயாஸக்த மனத்துடன் கூடிய தைத்யர்களுடைய ஸம்ஸர்க்கத்தைச் சீக்கிரம் பரிஹரித்துவிட்டு ஜகத் காரணனான நாராயணனைச் சரணமடைவீர்கள். அவர் தான் பரமபுருஷார்த்தமான மோக்ஷ ஸ்வரூபி. அபேக்ஷிக்கப்பட்டவர். அவர் தான் பரமபுருஷார்த்தமான மோக்ஷ ஸ்வரூபி.

என்று அதனாலல்லவோ அவனுக்கு அச்யுதனெனப் பெயர் வாய்ந்தது. அவனை ஆச்ரயிப்பது ஸுலபம்; ஏனென்றால், எல்லா ப்ராணிகளுக்குள்ளும் அவன் அந்தராத்மாவாக இருக்கின்றான்; இங்கே எங்குமவனிருக்கின்றான்".

*　　*　　*　　*　　*　　*

"அந்தக் காரணத்தாலே, ஸ்வதேஹத்தையே ஆத்மாவாக அபிமானித்து அதற்கே அநுகூலத்தைச் செய்யும் அஸுரர்கள் குணத்தை விட்டு, எல்லா ப்ராணிகளிடமும் தயையையும் ஸ்நேஹத்தையும் செய்யுங்கள். இப்படிப்பட்ட செயலால் பகவான் ஸந்தோஷிக்கின்றான்".

*　　*　　*　　*　　*　　*

"ஸர்வேச்வரனான ஹரியானவர் எல்லா ப்ராணிகளிடமும் இருக்கின்றார். இந்த விச்வாஸத்தையிட்டு ஸர்வப்ராணிகளுக்கும் அவ்வவற்றிற்கு இஷ்டமான காமங்களை நன்றாகத் தந்து பஹுமானியுங்கள்."

*　　*　　*　　*　　*　　*

"பகவானுடைய அஸாதாரணமான கல்யாண குணங்களையும், ஸ்வலீலையே வ்யாஜமாக வைத்துக்கொண்டு அவதாரங்கள் எடுத்துச்செய்த கர்மங்களையும், வீர்ய ப்ரகடமான சேஷ்டிதங்களையும் கேட்டு, அதிக ஆநந்தம் ஜநித்துப் புளகாங்கிதனாகி, ஆநந்த பாஷ்பம் பெருக, வாய் தழதழத்து உரக்க எப்போது பாடுகின்றானோ, கூவுகின்றானோ, ஆடுகின்றானோ, எப்போது பேய் பிடித்தவன்போல் சிரிக்கின்றானோ, அழுகின்றானோ, த்யாநம் செய்கின்றானோ, பகவதாத்மகமாக நினைத்து ஜநங்களை வணங்குகின்றானோ, லஜ்ஜையற்றுத் தந்தேகமநஸ்கனாய், அடிக்கடிப் பெருமூச்சுவிட்டுக்கொண்டு, ஹரே! ஜகத்பதே! நாராயணா! என்று சொல்லுகின்றானோ,. அப்போது தான் புருஷனானவன், புண்ய பாப ரூபமான ஸமஸ்த கர்மபந்தங்களினின்றும் விடப்பட்டவனாய்க்கொண்டு, பகவானுடைய திவ்ய மங்கள விக்ரஹ த்யாநத்தால் அவனைப்போல் நடிக்கும் மனத்துடனும் சரீரத்துடனும் கூடினவனாய்க்கொண்டு, ஸம்ஸார மூலமாயிருக்கும் அஜ்ஞாநத்தின் வாஸனையை நன்றாகக் கொளுத்தி விட்டு, ஸர்வோத்தமமான பக்தியின் ப்ரவாஹத்தில் நீந்திக்கொண்டு பகவானை யடைகின்றான்."



"ஆதலால், ஓ தாநவர்களே! பகவானையும், ஈச்வரனையும், ஸர்வ பூதங்களினிடமும் அந்தராத்மாவாகவும் இருக்கின்ற ஹரியினிடம் பக்தி செய்யுங்கள். அவனுக்கு சரீரபூதரான எல்லா ப்ராணிகளிடமும் உம்மைப் போல் விச்வஸியுங்கள்."

"இவ்வுலகில் புருஷனுக்குப் பரமமான புருஷார்த்தம் இவ்வளவே: கோவிந்தனிடம் ஏகாந்த பக்தியும், அதாவது இதர பற்றுக்களை வேரறுத்துத் தன்னிடம் உள்ள எல்லா ப்ரேமையையும் அவனிடமே செய்தலும், யாவற்றினிடமும் அவனைத் தர்சித்தலுமே."

*　　*　　*　　*　　*　　*

இப்படிப்பட்ட ஸர்வோத்தமமான உபதேசத்தைப் பற்றிச் சற்று விசாரிப்போம். ப்ரஹ்லாதன் பால சரீர விசிஷ்டன் என்றெண்ண ஒண்ணாது. அவன் ஸம்யக்தர்சநத்தை ஜந்மாந்தரங்களிலும், கர்ப்பவாஸ காலத்தில் நாரதருடைய அநுக்ரஹத்தாலும் அடைந்தவனாதலால், சரீரப்ரயுக்தமாக வரும் ராகத்வேஷாதி தோஷங்கள் அவனை முற்றிலும் ஆச்ரயிக்கவில்லை.

*　　*　　*　　*　　*　　*

அந்யச் ச்ரேய: அந்யது உதைவ ப்ரேய: என்று உபநிஷத் மொழிந்தவண்ணம், சரீரவிலக்ஷணனான ஜீவனுக்கு ஸ்வரூபாபத்தி ரூபமான புருஷார்த்தம் வேறு தான். சரீராபிமானியாய் அவித்யைக்குள் உழல்கின்ற புருஷன் அஹங்கார மமகாரமடியாக, ப்ரியமெனக் கொள்ளும் விஷயேச்சை வேறு தான். இவ்விரண்டும் ஓரிடத்தில் கலக்கமாட்டா. ஒன்றைத் தேடுவோன் மற்றொன்றை ஒருவிதத்தாலும் ஸாதிக்கமாட்டான். ப்ரேயோ மந்தோ யோகக்ஷேமாத் வ்ருணீதே என்று உபநிஷத் சொல்லிற்று. சரீரத்துக்கும் தத்ஸம்பந்திகளுக்கும் உதவும் பொருள் சேர்த்தல் யோகமென்றும், சேர்த்ததைக் காத்தல் க்ஷேமமென்றும் சொல்லப்படும். இவற்றின் பொருட்டுப் போகஸாதநமாய் இஷ்டமானவற்றை மந்த மதியுடையவன் அபேக்ஷிக்கின்றான். நசிகேதஸ்ஸைப் பார்த்து ஆசார்யனான தர்மராஜன், ஸத்வம் ப்ரியாந் ப்ரியரூபாம்ச்ச காமாந் அபித்யாயந் நசிகேதோ

ஸ்ராக்ஷீ:, என்றுரைத்தார். அதாவது இச்சா விஷயங்களையும், ப்ரிய ரூபமான ஸ்த்ரீ முதலானவற்றையும் தர்மராஜன் கொடுக்க ஸித்தமாயிருந்தும் வேண்டாமென த்யாகம் செய்தாரெனச் சொன்னார். அதனாலன்றோ நசிகேதஸ் ப்ரஹ்ம வித்யோபதேசத்துக்குத் தகுந்தவரானார்.

இவற்றை நம் முன்னோர்தாம் முறை யிடுகின்றனரென எண்ணவேண்டாம். விஷயேச்சையைப் பெருக்கி விஷய ஸம்பாதநத்தில் மிக்க ஸமர்த்தராகி, உலகத்தையும் உலகத்தவரையும் தம் வயமாக்கி யாள்கின்ற ஐரோப்பிய நாட்டாரனைவர்க்கும் ஆசார்யரான கிறிஸ்துவும் இப்படியே விடாமல் முறையிட்டனர்.

ஆகவே, விஷயாஸக்தருக்குப் பகவத் க்ருபை கிடைக்காதென்றான் ப்ரஹ்லாதன். ஸம்ஸாரத்தை விட்டாலன்றி ஸர்வேச்வரன் கிடைக்கான். அதில் அகப்படாமலிருக்கப் பால்யத்திலேயே முயலவேண்டு மென்றான். பகவத் பக்திக்குப் பாலரும் அதிகாரிகள். யௌவநமடைந்து குடும்பியாய்ப் போந்தானாயில், அதனாலுண்டாகும் பற்றுக்களைப் பின்னால் அறுப்பது துஸ்ஸாத்யமென்று காட்டினான். விஷயஸுகம் துச்சமென்றும், சரீர தத்வம் தெரிந்தால் அதைப் புத்திமான் அபிமானிக்க மாட்டான் எனவுங் காட்டினான். மனிதனுக்கு ப்ரவ்ருத்தி லக்ஷணமான தர்மங்களை விலக்குதல் கஷ்ட மென்றாலோ, அவற்றையும் பகவத் ப்ராப்திக்கு அநுகூலமாகும்படி அநுஷ்டிக்கச் சொன்னான். ஸர்வத்ர பகவான் இருக்கின்றான் எனும் விச்வாஸத்தை வ்ருத்தி செய்து ராகத்வேஷாதிகளை நிவர்த்திக்கச் சொன்னான். உலகங்கும் துக்காநுபவமே பெருகிநிற்க, த்வேஷத்தை விலக்கி எல்லா ப்ராணிகளிடமும் கருணையையும் ஸ்நேஹத்தையும் பாராட்டச் சொன்னான். பிறர் ஸுகிக்கக்கண்டு மகிழச் சொன்னான். பிறர் த்வேஷித்தால், அஜ்ஞாநத்தால் அவ்விதம் செய்கின்றாராதலால் அவர்க்காக சோகிக்கச் சொன்னான்.

கர்மகாண்டங்களில் வெளியிட்டபடி, பலர் ஒருமிக்க ப்ரயாஸப்பட்டுப் பஹு த்ரவ்ய வ்ரயத்தால் ஸாதிக்கக் கூடியவையான யாகாதிகளால் தேவதைகளை த்ருப்தி செய்து அல்பமானதும் அஸ்திரமானதுமான பயங்களை அடைவதொத்து, பகவானை வழி



படுவதில் யாதொரு கஷ்டமுமில்லையெனக் காட்டுகின்றான். பகவானை வழிபடுதலால் உண்டாகும் பலம் அநந்தமாயும் ஸ்திரமாகவு மிருக்கின்றதெனக் காட்டுகின்றான். எங்கு மிருக்கப்பட்டவனை நம் ஹ்ருதயத்துக்குள்ளே உபாஸிக்கலாம். பார்க்குமிடமெங்கும் நிறைந்தவனை எந்தவிடத்திலும் தர்சிக்கலாம். ப்ரஹ்லாதன் சொன்னபடி, நாஹம் த்விஜத்வம் தேவத்வம் ருஷித்வம் வாஸுராத்மஜா: । ப்ரீணநாய முகுந்தஸ்ய ந வ்ருத்தம் ந பஹுஜ்ஞதா ॥ ந தாநம் ந தபோ நேஜ்யா ந சௌசம் ந வ்ரதாநி ச । ப்ரீயதே(அ)மலயா பக்த்யா ஹரிரந்யத் விடம்பநம் ॥ இதர காலங்களில் ப்ரயோஜநவத்தாகக் காணப்படுகிற உயர்ந்த வர்ணத்தில் ஜநநம், பிறப்புகளில் உயர்ந்தவராகிய தேவராயிருத்தல், இந்த்ரியங்களை அதிக்ரமித்து தர்சநசீலரான ருஷியாக விருத்தல், பரம்பரையாக வந்த நல்லொழுக்கம், சாஸ்த்ர விமர்சையால் ஸம்பாதித்த ஜ்ஞாத்ருத்வம், மிக்க தாநம் செயல், காயக்லேசாதிகள், யாகங்கள் செய்து முடித்தல், ஸ்நாநாதிகளால் ஏற்படும் சுசித்வம், ப்ராஜாபத்யாதி வ்ருதங்களை யநுஷ்டித்தல், இவை யாவும் முகுந்தனுடைய ப்ரீதியை அடைவதற்கு உபயோகமாகமாட்டா. இவை யெல்லாம் அந்த விஷயத்தில் வேஷமாக முடியும். அவனைத் தவிர மற்ற யாவத் ப்ரயோஜநங்களையும் தவிர்த்து அவனிடம் செய்யும் பக்தியொன்றினால் மாத்ரம் அவன் ப்ரீதியை யடையக்கூடுமாதலால் ஹரி பக்திக்கு யாவரும் அதிகாரிகள். அதைப் பண்ணுவதில் கஷ்டமொன்று மில்லையென்று ப்ரஹ்லாதன் காட்டினான். அந்த பக்தியானது, ஸர்வப்ராணிகளிடமும் அவனைத் தர்சித்து, அவரிடம் அவன் வஸிக்கின்றான் எனும் விச்வாஸத்தால், ஸர்வத்ர ஹிதப்ரவ்ருத்தியை அநுஷ்டிக்கும்பர்யந்தமாகப் பண்ணத்தக்கது. இப்படிச் செய்வதால் ஆராதிக்கப்பட்டவன் அநந்தனே. அவனை ஆச்ரயித்தவர் காம்ய பலங்களை யவனிடம் முற்றிலும் அபேக்ஷிக்கக்கூடாது. ஆச்ரயிக்கும்போது, தமது ஆத்மரக்ஷாபரம் உடபட, ஸர்வ யோகக்ஷேமத்தையும் அவன்பரம் ஆக்கிவிட்டாராதலால் மோக்ஷமும் அபேக்ஷிக்காமலே வருமென்று ப்ரஹ்லாதன் ஸ்வோபதேசத்தை முடித்தான்.

தி. த. ர.

# வர்த்தமாநங்கள்.

—oo:o:oo—

ஸ்ரீமான் உ. வே. வங்கீபுரம் ராகவாசார்யர் நாளது புரட்டாசிமீ கoவ சனிக்கிழமை பரமபத மடைந்தார். அ-ம்-வ வியாழக்கிழமை அவர் நமக்கெழுதின கடிதம் இன்னும் நம்முன் இருக்கின்றது. அன்றைய தினமும் அந்த ஸ்வாமி தமது லௌகிக ஸ்தாநத்தில் இருந்துகொண்டு ஸ்வவ்ருத்திக்குரிய கார்யங்களைச் செய்தனர். அன்று ஸாயங்காலம் அவர் வஸதி நோக்கித் திரும்புங்கால் நாற்பத்தைந்து மணிக்குள்ளாகத் தாம் ஶரீரத்யாகம் செய்யவேண்டியதென ஸ்மரித்திலரன்றே? மஹா ஸத்வோத்தரரும் ஸாதுவுமாயிருந்த பிதாவைப் பெற்று ஸ்வயம் ஸத்வோத்தரராகவும் ஸாதுவுமாக விருந்தார். உத்தம பாகவதருக்குப் புத்ரனாக ஜநித்து ஸ்வயம் பகவத்பக்தியின் அவதாரமென விளங்கினார். பரஹிதத்தின்பொருட்டு ஸ்வார்த்தவ்ரயம் செய்துகொண்டு ஸர்வதா ப்ரவ்ருத்தரான ஹானரபில் விஜயராகவாசார்யர் ஸ்வாமியை மாதுலராய் அடைந்து, தாமும் தமக்கியன்றவளவில் பரஹிதே ப்ரவ்ருத்தராய்க் காலத்தைச் செலுத்தினார். இந்த ஸ்வாமி நாற்பத்திரண்டு ஸம்வத்ஸரம் இக்தக் கர்மபூமியில் வஸித்தனர். இதற்குள், அவரது ஜ்ஞாநம், பக்தி ஆசாரம், க்ஷமை, ஶாந்தி முதலான கல்யாணகுணங்களால் அவருடைய பரிசயம் கிடைத்தவர்களுடைய சித்தங்களை அந்த ஸ்வாமி அபஹரித்தனர்.

ஆகார ஸத்ருஶப்ரஜ்ஞ: ப்ரஜ்ஞயா ஸத்ருஶாகம: ।
ஆகமை: ஸத்ருஶாரம்ப: ஆரம்ப ஸத்ருஶோதய: ॥

எனும் காளிதாஸவசநம் அந்த ஸ்வாமிக்குப் பொருந்தி நின்றது. மஹாதேசிகன் எனும் சப்தம் அர்த்தவத்தாய் அமைந்துநின்ற ஸ்ரீசடகோபராமாநுஜ யதீந்த்ர மஹாதேசிகனுடைய திவ்ய கடாக்ஷமானது அந்த மஹாதேசிகனால் அநுக்ரஹிக்கப்பட்ட ஆஸ்தாநம் யதாவத்தாய் இருக்கவில்லை எனும் ஶோகத்தை ராகவாசார்யர் மநஸ்ஸில் ஜநிப்பித்தது. அதனால் அவ்வண்ணம் சிந்தித்த இதர ஸ்வாமிகளுடன் சேர்ந்து ராகவாசார்யரும் அந்த ஆஸ்தாநம் அபிஜாதர்களாகவும், ஜ்ஞாதாக்களாகவும், ஸதர்த்திகளாகவும், ஸத்ருலேஷவஸக்தர்களாகவும், ஸ்வாஶ்ரமோசித அநுஷ்டாநபரர்களாகவும், பரஹிதேரதர்களாகவும் த்வந்த்வமோஹ நிவ்ருத்தர்களாகவும், ஈஷணாத்ரய விநிர்முக்தர்களாகவும், ஶாந்தர்களாகவும், நிரஹங்காரிகளாகவும், இருக்கப்பட்ட ஸ்வாமிகளால் நியமேந அலங்கரிக்கப்பட வேண்டுமென்று ப்ரயத்நபரராகி, நமது ஸபையும் இந்த பத்ரிகையும் உண்டாகக் காரணமாக நின்றனர். ஆரம்ப ஶூரத்வம் நம் தேசத்தினர்க்கு ஓர் பிருது. அப்படிக்கின்றி, ஸபையின் விஷயமாகவும், நீபி



கையின் விஷயமாகவும், அந்த ஸ்வாமி மெய்வருத்தம் பார்த்திலர்; பசி நோக்கியிலர்; கண்துஞ்சியிலர்; கருமமே கண்ணாய் இருந்து தன் பொருளையும் வ்ரயம் செய்தனர்; கஷ்டங்கள் வரில் மனம் தளராமல், உத்ஸாகத்துடன் அவற்றைக் கடந்தனர். இந்த ஸபையினிடம் அவர்க்கிருந்த விஶ்வாஸம் ஸபையினரெல்லோர்க்கும் அவரிடம் மிகுந்த ஸ்நேஹத்தை விளைவித்தது. 1912 - 13 - வது வருஷங்களில் உத்யோக நிமித்தமாக அந்த நாட்டில் ஸஞ்சரித்தபோது, ஸ்ரீமதஹோபிலத் தெம்பெருமானைத் தர்ஶித்து, அதனால் தாமடைந்த ஆநந்தத்தைத் தமது ஸுஹ்ருத்துக்களுமடைய வேண்டுமென்று கருதிய அந்த ஸ்வாமியினுடைய முக்ய ப்ரயத்நத்தாலன்றோ சென்ற ஸம்வத்ஸர ஸங்கம் அந்தத் திவ்ய தேசத்தில் கூடியது? குற்றங்களும் குறைகளும் கொஞ்சமுமின்றி, குணங்களெல்லாம் கூடி விளையாட ஓர் ஆஶ்ரயமெனவிருந்த நமது நண்பர், தமது பிதாவெனக் கர்மபூமிவாஸத்தைக் குறுக்கிச்சென்றனர். இவரது மரணத்தைப்பற்றி நமக்குள் யார் தான் ஶோகிக்காம லிருக்கக் கூடும்? ‘ததா ஶரீராணி விஹாய ஜீர்ணாந்யந்யாநி ஸம்யாதி நவாநி தேஹீ’ என்றுரைத்த ஶரண்யன் செயலைப்பற்றித் துக்கித்தல் பயன்படுமோ? ‘கௌந்தேய ப்ரதிஜாநீஹி ந மே பக்த: ப்ரணஶ்யதி’ என்றருளிச் செய்தவன் தனது பக்தனைத் தன்னிடம் வரவழைத்துக்கொண்டான். யாவராலும் விரும்பத்தக்க குணங்களையுடைய நம்மித்ரர், பகவானால் விரும்பப் பட்டாராகில் யாம் அதற்காக நீண்டு வருந்தலாமோ? கலௌ க்ருதயுகம் கலிகோலாஹல க்ரீடையில் ரத யுகத்தை அநுஷ்டித்த நமது மித்ரரைக் கலிகோலாஹல க்ரீடையில் இவர் தகார் என்று திருவுள்ளம் பற்றினை எம்பெருமான், இக்காலத்திற்கு இவர் தகார் என்று திருவுள்ளம் பற்றித் தன்னிடம் அழைத்துக்கொண்டானோ! அஹோபிலத் தெம்பெருமான் திருக் கோவிலடைந்த தைர்யதையை நிவர்த்திக்கக் கருதி, நீண்ட முயற்சி செய்த தன்னடியானை, “நீ யெண்ணியதே போதும், இதற்கே நான் என்னை உனக்குத் தருகின்றேன். இன்னும் நீ எண்ணியதை முடித்தாயாகில் உனக்கு நான்செய்யும் கைம்மாறு ஒன்றுமில்லை. ஆதலால் க்ருதக்ருத்யனாய் நம்மிடம் வந்திடுவாய்” என்று தான் அழைத்துக்கொண்டானோ; நாமறிந்தோமில்லை.

பதியை இழந்த பத்னிக்கும், பிதாவை இழந்த குழந்தைக்கும், மற்ற அவருடைய ப்ரிய பந்துக்களுக்கும் நாம் என்ன உபசார வார்த்தைகள் சொல்லக்கூடும்? பகு பெயரால் துக்கிக்கப்பட அவர் ஶரீர த்யாகம் செய்தனர். பகவத் ஸங்கல்பம் அவ்வண்ண மிருந்தது. அவரது குணங்கள் அவர் இஷ்டர்களிடம் ஆவிர்ப்பவித்தால் அவர் வ்யர்த்தமாக இவ்வுலகின்கண் ஜீவித்திருந்தாரென்று எண்ணவேண்டியிராது.

## யுத்தம்.

ஐரோப்பா கண்டத்தில் யுத்தம் நடந்துகொண்டிருக்கின்றது. யுத்தத்தில் கலந்த ஒவ்வொரு தேசத்தினரும் உத்ஸாஹத்துடன் ப்ரவர்த்திக்கின்றனர். சண்டைக்குச் சென்ற வீரர்கள், தமது இனிய பந்துக்களினிடம் விடைபெறவும் அவகாசமற்றுச் சென்றனர். சென்றவர் ஒவ்வொருவர் பொருட்டும் துக்கிக்கின்ற தாய்தந்தையரோ, உடன்பிறந்தவரோ, இவர்க்கும் ப்ரியமான நாயகிகளோ, இளங் குழந்தைகளோ, ஸங்க்யைக்கு அகப்படார். நாற்பது லக்ஷம் வீரர்கள் பாரத யுத்தத்தில் சேர்ந்தனர். கோடி வீரர்கள் ப்ரக்ருத யுத்தத்தில் க்ரமேண சேர்வரெனத் தெரிகின்றது. இது பர்யந்தம் லோகம் இத்தகைய யுத்தத்தைக் கண்டதில்லை. இதற்குக் காரணம் முக்யமாக ஜெர்மானிய ராஜாங்கத்தாரும், அவர் சக்ரவர்த்தியுமென்று ஏற்படுகின்றது. சண்டைக்குப் போனவருள் திரும்பாமல் மடிகின்றவரைக் கணக்கிடக் கூடுமோ? உலகத்தில் வர்த்தகம் கெட்டது. ஒவ்வொரு தேசத்தினரும் ஸங்க்யாதீதமாக த்ரவ்யத்தை இழப்பார்கள். எல்லாவற்றையும் தமது படைத்தொகையின் ஆதிக்யத்தால் ஜயித்து விடலாம் என்று ஆரம்பித்த ஜெர்மானியர் வேகம் தடைபட்டதெனத் தெரிகின்றது. இனிப் பரர்களை ஆக்ரமிப்பதை விட்டு, ஸ்வரக்ஷணத்தில் அவர் கவனிக்கவேண்டிய காலம் கிட்டியது. நாகரிகத்தில் மிக்கச் சிறந்தவரென்றும், வித்யையில் விசேஷித்தவரென்றும் க்யாதி யடைந்த ஜெர்மானியர், முற்காலம் ஜெங்கிஸ்கான் என்றும், டைமூர் என்றும் பெயர் பெற்று, உலகத்தையும் அதில் வஸித்தவரையும் அழித்தவர்க்குள் முதல் தாம்பூலமடைந்தவரை யொக்க, நிரபராதியாய் நின்று, ஸ்வரக்ஷண நிமித்தம் சண்டையிட்ட பெல்ஜியர் நாட்டை நாசம் செய்துவிட்டனரே! நிராயுத பாணிகளான பலரைக் கொன்றுவிட்டு அவர் ஊர்களையும் அழித்தனரே! ஸாது பரித்ராணத்தையும் துஷ்டருடைய நிக்ரஹத்தையும் ஸ்வவ்யாபாரமாகக் கொண்ட பகவான் தர்மத்துக்குப் பரிபவம் வராமல் காப்பாற்றுவாரென நாம் ப்ரார்த்திக்கின்றோம்.

---

16437
OFFICE OF THE REGISTRAR OF ... 18 DEC 1914 ... MADRAS.

ஸ்ரீ:.

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:.

# வேதாந்த தீபிகை

பத்ராதிபர்:—திவான் பகதூர் டி. டி. ரங்காசார்யர், பி.ஏ., பி.எல்.

ஸம்புடம் 4.] ஆநந்தவருஷ ஐப்பசிமீ [ஸஞ்சிகை 9.

## பத்ராதிபரின் குறிப்புகள்.

த்ரிஜகதாம் ... விஜயஸவெ ... [ஸ்ரீ பாகவதம் 1-9-33.]

**ஐரோப்பியரின் மேன்மை.** பதார்த்த ஸ்வரூப விசாரம் பஸ்சிம தேசங்களில் சென்ற இரண்டு நூற்றாண்டுகளில் மிகவும் வ்ருத்தி யடைந்தது. அங்கே பஹு புத்திமந்தர்கள் அநேக வஸ்துக்களின் சேர்க்கையாலாகின்ற, வாயு, ஜலம் முதலான ஸர்வத்தையும் பகுத்துத் தனிவஸ்துக்களை யெல்லாம் இஷ்டப்படிப் பிரிக்கவும் சேர்க்கவும் ஸமர்த்தர்களானார்கள். நீரை ஆவியாக்கி, ஆவியைக்கொண்டு பல யந்த்ரங்களை, லோகோபகாரமாக நடப்பிக்கின்றனர். யந்த்ரங்களின் ஸஹாயத்தால் பூமியிலும் ஸமுத்ரங்களிலும் தூரங்கள் குறுகிப்போயின. கைத்தொழிலால் உண்டுபண்ணப்பட்ட வஸ்துக்களனைத்தும் யந்த்ர ஸஹாயத்தைக் கொண்டு ஆயிரக்கணக்கில் அதிசீக்ரமாக உண்டுபண்ணப்படுகின்றன. இவை, கைத்தொழிலால் உண்டானவற்றைக் காட்டிலும் நயமாகவும் நாகரிகமாகவும் உண்டுபண்ணப்பட்டு, உலகமெங்கும்

பரவிக் கைத்தொழில்களைக் கொன்றன. யுத்தப்ரயோஜநமாகும் ஶஸ்த்ரங்கள், வருஷந்தோறும் நவம்நவமாகவும், கொல்லும் சக்தியில் மேன்மேலும் விஸ்தரிப்பவையாகவும் உண்டுபண்ணப் பட்டன. சேர்க்கையின்றி மனிதர் தனித்தனியே வ்யாபாரவான்களானால் பலம் பெருகாதென வறிந்து, மிக்க மனிதர் ஒன்றுகூடி, அவரவர் பொருளையுங் கூட்டி ப்ரவர்த்தித்து, வ்யாபாரச் சரக்குகளை மிகுதியாய் உண்டாக்கி, மிக்க லாபம் அடைகின்றனர். மஹாநகரங்களை ஒரு நாழிகைக்குள் அழிக்கக் கூடிய பீரங்கிகளும், அவை யடங்கிய கப்பல்களும் பெருகின. ஆகாயத்தில் வேடிக்கையாக விஹாரம் செய்ய, ஆகாயக் கப்பல்கள் உண்டாக்கப்பட்டு, தத்காலம் அவற்றைச் சண்டைகளுக்கு ஸஹாயமாக வ்ருத்தி செய்தார்கள். தேசாபிமாநம் என்னும் கயிற்றால் ஒவ்வொரு தேசத்திய ஜநங்களும் கட்டப்பட்டவராய்க் கொண்டு, ஒவ்வொரு தேசத்தினரும் அந்ய தேசத்தினரை ஆக்ரமிக்கவோ, அந்யதேசத்தார் தம்மை ஆக்ரமிக்காமல் இருக்கவோ, ஸதா யத்நபரர்களாக இருந்தனர்.

ஒருவரை ஒருவர் மிஞ்சவேண்டுமென எண்ணங்கொண்டு தேசாந்தரம் சென்றனர். அவ்விடம் வர்த்தகத்துக்கென்று சென்று சில விடங்களில் அரசும் கொண்டு ஊர்ஜிதப் பட்டனர். பொருள் தேடும் பல்வழியிலும் புகுந்தனர். அரசும் செல்வமும் ஐரோப்பியர்க்கென்றே அமைந்தன. அமெரிக்கா, ஆஸ்ட்ரேலியா கண்டங்கள் ஐரோப்பியரால் குடிகொள்ளப் பட்டன. ஆபிரிக்கா கண்டம் அவர்க்குள் பங்கிடப் பட்டது. ஆசியா கண்டமும் பாதிக்கு மேல் அவர்க்குள்ளாயது.

* * * * * *

**அதைக் கண்ணுற்ற நம்மவருள் சிலர் யோசனை.**

இவ்வண்ணம் ஆண்மையும், அரசும், அவனியாள் பெற்றியும், கேண்மையும், புகழும், கேடிலாச் செல்வமும், கல்வியும், கலையும், கற்றவர் ஈட்டமும், செல்வழி யனைத்தும் சிறப்புறு மேன்மையும், பாடலும், ஆடலும், பல வகைப் பேசலும், கூடியே உண்ணலும், குமுதமு முறுவலும், அறுசுவை யுண்டியும், அன்பெழும் பானமும், நறுமலர் சூட்டமும், நாரியர் நாட்டமும், ஆடைகள் சிறப்பும், அணிமிகுந்



தொளிர்தலும், நாடிய பொருளை நணியுறுந் தெளிவும், எண்ணிய யாவும் எய்திடு மூக்கமும், புண்ணியப் பயனைப் பொருந்திடு மாண்பும், ஐரோப்பியர்க்குள் இருப்பதை நம்மவர் கண்டு,

'𑌸𑍍𑌵𑌲𑍍𑌪𑍀𑌭𑍂𑌤𑍇 𑌸𑍁𑌚𑌰𑌿𑌤𑍇 𑌸𑍍𑌵𑌰𑍍𑌗𑌿𑌣𑌾𑌂 𑌗𑌾𑌂 𑌗𑌤𑌾𑌨𑌾𑌂,
𑌶𑍇𑌷𑍈𑌃 𑌪𑍁𑌣𑍍𑌯𑍈𑌰𑍍𑌹𑍃𑌤𑌮𑌿𑌵 𑌦𑌿𑌵𑌃 𑌕𑌾𑌨𑍍𑌤𑌿𑌮𑌤𑍍𑌖𑌣𑍍𑌡𑌮𑍇𑌕𑌮𑍍,'

என்று மஹாகவி காளிதாஸன் உரைத்த வண்ணம், முன் ஸ்வர்க்க வாஸிகளா யிருந்து புண்யம் குறைந்து, இந்தக் கர்மபூமிக்கு வந்தவர் நிமித்தம், அவரிடம் மிகுதியாய் நின்ற புண்யத்தின் பலனாக ஸ்வர்க்கத்தினின்று தேஜோ விஶிஷ்டமான ஒரு பாகம் இவ்விடம் கொண்டுவரப் பட்டதுபோல், ஐரோப்பா கண்டம் இருப்பதையும் பார்த்து, அவ்விடம் இருக்கும் செல்வமும், சிறப்பும், கல்வியும், முயற்சியும், நமது தேசத்தினிடம் இலை யென நொந்து, இதற்குக் காரணம் நமது பூர்வ ஸ்திதியென நினைத்து, அதை நிவர்த்திக்க, ஐரோப்பியர்போல் ஜாதியை யொழித்தும், ஒருவர்க் கொருவர் ஸம்பந்தம் செய்து கொள்வதற்கும் யாவரும் ஒருமிக்க போஜநம் செய்வதற்கும் தத்காலம் நிற்கின்ற ப்ரதிபந்தங்களைப் போக்கியும், சாப்பிடும் பதார்த்தங்களில் ஸங்கேதமடியாகக் கொண்டாடப்படுகிற குண தோஷ ரூபமான நம்பிக்கைகளைத் தாக்கியும், விவாஹ விஷயத்தைப் பற்றி ஸ்த்ரீ புருஷர் அனைவர்க்கும் கால நியம மின்றி அது இச்சா விஷயமாக முடிவுற வேண்டியும், வர்ணாஶ்ரம தர்மங்களை யழித்தும், புதிய ஏற்பாடுகளை யுண்டாக்க முயல்கின்றனர். இவற்றால் தேசத்தின் ஒற்றுமை வளருமென்பர். யாவரும் கல்வி கற்கலாமென்பர். யாவரும் முயற்சியால் சிறக்கலாமென்பர். யாவரும் பொருள் மிகச் சேர்க்கலாமென்பர். யாவரும் ஆரோக்யத்தையும், சரீர தார்ட்யத்தையும், ஸுகத்தையும் அடையலாம் என்பர். நமது தேசமே நமது பக்திக்கு விஷயமாக வேண்டுமென்பர். யாவரும் பொது நன்மைக்குப் பாடுபட வேண்டுமென்பர்.

* * * * * *

**அதன் தத்வம்.**

புருஷன் சரீரமே; சரீரத்தைத் தவிர்த்து மேல் அநுவர்த்திப்பது ஒன்றில்லை என்னும் மதப்படி, புதிய ஏற்பாடுகள் குணம் செய்பவையே. ஆயினும் அவை ஐரோப்பாகண்டத்தில் எப்பயன்தந்தன

வென்பதையும் யோசிக்கக் கூடாதோ? அதிராஜ்யம், செல்வம், ஸுகம் இவற்றை எல்லாத் தேசத்தினரும் வேண்டுகின்றனர். இவற்றை அடைந்தவர், ஐரோப்பாவில் ஆறு தேசத்தாரும், அமெரிக்காவில் ஒரு தேசத்தினரும், ஆசியாவில் மற்றொரு தேசத்தினருமே. இவரது அபேக்ஷையை த்ருப்தி செய்ய இவ்வுலகம் சிறியது; இதற்குள் அகப்படும் பொருளும் மிதமே. ஆதலால் ஒரு தேசத்தினர்க்கும் த்ருப்தி யுண்டாகவில்லை. திதிக்ஷையும் பிறக்கவில்லை. இருப்பதைக் காப்பதற்கோ, இல்லாததைக் கவர்வதற்கோ, படைச் சேனைகளையும், கடற்சேனைகளையும், அந்தரிக்ஷ ஸேனைகளையும், வ்ருத்தி பண்ணினார்கள். பரஸ்பரம் அஸூயையை மிகுதியும் வளர்த்தனர். ஆதலால் போதுமான காரண மின்றியே ஐரோப்பா கண்டத்தின் அதிராஜர்களும், சிற்றரசாள்பவர்களும், சண்டைக்கு ஆரம்பித்து விட்டார்கள். இதன் விளைவைப் பற்றி யாம் இங்கே விவரிப்பானேன்? ஒரு சிறிய போர்க்கப்பல் சென்னைத்துறையை நெருங்கிச் சில குண்டுகள் போடவே, அந்நகரவாஸிகள் நாற்புறமும் பறந்து போனதையும், பயந்து போனதையும் கண்ணுற்றோமே. பெல்ஜியம் நாட்டினரும், ப்ரான்ஸ் தேசத்தின் வடபாகத்தில் வஸித்தவர்களும், ஜர்மானியர் கொடுந்தொழிலால் பட்ட பாட்டையும், படும் பாட்டையும் எண்ணவும் ஒண்ணுமோ? நமது தேசத்தினரும், துருக்கர் படையெடுத்த காலங்களில், இந்த ஸுகத்தை அநுபவித்தவரே. தத்காலம் அதை நினைப்பது துர்லபம். ஐரோப்பியருடைய நாகரிகத்தைப் பற்றிக் காமுற்றவரன்றோ, அதன் விளைவையும் கவனிக்க வேண்டியவர்! இதையே பரம புருஷார்த்தமென நினைப்பவருடன் நமக்கு வாதமில்லை.

இப்படி நினைப்பவரும் உண்டோ என்றால், உண்டென்போம். தேச ஸம்ரக்ஷணம் செய்தல் யாவர்க்கும் கடமையே. அதனிமித்தம் போர் புரிபவரும், புரிந்து இறப்பவரும் புண்யம் செய்பவரே. ஆனால் அது பரம புருஷார்த்தமாமோ? குடும்பியானவன் குடும்பபோஷணம் செய்யக் கடமைப்பட்டுளான். வ்ருத்தரான மாதா பிதாக்களையும், ஸதியான பார்யையையும், சிறுவரான புத்ரர்களையும் ரக்ஷிக்காமல் விடலாமோ? அகார்ய சதம் செய்தாவது இவரை ரக்ஷித்தல் வேண்டுமென சாஸ்த்ரம் முறையிடுகின்றது. ஆனால் அந்த ரக்ஷணம் பரம புருஷார்த்தமாமோ? தேசநன்மைக்கும் பொது நன்மைக்கும் அவகாசம் கொடுத்தவரையில்



பாடு படவேண்டியதே. பாடு பட்டால் புண்யமே. ஆனால் அது பரம புருஷார்த்தமாகுமோ? திரை கடலோடியும் திரவியம் தேட வேண்டியதே. நம்மிடம் இல்லாத வித்யைகளைக் கற்றவரிடம் கற்க வேண்டியதே. ஆனால் இவை பரம புருஷார்த்தமாகுமோ?

* * * * * *

**தத்ப்ரயுக்தமாக கீதா ஸ்மரணம்.**

நன்றாக யோசிக்கத் திறனற்ற ஒருவர், நமது ராஜாங்கத்தாருக்காகத் தத்காலம் யுத்தத்திற்குச் சென்றவர் எல்லோரும், கீதா சாஸ்த்ரப் பயனையும், இன்னும் அதற்கும் மேற்பட்டதையும் அடைந்துவிட்டதாக எழுதி விட்டார். இன்னும், அவர் எல்லோரும் அர்ஜுனனுக்கும் சிறந்த அதிகாரிகளெனச் சொல்லி விட்டார். அவர் இராஜ பக்திக்காகச் சண்டைக்குப் போயினர். தேசாபிமானத்தின் நிமித்தம், சண்டை செய்தலைக் கடமையாக வஹித்தனர். இது புண்யமே. இது வியக்கத் தக்கதே. ஆனால் அது பரம புருஷார்த்தமாகுமோ?

கீதையின் ப்ரயோஜநம் என்ன? அர்ஜுனன் யுத்தம் செய்ய வேண்டும் என்பதே; ஆதலால் யுத்தம் செய்பவர் எல்லோரும் கீதையின் ப்ரயோஜநத்தை அடைந்து விட்டார்கள்; இப்படி யோசனை செய்கின்றனர்.

கீதையின் ப்ரயோஜநம் என்ன? ஒவ்வொருவனும் அவனவன் தொழிலைச் செய்ய வேண்டும் என்பதே; ஆதலால் தன் தொழிலைச் செய்யும் ஒவ்வொருவனும் கீதையின் உபதேசத்தை அறிந்தவனாகின்றான்; இது மற்றொரு யோசனை.

கீதை யாது உபதேசிக்கின்றது? கர்ம பலனைத் தனக்கென அபேக்ஷிக்காமல் கர்மம் செய்யச் சொல்கின்றது; ஆதலால் தேச நன்மைக்கும் பொது நன்மைக்கும் உழைக்கின்றவன் கர்மயோகியாகின்றான்; கீதையின் உபதேசப்படி நடந்தவனாகின்றான்; இது இன்னுமோர் யோசனை. இந்த யோசனைகட்கெல்லாம் பாரலௌகிக விஷய விச்வாஸம் அபேக்ஷிதமன்று.

கீதையின் தத்வம்.

பகவான், 'மநுஷ்யாணாம் ஸஹஸ்ரேஷு கஶ்சித் யததி ஸித்தயே । யததாமபி ஸித்தாநாம் கஶ்சிந் மாம் வேத்தி தத்த்வத:' ॥ "ஆயிரம் மனிதர்க்குள் ஒருவன் ஸித்தியின் பொருட்டு யத்நபரனாகின்றான். அவ்விதம் மோக்ஷார்த்தம் யத்நபரராகின்றவர் ஸித்தியடைந்தவரே; ஆனாலும் அவர்க்குள் யாரோ ஒருவன் மாத்ரம் என்னை யதாவத்தாக அறிகின்றான்" என்று அருளிச் செய்தார். மீண்டும், 'பஹூநாம் ஜந்மநாமந்தே ஜ்ஞாநவாந் மாம் ப்ரபத்யதே । வாஸுதேவ: ஸர்வமிதி ஸ மஹாத்மா ஸுதுர்லப:,' என்று அருளிச் செய்தார். இந்த ஶ்லோகார்த்தம் பகவத் ராமாநுஜ பாஷ்யத்தின்படி, "புண்ய ஜந்மங்களாய் அநேக ஜந்மங்களெடுத்து, முடிவில், வாஸுதேவனுடைய சேஷத்வமாகின்ற ஓர் ரஸாநுபவத்துடன் கூடினவன் யான்; எனது ஸ்வரூபம் ஸ்திதி ப்ரவ்ருத்திகள் யாவும் அவனைச்சேர்ந்தன * * * எனும் ஜ்ஞாநத்தை அடைந்தவனாய்க் கொண்டு, எனக்குப் பரம ப்ராப்யனும் ப்ராபகனும், எனது ஸர்வ மநோரதமும் வாஸுதேவனே என்று நிர்ணயித்து அவனை உபாஸிக்கின்றான். அவன் மஹாத்மா; லோகத்தில் மிகவும் துர்லபன்" என்றிப்படி இருக்கின்றது. ஸ்ரீ ஶங்கராசார்யரும், "ஶாஸ்த்ர ஜ்ஞாநத்தின் ஸம்ஸ்காரத்துடன் கூடின அநேக ஜந்மங்களின் முடிவில், பரிபாகத்தை யடைந்து ஜ்ஞாநவானாகி, வாஸுதேவனாகின்ற என்னை யடைகின்றான். யாதொருவன், நாராயணனாகிய நான் ஸர்வாத்மா வென்று என்னை அடைகின்றானோ அவன் மஹாத்மா; அவனுக்கு ஸமாநமானவனும் அதிகமானவனும் இல்லை. ஆதலால், 'மநுஷ்யாணாம் ஸஹஸ்ரேஷு' என்னும் ஶ்லோகத்தில் சொன்னபடி அவன் மிகவும் துர்லபன்" என்று பாஷ்யம் செய்திருக்கின்றார். 'தேஷாம் ஜ்ஞாநீ நித்யயுக்த ஏகபக்திர் விஶிஷ்யதே । ப்ரியோ ஹி ஜ்ஞாநிநோऽத்யர்த்தமஹம் ஸ ச மம ப்ரிய:' ॥ என்கிற ஶ்லோகமும், தத்வ வித்தான ஜ்ஞாநியானவன் பகவானைத் தவிர மற்றொரு



ப்ராப்ய வஸ்து வில்லாதபடியால் பகவானுடன் நித்ய யோகத்தை யடைந்தவனாயும், பகவத் பக்தியன்றி வேறொரு பக்தி யற்றவனாகவும் இருக்கின்றான் என்று காட்டுகிறது. ஆதலால் பகவத் பஜநம் செய்பவர்க்குள் இவன் விசேஷித்தவன். இவனுக்குப் பகவான் அத்யந்த ப்ரியன். அந்த ப்ரியத்வம் இவ்வள வென்று சொல்லி முடியாது. ஆதலால் பகவானுக்கும் ஜ்ஞாநியும் ப்ரியனாகின்றான். இன்னும் பகவான் 'உதாரா: ஸர்வ ஏவைதே ஜ்ஞாநீ த்வாத்மைவ மே மதம்' என்று சொல்லுகின்றார். அதாவது ஜ்ஞாநீ ஸமாஹித சித்தனாய்க் கொண்டு மற்றொன்றையும் ஸ்மரிக்காமல், பரமோத்க்ருஷ்டமான ப்ராப்யம் பகவான் என்றறிந்து, அவனை அடைய ப்ரவ்ருத்தனாக நிற்கின்றான். அதனாலன்றோ 'ஜ்ஞாநீ த்வாத்மைவ மே மதம்' என்று பகவான் நிச்சயித்தருளினர். பகவான் ஜ்ஞாநியைத் தன்னைப்போல் எண்ணுகின்றார்.

ஆனால் பகவான் அர்ஜுநனைக் கர்மத்தில் ஏன் ஏவினரென்றால், ஜ்ஞாநயோகத்தில் அவனுக்கு அதிகாரம் இல்லை. ஸாதாரண ஜநங்கள், 'ந ஹி கஶ்சித் க்ஷணமபி ஜாது திஷ்டத்யகர்மக்ருத் । கார்யதே ஹ்யவஶ: கர்ம ஸர்வ: ப்ரக்ருதிஜைர் குணை:' ॥ எனும் வண்ணம், அவஶர்களாய்க் கர்மத்தில் ப்ரவ்ருத்தர்களாகவே இருக்கின்றார்கள். இவர் நிவ்ருத்தி மார்க்கத்தில் ப்ரவேசிக்கப்படாது. ஆதலால், பகவான் 'யோகஸ்த: குரு கர்மாணி ஸங்கம் த்யக்த்வா தநஞ்ஜய । ஸித்த்யஸித்த்யோ: ஸமோ பூத்வா,' என்றும், 'தஸ்மாத் அஸக்த: ஸததம் கார்யம் கர்ம ஸமாசர । அஸக்தோ ஹ்யாசரந் கர்ம பரமாப்நோதி பூருஷ: ॥ கர்மணைவ ஹி ஸம்ஸித்திமாஸ்திதா ஜநகாதய:' என்றும், * * * 'மயி ஸர்வாணி கர்மாணி ஸந்ந்யஸ்யாத்யாத்மசேதஸா । நிராஶீர் நிர்மமோ பூத்வா யுத்யஸ்வ விகதஜ்வர:' ॥ என்றும், * * * 'ந மாம் கர்மாணி லிம்பந்தி ந மே கர்மபலே ஸ்ப்ருஹா । இதி மாம் யோऽபிஜாநாதி கர்மபிர் ந ஸ பத்யதே ॥ ஏவம் ஜ்ஞாத்வா க்ருதம் கர்ம பூர்வைரபி முமுக்ஷுபி: । குரு

கர்மைவ தஸ்மாத் த்வம் பூர்வை: பூர்வதரம் க்ருதம்' என்றும், * * * 'யோகஸந்ந்யஸ்த கர்மாணம் ஜ்ஞாநஸம்சிந்ந ஸம்சயம் । ஆத்மவந்தம் ந கர்மாணி நிபத்நந்தி தநஞ்ஜய ॥ தஸ்மாதஜ்ஞாநஸம்பூதம் ஹ்ருத்ஸ்தம் ஜ்ஞாநாஸிநாத்மந: । சித்த்வைநம் ஸம்சயம் யோகம் ஆதிஷ்டோத்திஷ்ட பாரத' ॥ என்றும், அர்ஜுநனுக்கு உபதேசித்தார். இதன் ஸமுதாயப் பொருள் என்னெனில்: கர்மத்தில் ப்ரவ்ருத்திப்பிக்கும் பற்றை ஒழித்துக் கர்ம பலத்தில் இச்சையை விலக்கி, இந்தக் கர்மத்தால் பகவான் ஸந்துஷ்டன் ஆகட்டும் என்று நினைக்கவேண்டும். கர்மயோக நிஷ்டனாய், நித்யம் அநுஷ்டிக்க வேண்டிய கர்மங்களை ஒருவன் க்ரமமாய்ப் பகவதாராதநமாக அநுஷ்டித்துக் கொண்டு வந்தானாகில், பரமாத்மாவை அடைகின்றவனாவான். இப்படிப்பட்ட கர்ம யோக நிஷ்டர்களாயிருந்து ஜநகாதிகள் ஸித்தியை அடைந்தனர். ஆத்மாவினிடம் மநஸ்ஸைச் செலுத்தி, தான் பகவத் சரீர பூதன் என்றும், பகவத் ப்ரேரிதன் என்றும் எண்ணி, ஸர்வ கர்மங்களையும் பகவதாராதந ரூபமாகச் செய்து, கர்மபலத்தில் ஆசையை விலக்கி, கர்மத்தில் மமதா (இந்தக் கர்மம் எனது எனும் யோசனை) ரஹிதனாய், அநாதி காலமாக வ்ருத்தி யடைந்த பாப ஸஞ்சயத்துடன் கூடின நான் என்னாவேன் எனும் துக்கமற்றவனாய், ஒவ்வொருவனும் இருக்கக்கடவன். பகவான் ஜகத் வ்யாபார ரூபமான கர்மங்களைப் பலேச்சை யின்றிச் செய்கின்றான் எனும் ஜ்ஞாநமுடைய பூர்வீகர்கள், மோக்ஷத்தை அபேக்ஷித்துக் கர்மங்களால் கட்டுப் படாமல் எவ்விதம் கர்மாநுஷ்டாநம் செய்தார்களோ, அவ்விதமே கர்ம யோகி கர்மம் செய்யக் கடவன். இப்படி ஆத்மாநாத்ம விஷயமான ஜ்ஞாநத்துடன் பொருந்திக் கர்ம யோக நிஷ்டனாகக் கர்மம் செய்து கொண்டு, அந்த ஜ்ஞாந தார்ட்யத்தால் ஸர்வ ஸம்சயங்களும் நிவ்ருத்தமாகி, ஸமாஹித மநஸ்ஸுடன் கூடி யிருக்கப்பட்டவனைக் கர்மங்கள் கட்டமாட்டா. ஆதலால் அர்ஜுநனுடைய அஜ்ஞாநத்தால் அவன் மநஸ்ஸில் உதித்த ஸம்சயத்தை ஜ்ஞாநமாகின்ற கத்தியாலறுத்துக் கர்ம யோகத்தை அவலம்பித்து எழுந்திருந்து யுத்தம் செய்யும்படிப் பகவான் உபதேசித்தார். கர்மயோகிக்கு உத்தேச்யன் பரம புருஷன். பொது நன்மைக்காகிலும், தேச நன்மைக்காகி



லும் பாடுபட்டாலும், இவற்றிற்குப் பாடுபடுவதாகக் கர்மயோகி எண்ணவும் மாட்டான்; சொல்லவும் மாட்டான். கீதையைத் தெளிந்தறியாமல், அதன் ப்ரயோஜநத்தை யடைந்து விட்டதாய் ப்ரமித்தல் மோசமே. பொது நன்மைக்கு உழைப்பவன் புண்யத்தின் பயனை யடைவன். ஸர்வ பூதங்களுக்கும் பகவத் பக்தன் ஹிதம் செய்யக் கடவன். ஸர்வத்ர ஹித ப்ரவ்ருத்தி செய்பவன் எல்லாம் பகவத் பக்தன் ஆகமாட்டான். பகவானிடம் அநந்ய பக்தியுடன் கூடி அஹங்கார மமகாரங்களைப் பரிஹரிக்காதவன் கர்ம யோகி யாகமாட்டான்.

ஐஹிக ஸுகத்தை ஐரோப்பியர் வேண்டி யடைந்தார்கள். இதை அநுபவிப்பதால் மோக்ஷம் கிடைக்காது. மோக்ஷாதிகாரிகளாக ஆயிரத்தில் ஒருவர் தான் ஏற்படுவர். அந்யர் மோக்ஷத்தில் ரதராக இருக்கலாம். ஐஹிக ஸுகேச்சை யவர் மநஸ்ஸை ஆகர்ஷித்து நிற்கும். ஆதலால் லோகாநுபவங்களை நிரஸித்து, இந்த்ரியங்களை ஜயித்து, உபரதராகவும், க்ஷமையுடன் கூடியும், ஸதா பகவத் பஜநத்தில் யாவரும் ப்ரவேசித்து விடுவார்கள் எனும் பயத்தை இங்கிலீஷ் படித்தவர் கொள்ளவேண்டாம்.

* * * * * *

வர்ணாச்ரம தர்மங்களும் முமுக்ஷுத்வமும்.

முமுக்ஷுவைத் தவிர மற்றோர்க்கு வர்ணாச்ரம தர்மங்கள் பயன்படா. முமுக்ஷுத்வம் இப்போது இல்லா விட்டாலும் கால க்ரமேண உண்டாகலாம் என்றுதான் வர்ணாச்ரமமாகின்ற கட்டுப்பாட்டில் இருப்பவரை ஸ்வதர்மாநுஷ்டாநம் செய்ய வேண்டப்படுகின்றது.

நமது ஸம்ப்ரதாயப்படி முமுக்ஷுத்வத்துக்கும் ப்ரபத்யநுஷ்டாநத்துக்கும் யாவரும் அதிகாரிகள். "அந்தணரந்திய ரெல்லையி னின்ற வனைத்துலகும், நொந்தவரே முதலாக நுடங்கி யநன்னியராய், வந்தடையும் வகை வண்தக வேந்தி வருந்திய நம், அந்தமிலாதி" என்று ஸ்ரீ நிகமாந்த மஹா தேசிகன் ஸாதித்தருளினார். இதன் பொருள்:—உயர்ந்த ஜாதியரான ப்ராஹ்மணர், நிக்ருஷ்ட ஜாதியரான ச்வபாகர், இவ்வுபயாவதி மத்யத்தில் நின்ற ஸர்வஜாதீயர்க்குள், முக்யமாக ஸம்ஸாரத்தில் நொந்தவர்

யாவரும், அகிஞ்சநராய் அநந்யகதிக்களாய் நின்று, தன்னைச் சரணமடையும்படிப் பேரருள் பூண்டு, அவர் அவ்விதம் தன்னை அடைய வேண்டுமென்று ப்ரயாஸமும் படுகின்ற, அநந்தனும் ஜகத்காரணமுமான நமது ஸ்வாமி - என்றிவ்விதமிருக்கின்றது. ஆதலால் எக்குடி பிறக்கினும் யாவரே யாயினும், புகலொன்றில்லாதவர் அனைவரும் மோக்ஷார்த்திகளாய் நின்று பகவானைச் சரணமடையலாம். அவர்க்குப் பகவதநுக்ரஹம் கிடைக்கும்.

ஆனால் ப்ராஹ்மணனாய்ப் பிறந்து, யாதேனுமோர் ஆஶ்ரமத்தில் புகுந்தவன், தனக்குரிய கர்மங்களைப் பரித்யாகம் செய்து, முமுக்ஷுத்வத்தில் அதிகாரி யாகலாமோ வென்றால், அது விஷயத்தை, ப்ரமாணங்களை அதிக்ரமிக்கும் யோக்யதை நமக்கில்லை யென்று நாம் அபிப்ராயப்படுவதால், ப்ரமாணங்களைக் கொண்டே சிறிது விசாரிப்போம்.

தைத்திரீய உபநிஷத்தில், ப்ரஹ்ம வித்யையில் அதிகாரம் பெறவேண்டுகின்றவன், வேதாத்யயநம் செய்யவேண்டுமென்று விதித்திருக்கின்றது; ஸ்வாத்யாய ப்ரவசநாதி விஷயங்களில் அப்ரமத்தனாக இருக்கும்படிச் சொல்லியிருக்கின்றது; க்ருஹஸ்தாஶ்ரமத்தில் ப்ரவேஶிக்கும்படியும் விதித்திருக்கின்றது; தேவர்களுக்கும், பிதுர்க்களுக்கும் ஆராதநரூபமாய் ஏற்பட்டிருக்கும் கர்மங்களை அவஹிதனாக அநுஷ்டிக்கவும் விதித்திருக்கின்றது. முண்டகோபநிஷத்தில், 'பரீக்ஷ்ய லோகாந் கர்மசிதாந் ப்ராஹ்மண:' என்பதால், ப்ரஹ்மகுலத்தில் பிறந்து, ஸாங்க ஸஶிரஸ்கமாக வேதாத்யயநம் செய்தவன், கர்மங்களால் ஸம்பாதிக்கத்தக்க லோகங்களைப்பற்றி நிரூபணம் செய்து, பிறகு நிர்வேதம் பிறந்தவனாய், ஶ்ரோத்ரியனாயும் ப்ரஹ்ம நிஷ்டனாகவும் இருக்கும் குருவைத் தேடிச் செல்லக்கடவன் என்று விதித்திருக்கின்றது. ப்ருஹதாரண்யகோபநிஷத்தில், ஸர்வேஶ்வரனுடைய உபாஸந விஷயமாக, 'தமேதம் வேதாநுவசநேந ப்ராஹ்மணா விவிதிஷந்தி யஜ்ஞேந தாநேந தபஸா(அ)நாஶகேந,' என்ப



தால், ப்ரஹ்ம குலத்தில் பிறந்தவர்கள், வேதாத்யயநத்தாலும், யஜ்ஞ தாநங்களாலும், தபஸ்ஸாலும் காயக்லேஶாதிகளாலும், பகவானை ஸாக்ஷாத்கரிக்க விரும்புகின்றனர் எனப்படுவதால், ப்ரஹ்மசர்யம், கார்ஹஸ்த்யம், வாநப்ரஸ்தம் ஆகின்ற மூன்று ஆஶ்ரமங்களிலும் ப்ராஹ்மணர் இருந்தவர்களாய், ஸ்வஸ்வ ஆஶ்ரமோசித கர்மாநுஷ்டாநங்களைச் செய்து கொண்டு உபாஸநத்தில் அதிக்ருதர்கள் ஆகின்றனர் என்றேற்படுகின்றது. அந்த ப்ரகரணத்திலேயே, 'ஏதமேவ ப்ரவ்ராஜிநோ லோகமிச்சந்த: ப்ரவ்ரஜந்தி,' என்று, பரமாத்மாவை அடைய இச்சித்து ஸந்யாஸிகளும் ஸந்யஸித்துக் கொள்கின்றனர் என்பதால், துரீயாஶ்ரமமும் யோசிக்கப்பட்டதாகின்றது. சாந்தோக்யோபநிஷத்தின் முடிவில், 'ஆசார்யகுலாத் வேதமதீத்ய யதா விதாநம் குரோ: கர்மாதிஶேஷேண அபிஸமாவ்ருத்ய, குடும்பே ஶுசௌ தேஶே ஸ்வாத்யாயமதீயாந: தார்மிகாந் விதததாத்மநி ஸர்வேந்த்ரியாணி ஸம்ப்ரதிஷ்டாப்யாஹிம்ஸந் ஸர்வபூதாந்யந்யத்ர தீர்த்தேப்ய: ஸ கல்வேவம் வர்த்தயந் யாவதாயுஷம் ப்ரஹ்மலோகம் அபிஸம்பத்யதே ந ச புநராவர்த்ததே,' என்று சொல்லப்பட்டிருக்கின்றது. இதன் பொருள்:—"ஆசார்யன் க்ருஹத்தில் விதியை அதிக்ரமிக்காமல் ஸ்ம்ருதிகள் காட்டின வழியே நியமத்துடன் கூடினவனாக வேதாத்யயநம்செய்து, குரு ஶுஶ்ரூஷையை அஶேஷமாக அநுஷ்டித்துவிட்டு, அதன் மத்யே மிகுந்த காலத்தில் வேதாத்யயநம் செய்து, ஸமாவர்த்தநம் செய்து, குருகுலத்தினின்று திரும்பித் தர்மவிவாஹம் செய்து கொண்டு, க்ருஹஸ்தாஶ்ரமியாய் நின்று, ஶுத்தமான தேசத்தில் வஸித்துக்கொண்டு, ஸ்வாத்யாயம் முதலான நித்ய நைமித்திக கர்மங்களைச் செய்துகொண்டு, புத்ர ஶிஷ்யாதிகளைத் தர்ம மார்க்கத்தில் நியமித்துவிட்டு, தனது மநஸுட்பட ஸர்வேந்த்ரியங்களையும் ஹார்த்தனான பரமாத்மாவினிடம் நன்றாக நிலைக்கச்செய்து, ஸர்வ ப்ராணிகளிடமும் ஶாஸ்த்ரவிஹிதமான அவஸரங்களில்

தவிர ஹிம்ஸையை விலக்கிக்கொண்டு, உபாஸகன் தான் ஜீவித்திருக்கும்வரையில் இவ்விதம் இருந்துகொண்டு, தேஹாவஸாநத்தில் ப்ரஹ்மலோகத்தை அடைகின்முன். மறுபடி சரீர ப்ராப்தி நிமித்தம் இவ்வுலகம் வருகின்முனில்லை." என்று இவ்விதமாய் இருக்கின்றது.

இதனுல் ப்ராஹ்மணர்கள் ஆச்ரமிகளாகவே யிருந்து ஸ்வாச்ரமோசிதமான கர்மங்களைச் செய்யக் கடவர் என்றும், அப்படிச் செய்கின்றவர்க்கே உபாஸநத்தில் அதிகாரம் உண்டு என்றும் வெளியாகின்றது. அபசூத்ராதிகரணத்தில் நமது பரமாசார்யனை வேதவ்யாஸர், உபநிஷத் வித்யைகளில் சூத்ரர்களுக்கு அதிகாரம் இல்லையென நிஷ்கர்ஷித்திருக்கின்றர். ஸ்வமதத்தை அந்யர்க்குப் பலவந்தமாக உபதேசித்தல் என்பது பௌத்தர் காலத்துக்குமுன் அநுஷ்டாநத்திலில்லை. வைதிகமதம் ஆர்யருடையது. யூதமதம் யூதருக்கு மாத்ரம் உண்டாயின்றது. யூதர் ஜாத்யந்தரர்களைக் காரணமின்றியும் வேரறுத்தனர். அந்தச் செயலைத் தமது தேவனே தமக்குக் கட்டளை யிட்டதாக எழுதியிருக்கின்றனர். ஆர்யர், ஸர்வேச்வரன் தமக்கென மற்றஜாதியர்க்கும் பொதுவென்று அறிந்தவர். அன்றியும், அவர் மதத்தாலேயே ஸர்வப்ராணிகள் விஷயமாயும் ஹிம்ஸையானது நிஷேதிக்கப்பட்டது. தமது கொள்கையால் வேதாத்யயநம் ஜாத்யந்தரர்களுக்குக் கூடாதாகையால், அவர் நிமித்தம், ஸர்வ வேதாந்தார்த்தங்களையும் இதிஹாஸ புராணங்கள் முலமாக ஸர்வத்ர பரவச் செய்தார்கள். ஆதலால்,

"மாம் ஹி பார்த்த வ்யபாஶ்ரித்ய யேऽபி ஸ்யு: பாபயோநய: ।
ஸ்த்ரியோ வைஶ்யாஸ் ததா ஶூத்ராஸ் தேऽபி யாந்தி பராம் கதிம் ॥
ஸக்ருதேவ ப்ரபந்நாய தவாஸ்மீதி ச யாசதே ।
அபயம் ஸர்வபூதேப்யோ ததாம்யேதத் வ்ரதம் மம ॥
விதித: ஸ ஹி தர்மஜ்ஞ: ஶரணாகதவத்ஸல: ॥
[illegible] ॥
[illegible] ।
ந ஶூத்ரா பகவத்பக்தா விப்ரா பாகவதா: ஸ்ம்ருதா: ।



பக்திரஷ்டவிதா ஹ்யேஷா யஸ்மிந் ம்லேச்சேऽபி வர்ததே ।
தஸ்மை தேயம் ததோ க்ராஹ்யம் ஸ ச பூஜ்யோ யதா ஹ்யஹம் ॥
ஶ்வபசம் வரிஷ்டம் மந்யே ததர்பிதமநோவசநேஹிதார்த்த
ப்ராணம் புநாதி ஸ குலம் ॥
பக்த்யா துதோஷ பகவாந் கஜயூதபாய ॥
ய: ஶூத்ரம் பகவத்பக்தம் நிஷாதம் ஶ்வபசம் ததா ।
வீக்ஷதே ஜாதிஸாமாந்யாத் ஸ யாதி நரகம் நர: ॥"

என்னும் வசநங்களால், ஸர்வஜாதியர்க்கும் பகவத் பக்தியில் அதிகாரமும், பகவத்ப்ராப்தியும் உண்டென்று ஏற்படுகின்றது. ஆனல் ப்ரஹ்ம குலத்தில் பிறந்தவன் பக்தியோகநிஷ்டன் ஆகாவிட்டாலும், ப்ரபத்யநுஷ்டாநத்தால் பகவதநுக்ரஹத்தைப் பெற்ருனுகில், அவன் உபநிஷத்தில் விதித்தபடிக்கு வர்ணுச்ரம கர்மங்களை யநுஷ்டிக்க வேண்டுமோ வென்ருல், அநுஷ்டிக்க வேண்டுமென்பது நமது ஸம்ப்ரதாயா சார்யர்களுடைய திருவுள்ளம். 'ஆஜ்ஞாநுஜ்ஞாவிபாகாத் ஶாஸ்த்ரீய ஸாரணி,' என்று நிகமாந்த மஹாதேசிகன் ஸாதித்தருளினர். ஆளவந்தார், எம்பெருமானர் முதலானவர்கள் இப்படியே அபிப்ராயப் பட்டார்கள் என்பதை, சாஸ்த்ரீய நியமநாதிகாரத்தால் அறிந்து கொள்ளலாம்.

மேலும், மேற்குறித்த உபநிஷத் வாக்யங்கள், நமது முன்னேர்களான மஹர்ஷிகளுடைய ஆஜ்ஞையும் இஷ்டமும், நாம் கர்மாநுஷ்டாந விஷயத்தில் த்யாகபுத்தியைச் செய்யக் கூடாதென்பதைக் காட்டுகின்றன. த்யாகம் செய்தால் ப்ரத்யவாயம் என்ன வென்று கேட்பவரும் உண்டு. அப்படிப்பட்டவர்க்கு த்ருஷ்டபலமாக நாம் காட்டக்கூடியது ஒன்றுமில்லை. ஈச்வர ப்ரியர்களாயிருந்த நமது நாட்டின் பஹு பெரியவர்கள், தத்காலம் லோகாந்தர வாஸிகளாய் இருக்கின்றனர் என்று அப்யுபகமம் செய்தால், அவர் வருந்த நாம் நடத்தலால், ஈச்வரனும் வெறுப்படைவன் என்று யோசிக்கத்தக்கது.

---

ஸ்ரீ:

ஸ்ரீ𑌮𑌤𑍇 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹 𑌪𑌰𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍇 𑌨𑌮𑌃.

# ஸ்ரீ ஸ்தோத்ர ரத்நம்.

𑌤𑍍𑌵𑌦𑌙𑍍𑌘𑍍𑌰𑌿𑌮𑍁𑌦𑍍𑌦𑌿𑌶𑍍𑌯 𑌕𑌦𑌾𑌽𑌪𑌿 𑌕𑍇𑌨𑌚𑌿-
𑌦𑍍𑌯𑌥𑌾 𑌤𑌥𑌾 𑌵𑌾𑌽𑌪𑌿 𑌸𑌕𑍃𑌤𑍍𑌕𑍃𑌤𑍋𑌽𑌞𑍍𑌜𑌲𑌿𑌃 ।
𑌤𑌦𑍈𑌵 𑌮𑍁𑌷𑍍𑌣𑌾𑌤𑍍𑌯𑌶𑍁𑌭𑌾𑌨𑍍𑌯𑌶𑍇𑌷𑌤-
𑌶𑍍𑌶𑍁𑌭𑌾𑌨𑌿 𑌪𑍁𑌷𑍍𑌣𑌾𑌤𑌿 𑌨 𑌜𑌾𑌤𑍁 𑌹𑍀𑌯𑌤𑍇 ॥ 28.

28. கீழ் ஶ்லோகத்தினால், 'ப்ரபத்தியென்னும் உபாயத்தைக் கைக்கொண்டவன் மற்றை ஒரு ப்ரயோஜநத்தையும் எதிர்பார்க்கமாட்டான்' என்று ஸ்தாபித்துவிட்டு, ஸ்ரீ ஆளவந்தார், இந்த ஶ்லோகத்தினால் அந்த ப்ரபத்தி யென்னும் உபாயத்தின் ஸௌகர்யத்தை ஒருவாறு விவரிக்கிறார்.

𑌤𑍍𑌵𑌦𑌙𑍍𑌘𑍍𑌰𑌿𑌮𑍁𑌦𑍍𑌦𑌿𑌶𑍍𑌯 𑌕𑌦𑌾𑌽𑌪𑌿 𑌕𑍇𑌨𑌚𑌿𑌦𑍍𑌯𑌥𑌾 𑌤𑌥𑌾 𑌵𑌾𑌽𑌪𑌿 𑌸𑌕𑍃𑌤𑍍𑌕𑍃𑌤𑍋𑌽𑌞𑍍𑌜𑌲𑌿𑌸𑍍𑌤𑌦𑍈𑌵𑌾 𑌶𑍁𑌭𑌾𑌨𑍍𑌯𑌶𑍇𑌷𑌤𑍋 𑌮𑍁𑌷𑍍𑌣𑌾𑌤𑌿, 𑌶𑍁𑌭𑌾𑌨𑍍𑌯𑌶𑍇𑌷𑌤𑌃 𑌪𑍁𑌷𑍍𑌣𑌾𑌤𑌿, 𑌜𑌾𑌤𑍁 𑌨 𑌹𑍀𑌯𑌤𑍇 । ஹே ஶரண்ய! உன்னுடைய திருவடியை உத்தேஶித்து ஒருவன் எப்பொழுதாவது எப்படியாவது ஒரு அஞ்ஜலி செய்தால், அந்த அஞ்ஜலி, எப்பொழுது செய்யப்பட்டிருந்தாலும், செய்தவன் நிஹீநனாயிருந்தாலும், எப்படி செய்யப்பட்டிருந்தாலும், ஒரு தடவை மாத்ரம் செய்யப்பட்டிருந்தாலும், அது அதி ஶீக்ரத்திலேயே அவனது ஸகல அஶுபங்களையும் போக்கி, அவனுக்கு ஸமஸ்த ஶுபங்களையும் ஸாதித்துக் கொடுக்கின்றது; ஒருபொழுதும் அந்த அஞ்ஜலிக்கு ஹாநி யென்பதே இல்லை.



ப்ரபத்தியென்னும் உபாயத்தின் ஸௌகர்யத்தைச் சொல்லும் ப்ரகரணத்தில் அஞ்ஜலியின் மாஹாத்ம்யத்தைப் பற்றிப் பேசுவதன் தாத்பர்யம் என்னவென்றால் - ப்ரபத்தியை விட லகுதரமாயுள்ள அஞ்ஜலியே இப்படிப் பரமபுருஷார்த்தத்தின் ஸாதகமாக இருந்தால், ப்ரபத்தி அதற்கு ஸாதகமாகக்கூடும் என்பதைப் பற்றிக் கேட்கவும் வேண்டுமோ? என்பதுதான். 'புருஷார்த்தமோ குருதரமான உபாயத்தினால் ஸாதிக்கத் தகுந்தது; ப்ரபத்தியோ லகுவான உபாயமாக இருக்கிறதே!' என்னும் ஶங்கைக்கு இந்த ஶ்லோகம் ஸமாதாநம். 'ஹே ஶரண்ய! நீ போக்யதமனாக இருப்பதனால் உன்னை விடக்கூடவில்லை என்பது மாத்ரமன்று; உன்னை அடைவதற்கு வேண்டுவதான உபாயத்தின் ஸௌகர்யத்தைப் பார்க்கையிலும் உன்னை விடுவது அஶக்யமே என்று தோன்றுகிறது' என்பது கருத்து.

𑌤𑍍𑌵𑌦𑌙𑍍𑌘𑍍𑌰𑌿𑌮𑍁𑌦𑍍𑌦𑌿𑌶𑍍𑌯 - ஸர்வலோக ஶரண்யனாகிற உன்னுடைய பாதபங்கஜத்தை உபாயமாகவும் கைங்கர்ய லக்ஷ்யமாகவும் அபிஸந்தாநம் செய்துகொண்டு. 'ஸர்வஶக்தனாயுள்ள உன்னுடைய பாதாரவிந்தத்தை உத்தேஶித்தேனே தவிர, அப்படிப்பட்ட ஶக்தியில்லாத மற்றை அல்ப தேவதைகளை உத்தேஶிக்கவில்லை' என்பது இங்கு த்வநிக்கிறது. 'திருவடியை உத்தேஶித்து' என்று சொல்வானேன்? என்றால், 'ஸ்வரூபமே ஶுபமாக இருந்தாலும், அந்த ஸ்வரூபத்தைப் பாவிப்பது எல்லாருக்கும் ஶக்யமாகாததால், அவனது விக்ரஹத்தையே ஶுபாஶ்ரயமாகப் பேசுகிறார்' என்பது தான். அதிலும், திருவடிக்கு ப்ராதாந்யம் கொடுத்தது ஏன்? என்றால், 'காலில் விழுந்தவர் ஒருகாலும் கைவிடப்படார்' என்னும் ந்யாயத்தினால் ஆஶ்ரயத்திற்கு ப்ரதாநமாயுள்ளது திருவடி என்பதுதான்.

"𑌸 𑌹𑍍𑌰𑌾𑌤𑌶𑍍𑌶𑍁𑌰𑌣𑍌 𑌶𑌾𑌖𑌂"

என்னும் இடத்தில் இது நன்றாக விளங்கும்.

कदापि - எப்பொழுதானாலும். அதாவது - இந்த அஞ்ஜலி செய்வதாகிற கர்மத்திற்குக் காலநியமம் என்பதே இல்லை என்று தாத்பர்யம். இது, தேஶநியமமும் மில்லை என்பதற்கும் உபலக்ஷணம். இப்படி காலதேஶ நியமம் ஒன்றுமில்லை என்பதனால், இது அதிமாத்ரம் ஸுகரம் என்பது ஸித்தம்.

केनापि - யாராலானாலும். அதாவது - இந்த அஞ்ஜலி பந்தத்திற்கு இவன் தான் அதிகாரி, இவன் அதிகாரி யல்லன் என்பது இல்லை என்று கருத்து. 'எந்த வர்ணியானாலும், எந்த ஆஶ்ரமியானாலும், பண்டிதனானாலும், பாமரனானாலும், இது எல்லாருக்கும் தகுந்ததே' என்பதை இந்தப் பதம் குறிக்கின்றது.

यथा तथा वापि - எப்படிச் செய்யப்பட்டாலும். இதைச் செய்வதிலே துஷ்கரமான ப்ரகாரவிஶேஷங்கள் ஒன்றுமில்லை என்பது தாத்பர்யம். 'காயிகமாகச் செய்ய ஶக்தியில்லாமல், ஒருவன் இந்த அஞ்ஜலி பந்தத்தை வாக்கினாலாவது மநஸ்ஸினாலாவது செய்தபோதிலும், அது ஸபலமே ஆகும்' என்பது கருத்து.

सकृत् - ஒரே தடவையானாலும். சில கர்மங்கள் திரும்பத் திரும்பச் செய்யப்படவேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கின்றது. அப்படி இதற்கு ஆவ்ருத்தி அபேக்ஷை இல்லை என்பதை இது விளக்குகின்றது.

अञ्जलिः - "कौ यत्र संहतावञ्जलिः" என்கிறபடி இரண்டு கைகளையும் சேர்த்துக் குவிப்பதற்கு அஞ்ஜலி என்று பெயர்.

"अञ्जलिः परमा मुद्रा"

(அஞ்ஜலிதான், பரதேவதையின் ப்ரஸாதத்தை ஸம்பாதித்துக் கொடுப்பவைகளுள் உத்தமமான முத்ரை) என்றும்,

"कृतापराधस्य हि ते नान्यत् पश्याम्यहं क्षमम् ।
अन्तरेणाञ्जलिं बद्ध्वा लक्ष्मणस्य प्रसादनात् ॥"



(இப்படிப்பட்ட அபராதம் செய்த உனக்கு, அஞ்ஜலி பந்தம் செய்வதை விட மற்றை எதுவும் யோக்யமன்று) என்றும் பலமுறையாக அஞ்ஜலியின் ப்ரபாவம் கூறப்பட்டிருப்பதை நாம் பார்க்கிறோமன்றோ? ஸ்ரீ பட்டர், லக்ஷ்மியின் ஔதார்யத்தைப் பற்றிப் பேசி வரும்பொழுது,

"ऐश्वर्यमक्षरगतिं परमं पदं वा
कस्मैचिदञ्जलिभरं वहते वितीर्य ।
अस्मै न किञ्चिदुचितं कृतमित्यथाम्ब !
त्वं लज्जसे कथय कोऽयमुदारभावः ॥"

(ஹே அம்ப! இன்னான் இனையானென்று தெரியாமலிருக்கும் ஒருவன், எப்பொழுதோ ஒரு அஞ்ஜலியைச் செய்துவிட்டான் என்னும் ஒரு காரணத்தை மாத்ரம் அவலம்பித்து, அவனுக்கு ஸகல புருஷார்த்தங்களையும் நீ அநுக்ரஹிக்கிறாய். அப்படி அநுக்ரஹித்த பிறகும், 'அஹோ! இவன் செய்த அஞ்ஜலிக்கு உசிதமான கைம்மாற்றை நாம் இன்னும் செய்ததாகக் காணோமே' என்று லஜ்ஜைப்படுகிறாய். இது என்ன ஔதார்யம்!) என்று சொல்லி, அஞ்ஜலி, ஸர்வ புருஷார்த்த ஸாதகம் என்பதை நன்கு விளக்கி யிருக்கின்றார். ஸ்ரீ நிகமாந்த மஹா தேஶிகனும்,

"हस्तीश ! दुःखविषदिग्धफलानुबन्धि-
न्याब्रह्मकीटमपराहतसंप्रयोगे ।
दुष्कर्मसञ्चयवशाद्दुरतिक्रमे नः
प्रत्यस्त्रमञ्जलिरसौ तव निग्रहास्त्रे ॥"

(ஹே ஹஸ்திஶ! நாங்கள் அநாதியாக மஹத்தான கர்மங்களைச் செய்திருக்கிறோம்; அவைகளுக்கு அநுகுணமாக, நீ, எங்களுக்கு ஸம்ஸாரத்தை ஸங்கல்பிப்பதாகிற நிக்ரஹத்தை ப்ரயோகம் செய்து விட்டால், பலிஷ்டமான இந்த நிக்ரஹாஸ்த்ரத்தையும்

தகையக்கூடிய ப்ரத்யஸ்த்ர மொன்று எங்களிடம் இருக்கின்றது; அது என்ன? வென்றால், நாங்கள் செய்யும் இந்த அஞ்ஜலியே!) என்று அஞ்ஜலியை ஸம்ஸார பந்த நிவர்த்தகமாகப் பேசியிருக்கிறாரன்றோ?

ததைவ அஶுபாந்யஶேஷதோ முஷ்ணாதி - அப்பொழுதே ஸகல அஶுபங்களையும் போக்கடித்துவிடுகின்றது. அதாவது - அஞ்ஜலி செய்த உத்தர க்ஷணத்திலேயே ஸம்ஸாரம் வரையில் உள்ள ஸகல அநிஷ்டமும் நிவ்ருத்தி யாகிவிடுகின்றது என்று தாத்பர்யம். ‘முஷ்ணாதி’ என்றால் திருடிவிடுகிறது என்று அர்த்தம். ‘அஞ்ஜலி, ஸம்ஸாரமாகிற அஶுபத்தைத் திருடி விடுகின்றது’ என்று சொன்னதன் தாத்பர்யம் என்னவென்றால் ஒருகால் அநாதி வாஸநா வஶத்தினால் நமக்கு ஸம்ஸாரத்தில் ஒரு ருசி உண்டாகி யிருக்கக்கூடும்; அப்படி உண்டாகி யிருந்தாலும்’ நம்முடைய ஆத்யந்திக ஶ்ரேயஸ்ஸை ஸாதித்துக் கொடுக்கும் இந்த அஞ்ஜலி, ஒரு சிறு குழந்தையின் கையிலுள்ள அபத்ய வஸ்துவைப் பிதா முதலியவர்கள் அதற்குத் தெரியாமலே அபஹரித்து விடுவதுபோல, நம்மிடமிருந்து ஸம்ஸாரத்தை அபஹரித்து விடுகிறது’ என்று த்யோதிப்பிக்க வேண்டும் என்பது தான்.

ஶுபாநி புஷ்ணாதி - ஸகல ஶுபங்களையும் ஸாதித்துக் கொடுக்கின்றது

“தஸ்மிந் ப்ரஸந்நே கிமிஹாஸ்த்யலப்யம்?” (எம்பெருமான் ப்ரஸந்நமாகிவிட்டால் எந்த அபேக்ஷிதம் தான் ஸாதிதமாகாது?) என்கிறபடி, ஸகல அபேக்ஷிதங்களும் இதனால் நமக்குக் கிடைக்கக் கூடும் என்று சொல்லப்படுகின்றது.

ஜாது ந ஹீயதே - இதற்கு ஒரு பொழுதும் ஹாநி இல்லை. அதாவது - யஜ்ஞ ஸாத்யமான ஸ்வர்க்கம் முதலியவை



ஒரு காலத்தில் விநாஶத்தை யடைவதுபோல, அஞ்ஜலி ஸாத்யமான பரம புருஷார்த்த ப்ராப்தி, ஒருகாலும் விநாஶத்தை யடையாது; ஶாஶ்வதமாகவே நிற்கும் என்று கருத்து.

‘மோக்ஷத்தை ஸாதித்துக் கொடுக்கும் உபாயம் இவ்வளவு லகுவாக இருப்பது அநநுரூபமன்றோ? ஶாஸ்த்ரங்களில், ந்யாஸம் உபாஸநம், அதாவது - ப்ரபத்தி பக்தி என்று மோக்ஷ உபாயங்கள் இருவகைப் பட்டனவாகப் படிக்கப்பட் டிருக்கிறதே தவிர, அஞ்ஜலியும் ஒரு உபாயம் என்று சொல்லியிருப்பதைக் காணோம். ஆகையினால், அஞ்ஜலி, பரமபுருஷார்த்த ஸாதகமென்று சொல்வது, அதிவாதமாக வாவது அஶக்த விஷயமாக வாவது இருக்க வேண்டும்’ என்று சிலர் ஶங்கிப்பார்கள். ‘அப்படி இது அதிவாதமுமன்று, அஶக்த விஷயமுமன்று. அஞ்ஜலி; என்பது, ப்ரபத்தி யதிகாரியினாலோ பக்தி யதிகாரியினாலோ செய்யப்படும் ஒரு கர்ம விஶேஷமே தவிர, இவைகளுக்கு அநதிகாரியா யுள்ளவர்கள் செய்யும் கர்மமாகாது. ஆகையினால், இது ஸாக்ஷாத்தாக வாவது பரம்பரையாய் வாவது மோக்ஷத்தை ஸாதித்துக் கொடுக்கும் என்பதில் அநுபபத்தி ஒன்றுமில்லை. கதியில்லாத விடத்தில் அதிவாத பக்ஷமும் அஶக்த விஷயமென்று சொல்வதும் ஸம்பவிக்குமாதலால், இவ்விடத்தில் அப்படிப் பட்ட ஸமாதாநம் சொல்வது அநாவஶ்யம்’ என்று அந்த அதிஶங்கைக்கு ஸமாதாநம் பெரியோர்களால் சொல்லப்பட்டிருக்கின்றது.

எஸ். வாஸுதேவன்.

# தத்வவிசாரம்.

## ௩. ஜீவவிஷயம் - அவன் ஸம்ஸரிக்கும் ப்ரகாரம்.

இன்னும் கடோபநிஷத்தில், "ருதம் பிபந்தௌ ஸுக்ருதஸ்ய லோகே குஹாம் ப்ரவிஷ்டௌ பரமே பரார்த்தே। சாயாதபௌ ப்ரஹ்மவிதோ வதந்தி ॥"

"ஸுக்ருத மென்றால் ஸ்வயம் க்ருதமான கர்மங்கள்; இவற்றால் ஸம்பாதிக்கப்பட்ட இந்த லோகத்தில், ஸத்யமாக, அதாவது நியமேந உண்டாகும் மேற்சொன்ன கர்மங்களின் பலங்களை அநுபவிக்கின்ற ஜீவனும், அவனுக்கு நித்யாச்ரய பூதனான பரனும், உத்க்ருஷ்டமாயும் பரனுடைய ஸ்தாநமாகவு மிருக்கும் ஹ்ருதயாகாசத்தில், ப்ரவேசித்து இருக்கின்றனர். இவர்களை ப்ரஹ்ம வித்துக்கள், வெயில் நிழலென விலக்ஷணமானவர்கள், அதாவது பரன் ஸர்வஜ்ஞன், ஜீவன் கிஞ்சித்ஜ்ஞன், பரன் அஸம்ஸாரி, ஜீவன் ஸம்ஸாரி - என்று சொல்லுகின்றனர்."

'யேந ரூபம் ரஸம் கந்தம் சப்தாந் ஸ்பர்சாம்ச்ச மைதுநாந்। ஏதேநைவ விஜாநாதி கிமத்ர பரிசிஷ்யதே। ஏதத்வைதத்॥'

"யாதொரு இந்தப் பரமாத்மாவினுடைய அநுக்ரஹத்தால், ரூபம், ரஸம், கந்தம், சப்தம், ஸுகரூபமான ஸ்பர்சம் எனப்படும் ஸர்வ ப்ரத்யயங்களையும், நிச்சேஷமாக அறிகின்றானோ அதுதான் (ஓ நசிகேதஸ்!) உன்னால் கேட்கப்பட்டதும், தர்மாதிகளைக் காட்டிலும் அதிக்ரமித்திருக்கின்றதும், யாவராலும் ப்ராப்யமென்று முன் உபதேசிக்கப்பட்டதும், அதற்கு மேற்பட்டது ஒன்று மில்லை யென நிஷ்கர்ஷிக்கப்பட்டதுமான அந்த விஷ்ணுவினுடைய பரமபதம்."

'ய இமம் மத்வதம் வேத ஆத்மாநம் ஜீவமந்திகாத்। ஈசாநம் பூதபவ்யஸ்ய ந ததோ விஜுகுப்ஸதே। ஏதத்வைதத்'।



"கர்ம பலத்தை அநுபவிக்கும் இந்த ஜீவாத்மாவையும், அதன் ஸமீபத்தில் ஹ்ருதய குஹையில் இருக்கின்ற கால த்ரயத்துக்கும் ஈசனான பரமாத்மாவையும் யார் அறிகின்றானோ அவன், அப்படி யறிந்த பிறகு, (எந்தக் காரணத்தாலும் எதைக்குறித்தும்) வெறுப்படைய மாட்டான். அந்தப் பரமாத்மாவைத் தான் அந்த விஷ்ணுவினுடைய பரமபதம் (பரம ஸ்வரூபம்) என்று மேலே உபதேசிக்கப்பட்டது."

'யா ப்ராணேந ஸம்பவத்யதிதிர் தேவதாமயீ। குஹாம் ப்ரவிச்ய திஷ்டந்தீ யா பூதேபிர் வ்யஜாயத। ஏதத்வைதத்॥'

"யாதொரு ஜீவ னெனப்பட்டவள், என்றும் ப்ராணனுடன் கூடி ஸம்ஸரிக்கின்றவள்; கர்ம பலங்களை யநுபவிப்பதால் அதிதி யெனப் பட்டவள்; இந்த்ரியாதீந ஜ்ஞாந போகங்களுடன் கூடினவள்; ஹ்ருதய குஹையை ப்ரவேசித்து இருப்பவள்; ப்ருதிவ்யாதி பஞ்சபூதங்களுடன் கூடித் தேவ மநுஷ்யாதி ரூப விசிஷ்டையாய் ஜநிக்கின்றவள்; அவள் தான் மேலே சொன்ன பரமாத்மாவின் சரீரபூதை" என்று இத்யாதி வாக்யங்கள் இருக்கின்றன.

முண்டகோபநிஷத்தில், 'த்வா ஸுபர்ணா ஸயுஜா ஸகாயா ஸமாநம் வ்ருக்ஷம் பரிஷஸ்வஜாதே। தயோரந்ய: பிப்பலம் ஸ்வாத்வத்த்யநச்நந்நந்யோ அபிசாகசீதி॥'

"ஒரே வ்ருக்ஷத்தில் இரண்டு பக்ஷிகளென, வ்ருக்ஷம் போல் நசிக்கக்கூடிய சரீரத்தை, ஸமாந குணங்களுடன் கூடினவராயும், என்றும் சேர்ந்தே இருப்பவராயும் உள்ள ஜீவ பரமாத்மாக்கள் ஆச்ரயித் திருக்கின்றனர். அவர்களில் ஒருவன் பரிபக்வமான (கர்ம) பலத்தை அநுபவிக்கிறான். மற்றவர் தாத்ருச அநுபவமின்றி ப்ரகாசிக்கின்றார், அல்லது, கர்மாத்யக்ஷனுகையால் பார்த்துக் கொண்டிருக்கின்றார்." (ஏனெனில் தர்சந மாத்ரத்தால் அவருடைய ப்ரேரயித்ருத்வம் ஸித்திக்கின்றது) என்று சொல்லப்பட்டிருக்கிறது.

ப்ரச்நோபநிஷத்தில், 'ஆத்மந ஏஷ ப்ராணோ ஜாயதே யதைஷா புருஷே சாயைதஸ்மிந்நேததாததம்॥ மநோக்ருதேநாயாத்யஸ்மிந் சரீரே॥'

"பரமாத்மாவினிடம் இந்த ப்ராணன் உண்டாயிற்று. ஒரு புருஷன் நடந்தால் அவனது நிழல் அவனுடன் எப்படிப் போகின்றதோ, அப்படியே இந்த ப்ராணன் ஜீவனிடம் ஸமர்ப்பிக்கப் பட்டிருக்கின்றது. ஜீவன் தன் மநஸ்ஸால், அதாவது ஸங்கல்பத்தால் ஸம்பாதிக்கின்ற கர்ம மடியாக சரீர ப்ரவேஶம் பண்ணுங் காலத்தில், ப்ராணனும் பரமாத்ம ஸங்கல்பத்தால் அவனுடன் ஸஹா இருக்க வேண்டியதாகையால், அதுவும் அந்த ஶரீரத்தில் ப்ரவேஶிக்கின்றது" என்று ப்ரமாணம் இருக்கின்றது.

சாந்தோக்யோபநிஷத்தில், '𑌯𑌤𑍍𑌰𑍈𑌤𑌤𑍍 𑌪𑍁𑌰𑍁𑌷𑌃 𑌸𑍍𑌵𑌪𑌿𑌤𑌿 𑌨𑌾𑌮 𑌸𑌤𑌾 𑌸𑍋𑌮𑍍𑌯 𑌤𑌦𑌾 𑌸𑌮𑍍𑌪𑌨𑍍𑌨𑍋 𑌭𑌵𑌤𑌿,' "எப்போது இந்தப் புருஷன் தூங்குகின்றானென ப்ரஸித்தமாகச் சொல்லப் படுகின்றானோ அப்போது, ஹே ஸோம்ய! ஸத்ஶப்த வாச்யனான பரமாத்மாவுடன் சேர்ந்தவனாகின்றான்." '𑌸𑌨𑍍𑌮𑍂𑌲𑌾𑌃 𑌸𑍋𑌮𑍍𑌯𑍇𑌮𑌾𑌃 𑌸𑌰𑍍𑌵𑌾𑌃 𑌪𑍍𑌰𑌜𑌾𑌃 𑌸𑌦𑌾𑌯𑌤𑌨𑌾𑌃 𑌸𑌤𑍍𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍍𑌠𑌾𑌃' "ஹே ஸோம்ய! இந்த எல்லா ப்ரஜைகளும் ஸத் எனும் பரமாத்மாவை, மூலமாக அதாவது, காரணமாக உடைத்தா யிருக்கின்றார்கள். அந்தர்யாமியாய் நிற்கும் ஸத் எனும் பரமாத்மாவை ஆஶ்ரயமாக அதாவது தாரகனாக வுடையவர்கள். முடிவில் ஸத் எனும் பரமாத்மாவில் லயத்தை அடைபவர்கள்." '𑌐𑌤𑌦𑌾𑌤𑍍𑌮𑍍𑌯𑌮𑌿𑌦𑌂 𑌸𑌰𑍍𑌵𑌮𑍍,' "இந்த ஸத்ஶப்த வாச்யனான பரமாத்மாவை ஸர்வ சித் அசித் வஸ்துக்களும் அந்தராத்மாவாக உடைத்தாயிருக்கின்றன." '𑌜𑍀𑌵𑌾𑌪𑍇𑌤𑌂 𑌵𑌾𑌵 𑌕𑌿𑌲𑍇𑌦𑌂 𑌮𑍍𑌰𑌿𑌯𑌤𑍇 𑌨 𑌜𑍀𑌵𑍋 𑌮𑍍𑌰𑌿𑌯𑌤 𑌇𑌤𑌿,' "ஜீவனால் விடப்பட்ட இந்த சரீரமன்றோ மரண மடைகின்றது; ஜீவன் மரண மடைகின்றதில்லை." '𑌇𑌮𑌾𑌃 𑌸𑌰𑍍𑌵𑌾𑌃 𑌪𑍍𑌰𑌜𑌾𑌃 𑌸𑌤𑌿 𑌸𑌮𑍍𑌪𑌦𑍍𑌯 𑌨 𑌵𑌿𑌦𑍁𑌃 𑌸𑌤𑌿 𑌸𑌮𑍍𑌪𑌦𑍍𑌯𑌾𑌮𑌹 𑌇𑌤𑌿, 𑌸𑌤 𑌆𑌗𑌮𑍍𑌯 𑌨 𑌵𑌿𑌦𑍁𑌃 𑌸𑌤 𑌆𑌗𑌚𑍍𑌛𑌾𑌮𑌹 𑌇𑌤𑌿' "இந்த எல்லா ப்ரஜைகளும் ஸுஷுப்தி காலத்தில் ஸத்ஶப்த வாச்யனான பரமாத்வாவை அடைந்தவராய்க் கொண்டு தாம் தற்காலம் இன்னாரென்றும் பரமாத்ம நிஷ்டர்களா யிருக்கின்றா



ரென்றும் அறிகின்றாரில்லை. ஸுஷுப்தி நீங்கினபிறகு, நாம் ஸுஷுப்தியில் பரமாத்மாவினிடம் இருந்தோம்; அவ்விடமிருந்து ஜாக்ரத்தசைக்குத் திரும்பினோமென்றும் அறிகின்றனரில்லை."

'𑌤 𑌇𑌮𑍇 𑌸𑌤𑍍𑌯𑌾𑌃 𑌕𑌾𑌮𑌾𑌃 𑌅𑌨𑍃𑌤𑌾𑌪𑌿𑌧𑌾𑌨𑌾𑌃, 𑌤𑍇𑌷𑌾𑌂 𑌸𑌤𑍍𑌯𑌾𑌨𑌾𑌂 𑌸𑌤𑌾𑌮𑌨𑍃𑌤𑌮𑌪𑌿𑌧𑌾𑌨𑌂 𑌯𑍋 𑌯𑍋 𑌹𑍍𑌯𑌸𑍍𑌯𑍇𑌤𑌃 𑌪𑍍𑌰𑍈𑌤𑌿 𑌨 𑌤𑌮𑌿𑌹 𑌦𑌰𑍍𑌶𑌨𑌾𑌯 𑌲𑌭𑌤𑍇,—𑌅𑌥 𑌯𑍇 𑌚𑌾𑌸𑍍𑌯𑍇𑌹 𑌜𑍀𑌵𑌾𑌃 𑌯𑍇 𑌚 𑌪𑍍𑌰𑍇𑌤𑌾 𑌯𑌚𑍍𑌚𑌾𑌨𑍍𑌯𑌦𑌿𑌚𑍍𑌛𑌨𑍍𑌨 𑌲𑌭𑌤𑍇 𑌸𑌰𑍍𑌵𑌂 𑌤𑌦𑌤𑍍𑌰 𑌗𑌤𑍍𑌵𑌾 𑌵𑌿𑌨𑍍𑌦𑌤𑍇 - 𑌅𑌤𑍍𑌰 𑌹𑍍𑌯𑌸𑍍𑌯𑍈𑌤𑍇 𑌸𑌤𑍍𑌯𑌾𑌃 𑌕𑌾𑌮𑌾𑌃 𑌅𑌨𑍃𑌤𑌾𑌪𑌿𑌧𑌾𑌨𑌾𑌃 - 𑌤𑌦𑍍𑌯𑌥𑌾 𑌹𑌿𑌰𑌣𑍍𑌯𑌨𑌿𑌧𑌿𑌂 𑌨𑌿𑌹𑌿𑌤𑌮𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑌜𑍍𑌞𑌾𑌃 𑌉𑌪𑌰𑍍𑌯𑍁𑌪𑌰𑌿 𑌸𑌞𑍍𑌚𑌰𑌨𑍍𑌤𑍋 𑌨 𑌵𑌿𑌨𑍍𑌦𑍇𑌯𑍁𑌃, 𑌏𑌵𑌮𑍇𑌵𑍇𑌮𑌾𑌃 𑌸𑌰𑍍𑌵𑌾𑌃 𑌪𑍍𑌰𑌜𑌾𑌃 𑌅𑌹𑌰𑌹𑌰𑍍𑌗𑌚𑍍𑌛𑌨𑍍𑌤𑍍𑌯 𑌏𑌤𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌲𑍋𑌕𑌂 𑌨 𑌵𑌿𑌨𑍍𑌦𑌨𑍍𑌤𑌿, 𑌅𑌨𑍃𑌤𑍇𑌨 𑌹𑌿 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑍂𑌢𑌾𑌃'

"ஹ்ருதயாகாஶத்தி லிருக்கும் பரமாத்ம நிஷ்டமான ஸத்யமான இந்தக் காமங்கள், அதாவது, கல்யாண குணங்கள், அந்தப் பரமாத்மாவுடன் கூட இருப்பவனான ஜீவனுக்கு அநுபவ யோக்யமாகாமல், அந்ருதமென்றும் அவித்யை யென்றும் சொல்லப்பட்ட ஸம்ஸாரத்தை வ்ருத்திசெய்வனவாகின்ற அவனுடைய விஷயேச்சைகளால் மறைக்கப்பட் டிருக்கின்றன. அந்தக் கல்யாண குணங்கள் நிஜமாக அவனுக்கு ப்ராப்யமாய் இருக்கும் போதே அவற்றின் அநுபவ ப்ராப்திக்கு அவனுடைய கர்மங்கள் ப்ரதிபந்தகங்களாக நிற்கின்றன. இந்தப் பரமாத்மோபாஸகனுடைய பந்துக்களில் எவரெவர் இந்த லோகத்தில் நஷ்டமானார்களோ, அவரை மறுபடி அவன் காணும்படி அடைய மாட்டான். ஆனால் அந்த உபாஸகன் ஹ்ருதயாகாஶமெனப் பட்ட ப்ரஹ்மத்தைத் தனது உபாஸநத்தா லடைந்தானாகில், அவனுடைய பந்துக்களில் எவர் இங்கே ஜீவித்திருக்கின்றனரோ, எவர் மரண மடைந்தார்களோ அவர்களையும், யாதொன்றை இச்சித்து அடையாம லிருந்தானோ, அவை யெல்லாவற்றையும் அடைகின்றவனாகின்றான். அதாவது நிரதிஶயமான போகங்களை யடைகின்றான். ஏனெனில், உபாஸகன் அபேக்ஷிக்கின்றவையும் அவனுக்கு மிகவும் போக்யங்களா யிருக்கின்றவையுமான அந்தக்

கல்யாண குணங்கள் தஹராகாஶமெனும் ப்ரஹ்மத்தினிடம் இருக்கின்றன. அவை முன் அந்ருதமெனும் அவித்யையால் மறைக்கப்பட்டிருந்தன. எப்படியென்றால், கீழே புதைக்கப்பட்ட ஹிரண்ய நிதியை, அது புதைக்கப்பட்ட விடமென அறியாதவர்கள், புதையலின் மீது தினந்தோறும் ஸஞ்சரிக்கின்றவரானாலும் அதை அடைகின்றாரில்லை. அப்படியே இந்த எல்லா ப்ரஜைகளும் ஸுஷுப்தி காலத்தில் தினந்தோறும் ஹ்ருத்கதனான பரமாத்மாவினிடம் செல்கின்றாராகிலும், அவனை யறிந்து அடைவதில்லை. ஏனென்றால் அவித்யையால் ஸ்வரூப ஜ்ஞானத்தை இழந்து ஸ்வபாவாந்தரத்தை அடைவிக்கப் பட்டார்கள்" என்று வசனங்கள் இருக்கின்றன. ஸத்யகாமம் என்றால் இச்சித்தபடி பலிக்கச் செய்வதோர் ஶக்திவிஶேஷம். இது ஈஶ்வரனுடைய கல்யாண குணங்களி லொன்று. ஈஶ்வரனும் ஜீவனும் ஒன்றென் பார்க்கு, ஜீவன், தானே ப்ரஹ்மமென் றறிந்தால் இந்த ஶக்தி யுண்டாகுமென்று ஏற்படுகின்றது. நமது ஸம்ப்ரதாயப்படி இந்த ஶக்தி முக்த ஜீவனுக்கு ஆவிர்ப்பவித்த போதிலும், அவனுக்குப் பகவானும் அவன் கல்யாண குணங்களும் தவிர, ப்ராப்யாந்தர மில்லாத படியால், ப்ராப்யாந்தரத்தைச் சொல்லுமிடத்து, அவனிச்சை யவற்றை ஸ்வீகரிக்க மாட்டாதென நிச்சயித்து, ஈஶ்வர குணங்களே அவன் காமனைக்கு விஷயங்களெனப் பாஷ்யம் செய்யப்பட்டது.

ப்ருஹதாரண்யகோபநிஷத்தில், '𑌅𑌯𑌂 𑌶𑌾𑌰𑍀𑌰 𑌆𑌤𑍍𑌮𑌾 𑌪𑍍𑌰𑌾𑌜𑍍𑌞𑍇𑌨𑌾𑌤𑍍𑌮𑌨𑌾𑌽𑌨𑍍𑌵𑌾𑌰𑍂𑌢 𑌉𑌤𑍍𑌸𑌰𑍍𑌜𑌨𑍍 𑌯𑌾𑌤𑌿 𑌯𑌤𑍍𑌰𑍈𑌤𑌦𑍂𑌰𑍍𑌧𑍍𑌵𑍋𑌚𑍍𑌛𑍍𑌵𑌾𑌸𑍀 𑌭𑌵𑌤𑌿' ॥ "இந்த சரீர ஸம்பந்தியான ஜீவாத்மாவானவன் மரணகாலத்தில் எப்போது ஊர்த்வ ஶ்வாஸம் அடைகின்றானோ, அப்போது ஸர்வஜ்ஞனை பரமாத்வால் அதிஷ்டிதனாய்க்கொண்டு, சரீரத்தை விட்டுப் போகின்றான்"

𑌸 𑌯𑌤𑍍𑌰𑌾𑌯𑌮𑌾𑌤𑍍𑌮𑌾𑌽𑌬𑌲𑍍𑌯𑌂 𑌨𑍍𑌯𑍇𑌤𑍍𑌯 𑌸𑌂𑌮𑍋𑌹𑌮𑌿𑌵 𑌨𑍍𑌯𑍇𑌤𑌿, 𑌅𑌥𑍈𑌨𑌮𑍇𑌤𑍇 𑌪𑍍𑌰𑌾𑌣𑌾 𑌅𑌭𑌿𑌸𑌮𑌾𑌯𑌨𑍍𑌤𑌿, 𑌸 𑌏𑌤𑌾𑌸𑍍𑌤𑍇𑌜𑍋𑌮𑌾𑌤𑍍𑌰𑌾𑌃 𑌸𑌮𑌭𑍍𑌯𑌾𑌦𑌦𑌾𑌨𑍋 𑌹𑍃𑌦𑌯𑌮𑍇𑌵𑌾𑌨𑍍𑌵𑌵𑌕𑍍𑌰𑌾𑌮𑌤𑌿. 𑌸 𑌯𑌤𑍍𑌰𑍈𑌷 𑌚𑌾𑌕𑍍𑌷𑍁𑌷𑌃 𑌪𑍁𑌰𑍁𑌷𑌃 𑌪𑌰𑌾𑌙𑍍 𑌪𑌰𑍍𑌯𑌾𑌵𑌰𑍍𑌤𑌤𑍇𑌽𑌥𑌾𑌰𑍂𑌪𑌜𑍍𑌞𑍋 𑌭𑌵𑌤𑌿 * * * 𑌤𑌸𑍍𑌯 𑌹𑍈𑌤𑌸𑍍𑌯 𑌹𑍃𑌦𑌯𑌸𑍍𑌯𑌾𑌗𑍍𑌰𑌂



𑌪𑍍𑌰𑌦𑍍𑌯𑍋𑌤𑌤𑍇, 𑌤𑍇𑌨 𑌪𑍍𑌰𑌦𑍍𑌯𑍋𑌤𑍇𑌨𑍈𑌷 𑌆𑌤𑍍𑌮𑌾 𑌨𑌿𑌷𑍍𑌕𑍍𑌰𑌾𑌮𑌤𑌿, 𑌚𑌕𑍍𑌷𑍁𑌷𑍍𑌟𑍋 𑌵𑌾 𑌮𑍂𑌰𑍍𑌧𑍍𑌨𑍋 𑌵𑌾𑌽𑌨𑍍𑌯𑍇𑌭𑍍𑌯𑍋 𑌵𑌾 𑌶𑌰𑍀𑌰𑌦𑍇𑌶𑍇𑌭𑍍𑌯𑌃, 𑌤𑌮𑍁𑌤𑍍𑌕𑍍𑌰𑌾𑌮𑌨𑍍𑌤𑌂 𑌪𑍍𑌰𑌾𑌣𑍋𑌽𑌨𑍂𑌤𑍍𑌕𑍍𑌰𑌾𑌮𑌤𑌿, 𑌪𑍍𑌰𑌾𑌣𑌮𑌨𑍂𑌤𑍍𑌕𑍍𑌰𑌾𑌮𑌨𑍍𑌤𑌂 𑌸𑌰𑍍𑌵𑍇 𑌪𑍍𑌰𑌾𑌣𑌾 𑌅𑌨𑍂𑌤𑍍𑌕𑍍𑌰𑌾𑌮𑌨𑍍𑌤𑌿, 𑌸𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌨𑍋 𑌭𑌵𑌤𑌿, 𑌸𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌨𑌮𑍇𑌵𑌾𑌨𑍍𑌵𑌵𑌕𑍍𑌰𑌾𑌮𑌤𑌿, 𑌤𑌂 𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌕𑌰𑍍𑌮𑌣𑍀 𑌸𑌮𑌨𑍍𑌵𑌾𑌰𑌭𑍇𑌤𑍇 𑌪𑍂𑌰𑍍𑌵𑌪𑍍𑌰𑌜𑍍𑌞𑌾 𑌚 ॥ * * * * 𑌅𑌯𑌮𑌾𑌤𑍍𑌮𑍇𑌦𑌂 𑌶𑌰𑍀𑌰𑌂 𑌨𑌿𑌹𑌤𑍍𑌯𑌾𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌂 𑌗𑌮𑌯𑌿𑌤𑍍𑌵𑌾𑌽𑌨𑍍𑌯𑌮𑌾𑌕𑍍𑌰𑌮𑌮𑌾𑌕𑍍𑌰𑌮𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌾𑌨𑌮𑍁𑌪𑌸𑌂𑌹𑌰𑌤𑌿 * * * 𑌯𑌥𑌾𑌕𑌾𑌰𑍀 𑌯𑌥𑌾𑌚𑌾𑌰𑍀 𑌤𑌥𑌾 𑌭𑌵𑌤𑌿, 𑌸𑌾𑌧𑍁𑌕𑌾𑌰𑍀 𑌸𑌾𑌧𑍁𑌰𑍍𑌭𑌵𑌤𑌿, 𑌪𑌾𑌪𑌕𑌾𑌰𑍀 𑌪𑌾𑌪𑍋 𑌭𑌵𑌤𑌿, 𑌪𑍁𑌣𑍍𑌯𑌃 𑌪𑍁𑌣𑍍𑌯𑍇𑌨 𑌕𑌰𑍍𑌮𑌣𑌾 𑌭𑌵𑌤𑌿, 𑌪𑌾𑌪𑌃 𑌪𑌾𑌪𑍇𑌨 । 𑌅𑌥𑍋 𑌖𑌲𑍍𑌵𑌾𑌹𑍁𑌃 𑌕𑌾𑌮𑌮𑌯 𑌏𑌵𑌾𑌯𑌂 𑌪𑍁𑌰𑍁𑌷 𑌇𑌤𑌿, 𑌸 𑌯𑌥𑌾𑌕𑌾𑌮𑍋 𑌭𑌵𑌤𑌿 𑌤𑌤𑍍𑌕𑍍𑌰𑌤𑍁𑌰𑍍𑌭𑌵𑌤𑌿, 𑌯𑌤𑍍𑌕𑍍𑌰𑌤𑍁𑌰𑍍𑌭𑌵𑌤𑌿 𑌤𑌤𑍍𑌕𑌰𑍍𑌮 𑌕𑍁𑌰𑍁𑌤𑍇, 𑌯𑌤𑍍𑌕𑌰𑍍𑌮 𑌕𑍁𑌰𑍁𑌤𑍇 𑌤𑌦𑌭𑌿𑌸𑌂𑌪𑌦𑍍𑌯𑌤𑍇 । * * * 𑌤𑌦𑍇𑌵 𑌸𑌕𑍍𑌤𑌃 𑌸𑌹 𑌕𑌰𑍍𑌮𑌣𑍈𑌤𑌿 𑌲𑌿𑌙𑍍𑌗𑌂 𑌮𑌨𑍋 𑌯𑌤𑍍𑌰 𑌨𑌿𑌷𑌕𑍍𑌤𑌮𑌸𑍍𑌯, 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌯𑌾𑌨𑍍𑌤𑌂 𑌕𑌰𑍍𑌮𑌣𑌸𑍍𑌤𑌸𑍍𑌯 𑌯𑌤𑍍𑌕𑌿𑌞𑍍𑌚𑍇𑌹 𑌕𑌰𑍋𑌤𑍍𑌯𑌯𑌂, 𑌤𑌸𑍍𑌮𑌾𑌲𑍍𑌲𑍋𑌕𑌾𑌤𑍍𑌪𑍁𑌨𑌰𑍈𑌤𑍍𑌯𑌸𑍍𑌮𑍈 𑌲𑍋𑌕𑌾𑌯 𑌕𑌰𑍍𑌮𑌣 𑌇𑌤𑌿 𑌨𑍁 𑌕𑌾𑌮𑌯𑌮𑌾𑌨𑌃 । 𑌅𑌥𑌾𑌕𑌾𑌮𑌯𑌮𑌾𑌨𑍋 - 𑌯𑍋𑌽𑌕𑌾𑌮𑍋 𑌨𑌿𑌷𑍍𑌕𑌾𑌮 𑌆𑌪𑍍𑌤𑌕𑌾𑌮 𑌆𑌤𑍍𑌮𑌕𑌾𑌮𑍋, 𑌨 𑌤𑌸𑍍𑌯 𑌪𑍍𑌰𑌾𑌣𑌾 𑌉𑌤𑍍𑌕𑍍𑌰𑌾𑌮𑌨𑍍𑌤𑌿, 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑍈𑌵 𑌸𑌨𑍍 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌪𑍍𑌯𑍇𑌤𑌿 ॥'

"இந்த ஜீவாத்மாவானவன் (மரணகாலத்தில்) துர்பலத்தை மிகவுமடைந்து, இந்த்ரியங்கள் கலங்கி ஈஷத் மயக்க மடைகின்றான். அப்போது அந்த இந்த்ரியங்கள் அவனது ஸமீபத்தி லடைகின்றன. அவன் இந்த்ரியங்களுடைய தேஜோ ரூபமான அம்சங்களை நன்றாகக் க்ரஹித்துக்கொண்டு, அவற்றுடன் ஹ்ருதயத்தில் ப்ரவேஶிக்கின்றான். இவனது கர்மப்ரயுக்தனாய் ஸூர்யாம்ஶனான யாதொரு புருஷன் இவனது த்ருஷ்டி விஷயத்தில் அநுக்ரஹம் செய்துகொண்டிருந்தானோ அவன், எப்போது ஸூர்யனில் லயிக்கத் திரும்புகின்றானோ, அல்லது, சக்ஷுஸ்ஸில்

ஸங்கிஹிதனாய் நின்று, இந்த ஜீவன் எப்போது ரூபாதி விஷய
ஸாக்ஷாத்காரத்தில் பராங்முகனாய் ஹ்ருதய தேசத்தை அடை
கின்றானோ, அப்போது ஜீவன், ரூபாதிகளை ஸாக்ஷாத்கரிப்ப
தில்லை. * * * இப்படி மரண மடைகின்றவனுக்கு ஹ்ருத
யத்தினின்று நிர்க்கமந த்வாரம் ப்ரகாஶத்தை யடைகின்றது.
அப்படிப் பிரகாஶிக்கின்ற த்வாரத்தின் மூலமாக இந்த ஜீவாத்மா,
கண்களின் வழியாகவோ, ஶிரஸ்ஸின் வழியாகவோ, இதர சரீர
ப்ரதேசங்களின் வழியாகவோ, சரீரத்தினின்று வெளிப்படுகின்
றான். வெளிப்படுகின்ற ஜீவனை முக்ய ப்ராணன் அநுஸரித்து
வெளிப்படுகின்றது. வெளிப்படுகின்ற முக்யப்ராணனைப் பின்
தொடர்ந்து, அதை ஆஶ்ரயித்து நிற்கும் இந்த்ரியங்கள் வெளிப்
படுகின்றன. அந்தத் தசையில் ஜீவன் கர்மவஶத்தால் ப்ராப்
தவ்யமான ஜந்மாதி விஷய ஜ்ஞாநத்துடன் கூடினவனாகின்றான்.
இந்த ஜ்ஞாநத்துடன் கூடினவனாகவே கர்மோசித லோகப்ராப்தி
பர்யந்தமோ, சரீராந்தர ப்ராப்தி பர்யந்தமோ ஸஞ்சரிக்கின்றான்.
அவனால் ஸம்பாதிக்கப்பட்ட ஜ்ஞாநமென்ன, கர்மமென்ன, இவற்
றால் ஸம்பாதிதமான பூர்வ வாஸனையென்ன, இவை மேல்
சொன்னபடி ப்ரயாணிக்கும் ஜீவனைத் தொடர்கின்றன. * * *
இந்த ஆத்மா பூர்வ சரீரத்தைக் கீழே தள்ளி ஜடமாக்கி, அந்ய
சரீரத்தை ஆஶ்ரயமாகக் கொண்டு பூர்வசரீரத்தை த்யாகம்
செய்து, அந்ய சரீர ப்ரவேஶத்தைக் குறித்து ப்ரயத்நபரனாகின்
றான். * * * இந்தப் புருஷன் எவ்விதம் கர்மங்களைச் செய்வ
தற்கும் வ்ருத்தங்களை ஆசரிப்பதற்கும் ஸமர்த்தனாகின்றானோ,
அவற்றிற்கு அநுகுணமான பலத்தை ஸம்பாதிக்கின்றான். ஸத்
கர்மாநுஷ்டாநத்தால் ப்ராஹ்மணாதி ரமணீய சரீரங்களை ஸம்பா
திக்கின்றான். பாப கர்மங்களால் சண்டாளாதி ஜந்மங்களை யடை
கின்றான். ஏனென்றால், ப்ராசீந புண்ய கர்மங்களால் புண்ய
ஜந்மமும், பாப கர்மங்களால் பாப ஜந்மமும், இவனுக்கு லபிக்
கின்றன. ஆகையால் பந்த மோக்ஷ விசாரத்தில் குஶலர்கள்,
புண்யாபுண்ய கர்மங்கள் புருஷனுடைய காமமடியாகப் பலித்து,
அவனுடைய உத்தர ஜந்மங்களில் அவற்றிற்குத் தக்க சரீர
க்ரஹணத்துக்குக் காரணமாகின்ற படியால், இந்தப் புருஷன்
காமமயனே என்று சொல்கின்றனர்; அதாவது இவனது ஸம்
ஸாரத்துக்குக் காமமே மூலமென்றாகின்றது. புருஷனுக்கு எந்த



ப்ரகாரம் காமனைகள் உதிக்கின்றனவோ, அந்த ப்ரகாரமே அத்ய
வஸாயம் உண்டாகின்றது. பிறகு நிஶ்சயித்தபடிக் கர்மங்கள்
செய்கின்றான். பின்பு தத்கர்ம பலங்களை அடைகின்றான். * * *
இவனுடைய ஜ்ஞாந காரணமாக விருக்கும் மநஸ்ஸானது, தேஹ
வியோக காலே, எந்த பலத்தை அபேக்ஷித்து த்ருடமாகப்
பற்றுகின்றதோ, அதையே இச்சித்தவனாய்க் கொண்டு, தத்பலா
பேக்ஷையால் செய்த கர்மஶக்தியுடன் கூடினவனாய்க் கொண்டு,
அந்தப் பலத்தை க்ரமேண அடைகின்றான். இந்த லோகத்தில்,
பலத்தை உத்தேசித்து யாதொரு கர்மத்தைச் செய்தானோ,
அந்தக் கர்மத்தின் முடிவைப் பலாநுபவத்தால் அடைந்து, மேல்
உலகத்தினின்று இந்தக் கர்ம லோகத்தின் பொருட்டு மறுபடியும்
வருகின்றான். ஏனென்றால், இது கர்ம ப்ரதாந லோகமானபடி
யால் இவ்விடம் மறுபடி கர்மாரம்ப நிமித்தம் வருகின்றான்.
இப்படிக் காமமுடைய ஸம்ஸாரி ஸஞ்சரிக்கின்றான். ஆனால்
யாதொருவன் ஸர்வத்ர ஆத்ம தர்ஶந ஶீலனாகி ஆத்மாவைத்
தவிர இச்சிக்கவேண்டிய வஸ்துவின் இன்மையால், ஆத்மாவையே
இச்சித்தவனாய்க் கொண்டு, அதனாலே ஸகல காமத்தையும் அடைந்
தவனாகி, இதர காமங்களை முற்றிலும் நிரஸித்தபடியால் காம
மற்றவனாய் இருக்கின்றானோ, அவனுக்கு மரணகாலே தேஹாந்
தர ப்ராப்தி நிமித்தம் ப்ராணோத்க்ரமணம் இல்லை. ஆவிர்ப்பூத
மான ப்ரஹ்ம ஸத்ருஶ ஸ்வரூபத்தை யுடையவனாய்க் கொண்டு
ப்ரஹ்மத்தில் லீநமாகின்றனன்" என ப்ரமாண மிருக்கின்றது.

இப்படி ஜீவவிஷயமான ஸர்வ வாக்யங்களையும் இங்கே
யோசிக்க அவகாஶமில்லை. சிலவற்றை மாத்ரம் எடுத்தோம்.
இதனால் ஏற்படும் பொருள் என்ன வென்றால்: ஜீவாத்மா ஸம்
ஸார தசையில் எப்போதும் பரமாத்மாவுடன் கூடிக்கொண்டே
இருக்கின்றான். ஆனால் அந்த ஜ்ஞாநம் அவன் ஸம்ஸரிக்குமளவில்
அவனுக்கு அநுபவ ஸித்தமன்று. ஶாஸ்த்ரம் அந்த ஜ்ஞாந
விஷயமாக விஶ்வாஸத்தை உண்டு பண்ணலாம். இந்த லோகத்
தில், அது யோக மொன்றால் மாத்ரம் ஸாக்ஷாத்கார யோக்ய
மாகும். நித்யனான ஜீவனுக்கு நித்யனான ஈஶ்வரன் நித்யாதார
னாக இருக்கும் போதும், ஜகந்நிர்மாண சதுரன் ஸ்வ ஸங்கல்
பத்தால் வ்யஷ்டி ஸ்ருஷ்டிக்குப் பின், சிதசித் வஸ்துக்கள்
தோறும் நியமநார்த்தம் அநுப்ரவேஶம் செய்திருக்கும் நிலைமை

யைப் பற்றித் தான், ஜீவனும் பரனும் ஸதா ஹ்ருதய குஹையில் கூடி யிருக்கின்றன ரென்று சொல்லப்பட்டது.

ஸம்ஸார தசையில், ஜீவனும் ப்ராணனும், புருஷனும் அவன் சாயையுமென எப்போதும் கூட விருக்கின்றார். பெரிய தீயி னின்று பொறிகள் உண்டாய், அதின்கண்ணே லயிப்பது போல், ஜீவன் பரமாத்வினிட மிருந்தே உண்டாய் லயிக்கின்றானென முண்டகோபநிஷத் வாக்யத்தைப் பூர்வமே எடுத்திருக்கிறோம். அப்படியே ப்ராணனும் பரமாத்மாவினிடம் உண்டாகின்ற உண்மையை ப்ரச்நோபநிஷத் வாக்யத்தால் வெளியிட்டோம். 'ஏதஸ்மாஜ்ஜாயதே ப்ராண:' என்று முண்டகோபநிஷத்திலும் அதே விஷயம் சொல்லப்பட் டிருக்கிறது. ப்ராணன் ஜீவனைத் தொடர்ந்து ஸம்ஸரிப்பது ஈச்வர ஸங்கல்பம்.

அவித்யையால் தத்வ ஹித புருஷார்த்த ரூபமான உண்மைகள் ஜீவனுக்குத் தெரிகின்றதில்லை. அநாதியாக அவித்யையால் மூடப்பட்ட ஜீவன் காமமயனாய்ப் போந்து, யதா காமம் அத்யவஸாயமும், யதா அத்யவஸாயம் கர்மங்களும் செய்துகொண்டு கர்ம பலங்களை யநுபவிக்கின்றான். அவன் செய்யும் கர்மங்கள் புண்ய ரூபமாகவும் பாப ரூபமாகவும் பரிணமிப்பதால் அவற்றிற்கு இசைந்த பலங்களை அவன் அநுபவிக்கின்றான். இரண்டு ரூபமான கர்மங்களும் மோக்ஷ ப்ராப்திக்கு விரோதங்களாக நிற்கின்றன. காமம் இவனது ப்ரவ்ருத்திக்குக் காரணமாகும் வரையில் ஸம்ஸாரம் இவனை விட்டு நீங்க மாட்டாது.

இவனுடைய புண்ய கர்மாநுகுணமாக 'பித்ர்யம்வா, காந்தர்வம்வா, தைவம்வா, ப்ராஜாபத்யம்வா, ப்ராஹ்மம்வா,' என்று ப்ருஹதாரண்யகோபநிஷத் வெளியிடும் வழியே, பிதுர்க்கள் லோகத்திலோ, கந்தர்வ லோகத்திலோ, தேவ லோகத்திலோ, மரீச்யாதி ப்ரஜாபதிகள் லோகத்திலோ, ப்ரஹ்மாவினுடைய லோகத்திலோ, இவனுக்கு அந்தந்த லோகோசிதமான சரீர ப்ராப்தி யுண்டாகின்றது. கீதையில் பகவான் 'ஆப்ரஹ்மபுவநால்லோகா: புநராவர்திநோர்ஜுந' என்று சொல்லுகின்றார். ஜீவன் ப்ரஹ்மாவினுடைய லோகம் சென்றாலும், புந



ராவ்ருத்தி உண்டு. எந்தக் கர்மங்களின் பயனாக அவ்வோலோகங்களில் ஜீவன் சரீரவானாகின்றானோ, 'ப்ராப்யாந்தம் கர்மணஸ்தஸ்ய, தஸ்மால்லோகாத் புநரைதி அஸ்மை லோகாய கர்மணே' என்று ப்ரஹதாரண்யக உபநிஷத் விவரித்த வளவில், கர்ம பலத்தை யநுபவித்து விட்டு, அந்தந்த லோகங்களினின்று இந்தக் கர்மபூமியின் பொருட்டுத் திரும்புகின்றான்.

புண்ய கர்ம மில்லாதவனுக்கும், பாபத் தொழில் செய்தவனுக்கும் புநர்ஜந்மம் மேல் சொன்ன உலகங்களில்லை. இவ்வுலகின்கண் மநுஷ்ய சரீரமோ இன்னும் கீழ்ப்பட்ட சரீரமோ கர்மாநுகுணமாகக் கிடைக்கும்.

இப்படிப் பஹு சரீர ப்ராப்தி ரூபமான ஸம்ஸார தசையில், ஜீவன் ஒவ்வொரு ஜந்மத்திலும் ஸம்பாதித்த ஜ்ஞாநம், கர்மம், பூர்வவாஸனை இவற்றுடன் கூடினவனாய், ப்ராணன் இந்த்ரியாதிகளுடைய தேஜோரூபமான அம்சங்கள், இவை அடங்கி பூத ஸூக்ஷ்மங்களா லாகிய ஸூக்ஷ்ம சரீர விசிஷ்டனாய், ஸ்தூல சரீரங்களில் ப்ரவேசித்து ஜநந மரணங்களை யடைகின்றான். ஒரு ஜந்மம் முதல், மற்றோர் ஜந்மம் வரையில் ஸம் பாவிதமான பால்யம், யௌவநம், ஜரை, மரணம், கர்ப்பவாஸம் ஆகிற ஸர்வ விகாரங்களும், ப்ரக்ருதி ஸங்காத ரூபமாகிய ஸ்தூல சரீரங்களை ஆச்ரயித்து நிற்கின்றன. இவை ஆத்மாவையாவது அவனை ஸம்ஸார தசையில் ஆச்ரயித்திருக்கின்ற ப்ராணாதி விசிஷ்டமான ஸூக்ஷ்ம சரீரத்தையாவது ஸம்பந்திக்கமாட்டா.

'[illegible] விகாரா ।
[illegible] க்ஷேத்ரம் ப்ரக்ருதே [illegible]।'.

என்கிறபடி, ஜடமாயும், பரப்ரயோஜநமே ஸ்வரூபமாயும், இடைவிடாமல் விகாரத்தை யடைகின்றதாயும், ஸத்வாதி குணத்ரயங்களுக்கு ஆச்ரயமாயும் இருக்கப்பட்ட ப்ரக்ருதியின் ஸங்காதங்கள் தான் ஸம்ஸாரிகளின் சரீரங்களெனச் சொல்லப்படுகின்றது. இப்படி ப்ரக்ருதியின் பரிணமங்களா லமைந்த ஸர்வ பதார்த்தங்களும் விகாரார்ஹங்களாதலால் சரீரங்கள் விகாரமின்றி நிலைக்கமாட்டா. இந்த விகாராந்தர்க்கதமான ஜநந மரணங்

கள் சரீரவானுக்கு த்ருவமாக ஏற்பட்டிருக்கிறபடியால், விவேகி இவற்றைப்பற்றி சோகிக்க விடமில்லை.

ப்ரக்ருதியின் குணங்களின் பரிணமங்களால் புருஷன் குண தாரதம்யங்களை யடைகின்றான். அநேக ஜந்மங்களில் அவன் ஆர்ஜித்த வித்யை, கர்மம், பூர்வவாஸனை என்று முன்னுரைத்த மூன்றும் ஸூக்ஷ்ம சரீரங்களில் பொருந்தி, அவன் ஸ்தூல சரீர ப்ரவேசம் பண்ணுங்கால், அவனுடைய காமங்களுக்கும் ப்ரவ்ருத்திகளுக்கும் காரணமாகின்றன. மாதா பிதாக்களிடம் காணாத விசேஷ சக்திகள், மக்களிடம் காண்கின்றோம். அவரிடம் ப்ரகாசித்த சக்தி விசேஷங்களை மக்களிடம் காணாமலும் இருக்கின்றோம். இதற்குக் காரணம், ஒவ்வொரு புருஷனும் நூதந சரீர ப்ராப்தியை அடையுங்கால், ஜந்மாந்தரங்களில் ஆர்ஜித்த அநுபவ ஜந்யமான சக்தி விசேஷங்கள். ஸூக்ஷ்ம சரீர விசிஷ்டரா யிருக்கும் அவஸ்தையில் புருஷர்க்குள் பரஸ்பர சரீர ஸம்பந்தமே இல்லை. சரீர ஸம்பந்தங்க ளனைத்தும் ஸ்தூல சரீர நிபந்தநம்.

இப்படி ஜநநாந்தரார்ஜிதமான அம்சங்கள் தவிர, புருஷனது ஸ்தூல சரீரத்துக்குப் பீஜ ரூபமாக மாதா பிதாக்களிடம் இவனுக்குக் கிடைத்த அல்பாம்சமானது, அவர்க்குள்ள சாரீரக மாநஸிக குண தோஷங்களை இவன் அடைவதற்குக் கிஞ்சித் ஹேதுவாகின்றது. இன்னும் இவனது சரீர வ்ருத்திக்கு உபகாரக மாகின்ற அந்நங்களும் இவனிடம் ப்ரகாசிக்கும் குண தோஷங்களுக்கு ஈஷத்காரணமாகும்.

இவற்றை யெல்லாம் அதிக்ரமிப்பது, இவனுக்கு நேரிடும் ஸம்ஸர்க்க நிமித்தமாய் வரும் தோஷகுணங்கள். இவனது ப்ராசீந கர்மம், இவனது ஜந்ம ப்ரதேசத்தையும் ததநுகுண ஸம்ஸர்க்கங்களையும் பலிக்கச் செய்யும். ஆகவே பூர்வவாஸனை, மாதா பிதாக்கள் ஸம்பந்தம், ஸம்ஸர்க்கம் என மூன்று காரணங்கள் ஒருமித்துப் புருஷன் காமயமாநனாகவும், வ்யாபாரவானாகவும் பரிணமிக்கின்றான். ஸம்ஸர்க்கம் என்பதில் ஆஹாராதிக ளந்தர்க்கதம்.

ஆனால், 'கர்த்தா சாஸ்த்ரார்த்தவத்வாத்', எனும் ஸூத்ரத்தின் படியே, 'ஸ்வர்க்க காம:, யஜேத', 'முமுக்ஷு: ப்ரஹ்மோபாஸீத', என்கிற நியோகங்கள், புருஷன் ஸ்வயம் கர்த்தா வில்லாவிட்டால், அர்த்தத்துடன் கூடியிரா. இன்னும் இவன் ப்ரவ்ருத்திகளுக்கு இவனுடைய கரண களேபரங்களுடைய ஸஹகாரம் அவச்யம் வேண்டியது. 'யேந ரூபம் ரஸம் கந்தம் சப்தாந் ஸ்பர்சாம்ச்ச மைதுநாந் ஏதேநைவ விஜாநாதி, யேந வக்ஷ்யதி பச்யதி, யேந ச்ரோத்ரம் ச்ருதம், யேந ப்ராண: ப்ரணீயதே, யேந வாமம் ருதம் ச, யேநாஹம் பூர்ணாபோஷம்,' என்கிறபடி, ஸர்வேந்த்ரியங்களையும் ஸம்ஸ்கரித்து நியமநம் செய்கின்ற ஈச்வராநுக்ரஹ மில்லாவிட்டால், புருஷனுக்கு அவன தென்று அபிமாநிக்கப்பட்ட கரணங்களும் சரீரமும் இச்சாநுகுணமாக உபயோகப்படா. 'ஏஷ ஹ்யேவ ஸாது கர்ம காரயதி,' என்று ஸ்வயமே அருளிச்செய்தானன்றோ? ஆனால் ஈச்வரன் கர்மாநுகுண பலத்தைக் கொடுக்கின்றா னாதலால், புருஷனுக்குக் கர்ம மடியாக இச்சையும், இச்சையை யநுஸரித்து ப்ரயத்நமும் உண்டாகுங்கால், ஈச்வரன் கர்மாத்யக்ஷனாகவே நின்று, புருஷன் கார்யங்களுக்கு ஸஹகாரியாகின்றான். ஆதலால் புருஷனுடைய கர்த்ருத்வம் பராதீந கர்த்ருத்வம் என்று சொல்லப் படுகின்றது. இதை அநுஸரித்துத்தான், 'அதிஷ்டாநம் ததா கர்த்தா கரணம் ச ப்ருதக்விதம், விவிதாச்ச ப்ருதக் சேஷ்டா தைவம் சைவாத்ர பஞ்சமம் ॥ சரீர வாங்மநோபிர் யத் கர்ம ப்ராரபதே நர: । ந்யாய்யம் வா விபரீதம் வா பஞ்சைதே தஸ்ய ஹேதவ: । தத்ரைவம் ஸதி கர்த்தாரம் ஆத்மாநம் கேவலம் து ய: । பச்யத்யக்ருதபுத்தித்வாந் ந ஸ பச்யதி துர்மதி:', "சாஸ்த்ரத்தால் விஹிதமானதும் ப்ரதிஷித்த மானதுமான காயிக வாசிக மாநஸிக ரூபமாயிருக்கின்ற கர்மங்களைப் புருஷன் ஆரம்பிக்குமிடத்து, அவனது சரீர மாகின்ற அதிஷ்டாநம், ஜீவாத்மாவாகிற கர்த்தா, நாநா ப்ரகாரமாயுள்ள மநஸ்ஸும் ஜ்ஞாந கர்மேந்த்ரியங்களுமாகிற கரணங்கள், இவற்றிற்கு ஆதாரமா யுள்ள ப்ராண பாநாதிகளுடைய சேஷ்

டைகள், கர்மநிஷ்பத்தியைப் பற்றி அநுக்ரஹிக்க வேண்டியவனை அந்தர்யாமி ஆகிய இவ்வைந்தும் ஹேதுக்களாய் நிற்க, கேவலம் ஆத்மாவை மாத்ரம் கர்த்தாவாக எவன் நினைக்கின்றானோ அவன் யதாவஸ்தித வஸ்து ஸ்வபாவமறியாத படியால் விபரீத மதியுடன் கூடியவன்; ஸரியாகத் தெரிந்தவனல்லன்" என்று பகவத் கீதா ச்லோகங்கள் பிறந்தன. ஆகவே காமம் உதித்தபின், தததநுகுண ப்ரவ்ருத்தி விஷயத்தில் ஸங்கல்பம் செய்வதற்குப் புருஷன் சக்தன். ஸங்கல்பத்தின் பிறகு, இவனுடைய ஸுக்ருத துஷ்க்ருத பரிபாகப்படி, அவற்றை வ்யாஜமாக அபேக்ஷித்த ஈச்வரன், இவனது கரண களேபரங்களும் மற்ற ஸந்தர்ப்பங்களும், இவனது ஸங்கல்பாநுரூபமான கர்ம நிஷ்பத்தியை உண்டாக்குவதற்கோ, உண்டாகாமல் தடுப்பதற்கோ ஸமர்த்தங்களாகச் செய்கின்றான். ஸங்கல்பத்தின் பலன் தான் ஜீவனுடையது. ஓரிடம் திருடவேண்டுமென்று ஸங்கல்பித்த புருஷன், தஸ்கர வ்யாபாரத்துக்கு அநுகூலமான ஸமயம் வரையில் காத்துவிட்டு, நிசியில் புறப்பட்டுப் போய், உத்தேசித்த க்ருஹத்தில் ப்ரவேசித்து, அபேக்ஷித்த வஸ்து இருக்கும் ஸ்தானத்தை யடைந்து, அதை க்ரஹித்துக்கொண்டு, அந்த வீட்டை விட்டு வெளியேவந்து, ஸ்வ ஸ்தானத்துக்குத் திரும்புகின்றான். திரும்பி வந்து விட்டானாகில் அவன் இஷ்டம் நிறைவேறியது. மையிருளை ப்ரதீக்ஷித்துக் கொண்டிருக்கையில், அவனுக்குத் தஸ்கரத்தொழில் அநுசிதம் என்று தோன்றி, அந்த ஸங்கல்பத்தை அவன் த்யாகம் செய்யலாம். புறப்படும் வழியில், பாம்பு கடித்தோ, நகர ரக்ஷகரைக் கண்டு பயந்தோ, அவரிடம் அடிபட்டோ, நினைத்த கார்யம் அவனுக்கு நிறைவேறாமல் போகலாம். உத்தேசித்த ஸ்தானத்தில் அகப்பட்டுக்கொண்டு, அவனெண்ணம் வ்யர்த்தமாகலாம். திருடின பொருளுடன் திரும்புங்கால், பொருளுடையவனோ, மற்றவரோ, அவனைப் பிடித்துக்கொண்டால், அவனது எண்ணம் நிறைவேறாமற்போகும். ஆனபடியால் தஸ்கரவிஷயமான ஸங்கல்பத்தைக் குறித்து இவன் பாபி யாகின்றான். அநுதாபம் பின்னால் பிறந்தால், அது யதோசிதம் இவனது பாபத்திற்கு ப்ராயச்சித்தமாகும். ஸங்கல்பித்தபடி கார்யம் ஏற்பட்டாலும், ப்ரதிபந்தங்களால் கார்யம் தடைப்பட்டாலும், இவனுடைய பாபம் ஏகரூபமே. பீனல் கோட் விஷயத்தை இவ்விடம்



நாம் யோசிக்கின்றோமில்லை. ராஜதண்டனையை இவன் அடைந்
தானாகில், ஈச்வர தண்டனை விலகிப் போகும். ராஜ தண்ட
னையை இவன் தப்பினானாகில், கர்மாத்யக்ஷன் இவன் விஷயத்தில்
அதோநயநம் செய்கின்றவனே.

ஆதலால் சரீர ஸம்பந்த மின்றி ஜீவனுக்குக் காமமு மில்லை,
கர்மமு மில்லை. காமமு மின்றிக் கர்மமு மின்றி இவனுக்கு சரீ
ராந்தர ப்ராப்தியு மில்லை. சரீரம் ப்ரக்ருதியின் பரிணாமம். ப்ரா
க்ருத குணங்கள் சரீரங்களில் பூர்வவாஸனைகளின் படியே தர
தம பாவத்தால் அமைந்திருக்கின்றன.

'ப்ரக்ருதே: க்ரியமாணாநி குணை: கர்மாணி ஸர்வச: ।
அஹங்கார விமூடாத்மா கர்த்தாஹமிதி மந்யதே ॥
தத்வவித்து மஹாபாஹோ குணகர்ம விபாகயோ: ।
குணா குணேஷு வர்த்தந்த இதி மத்வா ந ஸஜ்ஜதே' ॥

"ப்ரக்ருதியின் ஸாத்விக ராஜஸ தாமஸ குணங்களுடைய
வைஷம்யங்களால் ஸர்வ ப்ரகாரத்தாலும் உத்பந்நமாகின்ற கர்மங்
களைக்குறித்து, ப்ரக்ருதியினுடையவும் அதன் குணங்களுடைய
வும் ஸங்காதமாகின்ற கரண களேபரங்களில் அவிவேகத்தால்
தான் எனும் அபிமானத்தை வஹிக்கின்ற புருஷன், தன்னைக்
கர்த்தாவாக நினைக்கின்றான். ஓ அர்ஜுநா! குணங்கள், கர்மங்கள்,
இவற்றின் விபாக விஷயத்தில் தத்வத்தை அறிந்தவன், ஸத்வாதி
குணங்கள் அவற்றின் கார்யமாகின்ற கர்மங்களில் ப்ரவ்ருத்திக்
கின்றன என்று எண்ணி, அந்தக் கர்மங்களில் தனக்கோ ரபிமா
நத்தைப் பாராட்டமாட்டான்" என்கிற உபதேசத்தை இவ்வி
டம் ஸ்மரிக்க வேண்டும். அதர்மத்திலு அந்யாயத்திலும் ப்ரவ்ருத்
திக்கிறவனுக்கு இந்த உபதேசம் வ்யர்த்தம். தத்வ ஸ்வரூபத்தை
யறிந்து பகவத் கைங்கர்ய ரூபமான தர்மத்தை யநுஷ்டிக்கிறவ
னுக்கு இது உபதேசம். பாருடைய அதர்ம ப்ரவ்ருத்தியைப்
பற்றி இவ்விதம் யோசித்து, அவர் அஜ்ஞாநத்தால் அவ்விதம் செய்
கின்றாரெனத் தெளிந்து அவர் நிமித்தம் சோகிக்கின்றவனுக்கு
இது உபதேசம்.

பத்ராதிபர்.

# ஸ்ரீ அஹோபில ந்ருஸிஹ்மன் விஷயம்.

## உ-ப்ரஹ்லாத சரித்திரம்.

இவ்விதமாகத் தைத்ய பாலர்களுக்கு ப்ரஹ்லாதன் உபதேசம் செய்வதைப் பார்த்த அஸுரர்கள் பயந்து, ஹிரண்யகசிபுவினிடம் போய்த் தெரிவித்தார்கள். அவன், தன் அரண்மனையில் இருக்கும் பாசகர்களை வரவழைத்து மிகவும் க்ரூரமான விஷங்களைப் பலவித போஜ்ய வஸ்துக்களில் கலந்து, ப்ரஹ்லாதனுக்குக் கொடுக்கும்படி ஆஜ்ஞாபித்தான். தெரிந்து கொடுத்தால் முன்போல் பரிஹரித்து விடுவானென்றெண்ணி, ப்ரஹ்லாதனுக்குத் தெரியாமல் விஷங்களை அவன் புசிப்பவற்றுள் கலக்கச் சொன்னான். ப்ரஹ்லாதன், குமார்க்கத்தைத் தான் அவலம்பித்ததுமன்றி, மற்றோர்க்கும் உபதேசிக்கும் தேசிகனாயினானென்று, அவ்விதம் தயையின்றிக் கட்டளையிட்டான். பாசகரும் ஹிரண்யகசிபு சொல்லியபடிச் செய்து விட்டனர். ப்ரஹ்லாதன் அநந்தனுடைய நாமத்தை உச்சரித்து அபிமந்த்ரித்து, அவர்கள் கொடுத்த விஷமிச்ரமான அந்நத்தை அருந்தினான். பிறகு ஓர் விகாரத்தையு மடையாமல், நிச்சலமான மனத்துடன் அவனிருந்ததையும், அநந்தன் நமோச்சாரணத்தால், வீர்யம் போன விஷத்தை அவன் ஜரித்துக் கொண்டதையும், அந்தப் பாசகர் கண்டு பயந்து, ஹிரண்யகசிபுவுக்குத் தெரிவித்தார்கள். பின்பு அஸுரராஜன் புரோஹிதர்களை வரவழைத்து, ப்ரஹ்லாதன் நாசமடையத்தக்க அபிசார ப்ரயோகத்தைப் பண்ணும்படி ஆஜ்ஞாபித்தான். புரோஹிதர்கள் ப்ரஹ்லாதனிடம் சென்று, "ப்ரஹ்லாத! மூன்று லோகத்திலும் கீர்த்தி பொருந்திய ப்ரஹ்மாவினுடைய வம்சத்தில் பிறந்தாய். தைத்ய ராஜனாகிய ஹிரண்கசிபுவுக்குக் குமாரனாயிருக்கின்றாய். உனக்குத் தேவர்களைப் பற்றியாவது, அநந்தனைப் பற்றியாவது, மற்ற யாரைப் பற்றியாவது ஆகவேண்டியது என்ன? உன் பிதா ஸர்வலோகங்களுக்கும் ஆச்ரயமாக விருக்கின்றார். நீயுமப்படியே ஆகப் போகின்றாய். ஆனபடியால், விபக்ஷர்களுடைய ஸ்தோத்ரரூபமான ப்ரபந்தத்தைப் பரித்யாகம் செய். எல்லாக் குருக்களுக்குள்ளும்



பிதாவானவர் உத்தமமான குரு. ஆகையால் அவரே ச்லாகிக்கத் தகுந்தவர்—" என்றிவ்விதம் சொன்னார்கள். இதைக் கேட்டு ப்ரஹலாதனும், "நீங்கள் சொல்வது ஸரிதான். மரீசியினுடைய இந்தக் குலம் ச்லாக்யமானதே. மூன்று லோகத்திலும் ஒருவனும் இந்த விஷயத்தில் அந்யதா சொல்லமாட்டான். என்பிதா உலகத்தில் யாவர்க்கும் உயர்ந்த சரித்ரத்துடன் கூடினவர். இது எனக்குத் தெரியும். எல்லாக் குருக்களுக்குள்ளும் பிதா பரமகுரு என்று நீங்கள் சொன்னதும் ஸரியே. அதில் ஈஷத்தும் வித்யாஸமில்லை. ப்ரயத்ந பூர்வமாக அவர் பூஜிக்கத்தக்கவர். இதை என் மநஸ்ஸில் த்ருடமாக நிச்சயித்திருக்கிறேன். அவர் விஷயத்தில் நான் அபராதம் செய்வதில்லை. ஆனால் அநந்தனால் என்னவென்று உங்களால் சொல்லப்பட்டதே, இந்த ரூபமான வார்த்தை யுக்தமென்று எவன் சொல்லுவன்? மேலும் அந்த வார்த்தைக்கு அர்த்தமுமில்லை" என்று சொல்லிவிட்டு, அவரிடம் தான் செய்ய வேண்டிய கௌரவத்தைப் பற்றி மௌநமாக இருந்தான். ஆனாலும் அவர் வசனம் இவன் ஸ்மரணத்துக்கு விடாமல் வரவே, சிரித்துவிட்டு, 'அநந்தனால் என்ன?' என்று அவர் மொழிந்த ஸம்ஸ்க்ருத வார்த்தைகளை 'கிமநந்தேந' என்று மறுபடியும் சொல்லி, நன்றாயிருக்கின்றது என்றான். "ஓ! என் குருமார்களே! 'கிமநந்தேந' என்பது ஸாதுவாயிருக்கிறது, ஸாதுவாயிருக்கிறது! அநந்தனால் என்ன கிடைக்குமோ சொல்லுகின்றேன்; வருத்தமடையாது இருப்பீராகில் கேளுங்கள். தர்மம், அர்த்தம், காமம், மோக்ஷம் என்று சொல்லப்பட்ட நான்குவித புருஷார்த்தங்களும் எவனால் உண்டாகின்றனவோ, அவனால் என்னவென்றீர்களே! இது வீண்வார்த்தை. மரீசி, தக்ஷர், முதலானவர்களாலும், மற்றவர்களாலும் அநந்தனிடம் தர்மம் அடையப்பட்டது. இதரர் அவனிடம் அர்த்தத்தை அடைந்தார்கள். இன்னும் பலர் காமத்தை ஸம்பாதித்துக் கொண்டனர். வேறு புருஷர்கள், ஜ்ஞாநத்தாலும், த்யாநத்தாலும், ஸமாதியுடன் கூடிய அஷ்டாங்க யோகத்தாலும், அநந்தன் ஸ்வரூபத்தை அறிந்து, ஸம்ஸார பந்தங்களினின்று விடுபட்டு முக்தியை அடைந்தார்கள். ஸ்ரீஹரியினுடைய ஆராதநமே, ஸம்பத், ஐச்வர்யம், மாஹாத்ம்யம், ஜ்ஞாநம், ஸந்தாநம், கர்மம், இவற்றிற்குக் காரணமாக விருக்கின்றது. மோக்ஷம் அவ்வாராதநம் ஒன்றினாலேயே ஸம்பாதிக்கத் தக்கது.

எவனிடமிருந்து தர்மார்த்த காமங்களும், மோக்ஷமும் பலிக்கின்றனவோ, அந்த அநந்தனால் என்னவென்று ஏன் சொல்லுகின்றீர்கள்? இன்னும் இவ்விஷயத்தில் அதிகமாகச் சொல்வதேன்? நீங்களோ எனக்குக் குருக்கள். நானோ அல்ப விவேகமுள்ளவன். நான் சொல்வதை நீங்கள் ஸாதுவாகக் கொண்டாலும் ஸரி; அஸாதுவாகக் கொண்டாலும் ஸரி; இதில் விஶேஷமாகச் சொல்லி என்ன ப்ரயோஜநம்? அவன் தான் ஜகந்நாதன்; ஸ்ருஷ்டிக்கின்றவன்; (ஜகத்தைப்) பரிணமிக்கச் செய்கிறவன்; உபஸம்ஹரிக்கிறவன்; (எல்லா) ஹ்ருதயங்களிலும் இருக்கின்றவன்; விஷயாநுபவம் செய்யும் சேதநரும் அவன்; அநுபவிக்கப்பட்ட விஷயங்களுமவன்; (இவை யடங்கிய) ஜகத்துக்கு ஈஶ்வரனும் அவன்; பால்யத்தால் இவற்றைச் சொன்னேன். நீங்கள் இதை க்ஷமிக்கவேண்டும்" என்று சொல்லி முடித்தான். புரோஹிதர்களும், "பாலனே! மறுபடியும் இவ்விதம் நீ மொழியமாட்டாய் என்றெண்ணி, அக்நியால் நீ கொளுத்தப்படுகையில், எங்களால் ரக்ஷிக்கப்பட்டாய். புத்தியற்றவனாதலால் அதை நீ அறியவில்லை. இந்த அஜ்ஞாநத்தால் உண்டான துராக்ரஹத்தை, எங்கள் வார்த்தையைக் கேட்டு, நீ விடாமற் போனால், அடே மதிகேடா! உன்னை நாசம் செய்யும் பொருட்டு ஒரு பூதத்தை ஸ்ருஷ்டிக்கின்றோம்" என்று ப்ரஹ்லாதனைப் பயமுறுத்தினர். அப்போது அவன் "எந்த ஜந்து யாரால் ரக்ஷிக்கப்படுகின்றது? யாரால் கொல்லப்படுகின்றது? ஆத்மாவானவன், ஸாது காரியம் செய்து ரக்ஷிக்கப்படுகின்றான்; அஸாது க்ருத்யங்களை யநுஷ்டித்துக் கொல்லப்படுகின்றான். கர்மத்தால் எல்லாம் உத்பத்தியை யடைகின்றன. கர்மந்தான் மோக்ஷஸாதநமா யிருக்கின்றது. ஆதலால், ஸர்வ ப்ரயத்நத்தாலும் ஒருவன் நல்ல கர்மத்தையே செய்யவேண்டும்" என்றிப்படிச் சொல்லவே, அவர்கள் கோபங்கொண்டு ஜ்வாலைகளால் ப்ரகாசிக்கும் வாயுடன் கூடிய ஒரு பெரும்பூதத்தை உண்டு பண்ணினார்கள். அது மிகவும் பயங்கரமாக விருந்தது; காலடிவைப்பால் பூமியை நோகச்செய்தது; மிகவும் கோபங்கொண்டது; சூலத்தை எடுத்துக்கொண்டு ப்ரஹ்லாதனிடம் போய் அவன் மார்பில் அதனால் அடித்தது; மிகவும் ஜ்வலிக்கப்பட்ட அந்தச் சூலமானது பாலனுடைய ஹ்ருதயப்ரதேஶத்தைத் தாக்கி, ஒடிந்து பூமியில் விழுந்து, நூறு துண்டங்களாகப் போந்தது. நாசமற்ற



வனும், ஷாட்குண்யபூர்ணனும், ஸர்வேஶ்வரனுமான ஸ்ரீஹரி எந்த ஹ்ருதயத்தில் ஸதா வஸிக்கின்றானோ, அந்த ஹ்ருதயத்தைத் தொட்டமாத்ரத்தில் வஜ்ராயுதமே உடைந்து போமே; இந்த சூலத்தைப்பற்றிக் கேட்பானேன்? பாபிஷ்டரான தைத்ய புரோஹிதரால், பாபமற்றவனான ப்ரஹ்லாதன்மேல் ஏவப்பட்ட பூதமானது உடனே அந்தப் புரோஹிதரையே திரும்பி யடித்துவிட்டுத் தானும் நாசத்தை யடைந்தது. மஹா புத்திமானான ப்ரஹ்லாதன், அந்தப் பூதத்தால் கொளுத்தப்பட்ட புரோஹிதரைக் கண்ணுற்று, "ஹா க்ருஷ்ண! ஹா அநந்த! காப்பாற்றும்" என்றி சொல்லிக்கொண்டு அவரிடம் ஓடினான். "எல்லாவற்றையும் வ்யாபித்தவனே! ஜகத்ரூபியே! ஜகத்தை ஸ்ருஷ்டித்தவனே! ஜநார்த்தந! இந்த விப்ரரை, ஸஹிக்க முடியாததும் மந்த்ரோத்பூதமானதுமான இந்த நெருப்பினின்றும் ரக்ஷியும். ஸர்வவ்யாபியும் ஜகத்குருவுமான விஷ்ணுவானவர் ஸர்வ பூதங்களினிடமும் இருக்கின்றாரெனும் ஸத்யத்தால், இந்தப் புரோஹிதர்கள் ஜீவிக்கட்டும். விஷ்ணு ஸர்வ ப்ராணிகளிடமும் அந்தராத்மாவாக இருப்பதை த்யாநித்து, அத்தகைய யோசனையை என்னை விரோதிக்கின்றவரிடமும் நான் பண்ணுகின்றேன் எனும் ஸத்யத்தால், இந்த த்விஜர்கள் ஜீவிக்கட்டும். யார் என்னைக் கொல்லவந்தனரோ, எவரால் எனக்கு விஷம் கொடுக்கப்பட்டதோ, எவர் என்னை நெருப்பிலிட்டனரோ, எந்தத் திக்கஜங்களால் நான் ஹிம்ஸிக்கப்பட்டேனோ, எந்த ஸர்ப்பங்களால் நான் கடிக்கப்பட்டேனோ, அப்படிப்பட்ட யாவரிடமும் எனக்கு மித்ர பக்ஷத்தில் இருந்தவரிடமும், நான் ஸமமாக நடந்து, ஒருவர்க்கும் கேடு நினைக்காமலிருந்தது நிஜமாயின், அந்த ஸத்யத்தால், இப்போது இந்த அஸுர புரோஹிதர்கள் ஜீவிக்கட்டும்" என்றிப்படி ப்ரஹ்லாதன் ப்ரதிஜ்ஞை செய்யவே, அந்தப் புரோஹிதர்கள் துன்பம் நீங்கித் தீயினின்று எழுந்து, ஸந்தோஷத்துடன் கூடினவராய், வணக்கத்துடன் நின்ற ப்ரஹ்லாதனைப் பார்த்து, "குழந்தாய்! தீர்க்காயுஷ்மானாகவும், யாவராலும் எதிர்க்கக்கூடாதவனாகவும், வீர்யபலயுக்தனாகவும், புத்ரர்கள், பௌத்ரர்கள், பொருள், ஐஶ்வர்யம் இவற்றுடன் கூடினவனாகவும், உத்தமனாகவு மாகக்கடவாய்" என்று சொல்லிவிட்டுப் போய், நடந்ததை யெல்லாம் நடந்த வண்ணம் ஹிரண்யகஶிபுவினிடம் சொன்னார்கள்.

ஹிரண்யகசிபுவானவன் அந்த க்ருத்யை வியர்த்தமாய் விட்டதைக் கேள்வியுற்றுப் புத்ரனை வரவழைத்து, அவனுக்கு இவ்விதம் கிடைத்த ப்ரபாவத்தைப் பற்றி வினவினான். "ப்ரஹ்லாத! நல்ல ப்ரபாவமுள்ளவனா யிருக்கின்றாய். இதென்ன, உன்னுடைய க்ருத்யம் மந்த்ர ப்ரபாவத்தால் ஏற்பட்டதா? இல்லாவிட்டால் ஜந்மத்துடன் உண்டானதா?" என்றிப்படிப் பிதாவால் அஸுரபாலகன் கேட்கப்பட்டபோது, பிதாவின் பாதத்தில் வணங்கி இந்த வார்த்தைகளைச் சொன்னான்:— "அப்பா! இது மந்த்ரத்தால் உண்டானதன்று; எனக்கு இது ஜந்மஸித்தமுமன்று. யாரார் ஹ்ருதயத்தில் அச்யுதன் ஸ்மரிக்கப் படுகின்றானோ, அவர்க்கெல்லாம் இந்த ப்ரபாவம் ஸமாநம். தனையொக்கவெண்ணி, பிறர் பாபங்களை யாவன் நினைக்கின்றானில்லையோ, அவனுக்குக் காரணமில்லாதபடியால் துக்கம் உண்டாவதில்லை. அயலார்க்குத் துன்பத்தை மனத்தால் எண்ணி, வாக்கால் சொல்லி, கார்யத்தால் எவன் செய்கின்றானோ, அவனுக்கு அவை ஜந்ம காரணம் ஆகின்றன; மிக்க அசுபத்தை விளைவிக்கின்றன. ஆகையால், என்னிடம் கேசவனிருப்பதை நினைத்து, அப்படியே ஸர்வ பூதங்களிடமும் அவன் இருக்கின்றானென்று சிந்தித்து, ஒருவனுக்கும் நான் பாபத்தை இச்சிக்கின்றேனில்லை; செய்கின்றேனில்லை; சொல்கின்றேனில்லை. எல்லாரிடமும் ஆநுகூலத்தையே நினைக்கும் எனக்கு, சரீர ப்ரயுக்தமாகவும், மாநஸிகமாகவும், உண்டாகும் ஆத்யாத்மிக மெனப்படும் துக்கமாவது, ப்ராக்ருத பதார்த்தங்களால் ஸம்பவிக்கும் ஆதிதைவிக மெனப்படும் துக்கமாவது, மற்ற ப்ராணிகளால் நேரிடும் ஆதிபௌதிக மெனப்படும் துக்கமாவது எப்படி யுண்டாகும்? ஸர்வ பூத சரீரி ஹரியென அறிந்து பண்டிதர்கள், ஹரிபக்தியை ஸர்வ பூதங்களிடமும் நிரந்தரமாகப் பண்ணவேண்டும்." இதைத் தன் அரண்மனையின் மெத்தையின்மேல் நின்றுகொண்டிருந்த ஹிரண்யகசிபுவானவன் கேட்டவுடன், கோபம் மேலிட்டுக் கண்ணிருளடைந்து தன் கிங்கரர்களைப் பார்த்து "இந்த உயர்ந்த மெத்தையினின்று துராத்மா கீழே தள்ளப்படட்டும். இந்த மலையின் பள்ளத்தில் விழுந்து இவனுடைய அங்கங்கள் சூர்ணமாகப் போகட்டும்" என்று சொன்னான். இதைக் கேட்ட அவனுடைய ஸேவகர் ப்ரஹ்லாதனைக் கீழே தள்ளினார்கள். ப்ரஹ்லாதனும்



ஹ்ருதயத்தில் ஹரியை வஹித்துக்கொண்டு கீழே விழுந்தான். அப்போது பூமிதேவியானவள் ஜகத்ரக்ஷகனான கேசவனிடம் பக்திகொண்ட ப்ரஹ்லாதனை நெருங்கி, அவனைத் தாங்கிக்கொண்டனள். ப்ரஹ்லாதன் ஸ்வஸ்தனாகவும் சரீரத்தில் யாதொரு துன்பமும் அடையாதவனாகவும் இருந்ததை ஹிரண்யகசிபு மேலிருந்து கண்டு, மாயை யுண்டாக்குவதில் ச்ரேஷ்டனான சம்பராஸுரனைப் பார்த்து, "இந்தத் துஷ்டப்பையலை நம்மால் கொல்ல முடியவில்லை. உனக்கு மாயைகள் தெரியுமாகையால், அவைகளால் இவனைக் கொல்" என்றுரைத்தான். சம்பரனும், "தைத்யராஜனே! என் மாயைகளின் பலத்தைப் பாரும். இதோ இவனைக் கொல்கின்றேன். என் மாயைகளைப் பத்து, நூறு, ஆயிரக்கணக்காய் ப்ரயோகிக்கின்றேன்" என மொழிந்து, அந்தத் துர்ப்புத்தி, ஸர்வத்ர ஸமதர்சியான ப்ரஹ்லாதனைக் கொல்ல இச்சித்து, அவன்பேரில் மாயைகளை ப்ரயோகித்தான். ப்ரஹ்லாதன், அப்போது மனத்தை நிச்சலமாக்கிக்கொண்டு, சம்பரனிடமும் த்வேஷத்தை விலக்கி, மதுஸூதநனை ஸ்மரித்தான். ஜ்வாலைகளின் ஸமூகங்களுடன் கூடிய ஸுதர்சந மெனப்படும் உத்தமமான பகவானுடைய சக்ராயுதமானது, பகவதாஜ்ஞையை முன்னிட்டு, ப்ரஹ்லாதனை ரக்ஷிக்கும்பொருட்டு வந்தது. அதி வேகத்துடன் கூடியதும், பாலன் சரீரத்தை ரக்ஷிக்கின்றதுமான அந்த ஸுதர்சநத்தால் சம்பரனுடைய ஆயிரக் கணக்கான மாயைகள் அனைத்தும் ஒவ்வொன்றாக த்வம்ஸிக்கப்பட்டன. கண்ணுக்கு அகப்படாமல் சரீரத்தை சோஷிக்கத்தக்க வாயுவை அழைத்து, ஹிரண்யகசிபு, ப்ரஹ்லாதனை உடனே நாசம் செய்ய ஏவினன். யாவராலும் ஸஹிக்க முடியாத அந்த வாயுவும், லகுவாக ப்ரஹ்லாதன் சரீரத்துக்குள் ப்ரவேசித்து, அதை சோஷிக்கு நிமித்தம் கொடுமையான சீதஜ்வரத்தை உண்டுபண்ணியது. தைத்யபாலனும், தன்சரீரத்தில் வாயு ப்ரவேசித்ததை அறிந்து, மஹாத்மாவும் தரணீதரனுமான பகவானை ஹ்ருதயத்தில் வஹித்தான். ஜநார்த்தநன் தன்பக்தனிடம் வாயு செய்த அபராதத்தை ஸஹியாமல், அவன் ஹ்ருதய நிஷ்டனாகவே, மிக்க சரீரசோஷணம் செய்யவல்ல அந்த வாயுவைப் பாநம் பண்ணிவிட்டான். இப்படி சம்பரன் மாயைகள் நசித்து, வாயுவும் க்ஷயத்தை யடையவே, ப்ராஹ்லாதன் மீண்டும் குருக்களுடைய வீட்டுக்குச் சென்றனன்.

தி. த. ர.

# வர்த்தமாநம்.

ஸ்ரீ வேதாந்ததீபிகை பத்ராதிபருக்கு :—

ஸ்ரீ அஹோபில மடத்துச் சிஷ்ய ஸபையின் சென்னைப்பட்டணம் பிரிவுக்கு ஸபாத்யக்ஷராகவும், ஸபையின் நிர்வாக ஸங்கத்தில் அங்கத்தினராகவும் இருந்து, ஸபையின் முக்ய ப்ரவர்த்தகராகவும், ஸபையின் கார்யங்களில் மிக்க ஶ்ரத்தையும், ஊக்கமும், உத்ஸாகமும் உள்ளவராயும், இப் பத்ரிகை விஷயத்தில் அதிக ஶ்ரமப்பட்டவராயும் இருந்த ஸ்ரீமான் வங்கீபுரம் ராகவாசார்யர் ஸ்வாமி சென்ற ஸெப்டம்பர் மாதம் 26வ சனிக்கிழமை பகல் 3 - மணிக்கு ஆசாரியன் திருவடி அடைந்தார். அந்த ஸ்வாமியின் ஆத்மகுணத்தை விசேஷமாக உகந்து, அவருடைய வியோகத்தால் ஸபைக்கு நேர்ந்த நஷ்டத்தையும் குறைவையுங்குறித்துச் சோகித்து ஸபையைச் சேர்ந்த யாவரும் துக்கஸாகரத்தில் மூழ்கினார்கள் என்று சென்னை, கூடலூர், பவாநி, மசூலிபட்டணம், தஞ்சாவூர், மதுரை முதலிய அநேக இடங்களிலிருந்து கடிதங்கள் கிடைத்திருக்கின்றன. இது தவிர, ஸபைக்கு ஸம்பந்தப்படாமல் தீபிகையில் அபிமாநம் உள்ள அனேக கனவான்களும் அதிக விசாரத்துடன் தீபிகையில் அவருக்கு உண்டாயிருந்த ஶ்ரத்தையை வெளியிட்டுத் தெரியப்படுத்தியிருக்கிறார்கள். அந்த ஸ்வாமிகளுக்கெல்லாம் பதில் ஸ்ரீமுகம் அனுப்ப அசக்தர்களாதலால் தீபிகையின்மூலமாக ஸபையின் க்ருதஜ்ஞதையைத் தெரிவிக்கும்படி தேவரீரைப் பிரார்த்திக்கிறேன்.

ஸபைக்கு அவரால் நேர்ந்த ஸகாயத்தைத் தக்கபடி விவரித்துச்சொல்ல யாரால் ஸாத்யப்படும்! அவர் நிஜமாக அவதார புருஷன் என்றே சொல்லவேண்டும். தெய்வபக்தியும், ஸத்யமும், சாந்தியும், பூததயையும் அவரிடத்தில் குடிகொண்டிருந்தன. இந்த ஸ்வாமியின் ப்ரயத்நமின்றி ஸ்ரீ அஹோபில ஸங்கம் நிறைவேறியிராது. இப்பொழுது ஜில்லா கலெக்டர் துரை அவர்கள், டிவிஷனல் ஆபீஸராகிய ம - ா - ா - ஸ்ரீ காமராஜு பந்துலுகாருவுக்கு, ஸ்ரீ அஹோபிலம் போய் அந்த தேவஸ்தாநங்களுக்கு என்ன ஜீர்ணோத்தாரணங்கள் அவசியம் செய்யவேண்டியவைகளோ அவைகளை நிர்த்தாரணம் செய்து, மதிப்பு (Estimate) தயார் செய்து அனுப்பும்படி உத்தரவு செய்திருக்கிறதாய்த் தெரியவருகிறது. அந்த ஸ்வாமியின் ப்ரயத்நங்கள் இம்மாதிரியாகத் தலைக்கட்டுவதைத் தானே கண்ணாரக் கண்டு களிக்க அவருக்கு ப்ராப்தமில்லாமல் போய்விட்டது.

ஸபையின் வருஷாந்த ஸங்கத்தில் அவருடைய ஶ்ரத்தையையும் பரிஶ்ரமத்தையும் பார்த்தவர்கள் ஆச்சரியப்பட்டார்கள். அந்த ஸ்வாமி ப்ரக்ருதி மண்டலத்தை விட்டது பகவத்ஸங்கல்பத்தாலாதலால், ஸாவிதாவான எம்பெருமான் பாகவதர்களுடைய உள்ளத்தில் பிரவேசித்துத் தன்னுடைய காரியத்தைத் தலைக்கட்டுவன் என்பது திண்ணம்.

சித்தூர்,
15—10—14. } வி. ராஜகோபாலன்.

OFFICE OF THE REGISTRAR OF ...
23 JAN 1915
MADRAS.

ஸ்ரீ:.

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:.


# வேதாந்த தீபிகை

பத்ராதிபர்:—திவான் பகதூர் டி. டி. ரங்காசார்யர், பி.ஏ., பி.எல்.

ஸம்புடம் 4.] ஆநந்தவருஷ கார்த்திகைமீ [ஸஞ்சிகை 10


## பத்ராதிபரின் குறிப்புகள்.

த்ரிபுவநகமநம் தமாலவர்ணம் ரவிகரகௌரவராம்பரம்
ததாநே - வபுரலககுலாவ்ருதாநநாப்ஜம் விஜயஸகே
ரதிரஸ்து மேऽநவத்யா ॥ [ஸ்ரீ பாகவதம் 1-9-33.]

**லோகாயதிக மதம்.**

ப்ருஹஸ்பதி பகவானால் கல்பிதமென்று வழங்கும் லோகாயதிக மதம் என்று, பூர்வம் நமது தேசத்தில் ஒரு மதம் இருந்தது. அந்த மதம் எப்போதும் நசிக்காது. உலகத்தில் பெரும்பான்மையோர் அந்த மதத்தைத்தான் கொண்டாடுகின்றனர். சிலர் வெளிப்படையாக வும், பலர் அநுஷ்டாநத்தாலும், அந்த மதத்தைச் சேர்ந்தவ ராக ப்ரகாசிக்கின்றனர். அதன் ஸங்க்ரஹத்தை ஸ்ரீ ஶங்கரா சார்ய க்ருதமான ஒரு க்ரந்தப்படி இவ்விடம் வரைகின்றோம். "தத்வம் ஆகாசம் தவிர மற்ற நாலு பூதங்கள். ப்ரத் யக்ஷத்தால் அறியப்பட்டவை தான் உண்டு. பார்க்கக்கூடாதது பார்க்கக்கூடாதபடியால் இல்லை. அத்ருஷ்டம் உண்டென்பவரும் அதை த்ருஷ்டமாக அங்கீகரித்திலர். நித்யம் காணக்கூடாதது ஸத்தாகுமோ? சிலர் ஸுகிகளாகவும், பலர் துக்கங்களை அநு பவித்துக்கொண்டும் இருப்பதால், அத்ருஷ்டமான தர்மரூபமான

கர்மங்களும், அதர்மரூபமான கர்மங்களும் எவ்விதம் ஊஹிக்கத் தக்கன? ஸ்வபாவத்தால் ஸுகதுக்கம் உண்டாகின்றன. மயில் கட்குத் தோகை யார் தந்தான்? குயில்கட்குக் குரல் அளித்த வன் யார்? இவை ஸ்வபாவத்தால் அமைந்தன. நான் ஸ்தூலன்: நான் யுவா: நான் கிழவன்: என்று எண்ணுகின்றார்கள். இவை சரீரலக்ஷணங்கள்; ஆதலால் சரீரம்தான் ஆத்மா. சரீரவிலக்ஷண ஞன ஆத்மாவெனும் பதார்த்தம் உண்டோ? வெற்றிலை பாக்கு சுண்ணும்பு இவை மூன்றும் கலந்தால் சிவப்பு உண்டாகின்றது. அவ்வண்ணமே ஜடபதார்த்தங்களின் சேர்க்கையால் சைதந்ய பாவம் ஜநிக்கின்றது. இந்த லோகத்தைக் காட்டிலும் மேற்பட்ட லோகமில்லை: ஸ்வர்க்கமும் இல்லை: நரகமும் இல்லை. மூடர் சிவனுலகமென்றும் வைகுண்டமென்றும் கல்பிக்கின்றனர். இவ்வுலகில் அறுசுவையுண்டி யருந்தலும், பதினாறு வயதால் அமைந்த யௌவநத்துடன் கூடிய பெண்ணால் வரும் இன்பமும், மெல்லிய வஸ்த்ரம், இனிய கந்தம், மலர்மாலை, சந்தநாதிகளை யநுபவித்தலால் வரும் ஸுகமும்தான் ஸ்வர்க்கம். பகைவர் ஆயுதத்தாலும் வ்யாதிகளாலும் உண்டாகும் துன்பம்தான் நரகம். மரணம் தான் மோக்ஷம். ஆதலால் புத்திமான் மோக்ஷத்தின் பொருட்டு ஏன் வ்ருதா ப்ரமம் கொள்ளவேண்டும்? மூடனன்றோ தபஸ்ஸாலும் உபவாஸங்களாலும் தன்னை சோஷித்துக்கொள்வன்? துர்ப்பலரான புத்திமான்கள், ஸ்த்ரீகள் பதிவ்ரதையாய் இருக்க வேண்டுமென ஸங்கேதம் செய்தார்கள். பசியால் வருந்திய குக்ஷியுடைய தரித்ரர், ஸுவர்ணதாநம், பூமிதாநம், அழைத்து விருந்தளித்தல், முதலான ஏற்பாடுகளை உண்டாக்கினர். தேவாலயம், தண்ணீர்ப்பந்தல், ஸத்ரம், கிணறு, ஆராமங்கள் முதலானவற்றை அமைத்தலைப்பற்றி, வழிப்போக்கர் ஸ்துதிப்பார்களேயன்றி, மற்றோர் புகழ்வரோ? அக்நிஹோத்ரம் என்பதும், மூன்று வேதங்களென்பதும், த்ரிதண்டம் என்பதும், சாம்பல் பூசிக்கொள்வதும் புத்திஹீநரும், சக்தியற்றவரும் ஜீவநோபாயமாக ஏற்படுத்திக் கொண்ட விஷயங்கள். ஆதலால் விவேகியானவன், பயிர் செய்தலென்ன, பசுக்களை ரக்ஷித்தலென்ன, வர்த்தகம் செய்யலென்ன, ராஜாங்க தர்மமென்ன, இவ்விதமான த்ருஷ்டமான உபாயங்களைக் கொண்டு எப்போதும் இவ்வுலகில் ஸுகாநுபவம் செய்யக் கடவன்."



இந்த மதம் என்றுமுளது. சிலகாலம் இதை வழிபடுபவர் குறைந்திருப்பர். சிலகாலம் இதையே நம்பி நடப்பவர் மிகவும் பெருகுவர். தங்கள் இருப்பொன்றினாலேயே லோகத்தைப் பரிசுத்தம் செய்யும் மஹா பாகவதர் பெருகுங்கால், குருமதமானது ஸ்ரீ தேசிகன் ஸாதித்தபடி 'மௌநவாக் ஹூநவாந்தம்' எனக் குறைந்துபோம். பெரியோர் பரிஹஸிக்கப்பட்டு, விஷயத்தில் விசேஷபற்றுடையோர் ஜநங்கட்கு மதியுரைப்பாராகுங்காலத்தில், அம்மதம் ஓங்கிவளரும். ஸ்ரீராமன் தர்மத்திற்குக் கட்டுப்பட்டுப் பரதன் வேண்டியவண்ணம் அயோத்யாநகரம் திரும்பிப்போய் அரசாள இசையாதிருந்ததைக் கண்ட ஜாபாலியெனும் ப்ராஹ்மணர் ஸ்ரீராமனுக்கும் குருமதத்தை உபதேசித்தனர். 'ஸ நாஸ்தி பரமித்யேவ குரு புத்திம் மஹாமதே । ப்ரத்யக்ஷம் யத்ததாதிஷ்ட பரோக்ஷம் ப்ருஷ்டத꞉ குரு ॥' என்று, பரலோகமென்பதை நிஷேதித்துப் பரோக்ஷத்தைப் பற்றிச் சொல்லும் சாஸ்த்ரங்களைப் பின்தள்ளி, ப்ரத்யக்ஷத்தையே அநுஸரிக்கச் சொன்னார். ஸர்வலோகநாதன் இவ்வுபதேசத்தை அங்கீகரிப்பனோ? அங்கீகரிக்கவில்லை. குருமதம் ப்ராசீநம் என்பதைக் காட்ட ராமாயண வ்ருத்தாந்தத்தை இங்கு எடுத்தோம்.

அம்மதத்தின் பரிணாமங்கள்.

இந்த மதத்தின்படி ஒவ்வொரு புருஷனும் ஸர்வப்ரயத்நத்தாலும் தன் சக்திக்குத் தக்கபடிப் பொருள் தேடக்கடவன். அர்த்தம் ஆர்ஜிக்கப்பட்டதாகில், அதைக்கொண்டு காமத்தை ஸாதிக்கலாம். தர்மத்தில் ருசியுள்ளதாகில், அதையும் ஸம்பாதிக்கலாம். தர்மமென்றால் ஒருவன் தனது அர்த்தத்தைப் பரர் காமங்களை நிறைவேற்றச் செலவுசெய்தல். காமமானது இஷ்டத்தை அடைதலும் அநிஷ்டத்தைப் போக்குதலும். ஸமமான இச்சையைப் பொருந்திய பலர் ஒன்றுகூடி ப்ரயத்நம் செய்தால், அர்த்தமும் காமமும் விசேஷித்து ஒவ்வொருவர்க்கும் கிடைப்பதென்பது அநுபவஸித்தம். அர்த்தகாமங்களை ஸ்வயம் ஸம்பாதிக்க அசக்தரானவர்க்கு, அவற்றைத் தருதல் தர்மமென்று சொல்லப்படும். இதற்குத் தக்காலத்தில் இங்கிலீஷ் படித்தவர் (Social servi e) ஜநஸேவை அல்லது ஸமவாயஸேவை யென்று கூறுவர். இது அநுஷ்டாநத்தில் ஸந்நிஹித ஜநங்களைப் பற்றித்தான் நிற்கும்.

இதனுடைய விஸ்தாரம் ஒரு தேசவாஸிகளைக் கொள்ளும். இந்த ஸேவைக்குத் தேவையான அர்த்தகாமார்ஜநத்தால் பல தேசத்தினர் பரஸ்பரம் அஸூயையை வளர்க்கின்றனர்கள். இதனாலன்றோ தத்கால யுத்தம் ப்ராப்தமாயிற்று. இதைப்பற்றி ஒரு ஐரோப்பியர் பின்வருமாறு யோசிக்கின்றனர்.

**அவ்விஷயமாக ஓர் ஐரோப்பியர் யோசனை.**

மனிதரெல்லாரும் ஸமாதிகாரிகள்; ஸர்வப்ரயத்நங்களிலும் ஸமமான அவகாசமுள்ளவர்; என்று நிர்ணயித்து, அந்த நிர்ணயத்தை யாவர்க்கும் மேலாக அநுஷ்டாநத்தில் கொண்டுவந்த அமெரிக்கா நாட்டினரிடையே, ராக்பெல்லர் முதலியோரால் ஜநங்கட்கு வேண்டிய பதார்த்தங்களைத் தம் வசப்படுத்திக் கொண்டு, இஷ்டமானபடி அவற்றிற்கு விலையேற்படுத்திக்கொண்டு, அளவை மீறிப்போன தநத்தைக் குவித்து, ராஜாங்கத்தையே தமது இச்சாநுஸாரியாகச் செய்ததை நோக்கினால், ஜநங்களின் ஸ்வாதந்த்ரிய மென்பதும் ஸமத்வமென்பதும் பரிஹாஸத்துக்கு விஷயமாகின்றன. இவை அநுஷ்டாநத்தில் சிலர்க்கு தநாட்யதையையும், ஸங்கோசமற்ற அதிகாரத்தையும் தந்து, பலரை அவர்க்கு அடிமையாக்கு கின்றன.

ஐரோப்பியரும் அமெரிக்கா நாட்டினரும், ப்ரக்ருதியை ஜயித்தனர்; மின்னலைக் கட்டினர்; ஆகாசத்தில் ஸஞ்சரித்தனர். இதன் பயன் என்ன? அந்தக் கண்டங்களில் ப்ரஜைகளுடைய ஜீவநம் இதனால் பரந்ததா? குறுகியதா? ஐஹிக விஷயங்களில் அது வ்ருத்தியாகவே அவரது ஆத்மகுணங்கள் நசித்துப்போயின. பழைய நம்பிக்கைகளும், மர்யாதைகளும் ஆசாரங்களும் லோகத்தை நல்வழியில் கூடியமட்டும் வைத்துக்கொண்டிருந்தன. அவை இப்போது அழிக்கப்பட்டன. ஸமுத்ரயாநத்தின் பொருட்டுக் கட்டிய நாவம் சண்டைக்கு உதவியது. கல்லைப் பெயர்க்கக் கண்டுபிடித்த வெடிமருந்து மனிதரைப் பிளக்க உபயோகமாயிற்று. பலமுள்ளவன்தான் ந்யாயமுள்ளவன்; அவன் பரரை ஜயித்து, அவர் நாட்டையும் பொருளையும் ஆக்ரமித்தலும் ந்யாயமே; பெரிய பீரங்கிகள்தான் ஈச்வரன் ஸங்கல்பத்தை ப்ரகாசிப்பிக்கின்றன; இவற்றால் நாடும் நகரமும் ஜநங்களும் அழிக்கப்பட்டால், அது ஸ்வபாவத்தின் ப்ரவ்ருத்தி; வேண்டாத மனிதரை உலகத்தினின்றும் வெளிப்படுத்தும் வழி; என்றிப்படி



யோசனைகளும் உண்டாயின. இது தத்கால கல்வியின் முடிவான பயன்.

ப்ரக்ருதியின் ரஹஸ்யங்களை மிகவும் அறிந்தபடியாலும், அந்த அறிவால் அர்த்த காமங்களை மிகவும் பெருக்கி யநுபவித்தபடியாலும், நாகரிகம் தங்களுடையதென்று அபிமாநித்தவர்க்குள், ஸ்வப்ரயோஜநாபேக்ஷையானது, சிலரையோ, பலரால் அமைந்த ஸமவாயங்களையோ, ஒவ்வொரு தேசத்தாரையோ ஆச்ரயித்து, பரர் விஷயமாகத் துன்பங்களை விளைவித்தது; இந்த விதமாக ஜநித்த அஸூயைகளை வளர்க்கவோ நிவர்த்திக்கவோ கருதிய ஜநங்கட்கு, மேற்படி அறிவும், அந்த அறிவால் கிடைத்த பொருளும், ப்ரஜாக்ஷயத்திற்கு ஸஹாயமாயுள்ள மஹா சஸ்த்ரங்களையும் அமைத்துத் தந்ததன்றோ?

**அம்மதத்தின் குறைவுகள்.**

இந்த யோசனைகள் லோகாயதிக மதத்தின் பரிபாகத்தை ப்ரகாசிப்பிக்கின்றன. லோகாயதிக மதம் ஜநங்களுள் அர்த்த காமங்களின் அந்வேஷணத்தால் பரஸ்பரம் உண்டாகும் அஸூயைக்கு மருந்தொன்றும் தேடவில்லை. ஜநஸேவை யென்பதும் ஸமவாய ஸேவை யென்பதும் அந்த அஸூயையை விலக்கமாட்டா. ப்ராக்ருதாம்சங்களின் ஸங்காதங்கள் தான் ம்ருகங்களின் சரீரங்கள். ஸர்வபூதங்களும் ஒன்றிற்கொன்று ஆகாரமாகின்றன. புலி, மான் மேல் பாய்ந்து அதைப் புசிக்கும்போது அதற்கு அதர்மசங்கை ஜநிக்குமோ? 'வ்யாக்ரஹிம் யாதி ஸூதாநி' என்றல்லோ அதன் தொழிற்கு ஸமாதாநம் சொல்லவொண்ணும். இங்கே ப்ரக்ருதியென்பது ப்ராக்ருத பதார்த்த ஸங்காதத்தின் தன்மையன்றோ? இது பலிஷ்டமாய் அமைந்த சரீரங்களில், க்ஷேத்ரஜ்ஞன் என்றும், ஜீவன் என்றும் பெயர்கொண்ட தத்வமானது ப்ரகாசம் குன்றியிருக்கின்றது. மநுஷ்ய சரீரங்களில் அதற்கு ப்ரகாசம் அதிகம். அது ஸ்வப்ரயத்நத்தாலும், ஸத்ஸம்ஸர்க்கத்தாலும், ஸுக்ருதத்தாலும் ப்ரக்ருதியின் குணங்கள் போன வழியே போகாமல், தனது குணங்களாகின்ற ஆத்மகுணங்களின் ப்ரகாசத்தை க்ரமேண விஸ்தரிக்கச் செய்கின்றது.

இவ்வாத்ம குணங்களைப் பற்றிப் பகவத்கீதையில் ஈச்வரன்,

'அபயம் ஸத்த்வஸம்ஶுத்தி: ஜ்ஞாநயோக வ்யவஸ்திதி: |
தாநம் தமஶ்ச யஜ்ஞஶ்ச ஸ்வாத்யாயஸ் தப ஆர்ஜவம் ||
அஹிம்ஸா ஸத்யமக்ரோதஸ் த்யாக: ஶாந்திரபைஶுநம் |
தயா பூதேஷ்வலோலுப்த்வம் மார்தவம் ஹ்ரீரசாபலம் |
தேஜ: க்ஷமா த்ருதி: ஶௌசம் அத்ரோஹோ நாதிமாநிதா |
பவந்தி ஸம்பதம் தைவீம் அபிஜாதஸ்ய பாரத |'

"பயமின்மை, அந்த:கரணஶுத்தி, ஆத்மஸ்வரூப விவேகத்தில் நிஷ்டை, ந்யாயமாக ஸம்பாதித்த தநத்தை ஸத்பாத்ரத்தில் விநியோகித்தல், மநஸை விஷயசிந்தனையினின்று விலக்கல், பலாபேக்ஷையின்றிப் பகவானுடைய ஆராதநம் செய்யல், வேதாப்யாஸம், க்ருச்ரசாந்த்ராயணாதிகளைப் பகவத்ப்ரீணநமாகச்செய்தல், மநோவாக்காயங்கள் பரரிடம் ஒரே ரூபமாக ப்ரவ்ருத்தித்தல், யாவரிடமும் ஹிம்ஸையை விலக்கல், ஸத்யம் அதாவது உள்ளபடிக் கண்டதை ஹிதத்தின் பொருட்டுச் சொல்லல், கோபமின்மை, புருஷார்த்த விரோதியானவற்றை நிரஸித்தல், சாந்தியெனும் இந்த்ரியங்களை விஷயங்களினின்று திருப்பும் சக்தி, அயலார்க்குத் துன்பம் விளைவிக்கும் வார்த்தைகள் அதாவது கோள் சொல்லாமை, பூதங்களினிடம் தயை, விஷயங்களில் பற்றில்லாமை, மார்தவம் அதாவது அக்ரௌர்யம், அகார்யகரணத்தில் லஜ்ஜை, சபலமில்லாமை அதாவது ப்ரியமான வஸ்துவைப் பார்த்து மநஸ் சலிக்காதிருத்தல், தேஜஸ், அதாவது துர்ஜநரால் பரிபவமடையாமை, க்ஷமை அதாவது பரர் துன்பம் செய்தாலும் அதனால் மநோவிசாரமின்மை, தைர்யம் அதாவது ஆபத்திலும் விடாமுயற்சி, உள்ளும் புறமும் ஶுசித்வம், அத்ரோஹம் அதாவது பருடைய ந்யாய மார்க்கத்தில் இஷ்டாநுவ்ருத்தியைத் தடுக்காமை, கர்வமின்மை இத்யாதி கல்யாண குணங்கள் ஓ! அர்ஜுநா! பகவானுடைய ஆஜ்ஞையை அநுஸரிக்கப் பிறந்தவனுக்கு உண்டாகின்றன" என்று ஸாதித்தருளினார்.

இவை ஆத்மகுணங்கள். ப்ராக்ருதாம்ஶங்களுடைய சேர்க்கையால் இவை புஷ்பிக்கமாட்டா. இத்தகைய சேர்க்கையால் ஆகின்ற சரீரங்களில் ஸத்வாதி குணங்களில் ஒவ்வொன்று விசே



ஷித்து ப்ரகாஶிப்பதும் ஆத்மப்ரயத்நமின்றி யமையாது. ஆதலால் நித்ய சேதநனான ஜீவனை நிராகரிப்பவர்க்கு ஆத்மகுணபூர்த்தி யுண்டாகாது. நாஸ்திகரான சிலர் ஆத்மகுணபூர்த்தியை ஆவிஷ்கரிக்கின்றனர் என்றால், அவர் இல்லையென்று ஸாதிப்பதால் மட்டும் அவர்க்குள் நித்ய சேதநன் இல்லாமல் போகமாட்டான். அவரது நிஷேதம் என் தாய் மலடி என்று ஒருவன் சொல்வதை யொக்கும்.

ஜீவன் சரீரங்களெனும் காராக்ருஹத்தில் அடைபட்டிருப்பதால், அவனது ஜ்ஞாநஸ்வரூபமும், ஜ்ஞாநமாகின்ற குணமும், சரீரங்களுக்குத் தக்கபடிக் குறுகியோ பெருகியோ ப்ரகாசிக்கின்றன. இதற்கு மூலம் கர்மம். ஜீவன் கர்மவஶ்யனாய், ப்ரக்ருதியின் சுழலிலகப் பட்டுக்கொண்டு, தானிச்சித்தபடி இருக்கத் திறனற்றவன். கர்மாத்யக்ஷனான ஈச்வரன் அவனது ஸ்வாமி. இப்படி ப்ரமாணபலத்தாலும் ஸரியான அநுமானத்தாலும், எல்லாரும் ஆஸ்திகதையைப் பாராட்டவேண்டும்.

காலதேசபேதங்களாலும், ஜ்ஞாநபேதத்தாலும், பக்தி தாரதம்யத்தாலும், இவற்றால் ஜநிக்கும் அர்ஹதாபேதத்தாலும், தத்வ ஜ்ஞாநவிஷயத்திலும், ஈச்வரோபாஸ்தி ப்ரகாரத்திலும், பல நாட்டினர் பரஸ்பரம் பேதிக்கின்றனர். தமக்கன்றி மற்றோர்க்கு ஈச்வரன் இரங்கான் என்போர் மூடர். 'யே யதா மாம் ப்ரபத்யந்தே தாம்ஸ்ததைவ பஜாம்யஹம் | மம வர்த்மாநுவர்த்தந்தே மநுஷ்யா: பார்த்த ஸர்வஶ: ' || என்றும், 'யேப்யந்யதேவதா பக்தா யஜந்தே ஶ்ரத்தயாந்விதா: | தேபி மாமேவ கௌந்தேய யஜந்த்யவிதிபூர்வகம் |' என்றும் பகவான் அருளிச்செய்ததை ஜ்ஞாநவான்கள் மறக்கமாட்டார்கள்.

ஆகையால் ஆஸ்திகதைக்கும் ஆத்மகுணபூர்த்திக்கும் மிரு த்யுவாக உதித்த குருமதமானது லோகத்தை நஶிக்கச்செய்யும். இந்த மதமன்றோ தத்காலம் மிகப் பரவுகின்றது? இதையன்றோ பலனாகத் தத்காலப் படிப்பு உண்டுபண்ணுகின்றது? இந்த மதத்தின் ப்ரசாரத்தையும் இது புஷ்பித்த ப்ரகாரத்தையும் ஜர்மனி தேசத்தாரின் நடத்தையில் சிந்திக்கக்கூடும். வாயினால் அநேகர் ஈச்வரன் பெயரைச் சொல்வார்கள். காலினால் பலர் பகவான் ஸந்நிதிக்குச் செல்வார்கள், கையினால் சிலர் உபஹார

ரங்களை ஸ்வாமி முன்பாக ஸமர்ப்பிப்பார்கள். இவர் மனமோ லோகாயித மதாநுஸாரியாக நிற்கும்.

இப்படிப் பலர் நிற்க, பகவான் பெயரைச் சொல்லி வாய் நோகாமலும், தேவன் ஆலயம் சென்று கால் நோகாமலும், ஶரண்யன் ஸந்நிதி பர்யந்தம் உபஹாரங்களைச் சுமந்து கை நோகாமலும், மனத்தை அர்த்த காமங்களில் செலுத்திவிட்டு, அதை நாட்டின் நன்மைக்கென்று சொல்லிக்கொண்டு திரிபவரும் உளர். இவர் தத்கால வித்யாதருக்களின் பரிபாகத்தால் விகஸித்த புஷ்பங்கள்.

ஓர் புதிய சட்டம்.

நமது ராஜதானி சட்டநிருபணஸபையில் ஓர் புதிய சட்டம் பிறந்தது. ஸ்ரீ வேங்கடேஶன் ஆலயத்தில் ஸேவார்த்திகளால் ஸமர்ப்பிதமான விஶேஷத்ரவ்யம் உளதாம். சிலர் வேண்டுகோளின்பேரில், அந்த ஆலயத்தின் விசாரணை கர்த்தாவானவர் அதனுடைய த்ரவ்யத்தை, இரண்டு லௌகிக வித்யையைக் கற்பிக்கும் இங்கிலீஷ் பள்ளிக்கூடத்திற்கும், ஒரு ஸம்ஸ்க்ருத பாடசாலைக்கும் வ்ரயம் செய்துவந்தனராம். இந்த விஷயம் ஹைகோர்ட்டில் விமர்சைக்கு வரவே, ஜட்ஜிகள் தேவஸ்தாந த்ரவ்யத்தை இவ்வித லௌகிக ப்ரவ்ருத்திகளில் உபயோகப்படுத்துவது அநுசிதமென்று அபிப்ராயம் தந்தனராம். உடனே விசாரணைகர்த்தா பள்ளிக்கூடங்களுக்கும் ஸம்ஸ்க்ருத வித்யாசாலைக்கும் தேவத்ரவ்யத்தை உபயோகிப்பதை நிறுத்திவிட்டனராம். ஆதலால் நம்மவருள் சட்டநிருபண ஸபையைச் சேர்ந்த சில லௌகிகர், திருமலை தேவாலயத்தின் பொருளை, மேற்குறித்த பாடசாலைகள் நிமித்தம் செலவுசெய்தல் ந்யாயம் என்று சட்டமொன்று ஏற்படுத்திவிட்டார்கள். அங்கிருந்த ஹிந்து மெம்பர்கள் அனைவரும் சட்டத்தை ஆமோதித்தனர். பாஹ்யரான இங்கிலீஷ் கற்ற பலரும் இச்சட்டத்தைக்குறித்து ஸந்தோஷிக்கின்றனர். இம்மட்டில் நிற்காமல், தேவாலயங்களில் மிகுதியாகும் பணமெல்லாம் இங்கிலீஷ் பள்ளிக்கூடங்கள் வ்ருத்தியாகும்பொருட்டுச் செலவுசெய்ய வேண்டுமென்று அபேக்ஷிக்கின்றனர். அதன் நிமித்தமாகவும் சட்டங்களை அபேக்ஷிக்கின்றனர்.

கவர்ன்மெண்டார் மதவிஷயங்களில் உதாஸீநர். ஹிந்துக்கள் இவ்வண்ணம் வேண்டினால் சட்டமும் செய்ய ஸம்மதிக்கின்றனர்.



இங்கிலீஷ் கற்றவரே இவ்வண்ணம் வேண்டுபவர்கள் என்பதை அவர் பராமர்சிக்கத்தக்கவர். இங்கிலீஷ் பள்ளிக்கூடங்கள் ப்ராயேண ஹிந்துக்களை ஸ்வமத விஷயமாக விரோதிகளாகவோ உதாஸீநராகவோ செய்துவிடுகின்றன. இப்படியானவரென எண்ணத்தக்க சிலர், இப்படி ஆகப்போகின்ற ஹிந்துக்களுக்கு, அவர் அப்படி ஆகத்தக்க வித்யையைக் கற்பிக்க, தேவாலய த்ரவ்யத்தைச் செலவிடச் சட்டம் செய்யலாம். அது தர்மமாகுமோ? இங்கிலீஷ் பள்ளிக்கூடங்கள் வ்ருத்தியாகப் பணம் வேண்டும்; பணம் தேவாலயத்தில் இருக்கின்றது; அதை எடுத்துக்கொள்ளலாம்; என்று முடித்தால் ஜர்மானியர் கல்வியைப் போய்த் தூஷிப்பானேன்? இதுதான் லோகாயதிக மதத்தின் விளைவு. பகவான் ஆலயங்களில் பக்தர்களுக்கு இரங்கி ஸாந்நித்யம் செய்கின்றான் என்று விஶ்வஸித்து, அவனது கைங்கர்ய நிமித்தமாகவோ, ஸ்வாபீஷ்டத்தை அவன் நிறைவேற்றினானெனும் நம்பிக்கையினால் அவனுக்கு ஸமர்ப்பணரூபமாகவோ, விஶ்வஸித்தவர் அளித்த பொருள்களை, விஶ்வஸிப்பவர் என்று எண்ணத்தகாதவரும், அவிஶ்வாஸிகளென எண்ணத்தக்கவரும், தம்மைப்போல் பிறரையும் செய்யக்கூடிய வித்யையை, பிறர்க்குக் கற்பிக்கவேண்டி எடுத்துக் கொள்ள முயன்றால், இந்தியாவைப் பலதரம் படையெடுத்துத் தேவாலயங்களின் தநத்தைச் சூறையாடின கஜநிவாஸியான மாமூது எனும் ராஜனும், மஹம்மத் கோரியெனும் அரசனும் நம்மவரால் வெறுக்கத்தகாதவர் என்று முடிகின்றது. இங்கிலீஷ் படிப்பு நமது கொள்கைகளையும் ஆசாரங்களையும் அழிக்கின்றது என்பதற்கு ப்ரமாணமாகப் பம்பாயில் ப்ரசுரமாகும் 'Times of India' என்னும் பத்ரிகையின் இவ்வருஷம் Christmas Number தனில் 'The Changing East' எனும் article படிக்கத்தக்கது.

பின்னும் தர்மஶாஸ்த்ர ஸம்பந்தமாகச் சட்டங்கள் பிறக்க ப்ரயத்நம் உண்டாயிருக்கின்றது. இதைப்பற்றிப் பின்னர் யோசிப்போம்.

இங்கிலீஷ் படிப்பு யாது பயனைத்தரும்? அர்த்தகாமங்களைத் தரும். அர்த்தகாமத்தை ஜநங்கட்குக் கொடுக்கப் பகவத்த்ரவ்யம் செலவிடப்படலாமா? அர்த்தகாமத்தை ஸம்பாதநம் செய்து பிறர்க்கு உதவலாம்; 'அது புண்யமாகும்; என்றாலோ,

'புண்ய: புண்யேந கர்மணா பவதி,' எனும், ச்ருதி வாக்யத்தின்படிப் புண்ய கர்மத்தால் புண்ய பலனை அடையலாம். ஆனால் பகவத் த்ரவ்யத்தைக்கொண்டு பரம்பரையாகப் புண்யம் யார் ஸம்பாதிக்கப்போகின்றனர்? பணத்தைப் பற்றுகின்றவர்களா? என்றால், ஜநங்கள் வேண்டிய அர்த்தகாமங்களை அளித்தால் பகவானும் த்ருப்தனாவன் என்று சொல்லக்கூடும்.

'[illegible] ஜ்ஞானாப்யாம் [illegible] ।
[illegible] யாவதாச [illegible] ।'

எனும்படிப் பகவானை அவனது ஜ்ஞானபக்திகள் தவிர மற்றொன்றையும்பற்றி ப்ரார்த்திக்கக் கூடாதே. பகவானிடம் தநத்தை யாசித்தால் புருஷார்த்தம் கெடுமே. இப்படிக்கு ப்ரமாணம் நிற்க, யாசிக்காமல் அவன் பொருளைக் கொண்டால் பாதகமில்லையென்று சொல்வரோ? பணத்தால் பரமபுருஷார்த்தம் கிடைக்குமாவென்றால், 'யதைவ உபகரணவதாம் ஜீவிதம் ததைவ தே ஜீவிதம் ஸ்யாத், அம்ருதத்வஸ்ய து நாசாஸ்தி வித்தேந' என்று யாஜ்ஞவல்க்யர் மைத்ரேயிக்குச் சொன்னதை நினைத்துப் பணத்தை அநுபவிப்பதால் பரமபுருஷார்த்தம் கிடைக்காதெனத் தெளியக்கூடாதா? பகவத் த்ரவ்யத்தைக்கொண்டா நன்மையைத் தேடவொண்ணும்? ஆனால், பணம் தேவாலயங்களில் மிகுதியானால் அதை எவ்விதம் செலவு செய்தால் கூடும் என்பர். பகவான் உகந்தபடிச் செலவிடல் வேண்டும். 'ஸர்வம் க்ருஷ்ணார்ப்பணமஸ்து' என்றிருக்கின்றது. பாகவதர் த்ருப்தி யடையும்படி பகவத் த்ரவ்யம் வ்யயம் செய்யப்படலாம். பகவத்பக்தி ஸாதகமான வித்யையை ஜநங்கட்கு உபதேசிக்க அதை வ்யயம்செய்யலாம். பகவத் பக்திக்கு விரோதமாகும் வித்யை நிமித்தம் அதைச் செலவிடலாமோ? இங்கிலீஷ் படித்தவர் பகவத் பக்தராய்ப் போந்தாராகிலும், அவர் பரீக்ஷை கொடுக்கவும் உத்யோகம் செய்யவும், வக்கீலாகவும், வைத்யராகவும், வர்த்தகராகவும், உபகாரமாகும் வித்யையைக் குறித்துப் பகவத் த்ரவ்யத்தைச் செலவு செய்தால், பகவான் த்ருப்தனாவன் என்பது பரிஹாஸ விஷயம். இவ்விடம் பகவத் சப்தம் த்ரவ்யம் தரும் ஆலயங்களில், அர்ச்சாரூபியாய் விளங்குபவனைக் குறிக்கின்றது. மற்றொன்றையும்



குறிக்காது. ஸ்ரீநிவாஸன் தநத்தைக்கொண்டு கொராணும் பைபிளும் கற்பிக்கக் கூடாதென்பதைச் சொல்லவும் வேண்டுமோ?

பாடலீபுரம்.

பாடலீபுரம் என்றும் பாடலீபுத்ரமென்றும் பெயர்கொண்ட மகதராஜ்யத்தின் ராஜதானியிருந்தவிடத்தை பூமியைத் துளைத்து சோதிக்கும்படி ரதன்தாதா எனும் பார்ஸி தனாட்யர் வருஷம் ஒன்றுக்கு 20000 ரூபாய் செலவுக்குக் கொடுக்கின்றார். இப்படிப்பட்ட சோதனை இப்போது நடக்கின்றது. இதைக்குறித்து டாக்டர், டி. பி. ஸ்பூநர் என்பவர் சிலவிஷயங்களை ராயல் ஏஷியாடிக் ஸொஸைடி எனும் சபைமுன்பாக ப்ரஸ்தாபித்தனராம். அந்த ப்ரஸ்தாபத்தில், பாரஸீக தேசத்தின் ப்ராசீந ராஜதானியான பெர்ஸிபோலீஸ் எனும் நகரத்தில் ராஜக்ருஹம் இருந்தவண்ணம், பாடலீபுரத்திலும் இருந்ததற்கு அடையாளமாக ஸ்தம்பங்களும் கட்டிடங்களின் அமைப்பும் வெளியாகின்றதெனவும், இதனாலும், தற்காலம் அகப்பட்டிருக்கும் எழுத்துமூலமான ஸாக்ஷ்யத்தைக் கொண்டும், பாரஸீகர் மகதநாட்டில் அரசாண்டனர் என்றும், அவருடைய அதிராஜ்யமானது அந்த நாட்டையும் உட்கொண்டதென்றும் அவர் தீர்மானம் செய்தனர்.

அவருடைய எழுத்து மூலமான ஸாக்ஷ்யம் நமக்கு வெளியாகவில்லை. பௌத்தர் புஸ்தகங்களாலும், ஆர்யர் புராணங்களாலும், புத்தருடைய ஸமகாலத்தில் மகததேசத்து ராஜர்களான விதிஸாரனெனும் பிம்பிஸாரனும், அவன் புத்ரன் அஜாதசத்ருவும், ராஜக்ருஹமெனும் நகரத்தில் அரசாண்டனரென்று ஏற்படுகின்றது. அதற்குப் பிறகு பாடலீபுரம் மகதராஜதானியாயிற்று. புத்தர்காலம் முதற்கொண்டு இந்திய தேசசரித்ரம் நஷ்டமாகவில்லை. ஆதலால் பாடலீபுரத்தில் பாரஸீக ராஜ்ய சங்கை நமவர்க்கு உதிப்பது கஷ்டம்.

அரண்மனைகள் பாடலீபுரத்திலும் பெர்ஸிபோலீஸ் நகரத்திலும் ஏகாகாரமாக அமைந்திருந்தால் அது க்ருஹநிர்மாணகர்த்ருத்வம் ஒன்றாகவோ ஸமாநமாகவோ இருந்ததென்று அயிர்ப்பதற்கு ஹேதுவாகுமேயன்றி, ராஜ்யங்களின் ஐக்யத்தை ஸ்தாபிக்கமாட்டாது. புத்தர்காலத்துக்கு ஏழு எட்டு நூற்றாண்டின் முன்னால், இந்த்ரப்ரஸ்தத்தில், பாண்டவர்க்கு அரண்மனை நிர்மித்த மயனும் பாரஸீக தேசஸ்தனா யிருக்கவேண்டும். அஸு-

ரர்களெனப் பிருதளித்துப் பாரஸீகநாட்டார் உபாஸித்த மித்ரா வருணர்களும் மற்றைய ஆர்யர்தேவர்களும், ஆர்யநாட்டில் தேவ ஶப்தத்தால் வ்யவஹரிக்கப் பட்டனர். அஸுரோபாஸகர்க்கு அஸுரரெனும் பெயரும், தேவோபாஸகர்க்குத் தேவரெனும் நாமமும், நாகோபாஸகர்க்கு நாகரெனும் பெயரும் பழையகாலத்தில் வழங்கின. மர்த்யரான அஸுரராஜரும், அஸுர ப்ரஜைகளும், மஹாபாரதகாலங்களில் இந்தியாவில் வஸித்தனர். ஆதலால் அஸுரரெனும் பாரஸீகரைக்கொண்டு மகதராஜர் பாடலீபுரத்தில் அரண்மனை கட்டியிருக்கலாம். இதன்மேல் ஊகித்தல் பொருந்துமெனத் தோன்றவில்லை.

**இந்தியர்படிப்பு.**

இவ்வருஷம் டிசம்பர் மாஸம் மாடர்ன் ரிவ்யூ எனும் பத்ரிகையில், இந்தியர்க்கு இசைந்த வித்யாதாநத்தைப் பற்றி, ஓர் இங்கிலீஷ் பத்ரிகையில், 1913 வருஷம் ஆகஸ்டு மாஸத்தில், குக்ஸன் எனும் ஒரு ஆங்கிலேயர் எழுதியதினின்று, ஓரம்ஶம் எடுக்கப்பட்டிருக்கின்றது. அதை இவ்விடம் விவரிப்போம்.

இந்தியர்க்குக் கல்வி கற்பிப்பவர் அக்கல்வி தேசத்தின் அபிவிர்த்திக்குப் பொருந்திநிற்கச் செய்யவேண்டும். இங்கிலீஷாயிருப்பதெல்லாம் யாவர்க்கும் நன்மையளிக்கவேண்டும், எனும், நமது வழக்கமான மூடவிஶ்வாஸத்தையிட்டு, இங்கிலீஷ் வாத்யார்களையும் பயிற்சியையும் இந்தியர்க்குத் தந்தோம். இவையிரண்டும் கிழக்கு தேசத்தினரை இங்கிலீஷ்க்காரராக மாற்றவில்லை. ஏனெனில், இந்தியர் இங்கிலீஷ்க்காரரன்று. இப்போது இந்தியர் உலகத்தில் மற்ற தேசத்தாருடன் வர்த்தகத்திலும் கைத்தொழிலிலும் போராடவேண்டியிருத்தலால், பதார்த்த விசாரவிஷயமாக மேற்கு தேசத்தார் விர்த்திசெய்த ஶாஸ்த்ரங்களிலும், கைத்தொழில் பயிற்சியிலும், இந்தியர்க்கு எவ்வளவு கற்பித்தாலும் பொருந்தும். ஆனால் அவர்க்குண்டான ஸ்வபாவாபிவிர்த்திக்கு, அவருடைய ப்ராசீந சரித்ரமே மூலமாகவேண்டும். அவர்க்கு அளிக்கும் வித்யைக்கு ப்ராணாதாரமாக இருக்கவேண்டியது லோகாந்தர விஷயமே. லோகாந்தரமே கீழ்தேசத்தினர்க்கு ஜந்மபூமி யொத்தது. மனிதர், மதமொன்றில்தான், தமது உயர்நிலையைப் பொருந்துகின்றனர். இந்தியா தேசமெங்கும், ஸ்கூல்களும், கலேஜ்களும் உண்டாக்கி, அவற்றுள் தேசாந்தர



வித்யைகளைச் சிறப்புடன் ஸங்கேதப்படிப் போதித்து, படிக்கும் சிறுவர் ஆத்மாக்களை ஜடமாக்கி, அவருடைய அந்தக்கரணங்களுக்கு விகாஸமின்றிச் செய்வதைக்காட்டிலும், அவருடைய கல்வியை அவர்க்கே விட்டொழியலாம். பரீக்ஷையில் தேறுகின்றவனைக் கற்பிக்க ஏற்படுத்துவதைவிட, வீண் எண்ண மிடுபவரும் ஸ்வப்நம் காண்பவரும் வாத்யாராக இருக்கத்தகும். இந்தியருடைய தேசாபிமாநத்துக்கு மேன்மையான உறுப்புகளாய் நிற்கும் வித்யைகளுக்கன்றோ, இந்திய யூநிவர்ஸிடிகள் ஓர் ஆலயமென இருக்கவேண்டும். சண்டை, கோபம், த்வேஷம், பத்தவைரம் இவை அந்த ஸ்தாநங்களைக் கெடுக்கலாமோ? அங்கே இந்தியருடைய குருஶிஷ்யபாவம் வளரவேண்டும். குருஶிஷ்யர்க்குள் உதிக்கும் ஸம்பந்தம் அவர்மதத்தை அநுஸரித்து நிற்கவேண்டும். மதம் யூநிவர்ஸிடிக்கு ஆத்மாவாகவேண்டும். அவருடைய ஜீவநம் அதை அநுஸரித்து நிற்கவேண்டும். நமது தர்மம் அவர்க்குக் கூடுமோ? அவருடைய தர்மத்தில் அவர்க்கு விஶ்வாஸம் நிலைக்கவேண்டும். இந்த்ரிய நிக்ரஹம், டம்பமின்மை, வீண்செலவு செய்யாமை, மர்யாதை, பரஸ்பரஹிதம், பெரியோர்வணக்கம், ஆமுஷ்மிகத்தில் சிந்தை, இவற்றை மனிதர்க்கு முக்யகுணங்களாக கீழ்தேசத்தினர் உரைக்கின்றனர். இவற்றையன்றோ அந்தக் கலாசாலைகள் காப்பாற்றவேண்டும்?

இவ்வித யோசனைகள் இதர ஐரோப்யர்களும் செய்யக்கூடும். இந்தியர்க்குள் படித்தவர் பலர் இவ்விதம் யோசிக்கக்கூடும். ஆனால் தத்காலம் பஶ்சிமவித்யையை அப்யஸித்தவர் ப்ராயேண மேல்வனாந்த யோசனையை அங்கீகரிக்கமாட்டார். பூர்வகாலம் இந்தியாவும் இத்தகைய சிந்தைகளில் மாத்ரமே ஆழ்ந்ததன்று. நமது முன்னோர் வீர்யம் பராக்ரம முதலான ஆண்தன்மைகளைப் பகுமானித்தனர். ஆனால் அவை ஸத்யதர்மங்களின்மேல் நிலைக்க வேண்டு மென்றார். உத்ஸாஹம், முயற்சி முதலான குணங்களை மதித்தனர். [illegible] என்று மிக்க பொருள் சேர்க்கச்சொன்னார். ஏனென்றால் [illegible] என்று, எவனாகிலும் வீடேறி இருப்பிடத்திற்காகவும் போஜநத்துக்காகவும் வந்தானாகில் அவனை நிராகரித்தல் கூடாதென்றனர். அர்த்தகாமங்களை தர்மநிமித்தம் ப்ர

யோசிக்கச் சொன்னார்கள். உலகத்தில் நன்குவஸித்து ஆமுஷ்மிக சிந்தையும் விடாதிருக்க வேண்டினர். தேஹயாத்ரைக்கு வேண்டியமட்டும் விஷயாநுபவமும் அதற்குமேல் அதில் த்யாக புத்தியும் உபதேசித்தனர். ஆனாலும் தத்காலம் வழங்கிவரும் பாஹ்யதேசவித்யை நம்சிறுவரையும் பாஹ்யராகச் செய்தது. விஷயவாஸனை மேலிட ஆமுஷ்மிகசிந்தை விலகிப்போய் விட்டது.

**இந்திய பெண் கல்வி.**

மக்கள் இவ்விதம் வளர மகளிர்க்கும் பச்சிம தேச வித்யாப்யாஸம் வேண்டப் படுகின்றது. வாயினால் அநேகர் ஸீதை, ஸாவித்ரி, தேவி, தமயந்தி, அநுஸூயை, மைத்ரேயி, ஸுமித்ரை. பாஞ்சாலி, முதலான நமது ப்ராசீந ஸ்த்ரீரத்நங்களை ஸ்மரித்துக் கொண்டு, பச்சிமதேசத்தில் தத்காலம் பரிணமிக்கின்ற ஸ்த்ரீகளை யொக்க நமது ஸ்த்ரீகளும் பரிணமிக்கும் மார்க்கம் தேடுகின்றனர்.

பால்யவிவாஹம் ஸ்த்ரீகளுக்கு சரீரதார்ட்யக்குறைவு செய்கின்றதெனச் சொல்லிவிட்டுத், தமது பிள்ளைகள் ஸர்வஜ்ஞாநமும் தேசாந்தர பாஷாமூலமாய் அடைகின்றதனாலும், பரீக்ஷாநியமங்களால் க்லேசிக்கப் படுவதாலும், துர்பலத்தை யடைந்து, வ்யாதிகளால் குன்றி, அல்பகாலம் ஜீவித்து, மரிக்கின்றா ரென்பதை அறிந்தும், அதே ரூபமான வித்யாப்யாஸத்துக்கும் பரீக்ஷைகளுக்கும் நமது ஸ்த்ரீகளையும் உட்படுத்துவது யுக்தமன்றென ஏன் யோசிக்கின்றாரில்லையோ? வ்ருத்தம் செம்மைப்படுவது வித்யாப்யாஸ ப்ரயோஜநம் என்பார். இத்தகையவித்யை இங்கிலீஷ் புஸ்தகங்களில்தான் உண்டெனச் சொல்ல யாரும் துணியார். அங்கேதான் அவை கிடைக்குமென்றாலும் அது தேச பாஷையில் மொழிபெயர்க்கப்பட்டு நமது சிறுவர்க்குப் பயன் படாதா? இங்கிலிஷ்க்காரர் தவிர மற்ற தேசத்தார் ஸ்வதேச பாஷையைக்கொண்டே ஸர்வவித்யைகளையும் தெரிந்துகொள்ள வில்லையோ? பாஷாந்தரமே நம் சிறுவர்க்கு வித்யாமூலமாய் நிற்பதைப்பற்றி சோகிக்காமல் பெண்கட்கும் அதேமார்க்கம் தேடுவது மதியின்பயனாமோ?

பதார்த்த சாஸ்த்ரபரிசயம் யாவர்க்கும் வேண்டியதே. இதனால் இவ்வுலகம் நன்கு அநுபவயோக்யமாகும். ஐஹிகத்தை வேண்டாதார் ஆயிரத்தில் ஒருவர் தேறார். ஆனால் பதார்த்த



சாஸ்த்ரத்தை நாமநுபவிக்கும்படிப் பலிக்கச்செய்பவர் சிலராகத் தான் முடிவார். ஏனையோர்க்கு அது அஜ்ஞாந நிவாரணத்தின் பொருட்டுத்தான் உபயோகமாகும். வ்ருத்தம் சீர்பட இது உதவாது. ஆத்மகுணங்கள் இதனால் விகஸிக்கமாட்டா. ஆமுஷ்மிகம் இதனால் பலிக்காது. இவைமூன்றும் நமது பெரியோர் நமக்களித்த உபதேசங்களை வெளியிடும் நமது ப்ராசீந க்ரந்தாவலோகநத்தால்தான் ஸித்திக்கும். தேசாந்தரங்களில் வஸித்த கவிஞர் செய்த பாஷாந்தர க்ரந்தங்கள் இச்சீர்மைகளை உண்டாக்கமாட்டாவோ என்றால், ப்ராயேண இது ஸம்பவிக்கமாட்டாது. முன்னமே ஐரோப்பியர் வசநத்தைக் காட்டினோம். இங்கிலீஷ் எவ்வளவு கற்றாலும் ஹிந்துக்கள் இங்கிலீஷ்க்காரர் ஆகமாட்டார்கள்.

இங்கிலீஷ் ராஜாங்கபாஷை யாயிற்றே. அதன் பரிசயம் அவச்யம் வேண்டுமன்றோ? என்றால், ராஜாங்க ஸம்பந்தத்தையும் ராஜாங்கத்தார் பழக்கத்தையும் அபேக்ஷிப்பவர்க்கு அது வேண்டியதே. அதுவும் பேசவும் எழுதவும் ஸாமர்த்யம் உண்டாகும் பர்யந்தமே வேண்டியது. இந்த ஸாமர்த்யம் நம்முடைய ஸ்த்ரீகளுக்குத் தேவையோ? இங்கிலீஷில் பாண்டித்யம் அபேக்ஷித்த ஸ்த்ரீகள் அதை நன்றாகக் கற்கட்டும். மற்றோர் விஷயத்தில் இந்த நிர்ப்பந்தமேன்?

எது செய்தாலும், நமது மதத்தை அழிக்கும் விதம் ஸர்வப்ரகாரத்தாலும் விலக்கத்தக்கதே. இதைப் பராமர்சிக்காமல் ஆசார சீர்திருத்த மென்று சொல்லிக்கொண்டு, மர்யாதைகளைத் தாண்டி வர்த்திப்பவர், தாங்கள் செய்வதைக் கண்டு தங்களைக் காட்டிலும் புத்தியில் குன்றியவர் செய்ய ஆரம்பிப்பார் என்பதை யோசிக்கத்தக்கவர். ப்ராயேண ஜநங்கள் அஜ்ஞர். அஜ்ஞர்க்குப் புத்திபேதம் ஜநிக்கும்படி ஜ்ஞாதாக்கள் எனப் பெயர்தரித்தவர் வர்த்திக்கல் தகாது. மர்யாதை குலையாமல் ஆசாரங்கள் மாற நாம் கேட்டும் கண்டு மிருக்கின்றோம். ஈச்வர பக்தியாலும் ஸாதுத்வத்தாலும் ச்ரேஷ்டரெனப் படுபவர்கள் இவ்வித மாறுதல்களை உண்டாக்கியிருக்கின்றனர். கேவலம் லௌகிகர் ஆசாரங்களை மாற்ற ஆரம்பித்தனராகில் மர்யாதைகள் குலைவதுடன் நாஸ்திக வாதங்களும் தலையெடுக்கும்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:.

# ஸ்ரீ ஸ்தோத்ர ரத்நம்.

உதீர்ணஸம்ஸாரதவாஶுஶுக்ஷணிம்
க்ஷணேந நிர்வாப்ய பராம் ச நிர்வ்ருதிம் |
ப்ரயச்சதி த்வச்சரணாருணாம்புஜ -
த்வயாநுராகாம்ருதஸிந்துஶீகர: ‖ 29.

29. குருவாயுள்ள மோக்ஷமாகிற பலத்திற்கு லகுவாயுள்ள ப்ரபத்தியாகிற உபாயம் எவ்விதத்தில் அநுரூபமான நிமித்தமாகும்? என்னும் ஶங்கையை நிவ்ருத்தி செய்ய யத்நம் செய்து, ஸ்ரீ ஆளவந்தார், கைமுதிக ந்யாயத்தை அவலம்பித்தவராய்க் கொண்டு, ப்ரபத்தியைக் காட்டிலும் லகுவான அஞ்ஜலி யென்னும் பகவத்தர்மத்தின் ப்ரபாவத்தைக் கீழ் ஶ்லோகத்தில் உதாஹரித்துவிட்டு, இந்த ஶ்லோகத்தால், 'அஞ்ஜலிக்கும் அநர்ஹர்களாக இருப்பவர் விஷயத்தில் அநுராக லேஶ மாத்ரமும் ஶரண்யனுடைய சித்தத்தை ரஞ்ஜிப்பிக்கக் கூடியது' என்பதை விவரிக்கிறார்.

த்வச்சரணாருணாம்புஜத்வயாநுராகாம்ருதஸிந்துஶீகர: உதீர்ணம் ஸம்ஸார தவாஶுஶுக்ஷணிம் க்ஷணேந நிர்வாப்ய, பராம் நிர்வ்ருதிம் ச ப்ரயச்சதி ‖ [ஹே ஶரண்ய! உன்னுடைய திவ்ய சரண நளின யுகளத்தில் வைக்கப்படும் ப்ரீதி விஶேஷமானது பெரியதொரு அம்ருத ஸமுத்ரத்தைப் போன்றது. அந்த ஸமுத்ரத்தின் ஒரு திவலை மாத்ரமே, ஜ்வலித்துக் கொண்டிருக்கும் ஸம்ஸாரமாகிற இந்தக் காட்டுத்தீயை விளம்பமின்றிக்கே ஒரு க்ஷணத்தில் ப்ரஶமநம் செய்துவிட்டு, முக்தர்க



ளுடைய அநுபவத்திற்கு ஸமாநமான ஸுகத்தையும் (அப்படி ப்ரீதி செய்யுமவர்களுக்குக்) கொடுக்கின்றது.]

" விஷயே தே மஹாராஜ! ராமவ்யஸநகர்ஶிதா: |
அபி வ்ருக்ஷா: பரிம்லாநா: ஸபுஷ்பாங்குரகோரகா: ‖ "

[ஹே மஹாராஜனே! ராமபத்ரன் வநம் போய்விட்டான் என்னும் துக்கத்தினால் வருந்தினவைகளான உம்முடைய ராஜ்யத்திலுள்ள அசேதநங்களாகிய வ்ருக்ஷங்களும், தமது புஷ்பம் தளிர் மொட்டு ஆகிய ஸகலங்களுடனே வாடி வதங்கிவிட்டன] என்கிறபடி அநுராக லேஶத்தைச் செய்த கோஸலதேஶத்து வ்ருக்ஷங்களுக்கும் உசிதமான காலம் ப்ராப்தமானபோது பரமபுருஷார்த்த ஸித்தியை ஶரண்யன் கொடுத்ததை நாம் அறியவில்லையோ? அப்படி ஸ்தாவர விஷயத்தில் க்ருபை கூர்ந்த ஶரண்யன், நமது அநுராகத்தை எவ்விதத்தில் நிராகரிப்பன்? அஞ்ஜலிக்கு அநர்ஹதை ஜநித்துவிட்டாலும், நாம் இவ்விதமான அநுராகத்தைச் செய்வதே போதுமானது; அந்தத் தர்மத்தின் ப்ரபாவம் அப்படிப் பட்டது என்பது ஸ்ரீ ஆளவந்தாருடைய திருவுள்ளம்.

த்வச்சரணாருணாம்புஜ த்வயாநுராகாம்ருத ஸிந்து ஶீகர:-ஸாமாந்யமான இதர க்ஷுத்ர தேவதைகளின் பாதங்களில் செய்யப்படும் ப்ரீதி இந்த ப்ரபாவத்தை உடையது அன்று;

" ஏஷ ஹ்யேவாநந்தயாதி "

[இவன்தான் ஆநந்தத்தைக் கொடுக்கிறான்] என்றும்,

" ரஸꣳ ஹ்யேவாயம் லப்த்வாऽऽநந்தீ பவதி "

['ரஸம்' என்று சொல்லப்படும் பரமாத்மாவை அடைந்தே இந்த ஜீவாத்மா ஆநந்தத்தைப் பெறுகிறான்] என்றும் சொல்லப்படும் ஶரண்யனுடைய பாதாரவிந்தங்களே இந்த மாஹாத்ம்யத்தை யுடையவை என்பதை " த்வ " என்னும் பதம் ஸூசிப்பிக்கின்றது.

நீலமேக ஶ்யாமளமாயுள்ள திவ்யமங்கள விக்ரஹத்தில், சிவந்த தாமரை புஷ்பம் போன்ற திருவடிகள் தோன்றினால்,

அது ஒரு பரபாக ஶோபையைக் கொடுக்குமன்றோ? அப்படிப் பட்ட ஶோபையை யுடைய திருவடிகளில் எவன்தான் அநுராகம் செய்யாமல் இருக்கக் கூடும்? என்பதைக் காண்பிக்க "அருணாம்புஜ" என்னும் உபமாநம் திருவடிகளுக்கு ப்ரயோகிக்கப்பட்டிருக்கின்றது.

"க்வசிந்நீல க்வசித் க்வசந்த்ர
க்வசிதஸித க்வசித் அவலோகித் ஸ்வர்ணஸவர்ணம் ।
ஸாந்த்ரகமநீய ப்ரஸாத ப்ரஸாதாஸ்யம்
பாரேக த்ருஶௌ மம த்ருப்யேதாம் ॥"

[சில விடங்களில் இந்தீவரம் போலவும், சிலவிடங்களில் அரவிந்தம் போலவும், சில விடங்களில் சந்த்ரிகை போலவும், சிலவிடங்களில் ஸுவர்ணம் போலவும் இப்படி வர்ணாந்தர ஸாந்நித்யத்தினால் வர்ணோத்கர்ஷத்தை அடைந்திருக்கும் உன்னுடைய திவ்ய மங்கள விக்ரஹத்தின் காந்தியை அநுபவிக்கும் என்னுடைய கண்கள், எப்பொழுதாவது த்ருப்தி அடையுமோ?] என்றன்றோ ஆழ்வான் பகவத் விக்ரஹ ஶோபையை அநுபவிக்க ப்ரார்த்தித்திருக்கிறார்.

'ஸுதாஶீகர:' என்றால் ப்ரீதி. ஶரண்யனுடைய திருவடிகளில் செய்யப்படும் ப்ரீதியானது ஸாமாந்யமான ப்ரீதியன்று. லௌகிக விஷயங்களில் அவிவேகிகளான ஸம்ஸாரிகள் செய்யும் ப்ரீதி இந்த ப்ரீதிக்கு நிதர்ஶநமாகாது. லௌகிக விஷயங்களுக்கும் ஶரண்யனுடைய திருவடிகளுக்கும் வாசி எவ்வளவோ, அவ்வளவு வாசி அந்த ப்ரீதிக்கும் இந்த ப்ரீதிக்கும் உண்டு. இந்த ப்ரீதி அநுபவத்தினால் மாத்ரம் அறியக்கூடியதே தவிர, வேறு எவ்விதத்தினாலும் அறியக்கூடியது அன்று. 'நிரதிஶயமான ஒருப்ரீதி விஶேஷமே இது' என்று ஒருகால் சொல்லலாம்.

இந்த ப்ரீதியானது, ஸர்வ ப்ரகாரத்திலும் ஸஞ்ஜீவநமாகவும் ஸ்வயம் ப்ரயோஜநமாகவும் குறைவு அற்றதாகவும் இருப்பதனால், இது, அப்படிப்பட்ட ஸ்வபாவத்தையுடைய அம்ருத ஸிந்துவுக்கு உபமிக்கப்பட்டிருக்கிறது.



இந்த ப்ரீதி, முதலில் ஸ்வல்பமாக அங்குரித்தாலும், பின்பு
வரவரப் பாக்யவிஶேஷத்தால் பரமபக்திதஶையை அடைந்து
நித்யகைங்கர்ய மளவான பரமபோகத்தை அந்தத்தில் கொடு
த்துவிடும் என்பதை ஸூசிப்பிக்கும் பொருட்டு 'ஶீகர:'
(இந்த ஸமுத்ரத்தில் ஒரு திவலை) என்று சொல்லப்பட்டிருக்கிறது.

உதீர்ண ஸம்ஸார தவாஶுஶுக்ஷணிம் - 'உதீர்ண'
என்பதற்கு - ஜ்வலித்துக்கொண்டிருக்கும் என்று அர்த்தம். 'தவா
ஶுஶுக்ஷணி' என்பதற்கு-காட்டுத்தீ என்று அர்த்தம். 'ஸம்ஸார'
என்பது, இடைவிடாமல் இறப்பதும் பிறப்பதுமான ஒரு அவஸ்
தையின் தொடர்ச்சி. இந்த ஸம்ஸாரமானது, காட்டுத்தீயைப்
போல அதி தீவ்ரங்களான தாபங்களுக்கு ஜநகமாகவும் அதி
துஸ்ஸஹமாகவும் ஸாமாந்யமாக உபஶமந மடையாததாகவும்
இருப்பதனால், அதற்கு ஸத்ருஶமாகச் சொல்லப்பட்டிருக்கின்
றது. கடிநமான பொருள்களை நஶிப்பிக்கும் தீயை நாம் 'ஜ்வ
லிக்கும் தீ' என்று வ்யவஹரிக்கிறோம்; ஶாஶ்வதமாகவும் நஶிப்
பிக்கவேகூடாததாகவுமுள்ள ஆத்மாவை, 'ஆத்மாவென்று ஒன்று
உண்டு' என்று வ்யவஹரிக்கவும் ஸாத்யமில்லாதபடி அடியோடு
நாஶம்செய்யும் ஸ்வபாவமுள்ள இந்த ஸம்ஸாரத்தை 'ஜ்வலிக்
கும் ஸம்ஸாரம்' என்று சொல்ல யாது ஆக்ஷேபம்?

க்ஷணேந நிர்வாப்ய பராம் ச நிர்வ்ருதிம் ப்ரயச்ச
ச்சதி - இந்தப் பக்தி, கேவலம் அநிஷ்டமாகிற ஸம்ஸாரத்தைப்
போக்குகிறது என்பது மாத்ரம் அன்று; இஷ்டத்தையும் ஸாதித்
துக் கொடுக்கக்கூடியது என்பதை இந்த வாக்யம் காண்பிக்
கின்றது. கேவலம் ஸம்ஸாரம் அற்றுப்போவதே பரமபுருஷார்
த்தமாகும் என்பது பிசகு; ஸம்ஸாரம் நிவ்ருத்தியானால், பரி
பூர்ண அநுபவம் என்று சொல்லப்படும் ஓர் ஆநந்தமும் அதன்
வழியே வரும். ஸம்ஸாரம் அற்றுப்போவதுடன் இந்த அநுபவ
ப்ராப்தியும் நமக்கு உத்தேஶ்யம் என்பதை இது விளக்கு
கின்றது.

ஸவிலாஸ விக்ராந்த பராவராலயம்
நமஸ்யதார்த்தி க்ஷபணே க்ருதக்ஷணம் ।
தநம் மதீயம் தவ பாதபங்கஜம்
கதா நு ஸாக்ஷாத்கரவாணி சக்ஷுஷா ॥ 30.

30. இது வரையில், ப்ரபத்தி யென்னும் உபாயத்தின் ஸ்வரூபமும், அதன் ஸௌகர்யம் முதலிய குணங்களும் ப்ரபாவமும் விவரிக்கப்பட்டன; இனி இந்த உபாயத்தினல் அடையக்கூடிய ஶரண்யனுடைய வைலக்ஷண்யம், இது முதல் 17 - ஶ்லோகங்களினல் ப்ரபஞ்சிக்கப்படுகின்றது.

நமக்கு முக்யமாயுள்ள மந்த்ரங்களுள் த்வயம் என்னும் மந்த்ரம் ஒன்று. அது, 'ஶ்ரிய:பதியான நாராயணனுடைய சரணாரவிந்தங்களை ஶரணமாக அடைகிறேன்; அப்படிப்பட்ட நாராயணனுக்கே நமஸ்காரம்' என்னும் ஸ்தூலமான அர்த்தத்தை யுடையது. இதில் முதல்பாகத்தைப் பூர்வகண்ட மென்றும், இரண்டாவது பாகத்தை உத்தரகண்ட மென்றும் சொல்வது உண்டு. ஸாமாந்யமாக, பூர்வ கண்டம், பகவானை அடைவிப்பிக்கும் உபாயமாகிற ப்ரபத்தி வித்யையைப் பற்றிப் பேசுகிறதென்றும், உத்தர கண்டம் உபேயமாகிற பகவத்தத்வத்தைப்பற்றிப் பேசுகிறதென்றும் சொல்வார்கள். இந்த ஸ்தோத்ர ரத்நத்தில் இது வரையில் அந்த உபாயத்தைப் பற்றிச் சொல்லியிருக்கிறபடியால், முதல் 29 - ஶ்லோகங்களும் த்வயத்தின் பூர்வ கண்டத்தின் அர்த்தத்தை விவரிக்கின்றனவாம்; இனிப் பகவானுடைய வைலக்ஷண்யம் சொல்லப்படுகிறபடியால், பின் வரும் ஶ்லோகங்கள், அதன் உத்தர கண்டத்தின் அர்த்தத்தை விவரிக்கின்றனவாம். இந்தக் காரணத்தினல், இந்த ஸ்தோத்ர ரத்நம் முழுவதுமே த்வயத்தின் ஒரு வ்யாக்யாநமென்று பெரியோர்களால் சொல்லப்படுகின்றது.

பகவானுடைய வைலக்ஷண்யத்தைச் சொல்லத்தொடங்கி, முதலில் அவனது திவ்யமங்களவிக்ரஹத்தை த்யாநித்துவிட்டு,



'அவனுடைய பாதாரவிந்தத்தை எப்பொழுது நான் தர்ஶிக்கப்போகிறேன்? எப்பொழுது அதன் ஸம்ஶ்லேஷம் எனக்குக் கிடைக்கப் போகின்றது?' என்று தமது த்வரையை ஸ்ரீ ஆளவந்தார், இந்த ஶ்லோகத்தினுலும் இதற்கு அடுத்துவரும் ஶ்லோகத்தினுலும் வெளியிடுகிறார்.

ஸவிலாஸ விக்ராந்த பராவராலயம் நமஸ்யதார்த்தி க்ஷபணே க்ருதக்ஷணம் தநம் மதீயம் தவ பாதபங்கஜம் கதா நு சக்ஷுஷா ஸாக்ஷாத்கரவாணி? [அநாயாஸமாகவே ஸமஸ்தலோகங்களையும் விக்ரமித்தும், ஆஶ்ரிதர்களுடைய ஸமஸ்த ஆர்த்தியையும் போக்கடிப்பதில் வ்யாபரித்தும் நிற்பதும், என்னுடைய பரமபுருஷார்த்தமானதுமான உன்னுடைய திருவடியை நான் எப்பொழுது இந்தக் கண்ணினல் ஸாக்ஷாத்கரிப்பேனே?]

ஸவிலாஸவிக்ராந்தபராவராலயம் - பூலோகம் முதலாய் ஸத்யலோகம் வரையிலுமுள்ள ஸமஸ்த லோகங்களையும் அநாயாஸமாகவே ஒரு லீலைபோல ஆக்ரமித்து நின்றதாம் இந்தத் திருவடி. 'பர' என்றால் ப்ரஹ்மா முதலிய பெரியோர்கள்; 'அவர' என்றால் மநுஷ்யர் முதலிய சிறியோர்கள். இவர்களுடைய லோகங்கள்தாம் இவ்விடத்தில் 'பராவராலயம்' என்று சொல்லப்படுகின்றன. ஸ்ரீமந் நாராயணன் த்ரிவிக்ரமாவதாரம் செய்தபொழுது,

"க்ஷாம் த்வா பரிக்ஷம் அமரம் தயா திவம்"

[பூமியையும் ஆகாஶத்தையும் தேவலோகத்தையும் அளாவி] என்கிறபடியே அவனுடைய திருவடி ஸகலலோகங்களையும் விக்ரமித்து நின்றது என்பது ப்ரமாண ப்ரஸித்தம்.

"அஶேஷ விஶேஷித ஸ்ப்ருஷ்ட ஜங்கம ஸ்தாவராஶ்ரித:
ஶ்ராவண ஶீகர ஸ்ப்ருஷ்ட ஜங்கம ஸ்தாவரம் ॥"

அநுகூல ப்ரதிகூல விபாகமற ஸர்வசராசரங்களையும் அவர்களுடைய ப்ரார்த்தநாபேக்ஷையின்றிக்கே ஸர்வபுருஷார்த்த ஸாதந

மான தனது திருவடித் தாமரையினாலே அலங்க்ருதமிரஸ்கரா கும்படி ஸாரண்யன் செய்தருளினது ஒரு தயா கார்ய விசேஷ மன்றோ? அந்தக் காலத்தில் தாமும் ஜந்மம் அடைந்திருக்கக் கூடாதா? என்று ஸ்ரீ ஆளவந்தார் இங்கு கேதப்படுவதுபோலும் தோன்றுகிறது.

"ஹா ஜந்ம ஜாது தாஸு ஸிகதாஸு மயா ந லப்தம்"

[அம்ஹோ! எம்பெருமான் திருவவதரித்த காலத்தில் அவனுடைய பதவிந்யாஸத்தைப் பெற்ற மணல்களில் ஒன்றாகவாவது நான் ஜந்மத்தைப் பெற்றிருக்கக் கூடாதா?] என்றன்றோ பக்தர்கள் கதறியிருக்கிறார்கள்?

நமஸ்யதாமகில க்ஷபணே க்ருதக்ஷணம் - இந்தத் திருவடி, எல்லோராலும் அயத்நமாகவே ஆஸ்ரயிக்கக்கூடியது, ஸகல அநிஷ் டத்தையும் நிவர்த்திக்கக்கூடியது என்னும் இந்தப் பாவத்தை இந்த வாக்யம் காண்பிக்கின்றது. 'க்ஷண:' என்பது, நிர்வ்யா பார ஸ்திதிக்குப் பெயர். ஆஸ்ரிதர்களை ஸம்ரக்ஷிக்கும் விஷயத்தில், ஸாரண்யன் மற்றை எல்லா வ்யாபாரங்களையும் விட்டுவிட்டு இதி லேயே ஊக்கமுள்ளவனாக இருக்கிறான் என்று சொன்னதாயிற்று.

மதீயம் தநம் - 'தநம்' என்பதற்கு, ஸகல அபிமதங்களையும் ஸாதித்துக் கொடுக்கும் த்ரவ்யம் என்று அர்த்தம். வேறு ஒரு உபாயத்தையும் அறியாமலிருக்கும் ஒருவனுக்குப் பரமபுரு ஷார்த்தத்தை ஸாதித்துக்கொடுக்கும் த்ரவ்யம் தநமாகாவிட்டால் மற்றை எதுதான் தநமாகும்?

தவ பாதபங்கஜம் கதா நு சக்ஷுஷா ஸாக்ஷாத்கரவாணி - 'தவ' என்பதற்கு, உன்னுடைய என்று அர்த்தம். அதாவது - அளவற்ற போக்யதையை யுடையவன் நீ என்று உன்னை அநுபவிப்பதில் ஒரு சாபல்யமும், ஆஸ்ரிதர்களிடம் வாத்ஸல்ய முள்ளவன் நீ என்று உன்னை அணுகுவதில் ஒரு தைர்யமும், உன்னை நினைக்கும் பொழுது எனக்கு ஜநிக்கின்றன என்று தாத்



கதா புந: ஶங்கரதாங்ககல்பக
த்வஜாரவிந்தாங்குஶவஜ்ரலாஞ்சநம் ।
த்ரிவிக்ரம! த்வச்சரணாம்புஜத்வயம்
மதீயமூர்த்தாநமலங்கரிஷ்யதி? ॥ 31.

பர்யம். 'பாதபங்கஜம்' - இந்தப் பாதாரவிந்தம் முமுக்ஷுக்க ளாலன்றோ த்யாநிக்கத்தகுந்தது? முக்தர்களாலன்றோ அநுப விக்கத்தகுந்தது? அவ்வளவு உத்க்ருஷ்டமான த்ரவ்யத்தை இந்தக் கண்களினால் நாம் தர்ஸிக்க இச்சிக்கிறோமே! இது என்ன ஸாஹஸம்?

"ந சக்ஷுஷா பஶ்யதி கஶ்சநைநம்"

[ஒருவனும் இவனை இந்த மாம்ஸ சக்ஷுஸ்ஸைக்கொண்டு பார்க்க முடியாது] என்றும்,

"ந மாம்ஸ சக்ஷுஷா த்ரஷ்டும் ப்ரஹ்மாத்யை: ஶக்யதே ॥"

[பர தத்வமாயுள்ள அந்தப் பொருள் இந்த ஊனக்கண்களினால் தர்ஸிக்கக்கூடாதது] என்றும் சொல்லியிருப்பதை நான் மறந் தேனோ? என்பது தாத்பர்யம். 'அப்படி பயப்படவேண்டாம்; பக்தர்களுடைய மநோரதத்தை நிறைவேற்றிக்கொடுப்பதில் பத்த கங்கணனாக இருக்கும் பகவான் இச்சித்தால், ஸகலத்தையும் ஸாதி த்துக்கொடுப்பன்' என்னும் ஒரு தைர்யம் பிறந்து 'சக்ஷுஷா கதா ஸாக்ஷாத்கரவாணி?' என்று ப்ரார்த்திக்கிறார்.

"ஶாலா ஜாவிரஹா ஹரிணீ:"

என்கிறபடி, எவ்வித யோக்யதையும் இல்லாத கோபஸ்த்ரீகளுக்கு ஸ்ரீ பகவான் ஆவிர்பவிக்கவில்லையோ? அர்ஜுநன் முதலியவர்கள் விஷயத்தில் திவ்ய சக்ஷுஸ்ஸைக் கொடுத்து அவர்களுடைய மநோரதத்தைப் பூர்த்தி செய்துவைக்கவில்லையோ?

31. பகவானுடைய பாதாரவிந்தத்தைத் தர்ஸிப்பதில் தம க்கு இருக்கும் ஔத்ஸுக்யத்தை ஒருவாறு வெளியிட்டு, இப் பொழுது, 'அந்தப் பாதாரவிந்தத்தின் ஸம்ஸ்லேஷ விசேஷ

மும் எனக்குக் கிடைக்குமோ? அத்யந்தம் நிஹீநனும், அந்த ஸம்ஶ்லேஷத்திற்கு அநர்ஹனும், சிர காலமாக அந்தப் பாதங்களை ப்ரணாமம் செய்யாததால் அத்யந்தம் தூஷிதனுமுள்ள எனக்கு அது எப்படி ஸம்பவிக்கப்போகின்றது? என்று ஶங்கிக்கிறார்.

ஹே த்ரிவிக்ரம! ஶங்கரதாங்க கல்பக த்வஜாரவிந்தாங்குஶ வஜ்ரலாஞ்சனம் த்வச்சரணாம்புஜத்வயம் மதீயமூர்த்தானம் கதா அலங்கரிஷ்யதி? [ஹே த்ரிவிக்ரமாவதாரஞ்செய்த ஶரண்யனே! ப்ரஸித்தி ப்ரஸித்தமான ஶங்கம் சக்ரம் முதலிய ஸாம்ராஜ்ய சிஹ்நங்களையுடைய உன்னுடைய பாதாரவிந்தம், என்னுடைய ஶிரஸ்ஸையும் அலங்கரிக்குமோ?]

'ஶங்க: - ஶங்கம்; ரதாங்க: - சக்ரம்; கல்பக: - கல்பவ்ருக்ஷம்; த்வஜ: - த்வஜம்; அரவிந்தம் - தாமரைபுஷ்பம்; அங்குஶம் - அங்குஶமென்னும் ஆயுதவிஶேஷம்; வஜ்ரம் - வஜ்ராயுதம்: இவைகளைப் போன்ற ரேகைகள் பாதங்களில் அமைந்திருப்பது ஸாம்ராஜ்யத்தைக் குறிக்கும் உத்தம புருஷலக்ஷணமாகும். "ராஜாதிராஜ லக்ஷணம்" என்று சொல்லப்படும் ராஜாதி ராஜனுக்கு இவை அநுரூபங்களான சிஹ்நங்களே.

"ஸம்வீக்ஷ்யதே ஸ்மயத ஸ்வர்ணாரவிந்தம்
வஜ்ராங்குஶ த்வஜஸரோருஹ லாஞ்சநாட்யம் |"

என்று ஸ்ரீ பாகவதத்தில் ப்ரஸித்தமாயுள்ள ஆகாரம் இவ்விடத்தில் அநுஸந்திக்கப்படுகிறது.

த்ரிவிக்ரம! கீழ் ஶ்லோகத்தில் சொல்லியபடி அநுகூல ப்ரதிகூல விபாகமற எல்லாருடைய ஶிரஸ்ஸிலும் தனது திருவடிகளை வைத்து அநுக்ரஹித்த அவதாரமாயிற்றே இது! அது எனக்கு ப்ராப்தமாகாமல் போய்விட்டதே! என்று ஒரு நிர்வேதம் இதனால் த்யோதிப்பிக்கப்படுகிறது. ஸ்ரீ கூரத்தாழ்வான், ப்ருந்தா



வநத்தில் ஸ்ரீ க்ருஷ்ணன் செய்த ஸஞ்சாரத்தை ஒருகால் த்யாநம் செய்துகொண்டு, 'ஐயோ! கணக்கற்ற புழுக்களும் புற்களும் ப்ருந்தாவநத்தில் ஸத்தையைப் பெற்ற மாத்ரத்தினால், ஸ்ரீ க்ருஷ்ணனுடைய பாத ஸ்பர்ஶம் அடைந்தவைகளாய் அநுக்ருஹீதங்களாகி விட்டனவே! அவைகளுள் ஒன்றாகவாவது நாம் அப்பொழுது ஜநித்திருக்கக்கூடாதா? அத்யந்தம் பாபிகளாகிவிட்டோமே! இனி எப்பொழுதுதான் அந்த ஸம்ஶ்லேஷம் நமக்கு லப்தமாகும்?' என்று கதறுகிறார்.

"வ்ருந்தாவநே ஸ்திரசராத்மககீடதூர்வா-
யத்பாதஜந்மநி வயே பத யே ததாநீம் |
நைவாஸ்ம ஸாஹி ஜநிம் ஹதகா ஸ்த ஸந்தே
பாபாஃ வயம் தவ கதா பதநாஶ்ரயாஸ்ஸ்யுஃ? ||"

மதீய மூர்த்தாநம் கதா அலங்கரிஷ்யதி? ஸம்ஸாராக்நியினால் தக்தனாக இருக்கும் நான், உன்னுடைய பாத ஸ்பர்ஶத்தினால், அஶ்வத்தாமாவின் அபாண்டவாஸ்த்ரத்தினால் தக்தனாயிருந்த பரீக்ஷித்துப்போல, எப்பொழுது ஜீவிக்கப்போகிறேன்? என்பது இதற்குத் தாத்பர்யம். எம்பெருமானுடைய திருவடிஸ்பர்ஶமுண்டானால்தான் ஸத்தையுண்டு; அது இல்லாவிட்டால் இதுவுமில்லை என்பதன்றே பக்தர்களுடைய படி?

"யாவந்ந சரணௌ ப்ராதுஃ பார்த்திவவ்யஞ்ஜநாந்விதௌ |
ஶிரஸா தாரயிஷ்யாமி ந மே ஶாந்திர்பவிஷ்யதி ||"

[என்னுடைய ஜ்யேஷ்ட ப்ராதாவாகிற ஸ்ரீ ராமனுடைய ராஜ சிஹ்நங்களமைந்த பாதாரவிந்தங்கள் எவ்வளவுகாலம் வரையில் என்னுடைய ஶிரஸ்ஸை ஸம்ஶ்லேஷிக்கவில்லையோ, அவ்வளவு காலம் வரையில் எனக்கு ஶாந்தி ஜநிக்காது] என்று ஸ்ரீ பரதாழ்வான் முறையிடவில்லையா?

எஸ். வாஸுதேவன்.

# தத்வ விசாரம்.

## ௩. ஜீவவிஷயம் - அனாது ஸ்வரூபப்ராப்தி ப்ரகாரம்.

ஆதலால் தன் ஸ்வரூபத்தையும், தனது ஸ்வாமியான ஈஶ்வரன் ஸ்வரூபத்தையும், தன்னைக் கட்டுகின்ற ப்ரக்ருதியின் லக்ஷணத்தையும் அறிந்தவனாய்க் கொண்டு, ஒவ்வொரு புருஷனும்,

> 'புமாந் ந தேவோ ந நரோ ந பஶுர் ந ச பாதப: ।
> ஶரீராக்ருதிபேதாஸ்து பூபைதே கர்மயோநய: ' ॥
>
> 'நாயம் தேவோ ந மர்த்யோ வா ந திர்யக் ஸ்தாவரோ(அ)பி வா ।
> ஜ்ஞாநாநந்தமயஸ்த்வாத்மா ஶேஷோ ஹி பரமாத்மந: ' ॥

என்கிற வசநங்களைக் கண்டு, தேவனென்பதும், மனிதனென்பதும், ம்ருகமென்பதும் ஸ்தாவரமென்பதும், ஒவ்வொரு ஜீவனும் ஸ்வகர்மத்தால் ஸம்பாதித்துக்கொண்டதும், ப்ரக்ருதியின் விகாரங்களால் அமைந்ததுமாகிய சரீரவிசேஷங்களென்றும்; இச்சரீரங்களைத் தானென அபிமானிக்கும் ஜீவன் சரீரங்களல்லன், ஜ்ஞாநாநந்தஸ்வரூபி, பரமாத்மாவினுடைய ஶேஷன் என்றும் தாஸன் என்றும் தெரிந்துகொண்டு, தன் ஆத்மஸ்வரூபத்தை, தத்காலம் அஜ்ஞாநத்தால் மூடப்பட்டிருப்பதை, மறுபடியும் ஸம்பாதிக்கக் கடவன்.

இவன் பகவானுடைய ஶேஷன் என்பதால், அவனுக்கென்றே இவனிருக்கும் நிலைமை. இவன் அவனது பொருள். தனக்காகவாவது, மற்றெவர்க்காகவாவது இவனிருக்கின்றானல்லன். இந்த உண்மை தெரியாமலோ, தெரிந்து மறியாமலோ, தனக்கென்றும் பிறர்க்கென்றும் இவன் உழைப்பவனாகின்றான். ஈஶ்வரன் பொருள் எனுமிடத்து, இவனுக்கும் ஜடபதார்த்தங்களுக்கும் வேற்றுமை யற்றிருக்க, இவன் சேதநனாக இருப்பதால், பகவானுடைய நிருபாதிகதாஸன் என்வும் படுகின்றனன். அதாவது ஒரு காரணத்தையிட்டு இவன் பகவானுடைய தாஸனாக



மாட்டான். காரணமொன்று மின்றிக்கே இவனது ஸ்வரூபத்தாலமைந்தது இந்த தாஸத்வம். இதைத்தான் பரமப்ராப்யமாக நமது ஆசார்யர்கள் நமக்கு உபதேசிக்கின்றனர்.

பகவத்தாஸத்வம் பாகவததாஸத்வ பர்யந்தமாக இருக்க வேண்டுமென்பார். பகவான் உகந்தவர்க்கு அடிமைசெய்யல் பகவான் உகப்புக்கு உறுப்பாகுமென்பார். 'யமேவைஷ வ்ருணுதே தேந லப்ய:' எனும் கடோபநிஷத் வாக்யம் நமது பாஷ்யகாரர் திருவுள்ளப்படி அறியப்பட்டதாகில், பகவானால் வரிக்கப்பட்ட புருஷன் பகவானிடம் ப்ரீதிமானாக இருக்கவேண்டும் என்று ஏற்படுகின்றது. அதை யநுஸரித்து உபநிஷத் பாஷ்யம் எழுதின ஸ்வாமி, உபாஸகனுடைய பகவத்விஷயமான ப்ரீதியானது பகவானுக்கு உபாஸகனிடம் ப்ரீதியை உண்டுபண்ணி, பகவத்ப்ராப்திஹேதுவாக முடிகின்றது, என்று வ்யாக்யாநம் செய்திருக்கிறார்.

> 'ஸமோ(அ)ஹம் ஸர்வபூதேஷு ந மே த்வேஷ்யோ(அ)ஸ்தி ந ப்ரிய: ।
> யே பஜந்தி து மாம் பக்த்யா மயி தே தேஷு சாப்யஹம் ' ॥

"நான் ஸர்வபூதங்களினிடமும் ஸமன். எனக்கு த்வேஷிக்கத் தக்கவனுமில்லை. ப்ரியனுமில்லை. ஆனால் என்னை யார் பக்தியுடன் பஜிக்கின்றாரோ அவர் என்னிடமும், அவரிடம் நானும் இருக் கின்றோம்." எனப் பகவான் அருளிச்செய்த வாக்யம் ஆசார்யர்களால் ஸ்மரிக்கப்பட்டிருக்கவேண்டும். பக்தர் விஷயத்தில், பகவான் ஜாதி ஆகாரம், ஸ்வபாவம், ஜ்ஞாநம், முதலான தாரதம்யங்களைக் கவனிக்கின்றானில்லை; இவற்றை உத்தேசித்து ஒருவனை ஸங்க்ர ஹிப்பதும், மற்றொருவனை நிரஸிப்பதும் இல்லை; என்று நமது பாஷ்யகாரர் திருவுள்ளம். ஸ்ரீமத் ஶங்கராசார்யர், அக்நியானது புருஷன் இச்சித்தபடியே, ஸமீபத்தில் நின்றால் தனது ஔஷ்ண் யத்தால் ஶீதத்தைப் போக்குவதும், தூர இருந்தால் அப்படிச் செய்யாமலும் இருப்பதைப்போலப் பகவானும் தன்னைப் பஜித்தவ ரிடமும் பஜிக்காதவரிடமும் இருக்கின்றானென அபிப்ராயப் படுகின்றார். அவனை ஆகர்ஷிப்பவரால் அவன் ஆகர்ஷிக்கப்படு கின்றான், த்யஜிப்பவரால் த்யாகம் செய்யப்படுகின்றான். ஜாயமான கடாக்ஷமென்பதும் ஸுக்ருதபலனாகப் பரிணமிக்கும்.

ஆதலால் பாகவதனுவதும், ஆகாதிருப்பதும் புருஷப்ரயத்ந ஸித்தம். பகவான் ஸர்வத்ரஸமன். ஆனபடியால் அவன் பக்தரும் ஸர்வத்ர ஸமதர்சநம் செய்யத்தக்கவர். 'ஸர்வஸ்ய சாஹம் ஹ்ருதி ஸந்நிவிஷ்ட:' என்று அவன் சொல்லியிருக்கையில் அவனை விலக்கி எந்த வஸ்துவையாவது ஜீவனையாவது தர்ஸிக்கப் பாகவதன் அர்ஹனு? 'ஸர்வம் தம் பராதாத் யோऽந்யத்ராத்மந: ஸர்வம் வேத' என்னும் ஸ்ருதிவாக்யத்தின்படிப், பரமாத்மாவைக்காட்டிலும் வேருக வஸ்துக்களை யறிகின்றவனை அந்த வஸ்துக்களே திரஸ்காரம் செய்யும்; அதாவது ஸம்ஸ்ரிப்பிக்கும்; ஆனபடியால் பாகவதனென்பவனுக்குத் தாத்ருஸ ப்ரதிபத்தி உண்டாகக் கூடாது. உண்டாகில் உபநிஷத் பாஷ்யகாரர் தாத்பர்யத்தில் அது மித்யாஜ்ஞாநத்தால் ஸித்தித்து ஸம்ஸாரஹேதுவாகும். ஸர்வத்ர பரமாத்மதர்ஸநம் என்ருல், பரமாத்மாவினிடம் எப்படி அநுகூலஸங்கல்பத்துடன் கூடிப் பாகவதன் வர்த்திக்கவேண்டுமோ, அப்படியே அவனுடைய ஸரீரபூதர்களான ஸர்வரிடமும் ஹிதபுத்தி விஸிஷ்டனுய் இருக்கவேண்டும் என்று ஏற்படுகின்றது.

ஸ்வரூபாவிர்ப்பாவமெனும் முக்தி விஷயமான சில ப்ரமாணங்களை உபநிஷத்துக்களினின்று எடுத்தெழுதுகிருேம்.

'பூதேஷு பூதேஷு விசித்ய தீரா: ப்ரேத்யாஸ்மால்லோகாத் அம்ருதா பவந்தி'

"ஸர்வபூதங்களிடமும் இருக்கும் பரமாத்மாவை ஜ்ஞாநவான்கள் ஸாக்ஷாத்கரித்து, அர்ச்சிராதி மார்க்கத்தால் இந்த லோகத்தினின்று சென்று, பரமாத்மாவை யடைந்து முக்தராகின்றனர்"

'நிசாய்ய தம் ம்ருத்யுமுகாத் ப்ரமுச்யதே'

"அந்தப் பரமாத்மாவை அறிந்து ஸம்ஸாரத்தினின்றும் விடப்படுகின்ருன்."

'தமாத்மஸ்தம் யேऽநுபஸ்யந்தி தீராஸ் தேஷாம் ஸுகம் ஸாஸ்வதம் நேதரேஷாம்'



"(ஸர்வபூதங்களுக்கும் அந்தராத்மாவாக இருந்து) ஒவ்வொருவன் ஹ்ருதயத்திலும் இருக்கும் பரமாத்மாவை எந்த விவேகிகள் ஸாக்ஷாத்தாகத் தர்ஸிக்கின்றனரோ அவர்களுக்கே நித்யஸுகரூபமான முக்தி கிடைக்கும். மற்ருேர்க்கில்லை."

'யதா ஸர்வே ப்ரமுச்யந்தே காமா யேऽஸ்ய ஹ்ருதி ஸ்ரிதா: ।
அத மர்த்யோऽம்ருதோ பவத்யத்ர ப்ரஹ்ம ஸமஸ்நுதே ॥'

இந்த உபாஸகனுடைய ஹ்ருதயத்தைப்பற்றி யிருக்கின்ற ஸர்வவிஷயேச்சைகளும் எப்போது அதை விட்டு நீங்குகின்றனவோ, அந்த உத்தரக்ஷணம், புண்யபாபரூபமான கர்மங்களால் வ்ருத்திசெய்யப்பட்ட ஸம்ஸாரதசையில் மர்த்யனெனப் பெயர்கொண்ட இவன், பூர்வோத்தர பாபங்கள் நாஸத்தை அடைவதால், அமரணதர்மா வாகின்ருன். இவ்வுலகத்தி லிருக்கையிலேயே உபாஸநவேளையில் ப்ரஹ்மத்தை அநுபவிக்கின்ருன்."

'பித்யதே ஹ்ருதயக்ரந்தி: சித்யந்தே ஸர்வஸம்ஸயா: ।
க்ஷீயந்தே சாஸ்ய கர்மாணி தஸ்மிந் த்ருஷ்டே பராவரே ॥'

"ப்ரஹ்மாதி ஸர்வ உத்க்ருஷ்டர்களும் எவன் விஷயத்தில் நிக்ருஷ்டர்களோ, அப்படிப்பட்ட பரமாத்மா எப்போது உபாஸகனுக்குத் தர்ஸநத்தை யளிக்கின்ருனே, அப்போது அவன் ஹ்ருதயத்தில் இச்சாத்வேஷரூபமான என்னென்ன பற்றுகள் இருந்தனவோ அவை நாஸமடைகின்றன; அவித்யா நிவ்ருத்தியால் ஜ்ஞாநஸங்கோச ஹேதுவில்லாமல், அவனுடைய ஸர்வ ஸம்ஸயங்களும் நஸிக்கின்றன; அவனுடைய ப்ராப்தேதர ஸர்வ கர்மங்களும் க்ஷயத்தை அடைகின்றன,"

'ஜுஷ்டம் யதா பஸ்யத்யந்யமீஸமஸ்ய மஹிமாநமிதி வீதஸோக: । யதா பஸ்ய: பஸ்யதே ருக்மவர்ணம் கர்த்தாரமீஸம் புருஷம் ப்ரஹ்மயோநிம் ।' 'ததா வித்வாந் புண்யபாபே விதூய நிரஞ்ஜந: பரமம் ஸாம்யமுபைதி ॥'

"தன்னைக்காட்டிலும் வேருன, தனது த்யாந கர்மாதிகளால் ப்ரீதனுன தன் ஈஸனை எப்போது தர்ஸித்து, இந்த ஸர்வ ப்ரபஞ்சத்தையும் அவனது மஹிமையென அறிகின்ருனே, அப்போது

உபாஸகன் ஸர்வ ஶோகங்களினின்றும் விடுவிக்கப்படுகிறான். எப்போது இந்த வித்வானை உபாஸகன் ஆதித்யவர்ணனையும், ஜகத்ஸ்ரஷ்டாவாயும், ஜகதீஶ்வரனையும், அவ்யக்தத்துக்கு உபாதாநகாரணமாயு மிருக்கப்பட்ட பரமபுருஷனை ஸாக்ஷாத்கரிக்கின்றானோ, அப்போது புண்யபாபரூபமான உபயவித கர்மங்களையும் நிரஸநம் செய்துவிட்டு, ப்ரக்ருதிஸம்பந்தம் முற்றிலும் நீங்கி அபஹதபாப்மத்வாதி குணாஷ்டகங்களை யடைந்து, ப்ரஹ்மத்துடன் ஸமமான ஆகாராநுபவங்களை யடைகின்றான்.”

‘ப்3ரஹ்மயோ வேத3 நிஹிதம் கு3ஹாயாம் பரமே வ்யோமந் ஸோஶ்நுதே ஸர்வாந் காமாந் ஸஹ ப்3ரஹ்மணா விபஶ்சிதா’

“ஹ்ருதயகுஹையில் பரமாகாஶத்தில், அல்லது ஹ்ருதய குஹையிலும், அப்ராக்ருத ஆகாஶமெனப்பட்ட பரமபதத்திலும் இருக்கின்ற ப்ரஹ்மத்தை எவன் அறிகின்றானோ, அவன் அஸங்குசித ஸர்வ்விஷயக்ஞானத்துடன் கூடிய ப்ரஹ்மத்தை, அவனுடைய ஸர்வகல்யாண குணங்களுடன் கூட அநுபவிக்கின்றான்.”

‘அணு: பந்தா2 வித்த: புராணோ மாம் ஸ்ப்ருஷ்டோநுவித்தோ மயைவ। தேந தீ4ரா அபியந்தி ப்3ரஹ்மவித3: ஸ்வர்க3ம் லோகமித ஊர்த்4வம் விமுக்தா:।’

‘ஜ்ஞாத்வா தே3வம் விஜாநீயாச்ச2ரீரேஷு வ்யவஸ்தி2தம்।
கிம்வா கஸ்ய காமாய ஶரீரமநுஸஞ்ஜ்வரேத் ॥

யஸ்யாநுவித்த: ப்ரதிபு3த்34 ஆத்மா ஸந்தே3ஹ்யே க3ஹநே ப்ரவிஷ்ட:। ஸ விஶ்வக்ருத் ஸ ஹி ஸர்வஸ்ய கர்த்தா தஸ்ய லோக: ஸ உ லோக ஏவ ॥

இஹைவ ஸந்தோத2 வித்3மஸ்தத்3வயம் ந சேத3வேதி3ர்மஹதீ விநஷ்டி:।

‘யதை3தமநுபஶ்யத்யாத்மாநம் தே3வமஞ்ஜஸா।
ஈஶாநம் பூ4தப4வ்யஸ்ய ந ததோ விஜுகு3ப்ஸதே।’

‘தமேவ தீ4ரோ விஜ்ஞாய ப்ரஜ்ஞாம் குர்வீத ப்3ராஹ்மண:।
நாநுத்4யாயாத்3ப3ஹூஞ்ச2ப்3தா3ந் வாசோ விக்3லாபநம் ஹி தத்।’



‘ஸ வா ஏஷ மஹாநஜ ஆத்மா, யோயம் விஜ்ஞாநமய:, ப்ராணேஷு ய ஏஷோந்தர்ஹ்ருத3ய ஆகாஶ: தஸ்மிஞ்சே2தே ஸர்வஸ்ய வஶீ ஸர்வஸ்யேஶாந: ஸர்வஸ்யாதி4பதி: * * * ஏஷ ஸர்வேஶ்வர: ஏஷ பூ4தாதி4பதி: ஏஷ பூ4தபால:, ஏஷ ஸேதுர்விதரண ஏஷாம் லோகாநாமஸம்பே4தா3ய, * * * ஏஷ நித்யோ மஹிமா ப்3ராஹ்மணஸ்ய ந வர்த4தே கர்மணா நோ கநீயாந். தஸ்யைவ ஸ்யாத் பத3வித், தம் விதி3த்வா ந லிப்யதே கர்மணா பாபகேநேதி।’

‘த்3வாவேதௌ ஶாஶ்வதௌ ப்ரோக்தௌ உபாஸ்யௌ விதி3தாத்மநா ஹிதோ ஸம்ருத்தா, ஶ்ருத்வைதாநம் வஶ்யாதி ஸர்வாந் ஸாதா4நம் தாதி, வஶ்யதி, தே ந ஸ ஸாத்4யம் தாதி ஸர்வம் ஸாத்4யம் தவதி, விவாதே ந ஸம் ஸாத்4யம் தவதி ஸர்வம் ஸாத்4யம் தவதி, ஸோ விரஜா ஸுவிதி3தோ ப்3ராஹ்மணோ ப4வதி’

ஸுஷும்நை எனும் ப்ரஹ்மநாடியினால், ஹ்ருதயத்தில் ஆரம்பித்து, அர்ச்சிராதிகதியால் ஏற்பட்டதும், வேதாந்தங்களில் விஸ்தரேண ப்ரதிபாதிக்கப்பட்டதும், அநாதிகாலமாக இருப்பதுமான ஸௌக்ஷ்மமான மோக்ஷமார்க்கமானது என்னால் அடையப்பட்டது, என்னால் அநுபவிக்கப்பட்டது. அந்த மார்க்கத்தினால் ப்ரஜ்ஞாவான்களான ப்ரஹ்மவித்துக்கள் இந்த ஶரீரத்தினின்று விடுபட்டவர்களாய்க்கொண்டு, ஸர்வ லோகங்களுக்கும் உத்க்ருஷ்டமான பகவத்லோகத்தை அடைகின்றார்கள்.”

யோகதஶையில்

“புருஷன் தன்னை தேஹேந்த்ரிய மநப்ராண புத்திகளைக் காட்டிலும் விலக்ஷணனாகவும், தன் அந்தராத்மாகவும், அதாவது தன் அந்தராத்ம ஶரீரபூதனாகவும் இருக்கின்றதையறிந்து தான் இப்படிப்பட்டவன் என்று தெரிந்துகொண்டானாகில், என்ன ப்ரயோஜநத்தை இச்சித்து, யாருடைய அபீஷ்டஸித்திக்காக ஶரீரத்தை ஶ்ரமப்படுத்துவான்? துஷ்ப்ரவேஶமானதும், அநேக அநர்த்தங்களுக்கும் ஸங்கடங்களுக்கும் இருப்பிடமானதுமான இந்த ஶரீரத்தில் ப்ரவேஶித்திருக்கின்ற பரமாத்மா எந்தப்புருஷ

னால் ஸாக்ஷாத் கரிக்கப்பட்டு அடையப்படுகின்றானோ, அவன் ஸர்வகர்த்ருத்வ ஸமர்த்தனாய், ஈஶ்வரனென விஶ்வகர்த்தாவும், ஸர்வலோகாதிபதியும், லோகங்களுக்கு ஆஶ்ரயபூதனு மாகின்றான். ஆதலால் இந்த ஜந்மத்திலிருக்கும்போதே நாம் அந்தப் பரமாத்மாவை அறியயத்தநிப்போம். அப்படி யறியாமல்போனால், அந்த அஜ்ஞாநத்தால் அநேக ஜநநமரணாதி ரூபமான ஹாநி ஸம்பவிக்கும்.”

*　　*　　*　　*　　*　　*

“எப்போது புருஷன் ஸர்வத்ர ப்ரகாஶிக்கின்ற காலத்ரயத்துக்கும் ஈஶ்வரனும், ஸர்வாந்தராத்மாவுமான இந்த ப்ரஹ்மத்தை ஸாக்ஷாத்கரிக்கின்றானோ, அதன்பிறகு எதைக்குறித்தும் வெறுப்படையமாட்டான்.”

*　　*　　*　　*　　*　　*

“ப்ராஹ்மணன், புத்திமானாகப் போந்து, அந்த ப்ரஹ்மத்தையே ஶாஸ்த்ரத்தாலும் ஆசார்யோபதேசத்தாலும் அறிந்து த்யாநம்செய்யக் கடவன். இதர லௌகிக விஷயமான பகுஶப்தங்களைச் சிந்தியா திருக்கக்கடவன். அவற்றை வாசித்தலின் பலம் கேவலம் வாக்குக்கு ஶ்ரமமே!”

“இப்படி உபதிஷ்டனானவன்தான் நித்யனும் மஹாநுமான பரமாத்மா. யாதொருவன் ப்ராணாதிகளின் மத்யே ஹ்ருதயத்திற்குள்ளே, ஸ்வயம்ப்ரகாஶரூபனாயிருப்பதால் ஆகாஶமென்றும் ஜ்யோதிஷ் என்றும் பெயர்பெற்று, ஜ்ஞாநஸ்வரூபியா யிருப்பதால் விஜ்ஞாநமென்றும் விஜ்ஞாநமயனென்றும் உபநிஷத்தில் வ்யவஹரிக்கப்பட்டிருக்கின்றானோ, அப்படிப்பட்ட ஜீவாத்மாவினிடம் ப்ரஹ்மருத்ரேந்த்ராதி ஸர்வஜீவரையும் ஸ்வவஶமாக வைத்துக்கொண்டு அவர்க்குத் தாரகனாகவும் அந்தர்யாமியாகவும் ஶேஷியாகவு மிருக்கப்பட்ட பரமாத்மா சயநித்துக்கொண்டிருக்கிறான்.”

*　　*　　*　　*　　*　　*

“இவன்தான் ஸர்வேஶ்வரன், ஸர்வபூதங்களுக்கும் அதிபதியாகவும் ரக்ஷகனாகவு மிருக்கப்பட்டவன். இந்த பூராதி



ப்ரஹ்மலோகபர்யந்தமுள்ள ஸர்வலோகங்களுக்கும் தாரகனாக இருந்து அவற்றுள் மர்யாதை தவறாதபடி ஸேதுவென நிற்கின்றான்.”

*　　*　　*　　*　　*　　*

“ப்ரஹ்மவித்தினுடைய ப்ரஹ்மஜ்ஞாநாநந்தரம்உண்டாகும்;
விகாரத்தை ஸஹிக்காத இந்த மஹிமையானது நித்யமானது.
அவனுக்கு புண்ய பாப கர்ம ஸம்பந்த மில்லையாதலால், கர்மத்
தால் உண்டாகும் வ்ருத்திக்ஷயாதி பலங்கள் இந்த மஹிமையைத்
தொடா. அவன் ப்ரஹ்மஸ்வரூப ஸாக்ஷாத்காரவானாகவே நிற்
பன். அப்படி ப்ரஹ்மத்தை அறிந்தபடியால் தர்மாதர்ம லக்ஷண
பாபஶப்த வாச்யமான கர்மஸம்பந்தம் அவனுக்கில்லை. ஆதலால்
இவ்விதம் அறிந்தவன், அந்தரிந்த்ரியங்களையும் பாஹ்யேந்த்ரியங்
களையும் ஜயித்தவனாய்க்கொண்டு, ஏஷணாத்ரய விநிர்முக்தனாய்,
த்வந்த்வங்களை ஸஹித்துக்கொண்டு, ஏகாக்ரசித்தனாய்த் தனது
ஆத்மாவினிடமே அந்தர்யாமியான பரமாத்மாவைத் தர்ஶிப்பான்.
இன்னும் ஸர்வத்தினிடமும் பரமாத்மாவைத் தர்ஶிப்பன். இவ
னைப் பாபம் ஆக்ரமிக்கமாட்டாது. ஸர்வபாபங்களையும் இவன்
அதிக்ரமிப்பன். இவனைப் பாபம் பாதிக்காது. ஸர்வபாபங்களை
யும் இவன் பஸ்மம் செய்துவிடுவன். பாபஶூந்யனாய், காமரஹித
னாய், ஸம்ஶயமற்றவனாய், ப்ராஹ்மண னாகின்றான்; அதாவது
அந்தப்பெயர் இவனிடம் அர்த்தமுடையதாய் நிற்கும்.”

‘ஏஷ ஸம்ப்ரஸாதோ(அ)ஸ்மாச்சரீராத் ஸமுத்தாய
பரம் ஜ்யோதி ருபஸம்பத்ய ஸ்வேந ரூபேணாபி நிஷ்பத்யதே’

“இந்த ப்ரகரணநிர்திஷ்டனாய் யாதொரு இந்த உபாஸகனை
ஜீவன் இருக்கின்றானோ, அவன் மரணகாலத்தில் இந்த ஶரீரத்தி
னின்றும் வெளிப்பட்டு, பரஞ்ஜோதிஸ் எனப்பட்ட பரமாத்மா
விடம் போய்ச்சேர்ந்து, தனது ஶரீரவியுக்தமான ஆத்மஸ்வரூப
நிஷ்பத்தியை அடைந்தவனாகின்றான்” ஸுஷுப்தி காலத்தில்
ஜீவன் ஹ்ருத்கதனான பரமாத்மாவுடன் தினந்தோறும் சேர்ந்தவ
னாகின்றான் என்கிறவிஷயத்தை உபதேஶிக்கும் ப்ரகரணம் இது.
பரமாத்மாவைச் சேர்ந்து, ஜாக்ரத்ஸ்வப்நாவஸ்தைகளில் விஷயங்
களுக்கும் இந்த்ரியங்களுக்கும் உண்டாகும் ஸம்யோக ஜநிதமான

காலுஷ்யம் நீங்கி, ஸம்யக் ப்ரஸாதத்தை யடைகின்றானதலால், ஸுஷுப்திகாலத்தில் ஜீவன் ஸம்ப்ரஸாதஶப்தத்தால் வ்யவஹரிக்கப்படுகின்றான்.

'𑌮𑌘𑌵𑌨𑍍 𑌮𑌰𑍍𑌤𑍍𑌯𑌂 𑌵𑌾 𑌇𑌦𑌂 𑌶𑌰𑍀𑌰𑌂, 𑌆𑌤𑍍𑌤𑌂 𑌮𑍃𑌤𑍍𑌯𑍁𑌨𑌾, 𑌤𑌦𑌸𑍍𑌯𑌾𑌮𑍃𑌤𑌸𑍍𑌯𑌾𑌶𑌰𑍀𑌰𑌸𑍍𑌯 𑌆𑌤𑍍𑌮𑌨𑍋𑌽𑌧𑌿𑌷𑍍𑌠𑌾𑌨𑌂, 𑌆𑌤𑍍𑌤𑍋 𑌵𑍈 𑌸𑌶𑌰𑍀𑌰𑌃 𑌪𑍍𑌰𑌿𑌯𑌾𑌪𑍍𑌰𑌿𑌯𑌾𑌭𑍍𑌯𑌾𑌂, 𑌨 𑌹 𑌵𑍈 𑌸𑌶𑌰𑍀𑌰𑌸𑍍𑌯 𑌸𑌤𑌃 𑌪𑍍𑌰𑌿𑌯𑌾𑌪𑍍𑌰𑌿𑌯𑌯𑍋𑌰𑌪𑌹𑌤𑌿𑌰𑌸𑍍𑌤𑌿, 𑌅𑌶𑌰𑍀𑌰𑌂 𑌵𑌾𑌵 𑌸𑌨𑍍𑌤𑌂 𑌨 𑌪𑍍𑌰𑌿𑌯𑌾𑌪𑍍𑌰𑌿𑌯𑍇 𑌸𑍍𑌪𑍃𑌶𑌤𑌃'

"மகவன்! இந்த ஶரீரமானது மரணதர்மி; எப்போதும் ம்ருத்யுவால் வ்யாப்தம். மரண மற்றவனும் ஸ்வரூபத்தால் ஶரீர மற்றவனுமான இந்த ஜீவாத்மாவுக்குப் போகாதிஷ்டானம், அதாவது கர்மவஶத்தால் ஜீவன் இதைக் கர்மபல போகார்த்த மடைந்திருக்கிறான். இப்படி ஶரீரவானாயிருக்கும் ஜீவன் ப்ரியாப்ரியங்களால் க்ரஸிக்கப்பட்டிருக்கின்றான். ஆதலால் கர்மாரப்தமான ஶரீரவானாயிருக்கின்றவனுக்கு ஸுகதுக்க ரூபமான ப்ரியாப்ரியாநுபவங்கள் நஶிப்பதில்லை. ஶரீரஸம்பந்தமற்றவனுக்கு ப்ரியாப்ரியங்களுடைய ஸம்பந்தமுமில்லை."

'𑌅𑌶𑍍𑌵 𑌇𑌵 𑌰𑍋𑌮𑌾𑌣𑌿 𑌵𑌿𑌧𑍂𑌯 𑌪𑌾𑌪𑌂 𑌚𑌨𑍍𑌦𑍍𑌰 𑌇𑌵 𑌰𑌾𑌹𑍋𑌰𑍍𑌮𑍁𑌖𑌾𑌤𑍍𑌪𑍍𑌰𑌮𑍁𑌚𑍍𑌯 । 𑌧𑍂𑌤𑍍𑌵𑌾 𑌶𑌰𑍀𑌰𑌮𑌕𑍃𑌤𑌂 𑌕𑍃𑌤𑌾𑌤𑍍𑌮𑌾 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌲𑍋𑌕𑌮𑌭𑌿𑌸𑌂𑌭𑌵𑌾𑌮𑌿 ॥'

இந்த வாக்யத்தின் முன்னால் வித்யாங்க பூதமான மந்த்ரத்வயம் ஸ்மரிக்கப்பட்டிருக்கின்றது. அதை இவ்விடம் நாம் எழுதவில்லை. அதன்விஷயமாக ஶங்கரபாஷ்யம் விஶிஷ்டாத்வைத பாஷ்யம் இவை யிரண்டிலும் வ்யாக்யாநமிருக்கின்றபடியை யோசித்தால், 'ஸர்வேஶ்வரனை பகவான் ஸ்வரூபத்திலோஹார்த்தனாகவோ, ஶ்யாமஸுந்தராங்கனாயிருக்கின்றானென்றும், அவனே சிதசித்விஶிஷ்டவேஷத்தால், ஶபளஶப்த வ்யவஹாரார்க்ஹனாகின்றானென்பதும் ஸ்பஷ்டமாகின்றது. மேலெழுதிய வாக்யம் உபாஸகன் சொல்வது. அதனர்த்தம் "அஶ்வமானது கழுத்தின் மயிரை உதறி அதில்பற்றிய மண்ணையும் தன் ஶ்ரமத்தையும் போக்குவதெனப் பாபங்களை உதறிவிட்டு, ராஹுவால்



பிடிக்கப்பட்ட சந்த்ரன் ராகுமுகத்தினின்று வெளிப்பட்டு ப்ரகாஶிக்கின்றதுபோல், ஶரீரத்தை விட்டுவிட்டு க்ருதக்ருத்யனாகி நித்யமாயிருக்கும் ப்ரஹ்மலோகத்தை அடைகின்றேன்."

'𑌤𑌦𑍍𑌧𑍈𑌤𑌦𑍍𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾 𑌪𑍍𑌰𑌜𑌾𑌪𑌤𑌯 𑌉𑌵𑌾𑌚 𑌪𑍍𑌰𑌜𑌾𑌪𑌤𑌿𑌰𑍍𑌮𑌨𑌵𑍇, 𑌮𑌨𑍁𑌃 𑌪𑍍𑌰𑌜𑌾𑌭𑍍𑌯𑌃 । 𑌆𑌚𑌾𑌰𑍍𑌯𑌕𑍁𑌲𑌾𑌦𑍍𑌵𑍇𑌦𑌮𑌧𑍀𑌤𑍍𑌯 𑌯𑌥𑌾𑌵𑌿𑌧𑌾𑌨𑌂 𑌗𑍁𑌰𑍋𑌃 𑌕𑌰𑍍𑌮𑌾𑌤𑌿𑌶𑍇𑌷𑍇𑌣𑌾𑌭𑌿𑌸𑌮𑌾𑌵𑍃𑌤𑍍𑌯, 𑌕𑍁𑌟𑍁𑌮𑍍𑌬𑍇 𑌶𑍁𑌚𑍌 𑌦𑍇𑌶𑍇 𑌸𑍍𑌵𑌾𑌧𑍍𑌯𑌾𑌯𑌮𑌧𑍀𑌯𑌾𑌨𑍋 𑌧𑌾𑌰𑍍𑌮𑌿𑌕𑌾𑌨𑍍𑌵𑌿𑌦𑌧𑌦𑌾𑌤𑍍𑌮𑌨𑌿 𑌸𑌰𑍍𑌵𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌾𑌣𑌿 𑌸𑌂𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍍𑌠𑌾𑌪𑍍𑌯𑌾𑌹𑌿𑌂𑌸𑌨𑍍𑌤𑍍𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑌾𑌨𑍍𑌯𑌨𑍍𑌯𑌤𑍍𑌰 𑌤𑍀𑌰𑍍𑌥𑍇𑌭𑍍𑌯𑌃, 𑌸 𑌖𑌲𑍍𑌵𑍇𑌵𑌂 𑌵𑌰𑍍𑌤𑌯𑌨𑍍 𑌯𑌾𑌵𑌦𑌾𑌯𑍁𑌷𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌲𑍋𑌕𑌮𑌭𑌿𑌸𑌂𑌪𑌦𑍍𑌯𑌤𑍇, 𑌨 𑌚 𑌪𑍁𑌨𑌰𑌾𑌵𑌰𑍍𑌤𑌤𑍇'

"இந்த ப்ரஹ்மவித்யையை ஹிரண்யகர்ப்பன் காஶ்யப ரெனும் ப்ரஜாபதிக்கும், அந்தப்ரஜாபதி மநுவுக்கும், மநு ப்ரஜைகளின்பொருட்டும் உபதேசித்தார்கள். ஆசார்யன் க்ருஹத்தில் விதியை அதிக்ரமிக்காமல் அதாவது ஸ்ம்ருதியின்படி நியமத் துடன்கூடினவனாக வேதாத்யயநம்செய்து, குருஶுஶ்ரூஷையை அஶேஷமாக அநுஷ்டித்துவிட்டு, அல்லது குருஶிஶ்ரூஷைக்கு உபயுக்தமான காலம்தவிர மிகுந்தகாலத்தில் நியமத்தை அதிக்ரமிக்காமல் வேதாத்யயநம்செய்துவிட்டு, ஸ்மாவர்த்தநம் செய்து. அதாவது குருகுலத்தினின்று திரும்பித் தர்மமார்க்கத்தில் விவாஹம் செய்துகொண்டு, க்ருஹஸ்தாஶ்ரமத்தி லிருந்துகொண்டு ஶுத்தமான ப்ரதேசத்தில் வஸித்துக்கொண்டு ஸ்வாத்யாயம் முதலான நித்ய நைமித்திக கர்மங்களை அநுஷ்டித்துக்கொண்டு, புத்ர ஶிஷ்யாதிகளைத் தர்மமார்க்கத்தில் நியமித்துவிட்டு, தனது மநஸுள்பட ஸர்வேந்த்ரியங்களையும் ஹார்த்தனான பரமாத்மாவினிடம் நன்றாக நிலைக்கச்செய்து, ஸர்வப்ராணிகளிடமும், ஶாஸ்த்ரவிஹிதாவஸங்களில்தவிர ஹிம்ஸையை விலக்கிக்கொண்டு, அந்த உபாஸகன் தான் ஜீவித்திருக்கும்வரையில் இவ்வித மிருந்து கொண்டு, ப்ரஹ்மலோகத்தை அடைகின்றான். மறுபடி ஶரீரப்ராப்திநிமித்தம் இவ்வுலகம் வருகின்றானில்லை."

இந்த ப்ரமாணங்கள் மோக்ஷோபாயத்தை உபதேசிக்கின்றன.

இந்த ப்ரமாணங்கள் மோக்ஷோபாயத்தை உபதேசிக்கின்றன. இந்த ப்ரமாணங்கள் மோக்ஷோபாயத்தை

காமம் உத்பந்நமாகி, அத்யவஸாயரூபமாகப் பரிணமித்துக் கர்ம ப்ரவ்ருத்திக்குக் காரணமாகின்றபடியால், காமம் முற்றிலும் ஹ்ருதயத்தினின்று விலகவேண்டியது முமுக்ஷுவுக்கு முக்ய விஷயம். காமங்களால் தூஷிதமான சித்தம் காமங்களை எப்படி நிரஸிக்கும், எனக்கேட்குமிடத்து ஶரீரத்தை ரதமாகவும், ஆத்மாவை ரதத்தையுடையவனாகவும், புத்தியை ஸாரதியாகவும், மநஸ்ஸைக் கடிவாளமாகவும், இந்த்ரியங்களைக் குதிரைகளாகவும், அவற்றின் விஷயங்களை மார்க்கங்களாகவும் வர்ணித்து,

‘யஸ்த்வவிஜ்ஞாநவாந் பவத்யயுக்தேந மநஸா ஸதா ।
தஸ்யேந்த்ரியாண்யவஶ்யாநி துஷ்டாஶ்வா இவ ஸாரதே: ।
யஸ்து விஜ்ஞாநவாந் பவதி யுக்தேந மநஸா ஸதா ।
தஸ்யேந்த்ரியாணி வஶ்யாநி ஸதஶ்வா இவ ஸாரதே: ॥’

“யாதொரு புருஷன், நன்றாய் க்ரஹிக்கப்படாத கடிவாளமென, ஜாக்ரதையற்ற மநஸ்ஸுடன் ஸதா கூடிய அவிவேகியான ஸாரதியையொத்த அஸமீசீநமான புத்தி விஶிஷ்டனாயிருக்கின்றானோ, அவனுக்கு, துஷ்டாஶ்வங்கள் ஸாரதிக்கு அவஶ்யமாயிருப்பதுபோல், இந்த்ரியங்கள் அவஶ்யமாயிருக்கின்றன. யாதொருவன் ஸமாஹிதசித்தத்தை யுடைத்தாயிருப்பதால் ஸமீசீநபுத்தியுடன் கூடி நிபுணனாக விருக்கின்றானோ, ஸாரதிக்கு ஸதஶ்வங்கள் வஶ்யமா யிருப்பதொத்து, அவனுடைய இந்த்ரியங்களும் அவனுக்கு வஶ்யங்களாகின்றன” என்று கடோபநிஷத்தில் சொல்லியிருக்கின்றது. புத்தியைக்கொண்டுதான் புருஷன் ஸதஸத்விவேசநம் செய்கின்றான். இந்த்ரியங்கள் விஷயங்களை க்ரஹித்து மநஸ்ஸில் அவற்றைப்பற்றின ஜ்ஞாநங்களை யுண்டாக்குகின்றன. மநஸ்ஸானது ஸதா சலித்துக்கொண்டிருக்கும் தன்மையை யுடையது. அதிலுதிக்கும் தோற்றங்களைப்பற்றிப் புத்தியாலன்றோ புருஷன் விமர்சிக்கின்றான்? ஆதலால் புத்தியைக் கொண்டு மநஸ்ஸையும், அதன்மூலமாக இந்த்ரியங்களையும் ஸ்வவஶத்தில் வைத்துக்கொள்ள ஸமர்த்தனான புருஷன்தான் பரமபுருஷார்த்தவிஷயமான ப்ரயத்நத்துக்கு அர்ஹனாகின்றான் என்றேற்படுகின்றது.



‘யஸ்து விஜ்ஞாநவாந் பவதி ஸமநஸ்க: ஸதா ஶுசி: ।
ஸ து தத்பதமாப்நோதி யஸ்மாத் பூயோ ந ஜாயதே ॥
விஜ்ஞாநஸாரதிர் யஸ்து மந: ப்ரக்ரஹவாந் நர: ।
ஸோऽத்வந: பாரமாப்நோதி தத் விஷ்ணோ: பரமம் பதம் ॥’

“ஸமாஹிதசித்தனாயும், எப்போதும் பரிஶுத்தமான சித்தவ்ருத்தியுடன் கூடினவனாயும், வித்வானாகவும் யாதொருவன் இருக்கின்றானோ, அவன் எந்த ஸ்தாநத்தை யடைந்தால் புநராவ்ருத்தியில்லையோ அப்படிப்பட்ட ஸ்தாநத்தை யடைகின்றான். விவேசநஶீலமான புத்தியை ஸாரதியாகக்கொண்டு, மநஸ்ஸாகிற கடிவாளத்தை நன்கு க்ரஹித்தவனாக யாதொரு புருஷனிருக்கின்றானோ அவன் ஸம்ஸாரமாகிற மார்க்கத்துக்கு முடிவான எல்லையாகும் அந்த விஷ்ணுவினுடைய பரமஸ்வரூபத்தை யடைகின்றான்,” எனும் கடோபநிஷத்வாக்யங்களும், ஸர்வமுக்தராலும் ப்ராப்யமான பகவத்பதம், புத்தியின்மூலமாக மதஸ் முதலான ஸர்வேந்த்ரியங்களையும் வஶீகரணம் பண்ணினவனுக்குத்தான் கிடைக்குமென்று உத்கோஷிக்கின்றன.

இவ்விதமாக இந்த்ரியஜயமும் மநோவஶ்யமும் இல்லாதவனுக்குப் பகவான் ப்ராப்யனாகான் என்பது திண்ணம். ‘ஸத்யேந லப்யஸ் தபஸா ஹ்யேஷ ஆத்மா ஸம்யக்ஜ்ஞாநேந ப்ரஹ்மசர்யேண நித்யம்’ “நித்யமும் பொய்யை த்யஜிப்பதாலும் இந்த்ரிய மநோஜயரூபமான தபஸ்ஸாலும், ஆத்மாநாத்மவிஷயமான தத்வதர்ஶநத்தாலும். ஸ்த்ரீஸம்யோகாதி த்யாகத்தாலும் இந்தப் பரமாத்மா அடையத்தக்கவன்” ‘நாயமாத்மா ப்ரவசநேந லப்யோ ந மேதயா ந பஹுநா ஶ்ருதேந,’ “இந்த ஆத்மா வேதஶாஸ்த்ரங்களை அத்யயநம் செய்வதாலும், அவற்றின் அர்த்தங்களை மநநம் செய்வதாலும், அவற்றின் தாரணா ஸாமர்த்யத்தாலும், மிகவும் கேட்பதாலும் ப்ராப்யனாகமாட்டான்” ‘நாயமாத்மா பலஹீநேந லப்ய:,’ “இந்த ஆத்மா மநோபலமற்றவனுக்கு ப்ராப்யனாகமாட்டான்” ‘நாஹம் வேதைர் ந

𑌦𑌾𑌨𑍇𑌨 𑌨 𑌚𑍇𑌜𑍍𑌯𑌯𑌾 𑌶𑌕𑍍𑌯 𑌏𑌵𑌂𑌵𑌿𑌧𑍋 𑌦𑍍𑌰𑌷𑍍𑌟𑍁𑌮𑍍.' "வேதாத்யயநத்தாலும், காயக்லேஶாதிகளாலும், தாநத்தாலும், யாகங்கள் செய்வதாலும், நான் யதாவஸ்திதனுகத் தர்ஶிக்க ஶக்யனல்லேன்;" '𑌭𑌕𑍍𑌤𑍍𑌯𑌾 𑌤𑍍𑌵𑌨𑌨𑍍𑌯𑌯𑌾 𑌶𑌕𑍍𑌯𑌃,' "அநந்யபக்தியால் தர்ஶிக்கக்கூடியவன்", என்னும் ப்ரமாணங்களும், அநந்ய பக்தியானது இந்த்ரியமநோஜய மில்லாதவனுக்கு உண்டாகாதெனக் காட்டுகின்றபடியால், பகவத் ப்ராப்திக்கு ஸாதநமாகும் பக்தியுண்டாவதற்கு ஹேதுக்களை மேலெடுத்த உபநிஷத்வாக்யங்கள் வெளியிட்டன. இந்தப் பக்தியைத்தான் உபநிஷத்துக்களில் த்யாநம் என்றும், த்ருவாஸ்ம்ருதி என்றும், வேதநம் என்றும் உபாஸநம் என்றும் கூறப்பட்டிருக்கின்றது. இந்த விஷயத்தில் ஸ்ரீ பாஷ்யகாரர் அருளிசெய்தபடி,

'𑌤𑌸𑍍𑌯 𑌵𑍇𑌦𑌨𑌸𑍍𑌯 𑌉𑌪𑌾𑌸𑌨𑌰𑍂𑌪𑌸𑍍𑌯 𑌅𑌸𑌕𑍃𑌦𑌾𑌵𑍃𑌤𑍍𑌤𑌸𑍍𑌯 𑌧𑍍𑌰𑍁𑌵𑌾𑌨𑍁𑌸𑍍𑌮𑍃𑌤𑌿𑌤𑍍𑌵𑌮𑍍 𑌉𑌪𑌵𑌰𑍍𑌣𑌿𑌤𑌮𑍍. 𑌸𑌾 𑌚 𑌸𑍍𑌮𑍃𑌤𑌿𑌃 𑌦𑌰𑍍𑌶𑌨𑌰𑍂𑌪𑌾 𑌪𑍍𑌰𑌤𑌿𑌪𑌾𑌦𑌿𑌤𑌾. 𑌦𑌰𑍍𑌶𑌨𑌰𑍂𑌪𑌤𑌾 𑌚 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌕𑍍𑌷𑌤𑌾𑌪𑌤𑍍𑌤𑌿𑌃. 𑌏𑌵𑌂 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌕𑍍𑌷𑌤𑌾𑌪𑌨𑍍𑌨𑌾𑌂 𑌅𑌪𑌵𑌰𑍍𑌗𑌸𑌾𑌧𑌨𑌭𑍂𑌤𑌾𑌂, 𑌸𑍍𑌮𑍃𑌤𑌿𑌂, 𑌵𑌿𑌶𑌿𑌨𑌷𑍍𑌟𑌿, '𑌨𑌾𑌯𑌮𑌾𑌤𑍍𑌮𑌾 𑌪𑍍𑌰𑌵𑌚𑌨𑍇𑌨 𑌲𑌭𑍍𑌯𑍋 𑌨 𑌮𑍇𑌧𑌯𑌾 𑌨 𑌬𑌹𑍁𑌨𑌾 𑌶𑍍𑌰𑍁𑌤𑍇𑌨 𑌯𑌮𑍇𑌵𑍈𑌷 𑌵𑍃𑌣𑍁𑌤𑍇 𑌤𑍇𑌨 𑌲𑌭𑍍𑌯𑌸𑍍𑌤𑌸𑍍𑌯𑍈𑌷 𑌆𑌤𑍍𑌮𑌾 𑌵𑌿𑌵𑍃𑌣𑍁𑌤𑍇 𑌤𑌨𑍂𑌂 𑌸𑍍𑌵𑌾𑌮𑌿𑌤𑌿'. 𑌅𑌨𑍇𑌨 𑌕𑍇𑌵𑌲𑌶𑍍𑌰𑌵𑌣𑌮𑌨𑌨𑌨𑌿𑌦𑌿𑌧𑍍𑌯𑌾𑌸𑌨𑌾𑌨𑌾𑌂 𑌆𑌤𑍍𑌮𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑍍𑌯𑌨𑍁𑌪𑌾𑌯𑌤𑍍𑌵𑌮𑍁𑌕𑍍𑌤𑍍𑌵𑌾, 𑌯𑌮𑍇𑌵𑍈𑌷 𑌆𑌤𑍍𑌮𑌾 𑌵𑍃𑌣𑍁𑌤𑍇 𑌤𑍇𑌨𑍈𑌵 𑌲𑌭𑍍𑌯 𑌇𑌤𑍍𑌯𑍁𑌕𑍍𑌤𑌮𑍍. 𑌪𑍍𑌰𑌿𑌯𑌤𑌮 𑌏𑌵 𑌹𑌿 𑌵𑌰𑌣𑍀𑌯𑍋 𑌭𑌵𑌤𑌿. 𑌯𑌸𑍍𑌯𑌾𑌯𑌂 𑌨𑌿𑌰𑌤𑌿𑌶𑌯𑌪𑍍𑌰𑌿𑌯𑌃 𑌸 𑌏𑌵𑌾𑌸𑍍𑌯 𑌪𑍍𑌰𑌿𑌯𑌤𑌮𑍋 𑌭𑌵𑌤𑌿. 𑌯𑌥𑌾𑌯𑌂 𑌪𑍍𑌰𑌿𑌯𑌤𑌮𑌃 𑌆𑌤𑍍𑌮𑌾𑌨𑌂 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌨𑍋𑌤𑌿 𑌤𑌥𑌾 𑌸𑍍𑌵𑌯𑌮𑍇𑌵 𑌭𑌗𑌵𑌾𑌨𑍍 𑌪𑍍𑌰𑌯𑌤𑌤 𑌇𑌤𑌿 𑌭𑌗𑌵𑌤𑍈𑌵𑍋𑌕𑍍𑌤𑌮𑍍, '𑌤𑍇𑌷𑌾𑌂 𑌸𑌤𑌤𑌯𑍁𑌕𑍍𑌤𑌾𑌨𑌾𑌂 𑌭𑌜𑌤𑌾𑌂 𑌪𑍍𑌰𑍀𑌤𑌿𑌪𑍂𑌰𑍍𑌵𑌕𑌮𑍍 𑌦𑌦𑌾𑌮𑌿 𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌯𑍋𑌗𑌂 𑌤𑌂 𑌯𑍇𑌨 𑌮𑌾𑌮𑍁𑌪𑌯𑌾𑌨𑍍𑌤𑌿 𑌤𑍇,' 𑌇𑌤𑌿 * * * 𑌅𑌤𑌃 𑌸𑌾𑌕𑍍𑌷𑌾𑌤𑍍𑌕𑌾𑌰𑌰𑍂𑌪𑌾 𑌸𑍍𑌮𑍃𑌤𑌿𑌃, 𑌸𑍍𑌮𑌰𑍍𑌯𑌮𑌾𑌣𑌾𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌪𑍍𑌰𑌿𑌯𑌤𑍍𑌵𑍇𑌨, 𑌸𑍍𑌵𑌯𑌮𑌪𑍍𑌯𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌪𑍍𑌰𑌿𑌯𑌾 𑌯𑌸𑍍𑌯,



𑌸 𑌏𑌵 𑌪𑌰𑍇𑌣𑌾𑌤𑍍𑌮𑌨𑌾 𑌵𑌰𑌣𑍀𑌯𑍋 𑌭𑌵𑌤𑍀𑌤𑌿, 𑌤𑍇𑌨𑍈𑌵 𑌲𑌭𑍍𑌯𑌤𑍇 𑌪𑌰 𑌆𑌤𑍍𑌮𑍇𑌤𑍍𑌯𑍁𑌕𑍍𑌤𑌂 𑌭𑌵𑌤𑌿. 𑌏𑌵𑌂𑌰𑍂𑌪𑌾 𑌧𑍍𑌰𑍁𑌵𑌾𑌨𑍁𑌸𑍍𑌮𑍃𑌤𑌿𑌰𑍇𑌵 𑌭𑌕𑍍𑌤𑌿𑌶𑌬𑍍𑌦𑍇𑌨𑌾𑌭𑌿𑌧𑍀𑌯𑌤𑍇. 𑌉𑌪𑌾𑌸𑌨𑌪𑌰𑍍𑌯𑌾𑌯𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 𑌭𑌕𑍍𑌤𑌿𑌶𑌬𑍍𑌦𑌸𑍍𑌯. 𑌅𑌤 𑌏𑌵 𑌶𑍍𑌰𑍁𑌤𑌿𑌸𑍍𑌮𑍃𑌤𑌿𑌭𑌿𑌰𑍇𑌵𑌮𑌭𑌿𑌧𑍀𑌯𑌤𑍇. '𑌤𑌮𑍇𑌵𑌂 𑌵𑌿𑌦𑌿𑌤𑍍𑌵𑌾𑌤𑌿𑌮𑍃𑌤𑍍𑌯𑍁𑌮𑍇𑌤𑌿, 𑌤𑌮𑍇𑌵𑌂 𑌵𑌿𑌦𑍍𑌵𑌾𑌨𑌮𑍃𑌤 𑌇𑌹 𑌭𑌵𑌤𑌿,' 𑌇𑌤𑌿.

"மோக்ஷஸாதநமென விதித்திருக்கிறதும், உபாஸநமெனப்படுவதால் நிரந்தரமாகப் பண்ணப்பட வேண்டியதுமான அந்த வேதநமெனும் ஜ்ஞாந விஶேஷத்தையே அவிச்சிந்நமான ஸ்மரணத்தின் தொடர்ச்சியென்று வர்ணிக்கப்பட்டது. இந்த ஸ்ம்ருதி யானது தர்ஶநரூபமென்று ப்ரதிபாதிக்கப்பட்டது. தர்ஶநரூபத்வமாவது ப்ரத்யக்ஷஸமாநமான ஆகாரத்தை யடைதல். இப்படி ப்ரத்யக்ஷஸ்வரூபத்தை யடைந்ததும், மோக்ஷஸாதநமாவதுமான ஸ்ம்ருதியைப்பற்றி விஶேஷித்து 'இந்த ஆத்மா ஶ்ரவணமெனும் வேதாத்யயநத்தாலும், (கேட்ட வேதவாக்யங்களின் அர்த்தசிந்தநாரூபமாகின்ற மநநத்தாலும்,) கேவல த்யாநத்தாலும், மிக்கப் பெரியோரிடம் கேட்பதாலும் கிடைக்கமாட்டான். இந்த ஆத்மா எந்த ஸாதகனை அதாவது உபாஸகனை வேண்டுகின்றானோ அவனு லடையப் படுகின்றான். அவனுக்கு இந்த ஆத்மா தன் ஸ்வரூபத்தை ப்ரகாசிப்பிக்கின்றான்.' என்று உபநிஷத்தால் சொல்லப்பட்டது. இதனால் பின்னால் சொல்லப்பட்ட விஶேஷமற்ற கேவல ஶ்ரவணமநந நிதித்யாஸநங்கள் ஆத்மாவை அடைய உபாயங்களாகமாட்டா என்றுரைத்து,யாதொருவனையே இந்த ஆத்மா வேண்டுகின்றானோ அவனால் மாத்ரம் ஆத்மா அடையப்படுகின்றான் என்று சொல்லப்பட்டது. மிகவும் ப்ரியன்தான் வேண்டத்தக்கவன் ஆகின்றானன்றோ? எந்த உபாஸகனுக்கு இந்தப் பரமாத்மா நிரதிஶய ப்ரீதிவிஷயமாகின்றானோ அவன்தான் இந்தப் பரமாத்மாவுக்கு மிகவும் ப்ரியனாகின்றான். எவ்வண்ணம் பகவானிடம் அத்யந்த ப்ரீதிமானனாகி, இந்தப் புருஷன் பகவானுடைய நிரதிஶய ப்ரீதிக்குப் பாத்ரனாகி, ஆத்மாவாகின்ற பகவானை அடைவனோ, அவ்வண்ணம் பகவான்

தானே ப்ரயத்நிக்கின்றான் எனப் பகவானாலே சொல்லப்பட்டது. 'என்னிடம் நிரந்தரயோகத்தை ப்ரார்த்தித்தவர்களாய் என்னைப் பஜிக்கும் அவர்களுக்கு, எதனால் அவர்கள் என்னை அடைவார்களோ, அவருடைய ஆரம்ஸாவிஷயமாகும், பரிபாகத ஶாபந்நமான அந்த நிரந்தரயோகத்தை நானே ப்ரீதிபூர்வகமாகத் தருகின்றேன்." என்று பகவானருளிச் செய்திருக்கின்றான். ஆதலால், எந்த உபாஸகனது ஸாக்ஷாத்காரரூபமான ஸ்ம்ருதியானது, ஸ்ம்ருதிக்கு விஷயமாகின்ற பகவான் உபாஸகனுக்கு மிகவும் ப்ரியமாய் இருப்பதையிட்டு, அதுவும் அவனுக்கு மிக்க அநுகூலமாகின்றதோ, அந்த உபாஸகனே பரமாத்மாவுக்கு வரணீயனாகின்றான். ஆதலால் அவனால்தான் பரமாத்மா அடையப்படுகின்றான் என்று சொல்லப்பட்டதாய் ஏற்படுகின்றது. இந்தரூபமான ப்ரீதிவிஶிஷ்டமானதும், ஸாக்ஷாத்காரத்தை எல்லையாகவுடையதுமான அவிச்சிந்ந ஸ்மரணந்தான் பக்திஶப்தத்தால் வ்யவஹரிக்கப்படுகின்றது. ஏனென்றால் உபாஸநம், வேதநம், பக்தி எனும் ஶப்தங்கள் ஏகார்த்தத்தை ப்ரகாஶிக்கின்றன. ஆதலால் தான் ஶ்ருதிஸ்ம்ருதிகளால், "அவனே இவ்விதம் உபாஸித்து மோக்ஷத்தை அடைகின்றான், அவனே இவ்விதம் ஸாக்ஷாத்கரித்தவன் இங்கே அம்ருதனாகின்றான், எனச் சொல்லப்பட்டது."

ஸ்ரீநிகமாந்த மஹாதேசிகனும் உபாய விபாகாதி காரத்தில், "பக்தியோகமாவது, அநந்யநிஷ்டனாய் அநந்யாதீனனாய் அநந்ய ஶேஷபூதனான பகவானுடைய ஸ்வரூபாதிகளை விஷயமாகவுடைத்தாய் நிரதிஶய ப்ரீதிரூபமான த்யாநவிஶேஷம். அதுதான் தைலதாரையைப்போலே நிரந்தரமான ஸ்ம்ருதிரூபமாய் ஸாக்ஷாத்கார துல்யமான வைஶத்யத்தை யுடைத்தாய்ப் பரமபதத்துக்கு ப்ரயாணம் பண்ணும் திவஸமறுதியாக நாள்தோறும் அநுஷ்டிக்க வளர்ந்துவருவதாய், அந்திம ப்ரத்யாவதியான ஜ்ஞான ஸந்ததி விஶேஷம்" என்றருளிச்செய்திருக்கின்றார்.

பத்ராதிபர்.

OFFICE OF THE REGISTRAR OF ...
17 FEB 1915
MADRAS.

ஸ்ரீ:.

ஸ்ரீ [illegible] ஶ:.

# வேதாந்த தீபிகை

பத்ராதிபர்:—திவான் பகதூர் டி. டி. ரங்காசார்யர், பி.ஏ., பி.எல்.

ஸம்புடம் 4.] ஆநந்தவருஷ மார்கழிமீ [ஸஞ்சிகை 11.

## பத்ராதிபரின் குறிப்புகள்.

[illegible]
[illegible] விஜயஸவெ
[illegible] ॥ [ஸ்ரீ பாகவதம் 1-9-33.]

**மரணாநந்தரம் ஜீவனுடைய அநுவ்ருத்தி.**

இங்கிலீஷ் ராஜ்யவாஸியாகிய ஸர் ஆலிவர் லாட்ஜ் எனும் பதார்த்த ஶாஸ்த்ர வித்வான் சென்ற நவம்பர்மீ 22உ, வால்வர்த் எனும் நகரத்திய ப்ரௌனிங் ஹால் எனும் மண்டபத்தில், சரீர விலக்ஷணனான ஜீவனுடைய அஸ் தித்வ விஷயமாக உபந்யஸித்தார். "சைதந்ய பாவம் சரீரத்தை அதிக்ரமித்தது எனக்கண்டபின், அது மரணாநந்தரம் அநுவர்த் திக்கின்றது என்பதையும் அறிவது ஸுலபம். ஏனென்றால், சரீரம் நசிக்குங்கால் ஆத்மா நசிக்கின்றான் என்பது யுக்தியுக்த மன்று" எனமொழிந்து, அந்த வித்வான், "அநுபவ ஶாஸ்த்ர முறையில் ஏற்பட்ட ஸ்பஷ்டமான ஹேதுக்களால் இதை நான் சொல்கின்றேன். இறந்துபோன எனது நண்பரில் சிலர் இருக்

கின்றனர் என்பதை நான் அறிவேன். அவருடன் நான் ஸம்பாஷித்தேன். அவருடன் ஸம்பாஷித்தல் கூடும். அதற்குரிய க்ரமங்களுக்கு உட்பட்டு அது நடக்கும் நிலைமையைத் தெரிந்துகொள்ள வேண்டும். அப்படி யறிவது ஸுலபமல்ல. அறிவது ஸாத்ய மென்பேன். இவ்விடம் இருக்கின்றவருடன் எவ்வண்ணம் நான் பேசக்கூடுமோ, அவ்வண்ணமே இறந்தவருடனும் பேசியிருக்கின்றேன். அவர் பதார்த்த ஶாஸ்த்ர நிபுணர். ஆதலால், அவருடன் நான் பேசியது உண்மை என்றும், அவரையன்றி மற்றோருடன் நான் பேசினவனல்ல னென்றும், இந்தவிஶ்வாஸம் எனக்கு ப்ரமையால் ஜநிக்கவில்லை யென்றும், அவர், எனக்குத் தக்க ஸாக்ஷ்யம் அளித்த காரணத்தால் மொழிகின்றேன். அந்த ஸாக்ஷ்யங்களில் சில வெளிப்படுத்தப்படுகின்றன. மற்றவை பின்னால் வெளிப்படுத்தப்படும். இது இங்ஙனமென த்ருடமான விஶ்வாஸத்துடன் நான் சொல்லுகின்றேன். மரணாநந்தரம் நாம் அநுவர்த்தித்திருக்கின்றோம். இறந்தவர், நமது வ்யாபாரங்களில் பற்றுடையவராக இருக்கின்றார். நமக்கு அவர் உபகரிக்கின்றார். நாம் அறிகின்றவற்றைவிட, விஷயங்களைப்பற்றி, அவர் மிக்க அறிந்தவர்கள். பதேபதே நமக்கு அவர் அவற்றைத் தெரிவிக்கின்றனர். என்போல் பதார்த்த ஶாஸ்த்ர விஷயமான பாண்டித்யத்தில் சிறந்த பலரும், இந்தக் கல்வியற்ற இதரர்களும், இந்த விஷயத்தை யறிந்திருக்கின்றனர். முப்பது நாற்பது வருஷகாலமாக இந்த விஷயத்தைப்பற்றிப் பராமர்ஶித்த நான், நானறிந்த உண்மைகளை வெளியிடத்தக்கவன். நீங்கள் ஸாக்ஷ்யத்தை அபேக்ஷிப்பீர்கள். இந்தப் பராமர்ஶத்துக்காக உண்டாயிருக்கப்பட்ட ஸபையார் அநேக புஸ்தகங்களில் அத்தகைய ஸாக்ஷ்யத்தை எழுதியிருக்கின்றனர். அது இன்னும் வளரும். ஸாதாரண ஸம்பாஷணை காலத்தில் இந்த ஸாக்ஷ்யம் யோசிக்கத்தக்கதன்று. அதற்கென்றே உட்கார்ந்து அதை ஆலோசிக்கவேண்டும். மனிதன் மற்ற ரூபமான சேதநர்களால் சூழப்பட்டிருக்கின்றான். மனிதனை அதிக்ரமித்து இந்த சேதந பரம்பரை அநந்தனெனும் சேதநன் வரையில் எல்லையற்று வளர்கின்றது. மனிதனை அதிக்ரமித்து அறிய நீங்கள் ஶக்தரானால் ஈஶ்வர பர்யந்தம் நீங்கள் ஸாக்ஷாத்கரிக்கத் தக்கவரே. நான் அபூர்வமான லோகத்திற்கு உங்களைக் கொண்டு போகின்றேனில்லை. ப்ரபஞ்சம் ஒன்றே. இவ்வுலகில் நமது ஜ்ஞாந



ஶக்திகள் சிலவிதமாகக் குன்றி நிற்கின்றன. ப்ரபஞ்ச வ்யாபாரங்களில் மிகுதியான பாகம் நமக்குத் தெரிவதில்லை. ஆனால் நம்முடன் முயற்சி செய்துகொண்டும், உபகரித்துக்கொண்டு மிருக்கும் சேதநர்கள் நம்மைச் சூழ்ந்திருக்கின்றனர். இதைச் சிலர் ஸ்வப்நம் முதலான தர்ஶநங்களில் கிஞ்சித் அறிகின்றனர். முக்தரும் நித்யரும் ஈஶ்வரனுள்பட நமக்கு அநுகூலம் செய்கின்றனரென மதம் சொல்வது ஸர்வ ப்ரகாரத்தாலும் நிஜமே,” என்றிவ்விதம் உபந்யஸித்தார். இவர் அநுபவத்திலும், இவரைக் கேட்டவர்கள் அநுபவத்திலும், மதம் என்றால் கிறிஸ்தவ மதம் என்றுதான் தோற்றும். இவர் உரைத்தவற்றை, நம்மவர்கள், நமது நாட்டினார் அநுபவத்தை யொட்டி யோசிக்கவேண்டும். ஈஶ்வரன் யாவர்க்கும் ஸமன். அவனைப்பற்றியும், நமது ஆத்மாக்களைப் பற்றியும், நம்மைச் சூழும் ப்ரக்ருதியைப் பற்றியும், பல நாட்டினர்க்கும் தத்வஜ்ஞாநம் கிடைக்கக் கூடியதாயினும், அந்த ஜ்ஞாந ஸம்பாதநமானது, ப்ராசீந ஸுக்ருத மடியாகப் பிறக்கும் ப்ரபந்ந தாரதம்ய நிமித்தத்தால் உண்டாகும் அர்ஹதா பேதங்களடியாகப் பல நாட்டினர்க்குள்ளும் ஸங்கோச விகாஸத்துடன் கூடி யிருக்கின்றது. இந்த விஷயத்தில், பகவத் ராமாநுஜன் திருவுள்ளப்படி, ஸமீசீந தர்க்கத்தினால் அநுக்ரஹிக்கப்பட்ட ந்யாயத்தைக் கொண்டு, எந்த நாட்டில் ஆமுஷ்மிகத்துக்கு அநுகூலமாகும் தத்வ தர்ஶநம் மிகுதியாக உண்டாயிருக்கின்ற தென்பதைப் பக்ஷபாத மற்றவர்கள் யோசிக்கக் கூடியவர்கள். தற்கால வித்யையானது நாஸ்திக வாதங்களுக்கு ஸஹாயமாயிருப்பதையிட்டு, இந்த வித்யையில் மக்நர்களாக இருப்பவர், அவர் விஶ்வஸிக்கக் கூடிய ஐரோப்பிய வித்வான் அநுபவத்தைப் பார்த்தாவது, ஆஸ்திகதையில் ஶ்ரத்தையையடைந்தாராகில், தத்வதர்ஶிகளான நம் பெரியோர் உக்திகளில் விஶ்வாஸமும் பாராட்டக்கூடும். இந்த விஶ்வாஸமானது, தத்வஜ்ஞாநத்தை அடைந்து அநுபவிக்க அவஶ்யம் அநுஷ்டேய மென்று நமது பெரியோர் விதித்த கர்மங்களிலும், ஆசாரங்களிலும் விஶ்வாஸம் உண்டாக ஹேதுவாகலாம் என்று, மேலெழுதப்பட்ட ஐரோப்பிய வித்வான் வசநங்களை எடுத்துக்காட்டினோம். அவர் உக்திகளால், அவரையொத்த பல வித்வான்களும் அவருடைய அநுபவத்தைப் பொருந்தியவர்கள் எனத் தெரிகின்றது.

மார்கழி மாஸம்.

'मासानां मार्गशीर्षोऽहम्', என்று பகவான் கீதையில் வெளியிடுகின்றார். இதற்குக் காரணம் பாஷ்யகாரர்கள் வெளியிடவில்லை. தாத்பர்ய சந்த்ரிகையில் தேசிகன் "मासेषु मार्गशीर्षस्य उत्कर्षः, सस्यसमृद्ध्या नातिशीतोष्णत्वाच्च, मासाधिदेवेषु केशवादिषु प्रियतमस्य केशवस्य मासत्वाच्च, व्रतसमारम्भकालत्वाच्च" என்று ஸாதித்தருளினர். லோகாநுபவத்தில், விஷயாஸக்தமான மநஸ்ஸுடன் கூடின ஸர்வ ஜநங்களும், காலையில் எழுந்தவாறே, அர்த்தார்ஜநத்தை ப்ரயோஜநமாயுடைய வ்யாபாரங்களில் உத்யுக்தர்களாக ஸஞ்சரிக்கின்றனர். ஆனல், மார்கழி மாஸத்தில் நாலாம் ஜாமம் வருமுன்னமே எழுந்து, ஸர்வ ப்ரஜைகளும், பகவதாராதநத்திலோ, பகவந்நாம ஸங்கீர்த்தநாதிகளிலோ ப்ரவ்ருத்தர்களாய், லோக சிந்தையை நிவர்த்திக்கின்றனர். தன் நிலைமையைத் தன் நாதன் தெரிந்து கொள்ளவில்லை யென்றும், அவனுக்கும் துஷ்ப்ரவேசமான ஸ்தாநத்தில் தான் தகையப்பட்டிருப்பதாலும், சோக ஸாகரத்தில் மூழ்கி,

हा राम सत्यव्रत दीर्घबाहो<br>
हा पूर्णचन्द्रप्रतिमानवक्त्र ।<br>
हा जीवलोकस्य हितः प्रियश्च<br>
वध्यां न मां वेत्सि हि राक्षसानाम् ॥<br>
अनन्यदेवत्वमियं क्षमा च<br>
भूमौ च शय्या नियमश्च धर्मे ।<br>
पतिव्रतात्वं विफलं ममेदं<br>
कृतं कृतघ्नेष्विव मानुषाणाम् ॥

"ஹாராமா! ஸத்யத்தையே வ்ரதமாகக் கொண்டவனே! நீண்ட புஜங்களுடன் கூடினவனே! பூர்ணசந்த்ரனைப்போன்ற முகத்துடன் கூடினவனே! ஜீவலோகத்துக்கு ஹிதம் செய்பவனே! அவர்க்கு ப்ரியமானவனே! ராக்ஷஸர்களால் கொல்லப்படப் போகின்றவளாக என்னை அறிகின்றாயில்லையே! ஹாராமா! உன்



னிடம் நான் ப்ரேமை கொண்டவள். உன்னிடம் தீர்க்க காலமாய்க் கட்டப்பட்ட பாவத்துடன் கூடினவளாய் நாசமடைகின்றேன். வ்யர்த்தமாக இதுவரையில் தபஸ்செய்தேன்: வ்ரதங்கள் அநுஷ்டித்தேன். இப்போது நிந்தார்ஹையாயும் பாக்யமற்றவளாயும் ப்ராணனை த்யஜிக்கின்றேன்" என முறையிட்ட ஜாநகியினிடம், ஸ்ரீராமன் ப்ரியதூதனை அனுப்பிய மாஸம் இது. ஸுந்தரகாண்ட வ்ருத்தாந்தங்கள் இந்த மாஸத்தில் நடந்தன. ஸர்வலோக ப்ரியனை பகவானைத் தமக்குப் பதியாக வேண்டி, நந்தவ்ரஜ கந்நிகைகள் காத்யாயநீ வ்ரதத்தை இந்த மாஸம் அநுஷ்டித்தனர் என்பதாக, 'हेमन्ते प्रथमे मासि नन्दव्रजकुमारिकाः । चेरुर्हविष्यं भुञ्जानाः कात्यायन्यर्चनव्रतम्' என்று ஸ்ரீபாகவதத்தில் சொல்லியிருக்கின்றது. இப்படியே தானும் க்ருஷ்ணனைத் தனக்கு நாயகனாக வேண்டிய விஷ்ணுசித்தன் புதல்வியும், 'மார்கழித் திங்கள் மதிநிறைந்த நன்னாளால் நீராடப்போதுவீர்' என்று, திருப்பாவையைப் பாடித் தன் நாதனுக்குத் தந்தனள்.

ஆதலால் லோகத்தார் மார்கழி மாஸத்தில் வ்யாபாராந்தரங்களை யதாசக்தி யொழித்துவிட்டுப் பகவத் யஜநத்தில் காலத்தைப் போக்கினர் என்பது ஸ்பஷ்டம். அந்தக் காரணத்தையிட்டுப் பகவானும் இம்மாஸத்தில் தானுகந்தருளிய தேசங்களில் விசேஷ ஸாந்நித்யம் செய்து கொண்டிருந்தான். அதனாலன்றோ, மார்கழி மாஸத்தை ஈச்வரன் தனது விபூதிகளில் விசேஷித்து அங்கீகாரம் செய்தனன்?

அதன் தத்கால பரிணாமம்.

இப்படிப்பட்ட மாஸத்திற்குத் தத்காலம் எத்தகைய பரிணாமம் உண்டாயது? இந்த மாஸத்தில் ஸர்வோத்க்ருஷ்டமான தினமாயும், ஹரிதினங்கட்குள் அத்விதீயமாயும் இருக்கப்பட்ட வைகுண்ட ஏகாதசியன்று, சென்னைப்பட்டணம் பட்டபாட்டை ஸ்மரித்தால், கீதாசார்யன் ஸ்வோக்தியை மாற்றவிட வேண்டுமென்பதில் ஸந்தேஹமுளதோ? அன்றொருவன் அந்நகரத்தில் ஜநங்களுடைய உத்யாநத்தோட்டத்துக்கு, ஸூர்யாஸ்தமநம் சென்று நோக்கினனாகில், இவ்வுலகத்தின் மேல் லோகாந்தரமொன்றில்லை யென்று யாவத்ஜநங்களும் ஸித்தாந்தம் செய்து

விட்டாரென்று எண்ணமாட்டனா? க்ரீடார்த்தமும், பரஸ்பரம் அவலோகநார்த்தமும், ஸ்த்ரீ புருஷர்கள் அனைவரும், ஜாதி குலம் முதலான ஸர்வ வரம்புகளையும் கடந்து, யதேச்சையாய்த் திரிய அவ்விடம் வந்தனரன்றோ? ஒவ்வொருவரும் பரருடைய த்ருஷ்டி சித்தங்களை அபஹரிக்க யோசித்தே, நவம் நவமாகத் தைத்ததும் நெய்ததுமான ஆடைகளையும், முக்யமாகப் பெண்பாலர், மித்யாரத்நங்களையும், உண்மையானவற்றையும் மிகுதியாகச் சுமந்து கொண்டு, வெண்ணிலவை அதிக்ரமித்த வெள்ளைத் தீபங்கள் முன்பாக விளங்கினார்களல்லவோ?

அன்றைக்கே ராஜாங்கத்தில் ஸம்பந்தத்தையும், அதிகாரத்தையும் வேண்டிப் பஶ்சிம வித்யாபாரங்கதர்களான இந்தியர்கள் ஸங்கம் கூடினார்கள். தத்ஸமகாலத்தில், நம்தேசத்தினருடைய வர்ணாஶ்ரம தர்மங்களையும் ஆசாரங்களையும் மாற்றிவிட எண்ணி அவருள் சிலர் ஓர் ஸங்கம் கூடினார்கள். நமது தேசத்தில் வர்த்தகமும், கைத்தொழிலும் சிறக்கவேண்டி, அவர்கள் மற்றோர் ஸங்கம் கூடினார்கள். நம் நாட்டினர், தமது ப்ராசீந ஸம்ப்ரதாயங்களைத் துறந்து, அஸ்திவாரமும் ஆவரணமு மற்றதாகிய ப்ரஹ்மஸமாஜமெனும் ஓர் புதிய கொள்கையில் சேரவேண்டி, மற்றோர் கூட்டமும் கூடியது. ராஜாங்கத்தார்க்கு ஸஜாதியரான பாதிரிமார், நம்மவருள் இவ்வருஷத்தில் தம் கட்டுப்பாட்டுக்குள் ஆகர்ஷிக்கப்பட்டவருடைய ஸங்க்யையை யோசிக்கவும், தமது ஒற்றுமையாலும், செல்வாக்காலும், அர்த்தபலத்தாலும், தீவ்ரமாக நம்மவருள் மற்றோரையும் ஸ்வரூப ஸ்வபாவ பரித்யாகம் செய்யும்படி வேண்டியும் கூட்டங்கள் கூடினர். நம் நாட்டில் தாம் அடைந்த ஜந்மத்தை மறுக்கக் கூடாதாகையால், அதை யொழித்துத் தமது பூர்வீகருடைய ஸ்மரணைகளை வேரறுத்த இந்திய கிறிஸ்தவரும் ஸ்வரக்ஷணார்த்தம் ஸபைகூடினர். மஹம்மதிய ராஜாங்கத்தின் பயனாக இந்தியாவுக்குக் கிடைத்த மஹம்மதிய ஜநங்களும் ஸ்வரக்ஷணத்தின் பொருட்டு ஸபை சேர்ந்தார்கள். நம்முடைய ஸநாதந தர்மத்தை ரக்ஷிக்கவோ, நம்முடைய ப்ராசீந ஸம்ப்ரதாயங்களைக் காப்பாற்றவோ, நம்முடைய வர்ணாஶ்ரம தர்மங்களைப் பாதுகாக்கவோ ஓர் ஸபையும் கூடக் காணோம். கூடினவை யாவும் இவற்றிற்கு ம்ருத்யு துல்யங்கள். நம்மவரோ பிள்ளைகளையும் பெண்களையும் பெற்றுத் தமது த்ரவ்யத்தையும்



செலவிட்டு, அவரைப் பரராக்கும்படிப் பரரிடம் ஒப்பிவிக்கின்றனர். இவற்றிற்கெல்லாம் முடிவு எவ்வண்ணம் பரிணமிக்கும் என்பதை யார்தான் தெரிந்துகொள்ளக் கூடாது? மார்கழி மாஸத்தில் ஸங்கம் சேர்ந்த ஜநங்களின் உத்யோகமெல்லாம் ஐஹிகத்தையே ஆஶ்ரயித்து நின்றது. இந்த ஸங்கங்களில் நடந்தவற்றில் சிற்சில அம்ஶங்கள் யோசிக்கதக்கன.

**ஸமவாய சீர்திருத்த ஸங்கம்.**

சென்னையில் நிலைத்துள்ள ஸமவாயசீர்திருத்த ஸபையார் (Social reform association) தாம் கூட்டிய ஸங்கத்துக்கு வந்தவர்க்கெல்லாம் நல்வரவளித்தனர். அவர்க்குள் ததர்த்தம், அத்யக்ஷஸ்தாநத்தை வஹித்த மஹாராஜராஜஸ்ரீ எஸ். ஸ்ரீநிவாஸய்யங்கார் அவர்களும், ஸங்கத்தில் அக்ராஸநத்தை அங்கீகரித்த மைஸூர் யுவராஜரும், விஸ்தரேண ஸ்வோத்தேஶ்யங்களைப் பற்றி ப்ரஸங்கித்தனர். பெண்கட்கு பஶ்சிம வித்யாப்யாஸம், பஶ்சிமகண்டத்தின் வழக்கத்தை அநுஸரித்து ஸ்த்ரீபுருஷ ஸாமாந்யமும் ஸஹஜமாக ஸம்பாஷணாதிகள் செய்யல், ஸ்த்ரீகளுடைய ப்ரௌடாவிவாஹம், வர்ணங்களுடைய நாஶம், ஸர்வத்ர ஸஹபோஜநம், ஸர்வ ஜாதிகளும் ஒருவர்க்கொருவர் விவாஹாதி ஸம்பந்தம் பண்ணிக் கொள்ளல், ஸமுத்ரயாநம் செய்பவரை ஜாதிக்குள் சேர்த்துக்கொள்ளல், இத்யாதி விஷயங்களை மிகவும் த்ருப்தியுடன் வேண்டினர். இந்த ஸங்கத்தில், மேற்குறித்த நாகரீகங்களை முன்னமே ஸம்பாதித்துவிட்ட ப்ரம்ஹஸமாஜத்தினர் விஶேஷமாக ப்ரகாஶித்தனர். ஸங்கத்தார் தீர்மாநித்த விஷயங்கள் அவர்க்குத் தேவையில்லை. ஆயினும் அவர் நம்போலியர்க்காகவே இவ்வண்ணம் கஷ்டம் வஹித்தனர். யாவரும் நமது மதத்தைக்குறித்து, [illegible] வீஜயீபவ என்று, தமது ப்ரயத்நங்கள் அதைக் கொல்லாதென்று பேசிவிட்டார்கள்.

இந்த உக்தியானது எவ்வண்ணம் பலிக்குமோ நமக்குத் தெரியவில்லை. சென்னைப் பள்ளிக்கூடங்களில் படிக்கின்றவரும், ஜந்மாவஶேஷமாய் நிற்கின்ற ப்ராஹ்மணத்வத்தைச் சீரழிக்கின்றவருமான பிள்ளைகளுடைய கோலங்களையும், வ்ருத்தங்களையும், நன்கு நோக்கினால், ஆர்ய ஆசாரங்களையும், விஶ்வாஸங்களையும்,

மதம் அவரிடம் விளங்கும் தன்மையைப் பற்றி நீண்டு யோசிக்கக்கூடும்.

கத்திரித்த முன்மயிரும் கையேந்தும் கத்தியினால்
சித்திரித்த மூஞ்சிச் சிறுமயிரும்—தைத்தணிந்த
சட்டையும் காலரும் தட்டாத காற்பையும்
சுட்டவாய்ப் பீடியும் சொல்.

கலியுகம் புஷ்பித்தது. தத்காலம் வர்ணஸங்கரம், ஆர்யமத லோபம், ஆர்யதர்மநாசம்; இவற்றைப்பற்றி மஹர்ஷிக்கள் முன்னமே விசேஷித்து நிஷ்கர்ஷித்திருக்கின்றனர். இந்தப் பரிபாகத்தின்வரவை மேற்குறித்த ஸங்கம் ப்ரகாசிப்பித்தது. இனி ஸங்கத்தினரும் தாம் நிச்சயித்தவண்ணம், ஜாதியையும், ஜாதிநாமங்களையும், ஜாதிதர்மங்களையும், ஜாத்யாசாரங்களையும், ப்ரஸித்தமாக த்யஜித்தனராகில், அது யாவர்க்கும் நன்மை தரும். ஆசாரங்களும் கொள்கைகளும் ஒவ்வொருவரும் இஷ்டப்படி மாற்றக்கூடுமென்பதை யாம் ஆக்ஷேபிக்கவில்லை. விச்வாஸம் நீங்கியபின், ஒரு மதத்தையோ ஆசாரத்தையோ ஒருவன், அயலார் நிமித்தம் அநுஷ்டித்தானாகில் அது அவனுக்கும் ஏனையோர்க்கும் மிகவும் ஹாநியை உண்டுபண்ணும். இவை வாதவிஷயங்கள். அதற்காகத்தான் இவ்விஷயங்களை இவ்விடம் யாம் ஸ்மரிக்கின்றோம்.

ப்ரஹ்மஸமாஜ ஸங்கம்.

ப்ரஹ்மஸமாஜ ஸங்கத்தில், ஸர் நாராயண சந்தாவர்க்கர், தாம் உபநிஷத்மதத்தை, ஸ்ரீசங்கராசார்யர் அபிப்ராயப்படி வ்ழிபடுவதாகச் சொன்னார். இதை ப்ரஹ்ம ஸமாஜத்தினர் அங்கீகரிப்பரோ? பரமார்த்த தசையில், ஜீவன் விஷயமாகவும், ஜகத் விஷயமாகவும், சங்கராசார்யருடைய நாஸ்தித்வவாதத்தை அவர் அங்கீகரிக்கின்றனரோ? நிர்விசேஷ சைதந்யம் தான் ப்ரஹ்மம், அது தான் வஸ்து என்று அவர் நம்புகின்றனரோ? வ்யவஹாரதசையில், கர்மம், தத்ப்ரயுக்தமாகப் புநர்ஜந்மம், அர்ச்சிராதி மார்க்கம், மரணபர்யந்தம் சித்தசுத்திக்காக வர்ணாச்ரம கர்மாநுஷ்டாநம், ப்ரஹ்மத்தினுடைய சாஸ்த்ரைகவேத்யத்வம், இத்யாதி சங்கராசார்ய அபிப்ராயத்தை யநுஸரித்த உபநிஷத்மதத்தை ஒப்புக்கொள்கின்றனரோ? ஒப்புக்கொள்ள மாட்டாரென்பது தெரிந்தவிஷயம். ஏன் அந்தப் பெரிய மநுஷ்யன் அவ்விதம் மொழிந்தார்?



இன்னும் அவர் ப்ரஹ்ம ஸமாஜத்தினருடைய உபாஸ்ய வஸ்து ப்ரஹ்மா, விஷ்ணு, சிவன், இவர் மூவரையும் ஸ்ருஷ்டித்தவர் என்றார். இது எங்கே கற்றாரோ? இதற்கு ஆதாரமாக விஷய வாக்யங்கள் அடங்கியவையும் ப்ராமாண்யபாவத்தில் விசேஷித்தவையுமான தசோபநிஷத்துகளிலும், கௌஷீதகீ, ச்வேதாச்வதரம் முதலான உபநிஷத்துக்களிலும் ஒரு வசநம் எடுத்துக்காட்டுவரோ? தான் அங்கீகரித்த சங்கராசார்யக்ருத பாஷ்யாதிகளில் ஒரு வசநமெடுப்பரோ? இது என்ன மந்தப்ரலாபம்? மும்மூர்த்திகளையும் ஸ்ருஷ்டித்த ஈச்வரனையும் ஸ்ருஷ்டித்தவர் துர்யாதீதனை ஸதாசிவனென்று ஸூதஸம்ஹிதை சொல்லும். ஸதாசிவனையும் ஸ்ருஷ்டித்ததோர் பொருளை மற்றோர் கல்பிக்கக் கூடும். இந்த ரூபமான மூடபரம்பரைக்கு முடிவுண்டோ? யாவரும் ஒப்புக்கொள்ளும் ஈச்வரன் ஜகத்காரணன். இதை மறுப்போர் இல்லையென நம்புகின்றோம். ப்ரஹ்மஸூத்ரமும், ப்ரஹ்மம், ஜகத்துக்கு ஸ்ருஷ்டி ஸ்திதி லயகாரணமென்று விவரித்தது. உபநிஷத்துக்களும் அதையே கூறின. இந்தக் காரணவஸ்துவை, வைஷ்ணவர் விஷ்ணு என்கிறார்கள்; சைவர் சிவனென்கிறார்கள்; கிறிஸ்தவர் யாஹ்வே என்கின்றனர்; மஹம்மதியர் அல்லா என்கின்றனர். ஒரு தர்சநத்தினர் மற்றோர் ஈச்வரனென உபாஸிக்கும் மூர்த்தியை நிந்தித்தால், அது அஜ்ஞாநத்தைப் பொறுத்தது. ப்ரமாண க்ரந்தங்களில் ஈச்வரன் எந்த நாமரூபாதிகளைக் கொண்டு வ்யவஹரிக்கப்படுகின்றான் என்னும் விஷயத்தில் தான் வைஷ்ணவர்க்குள்ளும் சைவர்க்குள்ளும் விவாதம். நாமாந்தர ரூபாந்தரங்களைக்கொண்டு உபாஸிப்பவர் விஷயத்திலும், 'தேவி [illegible]', எனும் பகவத் வாக்யம் பொருந்தும்.

நாம ரூபாதிகல்பனை ஈச்வரனுக்குக் கூடாதென்றும், இப்படிக் கல்பித்ததற்காக சங்கராசார்யர் சரீரத்யாகாவஸரத்தில் ஈச்வரனுடைய க்ஷமையைப் ப்ரார்த்தித்தனரென்றும், சங்கரவிஜயமெனும் க்ரந்தத்தில் சொல்லியிருப்பதை ப்ரஸ்தாபித்து, சங்கராசார்யருக்கு அவஸாந காலத்தில் ப்ராப்தமான ஜ்ஞாநம் ப்ரஹ்மஸமாஜத்தினர்க்கு ஸமுதாயமாகக் கிடைத்துவிட்டதென்று சந்தாவர்க்கர் மொழிந்தார். இந்தக் கதையின் தாத்பர்யம் என்னெ

னில், வ்யவஹாரதசையில் ஈச்வரனுக்கு ஸஜ்ஞாதீய கல்பநம் செய்யாமல் அவனை உபாஸித்தல் துஸ்ஸாத்யம் என்றுகாட்டுவதே. இவ்வண்ணம் ஆசார்யர் சொன்னதைக்கொண்டு, உபாஸ்தி காலத்தில் அவருடைய சிஷ்யர்கள் ஈச்வரனுக்கு ஸஜ்ஞாதீய கல்பநத்தை த்யஜிக்கவில்லை. உபநிஷத்துகளும் தாங்கள் விதித்த வித்யைகளில் ப்ரஹ்மத்துக்கு நாமரூபாதிகல்பனைகள் செய்திருக்கின்றன. தேவதைகளும், '𑌪𑌶𑍍𑌯𑌾𑌵𑌤𑌾𑌰𑌾𑌨𑍍𑌰𑌾𑌮𑌾𑌦𑍀𑌨𑍍 𑌸𑌮𑍇𑌤𑍍𑌯 𑌤𑍍𑌰𑌿𑌦𑌿𑌵𑍌𑌕𑌸𑌃 । 𑌅𑌰𑍍𑌚𑌯𑌨𑍍𑌤𑌿 𑌪𑌰𑌂 𑌧𑌾𑌮', எனும் ப்ரமாணப்படிப் பகவானுடைய அவதார ரூபங்களை அர்ச்சித்தனர் என்றிருக்கிறது. ப்ரஹ்ம ஸமாஜத்தினர் தேவதைகளிலும் அதிகர். ஈச்வரனுடைய உபாஸனையைத் தாம் செய்கின்றதாகச் சொல்கின்றனர். கிறிஸ்தவரைப் போல் அவனுக்கு ப்ரார்த்தனையும் செய்கின்றனர். இத்தகைய வஸ்து ஸஜ்ஞாதீய கல்பநா ரஹிதமாய் எப்படி அவகாஹிக்கப்படும்? ப்ரார்த்தனையைக் கேட்கும் வஸ்துவுக்கு, கேட்கும் செயல் ஏற்பட்டால், கேட்டதை அறியும் செயலும், கேட்பவரைக் காணும் செயலும், அவர்க்கு நன்மையளிக்க வேண்டுமென்று எண்ணும் செயலும், மற்றச் செய்கைகளும் நியமேந ஏற்படும். ப்ரார்த்திக்கப் பலர் கூடுகின்றனர்; பாடுகின்றனர்; ப்ரார்த்தனைக்குத் தேசகாலம் வேண்டுகின்றனர். இவர்க்கு நிர்விசேஷ சைதந்யம்தான் பரமார்த்தவஸ்து எனும் மதம் எவ்வண்ணம் கூடும்?

ப்ரதீகாலம்பனையைக் கிறிஸ்தவரென முற்றிலும் வெறுத்து உதித்த ப்ரஹ்மஸமாஜத்தைச் சேர்ந்தவர்கள், இவ்வருஷம் தமது ஸங்கத்தில், ஜகத் முதலான வஸ்துக்கள் ப்ரதீகமாகக் கூடுமென்றும், தாத்ருச ப்ரதீகங்களைக் கொண்டு தாம் ஈச்வரோபாஸ்தி செய்வதாயும், விக்ரஹங்களை மந்தப்ரஜ்ஞர்கள் வேண்டுகின்றனர் என்றும் சொல்ல ஆரம்பித்தனர். இவ்வளவாகிலும் நம்மிடம் தயவுசெய்தனர். இது நமக்கு ஸந்தோஷமே. ஆனாலும், ப்ரஹ்ம ஸமாஜத்தினர் வாதத்திற்கு நிற்கமாட்டாரெனத் தோன்றுகின்றது. அவரால் மந்தப்ரஜ்ஞரெனப்படுவோரில் பலர் வாஸ்தவத்தில் ஸ்திதப்ரஜ்ஞராய் முடியலாம். அவரிலும் பலர் மந்தப்ரஜ்ஞர் கோஷ்டியை அலங்கரிக்க வேண்டியிருக்கும்.

---

# சில விஷ்ணு ஸூக்தங்கள்.

ருக்வேதம் ப்ரதமாஷ்டகம் த்விதீயாத்யாயம் ஏழாவது வர்க்கம், இதற்கு ஸரியான ப்ரதம மண்டலம் இருபத்திரண்டாவது ஸூக்தத்தில்,

'𑌅𑌤𑍋 𑌦𑍇𑌵𑌾 𑌅𑌵𑌨𑍍𑌤𑍁 𑌨𑍋 𑌯𑌤𑍋 𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌰𑍍𑌵𑌿𑌚𑌕𑍍𑌰𑌮𑍇 ।
𑌪𑍃𑌥𑌿𑌵𑍍𑌯𑌾𑌃 𑌸𑌪𑍍𑌤 𑌧𑌾𑌮𑌭𑌿𑌃 ॥ 𑌇𑌦𑌂 𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌰𑍍𑌵𑌿𑌚𑌕𑍍𑌰𑌮𑍇 𑌤𑍍𑌰𑍇𑌧𑌾 𑌨𑌿𑌦-
𑌧𑍇 𑌪𑌦𑌮𑍍 𑌸𑌮𑍂𑌢𑌮𑌸𑍍𑌯 𑌪𑌾𑌂𑌸𑍁𑌰𑍇 ॥ 𑌤𑍍𑌰𑍀𑌣𑌿 𑌪𑌦𑌾 𑌵𑌿𑌚𑌕𑍍𑌰𑌮𑍇
𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌰𑍍𑌗𑍋𑌪𑌾 𑌅𑌦𑌾𑌭𑍍𑌯𑌃 । 𑌅𑌤𑍋 𑌧𑌰𑍍𑌮𑌾𑌣𑌿 𑌧𑌾𑌰𑌯𑌨𑍍 ॥ 𑌵𑌿𑌷𑍍𑌣𑍋𑌃
𑌕𑌰𑍍𑌮𑌾𑌣𑌿 𑌪𑌶𑍍𑌯𑌤 𑌯𑌤𑍋 𑌵𑍍𑌰𑌤𑌾𑌨𑌿 𑌪𑌸𑍍𑌪𑌶𑍇 । 𑌇𑌨𑍍𑌦𑍍𑌰𑌸𑍍𑌯 𑌯𑍁-
𑌜𑍍𑌯𑌃 𑌸𑌖𑌾 ॥ 𑌤𑌦𑍍𑌵𑌿𑌷𑍍𑌣𑍋𑌃 𑌪𑌰𑌮𑌂 𑌪𑌦𑌂 𑌸𑌦𑌾 𑌪𑌶𑍍𑌯𑌨𑍍𑌤𑌿 𑌸𑍂𑌰𑌯𑌃 ।
𑌦𑌿𑌵𑍀𑌵 𑌚𑌕𑍍𑌷𑍁𑌰𑌾𑌤𑌤𑌮𑍍 ॥ 𑌤𑌦𑍍𑌵𑌿𑌪𑍍𑌰𑌾𑌸𑍋 𑌵𑌿𑌪𑌨𑍍𑌯𑌵𑍋 𑌜𑌾𑌗𑍃𑌵𑌾𑌂𑌸𑌃
𑌸𑌮𑌿𑌨𑍍𑌧𑌤𑍇 । 𑌵𑌿𑌷𑍍𑌣𑍋𑌰𑍍𑌯𑌤𑍍𑌪𑌰𑌮𑌂 𑌪𑌦𑌮𑍍' ॥

வேதபாஷ்யத்தின்படி இவற்றின்
எனும் மந்த்ரங்கள் உள.
பொருள்: "பரமேச்வரனை விஷ்ணுவானவர் காயத்ரீ முதலான
ஏழு சந்தஸ்ஸுக்களை ஸாதநங்களாகக் கொண்டு, எந்த பூப்ரதே
சத்தினின்று விவிதமான பாதக்ரமணங்களைச் செய்தாரோ, அந்த
ப்ருதிவீப்ரதேசத்தினின்று எங்களைத் தேவர்கள் ரக்ஷிக்கட்டும்."
(பகவான் த்ரிவிக்ரமாவதாரத்தில் மூன்றடியால், பூமியினின்று
ஸப்தலோகங்களையும் அளந்ததன் பலம், பூலோகவாஸிகளின்
பாபநிவாரணம்தான்: என்று பாஷ்யகாரர் அபிப்ராயம்.) "விஷ்ணு,
த்ரிவிக்ரமாவதாரத்தில் இந்த ஸர்வஜகத்தையும் உத்தேசித்து
விசேஷேண பாதக்ரமணம் செய்தார். அப்போது மூன்று ப்ர
காரமாகத் தன் பாதத்தை வைத்தார். அவருடைய தூளியுக்த
மான திருவடிகளில் இந்த ஸர்வஜகத்தும் அந்தர்ப்பூதம்." (இந்த
அர்த்தம் யாஸ்கருடைய வ்யாக்யாநத்தை யொட்டிச் செய்யப்பட்
டது. யாஸ்கரும் தமக்கும் பூர்வீகர்களான மஹான்களுடைய
அபிப்ராயத்தை யொட்டி எழுதுகின்றனர். ஆதலால் இந்த பக

வத்ஸூக்தத்தின் அர்த்தம் மூவாயிரம் நாலாயிரம் வருஷங்களுக்கு முன்னமே ஏற்பட்டதென ஸாதுக்கள் கொள்வார்கள்.) "ஒருவராலும் சலிக்கக்கூடாதவரும், ஸர்வஜகத்துக்கும் ரக்ஷகருமான விஷ்ணுவானவர் (அக்நிஹோத்ராதி) தர்மங்களைப் போஷிக்கும் பொருட்டு ப்ருதிவ்யாதி ஸ்தாநங்களில் பாதந்யாஸம் செய்தனர்." "விஷ்ணுவினுடைய ஸர்வஜகத்ரக்ஷணம் முதலான கர்மங்களைப் பாருங்கள். அவர் அநுக்ரஹத்தால் ஸர்வ யஜமாநர்களும் அக்நிஹோத்ராதி வ்ரதங்களை அநுஷ்டிக்கின்றனர். அப்படிப்பட்ட விஷ்ணுவானவர் இந்த்ரனுக்கு அநுகூலமான ஸகாவாக இருக்கின்றனர்." "விஷ்ணுவினுடைய ஶாஸ்த்ரப்ரஸித்தமான உத்க்ருஷ்ட ஸ்தாநத்தை வித்வாம்ஸர்கள் ஸர்வதா ஶாஸ்த்ரத்ருஷ்டியால் பார்க்கின்றனர்; ஆகாசத்தில் எங்கும் பரவுகின்ற கண்ணனது ப்ரதிபந்தகாபாவத்தால் விஶதமாகப் பார்ப்பதை யொத்துப் பார்க்கின்றனர்." "பூர்வோக்தமான விஷ்ணுவினுடைய ஶ்ரேஷ்டமான ஸ்தாநத்தை விஶேஷேண ஸ்துதி செய்வதில் ஸமர்த்தர்களும், அர்த்தாநுஸாரியான ஶப்தப்ரயோகம் செய்வதில் ஜாகரூகருமான மேதாவிகள் ப்ரகாஶிப்பிக்கின்றனர்."

அதே மண்டலத்தில் 90-வது ஸூக்தத்தின் முடிவான மந்த்ரம் 'ஶந்நோ விஷ்ணுருருக்ரம:' என்பது. இதில் விஷ்ணுவுக்கு விஶேஷித்து உருக்ரமத்வம் சொல்லப்பட்டிருக்கின்றது.

இரண்டாமஷ்டகம் இரண்டாமத்யாயம் 24-வது வர்க்கம், இதற்கு ஸரியான முதல் மண்டலம் 154-வது ஸூக்தத்தின் மந்த்ரங்களை யோசிப்போம்.

விஷ்ணோர்நுகம் வீர்யாணி ப்ரவோசம் ய: பார்திவாநி விமமே ரஜாம்ஸி । யோ அஸ்கபாயதுத்தரம் ஸதஸ்தம் விசக்ரமாணஸ்த்ரேதோருகாய: ॥ ப்ரதத்விஷ்ணுஸ்ஸ்தவதே வீர்யேண ம்ருகோ ந பீம: குசரோ கிரிஷ்டா: । யஸ்யோருஷு த்ரிஷு விக்ரமணேஷ்வதிக்ஷியந்தி புவநாநி விஶ்வா ॥ ப்ரவிஷ்ணவே ஶூஷமேது மன்ம கிரிக்ஷித உருகாயாய வ்ருஷ்ணே । ய இதம் தீர்கம் ப்ரயதம் ஸதஸ்தம் ஏகோ விமமே த்ரிபிரித்பதேபி: ॥ யஸ்ய த்ரீ பூர்ணா மதுநா பதாந்யக்ஷீயமாணா ஸ்வதயா மதந்தி । ய உ த்ரிதாது ப்ருதிவீ



முத த்யாமேகோ தாதார புவநாநி விஶ்வா ॥ தத்ஸ்ய ப்ரியமபி பாதோ அஶ்யாம் நரோ யத்ர தேவயவோ மதந்தி । உருக்ரமஸ்ய ஸ ஹி பந்துரித்தா விஷ்ணோ: பதே பரமே மத்வ உத்ஸ: ॥

"வ்யாபநஶீலனுன பகவானுடைய வீரகர்மங்களை ஶீக்ரம் சொல்
கின்றேன். யாதொரு பகவான் ப்ருத்வீஸம்பந்தமானவையும்,
ரமணீய ஆகாரத்துடன் கூடினவையும், பூராதி லோகத்ரயாபிமாநி
களுமா யிருக்கும் அக்நி வாயு ஆதித்யரூபங்களை விஶேஷேண
ஸ்ருஷ்டித்தாரோ; அதவா, யாதொரு பகவான் பூலோகத்தின்
கீழுள்ள ஸப்தலோகங்களை அநேக ப்ரகாரமாக நிர்மித்தாரோ;
அதவா, பூமியையும், அதில் ப்ராணிகள் ஸம்பாதித்த கர்மபலங்
களை அவை அநுபவிப்பதற்காக ஸ்ருஷ்டங்களான படியால்,
அதந்நிமித்தமாய் ஸ்ருஷ்டங்களான, அந்தரிக்ஷ ஸ்வர்க்க லோகங்
களையும் நிர்மித்தாரோ; யாதொரு பகவான் அதிவிஸ்தீர்ணமான
தும், லோகத்ரயாஶ்ரயபூதமானதுமான அந்தரிக்ஷத்தை ஸ்ருஷ்
டித்தனரோ; அதவா புண்யம் செய்தவர்கள் கூடி வாஸம் செய்ய
யோக்யமானவையும், அவர்க்கு மரணாநந்தரம் ப்ராப்தமாகத் தக்
கவையுமான பூராதி ஸப்த லோகங்களை ஸ்ருஷ்டித்தாரோ; அத
வா, யாதொரு பகவான், அத்யுத்க்ருஷ்டமானதும், ஸர்வலோகங்
களுக்கும் மேற்பட்டதும், புநராவ்ருத்தி யில்லாததும், உபாஸகர்
கள் சேர்ந்து வஸிக்கப்பட்டதுமான ஸத்யலோகத்தை த்ருவமாக
ஸ்தாபித்தனரோ; மஹான்களால் மிகவும் ஸ்துதிக்கப்பட்ட அந்
தப் பகவான் தம்மால் ஸ்ருஷ்டங்களான லோகங்களை மூன்று
ப்ரகாரமாகத் தமது பாதந்யாஸங்களால் அளந்தனர்."

"அந்த மஹாநுபாவனுன விஷ்ணுவானவர் அவரது வீரகர்
மங்களின் நிமித்தமாக யாவராலும் மிகவும் ஸ்தோத்ரம் செய்யப்
படுகின்றனர். எப்படி ஸ்வவிரோதிகளைத் தேடுவதும், அவர்க்
குப் பயத்தை உண்டாக்குவதும், துர்க்கம ப்ரதேசங்களில் ஸஞ்
சரிப்பதும், பர்வதம் முதலான உந்நத ஸ்தாநங்களிலிருப்பதுமான
ஸிம்ஹத்தைப் போல், தேவர்களுடைய ஶத்ருக்களைத் தேடுபவ
ரும், யாவராலும் பயப்படத்தக்கவருமான பரமேஶ்வரனும், பூமி
முதலான ஸர்வலோகங்களிலும் ஸஞ்சரிப்பவரும், அத்யுச்சமான
பரமபதத்தி லிருப்பவருமான விஷ்ணுவானவர் ஸ்துதிக்கப்படு
கின்றார். எவருடைய விஸ்தீர்ணமான மூன்று பாதநிக்ஷேபங்

களில் அடங்கிய லோகங்களில், ஸர்வ பூதஜாதங்களும் ஆச்ர யித்து வஸிக்கின்றனவோ, அப்படிப்பட்ட பகவான் ஸ்துதிக்கப் படுகின்றார். ஸர்வ வ்யாபகரான விஷ்ணுவை நமது ஸ்தோத்ர மும், அதனால் உண்டாகும் மஹத்பலமும் போய்ச்சேரட்டும்: ஸ்தோதாக்கள் வாக்கில், அதவா, உத்க்ருஷ்டபதத்தில் இருக் கின்றவரும், பஹுபெயரால் பாடப்பட்டவரும், பக்தர்களுக்கு அவருடைய அபீஷ்டங்களை வர்ஷிப்பவருமான அவர்பொருட்டுப் போய்ச்சேரட்டும். யாதொருவர் ப்ரஸித்தமாகத் தெரிகின்றதும், அதிவிஸ்தாரமுள்ளதும், நியதமான வாஸஸ்தாநமாயிருப்பதுமான லோகத்ரயத்தை ஒருவரே மூன்று அடிகளால் அளந்தனரோ, அப்படிப்பட்ட மஹாநுபாவரின் பொருட்டுப் பலம் உண்டா கட்டும். யாதொரு விஷ்ணுவினுடைய மூன்று அடிகளின் வைப் பும், மதுரமான திவ்யாம்ருதத்தால் பூர்ணங்களாகி, க்ஷயரஹிதங்க ளாகி, அவற்றை ஆச்ரயித்திருக்கும் ஜநங்களுக்கு அந்நாதிகளைத் தந்து ஸந்தோஷிப்பிக்கின்றதோ; யாதொரு விஷ்ணு ஒருவரே பூமியையும் அந்தரிக்ஷத்தையும் அவற்றுள் நிற்கும் ஸர்வ பூதங் களையும் த்ரிவ்ருத்க்ருதமான தேஜஸ், அப், அந்நங்களால் நிர் மாணம் செய்தனரோ; அந்த மஹாவிஷ்ணுவுக்கு ப்ரியமானதும், (ஸர்வராலும் ஸேவ்யமானதும்) அந்தரிக்ஷ மெனப்பட்ட ப்ரஹ்ம லோக மெனும் ஸ்தாநத்தை நான் அடைய விரும்புகின்றேன். யாதொரு ஸ்தாநத்தைக்குறித்து, ப்ரகாசைகஸ்வரூபரான விஷ் ணுவை (ஸத்கர்மாதிளால்) அடைய இச்சிக்கும் புருஷர்கள் த்ருப்தியை அநுபவிக்கின்றனரோ, (அதை அடைய விரும்பு கின்றேன்). ஸர்வ ஜகத்தையும் விஸ்தரித்து ஆக்ரமிக்கிறவரும், அவற்றிலுள்ள ஸர்வத்தையும் அந்தராத்மாவாக வ்யாபிக்கின்ற வரும், (பரமேச்வரனும்) ஆகிய விஷ்ணுவினுடைய யாதொரு பரமமான, அதாவது நிரதிசய போக்யமானதும், கேவலம் ஸுக ஸ்வரூபமானதுமான ஸ்தாநத்தில் மதுரமான அம்ருதத்தினுடைய நிஷ்யந்தம் ( பெருக்கு ) உள்ளதோ, (யாதோரிடத்தில், பசி, தாஹம், ஜரை, மரணம், புநராவ்ருத்தி முதலான பயம் இலதோ, கேவலம் ஸங்கல்ப மாத்ரத்தினுல் அம்ருதத்தைப் பெருக்கும் அருவிகள் உண்டாகுமோ, எதைக்காட்டிலும் மேலான ஸ்தாநம் இலதோ) அப்படிப்பட்ட ஸ்தாநத்தை நான் அடைவேனாக மேலே சொன்ன ப்ரகாரம் அந்தப் பகவான் ஸகல ஸுக்ருதி



களுக்கும் பந்துவாகின்றார். (அவருடைய பதத்தை யடைந்தவர்க் கெல்லாம் அவர் ஹிதகாரி. ஏனென்றால் அவர்களைப் புநராவ் ருத்திக்கு அவர் உட்படுத்துவதில்லை என்பது ஸர்வ ச்ருதி ப்ரஸித்தம்.)

எல்லா விஷ்ணுஸூக்தங்களையும் இவ்விடம் எடுத்தல் பொ ருந்தாது. இன்னும் சிலவற்றை மாத்ரம் ப்ரதர்சநார்த்தம் காட்டு கின்றோம்.

இரண்டாவது அஷ்டகத்தில் இரண்டாவது அத்யாயம் 26 - வது வர்க்கம் - முதல் மண்டலம் 156 - வது ஸூக்தத்தில் இந்த மந்த்ரங்கள் உள.

‘𑌯𑌃 𑌪𑍂𑌰𑍍𑌵𑍍𑌯𑌾𑌯 𑌵𑍇𑌧𑌸𑍇 𑌨𑌵𑍀𑌯𑌸𑍇 𑌸𑍁𑌮𑌜𑍍𑌜𑌾𑌨𑌯𑍇
𑌵𑌿𑌷𑍍𑌣𑌵𑍇 𑌦𑌦𑌾𑌶𑌤𑌿 । 𑌯𑍋 𑌜𑌾𑌤𑌮𑌸𑍍𑌯 𑌮𑌹𑌤𑍋 𑌮𑌹𑌿 𑌬𑍍𑌰𑌵𑌤𑍍𑌸𑍇𑌦𑍁
𑌶𑍍𑌰𑌵𑍋𑌭𑌿𑌰𑍍𑌯𑍁𑌜𑍍𑌯𑌂 𑌚𑌿𑌦𑌭𑍍𑌯𑌸𑌤𑍍 ॥ 𑌤𑌮𑍁 𑌸𑍍𑌤𑍋𑌤𑌾𑌰𑌃 𑌪𑍂𑌰𑍍𑌵𑍍𑌯𑌂
𑌯𑌥𑌾 𑌵𑌿𑌦 𑌋𑌤𑌸𑍍𑌯 𑌗𑌰𑍍𑌭𑌂 𑌜𑌨𑍁𑌷𑌾 𑌪𑌿𑌪𑌰𑍍𑌤𑌨 । 𑌆𑌸𑍍𑌯 𑌜𑌾𑌨𑌨𑍍𑌤𑍋
𑌨𑌾𑌮 𑌚𑌿𑌦𑍍𑌵𑌿𑌵𑌕𑍍𑌤𑌨 𑌮𑌹𑌸𑍍𑌤𑍇 𑌵𑌿𑌷𑍍𑌣𑍋 𑌸𑍁𑌮𑌤𑌿𑌂 𑌭𑌜𑌾𑌮𑌹𑍇’ ॥

“ யாதொரு மநுஷ்யன், நித்யனைபடியால் பூர்வகாலீநனும், விவிதமான ஜகந்நிர்மாண சதுரனும், நித்ய நூதநனைபடியால் ரமணீயனும், ஸ்வஸங்கல்பத்தால் ஸ்வயமேவ உத்பந்நனும், அதவா, ஜகத்துக்கு ஸந்தோஷத்தைத் தரும் லக்ஷ்மீகாந்தனு மான விஷ்ணுவின் பொருட்டு ஹவிராதிகளை ஸமர்ப்பிக்கின் றானோ; இன்னும் அந்த மஹாநுபாவனுடைய ஸர்வ ஜகத்பூஜ் யங்களாகின்ற ஹிரண்யகர்ப்பாதி அவதாரங்களைக் குறித்து ஸங் கீர்த்தநம் செய்கின்றானோ; அப்படிப்பட்டவன் கீர்த்தி யுக்தனுய்க் கொண்டு, யாவராலும் அடையவேண்டப்படுகின்ற அந்தப் பரம பத விஷயத்தில் அபிமுகனுய்ப் போந்து, அதை அடைகின்றான். ஓ ஸ்துதி செய்கின்றவர்களே! அந்த ஸநாதநனும், யஜ்ஞத்துக் குக் காரணபூதனும், அதவா யஜ்ஞரூபமாக அவதரித்தவனும், அதவா வேதங்களில் ருதமென்றும், ஸ்ம்ருதிகளில் அப் என்றும் வ்யவஹரிக்கப்பட்ட ஜகத் காரணத்துக்கும் காரணபூதனுமான விஷ்ணுவை எப்படியறிகின்றீர்களோ அப்படி, அதாவது, உமக்கு ஜந்மத்தால் கிடைத்த ஜ்ஞாநத்தாலோ, வரப்ரஸாதத்தாலோ, ஸ்தோத்ராதிகள் செய்து ப்ரீணநம் செய்யுங்கள்; அதாவது,

பகவானுடைய மாஹாத்ம்யத்தை உமக்குத் தெரிந்தமட்டும் கீர்த்தநம் செய்யுங்கள். இன்னும் அந்தப் பகவானுடைய, யாவராலும் வணங்கப்பட்டதும் அவரது ஸர்வாத்ம ஸ்வரூபத்தை ப்ரகாசிப்பிக்கின்றதுமான விஷ்ணு என்னும் நாமத்தை, அது புருஷார்த்த ப்ரதமென்று அறிந்து நால்புறமும் ஸங்கீர்த்தநம் செய்யுங்கள்; அதவா விஷ்ணுவே யாவர்க்கும் ஸ்வர்க்கம் அபவர்க்கம் இவற்றையடைய ஸாதநமாக யாகாதி ஸ்வரூபமாயும் யாகத்ரவ்யம், தேவதை முதலான ஆகாரங்களாகவும் பரிணமித்திருக்கும் விஷயத்தை அறிந்த நீங்கள், அந்தப் பகவானை ஸ்தோத்ரம் செய்யுங்கள். ஹே விஷ்ணோ! ஸர்வாந்தராத்மாவா யிருக்கும் ஸ்வாமிந்! உம்முடைய உத்க்ருஷ்டமான ப்ரகாஶஸ்வரூபத்துடன் கூடிய ஜ்ஞாந ஶக்த்யாதிகளை நாங்கள் பஜிக்கின்றோம்."

ருக்வேதம் பஞ்சமாஷ்டகம், ஆறாவது அத்யாயம் 24-வது வர்க்கம், ஏழாவது மண்டலம் 99-வது ஸூக்தத்தின் மந்த்ரங்கள்:—

'பரோ மாத்ரயா தந்வா வ்ருதாந ந தே மஹித்வமந்வஶ்நுவந்தி।
உபே தே வித்ம ரஜஸீ ப்ருதிவ்யா விஷ்ணோ தேவ த்வம் பரமஸ்ய வித்ஸே'॥

" ஹே விஷ்ணோ! அபரிமிதமான, அதாவது, அளப்பதற்கரிதான சரீரத்துடன் கூடி (த்ரிவிக்ரமாவதாரம் செய்யுங்கால்,) வ்ருத்தியான உமது மஹத்வத்தை யாரும் அறிய ஶக்தரல்லர். ப்ருத்வீ முதலாக, உம்முடைய இரண்டு லோகங்களை, அதாவது, ப்ருத்வீ அந்தரிக்ஷம் இவற்றை நாம் அறிவோம். இதன்மேல் உள்ள உத்க்ருஷ்ட லோகங்களைத் தேவனே! நீர்தான் அறிகின்றீர்" (ஆதலால் கண்கட்கு அகப்படாத உமது மஹிமையை யார்தான் அறியவல்லவர்.)

'ந தே விஷ்ணோ ஜாயமாநோ ந ஜாதோ தேவ மஹிம்ந: பரமந்தமாப'।

"ஹே தேவ விஷ்ணோ! உமது மஹிமையினுடைய எண்ணத்தகாத முடிவை, உண்டாகப்போகின்ற ஒருவனும் அறியப் போகின்றானில்லை. உண்டாயிருந்த ஒருவனும் அறிந்தானில்லை" (அதாவது, உமது மஹிமைக்கு அந்தமே இல்லை. ஆதலால் அதை அறிய யாரும் ஶக்தரல்லர்.)

அதற்கடுத்த 100-வது ஸூக்த மந்த்ரங்களில் சிலவற்றை எடுக்கின்றோம்.



'த்ரிர்தேவ: ப்ருதிவீமேஷ ஏதாம் வி சக்ரமே ஶதர்சஸம் மஹித்வா। ப்ர விஷ்ணுரஸ்து தவஸஸ்தவீயாந் த்வேஷம் ஹ்யஸ்ய ஸ்தவிரஸ்ய நாம। வி சக்ரமே ப்ருதிவீமேஷ ஏதாம் க்ஷேத்ராய விஷ்ணுர்மநுஷே தஶஸ்யந்। த்ருவாஸோ அஸ்ய கீரயோ ஜநாஸ உருக்ஷிதிம் ஸுஜநிமா சகார। ப்ர தத்தே அத்ய ஶிபிவிஷ்ட நாம அர்ய: ஶம்ஸாமி வயுநாநி வித்வாந்। தம் த்வா க்ருணாமி தவஸமதவ்யாந் க்ஷயந்தமஸ்ய ரஜஸ: பராகே'॥

"தேவன் (ஸர்வபுருஷார்த்தப்ரதன்) ஶதஸங்க்யா யுக்தமான
ப்ரகாஶங்களுடன் கூடின ப்ருத்வீ முதலான மூன்று லோகங்
களைத் தனது மஹத்வத்தால் மூன்று பாதந்யாஸம் செய்து அளந்
தனர். ஶாஶ்வதனான பகவானுடைய விஷ்ணு எனும் நாமரூபங்
கள் மிகவும் ப்ரகாசிக்கின்றன. ஆகையால் ஶ்ரேஷ்டர்களா யிருக்
கின்ற ஸர்வர்க்கும் ஶ்ரேஷ்டதமனான பகவான் நமக்கு எப்போ
தும் ஸ்வாமியா யிருக்கட்டும்" "அந்த விஷ்ணுவானவர் இந்த ப்ரு
த்வீ முதலான மூன்று லோகங்களையும் அஸுரர்களி னின்று
க்ரஹித்துத் தன்னை ஸ்துதித்த தேவர்களின்பொருட்டு நிவாஸார்த்
தம் கொடுப்பவராய்க்கொண்டு, அவற்றை விக்ராந்தம் செய்த
னர். அந்தப் பகவானை ஸ்தோத்ரம் செய்யும் ஜநங்கள் ஒருவ
ராலும் சலிக்கப்படாதவராகின்றனர்; அதாவது ஐஹிக ஆமுஷ்
மிக ரூபங்களான புருஷார்த்தங்களை அடைந்து நிஶ்சலராகின்
றனர். யாதொரு பகவானுடைய கல்யாணதமமான அவதாரசேஷ்
டிதங்கள் அவற்றை ஸ்மரிப்பவர்க்கும், கீர்த்தநம் செய்பவர்க்கும்
ஶ்ரேஸ்ஸைத் தருகின்றனவோ, அப்படிப்பட்ட விஷ்ணுவான
வர் மனிதன் பொருட்டு விஸ்தீர்ண வாஸயோக்யமாகப் பூமி
யைப் பண்ணினர்."

" ஓ ஶிபிவிஷ்ட! (ரஶ்மிகளுடன் கூடினவனே!) ஸ்வாமீ! உமது விஷ்ணுவெனும் ப்ரக்யாதமான நாமத்தை, ஸ்துதிவிஷயத்தில் அறியவேண்டியவற்றை அறிந்த நான் இப்போது ப்ரகர்ஷேண ஸ்தோத்ரம் செய்கின்றேன். இந்த லோகத்திற்கு மிக்க தூரத்தில் வஸிக்கும் மிகவும் வ்ருத்தரான உம்மை, மிகவும் பாலனான நான் ஸ்துதி செய்கின்றேன்."

---

# ஸ்ரீ அஹோபில ந்ருஸிம்ஹன் விஷயம்.

## ப்ரஹ்லாதன் சரித்ரம்.

ஆசார்யர்களும், தினந்தோறும், ராஜ்யமாகின்ற பலத்தைக் கொடுக்கவல்லதும், சுக்ராசார்யரால் ராஜாக்களின் பொருட்டுச் செய்யப்பட்டதுமான நீதிஶாஸ்த்ரத்தை ப்ரஹ்லாதனுக்குப்போதிப்பித்தார்கள். நீதிஶாஸ்த்ரம் அறிந்தவனாகவும், விநயான்விதனாகவும் ப்ரஹ்லாதனைப் புரோஹிதர் எப்போது நினைத்தார்களோ, அப்போது அவனை ஹிரண்யகஶிபுவிடம் கொண்டுவிட்டு, "உன் புத்ரன் பார்க்கவரால் செய்யப்பட்ட நீதிஶாஸ்த்ரம் நன்றாகத் தெரிந்து கொண்டிருக்கின்றான்" என்றனர். ஹிரண்யகஶிபுவும் புத்ரனை நோக்கி" வ்ருத்தி க்ஷய காலங்களிலும், மற்ற இரண்டு ஸம காலங்களிலும், ராஜாவானவன் மித்ரர் விஷயமாக எப்படி நடக்க வேண்டும்? ஶத்ருக்கள் விஷயத்தில் எப்படி நடக்கவேண்டும்? மத்யஸ்தரிடம் எவ்விதமாக நடக்கவேண்டும்? ஆலோசனை சொல்லும் மந்த்ரிகளிடமும், ராஜகார்யங்களை நிர்வஹிக்கும் அமாத்யரிடமும், இவர்க்குள் ராஜ்யவரும்படி முதலானவற்றைக் கவனிப்பவரிடமும், அந்தப்புரம், மஹாநஸம் முதலியவற்றை விசாரிப்பவரிடமும், சாரரிடமும், ஹிதராகவும், ஶங்கிதராகவு மிருக்கப்பட்ட நகரவாஸிகளிடமும் எவ்விதம் வர்த்திக்கவேண்டும்? யாதேனும் ஓர் காரணத்தால் ராஜவிஶ்வாஸம் குறைந்தவரை அநுகூலப்படுத்தும் விஷயத்திலும், மலைகளிலும் வநங்களிலும் வஸிப்போருடைய வஶீகரண விஷயத்திலும், திருடர், ஶத்ருக்கள் இவர்களை நிரஸிப்பதிலும், நீயறிந்ததை நன்றாகச் சொல். இந்த விஷயங்களிலும் மற்றவற்றுள்ளும் நீ படித்ததை யெல்லாம் சொல். உன் மனத்திலிருப்பதை யறிய நான் விரும்புகின்றேன்" என்றுரைத்தனன். ப்ரஹ்லாதனும், பிதாவின் சரணங்களில் வணங்கி, விநயத்தையே பூஷணமாகக் கொண்டவனாய்க் கைகளைக் கூப்பிக்கொண்டு, சொல்ல ஆரம்பித்தான். "குருக்கள் யாவத்



தையும் எனக்கு உபதேஶித்தனர். இதில் ஸந்தேஹமில்லை. நானும் க்ரஹித்துக்கொண்டேன். ஆனால் எனது அபிப்ராயம், அது ஸாதுவன்று என்பதே. மித்ராதிகளை ஸம்பாதிப்பதில், ஸாம, தான, பேததண்டங்கள் உபாயங்களாகச் சொல்லப்பட்டன. ஆனால் அப்படிப்பட்ட மித்ராதிகளை நான் காண்கின்றேனில்லை. அப்பா! கோபிக்கவேண்டாம். ஸாதிக்கவேண்டியவை யில்லாவிட்டால் அவற்றினிமித்தம் அறியப்பட்ட உபாயங்களால் ப்ரயோஜநமென்ன?"

[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]

𑌦𑍇𑌵𑌾 𑌮𑌨𑍁𑌷𑍍𑌯𑌾𑌃 𑌪𑌶𑌵𑌃 𑌪𑌕𑍍𑌷𑌿 𑌵𑍃𑌕𑍍𑌷 𑌸𑌰𑍀𑌸𑍃𑌪𑌾𑌃 ।
𑌰𑍂𑌪𑌮𑍇𑌤𑌦𑌨𑌨𑍍𑌤𑌸𑍍𑌯 𑌵𑌿𑌷𑍍𑌣𑍋𑌰𑍍𑌭𑌿𑌨𑍍𑌨𑌮𑌿𑌵 𑌸𑍍𑌥𑌿𑌤𑌮𑍍 ।
𑌏𑌤𑌦𑍍𑌵𑌿𑌜𑌾𑌨𑌤𑌾 𑌸𑌰𑍍𑌵𑌂 𑌜𑌗𑌤𑍍𑌸𑍍𑌥𑌾𑌵𑌰𑌜𑌙𑍍𑌗𑌮𑌮𑍍 ।
𑌦𑍍𑌰𑌷𑍍𑌟𑌵𑍍𑌯𑌮𑌾𑌤𑍍𑌮𑌵𑌦𑍍𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌃 𑌯𑌤𑍋𑌯𑌂 𑌵𑌿𑌶𑍍𑌵𑌰𑍂𑌪𑌧𑍃𑌕𑍍 ॥
𑌏𑌵𑌂 𑌜𑍍𑌞𑌾𑌤𑍇 𑌸 𑌭𑌗𑌵𑌾𑌨𑌨𑌾𑌦𑌿𑌃 𑌪𑌰𑌮𑍇𑌶𑍍𑌵𑌰𑌃 ।
𑌪𑍍𑌰𑌸𑍀𑌦𑌤𑍍𑌯𑌚𑍍𑌯𑍁𑌤𑌸𑍍𑌤𑌸𑍍𑌮𑌿𑌨𑍍 𑌪𑍍𑌰𑌸𑌨𑍍𑌨𑍇 𑌕𑍍𑌲𑍇𑌶𑌸𑌙𑍍𑌕𑍍𑌷𑌯𑌃' ॥

"தாத! பரமாத்வான கோவிந்தன் ஸர்வ பூதசரீரியாகவும், வ்யக்தாவ்யக்த ப்ரபஞ்ச ரூபியாகவும், ஜகத்துக்கு ஓர் ஸ்வாமியாகவும் இருக்கையில், மித்ரன், அமித்ரன் என்னும் கதை எப்படியுண்டாகும்? பகவான் விஷ்ணு உம்மிடம் இருக்கின்றார். என்னிடமும் மற்றெங்கு மவர் இருக்கின்றார். ஆதலால், இவன் மித்ரன், அவன் சத்ரு எனும் விபாகம் எப்படிச் செய்யக்கூடும்? ஆனபடியால், ராஜ்யம் முதலிய காணப்பட்ட பொருள் ஸம்பாதநத்துக்கு அநுகூலமான வ்யாபாரங்களை விஸ்தாரமாகச் சொல்லும் நீதிசாஸ்த்ர பரிசயத்தால் போதும். இவை அஜ்ஞாநத்துக்குள் அகப்பட்டவை. தாத! பரம மங்களத்தைக் கொடுக்கும் நிஷ்காம கர்மத்திலும், ஆத்ம வித்யா க்ரஹணத்திலும் யத்நம் செய்யவேண்டும். தாத! அஜ்ஞாநத்தால் அவித்யையை வித்யையாக எண்ணுகின்றான். பாலன் மின்மினிப்பூச்சியை அக்நி யென்று நினைக்கின்றான். எந்த நிஷ்காம கர்மம் பந்தத்தின் பொருட்டாகாதோ அதுதான் கர்மம். எந்த வித்யை மோக்ஷத்தை அடைய உபகரிக்குமோ அதுதான் வித்யை. மற்ற கர்மங்கள் ஆயாஸத்தை மாத்ரம் பலமாக உடையன. மற்ற வித்யைகள் சில்ப வித்யை யொக்கக் கேவலம் சமத்காரத்தில் முடிகின்றன. ஆதலால் இந்த நீதிசாஸ்த்ராதிகளால் உண்டாகும் ஜ்ஞாநம் அஸாரமென்றறிந்து, உத்தமமாக அறியக் கூடியதை நான் நமஸ்கரித்துச் சொல்கின்றேன்; (அதைக்) கேளும். ராஜ்யத்தை யார்தான் சிந்திக்கவில்லை. தநத்தை எவன்தான் அபேக்ஷிக்கவில்லை. ஆகிலும், ஜந்மாந்தர கர்மபலமாக வரப்போகின்ற ராஜ்யத்தையும்



பொருளையும் மனிதர் அடைகின்றார்கள் என்பது ஸித்தம்.
ஷர்கள் அனைவரும் ஐச்வர்ய ப்ராப்தியின் பொருட்டு ப்ரயத்ந
பராகின்றனர். ஆனாலும், ப்ரயத்ந மாத்ரம் ஐச்வர்ய ப்ராப்
திக்குக் காரண மாகாது. அது ஜந்மாந்தர ஸுக்ருதமடியாகத்
தான் வரும். ப்ரயத்நம் செய்யத் திறனற்ற மந்தர்களும், நன்மை
தீமைகளின் விவேகமற்றவரும், சௌர்யமற்றவரும், அந்யாயம்
செய்பவரும், பாக்யபலமாய் வரும் ராஜ்யங்களை யடைகின்றனர்.
ஆதலால் எவன் மஹா ஐச்வர்யத்தை அபேக்ஷிக்கின்றானோ
அவன் புண்ய கர்மங்களைச் செய்ய யத்நிக்கட்டும். மோக்ஷத்தை
அபேக்ஷிக்கின்றவன், பகவான் யாவர்க்கும் அந்தராத்மாவாக இரு
ப்பதையிட்டு, ஸமதர்சநம் செய்ய யத்நிக்கக் கடவன். தேவர்,
மனிதர், ம்ருகங்கள், பக்ஷிகள், வ்ருக்ஷங்கள், ஊரும் ஜந்துக்கள்,
இவை அநந்தனான விஷ்ணுவினுடைய பேதங்களாகத்தோற்றும்
ரூபங்கள். இதை யறிகின்றவனால், ஸ்தாவர ஜங்கம ரூபமான
ஸர்வ ஜகத்தும், பரமாத்மாவுடன் கூடியிருப்பதாகத் தர்சிக்கப்
படவேண்டும். ஏனெனில் இந்தப் பகவான், விஷ்ணுவானவர்,
எல்லா ரூபங்களையும் தரிக்கின்றனர். அநாதியாகவும், பரமேச்
வரனாகவும் இருக்கின்ற அந்தப் பகவான், அச்யுதன், இப்படி யறி
கின்றவனிடம் தயை செய்கின்றார். அவர் ப்ரஸந்நனாகில் ஸர்வ
பாபங்களும் நாசமடைகின்றன." இதைக் கேட்ட ஹிரண்ய
கசிபு மிகச் சினந்து, ஆஸநத்தினின் றெழுந்து புத்ரன் மார்பில்
காலால் உதைத்தான். கையால் கைமேலடித்துக்கொண்டு, உல
கத்தையே கொல்ல இச்சித்தவனைக் கோபத்தை யடக்க முடி
யாமல் கூவினான்! "அடே விப்ரசித்தி! அடே ராஹு! அடே
பலி! இவனை நாகபாசங்களால் கெட்டியாகக்கட்டி உடனே ஸமு
த்ரத்தில் போடுங்கள். பர்வதங்களை மேலே யெறிந்து அவனை
மூடிவிடுங்கள். அப்படிச் செய்யாமல் விட்டால், துராத்மாவான
இந்த மூடன் மதத்தை தைத்யதாநவருள்பட ஸகல லோகங்களும்
அநுஸரித்துவிடும். எங்களால் பலவிதமாய்த் தடுக்கப்பட்டபோ
திலும், இந்தப் பாபி, சத்ருவினுடைய ஸ்தோத்ரத்தைச் செய்கின்

றுன். துஷ்டருடைய பக்ஷத்துக்கே உபகாரம் செய்கின்றுன்." இவ்விதமாக ஹிரண்யகசிபுவின் ஆஜ்ஞையைச் செவியுற்ற தைத்யர் அனைவரும், நாகபந்தங்களால் ப்ரஹ்லாதனைக் கட்டி ஸமுத்ரத்தில் எறிந்தார்கள். இப்படி ப்ரஹ்லாதன் ஸமுத்ரத்தில்விழுந்ததால், அவன் ஹ்ருதயத்தில் ஸர்வலோகங்களுக்கும் ஆதாரனுன பகவான் ப்ரத்யக்ஷமாக இருக்கவே, ஸமுத்ரம் சலித்தது; மிகவும் கலக்கத்தை யடைந்து, நாற்புறமும் கரைகளைத் தாண்டிக் கடல்நீர் பெருகிற்று. இப்படி உலகம் ஸமுத்ர ஜலத்தால் நாற்புறமும் பரவப்பட்டதை ஹிரண்யகசிபு பார்த்துத் தைத்யர்களுக்குக் கட்டளையிட்டான். "தைதேயர்களே! இந்தத் துர்புத்தியை, அநேகம் மலைகளைக் கொண்டு நாற்புறமும் ஸந்தில்லாமல் மேன்மேலும் மூடி, அந்த ஸமுத்ரத்திலேயே அவன் இருக்கும்படிக் கட்டிவிடுங்கள். அக்நியா இவனைக் கொளுத்தவில்லை! ஆயுதங்களா இவனை ஹிம்ஸிக்கவில்லை! பாம்புகளா இவனைக் கடித்துக் கொல்லவில்லை! வாயு, விஷம், அபிசார ப்ரயோகம், மாயைகளின் ப்ரயோகம், இவைகளும் இவனைக் கொல்லவில்லை! உயரத்தினின்று கீழே தள்ளப்பட்டும் இவன் சாவதில்லை! திக்கஜங்களும் இவனை நாசம் செய்யவில்லை! பாலனுனாலும் மிகவும் துஷ்டபுத்தியுடன் கூடினவன். இவன் பிழைத்திருப்பதில் ஒரு ப்ரயோஜனமும் இல்லை. ஆகையால் கடல்நடுவே, மலைகளால் தகையப்பட்டு, ஆயிரம் ஸம்வத்ஸரம் வரையிலும் இவன் இருக்கட்டும். பிறகு தானே ப்ராணனை விடுகின்றுன்" என்றிவ்விதம் அஸுரராஜன் சொல்லவே, தைத்ய தாநவர்கள் மலைகளைப்போட்டு, ஸமுத்ரத்துக்குள் ப்ரஹ்லாதனைத் தகைந்து, அநேகயோஜனைகள் பர்யந்தம் மூடிவிட்டனர். இவ்விதமாக அந்த மஹாமதியான ப்ரஹ்லாதன் ஸமுத்ரத்துக்குள் பர்வதங்களால் மூடப்பட்டவனுய்க் கொண்டு, நித்யம் பகவதாராதநம் செய்யும் ஸமயத்தில், ஏகாக்ர சித்தனுக அச்யுதனை ஸ்தோத்ரம் செய்தனன்.

---

## இதிஹாஸங்களும் அவதார சரித்ரங்களும்.

எல்லாத் தேசங்களிலும், பூர்வகாலங்களில், க்ரந்தங்கள் உத்
பந்நமாகுங்கால், மதஸம்பந்தமாகவே அவை ஜநித்தன. இதற்கு
ஆர்யதேசமும் விலக்கன்று. இதிஹாஸ புராணங்கள் ப்ராஹ்
மணமெனப்படும் க்ரந்தங்களில் ஸ்மரிக்கப்பட்டு இருக்கின்றன.
ப்ராஹ்மணங்கள் வேதங்களில் அந்தர்க்கதமாயிருக்கின்றமையால்,
அவை விவரிக்கும் இதிஹாஸ புராணங்களும், விவரிக்காமல்
அக்காலம் இருந்தனவாகச் சொல்லப்பட்டவைகளும், மதஸம்பந்த
மாகத் தான் நினைக்கப்பட்டிருக்கவேண்டும். வால்மீகியும் வ்யாஸ
ரும் ராமாயண பாரதங்களை லௌகிக க்ரந்தங்களாக வரைந்தார்
எனும் ப்ரமை நம்மவருளும் சிலர் கொண்டுளர். நம்முடைய
கொள்கைகள் மதாந்தரர் விப்லவலிக்க ப்ரகாசிப்பது கஷ்டம்.
மதாந்தரர் ஸம்ஸர்க்கம் நம்மவர்க்கும் விபரீதயோசனைகட்கு
இடம் கொடுக்கின்றது. அக்காலம் வித்வான்கள் லௌகிக கதைக
ளெழுதிப் பொருள் தேடிய காலமன்று. வால்மீகியும் வ்யாஸ
ரும் பணத்துக்கென்று இதிஹாஸங்கள் இயற்றவில்லை. லோகத்
தார்க்கு ச்ரேயஸ்ஸைக் கருதி இவை எழுதப்பட்டுள என்பதை
மறுக்க, அவ்விதமான வீண் ப்ரமையோ, துரபிநிவேசமோ தான்
ஹேதுவாகும். ராமாயணத்தினின்று ஸ்ரீராமனையும், பாரதத்தி
னின்று ஸ்ரீக்ருஷ்ணனையும், விலக்கிவிட்டால், ஜீவன் நீங்கிய சரீ
ரங்களென அக்ரந்தங்கள் விளங்கும். மநுஷ்யர்க்கு ச்ரேயஸ்
ஸுண்டாக ராமனும் க்ருஷ்ணனும் காரணபூதரென்று கொள்ளா
மல், இக்ரந்தங்களை மஹாகவிகள் செய்திரார். அன்று முதல்
ஸம்ஸ்க்ருதத்திலும், மற்ற பாஷைகளிலும், கவிகள் இந்த இரண்டு
மஹாபுருஷர்களை ஸ்மரித்தே ப்ராயேண க்ரந்தங்கள் எழுதினர்க
ளாகில், அவர் கதைகளை விஸ்தாரமாக ப்ரகாசிப்பிக்கும் இதி
ஹாஸங்களை இயற்றினவர் லௌகிக கதைகளைச் செய்தனர்களென்
பது அஸம்பாவிதம்.

ராமக்ருஷ்ணுதிகளைப்பற்றி இந்த க்ரந்தங்கள் ஆதியில் எழு
தப்படவில்லை யென்பது சிலர் கக்ஷி. எழுதப்பட்டிருந்த போதி

லும், அவர் அவதாரபுருஷர்களென, முதலில் எழுதப்பட்டபோது இக்ரந்தங்கள் காட்டவில்லை யென்பது மற்ருேர் கக்ஷி. இக்கக்ஷியை ஆதரிக்கின்றவர்களுள், சில வைஷ்ணவர்கள் இவ்விதமாக இதிஹாஸங்களை மாற்றிவிட்டார்கள் என்பர். ஏன் அப்படிச் செய்தாரென்ருலோ, தமது மதத்தை வ்ருத்திசெய்யும் பொருட்டு அப்படிச் செய்தார்கள் என்று சொல்வர். இந்தயோசனைகள் ஸம்ஸர்க்க தோஷத்தால் உண்டாகின்றன.

ராமனும், க்ருஷ்ணனும் விஷ்ணுவின் அவதாரமென்று, சைவரும் ஒப்புக்கொள்கின்ருர்கள். இதற்கு ஸமாதாநம், வைஷ்ணவர்கள் சொல்வதை அவர் அஜ்ஞாநத்தால் ஒப்புக்கொண்டனர் என்று உதிக்கக்கூடும்.

ஆனல், ராமக்ருஷ்ணர்களை விஷ்ணுவின் அவதாரமென்பதால் விஷ்ணுவுக்கு ஏற்றமோ, ராமக்ருஷ்ணர்களுக்கு ஏற்றமோ? எனக்கேட்டால், நூதந கக்ஷிக்காரர்கள் என் சொல்வரோ? இதற்கு ஸமாதாநம் சொல்ல அவற்கு இசையாதெனக் கருதுகின்ருேம்.

ருக்வேதத்தில் சில விஷ்ணுஸூக்தங்களை அந்யத்ர மொழிபெயர்த்துக் காட்டினேம். அவை பகவானுடைய த்ரிவிக்ரமாவதாரத்தைப் பற்றியிருக்கின்றன. ஆயினும், அவதாரநிலையிலும், பரஸ்வருபத்திலும், விஷ்ணு ஸர்வேச்வரன் என்பது அந்த ஸூக்தங்களால் வ்யக்தமாகின்றது. ருக்வேதத்தில், ஒவ்வொரு தேவதையையும் ப்ரசம்ஸிக்குமளவில், பரமேச்வரனுடைய திவ்ய தர்மங்களை, அவர்விஷயத்தில் வ்யபதேசம் செய்யப்பட்டிருக்கின்றது. இந்த ப்ரசம்ஸை யெல்லாம் அந்தர்யாமி பரமென்று வேதாந்தத்தில் நிஷ்கர்ஷிக்கப்பட்டிருக்கின்றது. இந்த நிஷ்கர்ஷை விஷ்ணுவிஷயமாகப் பொருந்தாதோ வென்ருல், பரமஸ்தாநம் பகவானுடையதென்று சொல்லப்பட்டபடி மற்றெந்த தேவதையைக் குறித்தும் சொல்லப்படவில்லை. கடோபநிஷத்திலும் பரமப்ராப்யம் வைஷ்ணவம் பரமபதம் என்று கண்டோக்தியாக விளங்குகின்றது. த்ரிவிக்ரமத்வம் பகவானைத்தவிர மற்றெந்தத் தேவர்க்கும் சொல்லப்படவில்லை. இன்னும், பகவான் இந்த்ராதி தேவதைகட்கு ஸஹாயமாக இருக்கும்படி, உபேந்த்ராவதாரம் செய்ததாக ஏற்படுகின்றதேயன்றி, ஸ்வார்த்தமாக அவ்விதம் அவர்



அவதரிக்கவில்லை என்பது ஸ்பஷ்டம். பகவானுக்கு யாகங்களில் இதர தேவதைகளைக் கேவல அந்வயம் இலது. யாகமே பகவானுடைய ரூபமென்று, 'யஜ்ஞோ வை விஷ்ணு:,' எனும் வேத வாக்யம் ப்ரஸித்தமாய்ச் சொல்கின்றது. அதுவுமன்றி, தேவதைகளுக்குள் உபேந்த்ரனை விஷ்ணுவானவர் உத்க்ருஷ்டரென்றும், அக்நி அவமர் என்றும் வேதவாக்யத்தாலே ஏற்படுகின்றது. இது பகவானுடைய பரஸ்வரூபத்தை உத்தேசித்து ஏற்பட்டிருக்க வேண்டும். இன்னும், நாம் கேட்டவரையில், பூர்வமீமாம்ஸையில் தேவதாகாண்டத்தின் அவஸாநத்தில், ஸர்வ தேவர்களும் பகவத்விபூதிகளென்று ஸ்பஷ்டமான நிஷ்கர்ஷம் உளதென்று தெரிகின்றது.

ஆதலால் பகவான் ராமக்ருஷ்ணவதாரங்களைச் செய்தாரென்பதால் அவர் லோகோபகாரமாக அவ்வண்ணம் செய்தாரென்று ஏற்படுமேயன்றி, இவ்வவதாரங்களால் ஓர் அதிசயத்தை அடைந்தாரென்று சொல்லப்பொருந்துமோ? ஜந்மாதிவிகார

ரூப ஸ்வா கஷ்டிரிதேர ।வேஷா தஸ்ய ஹ்ரேயஸ் ஹ்ராஸீ

ஸ்வஹ்ரஸாத்ரிகா । என்கிற ப்ரமாணப்படிப் பகவான் அகர்மவச்யனுயிருந்தும், லோகோபகாரநிமித்தம் அவதாரங்கள் செய்து திவ்ய சேஷ்டிதங்களை நடப்பிக்கின்ருன். ஆகவே விஷ்ணுவுக்கு ஏற்றம் அவதாரங்களால் உண்டாகமாட்டாது. ராமக்ருஷ்ணாதிகளுக்குப் பகவதவதாரத்வத்தை ஸ்மரிப்பதால் அவர்க்கு ஏற்றமுண்டாகின்றதெனக்கூடும். அப்படியானுல், மற்ற எல்லா அரசர்களை விட, இவர் விஷயத்தில் பகவதவதார சங்கை உதிப்பானேன்? மாந்தாதா, புருகுத்ஸன், யயாதி, சசபிந்து, ஸகரன், பகீரதன், அம்பரீஷன், மருத்தன், கார்த்தவீர்யார்ஜுநன், திலீபன் தசரதன், யுதிஷ்டிரன் முதலானவர்கள் சக்ரவர்த்திகள், இன்னும் அநேக ராஜர்கள் மஹா பராக்ரமசாலிகளாயிருந்தனர். இப்படியிருக்க ராமக்ருஷ்ணாதிகளைப் பற்றி மாத்ரம் பகவதவதார விச்வாஸம் ஜநிப்பானேன்? ஆலோசிக்கவல்லவர் இந்த விஷயத்தில் குதர்க்க யோசனை செய்யமாட்டார்கள். பகவத் குணங்களையும், அதிமாநுஷ சேஷ்டிதங்களையும், அந்யத்ர காணுதவற்றை அவரிடம் கண்டுதான், பெரியோர் அவ்வண்ணம் நிச்சயம் செய்தனர்.

ஜந்மா வெஷ் ஸோதாநா ராமே ஸ்தஹ்யராக்ஷா வஸிஷ்டர்ஷ

[illegible]' எனும் வண்ணம், பெரியோர்தான் அதை யறியவல்லவர். பெரியோர் மூலமாகத்தான் மற்றோர் அறியக்கூடும்.

ராமக்ருஷ்ணாதிகள் இவ்வுலகில் இருந்த காலத்திலேயே அவருடைய அவதாரவிஷய நம்பிக்கை ஜனங்களுக்குள் இல்லை யென்று காரணமின்றிச் சொல்வர். இப்படிச் சொல்பவர், வேதங்கள் புருஷக்ருதமென்று எண்ணி, அவற்றின் பாகங்கள் பின்னகாலங்களில் உண்டானதாய் வாதிக்கின்றனர். இது இப்படி இருந்தால், ராமக்ருஷ்ணாதிகள் காலத்தின் பிறகும், ப்ராஹ்மணங்கள் எழுதப் பட்டதாய் ஏற்படுகின்றபடியால், அவருடைய அவதாரவிஷயம் வாஸ்தவமாகில், அவற்றுள் கண்டிருக்கவேண்டும் என்பர். அப்படிக் கில்லாமையால், அவதாரவிஷயமான கதைகளைப் பிற்காலத்தில் உண்டாக்கினார்கள் என்று சொல்லுவார்கள். இந்த வாதத்தை ஒப்புக்கொண்டாலும், ப்ராஹ்மணங்கள் ஸ்வவிஷயங்களைக் காட்டிலும் அந்யவிஷயங்களை ஸ்மரிப்பானேன்? அவற்றின் விஷய பர்யாலோசனையில், ஸர்வேச்வரனுடைய அவதார விஷயம் ஸந்தர்ப்பம் ஆக மாட்டாதே. ச்ருதப்ரகாசிகையில் எழுதப்பட்டபடி, '[illegible]' (வேதம் தர்சபூர்ணமாஸ ப்ரகரணத்தில் வாஜபேயத்தை ஸ்துதிக்காது, கர்மப்ரகரணத்தில் ப்ரஹ்மத்தை ப்ரதிபாதிக்காது, ப்ரதிபாதிக்க இச்சித்த விஷயத்தைக் குறித்து அதிவாதமும் செய்கின்றது.) ஆதலால் ராமக்ருஷ்ணாதிகள் ஸமகாலத்தில் அவர் பரமேச்வரனுடைய அவதாரபுருஷர்கள் எனும் விச்வாஸம் இல்லை யென்பதற்குக் காரணமில்லை. பரம்பராகதமான விச்வாஸமானது பாகவதர்க்குப் பகவதநுபவம் செய்ய மிகவும் உபகாரமாயிருப்பதையும், லோகத்தார்க்கு மஹா ச்ரேஸ்காரணமா யிருப்பதையும் அறிந்தும், அதை நிராகரித்தல் லோகஹிதமென்று எவ்வண்ணம் ப்ரமிக்கக்கூடும்?

ஸ்ரீ:

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

எம்பெருமானார் திருவடிகளே சரணம்.

# ஸ்ரீமந்நிகமாந்த மஹாதேசிகன் அருளிச்செய்த

# அதிகரண ஸாராவளியின்

# மணிப்ரவாள வ்யாக்யாந

# அவதாரிகை.

[illegible] ॥

சுருதிமுடித்தேசிகனார் சொற்றேனிற் சுரும்பாகக்
கருதியெழுங் காதலுடை யண்ணங்கராசிரியன்
கருதரிய வதிகரணசாராவளிப் பொருளைத்
தெரிய வுரைசெயலுற்றான் சிரியேன்மின் சீரியரே.

* இமவத்தந் தொடங்கி இருங்கடலளவான இப்பரத கண்டத்தில் ப்ரஸித்தமான மதங்கள் ஆறு; நையாயிகமதம், வைசேஷிகமதம், ஸாங்க்யமதம், யோகமதம், மீமாம்ஸகமதம், வேதாந்திமதமென அவை வழங்கப்பெறும். வேதாந்த சாஸ்த்ரம் ப்ரஹ்ம மீமாம்ஸை யெனப்படும். ஸகல ஸந்மதங்கட்கும் மூலம் அபௌருஷேயமான வேதமேயாம். அவ்வேதந்தன்னில், கர்மகாண்டமென்றும் ப்ரஹ்மகாண்டமென்றும் இருபிரிவுகள் உண்டு. அவற்றுள், கர்மகாண்டமாகிய பூர்வபாகத்தில் பசு புத்ர வ்ருஷ்டி அந்ந ஸ்வர்க்காதி ஐஹிகாமுஷ்மிக பலன்களுக்கு ஸாதந

மாகவல்ல கர்மங்கள் அங்கோபாங்கங்களுடன் நிரூபிக்கப்பட்டுள்ளன. இவ்வகைக் கர்மகாண்டத்தில் பலவிடங்களில் பூர்வோத்தர விரோதமும் அபார்த்தங்களும் ஆபாதவுணர்ச்சியையே இயற்கையாகவுடைய மாந்தர்கட்குத் தோற்றக்கூடுமாதலால், ஜைமினி காசக்ருத்ஸ்நர் என்னும் முனிவரிருவரும் ந்யாயஸஞ்சாரம் பண்ணி அர்த்தத்தை நிர்ணயித்தனர்; அந்த விசாரமே கர்மமீமாம்ஸை யெனப்படும். இதனை விசேஷமாக மீமாம்ஸையென்றே உலகம் வழங்கும். வேதார்த்தங்களை ஸம்சய விபர்யயமற அறிதற்கு இந்த மீமாம்ஸையிற் கூறப்பட்டுள்ள ந்யாயங்களின் உணர்ச்சி முக்ய ஸாதநமாம். அந்த ந்யாயங்களை உணரப்பெறுதார் வேதத்தின் உண்மைப்பொருளை உணரப்பெறுர். மேற்கூறிய மீமாம்ஸையில், ஜைமினி மஹர்ஷியால் செய்யப்பட்டவை பன்னிரண்டு அத்யாயங்கள்; காசக்ருத்ஸ்ந மஹர்ஷியால் செய்யப்பட்டவை நான்கு அத்யாயங்கள். இது, தத்வரத்நாகரமென்னும் க்ரந்தத்தில் ஸ்ரீபராசரபட்டர் அருளிச்செய்தபடியை அடியொற்றிய பாகுபாடு. வ்ருத்தி க்ரந்தத்தில், பதினாறு அத்பாயங்களும் ஜைமினி மஹர்ஷியாற் செய்யப்பட்டவை யென்றுரைக்கப்பட்டுள்ளது. இவ்விரண்டு க்ரந்தங்கட்கும் பரஸ்பர விரோதமில்லையோ வென்னில்: இவ்விசாரம் இவ்வதிகரண ஸாராவளியில்தானே "வ்ருத்தௌ ஷோடஶக: ஜைமிநிப்ரவிததயா. ஷோடஶாத்யாய்யவாப்தா" என்னும் பதினைந்தாம் ஶ்லோகத்தில் ப்ரஸக்தமாயிருப்பதனால், அதன் உரையில் சிறிது விரித்துரைப்போம். நிற்க.

மேற்கூறிய பதினாறு அத்யாயங்களில் பன்னிரண்டு அத்யாயங்கள் மாத்ரமே இப்போது ப்ரஸித்தமாயுள்ளவை. அவற்றிற்கு, ப்ரபாகரர், பாட்டர், முராரிமிஸ்ரர் என்னும் மூவர் வெவ்வேறு வகையாக வ்யாக்யாநங்கள் செய்தனராதலால் மீமாம்ஸகமதம் மூன்று வகையாய்ப் பிரியலுற்றது.

இனி, ப்ரஹ்ம பாகமென்பது உபநிஷத்து. இதனையே வேதாந்தமென்பர். கர்மகாண்டத்திற் கூறப்பட்ட ஆராதநரூப ஸகல கர்மங்களுக்கும் ஆராத்ய தேவதையான ப்ரஹ்மத்தின் ஸ்வ



ரூப ரூப குண விபூதிகளும், மோக்ஷ தத்ஸாதநாதிகளும் நிரூபிக்கப்படுவது வேதாந்தத்தில்.

அத்தகைய வேதாந்தத்தின் பொருளும் ந்யாய ஸஞ்சாரமின்றி அறிவரிதாதலால் லோகாநுக்ரஹார்த்தமாக ஸ்ரீமந்நாராயணாம்ஶ ஸம்பூதரான வ்யாஸ மஹர்ஷி ஶாரீரகமென்னும் ப்ரஹ்ம மீமாம்ஸையைச் செய்தனர். இதனை ப்ரஹ்மஸூத்ரமென்றும் வ்யாஸஸூத்ரமென்றும் வழங்குவர். இது நான்கு அத்யாயங்களையுடையது.

அவற்றுள், முதல் அத்யாயத்தில், ஸர்வஶ்ருதி வாக்யங்களையும் விசாரித்து ப்ரஹ்மமே ஜகத்காரணமென்றும், ப்ரக்ருதி ஜீவர்களுக்கு அந்த ஜகத்காரணத்வம் ஸம்பவிக்கமாட்டாதென்றும் நிஷ்கர்ஷிக்கப்பட்டது.

இரண்டாம் அத்யாயத்தில், ப்ரஹ்மத்திற்கு ஜகஜ்ஜந்மாதி காரணத்வம் ஶ்ருதிகளாற் சொல்லுமிடத்தில் வரும் யுக்திவிரோதங்களைப் பரிஹரித்து, பரமாணுக்களுக்கு ஜகத்காரணத்வம் சொல்லுகிற நையாயிக பௌத்த ஜைநாதி மதங்களில், யுக்தி விரோதங்கள் அளவற்றன வென்றும், வேதவிருத்த மதங்கள் அனைத்தும் பரிக்ரஹிக்க வொண்ணாதவை யென்றும் ஸ்தாபிக்கப்பட்டது.

மூன்றும் அத்யாயத்தில், தத்வத்ரய விசாரமும், கர்ம ஜ்ஞாந பக்தி ஸ்வரூப நிரூபணமுஞ் செய்யப்பட்டது.

நான்காம் அத்யாயத்தில், மோக்ஷஸ்வரூபம், அர்ச்சிராதிகதி ஸ்வரூபம் முதலியன கூறப்பட்டன. இந்த வேதாந்த ஶாஸ்த்ரத்திற்கு முக்யமாகத் தத்வ ஹித புருஷார்த்த நிரூபணத்தில் நோக்கு.

இப்படிப்பட்ட ப்ரஹ்மமீமாம்ஸைக்குப் பராசராத்மஜரான வ்யாஸருடைய ப்ரஶிஷ்யரான போதாயநர், லக்ஷக்ரந்தங்களுக்கு அதிகமாக எழுதின வ்ருத்தி யென்னும் வ்யாக்யாநத்தைப் பூர்வர்கள் ஆறுபதினாயிரம் க்ரந்தமாகச் சுருக்கியருளினர். பின்பு இக் கலியுகாரம்பத்தில் டங்கர், த்ரமிடர், குஹதேவர் என்னும் மூன்று

முனிவர், அந்த ஶாரீரக் மீமாம்ஸா சாஸ்த்ரத்திற்கு ப்ர்வர்த்தகராயினர். அம்மூவருள் டங்கரென்பவர், விஸ்தீர்ணமான போதாயந வ்ருத்தி க்ரந்தத்தை ஆறுயிர வாக்யமாக ஸங்க்ரஹித்தார். த்ரமிடர் என்பவர் அந்த வாக்யக்ரந்தத்திற்குப் பாஷ்யம் செய்தார். குஹதேவரென்பவர் அந்த பாஷ்யத்திற்கு டீகை செய்தார். இவர்கள் ஸ்ரீவிஶிஷ்டாத்வைத ஸித்தாந்தத்திலும் விஷ்ணுபாரம்ய ப்ரதிபாதநத்திலும் ஊற்றமுடையரென்பதை இவர்களுடைய க்ரந்தங்களும் ஸ்ரீபாஷ்ய ஶ்ருதப்ரகாசிகாதிகளும் நன்கு புலப்படுத்தும். நிற்க.

கௌடபாதர், சங்கராசாரியர், வாசஸ்பதி மிஶ்ரர் முதலானர் ஜகத்ப்ரஹ்மாத்வைதத்தையும் ஜகந்மித்யா த்வத்தையும் சொல்லத் தொடங்கினர். இவர்களே அத்வைதிகள். இவர்களில் சங்கராசார்யர் ப்ரஹ்மமீமாம்ஸைக்கு அத்வைதபரமான பாஷ்யம் செய்தார். அங்ஙனமே தஶோபநிஷத்துக்களுக்கும் பகவத்கீதைக்கும் ஸஹஸ்ரநாமாத்யாயத்திற்கும் பாஷ்யஞ் செய்தார். பட்டபாஸ்கரர், யாதவப்ரகாஶர் முதலானர் சிலர் அத்வைதவாதிகளாயினும் சங்கராசார்யருடைய கருத்தைப் பின்செல்லாமல் வேறு வேறு விதமாக அத்வைதாபிப்ராயத்தை வர்ணித்து, முற்கூறிய ப்ரஹ்மஸூத்ராதிகளுக்குப் பாஷ்யங்கள் செய்துள்ளார். இவர்கள் மாயாவாதிகளல்லர்; உபாதிவாதிகள். ஜகத்து ஸத்யமென்பர். இப்படிச் சங்கரமதம், பாஸ்கரமதம், யாதவப்ரகாஶ மதமென்று அத்வைதஸமயம் மூவகையாகப் பிரிவுற்றது.

இப்படிப்பட்ட அத்வைதிகளால், முற்பட்ட போதாயநாதிகளுடைய க்ரந்தங்களுக்கு விருத்தமாகப் பல க்ரந்தங்கள் எழுதப்பட்டு மாயாவாத மோஹ சூர்ணத்தினுல் மயக்கப்பட்டவளவில், ஸ்ரீமந்நாதமுனிகள் "ந்யாயதத்வம்" என்கிற ஶாஸ்த்ரத்தையும், ஸ்ரீ ஆளவந்தார் "ஸித்தித்ரயம்" என்கிற க்ரந்தத்தையும் அருளிச்செய்து அத்வைதவாதத்தை நிராகரித்து ஸ்ரீ விஶிஷ்டாத்வைத ஸித்தாந்தத்தையும், ஸ்ரீமந்நாராயண பாரம்யத்தையும் ஸ்தாபித்தருளினர்கள். பின்பு, * ஆரணநூல் வழிச் செவ்வையழித்திடு மைதுகர்க்கோர் வாரணமாய் அவர்வாதக் கதலிகள்



மாய்க்கும் பிரானுகிய இராமாநுசமுனி இத்தலத்துதித்து, போதாயநாதி மஹர்ஷிகள் செய்த க்ரந்தங்களும், நாதயாமுநமுனிகள் அருளிச்செய்த க்ரந்தங்களும், மிக்க விரிவும் மிக்க சுருக்கமுமுடையனவா யிருப்பதைக்கண்டு, ஸர்வ லோகாநுக்ரஹார்த்தமாக அதிக விரிவும் அதிக சுருக்கமுமின்றி ப்ரஹ்ம மீமாம்ஸைக்கு ஸ்ரீபாஷ்ய மென்னும் வியாக்யாநம், ஸ்ரீ கீதாபாஷ்யம், ஸர்வோபநிஷதர்த்த ஸங்க்ரஹமான வேதார்த்த ஸங்க்ரஹம் முதலான க்ரந்தங்களையும் அருளிச்செய்தருளினர்.

இப்படி * அறுசமயச் செடியதனை அடியறுத்து, அடர்ந்து வருங் குதிட்டிகளை அறத்துறந்து, செறுகலியைச் சிறிதுமறத் தீர்த்துவிட்டு, மறையதனிற் பொருளனைத்தும் வாய்மொழிந்தருளின எம்பெருமானருடைய தர்ஶநம் ஸ்ரீ விஶிஷ்டாத்வைதமென்றும், ஆநந்ததீர்த்தருடையமதம் த்வைதமென்றும், சங்கராசார்யருடைய மதம் அத்வைதமென்றும் வழங்கப்பெறும்.

இனி, விஶிஷ்டாத்வைத ஸித்தாந்த ஶப்தத்திற்குப் பொருளென்? இந்த ஶப்தத்தினுல் ராமாநுஜ தர்ஶநத்தை வழங்குவதற்கு அடியென்? என்னில், சிறிது சொல்லுகிறோம்: ப்ராமாணிகமாகப் பரிக்ரஹிக்கப்பட்ட அர்த்தம் - ஸித்தாந்தமெனப்படும்; "[illegible]" என்று ந்யாயபரிசுத்தியிற் கூறப்பட்டதிறே. ந்யாய ஸாரத்திலும், "[illegible]" என்று கூறப்பட்டது. [illegible] - த்வைதம் - இரண்டா யிருத்தல்; பேதமென்றபடி. [illegible] - அத்வைதம்; அபேதமென்றபடி. விஶிஷ்டஸ்ய [illegible] - விஶிஷ்டாத்வைதம்; தன்னில் வேறுபட்ட சேதநா சேதநங்களனைத்தையும் விஶேஷணமாக வுடைய ப்ரஹ்மம் ஒன்றே தத்வமென்கையாலே ராமாநுஜமதம் விஶிஷ்டாத்வைத ஸித்தாந்தமென வழங்கப்படாநிற்கும். ஶங்கராதிகள் ப்ரஹ்மமொன்றையே தத்வமாகக்கொண்டு மற்றுள்ள அனைத்தையும் பொய்யெனக் கொள்ளுகையாலே அவர்களுடைய மதம் அத்வைத ஸித்தாந்தமெனு

வழங்கப்படாநிற்கும். ஆநந்ததீர்த்தாதிகள், ஜகத்துக்கும் ப்ரஹ்மத்திற்கும் ரக்ஷ்ய ரக்ஷக பாவஸம்பந்தத்திற்காட்டில் வேறுபட்டதாய் ஐக்ய வ்யபதேஶ யோக்யமானதொரு ஸம்பந்த விசேஷத்தை அங்கீகரியாமையாலும், அந்த ஜகத் ப்ரஹ்மங்கள் ஸத்யமென்று இசைகையாலும், அவர்களுடைய மதம் - த்வைத ஸித்தாந்தமென வழங்கப்படாநிற்கும்.

ராமாநுஜ ஸித்தாந்தத்தில், சிதசிதாத்மகமான ப்ரபஞ்சத்திற்கும் ப்ரஹ்மத்திற்கும் ஸத்யத்வத்தை அங்கீகரித்து, அவற்றுக்கு சரீரசரீரி பாவஸம்பந்தங் கொள்ளுகையாலே, உலகத்தில் சரீரத்திற்கும் ஜீவாத்மாவுக்கும் பரஸ்பரம் அத்யந்த பேதமிருந்தாலும், [illegible] என்றாற்போன்ற ஏகத்வ வ்யவஹாரம் காணப்படுவதுபோலவே இங்கும் சித்தையும் அசித்தையும் சரீரமாகவுடைய ப்ரஹ்மத்திற்கு ஐக்யவ்யபதேசமும் பரஸ்பரம் ஸ்வரூபபேதமும் பொருந்தத் தட்டில்லை. இவ்வர்த்தம் ந்யாய ஸித்தாஞ்ஜநத்தில் விரித்துரைக்கப்பட்டது [illegible] என்று. இத்தால், விஶிஷ்டாத்வைத சப்தார்த்தமும் அர்த்தாத் விவரிக்கப்பட்டதாயிற்று.

இனி, இத்தர்ஶநத்தில், மதாந்தரவாதிகள் அங்கீகரியாத நித்யஸூரி ஸத்பாவம் முதலிய பல அர்த்தங்கள் கிடக்க, அவற்றையிட்டு நம் தர்ஶநத்தை நிரூபியா தொழிவானென்? என்னில், சொல்லுகிறோம். மதாந்தரவாதிகளால் அங்கீகரிக்கப்படாதனவாய் ஸித்தாந்தத்தில் அங்கீகரிக்கப்பட்டுள்ள அர்த்தங்களில் ஶரீரஶரீரி பாவஸம்பந்தமாகிற இவ்வர்த்தமே ப்ரதாந ப்ரதிதந்த்ரமாகையாலே மற்ற அர்த்தங்களை அப்ரதாநமென்று விட்டு, ப்ரதாநமான இவ்வர்த்தந் தன்னையிட்டு நிரூபிக்கிறபடி. விஶிஷ்டாத்வைத மென்ற சொற்போக்கில் தோன்றுவது - ஶரீரஶரீரிபாவ ஸம்பந்தமிறே.



இனி, ப்ரதாநப்ரதி தந்த்ரமாவதென்? என்னில்; [illegible] என்கிற வ்யுத்பத்தியாலே, இதர மதங்களுக்குப் புறம்பாய், அந்தந்த மதங்களுக்கு உள்ளீடான அர்த்தம் ப்ரதிதந்த்ர மெனப்படும்; [illegible] என்றதிறே ந்யாயஸாரத்தில். இப்படி ப்ரதிதந்த்ரமான அர்த்தங்கள் நம் தர்ஶநத்தில் நித்யஸூரி ஸத்பாவம் முதலியவை ஆகின்றன. அவற்றுள் இந்த ஶரீரஶரீரி பாவ ஸம்பந்தம் ப்ரதாநமா யிருகையாலே இது ப்ரதாந ப்ரதிதந்த்ர மெனப்படும்.

இனி, இந்த ஸம்பந்தத்திற்கு மற்ற அர்த்தங்களிற் காட்டில் ப்ராதாந்யமாவதென்? எனில்: வேதங்களனைத்தினுடையவும் உண்மைப்பொருளை உணர்த்துகையும் ஸர்வவாதி விஜயத்திற்குக் காரணமா யிருக்கையு மாய்த்து இதற்கு ப்ராதாந்யம்.

[illegible]

என்று ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரத்தில் ப்ரதாநப்ரதிதந்த்ராதிகாரத்தின் முதலிலுள்ள காரிகையும்,

[illegible]

என்று முடிவிலுள்ள காரிகையுமிங்கு அநுஸந்திக்கத் தகும்.

“इत्येवं तत्त्वभेदं प्रवदति भेदश्रुतिर्यो
विशिष्टैक्यादैक्यश्रुतिरविवादाय समवति ।
जीवाद्यैर्नाथसम्बन्धविधं घटकश्रुतिः
निर्दोषात्मार्थकैः श्रुतिसिद्धावधानैः प्रणिधये ॥”

*[ஸங்கல்ப ஸூர்யோதயம்.]

என்கிற ஶ்லோகத்திலே, ப்ரதாநப்ரதிதந்த்ரமென்று இங்கு விரிக்கப்பட்ட அர்த்தம் வேதங்களனைத்தினுடையவும் உண்மைப்பொருளை உணர்த்தும் வகை உரைக்கப்பட்டுள்ளது.

இதன் கருத்து:—“पृथगात्मानं प्रेरितारं च मत्वा” “ज्ञाज्ञौ द्वावजावीशनीशौ” “नित्यो नित्यानां चेतनश्चेतनानामेको बहूनां यो विदधाति कामान्” என்றிவை போல்வன பேதஶ்ருதிகளென்றும், “तत्त्वमसि श्वेतकेतो” “सदेव सोम्येदमग्र आसीदेकमेवाद्वितीयम्” “सर्वं खल्विदं ब्रह्म” என்றிவை போல்வன அபேதஶ்ருதிகளென்றும், “यस्यात्मा शरीरम्” “यस्य पृथिवी शरीरम्” “य आत्मनि तिष्ठन्” என்றிவை போல்வன கடகஶ்ருதிகளென்றும் பெயர்பெறும்; இம்மூன்று வகைச் சுருதிகளுள் பேதஶ்ருதியை ஔபசாரிகமாகவாதல், பொருட் பொருத்த மற்றதாகவாதல் கொள்ளக்கடவர்கள் அத்வைதிகள். அபேத ஶ்ருதியை அங்ஙனே கொள்ளக் கடவர்கள் த்வைதிகள். கடகஶ்ருதியையோ வென்னில், த்வைதிகள் அத்வைதிகளென்ற இருவகுப்பினரும் அங்ஙனே கொள்ளக்கடவர்கள். இத்தால், அத்வைதிகள் அபேத ஶ்ருதியையும், த்வைதிகள் பேத ஶ்ருதியையுமே ஸ்வாரஸமாக நிர்வஹிக்கக்கடவர்கள் என்றதாயிற்று.

இனி, நம் விஶிஷ்டாத்வைத ஸித்தாந்தத்திலோ வென்னில்: உலகத்திற் காணும் ஶரீரஶரீரி ந்யாயத்தாலே, சரீரத்திற்கும் சரீரிக்கும் பரஸ்பரம் பேதம் அநுபவஸித்தமாகையாலே அவ்வகையான பேதத்தை பேதஶ்ருதிகள் போதிக்கின்றன வென்



றும், “अद्वितीयः” என்றாற்போலே விஶிஷ்டஶரீரி ஒன்றாகையாலே அங்ஙனொத்த ஐக்யத்தை அபேதஶ்ருதிகள் உணர்த்துகின்றன வென்றும், இப்படிப்பட்ட ஸம்பந்தத்தை கடகஶ்ருதிகள் வற்புறுத்தாநின்றன வென்றுங் கொண்டு மூவகைச் சுருதிகளும் முக்கியங்களாகவும் மிக்க பொருட்பொருத்த முற்றனவாகவும் நிர்வஹிக்கப்படும்.

“यामासाद्य सूक्ष्मा यतिनृपति सूक्तिर्विजयते
समाधत्ते नानाविध संवादित विवक्षिः श्रुतिगिराम् ।
समयात्मा नाना विवक्षित सङ्गतक्षम कोलाहलहत
त्रिवेदी निर्वेदं प्रशमयति विनोदप्रणयिनी ॥”

என்று யதிராஜஸப்ததியில் ஸ்ரீ தேசிகன் அருளிச்செய்தமை இங்கு நோக்கத்தக்கது.

[त्रिवेदीत्यादि.] त्रयाणां वेदानां समाहारः – த்ரிவேதீ,—பேதஶ்ருதி, அபேதஶ்ருதி, கடகஶ்ருதி, என்று மூன்று வகைப்பட்ட வேதபாகங்களின் திரளுக்கு த்வைதிகளாலும் அத்வைதிகளாலு முண்டாக்கப்பட்ட வருத்தத்தை விநோதமாகவே ஒழிக்கவற்று எம்பெருமானாருடைய ஸ்ரீ ஸூக்தியென்றபடி.

ஆகவிப்படி, ஸர்வஶ்ருதிகளின் முக்யமான அர்த்தத்தை முதலிக்குந் தன்மையாலும், வாதி விஜயத்திற்கு உறுப்பாந் தன்மையாலும் சரீரசரீரிபாவ ஸம்பந்தம் நம் தர்ஶநத்திற்கு ப்ரதாந ப்ரதிதந்த்ரமென்கைக்கிடமாயிற்று. “प्रायेण व्यपदेशा भवन्ति” என்கிற ந்யாயத்தாலே, அந்த ஸம்பந்தத்தை உணர்த்த வல்ல விஶிஷ்டாத்வைத ஶப்தத்தாலே நம்முடைய தர்ஶநம் வ்யபதேஶிக்கப்பெற்றது.

இங்கே சிலர், ஸூக்ஷ்ம சிதசித்விஶிஷ்ட ப்ரஹ்மத்திற்கும், ஸ்தூல சிதசித்விஶிஷ்ட ப்ரஹ்மத்திற்கும் அபேதம் ஸித்தாந்த ஸித்தமாகையாலே “विशिष्टं च विशिष्टं च विशिष्टे ; विशिष्टयोरद्वैतम् – विशिष्टाद्वैतम्” என்று வ்யுத்பத்தி

பண்ணுவர்கள். அது பலபடிகளாலும் பொருத்த மற்றதாமென்பது கீழ்விவரித்தவாற்ருல் விளங்கும். அன்றியும், சேதநாசேதநங்கள் சரீர மென்னு மிடம் ஸித்தித்த பின்பே 'விஶிஷ்டயோ [illegible]' மென்னுமர்த்தம் ஸித்திக்குமென்று சரீரசரீரிபாவ ஸம்பந்தத்தைக்கொண்டு இவ்வர்த்தம் உபஜீவிக்க வேண்டுகையாலும் அங்ஙனே வ்யுத்பத்தி பண்ணவொண்ணுதாம்.

ஆனபின்பு விஶிஷ்டாத்வைத சப்தார்த்தம் முந்துற விரித்தவாறே பொருத்த முடைத்தாம். அதற்கு மாருகப் பண்ணும் வ்யுத்பத்தியில் பொருட் பொருத்த மற்றிருக்கையோடு வ்யாகரண சாஸ்த்ரமர்யாதைக்கும் அது விபரீதமாய்க் கிடக்கு மென்பர்; அதைப்பற்றி இங்கொன்றும் விரித்துரைக்கின்றிலோம்.

இந்த விஶிஷ்டாத்வைத ஸித்தாந்தம் இக்கலியுகாதியிலே ※ மறைப்பாற்கடலைத் திருநாவின் மந்தரத்தாற் கடைந்து, துறைப்பாற்படுத்தித் தமிழாயிரத்தின் சுவையமிழ்தங், கறைப்பாம்பணைப் பள்ளியானன்பரீட்டங்களித்தருந்த நிறைத்தருளின நம்மாழ்வாராலே, தம்முடைய திருவாய்மொழியில், "உயர்வற வுயர்நலம்," "வீடுமின் முற்றவும்," என்ற இரண்டு திருமொழிகளில் ஸம்க்ஷேபித்து ப்ரவர்த்திப்பிக்கப்பட்டது.

"[illegible]
[illegible] ।
[illegible]
[illegible] ॥"

என்று ஸ்ரீ த்ரமிடோபநிஷத் ஸாரத்தில், ஸ்ரீ தேசிகன் அருளிச்செய்ததை இங்கு அநுஸந்திக்க.

நம்மாழ்வார்க்குப் பின்பு ஸ்ரீமந்நாதமுனிகளாலும் ஆளவந்தாராலும் ந்யாயதத்வஸித்தித்ரயாதிகளில் விவரிக்கப்பட்ட இத்தர்ஶநம் எம்பெருமானாராலே ஸ்ரீ பாஷ்யத்தில் குதர்க்கங்களாலே சலிப்பிக்க வொண்ணுதபடி நன்கு ப்ரதிஷ்டாபிதமாயிற்று. ப்ரஹ்மஸூத்ரங்களுக்கு மற்றுள்ள பாஷ்யங்கள் ஆர்ஷவியாக்யாநங்களை அதிலங்கித்துக் கிடக்கின்றன வென்னுமிடம் "[illegible]



[illegible]" "[illegible]" "[illegible]" "[illegible]" இத்யாதிகளில் ஸுஸ்பஷ்டமாய் விளங்காநிற்கும்.

ஆனகையாலே,

"[illegible]
[illegible] ।
[illegible]
[illegible] ॥"

என்று ஸ்ரீ தேசிகன் அருளிச்செய்தபடி நம் எம்பெருமானாருடைய பாஷ்யமே மஹர்ஷி மதாநுஸாரியாய் நல்லறிவு நல்கவற்றாய் ஆதரிக்கத்தக்கதாயிருக்கும்.

இந்த பாஷ்யத்திற்கு மூலமான ஶாரீரகப்ரஹ்ம மீமாம்ஸையில் ஐந்நூற்று நாற்பத்தைந்து ஸூத்ரங்களும், நூற்றைம்பத்தாறு அதிகரணங்களும் அமைந்துள்ளன. "[illegible] ।
[illegible] ॥" என்று ஸூத்ரலக்ஷணஞ் சொல்லப்பட்டது.

"[illegible] ।
[illegible] ॥" என்று பாஷ்யலக்ஷணஞ் சொல்லப்பட்டது.

ஒரோரதிகரணத்துக்கும் ஐந்து அங்கங்களுண்டு; அவையாவன:— விஷய வாக்ய நிரூபணம், ஸம்சயப்ரதிபாதநம், பூர்வபக்ஷ ஸித்தாந்த யுக்தி நிரூபணம், நிஶ்சயம், பூர்வபக்ஷ ஸித்தாந்தங்களின் ப்ரயோஜந நிரூபணம் என்னுமிவை. "[illegible] ।
[illegible] ॥" என்றது காண்க.

இனி, பஞ்ச அங்கங்களென் டென்பாருமுண்டு;

"[illegible] ।
[illegible]

தஸ்யாம்ஸாம்ஸாம்ஸவிஸ்வஞ்ச ஸ்யாமெள அனேகரூபோ பாபுயோ: ।
நிர்யதஸ்ஸத்வமேதி பூர்வாப்யாஸ்ய ஸ்தே உப ॥"

என்றது காண்க. நிற்க.

இந்த ஸாஸ்த்ரம் ஸாரீரகமென்று வ்யபதேஸிக்கப்படும்; ஸரீரஸம்பந்தீ - ஸாரீர: ; ஜகத்தை ஸரீரமாக வுடையவன் என்றபடி. ஸாரீரம் கரோதி - வ்யுத்பாதயதீதி ஸாரீரகம், "கை கை - ஸப்தே" என்கிற தாதுவில் "ஆதோऽநுபஸர்கே க:" என்ற அநுசாஸநத்தினால் கப்ரத்யயம் ப்ராப்தமாயிற்று. ஆகவே, ஜகச்சரீரகனை எம்பெருமானை ப்ரதிபாதிக்கிற ஸாஸ்த்ரம் ஸாரீரக ஸாஸ்த்ரமென்றதாயிற்று. ஸ்ருதப்ரகாஸிகையில், "ஸாரீரகம் - ப்ருஹ்மஜீவாம்ஸா ; ஜகச்சரீரக: பரமாத்மா ஸாரீர: ; 'தஸ்யைஷ ஏவ ஸாரீர ஆத்மா' இதி ஸ்ருதே: । தத்விஷயகம் ஸாஸ்த்ரம் ஸாரீரகமித்யுச்யதே" என்ற பங்க்தியும், தத்வடீகையில் "ஸகலஸரீர ஸாரீரகஸம் உபயகர ஸாரீரக ஸப்தத" என்ற பங்க்தியும் இங்கு நோக்கத்தக்கன.

இந்த ஸாரீரக ப்ரஹ்ம மீமாம்ஸைக்கு எம்பெருமானர் அருளிச்செய்த பாஷ்யம் அதிவிபுலமாயும் வாக்யராஸிமயமாயு மிருக்கையாலே அதிலுள்ள அர்த்தங்கள் க்ரஹிக்கவும் தரிக்கவும் அருமையா யிருக்கும்படியைத் திருவுள்ளத்திற் கொண்ட கவிதார்க்கிக கேஸரியான நம் வேதாந்த தேஸிகன் ஓரோரதிகாரணார்த்தத்தையும் ஸாரமாக எடுத்து அருளிச்செய்து எம்போலியரை அநுக்ரஹிக்கத் திருவுள்ளம்பற்றி "அதிகாரண ஸாராவளி" என்னும் ஆஸ்சர்யமானதொரு க்ரந்தரத்நத்தைத் திருவவதரிப்பித்தருளினர். அதன் பொருள்களை, அடியேன், மணிப்ரவாள நடையில் அநதிஸங்க்ரஹ விஸ்தரமாக வரையத்தொடங்காநின்றேன்.

அவதாரிகை முற்றும்.

பெருமாள் கோயில் ப்ரதிவாதி பயங்கரம்
அண்ணங்கராசார்யன்,
(செந்தமிழ்ச்செல்வர்.)

## ஸ்ரீ அஹோபில மடத்துச் சிஷ்யஸபை.

## 1912 - 13 ஸு - த்திய ஆடிடருடைய அறிக்கை.

1. 1912-ம் ஸு அக்டோபர்மீ முதல் 1913-ம் ஸு செப்டம்பர்மீ வரையில் ஸபையின் கணக்குகள் என்னுல் பரிசோதிக்கப்பட்டது. ஒன்றிரண்டு கைப்பிசகுகள் தவிர, கணக்கின் மொத்தங்கள் யாவும் ஸரியாக இருக்கின்றன. கணக்குகள் மொத்தமும் ஸரியாகவே வைக்கப்பட்டிருக்கின்றன.

2. ஷை வருஷம் மொத்த வரும்படி ரூ. 695-0-0. செலவு ரூ. 674-1-3. ஸம்வத்ஸர ஆகீரில் காரியதர்சியின் கையிருப்பு ரூ. 20-14-9.

3. ஸபையானது ஒரே நிதானமாக வ்ருத்தியடைந்திருக்கிறது. வீண் செலவுகள் ஒன்றும் செய்யப்பட்டதாகத் தெரியவில்லை. நடந்த க்ரந்தங்களைப் பார்க்குமளவில், செலவாயிருக்கும் மொத்த தொகையும், மிகவும் உசிதமாக விருக்கிறதென்றும், ஜாக்கிரதையாக வேலைகள் நடத்தப்பட்டதாகவும் ஏற்படுகிறது.

4. இதுவரையில் ஸபையாரால் வெளியாருக்குக் கொடுக்கல் ரூ. 405-0-0. ஸபையின் பத்ரிகைக் கணக்குகளில் ஸபைக்குச் சேரவேண்டிய தொகை ரூ. 370-0-0.

5. முக்யமான அம்சங்களில் வரவு செலவு மொத்தங்கள் பின்வரும் ஜாப்தாவில் காணப்பட்டிருக்கிறது.

6. கேவலம் கொஞ்ச காலத்தில் இந்த ஸபை இவ்வளவு வ்ருத்தி அடைந்தது மிகவும் ஸந்தோஷகரமான விஷயமாக இருக்கிறது. இனியும், இதைவிட இன்னும் அதிக ஸ்ரேயஸ், எல்லா விதத்தாலும் அடையும் என்று நம்புகிறோம்.

வி. கிருஷ்ணஸாமி அய்யர்,
ஆடிடர்.
7-4-14.

## 1912 - 1913 வரவு செலவு கணக்கு.

| நம்பர். | விவரம். | தொகை. ரூ. | அ. | பை. | நம்பர். | விவரம். | தொகை. ரூ. | அ. | பை. |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | முன் கையிருப்பு ... | 33 | 15 | 3 | 1 | காகிதம் அச்சுக்கூலி வகைரா ... | 61 | 5 | 0 |
| 2 | அங்கத்தினர் விசேஷ வசூல் ... | 165 | 0 | 0 | 2 | தபால்கூலி ... | 63 | 14 | 9 |
| 3 | அங்கத்தின் வருஷச் சந்தா ... | 16 | 0 | 0 | 3 | மஹாஸங்கம் செலவுகள் ... | 254 | 5 | 0 |
| 4 | பிரிவுகளிலிருந்து வசூல் ... | 25 | 0 | 9 | 4 | ரயில்சார்ஜ் வகைரா | 78 | 15 | 6 |
| 5 | வெளியாரிடத்திலிருந்து விசேஷ வசூல் | 100 | 0 | 0 | 5 | தீபிகைக்குக் கடன் ... | 200 | 0 | 0 |
| 6 | வியாஜ்யகணக்கிலிருந்து வரவு ... | 25 | 0 | 0 | 6 | படங்கள் ... | 12 | 8 | 0 |
| 7 | வெளியாரிடத்தில் கடன் ... | 225 | 0 | 0 | 7 | சில்லரைச் செலவு ... | 3 | 1 | 0 |
| 8 | தீபிகைக் கணக்கு ... | 105 | 0 | 0 | 8 | கையிருப்பு ... | 20 | 14 | 9 |
| | | 695 | 0 | 0 | | | 695 | 0 | 0 |

ஸி. ராஜகோபாலாசாரியன், காரியதரிசி. 7-4-14.

வி. கிருஷ்ணஸாமி அய்யர், ஆடிட்டர். 7-4-14.

## ஸ்ரீதேசிக ப்ரபந்தம்.

இஃது, திருவஹீந்த்ரபுரம் பகவத்விஷய வித்வான் ஸ்ரீ. உ. வே. சேட்லூர் நரஸிம்ஹாசார்யர் ஸ்வாமியால், பல வ்யாக்யானங்களுக்கு இணங்க, பிழையறப் பரிசோதிக்கப்பட்டு, அடிவரவுடனும், க்ரமமான ப்ரபந்த வரிசையுடனும், நல்ல காகிதத்தில், சுத்தமாயும், எவ்வித பிழையுமில்லாதபடி, மிக த்ருப்திகரமாக, ஸ்ரீமான் கி. ஸ்ரீராமாசார்யர், கொ. ஸுதர்சநாசார்யர், இவர்களால் அச்சிட்டு வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இதன் விலை ப்ரதி 1-க்கு, (முன்னிலும் 2 - அணா குறைத்து) 6 - அணாவாகும். ஸ்ரீ அஹோபில மடம் ஸ்ரீலக்ஷ்மீ ந்ருஸிம்ஹன் விஷயமாகவும், ஸ்ரீமதாதிவண் சடகோபயதீந்த்ர மஹாதேசிகன் விஷயமாகவும் அருளிச்செய்யப்பட்ட அடைக்கலப்பத்துகளும் சேர்ந்தது, ப்ரதி 1-க்கு 6-அணா, 6 - பையாகும். தபால் சார்ஜ் வேறு.

நமது ஸித்தாந்தத்தில் ச்ரத்தையுள்ள எல்லாரும் இந்த க்ரந்தத்தை ஆதரிக்க வேண்டுமென்று ப்ரார்த்திக்கிறோம்.

இது, சென்னை, திருவல்லிக்கேணி தேரடி வீதி 38-வது நம்பர் க்ருஹத்திலிருக்கும் கொ. ஸுதர்சநாசார்யரிடத்தில் கிடைக்கும்.

---


ஸ்ரீ:.

ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம:.

# வேதாந்த தீபிகை

பத்ராதிபர்:—திவான் பகதூர் டி. டி. ரங்காசார்யர், பி.ஏ., பி.எல்.

ஸம்புடம் 4.] ஆநந்த௵ தைமீ° [ஸஞ்சிகை 12.


## பத்ராதிபரின் குறிப்புகள்.

த்ரிபுவநகமநம் தமாலவர்ணம் ரவிகரகௌரவராம்பரம் ததாநே - வபுரலககுலாவ்ருதாநநாப்ஜம் விஜயஸகே ரதிரஸ்து மேநவத்யா ॥ [ஸ்ரீ பாகவதம் 1-9-33.]

**தை மாஸம்.** இதற்குத் தை மாஸமென்றும், புஷ்ய மாஸமென்றும், மகர மாஸமென்றும் பெயர் வழங்குகின்றது. மார்கழி மாஸம் முடிவான தினமும், புஷ்யமாஸத்தின் முதல் தினமும் ஆர்யநாட்டில் ப்ரஜைகள் ஸந்தோஷிக்கும் உத்ஸவ தினங்கள். 1800 - வருஷத்துக்கு முற்பட்டும், தமிழ்நாட்டில் ஸங்க்ராந்தி தினத்தில் இந்த்ரன் ஸம்பந்தமாக ஜநங்கள் உத்ஸவம் கொண்டாடினர் என்று சிலப்பதிகாரம் முதலான புஸ்தகங்களால் தெரிகின்றது. மார்கழியும் தையும் ஆர்யஜநங்கட்குக் கேவலம் உத்ஸாஹ மாஸங்களெனத் தெளியக்கூடாது. இந்த மாஸங்கள் யாவர்க்கும் பரமச்ரேயஸ்ஸைக் கொடுக்கவல்ல சரித்ராம்சங்களைத் தாங்கி நிற்கின்றன. அவற்றைக் குறித்துச் சிறிது விசாரிப்போம்.

மார்கழிமாஸத்துடன் தக்ஷிணாயநம் முடிவுறுகின்றது. இது தேவலோகவாஸிகளுக்கு ஓர் இரவு. அவருடைய பகல், ஸங்க்

ராந்தி தினம் ஆரம்பிக்கின்றது. இந்தப் பகற்கு உஷஃகாலம் மார்கழிமாஸம். உஷஃகாலம் பகவத்ஸ்மரணத்துக்கு மிகவும் பொருந்திய காலம் என்பது யாவர்க்கும் தெரிந்த விஷயம். இதற்காகத்தான் மார்கழித்திங்கள் முழுதும் பகவத் ப்ரஸாதத்தை வேண்டுபவர் பகவானுக்கென்றே கழிக்கின்றனர். அம்மாஸத்தின் உஷஃகாலங்கள் முக்யமாகப் பகவானுடைய ஸ்மரணத்தில் செலுத்தப்படவேண்டும்.

'[illegible]' என்கிற வசநப்படி, வித்யை என்றால், மோக்ஷத்தைக் கொடுக்கின்றது தானென்பதும், கர்மம் என்றால், நிஷ்காமத்துடன் பகவத்ப்ரீணநமாகச் செய்வதுதானென்பதும், நம் பெரியோர் நமக்குக் காட்டியிருக்கின்றனர். கர்மம் வித்யாங்கமாகின்றது. வித்யை நிலைத்தபின் அதற்குரித்தாகக் கர்மமும் ஏற்படும். இந்த உண்மையைப் பகவான் ஸ்வயம் நமக்குத் தமது திவ்யசரித்ரங்களால் காட்டியுளர். அதைச்சற்று யோசிப்போம்.

**அம்மாஸம் ஸீதையைப் பகவான் சிறை மீட்டது.**

லங்கையில் சிறைப்படுத்தப்பட்ட ஸீதைக்கு, அந்தச் சிறைக் காலம் முழுவதும் ஓர் கொடிய ராத்ரி. '[illegible]', என்று ஸீதையையே ராமாயணத்தில் ஹநுமத்வசநத்தால் வர்ணித்திருக்கின்றது. அந்த லோகமாதாவுக்குக் காளராத்ரியாக இருந்த காலம், இலங்கைக்கும் அப்படியே ஆயிற்று. மார்கழிமாஸம் அதற்கு உஷஃகாலம். அப்போது ஸ்ரீராமதூதன் ஸ்ரீராமனுடைய வ்ருத்தாந்தத்தைப் பற்றி ஸீதையினிடம் ஸம்பாஷித்தனன். அப்போது,

'[illegible] ।
[illegible]' ।

"விசாலநேத்ரங்களுடன் கூடிய ஸீதையினுடைய செவ்வரியோடி வெளுத்து நீண்ட கண்களால் அலங்க்ருதமான அந்த மநோக்யமான முகமானது ராஹுவால் விடப்பட்ட சந்த்ரனென ஶோபித்தது." பதிவ்ரதைக்குப் பதிவிஷயமாகப் பாரதந்த்ரியத்தைப் பாராட்டல் ஓர் வ்ரதம். ஆதலால் பதியினுடைய ஆஜ்ஞையை



எதிர்பாராமல், தனக்கு ஹிதமாயிருந்தபோதிலும், தானாக ஒன்றும் பதிவ்ரதை செய்யமாட்டாள். இதனோடு, ஸீதை தனது சிறையை யே தான் பதியுடன் சேரவேண்டுமென்பதையே ப்ரயோஜநமாக உத்தேசித்து ஓர் தபஸாகக் கொண்டனள். அந்தத் தபஸ்ஸைக் காப்பாற்றவெண்ணியும், பதியின் ஆஜ்ஞை யில்லாதபடியாலும், '[illegible]' என்று ராவணனை நோக்கிச் சொன்னபடி, அவனைப் பிராட்டி சாம்பலாகப் போகும்படி ஸங்கல்பித்தாளில்லை. இப்படிப்பட்ட கஷ்டமான வ்ரதத்தையும் தபஸ்ஸையும் அநுஷ்டித்துத் தான் சிறைநின்ற காலமாகின்ற இராமுழுதும் பிராட்டி போக்கினள். இதற்கு உகந்தருளிய ஶரண்யன், ஸம்ஸாரமாகின்ற காளராத்ரிக்கு உஷஃகாலம் போன்ற ஶரணாகதி மந்த்ரம் அகிஞ்சநனை முமுக்ஷுவுக்கு ப்ராப்தமாவது போல், லங்காவாஸமான காளராத்ரிக்கு விடியற்காலம்போன்ற மார்கழிமாதத்தில், தன் ப்ரியதூதன் மூலமாகத் தனது வ்ருத்தாந்தம் ஸீதைக்கு ப்ராப்தமாகும்படிப் பண்ணினன். இது பிராட்டி ப்ரார்த்தித்துக்கொண்டிருந்த பதிஸங்கமமாகின்ற சுபத்தை ஸூசிப்பித்தது.

ஹநுமான், '[illegible]', என்று பிராட்டியை ராகவனிடம் தானே கொண்டுபோய்ச் சேர்ப்பதாகச் சொல்லவும், பகவதாஜ்ஞையை எதிர்பார்த்த ஜாநகியும், லோகத்துக்கும் தனக்கும் ஸ்வாமியான பகவான் விஷயத்தில் அஸஹ்யமான அபராதத்தைப் புரிந்த ராவணன் அவனாலேயே தண்டிக்கத்தக்கவனாதலால், ஹநுமத் '[illegible]' வசநத்தைத் தான் ஆதரிப்பதால் (ராகவனுடைய யஶஸ் குறையும்) என்றெண்ணியும், '[illegible]', என்று, தான் பதிவ்ரதையானபடியால், ஸ்ரீராமனுடைய காத்ரம் தவிர மற்றவர் சரீரத்தைத் தொடக்கூடாதெனும் நியமத்தைச் சிந்தித்தும், ராவணனுடைய தேஹஸ்பர்ஶம், தான் அநீஶையாயும் விவஶையாயுமிருந்தபடியால், நேரிட்டதென்றும் ஸமா

தாநம் சொல்லி, '[illegible] ॥' என்று, அபராதியை ஸமூலமாகக் கொன்று, பின் தன்னை அழைத்துக்கொண்டுபோனால் அது ராகவனுக்குப் பொருந்தி நிற்கும் என்று முடிவாகச் சொன்னாள். அவளுடைய அத்யவஸாயத்தைப் பஹுமானித்த லோகநாதனும் ராவணன் உவரை நாசமாகச் செய்து பிராட்டியை அழைத்துக்கொண்டு போனான். ராவண ஸம்ஹாரம் தை அமாவாஸ்யை தினம் நடந்தது. பிராட்டியும் ப்ராணநாதனைச் சேர்ந்த மாஸம் இதுவே. ஆகவே ஹேமந்தருதுவின் மாஸங்களிரண்டிலும், ஸீதையினுடைய சித்தவ்ருத்தியானது அவள் பகவத் ப்ராப்தியினிமித்தம் உபாயமாகக் கொண்டதனைகசேஷத்வருபமான ஜ்ஞாநவிசேஷத்தையும், அவளுடைய அநுஷ்டாநங்கள் அந்த ஜ்ஞாநோசிதமாகப் பகவான் உகப்பையே பலமாக எண்ணிச்செய்த அவளது கர்மவிசேஷங்களையும் நன்கு ப்ரகாசிப்பிக்கின்றன.

'[illegible]।

அந்த மாஸம் [illegible]'॥ கோபீ ஜநங்களுக் எனும் தேவிப்ரார்த்தநா கர்ப்பமான மந்த்ரத்தைக் குப் பகவான் அநு கொண்டு, ஸ்ரீ க்ருஷ்ணன் தமக்குப் பதியாக க்ரஹம் செய்தது. வேண்டுமென்று எண்ணிக் கோபகந்யைகள் மார் கழிமாஸம் முப்பதுநாள்களும் வ்ரதமிருந்தனர்.

'[illegible] ।

[illegible]' ॥

"விடியற்காலம் ஒருவரை யொருவர் பெயரால் கூப்பிட்டு எழுப்பி, ஒருவர்க்கொருவர் கைகளைப் பிடித்துக்கொண்டு, குரலெடுத்து க்ருஷ்ணனைப் பாடிக்கொண்டு யமுநாநதியில் ஸ்நாநம் செய்ய நித்யம் சென்றனர்."

"மார்கழித் திங்கள் மதிநிறைந்த நன்னாளால், நீராடப் போதுவீர் போதுமினோ நேரிழையீர், சீர்மல்கு மாய்ப்பாடிச் செல்வச் சிறுமியர்காள், கூர்வேல் கொடுந்தொழிலன் நந்தகோபன் குமரன், ஏரார்ந்த கண்ணி யசோதை யிளஞ்சிங்கம், கார்மேனிச்செங்



கட் கதிர்மதியம் போன்முகத்தான் - நாராயணனே நமக்கே பறை தருவான்," எனும் பாசுரத்தின் அர்த்தம் மேலெழுதிய ஶ்லோகத்தில் விளங்குகின்றது.

'[illegible] ।
[illegible] ॥'

"யோகம் எவன்பொருட்டுச் செய்கின்றனரோ, நிஷ்பந்ந யோகிகளாய் யோகீஶ்வரர்க ளெனப்படுபவர்க்கு எவன் ஈஶ்வர னும் புருஷார்த்த ப்ரதனுமாகின்றானோ, அந்தப் பகவான், அந்தக் கந்யைகள் அபிப்ராயம் அறிந்தவனாய்க்கொண்டு, அவர் ஆசரித்த வ்ரதத்துக்கு யதோசிதம் பலமளிக்க ஸங்கல்பித்து, தன் தோழருடன் அவ்விடம் சென்றனன். அவனுக்கும் அப்போது வயஸ்ஸோ ஏழுதான். ஆயினும் '[illegible]' யாயிருந்தான். கோபகந்யைகள் தங்கள் வழக்கப்படி வஸ்த்ரங்களை நதியின் கரைமேல் வைத்துவிட்டு, விவஸ்த்ரர்களாய் நதியில் நீராடினார்கள். இது துராசாரம்: பாபதுல்யம்: பகவதபசாரம். ஆதலால் அவர் கொண்ட வ்ரதத்தை வ்யர்த்தமாகச் செய்தது. ஆனாலும், பகவான் அவர்களுடைய ([illegible]) நல்லெண்ணத்தால் கருணைகொண்டு, கிஞ்சித் அவர்களைப் பரிஹஸிப்பவன்போல் நடித்துவிட்டு, '[illegible] ।
[illegible]' ; "நீங்கள், வ்ரதத்தில் நின்றவராய்க் கொண்டு, வஸ்த்ரமின்றி ஜலத்தில் நீராடினீர்கள் என்கிற இது உங்கள் வ்ரதத்தை இது வீணாக்கிவிட்டது. இந்தப் பகவதபசாரம்; பாபநிவ்ருத்தியின்பொருட்டுச் சிரஸ்ஸின்மேல் அஞ்ஜலிஸஹிதமாக நமஸ்காரம்செய்து, பின் உங்கள் வஸ்த்ரங்களைப் பெற்றுக் கொள்வீர்கள்" என்று மொழிந்தனன். க்ரமேண அவர்கள் அஜ்ஞாந நிமித்தமாகச் செய்த அக்ருத்யங்களை, அவர்களுடைய அஞ்ஜலிமாத்ரத்தால் க்ஷமித்தருளி, அவர்கள் தேவதாந்தரோ

பாஸ்திசெய்தனராயினும், 'மதவி ஈஏவ ஹஜம் த்ருவியவர்ய கம்', என்று அவர் பூஜையை அங்கீகரித்தவனாய்க்கொண்டு, 'தாஸாம் விஜ்ஞாய ஸமவாப்து ஸ்வாத்ஸ்வஸ்யகாங்க்ஷயா । யத்ரவ்ரதாநாம் ஸங்கல்பம்,' எனும்படி, உமக்கே நாமாட்செய்வோம் என்று வ்ரத மிருந்த அவர்களுடைய ஸங்கல்பத்தைப் பகவான் அறிந்து,

'ஸங்கல்போ விதித: ஸாத்வ்யோ பவதீநாம் மதர்சநம் ।
மயாநுமோதித: ஸோ(அ)ஸௌ ஸத்யோ பவிதுமர்ஹதி ॥
ந மய்யாவேஶிததியாம் காம: காமாய கல்பதே ।
பர்ஜிதா: க்வதிதா தாநா: ப்ராயோ பீஜாய நேஷ்யதே ॥
யாதாபலா வ்ரஜம் ஸித்தா மயேமா ரம்ஸ்யதா க்ஷபா: ।
யதுத்திஶ்ய வ்ரதமிதம் சேரு: ।'

"ஸத்வ்ருத்தத்துடன் கூடின பெண்களே! எனக்கே பணிவிடை செய்ய வேண்டுமெனும் உங்களுடைய மநோரதம் எனக்குத் தெரிந்தது; அது என்னால் அங்கீகரிக்கவும் பட்டது. ஆனபடியால் அது ஸத்யமாகத் தக்கதே. ஆகிலும் என்னிடம் புத்தியைச் செலுத்துகிறவர்களுடைய காமமானது அதன் பலமாகின்ற போகாநுபவத்தின் பொருட்டுப் பரிணமிப்பதில்லை. (ஏனென்றால், என்னிடம் ப்ரேமை கொண்டால் அது காமத்தால் தூஷிதமான மநஸ்ஸினின்று காமத்தை நிவர்த்தித்துவிடும்.) வறுத்த தாந்யமும் சமைத்த தாந்யமும் விதைகளுக்கு இச்சிக்கப்படமாட்டா. பெண்களே! பூர்ணமநோரதர்களாக வ்ரஜம் செல்லுங்கள். எதை உத்தேசித்து இந்த வ்ரதத்தை அநுஷ்டித்தீர்களோ அதற்காகப் வரப்போகின்ற ராத்ரிகளில் என்னுடன் விளையாடிக் களிப்பீர்கள்" என்று சொன்னான். அதைக்கேட்டு ஆய்ப்பாடிச் செல்வச் சிறுமியர்கள் பகவானுடைய பாதகமலங்களை த்யானித்துக்கொண்டு, அவ்வவர் வீடு சென்றனர். இது நடந்தது போகி பண்டிகை தினம்.

பகவானும், இதர கோபால குமாரருடன் பசுக்களை நடத்திக்கொண்டு போய், யமுநா நதிக்கரையில் ஓர் உபவநத்தில்



ய்தேச்சையாக ஸஞ்சரித்துவிட்டு, நதியில் மதுரமான நீருருந்தி
உட்கார்ந்தனன். கோபாலகுமாரர் பசியால் வருந்தினார்கள்.
பகவானும் ஸமீபதேசத்தில் ப்ராஹ்மணர்கள் யாகம் செய்து
கொண்டிருக்கின்றார்கள் என்றும், அவரிடம் தன் நாமத்தைச்
செப்பி, யாவர்க்கும் அந்நம் கேளுங்கள் என்றும் சொல்லிக்
கோபாலரை அவரிடம் அனுப்பினான். கோபாலகுமாரரும் பகவத்
வசநத்தை ஸவிநயமாக யாகக்ரஹத்தில் உட்கார்ந்திருந்த விப்ரர்க
ளிடம் தெரிவித்தார்கள். விப்ரர்களோ அவர்கள் சொல்லைக்
கேட்டும் கேளாததுபோல் மௌநமாக இருந்து விட்டனர்.
இடைப்பிள்ளைகள் நடந்ததை நடந்தவண்ணம், ஸ்ரீக்ருஷ்ணன்
ஸந்நிதியில் விஜ்ஞாபநம் செய்தனர். பகவான் சிரித்துவிட்டு,
அந்தச் சிறுவர்களை மறுபடியும் அந்த விப்ரர்களுடைய பத்நீக்க
ளிடம் அனுப்பினான். சிறுவர் பத்நீசாலைக்குச் சென்று, ஸமீ
பத்தில் ஸ்ரீ க்ருஷ்ணன் இருப்பதையும், தங்களுக்கும் ராம
க்ருஷ்ணர்களுக்கும் அந்நம் வேண்டுமென்பதையும் விப்ரஸ்த்ரீக
ளிடம் சொன்னார்கள். நீண்டகாலமாகப் பகவானுடைய திவ்ய
சேஷ்டிதங்களைப்பற்றிச் செவியுற்று, அவனைத் தர்ஸிக்க வேண்டு
மென்று ஸதா சிந்தித்துக்கொண்டிருந்த அந்த ஸ்த்ரீகள், கோபால
குமாரர் சொன்னதைக் கேட்டவுடன் மிகவும் ஆநந்தங் கொண்டு
நாலுவிதமான அந்நங்களை யெடுத்துக் கொண்டு புறப்பட்டனர்.
பதி ஸுத ஸஹோதரர்களுடைய தடையையும் அவர் மதித்
திலர். யமுனையின் உபவநம் சென்று, அவ்விடம் துளிர்மிகுந்த
அசோக வ்ருக்ஷங்களின் கீழ் ராமனுடனும் கோபாலகுமாரர்க
ளுடனும் ஸஞ்சரித்துக் கொண்டிருந்த யமுனைத் துறைவனைத்
தர்ஸித்தனர்.

'ஸ்யாமஸுந்தரன் பீதாம்பரதாரியாய், வநமாலை, மயிற்
பீலி, தளிர் முதலானவற்றால் அலங்க்ருதனாய், ஒரு
கையைப் பக்கல் நின்றவன் தோளின்மேல் வைத்து, மற்றொன்றால்
தாமரைப்புஷ்பத்தைச் சுழற்றிக்கொண்டு, காதுகளில் நீலோத்
பலமும், கன்னங்களில் முன்னெற்றிமயிரும், முகாரவிந்தத்தில்
புன்னகையும் ப்ரகாசிக்கத் தோன்றினன். முன்பே, அவன் ரூப
சேஷ்டிதங்களைக் கேட்டு அவற்றின் த்யாநத்தில் மூழ்கிநின்ற மநஸ்
ஸுடன்கூடிய அந்த ப்ராஹ்மணஸ்த்ரீகள், பகவானைத் தங்களு
டைய நேத்ரங்கள்மூலமாக ஹ்ருதயங்களில் ப்ரவேசிப்பித்து, அவ்

விடம் அவனை நிலைக்கச்செய்து, மாஸஸால் அவனை ஆலிங்கநம்
செய்து, தாமவனைத் தர்சிக்கவேண்டுமென்று நீண்டகாலமாய்க்
கொண்ட தாபத்தைப் போக்கினர்கள். இப்படி நின்றவரைப்
பரமாத்மா பார்த்து "உங்களுக்கு நல்வர வளிக்கின்றேன். உட்
காருங்கள். உங்கட்கு நான் யாது செய்யப்போகின்றேன்! என்னைக்
காண இச்சித்து வந்தீர்கள்! இது உங்கட்குத் தகுந்ததே. பரம
புருஷார்த்தம் அறிந்த விவேகிகள் பலாபிஸந்தியற்ற நிரந்தர பக்தி
யைத் தம்முடைய ஆத்மாவும் தமக்கு ப்ரியனுமான என்னிடம்
ஸாக்ஷாத்தாகச் செய்கின்றனரன்றோ? யாதொருவர்க்கு என்ஸம்
பந்தத்தினால், அதாவது என்னுடைய ஆராதநத்துக்கு உபகர
ணமாயிருத்தலால், இந்த்ரியங்கள், மநஸ், புத்தி, தேஹம், பதி,
பத்நீ, புத்ரர்கள், தநம் முதலான ஸர்வமும் ப்ரியமாகின்றனவோ,
அவர்க்கு என்னைக்காட்டிலும் ப்ரியன் யார் உண்டு? உங்களு
டைய பர்த்தாக்கள் உங்களுடன்கூடி யாகத்தை முடிக்கப்போ
கின்றனர். நீங்கள் புறப்பட்டுப் போகலாம்" என்று மொழிந்
தான். விப்ரபத்நிகள் தமது பர்த்தா முதலானவர், அவரை அநா
தரித்து வந்த தம்மை அங்கீகரிக்க மாட்டாரெனும் ஶங்கையா
லும், பகவத் கைங்கர்யத்தையே உத்தேசித்துத் தாம் வந்தபடி
யாலும், ஸர்வலோகநாதனை விட்டுப்போக இசையவில்லை. அவர்
க்கு, ஸ்வாமி, அவருடைய பதி புத்ர ஸஹோதராதிகள் அநு
கூலராகவே இருப்பாரென்பதை வற்புறுத்தி, தன்னைப்பற்றிக்
கேட்பதாலும், தன்னைத் தர்சிப்பதாலும், த்யாநிப்பதாலும், தன்
நாமங்களைக் கீர்த்தநம் செய்வதாலும் உண்டாகும் குணம், ஸமீப
வாஸத்தால் உண்டாகாதென்றும், மநஸ்ஸைத் தன்னிடம் செலுத்
துவதால் தனது ஸாயுஜ்யம் அவர்க்குக் கிடைக்குமென்றும் சொ
ல்லி, அவர்க்கு விடையளித்தான். தங்கட்குக் கிடைக்காத பாக்ய
விசேஷத்தைத் தங்களைக் காட்டிலும் மிதஜ்ஞரான ஸ்த்ரீகள்
அடைந்தார்களென்றும், பகவந்மாயையால் தம்முடைய புத்தி
தூஷிக்கப்பட்ட தென்றும் சிந்தித்து, விப்ரர்களும் அநுதாபம்
கொண்டனர்.

பிறகு, பகவான் ஸஞ்சரித்துக்கொண்டுபோய், ஸங்க்ரமண
தினம் செய்யவேண்டிய இந்த்ரபூஜையின் நிமித்தம் ப்ரயத்நபரர்
களாக மலையினருகே இருந்த கோபர்களைப்பார்த்து, அவர்கள் ப்ர
யத்நத்தின் உத்தேசத்தை யறிந்து, அவர்கள் ஆரம்பித்த இந்த்ர



பூஜையை விலக்கிப் பசுக்களுக்குப் புல் மிகவும் கொடுத்த கோவர்
த்தநகிரிக்குப் பூஜை செய்யும்படி அவர்க்குச் சொன்னான். அவ
ரும் அவ்வண்ணம் புரியத் தானே பர்வதாபிமாநிதேவதையாக
ரூபீகரித்து நின்று, பகவான் அவர் பூஜையை அங்கீகரித்தனன்.
இப்படி ஸங்க்ராந்தி பூஜை நிறைவேறியது. ஜ்ஞாதாவான
போதிலும், ப்ரக்ருதி ஸம்பந்தத்தால் கதாசித் அஹங்கார தூஷி
தமான அந்தஃகரணத்துடன்கூடின இந்த்ரனும் கோபங்கொண்டு,
ஸப்தாஹம் மேகங்களை வர்ஷிக்கச்செய்து, பூமியில் வெள்ளம்
பெருகச் செய்தனன். பகவான் கோவர்த்தந பர்வதத்தை லீலை
யாகத் தூக்கி, அதன் கீழ் விபுலமான குஹையில், கோபஜநங்
களும் கோக்களும் நிர்ப்பயமாக இருக்கச்செய்தனன். இந்த்ர
னும் கர்வபங்கமடைந்து, பகவானுடைய தத்வஸ்வரூபம் அறிந்து,
அபராதக்ஷாபணம் செய்துகொண்டு போயினன். கோபஜநங்க
ளும் ஸ்வக்ருஹங்களைப் போய்ச்சேர்ந்தனர்.

பகவானும், தான் கோபகந்யைகட்குச் சொன்ன வசநத்தை
ஸத்யமாக்க உகந்தருளி, யமுநாதீரம் சென்று, வநப்ரதேசத்தில்
பூர்ண சந்த்ரன் வெண்ணிலா விரிக்கும் இரவில், ஸர்வலோக
மநோஹரமாக வேணுகாநம் செய்தனன். இதைக்கேட்ட கோப
ஸ்த்ரீகள், தமது ஸர்வகார்யங்களையும் விட்டுவிட்டு, அவன் நின்ற
விடத்தை நோக்கிச்சென்றனர். அன்றிரவு பகவான் அவர்களு
டன் சிறிது காலம் ஸந்தோஷத்துடன் விளையாடிவிட்டு அந்தர்த்
தாநம் செய்தனன். அவர்களுக்குப் பரசாத் பாவியான விப்ர
லம்பத்திலேயே ஜநிக்கும் பகவானுடைய நிரந்தர த்யாநத்தைத்
தத்காலத்தில் திஞ்சித் காட்டவேண்டுமென்று திருவுள்ளம்பற்றி
அப்படிச் செய்தானன்றோ? அதனால் கோபிகாகீதை யெனும் பக
வத்விஷயமான ச்லோகரத்நங்கள் லோகத்துக்குக் கிடைத்தன.
"உன் கைங்கர்யார்த்தம் ப்ராணதாரணம் செய்கின்ற உனது
தாஸஜநங்களான நாங்கள் உன்னை நாற்புறமும் தேடுகின்றோம்.
ப்ரிய! உனது தர்சநம் கொடு. நீ கோபாலர் குமாரனன்று; லோக
ரக்ஷணார்த்தம், பிதாமஹனுடைய ப்ரார்த்தனையை அங்கீகரித்து,
ஸாத்வதகுலத்தில் அவதரித்த ஸர்வாத்மாக்களுடைய மநோகதங்
களை ஸாக்ஷாத்கரிக்கின்ற பரமேச்வரன். உன்னைச் சரணமடைந்
தவர்க்கு ஸம்ஸார பயத்தை நிவர்த்திக்கின்றதும் ஸர்வகாம
ப்ரதமுமான உனது அபயஹஸ்தத்தை எங்கள் ஶிரஸ்ஸின்மீது

வைக்கமாட்டாயோ? உனது கிங்கரீகளான எங்கட்கு உன் எழில் முகத்தைக் காட்டுவாய். ப்ரணதாளுடைய பாபங்களை நசிப்பிப்பதும், காளீயன் படத்தின்மேல் விளையாடியதுமான உன் திருவடிகளை எங்கள் சிரஸ்ஸின்மீது வைத்து எங்கள் ஹ்ருதய தாபத்தைப் போக்கு. ஓ புண்டரீகாக்ஷ! ஜ்ஞாதாக்கள் மகிழ்கின்ற உன் மதுரவசநங்களால் உன்தாஸ ஜநங்களான நாங்கள் மோஹம் அடைந்தோம். ஸம்ஸார தாபத்தால் வருந்தியவர்க்கு ஆத்மோஜ்ஜீவநத்தைத் தருவதும், என்றும் கவிகளால் வர்ணிக்கப்பட்டதும், கேட்பவர்க்குப் பாபநிவர்த்திதவாரா மங்களத்தைத் தருவதுமாகிய உனது கதையாகின்ற அம்ருதத்தை வர்ஷிப்பவரன்றோ கொடையில் பெருத்தவர்! அந்த அம்ருதபாநம் செய்து நாங்கள் உன்னை நாடுகின்றோம். ஓ ப்ரிய! உனது புன்சிரிப்பும், ப்ரேமகர்ப்பமான பார்வையும், சிந்திப்பவர்க்கு ஶ்ரேயஸ்ஸைத் தரும் விளையாட்டும், ஸங்கேத சேஷ்டைகளும், நினைக்க நினைக்க எங்கள் மநஸ்ஸுக்களைக் கலக்குகின்றன. ஓ காந்த! பசுக்களை ஓட்டிக்கொண்டு நீ காட்டிற்குச் செல்ல, உனது தாமரையடிகளைக் கற்களும் முட்களும் வருத்துமே யென்று எங்கள் மநஸ்ஸுக்கள் தளர்கின்றனவே. ஸாயங்காலம் நீ வீட்டுக்குத் திரும்புங்கால், உனது பங்கயம்போன்றதும், நீலமான அளகங்களால் சூழப்பட்டதும், கோதூளிகளால் வ்யாப்தமானதுமான முகத்தைக் கண்டு கண்டு உன்னிடம் நாங்கள் காமுற்றோம். பகலில் நீ காட்டுக்குச் சென்றால், உன்னைக் காணாத ஒவ்வொரு க்ஷணமும் எங்கட்கு யுகமாகின்றதே. குடில குந்தலங்களால் அலங்க்ருதமான உன் எழின்முகத்தைப் பார்க்கும் எங்கள் கண்கட்கு இமைகள் அளித்த பிரமனும் மூடனெனத் தோற்றுகின்றான். பதி ஸுத ஸஹோதராதி பந்து வர்க்கங்களை த்யஜித்து, உன் காநத்தால் மோஹிதரான நாங்கள், உன்னிடத்தைத் தேடிவந்தோமே. இப்படிப்பட்ட பெண்களை இருட்டில் விட்டுச்சென்றாயே. அப்படிப்பட்ட உன் தாஸஜநங்களை நீ இப்படி வருத்தலாமா? நீ எங்கள் ஆய்ப்பாடிக்கு வந்த காரணத்தால், எங்களுடைய ஸர்வ பாபமும் நசித்துப்போய்விட்டதே. ஸர்வத்ர மங்களமுண்டாயதே. உன்னிடம் ப்ரேமையே ரூபீகரித்ததென நாங்கள் இருக்கின்றோமே. எங்கள்மீது உனது கார்ப்பண்யத்தைக் கொஞ்சம் விலக்கமாட்டாயோ?"



இவ்வண்ணம் கோபிகள் பாடிப் புலம்ப, ஸ்ரீக்ருஷ்ணன் ஸாக்ஷாத் மந்மதனுக்கும் மந்மதனெனப் புன்னகை விகஸித்த முகாரவிந்தத்துடன் அவர்கள்முன் ப்ரஸந்நமானான். அவருடன் ராஸக்ரீடை முதலான லீலைகள் விளையாடினான். அவர்க்குத் தன் விரஹம்தான் முடிவில் ப்ராப்தமாகுமென்றும், அதனால் தான் அவர் நற்கதியைப் பொருந்துவார்களென்றும் காட்ட, 'நாஹம் து ஸக்யோ பஜதோ(அ)பி ஜந்தூந் பஜாம்யமீஷாம் அநுவ்ருத்திவ்ருத்தயே', "ஸகிமார்களே! ஜந்துக்கள் என்னைப் பஜித்தபோதிலும் என்னை அவர் நிரந்தரம் த்யாநிக்க வேண்டுமென்று எண்ணி அவர்முன் நான் ஆவிர்ப்பவிப்பதில்லை" என்றருளிச்செய்து, முடிவாக, 'ந பாரயே(அ)ஹம் நிரவத்யஸம்யுஜாம் ஸ்வஸாதுக்ருத்யம் விபுதாயுஷா(அ)பி வ: । யா மா(அ)பஜந் துர்ஜரகேஹஶ்ருங்கலா: ஸம்வ்ருஶ்ச்ய தத்வ: ப்ரதியாது ஸாதுநா' "நீங்கள் அறுக்கக் கூடாத க்ருஹம் எனப்பட்ட சங்கிலியை நன்றாக அறுத்துவிட்டு என்னை அடைந்தீர்களன்றோ? அப்படி என்னை நிஷ்கபடமாகப் பஜிக்கின்ற உங்களுக்கு ப்ரத்யுபகாரம் செய்ய எனக்குத் தேவர்களுடைய ஆயுஸ் கிடைத்தாலும் நான் ஶக்தன் அல்லேன். ஆதலால் உங்களுடைய ஸாதுக்ருத்யமே உங்களுடைய ஸௌஶீல்யத்துக்கு (நன்னடத்தைக்கு) என்னால் செய்யவேண்டும் ப்ரத்யுபகார ஸ்தானத்தில் நிற்கட்டும்" என்று அவர்க்குப் போதித்தனர். பகவத் கிங்கரர்கள் தாம் செய்யும் கைங்கர்யத்துக்கு யாதொரு ப்ரயோஜநத்தையும் அபேக்ஷித்தல் கூடாது. ஏனென்றால், அந்தக் கைங்கர்யம் செய்வதே ஜீவகோடிகளுடைய ஸ்வரூபம் எனும் உண்மையை ஸ்வாமி கோபீஜநங்கட்கு இப்படி உபதேசித்தான்.

**ஸ்ரீ பாரதத்தில் இக்கதை இல்லாமை.**

மஹாபாரதத்தில் ஸபாபர்வத்தில் பீஷ்மர் யுதிஷ்டிரர்க்கு ஸ்ரீ க்ருஷ்ணனுடைய திவ்யசரித்ரத்தை விஸ்தரேண சொன்னார். புராணோக்தமான ஸர்வவிஷயங்களும் பீஷ்மரால் உரைக்கப்பட்டன. ஆனாலும் கோபிகள் வ்ருத்தாந்தம் அவரால் ஸ்மரிக்கப்படவில்லை. திருவாய்ப்பாடி ஜநங்களிடம் பகவான் அநுஷ்டித்த ஸௌஶீல்யாதிகளையும், ஸர்வலோகநாதன் தன்னிடம் ரூபங்கொண்டு விளையாட, நிலமங்கையும், ஸாயங்

காலம், வநாந்தம், வஸந்தமாஸம், நறுமணம் வீசும் மலர்வர்க்கம், துளிர்கொண்ட தருக்கள், மந்தமாருதம், வெண்ணிலா, மணற்குன்றுகள், யமுனையின் நிர்மலமான தோயம் முதலியவற்றால், யதாசக்தி பகவானைப் பூஜித்தனள் என்பதையும், பகவான் சித் அசித்பதார்த்தங்கள் அனைத்தும் மெய்மறந்து தன்னை நாடும்படியாக வேணுகாநம் செய்தான் என்பதையும் பீஷ்மர் சொன்னாராயினும், ச்ருங்கார விஷயமாக ஈஷத்தும் மொழிந்தாரில்லை. அந்த ப்ரகரணத்திலேயே, ஸ்வாமியினிடம் குற்றம் காணவென்றே பிறந்த சிசுபாலனும், ஸ்வாமி நிந்தையைப் பரக்கச்செப்பினானும், தாய்முலை யுண்ணுங்கால் அவன் பூதநாசரீரநாசம் செய்ததை ஸ்த்ரீஹத்தியாக வர்ணித்தானாகிலும், பகவான் கோபீஜநங்களுடன் விளையாடியதை அவன் நினைத்தானில்லை. ஆதலால் ஹரிவம்சம், ஸ்ரீ விஷ்ணுபுராணம், ஸ்ரீ பாகவதம் முதலானவற்றுள், கோபிகள் வ்ருத்தாந்தகதநம், வக்தாக்களுக்குப் பகவானுடைய ஸௌசீல்ய ஸௌலப்யாதி வர்ணநத்தில் உண்டான ஆஹ்லாதத்தை ஹேதுவாக வுடையதோ, அல்லது பகவத் பக்தர்க்குள்ளே புமாங்களுள்பட ஸர்வஜநங்களுக்கும், பகவத் பக்திக்குப் பரமாவதியானது லோகாநுபவத்தில் ச்ருங்கார வ்ருத்தியாகப் பரிணமிக்கின்றபடியால், தாத்ருச ப்ரேமையை கோபஸ்த்ரீ வ்ருத்தாந்த வர்ணநத்தால், தாமும், புராணங்கள் கேட்போரும் அநுபவிக்க வேண்டும் எனும் இச்சையை மூலமாக வுடையதோ, யாம் அறியோம்.

மேற்சொன்ன பாரத ப்ரகரணத்தில், பகவான், சிசுபாலன் பஹு ஸ்த்ரீகள் விஷயமாகச் செய்த அதிக்ரமங்களை விவரித்திருக்கின்றார். 'யத்யதாசரதி ச்ரேஷ்டஃ தத்ததேவேதரோ ஜநஃ। ஸ யத்ப்ரமாணம் குருதே லோகஸ்ததநுவர்த்ததே' என்று லோகஸங்க்ரஹத்தைப் பஹுமாநித்த பகவான், ஸ்வயம் லோகஸங்க்ரஹத்தைச் செய்யாதொழிவனோ? புராணவக்தாக்கள், கோபவதூக்கள் பகவானுடன் விளையாடுங்கால், அவ்வவர் க்ருஹங்களிலும் இருந்தாரென்றும், ஒவ்வொரு பெண்ணினிடமும் ஸ்ரீ க்ருஷ்ணன் தனித்தனியாக விளையாடினானென்றும் சொல்வதால், ஸ்த்ரீகள் தோறும் ப்ரத்யேக சரீரங்கொண்ட சரண்யன், அவர்களில் ஒவ்வொருவர்க்கும் இரண்டு சரீரங்கள் அளித்து, ஒரு சரீரஸமூ-



ஹத்தில் தான் அந்தஃப்ரவேசம் செய்து அவர்கள் இல்லங்களில் அவர்கள் செய்யவேண்டிய வ்யாபாரங்களை லோபமற அநுஷ்டித்துவிட்டு, மற்ற சரீரங்களுடன்கூடிய அவருடைய ஆத்மாக்களுக்கு '[illegible]' என்றபடி, முன்னமே அவர்க்குத் தன்னிடம் உண்டான காமத்தை வ்ருத்திசெய்தான் என்று முடிகின்றது. பின்னால் அவர் விஷயத்தில் தான் உத்தேசித்த விப்ரலம்பத்தில், அது ஸ்திரமாய் நிற்கவேண்டுமென்று உத்தேசித்தனன் போலும். அவனுடைய அவதாரசரீரம் ஸப்த ஹாயந பரிபாகத்துடன் கூடினதாகிலும், கோபவதூக்கள் நிமித்தம் கிசோரபாவத்தை அநுகரித்தனன் என்பார்கள். பொதுவாகப் புராணங்கள் அந்தப் பெண்களுடன் ரமித்தான் என்று உரைக்கின்றன. ஸாக்ஷாத் ஸம்யோகத்தைக் கண்டோக்தியாகச் சொல்லவில்லை. இந்த லீலைகளெல்லாம் அதிமாநுஷசேஷ்டிதங்கள்; ஐச்வர்ய ப்ரதர்சநங்கள். இவற்றை இவ்வண்ணமே அங்கீகரிக்க வேண்டும். பகவான் ஸர்வேச்வரன் என்பதை நம்பாமல், ஐச்வர்யமின்றி கடிக்காத விஷயங்களைப் பகவந்நிந்தார்த்தம் ஸ்மரிப்பவர் அபராத ஸஹஸ்ரபாஜிகள் ஆவார்.

**கோபீஜநங்கட்குப் பகவான் தன் பதம் அளித்தது.**

கோபிகள் சித்தத்தில் காமத்துடன் உதித்த ப்ரேமையைக் காமத்துடனே பகவான் வ்ருத்தி செய்தனன். அது அவர்கள் ஸ்வரூபத்தில் ப்ரதிஷ்டிதமானவுடன், கம்ஸவத வ்யாஜத்தைக் கொண்டு பதினோராவது வயதில் நந்தவ்ராஜத்தை விட்டுவிட்டு மதுரைக்குச் சென்றனன். பின்னால் அந்தப் பெண் மணிகளுக்குத் தத்வார்த்தத்தை விளக்கும் பொருட்டுத் தனது ப்ரியசிஷ்யனை உத்தவரை அவரிடம் அனுப்பினான். அவரது காமத்தைக் கொன்று ப்ரேமையைப் பரபக்தியாகப் பரிணமிக்கச் செய்து அவர்க்குச் சரீராவஸாநே தனது பதமளித்தனன்.

அந்தப் பெண்கட்குக் குருவாகச்சென்ற உத்தவர் என்ன சொன்னார்:—

'ஏதாஃ பரம் தநுப்ருதோ புவி கோபவத்வோ
கோவிந்த ஏவ நிகிலாத்மநி ரூடபாவாஃ।
வாஞ்சந்தி யத்பவபியோ முநயோ வயம் ச
கிம் ப்ரஹ்மஜந்மபிரநந்தகதாரஸஸ்ய'॥

க்வேமா: ஸ்த்ரியோ வநசரீ: வ்யபிசாரதுஷ்டா:
க்ருஷ்ணே க்வசைஷ பரமாத்மநி ரூடபாவ: ।

*    *    *    *    *    *

வந்தே நந்தவ்ரஜஸ்த்ரீணாம் பாதரேணுமபீக்ஷ்ணஶ: ।
யாஸாம் ஹரிகதோத்கீதம் புநாதி புவநத்ரயம் ॥

"ஸர்வாந்தராத்மாவான கோவிந்தனிடம் இவ்வண்ணம் வேரூன்றி நிலைத்த ப்ரேமைகொண்ட இந்தக் கோபவதூக்களன்றோ மிகவும் ஸாபல்யமடைந்த ஜந்மத்துடன் கூடினவர்கள்! முமுக்ஷுக்களும், முநிகளும், எங்களைப் போன்றவர்களும் எந்த ப்ரேமையை ப்ரார்த்திக்கின்றோமோ, (அதை இவர்கள் அடைந்தார்கள்.) அநந்தனுடைய கதையில் ரஸாநுபவம் பண்ணுகின்றவனுக்கு ப்ராஹ்மணாதி உத்க்ருஷ்ட ஜந்மங்களால் ஆகவேண்டியதென்ன? காட்டில் வஸிப்பவரும், துர்வ்ருத்தத்தில் சிலருமான இந்த ஸ்த்ரீகள் எங்கே? பரமாத்மாவான க்ருஷ்ணனிடம் இவர்க்குண்டான இந்த தீர்க்கப்ரேமை எங்கே? * * * எவருடைய ஹரிகதையின் காநமானது மூன்று லோகத்தையும் புநிதமாக்கு கின்றதோ, அந்த நந்தவ்ரஜஸ்த்ரீகளுடைய பாதத்தூளை அடிக்கடி நமஸ்கரிக்கின்றேன்."

அவர் ப்ரேமையை ஆழ்வார் அநுகாணம் செய்தது.

என்றிப்படியன்றோ அவர் ஸ்வாபிப்ராயத்தை வெளியிட்டனர். பாபசங்கையை முற்றும் விலக்கிப் பிறந்திருந்த நமது ஸம்ப்ரதாய குலபதியான சடகோபனும், தமது பக்தியை ப்ரரும் காரரூபமாய் அநுபவித்தாரன்றோ? வ்ரஜஸுந்தரிகள் ஸ்ரீ க்ருஷ்ணனை த்யாநித்து த்யாநித்து, ஸஹவாஸம் என்றெண்ணி, அவனுடைய சேஷ்டைகளைத் தாம் அநுகரித்தவண்ணம் ஆழ்வாரும், "இனவேமலை யேந்தினேன் யானேயென்னும், இனவேறுகள் செற்றேனும் யானேயென்னும், இனவான்கன்று மேய்த்தேனும் யானேயென்னும், இனவானிரை காத்தேனும் யானேயென்னும்", என்று ஸ்ரீ க்ருஷ்ணனெனத் தன்னையும் எண்ணி நடித்தனர். தன்னை நாயகியாக நினைத்து, அவன் விரஹத்தைத் தாளாது, "சாயக்குருந்தமொசித்த தமியற்கு, மாயச்சகடமுதைத்த மணாளற்குப், பேயைப் பிணம்படப் பாலுண் பிரானுக்கென், வாசக்குழலி யிழந்தது மாண்பே" என்றும், "கங்



குலும் பகலும் கண்டுயிலறியாள் கண்ணநீர் கைகளாலிறைக்கும், சங்குசக்கரங்களென்று கைகூப்பும் தாமரைக்கண்ணென்றே தளரும்," என்றும், இன்னும் பலவிதமாகவும் முறையிட்டனர்.

திருமங்கைமன்னனும் "கல்லெடுத்துக் கன்மாரி காத்தாயென்றும், காமருபூங் கச்சியூரகத்தாயென்றும், * * * மல்லடர்த்து மல்லரை யன்றட்டாயென்றும் * * சொல்லெடுத்துத் தன்கிளியைச் சொல்லேயென்றும், துணைமுலைமேல் துளிசோரச் சோர்கின்றாளே," என்று இவ்விதமாகப் பலபாசுரங்கள் பாடினர். சூடிக்கொடுத்தாள் வ்ரஜாங்கனைகளுடைய அநுபவத்தைத் தானும் அடைந்தாளென்பதைச் சொல்லவும் வேண்டுமோ?

பதியொருவற்கே தாம் சேஷபூதரென்றும், பதிவிஷயமாகப் பாரதந்த்ரியமே தமக்குப் பொருந்திய ஸ்வபாவமென்றும், பதியினிடம் ப்ரேமையே தமக்கு உயிரென்றும், முன்காலத்தில் நமது ஸ்த்ரீகள் நினைத்திருந்தார்கள். ஸீதை, ஸாவித்ரி, தமயந்தி முதலானவர்கள் இந்த அபிப்ராயத்தை ஆதரித்தனர். இந்த ரூபமான ஸம்பந்தத்தைப் பக்தர்கள் பகவானிடம் அபேக்ஷித்தனர். இப்படிப் பகவதநுபவம் செய்தவர்க்குள், கோபகந்நிகைகளுக்கு ஸமமானவர் இருந்ததில்லை. அவ்வநுபவத்தின் லேசத்தை அடைய ஸ்ரீ க்ருஷ்ணசைதந்யரெனும் வங்கதேசத்து ஆசார்யன் மிகவும் வேண்டினர்.

இப்படி வ்ரஜஸ்த்ரீகளுக்குப் பகவான் அந்யத்ர அத்ருஷ்டமாகத் தன்னிடம் ப்ரேமையுண்டாகும்படி அநுக்ரஹித்து, அதை ஸ்திரப்படுத்தி, அதில் நிவர்த்திக்கவேண்டிய அம்சங்களை நிவர்த்திப்பித்து, அதைப் பரபக்தியாகப் பரிணமிக்கச் செய்ததும் ஹேமந்தருதுவின் மாஸங்களில் என்று தெரிகின்றது. பகவத் கைங்கர்யரூபமான நிஷ்காம கர்மங்களும், அவன் ஸம்பந்தமான ஜ்ஞாநமும், ப்ராணிகளுக்கு ஸ்வரூப ஸம்பாதநத்துக்கு அநுகூலமாகும்படியை ஈச்வரன் தன்னுடைய முக்யாவதாரங்களில் மேல் விவரித்தபடி நமக்குக் காட்டியருளினன்.

தை மாஸம் ஸ்ரீ வீரராகவன் அவதாரம்.

இந்தத் தைமாஸத்தில் தான் இவ்விரண்டு அவதாரங்களும் ஸங்கல்பயோகம் எனும்படி ஸ்ரீவாஸுதேவன் எவ்வுள்மாநகரத்தில் ஆவிர்பவித்தானென்று அந்தத் திவ்யதேசபுராணம்

சொல்லும். தை அமாவாஸ்யையன்று, ராவணஸம்ஹாரம் செய்தவுடன் திருவெவ்வுளூரில் தன்னைத் தர்ஶிக்கத் தவம்புரிந்த ஶாலிஹோத்ரரெனும் ருஷிக்கு ஸ்வாமி ஸேவை ஸாதித்தனன் என்பது புராணகதை. ருஷியின் பூஜையைக் கைக்கொண்டு, அவரை வ்யாஜீகரித்து லோகக்ஷேமத்தின் பொருட்டுப் பகவான் தனக்கு ஶயநஸ்தாநத்தை "எவ்வுள்" எனக்கேட்டருளியபடி, ஊருக்கும் எவ்வுளூர் என நாமம் கிடைத்தது. இப்படி அவதரித்த அர்ச்சா ரூபியான எம்பெருமானைக் குறித்துத் திருமங்கைமன்னன்,

> 'காசையாடை மூடியோடிக் காதல்செய்தானவனூர்
> நாசமாக நம்பவல்ல நம்பி நம்பெருமான்
> வேயினன்ன தோள்மடவார் வெண்ணெயுண்டானிவனென்
> றேசநின்ற வெம்பெருமா னெவ்வுட்கிடந்தானே'.

என்று பாடியருளினார். ராவணன் காஷாயம் தரித்துத் தன் நிஜ ரூபத்தை மறைத்துப் பஞ்சவடிக்கு த்வரிதமாகச் சென்று, பகவானுடைய திவ்யமஹிஷியினிடம் காமங்கொண்டு, அவளைக் கவர்ந்து தனது ஊராகிய லங்கைக்குப் போய்ச் சேர்ந்தான். பரஸ்த்ரீயினிடம் ஆசைகொள்ளல் கொடியபாபம். ராவணனோ, ஸாக்ஷாத் ஸர்வலோகநாதனுடைய பத்நீயினிடம் காதல்செய்தான். அதுவும் ஸந்யாஸிவேஷம் பூண்டு செய்தனன். இந்த அபராதத்துக்குத் துல்யமாக மற்றொன்றை ஸ்மரிக்கவும் ஒண்ணாது. கம்பன் பாடியபடி, சீர்மகளைத் திருமகளைத் தேவர்க்கும் தம்மோயைத் தெய்வக் கற்பின் பேர்மகளைத் தழுவ இச்சித்து உயிர் கொடுத்தும் பழி கொண்டனன் இலங்கையர்கோன். இன்னும்,

> 'ராகவத்வே ஽பவத் ஸீதா ருக்மிணீ க்ருஷ்ணஜந்மநி
> அந்யேஷு சாவதாரேஷு விஷ்ணோரேஷாநபாயிநீ' ।

எனும்வண்ணம், ஸீதையோ லக்ஷ்மீ; பகவானுக்கே உரியவள் என்பதைத் தசக்ரீவன் கண்டானில்லை. கம்பன் பாடியபடி, 'உறைந்த பாற்கடல் சேக்கை உடன் ஒரீஇ, அறம்திறம்புமென்றய்யன் அயோத்தியில், பிறந்தபின்பும் பிரிவிலள் ஆயினள்' ஸீதை. அவளைப் பெருமானைவிட்டுப் பிரிக்க யத்நித்தான் ராவணன்.

> 'அநந்யா ராகவேணாஹம் பாஸ்கரேண ப்ரபா யதா,' என்றும்
> 'அஹம் ஹி யதாபூர்வம் தந்வத்தீம் ஸாவித்ரீவ ஸுவ்ரதா ।
> ஸுதந்த்ர்ய[illegible] ப்ராய[illegible]' ।



என்றும், பிராட்டியே தன்ஸ்வரூபத்தை ராவணனுக்குச் சொன்னாள். அவன் அதைக் கேட்டானில்லை. ஹநுமானுக்கோ, 'ராவ[illegible]', என்று தோன்றியது. அவர் சித்தம் சுத்தமாக நின்றது. ராவணனுடைய சித்தம் காமத்தால் கெட்டது. ஆதலால், இறையும் அகிலகில்லேனென்று அவன் திருமார்பில் உறையும் அலர்மேல் மங்கைமேல் அவன் காமுற்றனன். பகவானிடம் அஸஹ்யாபராதம் பண்ணினன்.

> 'விதித: ஸ ஹி தர்மஜ்ஞ: ஶரணாகதவத்ஸல:, என்றும்
> ஸக்ருதேவ ப்ரபந்நாய தவாஸ்மீதி ச யாசதே ।
> அபயம் ஸர்வபூதேப்யோ ததாம்யேதத் வ்ரதம் மம । என்றும்
> மித்ரபாவேந ஸம்ப்ராப்தம் ந த்யஜேயம் கதஞ்சந । என்றும்
> ஆநயைநம் ஹரிஶ்ரேஷ்ட தத்தமஸ்யாபயம் மயா ।
> விபீஷணோ வா ஸுக்ரீவ யதி வா ராவணஸ்ஸ்வயம் । என்றும்

பிராட்டி வசநமும் பகவத்வசநமும் இருக்கையிலும், ராவணன் பகவான் திருவடிகளில் வணங்கினானில்லை. பகவானுடைய அத்யந்த நிக்ரஹத்துக்குப் பாத்ரனாய்விட்டான். 'ப்ரஹ்மா ஸ்வயம்பூச் சதுராநநோ வா, ருத்ரஸ் த்ரிநேத்ரஸ் த்ரிபுராந்தகோ வா । இந்த்ரோ மஹேந்த்ரஸ் ஸுரநாயகோ வா, த்ராதும் ந ஶக்தா யுதி ராமவத்யம்' । என்று ஹநுமத்வசநத்தைக் கேட்டுத் தான் பகவந்நிக்ரஹத்தை ஸம்பாதித்துக்கொண்டபிறகு அதன் பலமாக வரப்போகின்ற தன்னுடை ஸமூலநாசத்தினின்று தன்னை ரக்ஷிப்பவர் யாருமில்லையென்பதை நினைத்தானில்லை. ஸீதாபிராட்டியும்,

> 'ப்ரீதம் [illegible] மதா[illegible]
> ஸஹாம மதோவா வாருணஸ்ய ராஜ்ஞ: ।
> அஸம்ஶயம் [illegible]
> [illegible] காலபாஶ[illegible]' । எனும் ஶ்லோகத்

தால், அதே அர்த்தத்தை ராவணனுக்குத் தெரிவித்தாள். ஒன்றும் பயன்படவில்லை. ராவணனை, அவன் பந்துவர்க்கம், ஸேனை, நகரம்

உள்பட அவன் அபராதநிமித்தம் பகவான் நாசம்செய்தனன். 'ஸீஷாஹூாசவாதஃ வவஹெ, ஸீஷொஷெதி ஸூமயஃ, ஸீஷாஹூாஷ்டுி ஜெஶஷ்ரூ, ஶ்ரதாஶயாவகி வஜுஃ', எனும் ப்ருதிவாக்யமும், அதை அநுஸரித்த 'ஶாஸ்த்ராணிவாவகஸ்ஷஶநாயகாஸாஷயஃ ஷ்லக்ஷ்தாஶயிகவ ஹெ யவராயஷொ ஸிஹ்யஃ' । எனும் தேசிகன் ஶ்லோகமும் ராவணனுக்குப் பயன்படவில்லை. அவனை அழித்ததில் பகவானுடைய பரத்வம் ப்ரகாஶித்தது. கோபீஜநங்களிடம் அவனது ஸௌலப்யம் விளங்கியது. 'பத்துடையடியவர்க் கெளியவன்' என்று ஆழ்வாரும் ஸாதித்தனரன்றே? அப்படியே தேசிகனும், 'நிஷாதநாரஶக்தா கவிகுலவதிஃ காவிஶவரீ குசெஷஃ காஜஹாஸா வ்ரஜயவதயோ ஶாஜக்ருதி । கூவிஷாரம் நிஜுஷம் வ்ருஷகிரிவநாநதிவீ வ்யாஸஞெஷஃ ஸொராமதாஸஃ வ்யஸநஹகவெ ஸஶயவ' ॥ என்று, குஹன், ஸுக்ரீவன், ஶபரீ, குசேலர், சந்தநம் அளித்தகுப்ஜை, கோபகந்நிகைகள், மாலாகாரன், இப்படிப்பட்ட அதிநிக்ருஷ்ட ஜநங்களுடன் பகவான் ஸமத்வத்தை வஹித்து, தான் பக்தர்க்கு ஸுலபன் என்று காட்டியருளினன். ஆதலால் பக்தாக்ரேஸரர்களான வேயினன்ன தோண்மடவார் சேகரித்த வெண்ணெயை அவருடைய் ஹ்ருதயத்துடன் தனக்கென்று அவன் திருவுள்ளம்பற்ற, அவனுடைய ஸௌலப்யத்தை அறிந்த அப்பெண்கள் ஏசவும், அதையும் எதிர்நின்று ஒருபூஜையென அங்கீகரித்தனன். ஆகையால், ஶாஸ்த்ரஸதி ஸௌலப்யம் ஸ்ரீ வீரராகவனிடம் மிகவும் ப்ரகாஶிப்பதை ஆழ்வார் ஸ்வயம் ஸாக்ஷாத்காரம்செய்து நமக்கும் காட்டியருளினர்.

அந்தப் பகவான் அவதரித்ததும், அவதார ப்ரயுக்தமான மஹோத்ஸவத்தைக் கண்டருளுவதும், இந்தத் தைமாஸத்திலன்றோ? அந்தத் திவ்யதேசத்தில் அதிகாரம் செலுத்திய யாரோ ஒரு சிற்றரசனால் பகவானுடைய தீர்த்த திநம், அவன் நக்ஷத்ரமான ஶ்ரவணத்தினின்று பூரட்டாதியாக மாற்றப்பட்டிருக்க வேண்டும்.

---

ஸ்ரீ:.

ஸ்ரீமதெ ஶடகொபாய நம: ஸ்ரீமதெ ராமாநுஜாய நம:.

# ஸ்ரீ ஸ்தோத்ர ரத்நம்.

விராஜமாநோஜ்ஜ்வலபீதவாஸஸம்
ஸ்மிதாதஸீஸூநஸமாமலச்சவிம் ।
நிமக்நநாபிம் தநுமத்யமுந்நதம்
விஶாலவக்ஷ:ஸ்தலஶோபிலக்ஷணம் ॥ 32.

பகவானுடைய திவ்ய மங்கள விக்ரஹத்தை த்யாநம் செய்
யத் தொடங்கி முதலில் அவனுடைய பாதாரவிந்தத்தின் ஸாக்ஷாத்
காரத்திலும் ஸம்ஶ்லேஷத்திலும் தமக்குள்ள த்வரையை ஒரு
வாறு வெளியிட்டு, ஸ்ரீ ஆளவந்தார், தம்முடைய ஸர்வ வித்
கைங்கர்யத்திற்கும் உத்தேஶ்யமான ஸ்ரீ பகவானை, திவ்யாவய
வங்களடங்கிய திவ்யமங்கள விக்ரஹம் திவ்யாயுதங்கள் திவ்ய
மஹிஷீ, திவ்யாநுசரர்கள் இவர்களுடன் கூடினவனாக, இது முதல்
14 - ஶ்லோகங்களினால் விஶதமாக அநுஸந்தாநம் செய்கிறார்.
அவைகளுள் முதல் ஶ்லோகமான இந்த ஶ்லோகத்தினால் அவ
னுடைய திவ்ய ஸ்வரூபத்தின் ஸமுதாய ஶோபை அநுபவிக்
கப்படுகின்றது.

இந்தப் பதினாறு ஶ்லோகங்களும் ஓரே அந்வயம். இதி
லிருந்து பதினைந்தாவதாகிற 46 - வது ஶ்லோகத்திலிருக்கும்
'ஸமீக்ஷ்ய' என்னும் பதத்துடன், இவைகளிலுள்ள இரண்டாம்
வேற்றுமைப் பதங்களெல்லாம் அந்வயிக்கின்றன. 'ஸ்வஸம்ஶ்ரிதம் ஸமீக்ஷ்யைவாநந்தம் கதா ப்ரஹர்ஷயிஷ்யாமி - '. (இப்ப
டிப்பட்ட உனக்கே ஸார்வகாலிகமாகக் கைங்கர்யம் செய்துகொண்டு
எப்பொழுது நான் அபரிச்சிந்நமான ஆநந்தத்தை அநுபவிக்
கப்போகின்றேன்?) என்பது வாக்யத்தின் தொடர்.

“ஸத்யம் ஜ்ஞாநமநந்தம் ப்ரஹ்ம”

(ப்ரஹ்ம மென்பது ஸத்ய ஸ்வரூபம் ஜ்ஞாந ஸ்வரூபம் அநந்த ஸ்வரூபம்) என்றும்,

“யதோ வா இமாநி பூதாநி ஜாயந்தே - யேந ஜாதாநி ஜீவந்தி - யத் ப்ரயந்த்யபிஸம்விஶந்தி - தத்விஜிஜ்ஞாஸஸ்வ - தத் ப்ரஹ்ம”

(ஸ்தாவர ஜங்கமங்க ளடங்கிய இந்த ப்ரபஞ்சம் முழுவதற்கும் ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரம் ஸம்ஸார விமோசநம் ஆகிய இவை எதனிடத்திலிருந்து உண்டாகின்றனவோ, அதுதான் ப்ரஹ்மம்) என்றும் வேதாந்தங்களில் பகவத் ஸ்வரூபம் நாமரூபமற்றதாகப் படிக்கப்பட்டிருந்த போதிலும், பக்தர்களுக்குப் புருஷாகாரத்துடன் கூடினவனாகவே அவன் ப்ரகாஶிக்கிறானாதலால், இவ்விடத்தில், ஸ்ரீ ஆளவந்தார் அவனைத் திவ்யமங்கள விக்ரஹ யுக்தனாகவே அநுஸந்திக்கிறார்.

“ந தே ரூபம் ந சாகாரோ நாயுதாநி ந சாஸ்பதம் ।
ததாபி புருஷாகாரோ பக்தாநாம் த்வம் ப்ரகாஶஸே ॥”

என்று சொல்லப்பட்டிருக்கிறதன்றோ?

“ஆதித்யவர்ணம் தமஸ: பரஸ்தாத்”
“தஸ்ய மஹாரஜதம் வாஸ:”
“தஸ்ய யதா கப்யாஸம் புண்டரீகமேவமக்ஷிணீ”
“ஹ்ரீஶ்ச தே லக்ஷ்மீஶ்ச பத்ந்யௌ”

இவை முதலிய ஶ்ருதி வாக்யங்களும் இதற்கு ப்ரமாணம்.

விராஜமாநோஜ்ஜ்வலபீதவாஸஸம் - விஶேஷித்த ஒரு ஶோபையுடன் கூடியும் ஜ்வலித்துக்கொண்டும் இருப்பதான பீதாம்பரத்தை யுடைய. பீதாம்பரத்திற்கு இயற்கையாகவே ஒருவித ஶோபையும் ப்ரகாஶமும் இருந்த போதிலும், இவ்விடத்தில் ஶ்யாம வர்ணமுள்ள விக்ரஹத்துடன் ஸம்பந்தித்திருப்பதனால்



அநிர்வசநீயமான ஒரு பரபாக ஶோபை அதனிடத்துத் தோன்றுகிறது என்பது தாத்பர்யம்.

ஸ்மிதாதஸீஸூநஸமாமலச்சவிம் - மலர்ந்திருக்கும் அதஸீ புஷ்பத்திற்குத் துல்யமான உஜ்வல காந்தியை யுடைய. நீல மேகம் போல ஶ்யாமளமாக இருப்பதனால் இந்த விக்ரஹம் அதஸீ புஷ்பத்திற்கு (காயாம்பூவிற்கு) ஒப்பிடப்பட்டிருக்கின்றது.

ஸ்ரீ ஆழ்வான், பகவானுடைய திவ்யமங்கள விக்ரஹத்தின் லாவண்யத்தை அநுஸந்திக்கும் பொழுது, அதன் அந்யாத்ருஶமான ஶோபையைப் பார்த்து மயங்கி, ‘இது என்ன ஶோபை' கேவலம் ஸ்வர்ணம் போல் பீதமென்றுவது, மாரகதம் போல ஹரித மென்றுவது, அஞ்ஜநம் போல நீலமென்றுவது சொல் வதற்குக் கூடவில்லையே! ஒருகால் ஸ்வர்ணம் மாரகதம் அஞ்ஜ நம் என்னும் மூன்றையும் நோக்கி, அவைகளைப் பாத்ரங்களில் வைத் துக் கடையுங்காலத்தில், தயிர் கடையும் பொழுது அதனிடத்துத் தோன்றும் வெண்ணெய் போல இதனிடத்தில் தோன்றும் ஸாராம் ஶங்களை எடுத்துக் கலந்து அதனால் இந்த லாவண்யம் நிர்மிதமாகி இருக்குமோ?' என்று உல்லேகித்திருக்கிறார்.

“கநகருசகாஞ்ஜநப்ரவாணம்
ஶயநஸமுத்தித ஸாரஸௌபநாதம் ।
ஜயதி கிமபி ரூபமஸ்ய தேஜோ
வநமிஹிரம்ஶுநவாம்ஶுஜோர்ணவாஹோ: ॥”

அதாவது - அந்தத் தேஜஸ், ஸர்வோத்க்ருஷ்டமாக இருக்கின்றது என்று தாத்பர்யம்.

நிமக்நநாபிம் - உட்குழிந்திருக்கும் நாபியை யுடைய. ‘நான்கு பக்கங்களிலும் ப்ரவஹித்து ஓடும் பகவானுடைய ஸௌந் தர்யமாகிற அம்ருத ஸாரத்தின் சுழலோ இது?' என்று ஶங்கிக் கும்படி இருக்கின்றது என்பது குறிப்பு.

தநுமத்யம் - க்ருஶமான உதரத்தை யுடைய. ‘ஸமஸ்த லோகங்களுக்கும் இருப்பிடமாக இருக்கும் இந்த உதரம், எவ்

சகாஸதம் ஜ்யாகிணகர்கஶை: ஶுபை-
ஶ்சதுர்பிராஜாநுவிலம்பிபிர் புஜை: ।
ப்ரியாவதம்ஸோத்பலகர்ணபூஷண-
ஶ்லதாலகாபந்தவிமர்தஶம்ஸிபி: ॥ 33.

விதமாக இவ்வளவு கார்ஸ்யத்தை அடைந்திருக்கிறது?' என்று ஒருவித ஆஸ்சர்யத்தை இந்தப் பதம் த்யோதிப்பிக்கின்றது.

"ஸர்வே! யத்ர நிவஸந்தி ஜந்தவ:
ப்ராணிகஸ்யபி கந்தராஶயம் ॥"

ப்ரளயகாலத்திலே ஸகல ஜகத்தும் எம்பெருமானுடைய உதரத்தில் வஸிக்கின்றது என்பது ப்ரமாணப்ரஸித்தம்.

உந்நதம் - உயர்ந்து நிற்கும். உயர்ந்த ஆக்ருதியானது விஶேஷித்த காம்பீர்யத்திற்கு ஓர் அடையாளம்; எல்லாரையும்விட எல்லா விஷயத்திலும் அதிகன் என்பதையும் குறிக்கின்றது.

விஶாலவக்ஷஸ்ஸ்தலஶோபிலக்ஷணம் - விஶாலமான மார்பை ஶோபிக்கச்செய்து கொண்டு நிற்கும் அஸாதாரணசிந்ஹங்களையுடைய. எம்பெருமானுடைய மார்பு, லக்ஷ்மிக்கு வாஸஸ்தாநமாயும், கௌஸ்துபத்தினால் அலங்கரிக்கப்பட்டதாயும், ஸ்ரீவத்ஸம் வநமாலை இவைகளுடன் ஸம்பந்தமாயும் இருக்கின்றதன்றோ? இவைதாம் இவ்விடத்தில் அஸாதாரண லக்ஷணங்களாகச் சொல்லப்பட்டிருக்கின்றன.

33. புஜமத்யத்தின் ஶோபையை அநுஸந்தாநம் செய்து விட்டு, வீரரஸத்தினாலும் ஶ்ருங்காரரஸத்தினாலும் சித்ரிதமாக இருக்கும் புஜங்களுடைய ஶோபையை அநுஸந்தாநம் செய்கிறார்.

ஜ்யாகிணகர்கஶை: ஆஜாநுவிலம்பிபி: ப்ரியாவதம்ஸோத்பலகர்ணபூஷணஶ்லதாலகாபந்தவிமர்தஶம்ஸிபி: ஶுபை: சதுர்பி: புஜை: சகாஸதம் [வில் நாணியின் உராய்தல் காரணமாக ஜநித்திருக்கும் தழும்புகளினால் கரடுமுரடுகளாயும், முழங்காலளவும் நீண்டவைகளாயும், வீரபத்நீ ஸம்பந்தத்தை ஸூசிப்பிக்கக்கூடிய சிந்ஹங்களை உடையவைகளாயும், தர்ஶந



மாத்ரத்தினால் மங்களகரங்களாயுமுள்ள நான்கு புஜங்களால் விளங்கிக்கொண்டிருக்கும்.]

ஜ்யாகிணகர்கஶை: - அவதார தஶையில் விரோதிகளை நிரஸிக்கும்பொருட்டுக் கணக்கற்ற யுத்தங்களைப் பகவாந் செய்திருப்பது புராண ப்ரஸித்தம். அந்த யுத்தங்களில் நேர்ந்த வில் நாணியின் வடுக்கள், அந்த அவதார தஶையில் பகவானுடைய திருக்கைகளை அலங்கரித்திருந்தன. அந்த வடுக்களே பரத்வதஶையிலும் திருக்கைகளில் ஶோபிக்கின்றன என்பது, ஸ்ரீ ஆளவந்தாருடைய திருவுள்ளம். பரத்வதஶையிலும் அவதாரதஶையிலும் எம்பெருமானுடைய திருமேனிக்கு யாதொரு பேதமுமில்லை யென்பது இங்கே விவக்ஷிதம். நிகிலஹேய குணங்களுக்கும் ப்ரத்யநீகனும் ஸகல கல்யாண குணங்களுக்கும் ஏகநிதியாயுமுள்ள பகவானுடைய அவதாரம், இந்த்ரஜாலம் போலப் பொய்யன்று உண்மையே என்றும், அவதரிக்கும்பொழுது எவ்வித ஜ்ஞாந ஸங்கோசமுமில்லாமல் தனது ஐஸ்வர்யத்திற்கு இயற்கையான ஸ்வபாவத்தை விடாமலே அவன் அவதரிக்கிறானென்றும், அவனுடைய அவதார விக்ரஹம் ஸத்வம் ரஜஸ் தமஸ் ஆகிய மூன்று குணங்களினால் ஏற்பட்டிருக்கும் ப்ராக்ருத விக்ரஹமன்றிக்கே அப்ராக்ருதமான ஶுத்த ஸத்வமயமென்றும், அவனுடைய அவதாரத்திற்குப் புண்ய அபுண்ய ரூபங்களான கர்மங்கள் காரணமல்ல தனது ஸங்கல்பமே காரணமென்றும், அவனுடைய அவதாரத்தின் பலங்களும் ஸாம்ஸாரிக ஸம்பத்துக்களான ஐஹிக போகங்களல்ல ஸாது ஸம்ரக்ஷணம் துஷ்ட நிக்ரஹம் தர்ம ஸம்ஸ்தாபநம் முதலியவைகளே யென்றும், இப்படி ஸ்வரூபத்தினாலும் ப்ரகாரத்தினாலும் த்ரவ்யத்தினாலும் காரணத்தினாலும் ப்ரயோஜநத்தினாலும் எம்பெருமானுடைய அவதாரம் திவ்யமே என்று ஸ்ரீ பகவத்கீதையில்

"ஜந்ம கர்ம ச மே திவ்யம்"

என்னும் வாக்யத்தினால் ஸ்ரீ பகவானே விளக்கி யிருக்கிறார். ஆகையினால், இவ்விடத்தில், பரத்வ விக்ரஹத்திற்கும் அவதார விக்ர

ஹத்திற்கும் ஒருவித அபேத அநுஸந்தாநத்தை ஸ்ரீ ஆளவந்தார் செய்வது அப்ரமாணமன்று.

ஆஜாநு விலம்பிபி: - முழங்காலளவும் நீண்டுள்ள.

"ஆயதாஸ்ச ஸுவ்ருத்தாஸ்ச பாஹவ: பரிகோபமா:"
[எம்பெருமானுடைய திருக்கைகள் நீண்டும் ஸுவ்ருத்தங்களாகவும் பரிகங்களுக்குத் துல்யங்களாகவும் இருக்கின்றன] என்கிறபடி நீண்ட கைகளை யுடையவன் என்பது தாத்பர்யம்.

"பீதாம்பரம் ச [illegible]-
ஆஜாநுலம்பிபுஜமாயதகர்ணபாஶம் ||"

இத்யாதியாகவன்றோ எம்பெருமானுடைய திவ்ய மங்கள விக்ரஹ யோகத்தைப் பக்தர்கள் அநுஸந்தாநம் செய்திருக்கிறார்கள்?

ப்ரியாவதம்ஸோத்பலகர்ணபூஷணச்லதாலகாபந்தவிமர்தஶம்ஸிபி: - எம்பெருமானுடைய வீர பத்நீ ஸம்பந்தம் இதனால் சொல்லப்படுகின்றது. பகவானுடைய ப்ரியையாவது - ஸாக்ஷாத் லக்ஷ்மீ; அவள் திருக்காதுகளில் கர்ணாவதம்ஸமாக நீலோத்பல புஷ்பத்தைத் தரித்துக்கொண்டிருக்கிறாள்; அதுவே ஒரு கர்ண பூஷணமாகின்றது; விலாஸ காலங்களில் அதில் ஶ்லதங்களாய் (அவிழ்ந்து தொங்குபவைகளாய்) நிற்கின்றன அவளது அளகங்கள்; இயற்கையாகவாஸனையை யுடையவைகளாயும் இந்த நீலோத்பல புஷ்ப ஸம்பந்தத்தினால் ஒருவித அஸாதாரண வாஸனையை அடைந்தவைகளாயுமுள்ள இந்த அளகங்கள், போக ஸமயங்களில் எம்பெருமானுடைய திருக்கைகளில் ஸம்பந்தப்பட்டிருக்கின்றன என்பது தாத்பர்யம். உபதாநமாக அங்கீகரித்ததனாலோ அல்லது ஆலிங்கநாதிகளில் ஸம்பந்தப்பட்டதனாலோ அளகங்களுடைய விமர்த்தம் கைகளுக்கு உண்டாகக்கூடும். அப்படிப்பட்ட அவஸரம்தான் இங்கே அநுஸந்தாநம் செய்யப்படுகின்றது.

ஶுபை: - மங்கள காரங்களான. அதாவது - 'ஆஶ்ரிதர்களுக்கு ஸதா மங்களங்களைக் கொடுக்கக்கூடிய' என்பது தாத்பர்யம். அல்லது, ஔதார்யம் வீர்யம் ஸௌந்தர்யம் முதலிய குணங்கள் பொருந்தியவை என்று சொல்லவும் கூடும்.



உதக்ரபீநாம்ஸவிலம்பிகுண்டலா-
லகாவலீபந்துரகம்புகந்தரம் |
முகஶ்ரியா ந்யக்க்ருதபூர்ணநிர்மலா-
ம்ருதாம்ஶுபிம்பாம்புருஹோஜ்ஜ்வலஶ்ரியம் || 34.

சதுர்பிர் பாஹுபிர் ஜுஷ்டாகாரதம் - நாலு கைகளினால் விளங்கிக்கொண்டிருக்கும். பரரூபத்திலும் எம்பெருமானுக்கு நாலு கைகளே என்பது ப்ரமாண ஸித்தம்.

"சதுர்புஜை: ஶ்யாமளாங்கை: ஶ்ரீபூம்யா ஸஹ நீளயா"
[நான்கு கைகளுடனும் நீலமேக ஶ்யாமளங்களான அங்கங்களுடனும் ஸ்ரீ பூமி நீளா ஆகிய தேவிகளுடனும்] என்று விஷ்வக்ஸேந ஸம்ஹிதையில் சொல்லப்பட்டிருக்கின்றது.

"[illegible] பாஹூ"
என்னும் புருஷஸூக்த வாக்யம் முதலியவைகளில் சொல்லப்படும் த்விபுஜத்வம், ப்ரகரணம் முதலியவைகளை அவலம்பித்து 'வேறு விஷயத்தைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்கின்றது' என்று ஆசார்யர்களால் நிர்வாஹம் செய்யப்பட்டிருக்கின்றது.

34. பீதாம்பரம் முதலாகத் திருமார்பு திருக்கைகள் இவைகளை அநுபவித்துவிட்டு, இப்பொழுது திவ்ய கண்டத்தின் ஶோபையை யும் திருமுகத்தின்ஶோபையையும் அநுபவிக்கிறார். தேவதைகளுடைய விக்ரஹவர்ணனைகளில் பாதாதிகேசமாக அவயவங்களை ஆரோஹண க்ரமமாக அநுஸந்திக்க வேண்டுமென்று கவிகளுக்குள் ஒரு ஸமய முண்டு. அதை அநுஸரித்தே இவ்விடத்தில் ஆரோஹணக்ரமம் அவலம்பிக்கப்பட்டிருக்கின்றது. மநுஷ்யர்களின் ரூபத்தை வர்ணித்தால் கேசாதிபாதமாக அவரோஹண க்ரமத்தை அநுஸரிப்பது ஸம்ப்ரதாயம்.

இந்த ஶ்லோகத்தில், இரண்டு த்விதீயாந்த பதங்களை இருக்கின்றன. இவை யிரண்டுக்கும் பின்வரும் 'ஸவநம்' என்னும் ஶப்தத்துடனே அந்வயம்.

உதக்ரபீநாம்ஸவிலம்பிகுண்டலாலகாவலீபந்துர கம்புகந்தரம் - உந்நதங்களாயும் பருத்துமிருக்கும் தோள்கள்

வரையில் தொங்கிக்கொண்டிருக்கும் குண்டலத்தினாலும் சூர்ண குந்தளங்களினாலும் ஸுந்தரமாயுள்ள ஶங்கம்போன்ற கழுத்தை யுடைய. 'கம்பு' என்பது ஶங்கத்திற்குப் பெயர். அது போல அபிராமமான கழுத்து 'கம்புகந்தரம்' என்று சொல்லப் படுகின்றது; அதாவது - மூன்றுரேகைகளினால் அலங்கரிக்கப் பட்ட என்று தாத்பர்யம்.

"ரேகாத்ரயாங்கிதா க்ரீவா கம்புக்ரீவேதி கத்யதே" [மூன்று ரேகைகளுள்ள கழுத்துக்கு 'கம்புக்ரீவா' என்று பெயர்] என்று சொல்லப்பட்டிருக்கின்றது.

குண்டலம், ஸ்வர்ணமயமானதனால், ஸ்வர்ணவர்ணமுள்ளது; அளகங்கள் கறுப்புவர்ணமுள்ளவை; இவை இரண்டையும் இங்கே சேர்த்துச் சொன்னது, பரபாக காந்தியை வ்யஞ்ஜிப்பிக்கும் பொருட்டே.

"ஸகலஸம்ஸஞ்ஜித கநககடகாங்கிதாவதீர்ண
கர்ணாபரணாஞ்சகந்தர:"

என்று ஸ்ரீ ஆழ்வான் அநுஸந்தித்திருக்கிறார்.

ஸுவஶ்ரியா ந்யக்க்ருத ஸம்பூர்ண நிர்மல சந்த்ர தாமரஸ ஸமுஜ்ஜ்வலஶ்ரியம் - தனது முக காந்தியினால் திக்கரிக்கப்பட்ட பூர்ண நிர்மல சந்த்ர பிம்பத்தையும் தாமரஸ புஷ்பத்தினுடைய உஜ்ஜ்வல ஶோபையையும் உடைத்தாயிருக்கிற. அதாவது - பூர்ண சந்த்ரனே அதிரமணீயம்; அந்தச் சந்த்ரன் நிர்மலனாக (அதாவது - களங்கமற்றவனாக) இருந்தால், ரமணீயதரனாவான். அந்தச் சந்த்ரன் கூடப் பகவானுடைய முகத்திற்கு ஈடாகான் என்பது தாத்பர்யம். அதேமாதிரி, தாமரஸ புஷ்ப ஸாமாந்யமே அழகான ஒரு பொருள்; அந்தப் புஷ்பம் அப்பொழுதுதான் மலர்ந்ததாகவும் ஸௌகுமார்யம் முதலிய குணங்கள் பொருந்தினதாகவுமிருந்தால், அதன் ஶோபை அளவற்றதாகவே இருக்கும். அப்படிப்பட்ட உஜ்ஜ்வல ஶோபையும் இந்த முகஶோபைக்கு ஒப்பாகாது என்பதுகருத்து.

எஸ். வாஸுதேவன்.

## ப்ரஹ்மஸூத்ரத்தில் ஓர் சோத்யம்.

ப்ரஹ்மஸூத்ரத்தில் ஸமந்வயாத்யாயத்தில் ஸ்பஷ்ட ஜீவலிங்கக வாக்யவிசாரரூபமான த்ருதீய பாதத்தின் முதலதிகரணமான த்யுப்வாத்யதிகரணத்தில் ஸ்தித்யதநாப்யாம் ச என்பது கடைசியான குணஸூத்ரம். இதற்கு முண்டகோபநிஷத்தில் த்ருதீய முண்டகத்தின் 'த்வா ஸுபர்ணா ஸயுஜா ஸகாயா ஸமாநம் வ்ருக்ஷம் பரிஷஸ்வஜாதே । தயோரந்ய: பிப்பலம் ஸ்வாத்வத்த்யநச்நந்நந்யோ அபிசாகசீதி', என்கிற முதல் வாக்யம் விஷயவாக்யம். இந்த ஸூத்ரத்திற்கு அர்த்தம், ஏகஸ்ய கர்மபலாதநமில்லாமல் நிரதிஶய தீப்தியோடு சரீரத்தின் மத்யத்தில் ஸ்திதியினாலும், அந்யஸ்ய கர்மபலத்தின் அநுபவத்தாலும், என்றாகின்றது. இந்த ஸூத்ரத்தில் சொல்லப்பட்ட இரண்டு ஹேதுக்களும் எந்த ஸாத்யத்தோடு அந்வயிக்குமென்று விசாரிப்போம். இந்த அதிகரணத்தின் ப்ரதாந ஸூத்ரமான த்யுப்வாத்யாயதநம் ஸ்வஶப்தாத் - என்கிற ஸூத்ரத்தில் த்யுப்வாத்யாயதநம் பக்ஷமாகவும், பரமாத்மத்வம் ஸாத்யமாகவும், பரமாத்மாஸாதாரணமான அம்ருதஸ்யைஷ ஸேது: இத்யாதி சப்தம் ஹேதுவாகவும், காணப்படுகிறது. அந்த ஸாத்யத்தில் ஸ்தித்யதநங்களாகிற இரண்டு ஹேதுக்களும் அந்வயிக்குமென்று சொல்லமுடியாது. பரமாத்மத்வ ரூபமான ஸாத்யத்திற்குக் கர்மபலத்தை அஶிக்காமல் நிரதிஶயதீப்தியோடு இருக்கையானது ஸாதகமானாலும், மற்றொரு ஹேதுவாகிய ஜீவநிஷ்டமான பலாதநம் த்யுப்வாத்யாயதநத்திற்குப் பரமாத்மத்வ ஸாதகமாக எப்படியாகும்? வ்யதிரேக நிர்த்

தேஶரூபமான 'நாநுமாநமதச்சப்தாத் ப்ராணப்ருச்ச' என்கிற ஸூத்ரத்தில், ப்ராணப்ருத், ஜீவனுமன்று என்று த்யுப்வாத்யாயதநத்தில் ஸாதிக்கப்பட்ட ஜீவபேதரூபமான அவாந்தர ஸாத்யத்திலும் இந்த இரண்டு ஹேதுக்களும் அந்வயிக்க வழியில்லை. முன்போல் கர்ம பலாஶந மில்லாமல் ப்ரகாஶத்தோடிருக்கை ஜீவபேத ஸாதகமானாலும், ஜீவத்வஸாதகமான கர்ம பலாதநம் த்யுப்வாத்யாயதந வ்ருத்தியாயும், ஜீவபேத ஸாதகமாயும் எப்படியாகும்? இனி ஸ்வாஸ்வ வஸ்து ஸம்பந்தேந ஸ்தித்யதநம் த்யுப்வாத்யாயதந வ்ருத்தியாய்க்கொண்டு, பரமாத்மத்வதிற்கோ, ஜீவபேதத்திற்கோ ஸாதகமாகலாமென்று நவீந நையாயிகர்கள் சொல்லும் குத்ஸித யுக்திஸித்தமான அந்வயங்கள் ஸூத்ரகார ஶைலிக்குப் பொருந்தினதன்று. ஸூத்ரகாரருக்கு அப்படி அபிப்ராயமிருந்தால் ஸ்தித்யதநாப்யாஞ்ச என்றே ஸூத்ரத்தை இயற்றி இருப்பர். இந்த ஸூத்ரத்தை அர்த்தாபத்தி ஹேதுபரமாக்கித் தம் மதாநுஸாரமாய் ஶங்கராசார்யர் ஒரு விதமாக நயிப்பித்திருந்தபோதிலும், முன்சொன்ன ஶங்கையைப் பற்றி ஸ்ரீ பாஷ்யம் ஶ்ருதப்ரகாஶிகா ஸாவப்ரகாஶிகா அதிகரணஸாராவள்யாதி க்ரந்தங்களால் மந்தமதியான அடியேனுக்குத்தகுந்த ஸமாதாநம் ஏற்படவில்லை. ஆகையால் நையாயிகரை எண்ணங்கொண்டிருக்கும், அடியேனுக்கும் த்ருப்தியை யுண்டாக்கும்படி, முன்காலத்துத் தமிழ் தர்க்கம்போல் கழகழப்பாமல், சவுக்கம்நிர, பக்ஷஸாத்ய ஹேதுக்களை ஸமந்வயப்படுத்தி, ஸ்ரீபாஷ்ய ஶ்ருதப்ரகாஶிகா பங்க்திகளுக்கு மிகவும் பொருந்தும்படி இந்த தீபிகையைப் பார்க்கும் சில மஹான்கள் ப்ரதிவசநம் அநுக்ரஹிப்பர்கள் என்று நம்புகிறேன்.

ஓர் விஶிஷ்டாத்வைத வேதாந்தி,

ஜ. ரா.